# சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்

குடவாயில்
பாலசுப்பிரமணியன்



தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

# சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்

குடவாயில் பாலசுப்பிரமணியன் பி.எஸ்.ஸி.,எம்.ஏ.
நுண்படப் பிரிவுக் காப்பாளர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

ISBN: 81-7090-094-8

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு :
திருவள்ளுவர் ஆண்டு 2018 ஆனி — ஜூலை 1987

நூல் : சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்

ஆசிரியர் : குடவாயில் பாலசுப்பிரமணியன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ 60-00

அச்சு : அச்சுப் பதிவம் :
லாவி அச்சகம், தஞ்சாவூர்.
அச்சு :
தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்
தஞ்சாவூர் - 1.

# பதிப்புரை

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஓர் ஆய்வுப் பல்கலைக் கழகம். பல்கலைக் கழகத்து ஐந்து புலங்களிலுள்ள இருபது துறைகளில் பல துறைப் பொருள் ஆய்வுகள் நிகழ்கின்றன. தமிழோடு இயைந்த பல்கலை ஆய்வுகளாகப் பேராசியர்களாலும் ஆய்வாளர்களாலும் நூல்கள் படைக்கப்படுகின்றன.

பல்வகைத் துறைகளிலும் வல்லுநர்களாக விளங்குவோரது ஆய்வுத் திறனைப் பயன்படுத்தும் நோக்கில் 'குறுகிய கால ஆய்வுத் திட்டம்' ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வகுத்துச் செயற்படுத்துகிறது. குறைந்த அளவு ஆறு திங்களும் மேல் அளவு ஒன்பது திங்களுமாக எல்லை கொண்டது இக்குறுகிய கால ஆய்வுத் திட்டம்.

இத் திட்டத்தில் உருவான நூல்களில் ஓர் ஆங்கில நூல் உட்பட நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன. 'சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்' என்னும் இந்நூல் அத்திட்டத்தின் ஐந்தாவது நூலாக வெளிவருகிறது.

இதன் ஆசிரியர் திரு குடவாயில் பாலசுப்பிரமணியன் இருநூறு சிலைகளை நேரிற்கண்டு ஆய்வு செய்து தனித்தனியே ஒவ்வொன்றின் வரலாற்றையும் தெளிவாகத் தந்துள்ளார். இவர் கண்டுள்ள சில புதிய முடிவுகள் வரலாற்றுக்குச் சான்றாகத்

தக்கவை. இது கொண்டு இந்நூலைச் 'சிற்பவழி வரலாற்று நூல்' என்று கூறலாம்.

ஏழாவது நூற்றாண்டு முதல் பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை வாழ்ந்த, ஆண்ட, மன்னர்கள், ஆட்சி அலுவலர்கள் புலவர்கள், துறவியர், மகளிர் முதலியோரது சிலை வரலாறுகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அவற்றுள், இதுவரை வெளிப்படுத்தப்படாத சிற்பங்கள் பதினான்கு என்பது குறிப்பிடத் தக்கது. 'மன்னவருக்கு முதன் முதலில் அமைந்த கற்சிலை திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை குடைவரை கோயிலில் உள்ள முதல் மகேந்திரன் சிலை' என்னும் இவரது ஆய்வு முடிவு ஒரு புதுமையை நிலை நாட்டுகிறது.

சிற்பங்கள், படங்கள் இந்நூலில் நிறைவாக இடம்பெற்றுள்ளன. அவற்றை நூலாசிரியர் வகைப்படுத்தி, முறைப்படுத்தியிருக்கும் பாங்கும் பாராட்டத்தக்கது.

வரலாற்றாளர்க்கும் சிற்பத் துறையினர்க்கும் இந்நூல் சுவையும் ஆழமும் நிறைந்த கருத்துக்களைத் தருகிறது. தமிழ் அறிஞர்கள், பெருமக்கள் இதனைப் பெற்று மகிழ்வார்கள் என்பது திண்ணம்.

இந்நூலிற்கு அச்சுப்பதிவம் ஆக்கித் தந்த தஞ்சை 'லாலி' அச்சகத்தார்க்கு நன்றி உரித்தாகுக.

பதிப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

கோவை. இளஞ்சேரன்,
துணை இயக்குநர்.

# முன்னுரை

பத்தாண்டுகளுக்கு முன்பு தொல்லியல் துறைப் பயிற்சி மாணவர்களாகக் கும்பகோணம் அருள்மிகு இராமசுவாமித் திருக்கோயிலில் முனைவர் இரா. நாகசாமி அவர்களின் வகுப்பில் ஒரு தூண் அருகில் அமர்ந்திருந்தோம். அன்றைய வகுப்பில் ஒரு வரலாற்று நாயகனைப் பற்றி உணர்வு பூர்வமாக எடுத்துரைத்தார். சரிந்துபோன விசயநகரப் பேரரசினை நிமிர்த்திய தூணாக இருந்த அந்த மன்னவன், விசயநகர அரச குமாரனுக்குக் கும்பகோணத்திலேயே மணிமுடி சூட்டி, அதன் நினைவாக அத்திருக்கோயிலை எடுத்த வரலாற்றைக் கூறி 'அவன்தான் இங்குச் சிலையாக நிற்கும் இரகுநாத நாயக்கன்' என்று உரைத்தார். அந்த வினாடி, அத்தனை மாணவர்களையும் புல்லரிக்கச் செய்தது. அதுவரை ஒரு கல்லாக, தூணாகத் தோன்றிய அந்த உருவச்சிலைக்கு இத்தனைப் பெரிய வரலாறு இருப்பதை உணர முடிந்தது.

அடுத்த முறை அதே திருக்கோயிலுக்கு நாங்கள் சென்ற போது இந்த வரலாற்று நாயகனின் உருவச் சிலையின் கையில் அந்தத் திருக்கோயில் விழா பற்றிய அறிவிப்புப் பலகை தொங்கியது. இந்த அவல நிலைக்குக் காரணம் நம் திருக்கோயில்களில் உள்ள வரலாற்று நாயகர்களின் சிலைகள் பற்றிய வரலாற்றை நம்மவர்கள் அறியாததுதான் என்பதை நன்குணர்ந்தோம். அன்றிலிருந்து, செல்லும் திருக்கோயில்களில் எந்தெந்த வரலாற்று நாயகர்களின் உருவச் சிலைகள் இருக்கின்றன என்பதைத் தொகுக்கத் தொடங்கி இதனைத் தமிழ் கூறும் நல்லுலகம் அறியச் செய்ய வேண்டும் என்ற முனைப்பில் பணி தொடர்ந்தேன்.

எனது முயற்சிக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகமும், அதன் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களும்

அரியதோர் வாய்ப்பை நல்கினர். இதன் பயனாக மலர்ந்ததே இத்தொகுப்பாய்வு நூல்.

தமிழகத்தின் வரலாற்றை அறியப் பெருந்துணை புரிவது சோழப் பெருமன்னர்களின் வரலாறுதான். கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் தொடங்கி 13-ஆம் நூற்றாண்டு வரை வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறு படைத்துச் சென்ற இப்பெருமன்னர்கள் தங்கள் ஆட்சித் திறனைப் பின் வருபவர்கள் அறிய வேண்டும் என்ற பெருநோக்கோடு ஒவ்வொரு திருக்கோயிலையும் ஒரு வரலாற்று நூலாகவே படைத்துச் சென்றனர். இவ்வடிச்சுவட்டில் வந்த விசயநகர மன்னர்களும், நாயக்கர்களும், மராத்தியர்களும் இவ்வரலாற்று நூல்களில் (திருக்கோயில்களில்) தங்கள் வரலாற்றையும் சில பக்கங்களாக எழுதிச்சென்றனர்.

மாமன்னர்கள் சமயப் பணிகளுக்காக மட்டுமன்றிச் சமுதாயப் பணிகளுக்காகவும் திருக்கோயில்களைக் கட்டுவித்து, அதில் அவர்களது திருவுருவச் சிலைகளையும் இடம்பெறச் செய்தனர். இவ்வாறு நமக்குக் கிடைத்துள்ள பல நூறு வரலாற்று நாயகர்களின் உருவச் சிலைகளையும் அவர் தம் வரலாறுகளையும் மேனாட்டுச் சிற்பங்களோடு ஒப்பிடும் போது நம் முன்னவர்களின் பெருமை சிறந்தோங்கி நிற்கின்றது. எகிப்து போன்ற மேனாட்டுத் தொன்மை வரலாற்றுச்சின்னங்களை நோக்கும் போது, அங்குள்ள மன்னர்களின் உருவச் சிலைகள் எதிரிகளை வீழ்த்துவது போன்றும், கோரமான போர்க்களக் காட்சியாகவும், எதிரிகளின் துண்டித்த தலைகளுமாகவே காட்சி நல்குகின்றன. ஆனால், நம் மன்னர்களின் சிலைகளோ பெரும்பாலும் திருக்கோயில்களில் வணங்கும் திருக்கோலத்தில் தான் கிடைத்துள்ளன. மாமன்னர்கள் தங்கள் உருவச் சிலைகள் மட்டுமன்றி அன்று வரலாற்று நாயகர்களாகத் திகழ்ந்த புலவர் பெருமக்கள், தானைத் தலைவர்கள், சமயச் சான்றோர்கள், அரசியர், கலைஞர்கள் முதலிய பலரது உருவச் சிலைகளையும் இடம்பெறச் செய்தனர்.

தமிழகத்தில் இன்று வரலாற்று நாயகர்களின் உருவங்களைக் கற்சிலைகளாக, செப்புப் படிமங்களாக, மரம், தந்தம் போன்றவற்றில் செதுக்கப்பட்ட பதுமைகளாக, சுவர்களிலோ, திரைச் சீலைகளிலோ வரையப்பட்ட வண்ண ஓவியங்களாகக் காண்கிறோம்.

தெளிந்த வரலாற்றுச் சான்றுகளோடு கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 19 - ஆம் நூற்றாண்டு வரை இடம் பெற்ற

பலநூறு படிமங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. சில சிலைகள் மாற்றாரின் படையெடுப்புகளாலும் கலையறிவற்றவர்களின் கை வண்ணங்களாலும் மூக்கிழந்து, கை இழந்து நிற்கின்றன. இனியாவது இவற்றின் உண்மை வரலாற்றை, நம்மக்கள் அறிந்து அவற்றைப் போற்றிட வழிவகை செய்திடல் இன்றியமையாத தொன்று.

நமது வரலாற்றுச் செல்வங்களாகத் திகழ்ந்த பல செப்புப் படிமங்களையும், வண்ண ஓவியங்களையும் இன்று நாம் இழந்து நிற்கிறோம். எடுத்துக்காட்டாக, இந்நூற்றாண்டில் துவக்கக் காலம் வரை தஞ்சைப் (பெரிய)பெருங் கோயிலிலிருந்த மாமன்னன் இராசராசனின் செப்புப் படிமத்தை இழந்து விட்டோம். தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுகள் இப்படிமம் இராசராசனின் தளபதியான தென்னவன் மூவேந்த வேளானால் எடுக்கப்பட்டது என்பதைக் கூறுகின்றன. இப்படிமத்தின் ஒளிப்படம் இந்திய நாட்டின் புகழ்பெற்ற சிற்ப இயல் வல்லுநர்களின் நூல்களில் இடம் பெற்றுள்ளது. ஆனால் இன்று தஞ்சைப் பெருங்கோயிலில் இராசேந்திர சோழன் என்ற பீடத்துப் பொறிப்புகள் உள்ள அண்மைக்காலப் படிமம் ஒன்றை இராசராசன் எனக்கொண்டு வழிபாடும் விழாக்களும் எடுக்கிறோம்.

இதே போன்று தஞ்சை மராத்திய அரசுக் கொலுமண்டபத்தில் தஞ்சையை ஆட்சிபுரிந்த அனைத்து மராத்திய மன்னர்களின் ஓவியங்களும் அவரவர்கள் காலத்திலேயே வண்ணப் படைப்பு களாகத் தீட்டப்பட்டு இடம் பெற்றிருந்தன. 1952-ஆம் ஆண்டுப் புயலின்போது இம்மண்டபம் மக்களுக்குப் புகலிடமாகத் திறந்து விடப்பட்டபோது கோரப் புயலும், மக்களின் அறியாமையும் இவ்வோவியங்கள் அனைத்தையும் அழித்து விட்டன. நற்பயனாய் இவ்வோவியங்களின் ஒளிப் படங்கள் மட்டும் தஞ்சை அரண்மனை நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவைபோன்ற எவ்வளவோ வரலாற்றுச் செல்வங்களை இழந்து விட்டோம். இனியாவது அவற்றின் வரலாற்றுப் பெருமைகளையுணர்ந்து அவற்றைக்காக்க முற்படச் செய்ய இந்நூல் மக்களுக்கு ஓரளவு துணைபுரியும் வகையில் அமையும் என நம்புகிறேன்.

எனது ஆய்விற்குச் சோழ மண்டலம் முழுவதையும் எடுத்துக் கொண்டபோதிலும் இப்பணி முழுமையாக முடிக்கப்படவில்லை. மேலும் பல திருக்கோயில்களில் களப்பணி மேற்கொள்ள வேண்டி

உள்ளது. ' நடுவில்மண்டலம் ' சோழ மண்டலத்திலிருந்து பின்பு பிரிந்ததோர் மண்டலம் என்பதால் அங்கும் ஆய்வுப் பணி மேற் கொள்ளப்படவில்லை. பெரும்பாலான படிமங்களில் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன. சில படிமங்கள் இன்னா ருடையவை என அறியப் போதுமான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. திருவரங்கம் திருக்கோயிலில் கல்வெட்டுச் சான்றுகளோடு உள்ள பல படிமங்களைப் பற்றி ஆய்வு மேற் கொள்ள அத் திருக்கோயில் நிருவாகத்தினர் அனுமதிக்காத காரணத்தால் சிறப்புடைய சில படிமங்கள் பற்றி அறியவும், ஒளிப் படங்கள் எடுக்கவும் இயலாமற் போனது வருந்துதற்குரிய ஒன்று.

இவ்வாய்வில் சோழ மண்டலத்தின் பகுதிகளான தஞ்சை, திருச்சி, புதுகோட்டை மற்றும் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியவை ஆய்வுப் பகுதிகளாக எடுத்துக் கொள்ளப் பட்டன. இம்மாவட்டங்களில் திருக்கோயில்களின் எண்ணிக்கை யில் தஞ்சை மாவட்டத்தில் 60 விழுக்காடும், திருச்சி மாவட்டத் தில் 40 விழுக்காடும், புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 90 விழுக்காடும் களப்பணி மேற்கொள்ளப் பட்டது. இவற்றில் சுமார் 200 - இற்கும் மேற்பட்ட உருவச் சிலைகள் பற்றிய செய்திகள் கிடைத்தன. இவற்றில் தெளிவான சான்றுகளோடு திகழும் வரலாற்று நாயகர்களின் சிற்பங்கள் மற்றும் ஓவியங்களை எடுத்துக் கொண்டு 71 தலைப்புகளில் இந்நூலில் விரிவுபடக் கூறியுள்ளேன்.

ஒவ்வொரு படிமத்திற்குரியவரின் வரலாற்றுச் சாதனை களையும் பெருமைகளையும் கூறி, பின்னரே அவர் தம் சிற்பங் களையோ, ஓவியங்களையோ பற்றி விவரித்துள்ளேன். இவ்வாய் வின் பயனாகத் தமிழக வரலாற்றில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இருண்ட ஒரு பகுதியை ஒளிபெறச் செய்ய முடிந்தது. திரு கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் போன்ற ஆய்வுப் பேரறிஞர்கள் போதிய சான்றுகள் கிடைக்காமையால் தெளிவுபடக் கூற முடியாமல் விடுத்த வரலாற்றுப் பகுதிகளுக்குப் போதுமான, தெளிவான சான்றுகளையும் உருவச் சிலைகளையும் துணையாகக் கொண்டு எடுத்துக் காட்டி ஒரு தெளிவான முடிவு கொள்ள முடிந்தது.

இதனால் கோனேரிராயன் என்ற மன்னவன் விசயநகர அரசுக்குப் பணியாமல், தமிழ் மண்ணில் தனி ஆட்சி நடத்தி,

தமிழில் நாணயம் வெளியிட்டு, சைவமும், வைணவமும் கண்ணெனப் போற்றி (இந்தியத் தொல்லியல் துறை அறிக்கைகளும், திரு சாத்திரியார் அவர்களும் இவனை வைணவத் துரோகி எனக் குறித்தனர்) வீர வரலாறு படைத்தான் என்ற புதிய முடிவோடு, திருவரங்கத்தின் கோபுரமேறிக் குதித்து விழுந்து உயிர் துறந்தவர்கள் அரசியல் காரணங்களால்தான் உயிர் துறந்தார்கள் என்ற உண்மையையும் அறிய முடிந்தது.

இதுவரை வெளிவராத - ஆராயப்படாத பல வரலாற்று நாயகர்களின் படிமங்கள் மற்றும் ஓவியங்களைத் தக்க கல்வெட்டுச் சான்றுகளோடு இங்கு அறிமுகம் செய்துள்ளேன். எடுத்துக்காட்டாக, இராசேந்திர சோழன் - பரவை நங்கை, களக்காடுடையார் மாலைதாழ் மார்பன், ஈசுவரசிவர், மூன்றாம் இராசேந்திரன், கருணாகரத் தொண்டைமான், அரும்பாக் கிழான் மணவிற்கூத்தன், கௌதமன் தில்லை வனமுடையான், பொன் வேய்ந்த மகிபதியாம் முதலாம் சுந்தரபாண்டியன், செவ்வப்ப நாயக்கன், அச்சுதராயர், கமலை ஞானப்பிரகாசர், நல்லவாணன், இரகுநாத நாயக்கன் ஆகியோரின் சிற்பங்கள் முதன்முறையாக அறிமுகமாகின்றன.

கி. பி. 1700-ஆம் ஆண்டுக் காலத்தில் வாழ்ந்த ஓர் ஓவியனின் ஓவியத்தை முதல் முறையாக வரலாற்றுக்கு அறிமுகம் செய்துள்ளேன். சிங்காதனம் எனும் தமிழகத்து ஓவியன் ஒருவன் படைத்த அற்புத ஓவியக்கூடம் பற்றியும், அவனது உருவம் பற்றியும் விரிவாகக் கூறியுள்ளேன். இதுவரை தமிழகத்தில் எந்த ஓர் ஓவியனின் ஓவியமும் பெயர் எழுதப்பட்டு அவனது ஓவியப் படைப்பிலேயே இருப்பதை எவரும் கூறவில்லை. அவ்வகையிலும் இவ்வாய்வு பயனுள்ளதாக அமைந்தது.

முதன்முறையாகத் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள அனைத்து வரலாற்று நாயகர்களின் ஓவியங்களும் தொகுக்கப்பட்டு இங்கு வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகிறேன். தாராசுரம் திருக்கோயிலிலுள்ள நூற்றெண்மர் படிமங்கள் பற்றி இதுவரை ஆய்வு அறிஞர்களால் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கு மாறுபட்ட புதியதோர் கருத்தைச் சான்றுகளோடு கூறியுள்ளேன். தஞ்சைப் பெருங்கோயில் மகாமண்டபத்தின் அமைப்பு-திருப்பணிகள் பற்றிய புதிய கோணத்துப் பார்வைகளும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்நூல் ஒரு ஒளிப்படத் தொகுப்பாக மட்டுமன்றி, சோழ மண்டலத்து வரலாறு கூறும் ஒரு நூலாகவும் அமையும் என நம்புகிறேன்.

இந்நூல் ஆக்கம் பெற அனைத்து உதவிகளும் நல்கிய தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முது முனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கும், பல்கலைக் கழக நூலகத்தினர்க்கும் எனது நன்றியைக் கூறுவதோடு, ஆய்வுக் கேந்திரங்களாகத் திகழும் திருக்கோயில்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்களில் ஆய்வு மேற்கொள்ள அனுமதி தந்த இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை முன்னாள் ஆணையர் திரு உ. சுப்பிரமணியம் அவர்கட்கும் தொல் பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி அவர்கட்கும் தருமபுரம் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர்கட்கும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத் தலைவர் அவர்கட்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிக்கிறேன்.

இவ்வாய்வேடு நூல் வடிவம் கொள்ள அனுமதித்த தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கட்கும், சிறந்த முறையில் பதிப்பித்துத்தந்த பல்கலைக் கழகப் பதிப்புத்துறைத் துணை இயக்குநர் கவிஞர் கோ.கோ.வை. இளஞ்சேரனார்க்கும் நன்றிக்கடப்பாடுடையேன்.

எனது பணிக்கு அருந்துணையாற்றிய நண்பர்களும் சரசுவதி மகால் நூலக ஊழியர்களுமான திரு பத்மநாபன், திரு க. மனோகரன், திரு சு. பாலகிருஷ்ணன் ஆகியோர்க்கும், தொல்லியல் துறைக் காப்பாட்சியர் திரு எஸ் இராமச்சந்திரன் அவர்கட்கும் மெய்ப்புத் திருத்திய புலவர் வேல். சம்பந்தமூர்த்தி அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றி.

*தஞ்சாவூர்*

**குடவாயில் பாலசுப்ரமணியன்**

சூலை, 1987

## உள்ளுறை

### இயல் 1 தோற்றுவாய்


| | பக்கம் |
|---|---|
| சோழ மண்டலம் | 3 |
| வரலாற்று நாயகர்களின் சிற்பங்கள்— தொன்மையும் வளர்ச்சியும் | 11 |


### இயல் 2 பல்லவர் இயல்


| | |
|---|---|
| தமிழகத்தின் முதல்படிமம்—மகேந்திர பல்லவன்— | 29 |


### இயல் 3 பாண்டியர் இயல்


| | |
|---|---|
| அண்ணல் வாயில் அறிவர் கோயில் | 43 |
| பொன் வேய்ந்த மகிபதி —சடாவர்மன் சுந்தர பாண்டியன்— | 53 |


### இயல் 4 சோழர் இயல்


| | |
|---|---|
| முதலாம் ஆதித்த சோழன் | 63 |
| முதலாம் பராந்தக சோழன் | 71 |
| கண்டராதித்த சோழர் | 75 |
| செம்பியன் மாதேவியார் | 83 |
| உத்தம சோழன் | 89 |
| முதலாம் இராசராசன் | 93 |
| முதலாம் இராசேந்திர சோழன் | 109 |
| மும்முடிச் சோழப் பிரம்ம மாராயன் | 117 |
| நக்கீரர் | 123 |
| களக்காடுடையார் மாலை தாழ் மார்பன் | 129 |
| கருணாகரத் தொண்டைமான் | 135 |
| விக்கிரம சோழன் | 143 |
| அரும்பாக் கிழான் மணிவிற்கூத்தனான காலிங்கராயன் | 149 |

| | |
|---|---|
| கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் | 153 |
| குன்றத்தூர் சேக்கிழார் | 157 |
| இரண்டாம் இராசராசன் | 161 |
| இராசராச புரியில் நூற்றெண்மர் | 167 |
| மூன்றாம் குலோத்துங்கன் | 173 |
| ஈசுவரசிவர் எனும் சோமேசுவரர் | 185 |
| கௌதமன் தில்லைவனமுடையான் | 189 |
| மூன்றாம் இராசராசன் | 195 |
| மூன்றாம் இராசேந்திரன் | 199 |

## இயல் 5 விசயநகர அரசு இயல்

| | |
|---|---|
| அரங்கத்து நாயகர்கள் | 205 |
| அப்பாவையங்கார் | 206 |
| பெரியாழ்வார் | 207 |
| ஜீயர் இருவர் | 207 |
| கோனேரி ராயன் | 210 |
| கிருட்டிண தேவராயர் | 221 |
| அச்சுதராயர்-திருமலாம்பா | 225 |

## இயல் 6 நாயக்கர் இயல்

| | |
|---|---|
| செவ்வப்ப நாயக்கன் | 231 |
| கமலை ஞானப்பிரகாசர் | 239 |
| மூர்த்தியம்மாள் | 241 |
| மல்லப்ப நாயக்கர் | 243 |
| அச்சுதப்ப நாயக்கன் | 247 |
| இரகுநாத நாயக்கன் | 253 |
| கோவிந்த தீட்சிதர் | 263 |
| விசயராகவ நாயக்கர் | 271 |
| நல்ல வாணன் (கோவிந்த தாசன்) | 277 |
| சிவ நாராயணாநந்த தீர்த்தர் | 279 |
| பொற்பண்டாரம் கர்ணம் | 283 |
| தாயுமான அடிகள் | 285 |

## இயல் 7 மராட்டியர் இயல்

| | |
|---|---|
| வெங்கோசி எனும் ஏகோசி | 291 |
| சகசி | 295 |
| முதலாம் சரபோசி | 303 |
| துக்கோசி எனும் முதலாம் துளசா | 309 |

| | |
|---|---|
| பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோசி | 313 |
| சுசான் பாய் | 315 |
| பிரதாப சிம்மன் | 317 |
| இரண்டாம் துளசா | 327 |
| அமர சிம்மன் | 331 |
| இரண்டாம் சரபோசி | 337 |
| அம்மனு அம்மணி-பாவை விளக்கு | 347 |
| சிவாசி | 351 |
| வரலாறு படைத்த மொழிபெயர்ப்பாளர்கள் | 355 |
| இராமோசி சர்சேராவ் காட்கே—இலட்சுபாயி அம்மாள் | 361 |
| ஞானேசுவரர் எனும் ஞானதேவர் | 367 |
| சமர்த்த இராமதாசர் | 369 |
| முகுந்தராச சுவாமி | 373 |
| செயராம சுவாமி | 375 |
| மேரு சுவாமி | 377 |
| ஸ்ரீதர சுவாமி | 379 |
| இராம பண்டிதர் | 381 |
| சத்திய சந்தர் | 383 |
| மராத்தியர் கால மடாதிபதிகள் | 387 |
| சித்திர வேலைச் சிங்காதனம் | 391 |


## பல் 8 பொதுவியல்


| | |
|---|---|
| குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் படிமங்கள் | 401 |
| திருவாவடுதுறையில் சோழர் காலப் படிமங்கள் | 403 |
| மணி மண்டபங்களில் வரலாற்று நாயகர்கள் | 407 |
| மல்லார்சி காடேராவும் —தருமை ஆதீனத் தலைவர்களும் | 417 |
| தில்லைக் கோயிற் சிற்பிகள் | 421 |
| துணை புரிந்த நூல்கள் | 425 |
| சொல்லடைவு | 429 |

# இயல் 1

## தோற்றுவாய்

## தோற்றுவாய்

# சோழ மண்டலம்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் திகழ்ந்த தமிழ் கூறும் நல்லுலகு, சங்க காலம் முதல் மூன்று பெரும் பேரரசுகளாகப் பிரிக்கப்பட்டு நல்லாட்சி நடத்தப்பெற்றது. சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பகுக்கப்பட்ட தமிழகத்தில் சில குறுநிலப் பகுதிகளும் அடங்கியிருந்தன. சங்க காலத்தில் ஏற்றம் பெற்றிருந்த சோழநாட்டின் தலைநகராகப் பூம்புகார் (காவிரிப்பூம்பட்டினம்) திகழ்ந்தது. கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கடல்கோள் இந்நகரை முற்றிலுமாக அழித்தது.

பூம்புகாரின் அழிவிற்குப் பிறகு சோழமன்னர்கள் வலிமை குன்றினர். சோழநாடு களப்பிரர் வசமாயிற்று. பின்னர் கி. பி. 6, 7-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டின் சில பகுதிகள் பல்லவர்களின் ஆளுகைக்குட்பட்டது. நலிந்திருந்த சோழப் பேரரசு கி. பி. 850-இல் விசயாலயன் என்ற சோழ மன்னனால் புத்துயிர் பெற்று ஒளி விடத் தொடங்கியது. இம்மன்னன் சோழ நாட்டின் செந்தலை (சந்திரலேகை)யைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த முத்தரையர்களைத் தோற்கடித்து தஞ்சை நகரைக் கைப்பற்றி சோழ நாட்டின் புதிய தலைநகரை இங்கு நிறுவினான்.

கி. பி. 850-இல் தொடங்கிய இச்சோழ ஆட்சி கி. பி. 1279 வரை விசயாலயன், ஆதித்தன், முதல் பராந்தகன், கண்டராதித்தன் அரிஞ்சயன், சுந்தர சோழன், உத்தம சோழன், முதலாம் இராசராசன், இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், வீர ராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் என்ற மன்னர்களால் தொடர்ந்து செங்கோல் செலுத்தப்பட்டது.

சோழர்களின் மறைவிற்குப் பிறகு பாண்டியர்களாலும், ஒய்சளர்களாலும், அதனை அடுத்து விசயநகர மன்னர்களின் பிரதிநிதிகளான திருமலைராயன் போன்றவர்களாலும் இந்நாடு அரசாளப்பட்டது. விசயநகர அரசுக்கு அடிபணியாத கோனேரி ராயனால் அமைக்கப்பட்ட தனி அரசு கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் சில காலம் தொடர்ந்தது. பின்னர் கிருட்டிணதேவராயர் ஆட்சியில் சோழமண்டலம் மிகவும் ஏற்றம் பெற்றது. அச்சுதராயன் தன் மைத்துனி மூர்த்திமாம்பாவிற்காகச் சீதனமாகச் சோழநாட்டு அரசு உரிமையைச் செவ்வப்பநாயக்கனுக்கு அளித்தார். செவ்வப்பநாயக்கனால் தொடங்கிய தஞ்சை நாயக்கர் ஆட்சி அச்சுதப்பன், இரகுநாதன் மற்றும் விசயராகவன் காலம் வரை தொடர்ந்தது. இதன் பின்னர் மராத்தியர்களின் ஆட்சி ஏகோசி மன்னனால் தொடங்கப்பட்டுக் கடைசியாக இரண்டாம் சரபோசி காலத்தில் ஆங்கிலேயர் வசமாயிற்று.

சோழர்களன்றி மாற்றார்களாலும் இந்நாடு ஆளப்பட்ட போதும் இந்நாட்டின் பெயர் சோழநாடு அல்லது சோழமண்டலம் என்றே அழைக்கப்பட்டது, இதன் வரலாற்றுப் பெருமையாகும். தெளிவான வரலாற்றுச் சான்றுகளுடன் நோக்கும்போது கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் மகேந்திர பல்லவன் காலத்திலிருந்து கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை 'சோழ நாடு' என்றே அழைக்கப்பட்டது. மகேந்திர பல்லவனின் திருச்சிராப்பள்ளி குடைவரை கல்வெட்டொன்று கயிலையம்பெருமான் காவிரியின் அழகையும், 'சோழ நாட்டின்' எழிலையும் என்றென்றும் கண்டு மகிழ வேண்டும் என்பதற்காகத் திருச்சிராப்பள்ளி மலையுச்சியில் கோயில் எடுப்பித்ததாகக் கூறுகிறது.[3]

விசயாலய சோழன் காலம் முதல் மதுராந்தக உத்தம சோழன் காலம் வரை உள்ள கல்வெட்டுகளை நோக்கும்போது சோழநாடு திருச்சி, தஞ்சை என்ற இரண்டு முழு மாவட்டப் பகுதிகளும், தென்ஆர்க்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் சில பகுதிகளுமே கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. முற்காலச் சோழர்களின் (விசயாலயன் முதல் உத்தம சோழன் காலம் வரை)சோழநாடு பல நாட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நாட்டுப் பகுதியிலும் பல ஊர்ச் சபைகள் அடங்கியிருந்தமையையும், பல சிற்றூர்கள் இணைந்து ஓர் ஊர்ச் சபையாகத் திகழ்ந்தமையையும் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. நாடு என்ற உட்பிரிவிற்குக் கூற்றம் என்ற பெயரும் வழங்கி வந்தது.

முற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளைத் தொகுத்து நோக்கும்போது 18 நாட்டுப் பிரிவுகள் இருந்தமையை அறிய முடிகிறது.[3] இவை முறையே 1. ஆர்வலக் கூற்றம் 2. ஆவூர்க் கூற்றம் 3. இங்கண் நாடு 4. இன்னம்பர் நாடு 5. கிழார்க் கூற்றம் 6. குலமங்கல நாடு 7. மன்னி நாடு 8. பாம்புணிக் கூற்றம் 9. பனையூர் நாடு 10. பொய்கை நாடு 11. பொய்யில் கூற்றம் 12. புறங்கறம்பை நாடு 13. திருநறையூர் நாடு 14. திருவாலி நாடு, 15. திருவழுந்தூர் நாடு, 16. ஆரூர்க் கூற்றம், 17, உறையூர்க் கூற்றம், 18. திருஇந்தளூர் நாடு ஆகும்.

## சோழ மண்டலம்

தொன்மைக் காலத்திலிருந்தே சோழ நாடு என்றழைக்கப்பட்ட பெயர் முதன்முதலில் இராசராசன் காலத்தில்தான் 'சோழ மண்டலம்' என்றழைக்கப்பட்டது. இதனை இம் மன்னனது 23- ஆம் ஆட்சியாண்டின் 35-ஆம் நாளில் வரையப்பட்ட கல்வெட்டொன்று எடுத்தியம்புகிறது.[4] எனவே 'சோழ மண்டலம்' என்ற சொல்லாட்சி கி.பி. 1009 - இலிருந்து தான் காணப்படுகிறது. இக்கல்வெட்டு தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், திருவாமாத்தூர் அபிராமேசுர சுவாமி திருக்கோயிலில் உள்ளது. இச் சாசனத்தில் சோழ மண்டலத்து அருமொழித்தேவ வளநாட்டு மங்கள நாட்டுப் புதுக்குடி எனும் ஊர் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழநாடு பல உட்பிரிவுகள் கொண்ட நாடுகள் அல்லது கூற்றங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததை இப்பெரு மன்னன் மாற்றி அமைத்து, சோழநாட்டை மிகப் பரவலாக விரிவடையச் செய்து அதற்குச் சோழ மண்டலம் எனும் பெயரைச் சூட்டி, பின்பு இம்மண்டலத்தைப் பல வளநாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வளநாட்டையும் நாடு அல்லது கூற்றங்களாகவும், அவற்றை ஊர்ச்சபைகளாகவும் பிரிக்கச் செய்தனன். இம்மன்னனது மற்று மொரு சாதனை, இவன் தன் ஆட்சியின் 16-ஆம் ஆண்டாகிய கி.பி. 1001- இல் சோழ மண்டலம் முழுவதையும் அளக்குமாறு செய்தான்.[5]

மேலும், இம்மன்னனது காலத்தில் சோழநாடு சோழ மண்டலம் ஆனது போல், தொண்டைநாடு செயங்கொண்ட சோழமண்டலமென்றும், பாண்டி நாடு இராச ராச மண்டல மென்றும், நுளம்பபாடி நிகரிலி சோழபாடியாகவும், ஈழம் மும்முடி சோழ மண்டலமாகவும் பெயர் மாற்றம் பெற்றன. இவனது மைந்தன் இராசேந்திரன் காலத்தில் கங்கபாடி முடிகொண்ட சோழ மண்டலமென்றும், தடிகைபாடி-விக்கிரம சோழ மண்டல மென்றும், நுளம்பபாடி-நிகரிலி சோழ மண்டலமென்றும் பெயர் மாற்றங்கள் பெற்றமையோடு இம்மன்னர்களின் அதிகாரிகளான 'மண்டல முதலிகளால்' அரசு நிருவாகம் மேற்கொள்ளப்பட்டது.

## சோழ மண்டல எல்லை

''கடல்கிழக்கு தெற்குக் கரைபுரள வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம் வடதிசையில்
ஏணாட்டு வெள்ளாறு இருபத்து நாற்காதம்
சோணாட்டுக்கு எல்லையெனச் சொல்'' -

என்று சோழ மண்டலச் சதகம் குறிப்பிடுகிறது.[6]

இப்பாடல் மற்றும் சோழப் பெருமன்னர்களின் கல்வெட்டுக் குறிப்புகள் ஆகியவற்றைத் தொகுத்து நோக்கும்போது சோழ மண்டலத்து எல்லையாகக் கிழக்கே வங்கக்கடலும், மேற்கு எல்லைகளாகக் கொல்லி மலையிலிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கிப் பாய்ந்து காவிரியில் கலக்கும் கரைப் போத்தனாறும், (இது திருச்சி நாமக்கல் பெருவழியில் முசிறிக்கு மேற்கே 12 கல் தொலைவில் உள்ளது) காவிரிக்குத் தென்கரையில் குளித்தலைக்கு

மேற்கே திருக்காம்புலியூரை ஒட்டிய கோட்டைக்கரையும், வட எல்லையாகத் தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏணாட்டு வெள்ளாறும், தென் எல்லையாகப் புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்திற்குத் தெற்காகச் செல்லும் வெள்ளாறும் ஆகும்.

பழைய சோழநாடு விரிவடைந்து சோழ மண்டலமாக அழைக்கப்பட்டபோது, இதனுடன் வடதிசையில் இணைந்த ஒரு பகுதி 'நடுவில் நாடு' என அழைக்கப்பட்டது. இப்பகுதி கொள்ளிடத்தின் வட கரைக்கும் பெண்ணையாற்றின் தென் கரைக்கும் இடைப்பட்ட பகுதியாகும். இது இராசேந்திர சோழ வளநாடு, கங்கை கொண்ட சோழ வளநாடு, இராசராச வளநாடு என்ற மூன்று வளநாட்டுப் பகுதிகளைத் தன்னுள் கொண்டு திகழ்ந்தது. திருவண்ணாமலை, செஞ்சி, திண்டிவனம் என அழைக்கப்படும் வட்டங்கள் அக்காலத்தில் முறையே வாணகோப்பாடி, சிங்கபுர நாடு, ஓய்மா நாடு என்ற பெயர்களில் சோழ மண்டலத்தின் வட பகுதிகளாகத் திகழ்ந்தன. சோழமண்டலத்து நடுவில்நாடு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 'நடுவில் மண்டலம்' என்ற பெயர் மாற்றம் பெற்றுச் சோழ மண்டலத்திலிருந்து பிரிந்து தனி மண்டலமாயிற்று.[7]

இராசராசன் (கி. பி. 985 - 1014) காலத்திலிருந்துதான் சோழ மண்டலம் வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டு, அவை நாடு அல்லது கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டதைக் கண்டோம். ஒவ்வொரு நாட்டுப் பகுதியிலும் (கூற்றத்திலும்) பல ஊர்ச்சபைகள் அடங்கியிருந்தன. வளநாடு என்ற அமைப்பு மாவட்டத்திற்கும், நாடு அல்லது கூற்றமென்பது வட்டம் அல்லது தாலுக்கா என்ற தற்போதைய நாட்டுப் பிரிவுகளுக்கும் ஒப்பானவையாகும். சோழ மன்னர்கள் தாங்கள் பெற்ற சிறப்பு விருதுப் பெயர்களையே வளநாடுகளுக்குப் பெயர்களாக இட்டனர். எடுத்துக்காட்டாக இராசராசனின் விருதுப்பெயர்களான கேரளாந்தகன், பாண்டிய குலாசனி, சத்திரியசிகாமணி, அருமொழித்தேவன் முதலான பெயர்கள் வளநாடுகளுக்குச் சூட்டப்பெற்றுள்ளன. இதேபோன்று சோழ அரசியர்களான தரணிமுழுதுடையாள், உலகமுழுதுடையாள், உலகுடை முக்கோக்கிழானடி முதலான பல பெயர்களும் வளநாடுகளுக்குச் சூட்டப்பெற்றுள்ளன. ஒரு மன்னன் காலத்திலிருந்த வளநாட்டுப் பெயர் மற்றொரு மன்னனால் மாற்றப்பட்டது. எடுத்துக்காட்டாக, சத்திரியசிகாமணி வளநாடு என்ற

முதல் இராசராசன் காலத்து வளநாடு, முதற் குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழ வளநாடு எனப் பெயர்மாற்றம் பெற்றது. அனைத்துச் சோழ மன்னர்களின் கல்வெட்டுகளையும் தொகுத்து நோக்கும்போது 48-இற்கும் மேற்பட்ட வளநாட்டுப் பெயர்கள் நமக்குக் கிடைக்கின்றன.[8]

சோழர்கள் காலத்திற்குப் பிறகும் சோழ மண்டலம் என்ற பெயரே நிலைத்தது என்பதைப் பாண்டியர்கள், ஒய்சாளர்களின் கல்வெட்டுகளில் அறியலாம். கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் (கி. பி. 1518 சனவரி 26-ஆம் நாள்) வரையப்பட்ட கிருட்டிண தேவராயரின் கல்வெட்டொன்று சோழமண்டலம பற்றிய விரிவான செய்திகளைக் குறிப்பிடுகின்றது.[9] தஞ்சை நாயக்கர்களும், தஞ்சை மராத்திய மன்னர்களும் தத்தம் நாட்டைச் சோழ நாடென்றே அழைத்தனர். பின்பு இம்மண்டலம் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு உட்பட்ட பிறகு, மாவட்டங்களாகப் பிரிக்கப்பெற்றது. இவ்வாறு சோழ மண்டலம் தஞ்சை, திருச்சி, தென்ஆர்க்காடு மாவட்டங்களாகப் பிரிவுபெற்றது.

இத்தகைய வரலாற்றுப் பெருமைகள் பல பெற்ற இந்தச் சோழ மண்டலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த மன்னர்கள், தானைத் தலைவர்கள், சமயச் சான்றோர்கள், அறக் கொடையாளர்கள், கலைஞர்கள் முதலிய பலருக்கும் எடுக்கப்பட்ட கற்சிலைகள் செப்புத் திருமேனிகள், சுண்ணச்சுதைகள், ஓவியங்கள் பல இன்று இம்மண்டலம் முழுவதும் காட்சி நல்குகின்றன. இவ்வாறு இம் மண்டலத்தில் வரலாற்றுப் பெருமை கூறி நிற்கும் வரலாற்று நாயகர்களின் சிற்பங்கள், ஓவியங்கள், செப்புத் திருமேனிகள், சுண்ணச்சுதைச்சிற்பங்களைத் தொகுத்து அவர்கள் வரலாற்றுப் பெருமைகளோடு இணைத்து இந்நூலில் காண்போம்.

## குறிப்புகள்

1 S. I. I. Vol. III. No: 205

2 S. I. I. Vol. I, PAGE 29-30

3 Political Geography of the Chola Country - Y. Subbarayalu Page-18.

4 A. R. E. No: 22 of 1922

5 S. I. I. Vol. VIII, No: 222 & 223

6 ஆத்மநாத தீட்சிதர் - சோழமண்டல சதகம், V-8.

7 S. I. I. Vol. VIII, No: 43

8 Political Geography of the Cholo Country, Page-98

9 S. I. I. Vol. VIII, No: 352

## சோழ மண்டலம்




இராசராசன் காலம் கி. பி. 985 - 1014

# வரலாற்று நாயகர்களின் சிற்பங்கள்-
# தோன்மையும் வளர்ச்சியும்

தமிழுக்குத் தொல்காப்பியம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது தமிழர்கள் வரலாற்று நாயகர்களுக்குச் சிலை எடுத்தது. இதற்குத் தொல்காப்பியமும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களும், சிலம்பும் சான்றுகள் பேசுகின்றன. முதலில் நடுகற்களில் இடம் பெற்ற வரலாற்று நாயகர்களின் சிற்பங்கள், கால வளர்ச்சியில் முழுமையான உருவச்சிலைகளாக வளர்ந்தன. இறையுருவங்களைத் 'திருமேனிகள்' எனக் குறிப்பிடப் புகுந்தபோது, மனிதர்களின் உருவச்சிலைகளைப் 'பிரதிமங்கள்', 'படிமங்கள்' எனக் கல்வெட்டுகளும், இலக்கியங்களும் குறிப்பிட்டன. இவைபற்றிய குறிப்புகள் மிகத் தொன்மைக்காலத்திலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன.

## இந்திய நாட்டின் தொன்மைச் சான்றுகள்

சமஸ்கிருதக் காவியங்களும், வடநாட்டுக் கல்வெட்டுகளும், நாணயங்களும் வரலாற்று நாயகர்களுக்கு உருவச்சிலைகள் எடுப்பதைப் பற்றி விவரிக்கின்றன. மகாபாரதத்திலேயே இத்தகைய குறிப்புகள் காணப்படுவதால் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே மனிதர்களுக்குச் சிலை எடுப்பது மரபாக இருந்ததை உணர முடிகிறது. காளிதாசனுக்குக் காலத்தால் முற்பட்டவரான பாச மகாகவியின் 'பிரதிமா நாடகம்'-எனும் காவியத்தின் குறிப்புகளால் கி.பி. 2-ஆம் நூற்றாண்டியிலேயே இந்திய நாட்டில் வரலாற்று நாயகர்களுக்குச் சிலை எடுத்த மரபு தெளிவுபடுத்தப் படுகிறது.

பிரதிமா நாடகத்தில் மூன்றாவது அங்கத்தில் பரதன் தனது மாமனின் நாட்டிலிருந்து அயோத்திக்கு வருகிறான். அயோத்தியில் படிமங்களின் ஆலயம் இருக்கிறது. கிருத்திகை ஓரையாக உள்ளதால் அது கடந்துதான் பரதனை அயோத்திக்கு அழைத்து வரவேண்டும் என்பதே வசிட்டரின் விருப்பம். அதற்காக வளங் கொழிக்கும் அப்பகுதியில் பொழுதைப் போக்க முற்படுகிறான். உடன் அருகிலிருக்கும் 'பிரதிமாலயத்தினுள்' நுழைகிறான். அங்குப் பல சிலைகள் ஜீவகளையுடனும், கலைப் பாங்குடனும் இலங்குவதைக் கண்டு வியக்கிறான். அப்போது அந்த ஆலயத்தின் காப்பாளனான தேவகுலன் என்பான் அங்கு வந்து பரதனுடன் உரையாடும்போது இட்சுவாகு குலமன்னர்களின் சிலைகள்தான் வரிசையாக அங்கு உள்ளன என்பதைக் கூறுகிறான். அப்போது பரதன்,

"பவந்தம் கிஞ்சித் ப்ருசாமி தரமாணாநரமபி ப்ரதிமா: ஸ்தாப்யந்தே"

"ஐயா, தங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். உயிருடன் உள்ளவர்களுக்கு இங்குச்சிலை அமைக்கும். வழக்கமுண்டா?" என்று கேட்க,

"ந கலு அதிக்ராந்தாநாமேவே"

"இல்லை இறந்தவர்களுக்கு மட்டுமே" - எனத் தேவகுலன் பதிலளிக்கிறான். இவ்வாறு உரையாடிக் கொண்டே வரிசையாக உள்ள தன் குல முன்னவர்கள் சிலைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டு வந்தபோது கடைசியாக உள்ள சிலையைக் கண்டு அதிர்ச்சியடைகிறான். அப்போது தேவகுலன் வாயிலாக அது தன் தந்தையின் சிலை என்பதையும், தசரதன் விண்ணுலகேகினான் என்பதையும் இப்பிரதிமாலயத்தில்தான் முதன் முதலில் பரதன் அறிகிறான் என்று விவரிக்கின்றது இக்காவியம். எனவே சமஸ்கிருதக் காவியங்களின் அடிப்படையில் நோக்கும்போது கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கால அளவில் இறந்தவர்களுக்கு மட்டுமே படிமம் (பிரதிமம்) எடுத்து வழிபடும் ஒரு மரபு இருந்ததை அறிய முடிகிறது.

இதே போன்று மகாகவி காளிதாசனின் இரகுவம்சத்திலும் ஒரு குறிப்பு காணப்படுகிறது. இக்காவியத்தில் பதினான்காம் அங்கத்தின் பதினைந்தாம் சுலோகம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"வேச்மாநிலராம: பரிபர்ஹ வந்தி விச்ராண்ய
ஸௌஹார்த நிதி:ஸுஹ்ருத்ப்ய
பாஷ்பாயமானோ பலிமந்நிகேதம் ஆலேக்ய சேஷஸ்ய
பிதுர்விவேச"

இராமன் மற்றவர்களை எல்லாம் அனுப்பிவிட்டு மிக அழகுடைய ஓர் அறையினுள் நுழைகிறான்; அங்கு மிக எழில் வாய்ந்த ஓவியங்களெல்லாம் உள்ளன. அவற்றில் அவனது குல முன்னவர்களின் உருவங்கள் உயிர்ப்பொலிவோடு திகழ்வனவற்றை அவன் காண்கிறான் எனக் குறிப்பிடுகிறார்.

காவியங்களில் மட்டுமன்றி குப்தர்கள் காலத்துக் கல்வெட்டு களிலும் உருவச்சிலைகள் எடுப்பது பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. குப்தர்களின் நாணயங்களிலும், சாதவாகனர்களின் நாணயங்களிலும் மன்னர்களின் உருவங்கள் இடம் பெற்றன.

## தமிழகம் கண்ட நடுகற்கள்

கடுஞ்சமர்புரிந்து போர்க்களத்தில் மாண்ட தமிழ்மகனுக்குச் சிலை எடுப்பது தமிழகத்தின் தனிச்சிறப்பு. இதற்கு வீரக்கல் அல்லது நடுகல் என்று பெயர். நடுகற்கள் அனைத்திலும் உருவச் சிற்பங்கள் காணப்படவில்லையெனினும், வரலாற்றுச் சாதனைகள் புரிந்த பலரது நடுகற்களில் இறந்தவனது உருவம் பொறிக்கப் பட்டே காணப்படுகிறது. மாற்றார் நாட்டிற்குச்சென்று ஆநிரை கவர்தல், மாற்றார் கவர்ந்து செல்லும் ஆநிரைகளை மீட்டல், மாற்றார் அரணைக் கொள்ளல், தம் கோட்டையைக் காத்தல், வருகின்ற படையைத் தாக்குதல் போன்ற தீரச் செயல்களில் மறவர்கள் ஈடுபடுவர். இவற்றில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ் வொரு பூவின் பெயரையிட்டு அதைத் திணை என்று அழைப்பது தமிழ் மரபு.

ஆநிரை கவர்ந்து கோடலுக்கு வெட்சித்திணை என்றும் மீட்டலுக்குக் கரந்தைத் திணை என்றும் பெயர். இவை இலக்கிய ஆட்சிகள். இம் மரபுகள் எல்லாம் இலக்கிய இலக்கணங்களில் மட்டுந்தானா அல்லது வாழ்க்கை நடைமுறையிலும் நடைபெற்ற வையா என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை இறுக்கும் வண்ணம் எண்ணிலா நடுகற்களும்-வீரக்கற்களும் நமக்குக்கிடைத்துள்ளன. இலக்கியம் காட்டும் பல்வேறு திணைகளுக்குரிய நடுகற்களை இன்று நாம் காணும்போது தமிழ் இலக்கியத்தை மட்டுமன்றித் தமிழகம் போற்றிய ஒரு பண்பு நலனையும் சுவைக்க முடிகிறது



ஆநிரை மீட்ட வீரனது
நடுகல் - கூலிப்பட்டி



புலிகுத்திப்பட்ட வீரனின்
நடுகல் - மோத்தக்கல்



கள்வரைக் கடிந்த வீரனும் நாயும் - மோத்தக்கல்



நாட்டை மீட்ட நல்லோனின் நடுகல்- தொரைப்பாடி

களத்தில் பொருதுபட்ட வீரர்களின் நினைவாக நிற்கும் இந்நடுகற்களில் மாண்ட வீரனது உருவம் திகழும். பெருவீரன் தன் கரத்தில் வில்லோ, வாளோ அன்றிச்சூலமோ ஏந்தி வீரச் சமர் புரிவது போன்று உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அருகில் மங்கலச் சின்னங்களும் காணப்படும். சில வீரர்களுடன் துணை நின்ற நாய் போன்ற விலங்கினங்கள்கூட வீரர்களின் உருவங்களுக்கு அருகே காட்டப்பட்டிருக்கும்,

நாட்டிற்கோ, ஊருக்கோ இடுக்கண் ஏற்பட்ட காலத்துத் தன் இன்னுயிரையும் மதியாது தோள்வலி காட்டி அவ்விடுக்கண் களைந்தவனுக்கு அவன் உயிருடன் இருக்கும்போதே நினைவுச் சின்னம் ஏற்படுத்துவது தமிழக மரபுகளில் ஒன்றாகும். களத்தில் மாண்டவனுக்கு மட்டுமன்றி வாகைசூடி உயிருடன் மீண்டவனுக்கும் வீரக்கல் எடுக்கப்பட்டதைப் பல சான்றுகளால் அறிகிறோம்.

## தமிழ் இலக்கியங்களில் நடுகற்கள்

நீத்தாரின் இறுதிச் சடங்குகளாகச் சங்க காலத்தில் பல வகை முறைகளைப் பேணினர். இறந்தாரின் சடலங்களைத் தீயிலிட்டுச் சுடுதலும், வறிதே இடுதலும், தொடு குழியில் புதைத்தலும், தாழ்வ்யில் அடைத்தலும், தாழியிலிட்டுப் புதைத்தலும் எனப் பலவகை முறைகளைப் பின்பற்றினர். இதனை மணிமேகலை சக்கரவாளக் கோட்டமுரைத்த காதையில்,

" சுடுவோர் இடுவோர், தொடுகுழிப் படுப்போர்,

தாழ்வயின் அடைப்போர், தாழியிற் கவிப்போர்"-(650-651)

எனக் குறிப்பிடுகின்றது.

பெருங்கதை எனும் காப்பியம்

....................நடுகல் உழலையும்
ஆளிடு பதுக்கையும் அரிப்பிணங்கு அடுக்கமும்
தாளிடு குழியும் தலைகரந்து யாத்த
புல்லும் பொள்ளலும் வெள்ளிடைக் களரும்
(உஞ்சைக்.52 :27-30)

என நல்லடக்க முறைகளைப் பேசுகிறது. எத்தகைய சமச் சடங்குகளைப் பின்பற்றினும் இறந்து பட்டவருக்காக நடுகல் நாட்டி, பின்பு தெய்வமாக வழிபடும் பாங்கை அகப்புறப் பாடல்களால் நன்கறிய இயலுகிறது.

போர்க்களத்தில் இறந்து விழ்ந்த மறவனின் உடலின் மேல் கற்களை அடுக்கி அவ்விடத்திலேயே நல்லடக்கம் செய்தனர். இவ்வாறு கற்குவைகளால் மூடப்படுவதைக் 'கற்பதுக்கை' 'கற்றிட்டை'என்றெல்லாம் குறிப்பிட்டனர். போர்க்களத்தில் அம்பு பட்டு ஒரு வீரன் இறந்தால் அவனது உடலைக் கற்குவியலால் மூடி மறைத்தனர். இக்கற்பதுக்கையின் அருகிருந்த ஓர் உன்ன மரத்தின் மீது கழுகுகள் அமர்ந்து அவற்றுக்கு உணவு கிட்டாமல் போய்விட்டதற்காக வருந்தி நிற்பதாக ஒரு காட்சியை இரும்பிடர்த் தலையார் எனும் பெரும்புலவர் தம் புறநானூற்றுப் பாடலிலே காட்டுகிறார்:

"அம்புபட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை"

(புறநா-3:21-23)

"வில்லிட வீழ்ந்தோர் பதுக்கை" (அகநா. 157:5)
என வேம்பற்றூர்க் குமரனாரும்,
"ஆளழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை"
(அக.ந.215:11)

என இளங்குடி குன்றநாடனும்,

"படுகளத்து உயர்ந்த மயிர்த்தலைப் பதுக்கை"

என மதுரை ஈழத்துப் பூதன்தேவனாரும் அகப் பாடல்களால் குறிப்பிடுவதால் சங்க காலத்தில் போர்க்களங்களில் வீரர்கள் மாய்ந்த இடத்திலேயே கற்பதுக்கைகளாகிய கற்குவியல்களால் மூடி ஈமக்கடன் செய்தனர் என்பதை அறிகிறோம்.

இவ்வாறு இறந்து பட்ட வீரன் உடல் மீது குவிக்கப்பட்ட கற்பதுக்கையில் அவ்வீரனின் நினைவாக நடுகல் ஒன்றை நட்டு அதில் அவ்வீரனின் பெயரினைப் பொறித்து அதற்கு மயிற் பீலியும் மாலையும் சூட்டினர் என்பதை உறையூர் இளம் பொன் வணிகனார்,

"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனி நட்டனரே கல்லும்"

என்று குறிப்பிடுகிறார். (புறநா. 264:1-4)

பகைவர்களால் ஆநிரை கவரப்படவே ஒரு வீரன் தான் ஒருவனாகவே அவற்றை மீட்டுக் கொணர்ந்தான். அவ்வாறு ஆநிரை மீட்கும்போது பகைவரது அம்புகளால் அவனது உடல் துளைபட்டுக் குறியிலக்கம் போன்று சிற்றாற்றின் கரையிலே வீழ்ந்தது. அவனது பெயர், மயிற்பீலி சூட்டிப் பிறர் இடங் கொளாத சிறு வழியிலே புடவையால் செய்த பந்தலின்கீழ் நட்டிருக்கும் கல்லிலே விளங்குவதை,

"மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கல்மிசை யதுவே"

என வடமோதங்கிழார் எனும் சங்கப்புலவர் அழகு தமிழ்ப் பாவால் காட்டுகிறார்.[1]

புறங்காட்டிலுள்ள ஒரு நடுகல்லுக்கு வேங்கைப் பூவினைப் பனையோலையாலே அழகாகத் தொடுத்துக் கோவலர் சூட்டி மகிழ்வதாகச் சிறுகருந்தும்பியாரின் குறிப்பு உணர்த்துகிறது.[2] கோப்பெருஞ் சோழனின் நடுகல்லைக் கண்டு பொத்தியார் பாடியது, அதியமான் நெடுமானஞ்சியின் நடுகல்லைக் கண்டு ஔவையார் அரற்றியது,[3] மற்றும் தம் குல முன்னோர்களின் நடுகற்களை மக்கள் வழிபட்டது ஆகியன[4] சுட்டப்படும் சங்கப் பாடல்களின் வாயிலாகப் போரில் இறந்து பட்ட வீரர்களுக்கன்றி, பலருக்கும் நடுகல் எடுக்கப்பட்டதை உணர முடிகிறது.

நினைவுச் சின்னங்களாக நடப்பட்ட நடுகற்களில் வீரர்களின் பீடும் பெயரும் அவர்தம் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளதை இன்று நமக்குக் கிடைத்துள்ள பல நடுகற்களின் வாயிலாக அறிகிறோம். பந்தலின்கீழ்க் காணப்படும் நடுகற்களுக்கு மயிற்பீலியும், மாலையும் சூட்டப்பட்டிருந்ததை முன்பே கண்டோம். இவ்வாறு போற்றப்பட்ட நடுகற்களை வணங்குதற்குரிய தெய்வமாகக் கொண்டனர்.

"கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"

(புறநா. 335: 11-12)

எனக்களிறு எறிந்து தானும் வீழ்ந்து கல்லான ஒரு பெரு வீரனின் நடுகல்லைப் பார்த்து மாங்குடி மருதனார்[5] கூறுகிறார்

கூற்றால் அன்றைய தமிழ் மக்கள் நடுகல்லை எவ்வளவு உயர்ந்த ஒரு தெய்வச் சின்னமாகவே வழிபட்டனர் என்பதை அறியலாம். நடுகல்லுக்குப் பலியூட்டி, நன்னீராட்டி, நெய் விளக்கு ஏற்றுவதால் எழும்புகை முகிலெனப் படர்ந்து தெருவெல்லாம் மணக்கும் சிறப்புடையது என்று மதுரை அறுவை வணிகன் இளவேட்டனாரின் புறப்பாடல் சிறப்பிக்கின்றது.

"புடை நடு கல்லில் நாட்பலி யூட்டி
நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்"
(புறநா : 329 : 2-4.)

"தொழாதனை கழிதல் ஓம்புமதி" - (புறநா : 263 : 3)

எனக் குறிப்பிடும் புறப்பாடல் ஒன்றில் நடுகல்லை வழிபடுவதால் கானம் மழை பெய்யக் குளிரும்; வண்டுகள் மேம்படும் என்ற நம்பிக்கையுணர்வு தெரிகிறது. போருக்குச் சென்ற தன் கணவன் பகை ஒழித்து விரைந்து திரும்பி வர வேண்டுமெனத் தன் குடி முன்னோரின் நடுகற்களை வழிபடும் நங்கையின் காட்சியை அள்ளூர் நன்முல்லையார் எனும் புலவர் காட்டுகிறார்.

வணக்கத்திற்குரியனவாகக் கருதப்பட்ட நடுகற்களுக்குப் பந்தல் அமைத்து நீராட்டி, பீலியும் மாலையும் சூட்டி, தூப தீப ஆராதனைகள் செய்து, நாட்பலியூட்டியது மட்டுமன்றிச் சிறிய கலத்தில் மதுவை வைத்தும் படைத்தனர். இதனை ஒளவையார் அதிகமான் நெடுமானஞ்சியின் நடுகல்லைப் பார்த்து,

"...... நடுகல் பீலி சூட்டி நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ"
( புறநா : 232: 4-5 )

என வருந்தும் பாடலால் அறியலாம். பின்னாளில் வடிக்கப்பட்ட பல நடுகற்களில் வீரனின் உருவத்திற்கு அருகே சிற்பமாகக் காட்டப்பட்டுள்ள கலன்கள் மதுக்கலங்களே எனச் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

## தொல்காப்பியம் காட்டும் படிம நெறிகள்

"காட்சி கால்கோ ணீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர"

என்பது தொல்காப்பிய சூத்திரம். இதனை,

1) காட்சி

கல்கெழு சுரத்திற் சென்று கற்காண்டலும், அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப் பின்னர்க் கற்காண்டலும் என இரு வகையாம்.

2) கால்கோள்

கல்லுறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் அவன் ஆண்டு வருதற்குக் கால்கோடலும் என இரு வகையாம்.

3) நீர்ப்படை

கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப்படுத்துத் தூய்மை செய்தலும், பின்னர் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழி நீராட்டு தலுமென இரு வகையாம்.

4) நடுதல்

கல்லினை நடுதலும், அக்கல்லின்கண் மறவனை நடுதலுமென இரு வகையாம்.

5) சீர்த்தரு மரபிற் பெரும்படை

அவன் செய்த புகழைத் தகும்படி பொறித்தலும், அக் கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புகளைப் படைத்தலுமென இரு வகையாம்.

6) வாழ்த்தல்

கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்தலும், பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த் தலுமென இரு வகையாம்-எனப் பிரித்து விளக்கம் கூறுகிறார்

நச்சினார்க்கினியர். பீடங்கள் வகுத்து, தீபமேற்றி வழிபடுமாறு செய்யும் நிகழ்ச்சியை மேற்கோள் காட்டுகிறார். நாட்டிய கல்லிற்குக் கோயிலும், மதிலும், வாயிலும் அமைத்துச் சிறப்புகள் செய்வதே 'பெரும்படை' என்று வலியுறுத்துகிறார்.

'சீர்த்தகு மரபின் பெரும்படையாவது நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல்; அஃது இற் கொண்டு புகுதல் என்று உரைத்த துறை' என்று இளம்பூரணர் உரை கூறுகின்றது.

"வேத்தமருள் விளிந்தோர் கல்என
ஏத்தினர் துவன்றி இற்கொண்டு புக்கன்று"
(பொதுவியல் : 14)

என்பது புறப்பொருள் வெண்பாமாலை கொளு. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது நடுகற்களுக்குக் கோயிலெடுத்து வழிபட்ட செய்தி உறுதிப்படுகிறது. இவ்வழக்கே பின்னாளில் பள்ளிப்படைக் கோயில்களாக வளர்ச்சி பெற்றது.

## சோழநாட்டில் பள்ளிப் படைகள்

பள்ளிப்படையாக எடுக்கப்பட்ட நினைவாலயம் ஒன்று இன்றும் சோழ நாட்டில் உள்ளது. இது முதலாம் இராசராசனின் மனைவியான பஞ்சவன்மாதேவிக்குக் கடாரம் கொண்ட பெரும் மன்னன் இராசேந்திர சோழன் பழையாறை நகரில் எடுப்பித்த "பஞ்சவன்மாதேவீச்சர"மாகும். இது தற்போது பட்டீசுவரம் என்னும் தஞ்சை மாவட்டத்துச் சிற்றூரில் 'இராமநாதன் கோயில்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

இதேபோன்று கி.பி.1178-இல் இரண்டாம் இராசராசன் இறந்தபோது அவனது நான்கு தேவியரும் உடன் இறந்தனர். ஐவரின் உடல்களையும் எரியூட்டிய பின்னர் எலும்புகள் புதைக்கப்பட்டு, அவற்றின் மீது சிவன் கோயில்கள் கட்டப்பட்டன. அவை முறையே பள்ளிப்படை இராச கம்பீர ஈசுவரமுடையார், புவனம் முழுதும் உடையாள் ஈசுவரமுடையார், ஏழ் உலகும் உடையாள் ஈசுவரமுடையார், திரிபுவனம் முழுதும் உடையாள் ஈசுவரமுடையார், உலகுடைய முக்கோக்கிழானடிகள் ஈசுவரமுடையார் பள்ளிப்படைக் கோயில்களென்று

அழைக்கப்பட்டன. இக் கோயில்கள் இராசராசபுரத்திற்கு (தாராசுரம்) அண்மையிலிருந்தனவாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[6] இன்று இக்கோயில்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இதே போன்று வரலாற்று அறிஞர் சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடும் முதலாம் பிருதிவிபதியின் நடுகற் கோயிலும் கச்சியாண்டவர் நடுகற் கோயிலும் முன்பு சோழ நாட்டிலிருந்து இன்று முற்றிலுமாக அழிந்துவிட்டன.[7]

இவ்வாறு பின்னாளில் எடுக்கப்பட்ட சோழநாட்டுப் பள்ளிப்படைக் கோயில்களில் மறைந்தவர்களின் உருவச்சிலைகள் எடுக்கப்படவில்லை. இறந்தவர்கள் சிவபெருமானின் திருவடிகளை அடைந்து விடுகிறார்கள் என்ற நம்பிக்கையால், இப் பள்ளிப்படைக் கோயில்களில் சிவலிங்க உருவங்களையே வைத்தனர். பின்னாளில் (கி. பி. 16 - ஆம் நூற்றாண்டில்) சோழநாட்டு அரசியலில் முக்கியப் பங்கு வகித்த கோவிந்த தீட்சிதர் மறைந்த பிறகு அவரது நினைவாகக் கும்பகோணம் கும்பேசர் திருக்கோயிலில் கோவிந்த தீட்சிதலிங்கம் என்ற பெயரில் சிவலிங்க உருவத்தை அமைத்து அதனருகே அவரது மனைவி நாகாம்பா அம்மையாரின் வணங்கும் கோல உருவச் சிலையை வைத்துள்ளது நோக்குதற்குரிய ஒன்று.

## கண்ணகிக்குச் சிலை எடுத்தது

தொல்காப்பிய சூத்திர அடிப்படையிலேயே இளங்கோ அடிகள் தாம் யாத்த சிலப்பதிகாரத்தில் காட்சி, கால்கோள் நீர்ப்படை, நடுகல், வாழ்த்து முதலிய காதைகளாகப் பகுத்து, கண்ணகிக்குப் படிமம் எடுத்ததைப் பேசுகிறார்.

"பார்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களின் நீர்ப்படை செய்து"
- நீர்ப்படைக் காதை (4156 - 4157)

"கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி

வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்துக்
கடவுள் மங்கலம் செய்கென ஏவினன் ''

- நடுகற்காதை ( 4625 - 4630 )

'' பலர் தொழப்படிமங்காட்டித் தடமுலைப்
பூசலாட்டியைக் கடவுண் மங்கலம் செய்தபின்னால்
கண்ணகி தன் கோட்டத்து ...... ''

- வாழ்த்துக்காதை (4622 - 4634)

எனச் சிலை எடுத்து, நீராட்டி, கடவுண்மங்கலம் செய்து கோட்டம் அமைத்த செய்தியைச் சிலம்பில் திறம்படச் செப்புகிறார்.

வரலாற்றில் ஈடிணையில்லாப் புகழ்பெற்ற ஒரு தமிழ்க் குல மடந்தைக்குச் சிலை எடுத்ததையும் சிலை எடுக்கத் தமிழர்கள் போற்றிய மரபுநெறிகளையும் பற்றிக் கி.பி. 5 - ஆம் நூற்றாண்டு நிலையைச் சிலம்பின் வாயிலாகத் தெள்ளிதின் கண்டோம்.

வரலாற்று நாயகர்களின் படைப்புச் சிற்பங்களைத் தாங்கி நிற்கும் நடுகற்களால் நாம் வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகிறது. பீடும் பெயரும் எழுதுவது தொன்மை மரபு என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள நடுகற்களைத் தொகுத்து நோக்கும் போது பல கற்களில் வெறும் உருவம் மட்டுமே காணப்படுவதால் பொதுவாக மறைந்தவர்களுக்கு உருவம் மட்டும் உள்ள கல் நடப்பட்டது என்பதும், வரலாறு படைத்த ஒரு சிலருக்கு நடுகற்களில் பல செய்திகளும் கல்லெழுத்துகளாகப் பொறிக்கப்பட்டன என்பதும் புலப்படுகின்றன.

அன்று ஆட்சி புரிந்த மன்னனின் பெயர், அவன் ஆட்சியாண்டு, மாண்ட வீரனின் பெயர், அவன் எவ்வூரினன், யாது காரணத்தால் மடிந்தான் என்பன போன்ற பல செய்திகள் நடுகற்களில் காணப்படுகின்றன. இத்தகைய வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் செய்திகளும் அடங்கிய நடுகற்கள் வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படுகின்றன. இவற்றின் துணையால் அன்றைய தமிழகத்தின் நாட்டுப் பிரிவுகள், ஒரு

நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையே நிகழ்ந்த போர், அதில் சிற்றரசர்கள் கொண்ட பங்கு, போர் எவ்வளவு காலம் நீடித்தது, எவர் இறுதி வெற்றி பெற்றார், மாண்ட வீரனது சாதனை, அவன் எவ்வகைத் தாக்குதலால் இறந்து வரலாறு படைத்தான் என்பன போன்ற செய்திகள் ஆராயப்படுகின்றன. இவ்வகை நடுகற்களின் உதவியால் எழுத்திலக்கணம், பொருள் இலக்கணம், எழுத்தின் பலவித கால வளர்ச்சி முதலானவை கூட அறியப்படுகின்றன.

இதுவரை சோழ மன்னர்களின் ஆட்சியாண்டுகள் குறிப்பிடப்பட்ட பல நடுகற்கள் கிடைத்தபோதும் ஒன்றுகூட பழைய சோழநாட்டுப் பகுதியில் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. ஆனால், முதலாம் இராசராசன் காலத்தில் விரிவடைந்த சோழமண்டலப் பகுதியில் பல நடுகற்கள் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்படும் பழந்தமிழரின் ஈமச் சின்னங்கள் பற்றி முன்பே கண்டோம். 'கற்பதுக்கை' அமைத்தல் சோழநாட்டில் அவ்வளவாகப் பின்பற்றப்படவில்லை. இதற்குக் காரணம் சோழநாட்டின் இயற்கை நிலஅமைப்பேயாகும்.

சோழநாட்டின் பெரும்பகுதி மருத நிலப் பகுதியாகையால் இத்தகைய சின்னங்கள் இங்கு இல்லை. தாழியிலிடுதலும், தீயிலிட்டுச் சுடுதலும் இவர்கள் பின்பற்றிய ஈமநெறிகளாக இருந்திருக்க வேண்டும். சங்க காலப் பெரும் போர்களான தலையாலங்கானப் போரும், வெண்ணிப் போரும் நடந்த சோழநாட்டில் ஒரு நடுகல்கூட இதுகாறும் கிடைக்காதது விந்தையே! இருப்பினும் சோழமண்டலப் பகுதியில் இதுவரை கிடைத்துள்ள நடுகற்கள், வரலாறு படைத்தவர்களுக்கு உருவச் சிலைகள் எடுப்பதில் எத்தகைய வளர்ச்சி காலப் போக்கில் அமைந்தது என்பதை அறியத் துணை நிற்கின்றன.

அனைத்துச் சான்றுகளையும் தொகுத்து நோக்கும் போது இந்திய நாட்டில் மிகத் தொன்மைக் காலத்திலேயே இறந்தவர்களின் உருவச் சிலையையோ ஓவியத்தையோ போற்றி வணங்கினர் என்பதை அறிகிறோம். தமிழர்கள் மனிதர்களுக்குச் சிலை எடுக்கத் தொல்காப்பிய காலத்திலேயே இலக்கணம் வகுத்ததையும் காண முடிகிறது. கற்பதுக்கைகளில் தொடங்கிய நினைவுச் சின்னங்கள், பின்பு

நடுகற்களாகவும் அவை சிற்பங்களும் வரலாற்றுச் செய்திகளும் தாங்கிய கற்பலகைகளாகவும் வளர்ச்சி பெற்றன. இறந்தவர்களுக்காக முதலில் எடுக்கப்பட்ட இத்தகைய நடுகற்கள் பின்பு உயிருடன் இருந்த சாதனையாளர்களுக்காகவும் எடுக்கப்பட்டன.

தமிழக வரலாற்றுக்காலம் முதல் (கி. பி. 5 - ஆம் நூற்றாண்டு முதல்) இறந்தவர்களுக்காக எடுக்கப்படும் அவர்களது சிலைவழிபாடு குறையத் தொடங்கி, நாளடைவில் அவர்களையும் தெய்வ உருவங்களாக (இலிங்க உருவங்களாக) வழிபடத் தொடங்கினர். பின்னாளில் இடம்பெற்ற வரலாற்று நாயகர்களின் உருவச்சிலைகள் பெரும்பாலும் அவர்கள் உயிருடன் வாழ்ந்தபோதே அவர்களாலேயே திருக்கோயில்களில் எடுக்கப்பட்டன. இத்தகைய படிமங்கள் இறைவனை வணங்கும் கோலத்தில் அமைந்தன. இவை பெரும்பாலும் திருக்கோயில் தூண்களிலும் சுவர்களிலும் இடம் பெற்றன. சில சிற்பங்கள் வரலாற்றுக் குறிப்புகளும் அருகில் செதுக்கப்பட்டுத் திகழ்ந்தன.

இவ்வாறு காலப்போக்கில் பல மாறுதல்கள் அடைந்த உருவச்சிலை எடுக்கும் இம்மரபு, பின்பு கருங்கற்சிற்பங்களாக மட்டுமன்றி செப்புத்திருமேனிகளாகவும், வண்ண ஓவியங்களாகவும், சுதைச் சிற்பங்களாகவும், தந்தம் மற்றும் மரச் சிற்பங்களாகவும் வளர்ச்சி பெற்றுத் தமிழகத்தின் வரலாறு, பண்பாடு, கலை ஆகிய பல்வேறு துறைகளில் சிறப்பான இடம் வகித்துப் பெருமை சேர்க்கின்றன.

### குறிப்புகள்

1 புறநானூறு பாடல் எண் : 260 : 26 - 28
2 புறநானூறு பாடல் எண் : 265 : 1 - 5
3 புறநானூறு பாடல் எண் : 232 : 3 - 4
4 புறநானூறு பாடல் எண் : 306 : 4
5 Ins. 271 of 1907
6 Medieval Pandyas - N. Sethuraman, 1980, Page-25
7 பாண்டியர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார், பக்கம் - 78.

# இயல் 2

# பல்லவர் இயல்

# தமிழகத்தின் முதற்படிமம்
## -மகேந்திர பல்லவன்-
### (வரலாற்றுக் காலம் கி.பி. 590-630)

சங்க காலம் விடுத்து வரலாற்றுக் காலம் புகுங்கால் தமிழகத்தில் செங்கோலோச்சிய பெருமன்னர்கள் வரிசையில் தலையாய இடம் பெற்றவர்கள் பல்லவ மரபினரே. கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவ மன்னனான சிம்மவிஷ்ணு என்பான் சேரர், களப்பிரர் முதலியோரை வென்று பல்லவராட்சியைக் காஞ்சியில் நிலைநாட்டினான். இப்பெரு மன்னனின் புதல்வனே மகேந்திர போத்தரையன் எனும் முதலாம் மகேந்திரனாவான். கல்வி கேள்விகளில் சிறந்தவனாகவும் மிகுந்த கலையார்வம்கொண்டவனாகவும் திகழ்ந்த இப்பெருமகன் இயல் இசை,நாட்டியம் எனும் முப்பெருந் துறைகளிலும் சிறந்தவல்லுநன் ஆவான். இவனது கல்வெட்டுகள் இவனை லலிதாங்குரன், பகாப்பிடுகு, சத்ருமல்லன், குணபரன், புருஷோத்தமன், சத்தியசந்தன், விசித்திரசித்தன், மகாசேத்தகாரி, சித்ரகாரப்புலி விக்கிரமன், அலுப்தசாமன், கலகப்பிரியன், சங்கீர்ணஜாதி என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கின்றன. அதேபோல் தெலுங்கு மொழியில் நிவிலோநயம்பு, வெண்டுலவிட்டு என்றும் புகழ்கின்றன.

இவன் கி.பி.590-630 வரை 40 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என்பது அண்மைக்கால வரலாற்றுக் கண்டுபிடிப்புகளால் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் குடைவரைக் கோயில்களை முதன்முதலில் தோற்றுவித்த பெருமகன் இவனாவான். இவனது ஆட்சி தொண்டைமண்டலம் மட்டுமன்றி தெற்கே சோழநாட்டுப் பகுதிகளான புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளிவரை விரிந்திருந்தது. மண்டகப்பட்டு

எனும் ஊரில் உள்ள இவனது குடைவரை கல்வெட்டொன்று விசித்திர சித்தனான இம்மன்னவன் செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு முதலிய பொருள்களின்றி கோயில் கட்டும் முறையைத் (கல்லைக் குடைந்து கோயிலமைப்பது) தோற்றுவித்தவன் என்று புகழ்கிறது.

இவனது படைப்புக்களாக இன்று தமிழகத்தில் சீய மங்கலம், வல்லம், மகேந்திரவாடி, திருச்சிராப்பள்ளி, மண்டகப் பட்டு, தளவானூர், பல்லாவரம் ஆகிய இடங்களில் குடை வரை கோயில்கள் திகழ்கின்றன.

மகேந்திரவர்மன் பல துறைகளில் நாட்டம் கொண்டு தமிழகக் கலைகள் பலவற்றைப் போற்றி வளர்த்தவன்; சிறந்த இசைப்புலவன். '....ன் சங்கீர்ண ஜாதி' என்ற பண்ணை அமைத்துத் தனிச் சிறப்பெய்தியவன். 'மத்தகாசபிரகசனம்' 'பகவத்தஜ்ஜுகம்' என்ற இரண்டு சமஸ்கிருத நாடகங்களை யாத்த பெருமன்னன்; தர்க்கசாத்திரத்தில் வல்லுநன்;[3] சிறந்த ஓவியன். நாவுக்கரசர் எனும் அப்பர்பெருமானால் சமணம் விடுத்துச் சைவம் ஏகியவன். இப்பெருமன்னன் மீது இரண்டாம் புலிகேசி என்ற சாளுக்கிய மன்னன் போர் தொடுத்துக் காஞ்சி வரை முன்னேறியபோது மகேந்திரன் புலி கேசியைப் புள்ளலூர் என்ற இடத்தில் புறமுதுகிடச் செய்தனன். இவ்வாறு எண்ணிலாப் புகழ் பெற்றுத் திகழ்ந்த இம்மன்னன் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழகத்து வரலாற்று நாயகர்களுள் தலையாய இடம் பெற்றவனாவான்.

மகேந்திர போத்தரையன் பல்லவ நாட்டின் பேரரச னாகத் திகழ்ந்த போதும் இவனது உள்ளம் சோழ நாட்டின் எழிலில்தான் முழுதும் மயங்கியிருந்தது. கி. பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் சோழர்கள் வலிமை குன்றியவர்களாகத் திகழ்ந்ததால் மகேந்திரனின் ஆட்சி, காவிரியின் தென்கரையை யும் தாண்டிப் பரவிக் கிடந்தது. தான் போற்றும் கயிலை நாதனுக்குத் திருச்சிராப்பள்ளி மலையின் மீது ஒரு குடை வரையை எடுப்பித்தான், இதற்கு 'லலிதாங்குர பல்லவேசுவர கிருகம்' எனவும் பெயரிட்டான்.[4]

உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குச் சற்றுக் கீழாக அமைந் துள்ள இக்குடைவரையில் சிவபெருமானுக்கு ஆலயம் சமைத் தான். தென்திசை நோக்கியுள்ள இக்குடைவரை கோயிலின்

கீழ்ப்புறம் சிவலிங்க மூர்த்தத்தையும் மேல்புறம் கங்காதரரையும் தோற்றுவித்தான். எழில் மிகுந்த இந்தக் கங்காதரமூர்த்தியின் சிற்பம் அரிய ஒன்று மலைச் சுவரில் செதுக்குருவச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ள இச்சிற்பத்தில் சிவபெருமான் நின்ற நிலையில் தனது வலக்காலைக் கீழிருக்கும் முயலகன் தலைமீது ஒய்யாரமாக ஊன்றிக் கொண்டு விண்ணிலிருந்து இறங்கும் கங்கை தேவியைத் தனது மேல் கரத்தால் தாங்கிச் சடைமுடியில் ஏந்துகிறார். மேல் இடக் கரத்தில் அக்க மாலை உள்ளது. இடுப்பில் ஒரு கரமும், பாம்பு ஏந்திய பிறிதோர் கரமும் அண்ணலுக்கு அழகூட்டுகின்றன. இச்சிற்ப அழகு,

"எரி மலர்த் தாமரை இறை வீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறை ஊழ்த்து விழுநிகர் மலர் ஏய்ப்ப
தணிவுறத் தாங்கிய தனிநிலை சலதாரி
மணிமிடற்று அண்ணற்கு மதிஆரல் பிறந்தோய் நீ"

என்ற பரிபாடல் காட்சியை இங்கு நினைவூட்டுகின்றது.

எழில் கொஞ்சும் கங்கையைத் தன் விரிசடையால் ஏந்தும் இப்பெருமானின் திருவடிகளுக்கு இருபுறமும் இரண்டு மனித உருவச்சிலைகள் மண்டியிட்டு அமர்ந்த நிலையில், தம் கரங்களுள் ஒன்றை இடுப்பிலும், பிறிதொன்றைத் தலைக்குமேல் உயர்த்திய நிலையிலும் கொண்டுகாணப்படுகின்றன. சிறப்புமிகுந்த இந்தக் கல்லோவியங்களுக்கு இருபுறமும் சமஸ்கிருதக் கல்வெட்டுப் பாடல்கள் இரண்டு, பல்லவக் கிரந்த எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுகளை முதன் முதலில் படி எடுத்துப் பதிப்பித்த ஹூல்ஷ் (HULTZ) என்ற மேனாட்டறிஞர் இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பின்பு இக் கல்வெட்டுப் படியின் தெளிவற்ற பகுதிகளை ஆராய முற்பட்ட முனைவர் இரா. நாகசாமி நேரில் கல்வெட்டைப் படித்து, சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த பல பொருள்கள் பொதிந்த இந்தச் சுலோகங்களுக்கு விளக்கமளித்தார். இவ்வறிஞர்களின் மொழிபெயர்ப்புகளால் கங்காதரமூர்த்தியின் அருகேயுள்ள படிமங்கள் இரண்டும் 'குணபரன்' எனும் மகேந்திர பல்லவனுடையன என்பது மிகத் தெளிவாக அறியமுடிகிறது.

"இங்குத் தாணுவைத் தோற்றுவித்தேன்; அவர் என்றும் அழியாத சிலையாகத் தோற்றமளிக்கிறார். அவரது அருகிலேயே

எனது உருவையும் படைத்த நான், சிலையாக நின்று என்றும் அழியாத புகழடைந்து விட்டேன்" எனப் பெருமிதத்துடன் மகேந்திரனாகிய குணபரன் கூறுவதாக அமைந்துள்ள இக்கல் வெட்டுச் சான்றின் துணை கொண்டு, மேற்குறித்த பல்லவ மன்னனின் கற்சிலைதான் வரலாற்றுச் சான்றுகளோடு கிடைத் துள்ள வரலாற்று நாயகர்களின் சிற்பங்கள் வரிசையில் காலத்தால் முதலிடம் வகிக்கின்றது என்பதை அறியலாம்.

கங்காதரமூர்த்திக்கு இருபுறமும் உள்ள இக்கல்வெட்டுப் பாடல்கள் மூலம் மகேந்திரனின் உருவச்சிலை பற்றிய செய்தி களையும், சைவத்தின் சிறப்பையும் அறிய முடிகிறது. மேலும் மகேந்திரன் சமணம் விடுத்துச் சைவம் தழுவியதைத் தமிழுல கிற்கு அறிவிக்கும் ஒரே கல்வெட்டும் இதுவே. பல்வகையாலும் தமிழகத்தின் வரலாறு அறிய உதவும் இக்கல்வெட்டின் தமிழாக்கம் காண்போம்.

## பல்லவக் கிரந்தக் கல்வெட்டு

(1) "காவேரீம் நயனாபிராம ஸலிலாம் ஆராம மாலாதராம்
தேவா வீக்ஷ்ய நதீப்ரிய:ப்ரியகுணாம் அபி ஏஷ
(ப்ரியகுணாமப்யேஷ) ரஜ்யேத் இதி
ஸாஸங்கா கிரிகன்யகா பித்ராகுலம் ஹித்வேஹ
மன்யேகிரௌ
நித்யம் திஷ்டதி பல்லவஸ்ய தயிதாம் ஏதாம்
ப்ருவாணா நதீம்"

நதிகளிடம் மிகுந்த ஆவல் கொண்ட சிவபெருமான் (நதிப் பிரியன்), கண்களுக்கு இனிய தெளிந்த நீரையும், வரிசையாக உள்ள கோயில்களான ஆபரணங்களையும், விரும்பத்தக்க பல நற்பண்புகளையும் உடையவளாகிய காவிரியைப் பார்த்துவிட்டு அவள் எழிலில் மயங்கிக் காதல் கொண்டுவிடுவானோ என்று ஐயம் கொண்ட மலையரையனின் மகளாகிய பார்வதி தேவி, தன் தந்தையின் உறைவிடமான இமயத்தை விட்டு விட்டு இங்கு வந்து (திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலுக்கு வந்து) சிவனருகில் நீங்காமல் அமர்ந்து கொண்டு, "இந்தக் காவிரியானவள் பல் லவனுக்குரியவள்" என்று சொல்லிய வண்ணமே இருக்கிறாள்.

(2) "குண பர நாமநி ராஜநி அநேந லிங்கேந லிங்கிநி க்ஞானம்
ப்ரததாம் சிராய லோகே விபக்ஷ விருத்தே:பராவ்ருத்தம்"

இந்தச் சிவலிங்கத்தின் திருவருளால் குணபரன் எனும் பெயருள்ள இவ்வரசன் காமம், கோபம், பகைமை உணர்வுகள் உடைய புறச்சமயம் நீங்கி அறிவு, ஞானம் முதலியவற்றின் இருப்பிடமான மெய்ப்பொருளைத் தழுவினான். இது நீண்ட நெடுங்காலம் சிறந்து விளங்கட்டும். (தர்க்க சாத்திர அடிப் படையிலுள்ள இந்தச் சுலோகத்திற்குச் சிலேடையுடன் கூடிய ஆழ்ந்த இருவகைப் பொருள்கள் உண்டு.)

(3) "சோலவிஷயஸ்ய ஸைல : மௌளி ரிவாயம் மஹாமணி ரிவாஸ் ய
ஹரக்ரு ஹமேதஜ்யோதி : ததீயமிவ ஸாங்கரம் ஜ்யோதி"

சோழநாட்டின் மகுடம் போன்ற இந்த மலை, இந்தக் குணபரனின் உத்தம வைரமணிகளையுடைய மகுடம் போலவும் இச்சிவாலயம் அந்த மகுடத்தின் பேரொளி போலவும், அவனுடைய பேரழகு சிவபெருமானின் ஒளி போலவும் திகழ்கிறது.

(4) "சிலா அக்ஷரேண ஜநிதா ஸத்யஸந்தஸ்ய பௌதிகீமூர்த்தி:
கீர்த்திமயீ சாஸ்ய க்ருதா தேநைவ ஸமதாயி ஸாஸ்வதீ பக்தி :"

சத்தியம் தவறாத இந்தக் குணபரனின் அழியக்கூடிய உடலும், அவனது அழியாத புகழ்மயமான சிலா வடிவமும் (கல் உருவச்சிலையும்) சிவபெருமானால் படைக்கப்பட்டவை என்பதால், சிவபெருமானிடம் குணபரனால் நிலையான பக்தி வைக்கப்பட்டது.

5) "சைலேந்திர மூர்த்நி சிலாபவநே விசித்ரே ஸைலீம் தநும் குணபரோ ந்ருபதிர் நிதாய
ஸ்தாணும் வ்யதத்த (விதரேஷு) விதிநைஷ யதார்தஸம்ஞம்
ஸ்தாணு: ஸ்வயம் ச ஸஹ தேந ஜகத்ஸீ ஜாத:"

மலையின் உச்சியில் புதுமையான (விசித்திரமான) மலைக் கோயிலில் சிலா வடிவத்தை வைத்ததினால் தாணுவாகிய சிவபெரு மான் என்றும் அழியாத சிற்பமாகத் (ஸ்தாணுவாக) தோற்றமளிக் கிறார். இச்செயலால்-குணபரனும் அச்சிவபெருமானுடன் தன் உருவச்சிலையையும் படைத்துக் கொண்டதால்-தானும் நிலை யானவனாகப் (ஸ்தாணுவாக) பெரும் புகழ் அடைந்துள்ளான்.

6) "க்ருஹ மக்ருத சத்ருமல்ல: (ல்லா)
கிரீந்த்ர கத்யாபதே: கிரௌ அஸ்மிந் (கிரா வஸ்மிந்)
கிரிசஸ்ய கிரிசஸ்ஞாம்
அந்வர்தீ கர்த்துமர்த பதி:"

சிவபெருமானுக்கு மலையில், உறைபவன் என்ற காரணத்தால் 'கீரிச' (கிரி ஈசன்) என்ற பெயருண்டு. அவருக்குரிய கிரீச என்ற பெயரைப் பொருளுடையதாகச் (காரணப் பெயராக) செய்வதற்கென, மாற்றரசர்களை வீழ்த்தும் மாவீரனான குணபரன் (சத்ருமல்லன்) இந்த மலை மீது மலையரையனின் மகளது மணாளனுக்கு இந்த ஆலயம் அமைத்தான்.

7) விபூதிம் சோலாநாம் கதமஹம் அவே க்ஷேய விபுலாம்
நதீம்வா காவேரீம் அவநி பவநாவஸ்தித இதி
ஹரேணோக்த: ப்ரீத்யா விபுரதீசத் அப்ரம்லிஹமிதம்
மநுப்ரக்யோ ராஜ்யே பிரிபவநம் அஸ்மை குணபர:"

சோழநாட்டின் பரந்த செல்வ வளங்களையும் காவிரியின் எழிலையும் தரையிலுள்ள கோயில்களிலமர்ந்து சிவபெருமான் காண முடியாது என்பதற்காக மனுநிகர் மன்னவனாம் குணபரன் மேகங்களைத் தழுவும் இந்த மலைக் கோயிலை, உயரமான இந்த இடத்தில் அமைத்தான்.

8) "நிர்மாபிதாம் இதி முதா ப்ருஷோத்தமேந ஸைலீம் ஹரஸ்ய
தநும் அப்ரதிமாம் அநேந
க்ருத்வா சிவம் சிரஸி தாரயதாத்ம ஸம்ஸ்தம்"
உச்சை: சிரஸ்த்வம் அசலஸ்ய க்ருதம் க்ருதார்தம்

புருஷோத்தமனாகிய இந்தக் குணபரன் மகிழ்வுடன் தன் இதயநாயகனாகிய சிவபெருமானின் இணையற்ற சிலா வடிவை அமைத்து அந்தச் சிவபெருமானைத் தன் தலையால் தாங்கும் தகுதியாகிய பெருமையை இந்த மலைக்கும், தனக்கும் உரியதாகச் செய்தான்.

மேற்குறித்த இந்தப் பலலவக் கிரந்தக்கல்வெட்டால் மகேந்திர போத்தரையன் திருச்சி மலைக்கோயிலில் கங்காதர மூர்த்தியின் அருகில் என்றென்றும் அழியாத சிலையாகத் தன் உருவத்தைச் செதுக்கச் செய்தான் என்பதையும், இதனால்

சிவபெருமானைத் தலையில் தாங்கும் பெருமையடைந்தான் என்பதையும் கண்டோம். கல்வெட்டு குறிப்பிடுவது போன்றே மகேந்திரப் போத்தரையனின் சிலையும் தனக்குமேல் கையை உயர்த்தி அருகே நிற்கும் கங்காதரரைத் தலையில் தாங்கும் கோலத்தில் வடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்.

குணபரனைச் சைவத்தின்பால் அன்பு கொண்டு தழுவச் செய்த அப்பர் அடிகள் நல்லூர்த் திருக்கோயிலில் பாடிய

''நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே''-

என்ற பதிகமும், மகேந்திரனுக்குப் பின் வந்த தமிழக மன்னர்கள் வரிசையில் முதலாம் இராசராசன் தன்னைச் 'சிவபாதசேகரன்' எனக்கூறிக்கொண்டதும், இரண்டாம் குலோத்துங்கன் ஆரூர்க் கல்வெட்டில் தன்னைச் சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரை மலர்களை மொய்க்கின்ற வண்டு என்று குறிப்பிடுவதும், திருவாலங்காட்டில் சிவனடிகளைச் சுமந்து சிலையாக நிற்கும் குலோத்துங்கனின் சிறப்பும் ஈண்டு நோக்குதற்குரியனவாகும்.

திருச்சிராப்பள்ளி குடைவரையிலுள்ள இரண்டு சிலைகளுமே ஒரு காலைக் குத்திட்டு, மறுகாலை மடித்த நிலையில் அமர்ந்து, தன் ஒரு கரத்தைத் தலைக்குமேல் உயர்த்தியும், பிறிதோர் கரத்தை மடித்துக் காலின்மேல் ஊன்றியும் வைத்துள்ளமை காணப்படுகின்றன. கழுத்தணி திகழ,மார்பில் உள்ள மிகப்பட்டையான புரிநூலும் (யக்ஞோபவிதம்) இடுப்பிலுள்ள ஆடையின் எழிலும் இச்சிலைகளுக்கு மேலும் அழகூட்டுகின்றன.

இங்குள்ள இரண்டு சிலைகளுமே ஒரே மாதிரியாக வடிக்கப்பட்டிருப்பினும் ஒன்றில் சடைமுடிகொண்டும் பிறிதொன்றில் மகுடம் தரித்தும் இம்மன்னவன் திகழ்கிறான். மகுடத்தில் கல்மணி ஒளிவிடுவது போன்றுள்ளது. இதனை நோக்கும்போது "சோழ நாட்டின் மகுடம் போன்ற இந்த மலை, இந்தக் குணபரனின் உத்தம வைரமணிகளுடைய மகுடம் போலும்,இச்சிவாலயம் அந்த மகுடத்தின் பேரொளி போலும், அவனுடைய பேரழகு சிவபெருமானின் ஒளியெனவும் திகழ்கிறது" என்ற இவனது கல்லெழுத்து வரிகள் நினைவுகூரப் பெறுகின்றன.



கங்காதரர் திருவடி அருகே பல்லவன்

மேற்குறித்த திருச்சிராப்பள்ளிக் குடைவரைக் கல்வெட்டுப் பாக்களாலும், நாவுக்கரசர் மற்றும் சேக்கிழாரின் கூற்றுக்களாலும் குணபரன் எனும் மகேந்திர போத்தரையன் சமணம் விடுத்துச் சைவம் ஏகி இலிங்க வழிபாட்டை மேற்கொண்ட செய்திகள் மட்டுமன்றி என்றென்றும் அழியாப் பரமனின் அருகிலேயே தனது சிலா வடிவத்தை எடுத்து, என்றும் அழியாப் பெரும் புகழெய்தியதை அறிய முடிகிறது. எனவே திருச்சிராப்பள்ளிக் குடைவரை கோயிலில் உள்ள மகேந்திரனின் உருவச்சிலையே வரலாற்றுக் கால உருவச்சிலைகளிலேயே முதலிடம் வகிக்கின்றது. இதில் உள்ள சிறப்பு உயிருடன் உள்ள மன்னன் தனக்கெனத் தானே சிலை எடுத்துக் கொண்டதுதான்.

தமிழகம் முழுதும் உள்ள மன்னர்களின் சிலைகளின் வரிசையில் தொன்மைச் சிறப்பால் முதலிடம் வகிக்கும் இந்த உருவச்சிலை, சோழமண்டலத்திலேயே உள்ளது சோழநாட்டுப் பெருமைகளுள் தலையாய ஒன்றாகும்.

## இதுதான் முதற் படிமமா ?

மாமல்லை, கடல் மல்லை என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் மகாபலிபுரத்திலுள்ள 'ஆதிவராக மண்டபம்' எனும் குகைக் கோயில் பல்லவக் கிரந்தக் கல்வெட்டில் 'பரமேச்சுர மகாவராக விஷ்ணு கிருஹம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. சிறந்ததொரு கலைக்கூடமாகத் திகழும் இக்கோயிலின் வடபுறச் சுவரில் சிம்ம விண்ணப் போத்திராதிராசனின் உருவச்சிலை உள்ளது. உயர்ந்த அரியணையில் மன்னன் அமர்ந்துள்ளான். இடக்கை தொடை மீதுள்ளது. வலக்கரம் சிம்ம கர்ண முத்திரையில் காணப்படுகிறது. மகுடம் தரித்துக் காதணிகளோடு விளங்கும் மன்னனின் இருமருங்கும் அவன் தேவியர் இருவர் நிற்கின்றனர். இச்சிற்பத்திற்கு மேலாக, "சிம்ம விண்ணப் போத்திராதிராசன்" எனப் பல்லவக் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

இதே போன்று தென்புறச் சுவரில் மகேந்திரனின் உருவச் சிலையைக் காணலாம். அவர்தம் இரண்டு மனைவியர்களும் இடப்புறம் நிற்கின்றனர். தன் தேவியை இடக்கையில் பிடித்துக் கொண்டு வலக் கையினால் ஆலயத்தைச் சுட்டிக் காட்டும் மகேந்திர பல்லவனின் தோற்றமும் அவனது அணிகலன்களும்

அழகும் மாமன்னன் ஒருவனின் உருவச்சிலை என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. இச்சிலைகளுக்கு மேலாக, மகேந்திர 'போத்திராதிராசன்' என்ற பல்லவக் கிரந்தக் கல்வெட்டுகள் உள்ளன.

மேற்குறித்த இரண்டு வகையான சிற்பங்களையும் ஆராய்ந்த வரலாற்று ஆய்வாளர்கள் இங்குக் குறிப்பிடப்படும் சிம்ம விண்ணப்போத்திராதிராசன்-மகேந்திர போத்திராதிராசன் என்ற பெயர்களுடன் உள்ள உருவச்சிலைகளை முறையே

(1) சிம்ம விஷ்ணு மற்றும் முதலாம் மகேந்திரன் என்றும்

(2) முதல் நரசிம்மனாகிய மாமல்லன் மற்றும் முதலாம் மகேந்திரன் என்றும்

(3) மாமல்ல நரசிம்மன் மற்றும் அவன் மகனான இரண்டாம் மகேந்திரன் என்றும்

பல்வேறு கருத்துகளை வெளியிட்டனர்.

எனவே, மாமல்லை ஆதிவராகக் குகையில் உள்ள மகேந்திரன் சிலை முதலாம் மகேந்திரனின் சிலையாகக் கொண்டால் இது திருச்சிராப்பள்ளியில் சிலை எடுத்த காலத்திலேயே எடுத்ததாக இருந்திருக்க வேண்டும். ஆனால் 'லலிதாங்குர பல்லவேசுர கிருகத்தில்' முதலாம் மகேந்திரனால் எடுக்கப்பட்ட உருவச் சிலையும் இந்த உருவச்சிலையும் எந்த வகையிலும் பொருத்த முடையவனாக அமையவில்லை.

1962-ஆம் ஆண்டு முனைவர் இரா.நாகசாமி அவர்கள் இதுகாறும் கிடைத்துள்ள பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகள், செப்பேடுகள் அனைத்தையும் ஆழ்ந்து ஆராய்ந்து மாமல்லையின் சிற்பப்பணிகள் அனைத்தும் அத்தியந்த காமன் எனும் இராசசிம்ம பல்லவனால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதைச் சான்றுகளுடன் மெய்ப்பித்தார்.[7] இக்கருத்தை மாமல்லை பற்றிய ஆய்வில் சென்ற ஒரு நூற்றாண்டுக்காலமாக ஈடுபட்டிருந்த பல மேனாட்டு ஆய்வு நிறுவனங்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டன.

அவரது கருத்துப்படி ஆதிவராகக் குகையிலுள்ள 'சிம்ம விண்ணப் போத்திராதிராசன்' எனும் அமர்ந்த நிலைச் சிற்பம் இராசசிம்மப் பல்லவனது என்றும், நின்ற நிலையிலுள்ள

'மகேந்திர போத்திராதிராசன்' எனும் சிலை இராசசிம்மனின் மகனான மூன்றாம் மகேந்திரனின் சிற்பமாகக் கூறியுள்ளார். இவ்விருவரும் இணைந்தே பல திருக்கோயில்களையும், சிற்பப் படைப்புகளையும் உருவாக்கியுள்ள பல சான்றுகளையும், மல்லையிலுள்ள அனைத்துக் கிரந்தக் கல்வெட்டுக்களையும் தெளிவுபட விளக்கியுள்ளார். முன்னைய வரலாற்று ஆசிரியர்களுடைய கருத்துக்களைவிட இவரது கருத்துக்கள் ஏற்புடையனவாக அமைந்துள்ளதால், மல்லையிலுள்ள 'மகேந்திர போத்திராதி ராசன்' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ள சிலை, முதலாம் மகேந்திரனின் சிலை அல்ல என்பதையும், மூன்றாம் மகேந்திரனின் சிலைதான் என்பதையும் வலியுறுத்தலாம். மேலும் மல்லையிலுள்ள சிலையினை நமது சோழமண்டலத்து மகேந்திரனின் சிலையுடன் ஒப்பிட்டு நோக்குவதாலும் வலியுறுத்தலாம்.

எனவே, திருச்சிராப்பள்ளி குடைவரையான லலிதாங்குர பல்லவேசுர கிருகத்தில் தாணுவின் திருவடிகளுக்கருகே நிலையாய் (ஸ்தாணுவாய்) உள்ள மகேந்திரனின் உருவச்சிலைதான் தமிழகத்தில் மன்னர்களுக்கு எடுக்கப்பட்ட சிலைகளிலேயே தொன்மையானது (தெளிவான கல்வெட்டு-இலக்கிய-வரலாற்றுச் சான்றுகளுடன்) எனக் கொள்ளலாம்.

## குறிப்புகள்

1 Studies in Ancient Tamil Law & Society-Dr. R. Nagasamy, 1978, Department of Archaeology, Tamil Nadu, Page-15.

2 பல்லவர் வரலாறு-மா. இராசமாணிக்கம்பிள்ளை, திருநெல்வேலி சைவ சித்தாந்தப் பதிப்பகம், பக்கம்-90-111.

3 History of the Pallavas of Kanchi-By R.Gopalan, Pages 8,10

4 S, I. I. Vol. I. Page-29, 30

5 Studies in Ancient Tamil Law & Society, Page-21

6 History of Pallavas of Kanchi-By R. Gopalan, Pages-48. 81

7 மாமல்லை, தமிழகஅரசு தொல்லியல் துறை வெளியீடு, 1980

# இயல் 3

## பாண்டியர் இயல்

# அண்ணால் வாயில் அறிவர் கோயில்

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அண்ணவாயில் (சித்தன்னவாசல்) எனும் ஊர், சோழப் பெருமன்னர்கள் காலத்தில் சோழமண்டலத்து இரட்டபாடி கொண்ட சோழவளநாட்டு (கேரளாந்தக சோழவள்நாட்டிலிருந்து பின்பு பிரிந்த வளநாடு) அண்ணவாயில் கூற்றத்தைச் சேர்ந்த ஓர் ஊராகும். இங்குள்ள மலையில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட ஒரு குடைவரை கோயிலுள்ளது. இது சமண சமயத்தாரால் போற்றப்பட்டது. மகேந்திர பல்லவன் சைவம் தழுவி, திருச்சிராப்பள்ளிக் குடைவரையைத் தோற்றுவிப்பதற்கு முன்பே இக்குடைவரையைத் தோற்றுவித்தான் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவர்

இம்மலையிலுள்ள குடைவரை கோயிலில் ஒரு கருவறையும், அதற்கு முன்பாக இரண்டு தூண்களுடன் உள்ள அர்த்த மண்டபமும் குடைவுப் பகுதிகளாகத் திகழ்கின்றன. அர்த்த மண்டபத்தை ஒட்டி, பின்னாளில் தோற்றுவிக்கப்பட்ட முக மண்டபம் ஒன்று உள்ளது. கருவறையின் சுவரில் முக்குடையுடன் இரண்டு தீர்த்தங்கரர்களின் உருவங்களும், ஒரு குடையின் கீழ் அமர்ந்த ஆச்சார்யர் ஒருவருடைய திருவுருவமும் உள்ளன.

அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவரில் ஐந்தலை அரவின் கீழ் உள்ள பார்சுவநாதர் திருமேனியும், வடபுறச் சுவரில் ஒரு குடையின் கீழ் சமண முனிவர் ஒருவரின் உருவமும் உள்ளன. அர்த்த மண்டபத்தின் உட்புறக் கூரையிலும் (விதானம்) தூண்களின் மேலும் சுண்ணக்காரை பூசப்பட்டு அதன்மேல் பல வண்ண ஓவியங்கள் திகழ்கின்றன. இவ்வோவியங்களை ஆய்வு செய்த முனைவர் பரமசிவம், இரண்டு



இளங்கௌதமன் உருவச்சிலை



சித்தன்னவாசல் குடைவரை

வகையான ஓவியப்பகுதிகளைக் குறிப்பிட்டு, ஒன்று கி.பி.7-ஆம் நூற்றாண்டுப் படைப்பாகவும், மற்றொன்று அவ்வோவியங்களின் மேல் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் ஓவியங்கள் தீட்டப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடபுறச் சுவரில் உள்ள சமண முனிவர் ஒருவரின் சிற்பம் மற்றும் தூண்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களில் காணப்படும் சிலரது உருவங்கள் பற்றி ஆய்வது மிகவும் சுவையானதாகும். சமண முனிவரின் சிற்பத்தை ஒட்டியுள்ள தூணில் 'திருவாசிரியன்' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே இவ்வுருவச்சிலை ஒரு சமண ஆச்சாரியருடையது என்பது தெளிவு.

தென்புறத் தூணின் வடபகுதியில் ஒருமன்னன், அவனுக்குப் பின்புறம் அவனது தேவி இவர்கள் இருவருக்கும் எதிரே ஒரு சமணத் துறவி, மன்னனுக்குப் பின்புறம் ஒரு தேர் அல்லது மண்டபம் போன்ற அமைப்பு ஆகியவை வண்ண ஓவியங்களாகக் காட்சி நல்குகின்றன. காலவெள்ளத்தில் ஓவியம் மங்கியும் சிதைந்தும் காணப்படினும், ஒரு நேர்த்தியுள்ள படைப்பாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. மன்னன் கிரீட மகுடம் சூடி, காதுகளில் பத்ரகுண்டலம் அணிந்து, கழுத்தில் அணிகலன் சூடி, தோளில் ஆடையுடன் கம்பீரமாகக் காணப்படுகிறான். இம்மன்னவனுக்குப் பின்னாலுள்ள தேவி மகுடமணிந்து, காதில் வளையங்களுடன் தோற்றமளிக்கிறார். எதிரே உள்ள துறவி நீள் செவிகளுடன் திகழ்கிறார். இவ்வோவியத் தொகுதியிலும், சிற்பத்திலும் காட்டப்படும் வரலாற்று நாயகர்கள் யாவர் என அறியப் புகுமுன் இவ்வோவியமும் சிற்பமும் எக்காலத்தியவை என்பதை அறிதல் மிக இன்றியமையாததாகும்.

இக் குடைவரை கோயிலைப்பற்றி ஆராய முற்பட்ட ஆரம்ப கால ஆராய்ச்சியாளர்கள் இவை முழுவதும் மகேந்திர பல்லவனின் பணியாகக் கொண்டனர். பின்பு இருவேறு காலத்திற்குரிய ஓவியப்பகுதிகள் உள்ளன என்ற கண்டுபிடிப்பும் இக்குடைவரையை ஒட்டி மலைச்சுவரில் வெட்டப்பட்டுள்ள கி. பி. 9-ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டொன்றும்[1] பல வினாக்களுக்கு விடையிறுக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

இக் கல்வெட்டுச் சாசனத்தால், அண்ணல் வாயிலாகிய இவ்வூரில் அமைந்துள்ள 'அறிவர் கோயில்' எனும் இக் குடைவரை கோயிலில்,

'பார்முழு தாண்ட பஞ்சவர் குலமுதல்வன்
ஆர்கெழு வைவேல் அவனிப சேகரன்
சீர்கெழு செங்கோல் சிரீவல்லபன்'

எனும்பாண்டி மன்னனான ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனது ஆட்சியின் போது மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் என்பவர், அர்த்தமண்டபத்தைப் பழைய குறைபாடுகளை நீக்கிப் புதுப்பித்ததோடு ரிஷபநாதரின் (ஆதிநாதரின்) வண்ணச்சுதை செய்தது, பார்சுவநாதரின் திருமேனி எடுத்தது, விளக்கெரிக்கத் தானம் அளித்தது, புதிய முகமண்டபம் எடுத்தது முதலான செய்திகளை அறிய முடிகிறது.

மேற்கூறிய இத்தமிழ்க் கல்வெட்டால், கி.பி. 7 - ஆம் நூற்றாண்டுப் படைப்பான இக்குடைவரையைப் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் (கி.பி. 815-862) காலத்தில் மதுரையைச் சேர்ந்த சமணத் துறவியான இளங்கௌதமன் என்பவர் புதுப்பித்துச் சிற்பங்களையும் ஓவியங்களையும் இடம்பெறச் செய்தார் என்பது தெளிவாகிறது.

வடபுறச் சுவரில் காணப்படும் சிற்பத்தை ஒட்டிய கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருவாசிரியன்' என்ற கல்வெட்டுத்தொடரால் இச்சிற்பத்தில் காணப்படும் சமண ஆச்சாரியரின் உருவம் மதுரை ஆசிரியரும், இக்குடைவரையைப் புதுப்பித்தவருமான இளங்கௌதமன் என்பவருடையதே என்பதை நன்குணரலாம்.

தென்புறத் தூணின் வடபகுதியில் காணப்படும் ஓவியத்திலுள்ள மன்னனை, திரு மேத்தா அவர்கள் தம் "Studies in Indian Paintings" என்ற நூலில் உமையொருபாகன் அல்லது மகாதேவராகக் குறிப்பிட்டுள்ளார். திரு ஏ. சக்ரவர்த்தி அவர்கள் இந்திரனும் அவனது மனைவி சசியும் என்று கருத்துவெளியிட்டுள்ளார்.[3] சில அறிஞர்கள் மகேந்திர பல்லவனும் அவனது தேவியும் எனக்கொண்டனர்.

திரு மேத்தா அவர்கள் அர்த்தநாரி அல்லது மகாதேவராகக் குறிப்பிடும் உருவத்திற்குச் சடாமகுடம் இல்லாமல் கிரீட

மகுடமும், காதுகளில் பத்ரகுண்டலங்களும் இருப்பதால் அதனைச் சிவபெருமானாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதைப் போலவே இந்திரனுக்கும் இந்த ஓவியத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. மகேந்திர பல்லவனாகக் கொள்ள, ஓவியத்தின் காலம் (கி.பி. 9 - ஆம் நூற்றாண்டு), இளங் கௌதமன் 9 - ஆம் நூற்றாண்டில் புதுப்பித்ததாகக் கூறும் கல்வெட்டுச்சான்று, திருச்சிக் குடைவரையிலுள்ள மகேந்திரனின் சிலையுடன் எந்த வகையிலும் ஒப்புமை இல்லாமை ஆகிய காரணங்களால் இயலாது.

திரு. டி.என்.இராமச்சந்திரன் அவர்களின் கருத்துப்படி ஓவியத்திலுள்ள மன்னனின் உருவம் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனுடையது என்பதே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்று.[3] ஓவியத்திலுள்ள மன்னனின் அருகில் நிற்பது அவனது தேவியாகலாம். இவர்கள் இதே ஓவியத்தில் இடம் பெற்றுள்ள சமண ஆச்சாரியரைத் தரிசிக்கத் தேரில் வந்திருக்கலாம். ஓவியத்திலுள்ள சமண ஆச்சாரியர் கல்வெட்டில் சுட்டப்படும் இளங்கௌதமனாக இருக்கலாம். இச்சமண ஆச்சாரியரின் உருவம் மறைந்திருந்த ஓவியப் பகுதியை லலிதகலா அகாடமியினர் (டெல்லி) ஓவிய ஆய்வின்போது வெளிப்படுத்தினர்.

## ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்

"பார்முழு தாண்ட பஞ்சவர் குலமுதல்
ஆர்கெழு வைவேல் அவனிப சேகரன்
சீர்கெழு செங்கோல் சிரீவல்லபன்"

எனச் சித்தன்னவாசல் கல்வெட்டு புகழும் பஞ்சவர் எனும் பாண்டியகுல மன்னனான சீமாறன் சீவல்லபன் என்பான், முதல் வரகுணன் இறந்த பின்பு கி.பி. 815 - இல் முடிசூடியவன். இவன் சடையமாறன், ஏகவீரன், பரசக்கர கோலாகலன், அவனிப சேகரன் என்ற சிறப்புப் பெயர்களால் கல்வெட்டுகளாலும், செப்பேடுகளாலும் புகழப்படுகிறான். இவனது வரலாறு, சின்னமனூர்ச் செப்பேடுகள் தளவாய்புரம் செப்பேடுகள் மற்றும் சில கல்வெட்டுகள் வாயிலாக அறியப்படுகிறது.

இவன் குன்னூர், சிங்களம், விழிஞம் (திருவனந்தபுரம் அருகில் உள்ள ஊர்) போர்களில் வாகை சூடினான்



இளங்கௌதமன் - ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் - அக்கள நிம்மடி

என்பதையும், குடமூக்கில் (கும்பகோணம்) வந்தெதிர்த்த கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், மாகதர் ஆகிய அரசர்களை வென்று ஆற்றலோடு விளங்கினான் என்பதையும் சின்னமனூர்ச் செப்பேடு விவரிக்கின்றது. விழிஞம் வென்றவன் என்பதையும், சோழநாட்டு அரிசிற்கரைப் போரில் பல்லவனுடன் சமரிட்டுத் தோல்வியைத் தழுவினான் என்பதையும் வரலாற்று ஏடுகள் உணர்த்துகின்றன.

இம்மன்னனது இறுதிக் காலத்தில் சிங்கள மன்னன் இரண்டாம் சேனன் (கி.பி.851-885) பாண்டிய நாட்டின் மேல் படை எடுத்தான் என்றும், போரில் சீமாறன் சீவல்லபன் தோல்வியுற்றதோடு உயிரையும் இழந்தான் என்றும் மகாவம்சம் கூறுகிறது. இதனைச் சடையவர்மன் பராந்தக பாண்டியனுடைய செப்பேடு "ஒளிறிலை வேலதுபாய பகு....லன் உம்பர் வான் உலகணைந்த பின்" - என்று போர்க்களத்தில் வீர மரணம் அடைந்ததாகக் குறிப்பிடுகிறது.

பல பெரும் போர்களைச் சந்தித்தவனும், போர்க்களத்தில் வேல் பாய்ந்து மாய்ந்தவனுமாகிய இப்பாண்டிய மன்னனின் பெரு வெற்றிகளுக்கும் தோல்விக்கும் சோழநாட்டுப் போர்க்களங்களே இடமாயின என்பதும், இவனது பேராதரவால் மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் தமிழகத்தின் தலைசிறந்த ஓர் ஓவியக் கூடத்தைச் சித்தன்னவாசலில் படைத்தான் என்பதும் இவ்வரலாற்று நாயகனின் சாதனைகளாகும். இப்பெரு மன்னனின் ஓவியம் சோழமண்டலத்திலேயே திகழ்வது சோழ மண்டலத்துப் பெருமைகளுள் தலையாய ஒன்று.

## அக்கள நிம்மடி

சித்தன்னவாசல் ஓவியத்திலுள்ள மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்று ஆய்ந்து குறிப்பிட்ட திரு. டி. என். இராமச் சந்திரன் அவர்கள் அருகிருக்கும் பெண்ணின் உருவத்தை மன்னனது தேவி என்று மட்டுமே குறித்துள்ளார். இம்மன்னவனுடன் தேரில் வந்து சமண ஆச்சாரியரைத் தரிசிக்கும் தகுதி இவனது பட்டத்தரசிக்கு (பட்டமகிஷி) மட்டுமே உண்டு. சீமாறனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவள் அக்கள நிம்மடி என்பாள். இதனைப் பராந்தக பாண்டியனின் செப்பேடு,

" மயிலையர்கோன் பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தரு சிரீகண்டராசன் மத்தமா மலைவளவன் மதி மகளக்கள நிம்மடி திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீ பராந்தக மகாராஜன் " என்று குறிப்பிடுகின்றது.

இத் தேவியின் புதல்வர்களே, சீமாறன் சீவல்லபனுக்குப் பின் அரியணை அமர்ந்த இரண்டாம் வரகுணனும், பராந்தக வீரநாராயணனும் ஆவர். பொத்தப்பிச் சோழர்கள் குலத் துதித்த இவ்வரசியே நம் சோழமண்டலத்துச் சித்தன்னவாசல் ஓவியத்தில் இடம் பெற்ற பாண்டியனின் தேவி எனக் கொள்ளல் ஏற்புடைய ஒன்று.

## இளங்கௌதமன்

சித்தன்னவாசல் அர்த்தமண்டபச் சுவரில் பார்சுவநாதர் சிற்பத்திற்கு எதிரே காணப்படும் சமண ஆச்சார்யரின் சிற்பம் ' திருவாசிரியன் ' என்று 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட் டமைதியுடைய குறிப்புடன் காணப்படுகிறது. மேலும் சீமாறன் சீவல்லபன் காலத்திய முழுக்கல்வெட்டுப் பாடலையும் முன்பே கண்டோம். இவற்றைத் தொகுத்து நோக்கும்போது ' திருவாசிரியன் ' என்ற குறிப்புடன் காணப்படும் படிமம் மதுரை ஆசிரியன் எனும் இளங்கௌதமனுடையதுதான் என்பதை அறியலாம். மேலும் இச்சிற்பத்தில் அமர்ந்த நிலையில் தியானத்திலிருக்கும் ஆச்சார்யனுக்கு மேலாக ஒரு குடை மட்டுமே காட்டப்பட்டுள்ளது. தீர்த்தங்கரர்களுக்கு முக்குடையும், ஆச்சார்யர்களுக்கு ஒரு குடையுமே சிற்பங்களில் காட்டப்படுவது மரபு.

சீமாறன் சீவல்லபன் மற்றும் அவனது தேவி அக்கள நிம்மடி ஆகியவர்களின் ஓவியங்களுக்கு அருகே ஒரு சமண முனிவரின் உருவம் காணப்படுகிறது. இவ்வோவியத்தில் சமண ஆச்சாரியரின் முகம் கால வெள்ளத்தில் சிதைவுற்று இருப்பினும் இது மதுரை ஆசிரியன் இளங்கௌதமனின் உருவ ஓவியம்தான் என்பதில் ஐயமேதுமில்லை.

இக்குடைவரைக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள
"திருந்திய பெரும்புகழ் தேவசனத்,
தருந்தவ முனிவனைப் பொருட்செல்வன்
நிகிலர் நிலமை இளங் கௌதமனெனும்
வளங்கெழு அறதிருநகர் மதிரை ஆசிரியன்"

"பண்ணவர்கோயில் பாங்குற செய்வித்தார்"

"அண்ணல் வாயில் அறிவர் கோயின் முன்னுல்
மண்டபங் கல்லாலியற்றி",

"சிரீ மதிரை ஆசிரியன் அண்ணல் ஆகமண் தாகப்
புதுக்கி ஆங்கு அறிவர் கோயில் முக
மண்டபமெடுத்தான் முன்"

இப் பகுதிகளால் இச்சமணப் பெருந்தகை கி. பி. 7-ஆம் நூற்றாண்டுக் குடைவரையைப் புதுப்பித்தும், அதில் பார்சுவ நாதர் ஆதிநாதர் முதலிய தீர்த்தங்கரர்களின் உருவங்களை அமைத்தும், முன் மண்டபம் செய்தும் ஓவியங்கள் தீட்டச் செய்துள்ளார் என்ற செய்திகள் அறியப்படுகின்றன.

அஜந்தா, எல்லோரா ஓவியப் பணிகளுக்கெல்லாம் சமணத் துறவிகளே காரணம் என ஆய்வு வல்லுநர்கள் குறிப்பர். அதனை ஒத்துத்தமிழகத்தின் தலைசிறந்த கலைக்கூடமொன்றைக் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலேயே உருவாக்கிய பெருமை இளங் கௌதமன் எனும் இத்துறவியையே சாரும். சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களில் இவரது பங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

## குறிப்புகள்

1. Lalit Kala - No. 9 (1961) Page 36
2. Lalit Kala - No. 9 (1961) Page 49
3. Lalit Kala - No. 9 (1961) Page 50



சடாவர்மன் சுந்தர பாண்டியன் - தஞ்சைப் பெருங்கோயில்



தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டு

# பொன் வேய்ந்த மகிபதி

## -சடாவர்மன் சுந்தரபாண்டியன்-

தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்து பெருமை எய்தினர் சோழப்பெருமன்னர்கள். பராந்தக சோழன் காலத்தில் தொடங்கிய பொன்வேய்தலை எல்லாச் சோழமன்னர்களும் பிற்காலப் பாண்டியர்களும் கோப்பெருஞ்சிங்கன் முதலானவர்களும் தொடர்ந்தனர். பரவை நங்கை எனும் ஆடலரசியின் வேண்டுகோளுக்காக ஆரூரனின் விமானத்தையே பொன்தகடுகள் போர்த்துப் பெருமை கொண்டான் கடாரம் கொண்ட இராசேந்திர சோழன்.

பொய் வேய்தல், துலாபாரம் அளித்தல் ஆகிய திருப்பணிகளை இதுவரை வரலாற்றில் எந்த ஒரு மன்னனும் செய்யாத அளவிற்குச் செய்து ஈடிணையில்லாப் பெரும்புகழ் கொண்டவன் சடாவர்மன் சுந்தரபாண்டியனாவான். இவன் செய்த பொன் தானங்களால் 'பொன் வேய்ந்த மகிபதி', 'பொன் வேய்ந்த பெருமான்', 'ஹேமாச்சாதன ராஜா' என்றெல்லாம் சிறப்புப் பட்டங்கள் பெற்றான்.

## பொன் வேய்ந்த மகிபதியாம் சுந்தரபாண்டியன்

சடாவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1250 அக்டோபர் 25 - இற்கும் கி.பி. 1251 மார்ச்சு 7 - ஆம் நாளுக்குமிடையே முடிசூடியவன் என்றும் இவனது ஆட்சி 1274 வரை நீடித்தது என்றும் காலக் கணக்கீட்டு அறிஞர் குடந்தை சேதுராமன் கணித்துள்ளார். இவனது தமிழ்க் கல்வெட்டுகள் 'பூமலர்வளர்' எனவும், சமஸ்கிருதக் கல்வெட்டுகள் கிரந்தத்தில் 'சமஸ்த ஜகதார சோமகுல திலக' எனவும் தொடங்குகின்றன. இம்மன்னவன் சேரர்கள், தெலுங்குச் சோழர்கள், காகதீயர்கள், காடவர்கள், போசளர், இலங்கை மன்னன் முதலானவர்களை வென்றவன். மேலும் கண்ணனூரில் (சமயபுரம்) ஆட்சி புரிந்த

போசல வீரசோமேசுவரனைப் போரில் கொன்று வெற்றி வாகை சூடியவன். தென்குமரி முதல் வடவேங்கடம் வரை தனது ஆட்சியை நிறுவினவன். இவனது தனிச்சிறப்பு 400 ஆண்டுகள் தலை நிமிர்ந்து நின்ற சோழ சாம்ராச்சியத்தை அத்தமிக்கச் செய்தது.

இத்தனைச் சிறப்புகள் பெற்ற சுந்தரபாண்டியன் தில்லை, வேங்கடம், மதுரை, திருவரங்கம் முதலான திருக்கோயில்களுக்கு எண்ணிலாத் திருப்பணிகள் செய்து தன் சாதனைகளைக் கல்லில் பொறித்தவன். 'எம்மண்டலமுங் கொண்டு கோயில் பொன் வேய்ந்த பெருமாள் சுந்தரபாண்டிய தேவர்' என்று சாசனங்களும், அரங்கத்துக் கோயிலொழுகும் இவனது புகழ் பாடுகின்றன. 'ஹேமாச் சாதன ராஜா' என்ற சிறப்பு விருது பெற்ற இம்மன்னன் செய்தது அத்தனையும் பொன்மயமான திருப்பணிகளே.

## காவிரியில் துலாபாரம்

பொதுவாக மன்னர்கள் துலாபாரம் செய்யும்போது தனியான துலா புருஷ மண்டபம் கட்டுவித்து அதில் துலாக்கோல் மாட்டி, தான் ஒரு தட்டில் ஏறி எடைக்கு எடை பொன்னை நிறுத்துக் கொடை நல்குவதே வழக்கம். சுந்தரபாண்டியனும் இதன்படி திருவரங்கம் இராசமகேந்திரன் திருவீதி முதலாக நான்கு திருவீதிகளில் இருபத்து நாலு துலா புருஷ மண்டபங்கள் கட்டுவித்துத் துலாபாரம் அளித்தான். இதுவே மகத்தான சாதனை...! ஆனால், இம்மன்னவன் இதனினும் சிறப்புடைய ஒன்றையும் செய்தான். தான் மட்டும் துலாத் தட்டில் ஏறுவதா? தனது வெற்றிகளுக்கெல்லாம் துணை நின்ற தனது பட்டத்து யானையுடன் அல்லவா துலாபாரம் ஏற வேண்டும் என விரும்பினான்.

இத்தகைய துலாத்தட்டு ஏறுவது எளிதல்ல என்பதை உணர்ந்து மிகப்பெரிய ஒரே அளவுடைய இரண்டு படகுகளைச் செய்வித்தான். அப்படகுகளைத் தங்கத் தகடுகளால் போர்த்தி அழகு செய்து காவிரியில் மிதக்கச் செய்தான். ஒரு படகில் தான் தன் பட்டத்து யானை மீது தனது ஆயுதங்களுடன் ஏறி அமர்ந்தான். படகு நீரில் அமிழும் அளவைக் குறிக்கச் செய்து அதே அளவை மறு படகிலும் குறிக்கச்செய்தான், அக்குறியீடு நீரில்

அமிழும் அளவு அப்படகில் பொன், முத்து, நவமணிகளை நிரப்பச்செய்தான். பின்பு பொன் மயமான அவ்விரண்டு படகுகளையும், நவமணிகளையும அரங்கனுக்கு அர்ப்பணித்தான்.[1]

## பொன்னரங்க விமானம்

இவ்வளவு ஹேம தானங்களையும் செய்த இம்மன்னவன் தனது உருவச் சிலையை அரங்கனின் சந்நிதியினுள் வைக்கப் பெரிதும் விரும்பினான். மன்னனது விருப்பத்தைக் கோயில் சபையோர் ஏற்கவில்லை. அரங்கன் முன்பு மன்னன் படிமத்தை வைக்க மறுத்தனர். இதனால் மன்னன் கொடுத்த அத்தனைப் பொன்னும் மணியும் தீண்டுவாரின்றி அப்படியே இரண்டாண்டுக் காலம் சந்நிதியின் முன்பு கிடந்தன.

மன்னன் பின்பு விவரம் அறிந்து, சபையோரின் திறம் மெச்சி, தனது விருப்பத்தை மாற்றிக்கொண்டு, தான் கொடுத்த அத்தனைப் பொன்னையும் கருவூலத்திலிட்டதோடு அரங்கனின் விமானத்தையும், மண்டபங்களையும் தூண்களையும் துலாபாரம் செய்த பொன்னால் செய்யப்பட்ட தகடுகளால் போர்த்தி ஒளிவிடச் செய்தான். தனது பெயரைப் 'பொன் வேய்ந்த பெருமாள்' எனக் கொண்டு தனது பெயரால் தேவியருடன் அரங்கனுக்குப் பொன் திரு மேனியையும் செய்தளித்தான். அரங்கன் ஆலயம் முழுவதும் பொன்னொளி வீசியது.

இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு கயல்களைப் (மீன் சின்னம்) பொறித்து இடையே மிக நீண்ட கிரந்தக் கல்வெட்டொன்றையும் வெட்டுவித்தான். 'ஹேமாச்சாதன ராஜா' எனத் தன்னைச் சிறப்பாகக் குறிப்பிட்டு, தான் செய்த தங்கத் திருப்பணி அத்தனையையும் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளான்.[2]

இவனது கல்வெட்டுப் பாடல்களில் "பாயல் கொள்ளும் பரமயோகத்து ஒரு பெருங் கடவுளும் இனிதுறையும் இரு பெருங் காவிரி இடை நிலத்திலங்கும் திருவரங்கம் பெருஞ் செல்வம் சிறப்பப் பன்முறை அணிதுலாபாரமேறிப் பொன் மலையென்னப் பொலிந்து தோன்றவும்" என இவனது அரங்கத்துத் திருப்பணிகள் குறிக்கப்பட்டுள்ளன.

## தஞ்சைக் கோயில் திருப்பணியும் உருவச்சிலையும்

குமரி முதல் வேங்கடம் வரை உள்ள தமிழகத்துத் திருக்கோயில்கள் பலவற்றிற்குத் திருப்பணிகள் செய்த இம் மன்னவன் தஞ்சைப் பெருங்கோயிலிலும், திருப்பூந்துருத்தி (தஞ்சைக்கு அண்மையில் உள்ள ஊர்) திருக்கோயிலிலும் பல சாதனைகள் புரிந்துள்ளான். இராசராச சோழனால் கட்டப் பெற்ற தஞ்சை இராசராசேச்சரத்தில் தனித்த திருக்காமக் கோட்டம் (அம்மன் கோயில்) சோழர்கள் இறுதிக் காலம் வரை இடம்பெறவே இல்லை. தற்போது பெரியநாயகி என்ற பெயரில் அழைக்கப்படும் அம்மன் திருக்கோயில் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில்தான் எடுக்கப்பட்டது என்பதை அம்மன் திருக் கோயில் கருவறையின் வெளிப்புறம் அதிஷ்டானத்திலுள்ள ஒரு கல்வெட்டால் அறியலாம். இக்கல்வெட்டில் "ஸ்வஸ்தி ஸ்ரீ கொட்டகர்க் குடியான உலகாண்ட நாயகி நல்லூர்க்கு எழுதின திருமுகப்படி திரிபுவன சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் தஞ்சாவூர் உடையார் ஸ்ரீ இராஜராஜேஸ்வர முடையார் கோயில் தானத்தார்க்கு இக்கோயிலில் நாம் எழுந்தருளுவித்த உலகு முழுதும்முடைய நாச்சியார்க்கு அமுது படி உள்ளிட்டு . . ." என்று தொடர்கிறது.[3]

மேற்கூறிய இக்கல்வெட்டில் மன்னன் பெயர் குறிப்பிடப் படவில்லையாயினும் எழுத்தமைதி 13, 14-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டாகவே உள்ளது. மேலும் இச் சாசனத்தில் கையொப்பமிட்ட கொடுமளூர் உடையான், கயலூர் உடையான் முதலியோர் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளிலும் குறிப் பிடப்படுகின்றனர். இவ்வம்மன் கோயில் பற்றிய பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுச் செய்தி ஏதும் இல்லை. மேலும் இச்சாசனத்தில் ஆட்சியாண்டு இரண்டாகவும் நாள் 384 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னால் வந்த விசயநகர மன்னர்கள் இவ்வாறு ஆட்சியாண்டைக் கல்வெட்டில் குறிப்பிடும் மரபைப் பேணவில்லை.

எனவே 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 14-ஆம் நூற்றாண்டில் சோழமண்டலத்தில் பாண்டியர் அரசு தான் ஆட்சி செய்தது. தஞ்சையைத் தலைமையிடமாகக் கொண்டு 14-ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் ஆண்டனர் என்பதற்குத் தாராசுரம் திருக்கோயிலிலுள்ள கல்வெட்டு சான்று பகர்கின்றது.[4]

"பாண்டியகுலபதி நாட்டு, நித்த விநோத வளநாட்டுக்
தண்டியூர் ஆயிரத்தளி பள்ளிப்பீடம் காளிங்கராயனில்
. . . வீற்றிருந்து"

மாறவர்மன் வீரபாண்டியன் ஆணையிட்டதாக இது குறிப்பிடுகிறது. இதன் காலம் கி. பி. 1337. கி.பி.1330-1372 வரை மதுரை முகமதியர்களின் கையில் இருந்தது. இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது தஞ்சையை (கண்டியூரை) மையமாகக் கொண்டு 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியர்கள் அரசு மேற்கொண்டனர் என்பது புலனாகிறது.

தஞ்சையிலிருந்து 10 கல் தொலைவிலிருக்கும் திருப்பூந்துருத்தி திருக்கோயிலில் உள்ள ஒரு மண்டபத்தில் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று உள்ளது. இதில் இம்மன்னனது 7-ஆம் ஆட்சியாண்டில் அம்மண்டபம் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு, தூண் ஒன்றில் சுந்தரபாண்டியனின் சிற்பமும் எதிரே சேரமான் பெருமானின் சிற்பமும் இடம் பெற்றுள்ளன. இதில் சுந்தரபாண்டியன் தாடி, மீசைகள் திகழ, முடிந்த கொண்டை, இடுப்பில் அரையாடையுடன் வணங்கும் கோலத்திலுள்ளான்.

இதுபோன்றதொரு சிலை தஞ்சையில் இம்மன்னவனால் எடுக்கப்பட்ட அம்மன் திருக்கோயிலின் கருவறை அர்த்த மண்டபத்தின் உட்புறம் மேல்புறச் சுவரில் காணப்படுகிறது. முடி போட்ட கொண்டை, இடுப்பில் அரையாடை, தாடி, மீசைகளுடன் திகழுகிறது. இவ்விரு சிலைகளின் ஒப்புமையாலும், மற்ற வரலாற்றுச் சான்றுகளாலும் தஞ்சை அம்மன் திருக்கோயிலினுள் உள்ள இக்கற்படிமம் சடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன் சிலை எனக் கொள்ளலாம்.

பாண்டிய மன்னனால் திருப்பணி செய்யப்பட்ட அம்மன் கோயிலின் முன்மண்டபம் முற்றிலும் பாண்டியர்களின் சிற்பத்திறனை வெளியிடும் வண்ணம் உள்ளது. நெல்லை மற்றும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோயில்களின் சிற்பங்களில் சேரநாட்டு, பாண்டிய நாட்டுக் கலப்புப்பாணியைக் காணலாம். இதனை ஒத்து, தஞ்சையில் காணப்படும் சிற்பங்களில் (அம்மன் மண்டபம்) சோழ பாண்டியர்கள் பாணியின் கைவண்ணத்தின் திறமையை நுகர முடிகிறது. இம்மண்டபத் தூண்கள், கொடுங்கைகள், மற்றும் உள்ள சிற்பங்களும், பெருவுடைய பரமசுவாமி திருக்கோயிலின் முன் மண்டபத்தில் ஒரு பகுதியும்

நூற்றுக்கு நூறு ஒத்தே காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு பெரிய கோயிலின் மகாமண்டபத்தைத் துல்லியமாக நோக்கும் போது ஒரு வரலாற்றுப் பேருண்மை புலப்படும்.

## பெருங்கோயில் மகாமண்டபமும் பாண்டியனின் படிமமும்

பெருங்கோயில் மகாமண்டபத்தின் பீடம், உப பீடம். அதிஷ்டானம் ஆகிய பகுதிகளை நோக்கினால் மிகப்பெரிய குமுதப்படை வரை மாமன்னன் இராசராசனின் கட்டுமானத்தைக் காண முடிகிறது. அதற்கு மேல் உள்ள யாளி வரிமானத்தைக் கவனித்தால் கீழ்த்திசையில் ஆரம்பத்திலிருந்து சில மீட்டர் தூரம் வரை மிகப்பெரிய யாளிகளும் (இராசராசன் பாணி) பின்பு இவை திடீரெனச் சிறுத்தும் தொடர்கின்றன. பின்பு மேல் புறத்தில் திடீரென்ப் பெரிதாகக் காணப்படுகிறது. இடையில் உள்ள சிறிய யாளிகளின் கலைப்பாணி மாறி இருப்பதுடன் இவை வேறு விதமான கருங்கல் பணியாக இருப்பதையும் அறியலாம். அதே போல் கீழ்த்திசையில் உள்ள கோஷ்டங்களில் - மாடங்களில் - வாளும் கேடயமும் ஏந்திய வீரர்கள் இருப்பர். அடுத்த கோஷ்டங்கள் புதுமையாகவும் முற்றுப் பெறாதனவாகவும் இருக்கும். பின்னர் மேல்திசையில் வீரர்கள், மற்றும் கோஷ்ட தெய்வங்களுடன் திகழும்.எனவே இப்பெரிய மகாமண்டபத்தின் மிக நீண்ட சுவர்கள் குமுதப்படைக்கு மேலாக இடையில் ஒரு குறிப்பிட்ட தூரம் இராசராசனின் கட்டிடப் பாணியிலிருந்து வேறுபட்டு, வேறு வகையான கல்லால் கட்டப்பட்டுள்ளதைக் காணும்போது, இவ்விடைப்பகுதி இடிபாடுற்று, பிற்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

இதனை வலியுறுத்தும் வண்ணம் மண்டபத்தின் உட்பகுதிகளும் உள்ளன. இப்பெரிய மகாமண்டபத்தின் பிற்பகுதி (கருவறைப் பக்கம் உள்ளது) சதுரமான மிகப்பெரிய தூண்களாக இருக்கும்போது முன்பகுதி பிற்காலக் கலைப்பாங்குடன் திகழும் தூண்களுடனும். இம்மண்டபத்தை இரண்டாகப் பகுக்கும் உட்புறச் சுவருடனும் உள்ளது. இந்தச் சுவரில் இராசராசனது கல்வெட்டுக்களின் பகுதிகள் அடங்கிய கற்கள் (Fragmentary inscriptions of Raja Raja-I) தலைகீழாகத் தொடர்பின்றி காணப்படுவதால் நிச்சயம் இது பிற்காலத் திருப்பணியாகத்தான் இருக்க முடியும்.

மேலும் தற்போது இரண்டு பகுதிகளாகப் பகுக்கப் பட்டுள்ள மகாமண்டபம் இராசராசனால் கட்டப்படும்போது இரண்டு அடுக்குகளை உடைய மிகப்பெரிய கூடமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இதனை இன்று எஞ்சியுள்ள மேல் தளச் சுவர்கள், கிழக்குப் பகுதி கட்டுமான அமைப்பு, முதல் தளத்தின் மேல் உள்ள திரிபுராந்தக மூர்த்திக் கோஷ்டங்களின் தொடர்பின்மை ஆகிய காரணங்களால் யூகிக்க முடிகிறது. இவ்வாறு இரண்டு அடுக்குகளுடன் மிக எழில் பெற்றுத் திகழ்ந்திருந்த மகாமண்டபம் இயற்கையின் சீற்றத்தாலோ பகைவரின் தாக்குதல்களாலோ இடிபாடு அடைந்திருக்க வேண்டும். பின்னர் இதனைச் சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அம்மன் திருக்கோயிலை எடுக்கும்போது திருப்பணி செய்திருக்க வேண்டும். இரண்டு அடுக்கு உள்ள மாடிகள் மீண்டும் இடம்பெறாமல் ஒரே தளத்துடன் திருப்பணி முடிந்துள்ளது.

இவ்வாறு பிற்காலத் திருப்பணிக்கு இலக்கான இம் மகாமண்டபத்தின் நடுவே குறுக்காக உள்ள சுவரில் நுழை வாயிலை ஒட்டி வலப்புறம் ஒரு கற்படிமம் இரண்டடி உயரத்தில் இடம்பெற்றுள்ளது. இப்படிமத்திலுள்ளவர் தாடி, மீசைகளுடன், அரையாடை ஒன்றை இடுப்பில் உடுத்தி, இரு கரம் கூப்பி வணங்கும் திருக்கோலத்திலுள்ளார். இப்படிமமும், அம்மன் கோயில் அர்த்த மண்டபத்திலுள்ள படிமமும் ஒத்தே காணப்படுகின்றன. எனவே இதனையும் சடாவர்மன் சுந்தர பாண்டியனின் படிமமாகவே கொள்ளலாம்,

சோழமண்டலத்துத் திருக்கோயில்கள் பலவற்றிற்கு எண்ணிலாத் திருப்பணிகள் செய்த முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் கற்சிலைகள் தஞ்சைப் பெரியகோயிலில் இரண்டு இடங்களிலும் திருப்பூந்துருத்தித் திருக்கோயில் மண்டபத்திலும் இடம்பெற்றுள்ளமை சோழமண்டலத்துச் சிறப்புகளுள் ஒன்றாகும்.

**குறிப்புகள் :**

1. கோயிலொழுகு -- பக்கம் - 11
2. E. I. Vol. VI. No. Page-307
3. S. I. I. Vol. II, No. 61
4. A. R. E. 21 of 1908

# இயல் 4 .

# சோழர் இயல்

# முதலாம் ஆதித்த சோழன்

(கி.பி. 871-907)

முதலாம் ஆதித்த சோழன் என்ற இம்மன்னன் கி.பி. 881 - இல் விசயாலய சோழனின் மறைவுக்குப் பின்பு முடிசூடியவன். இராசகேசரி என்ற பட்டம் புனைந்து கொண்ட இவனுக்குக் கோதண்டராமன் என்ற பெயரும் உண்டு.[1] பல்லவ மன்னனான அபராசிதவர்மனை வென்று தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியவன். இம்மன்னனது கல்வெட்டுகள் திருக்கழுக்குன்றம் திருக்கோயிலில் காணப்படுகின்றன.[2]

தஞ்சை மாவட்டம் திருநெய்த்தானம் (தில்லைஸ்தானம்) எனும் ஊரில் உள்ள கல்வெட்டொன்று[3] ஆதித்தனும், சேர மன்னன் தாணுரவி என்பானும் சேர்ந்து விக்கியண்ணன் என்ற தலைவன் ஒருவனுக்குச் 'செம்பியன் தமிழவேள்' என்ற பட்டமும் பலவகைச் சின்னங்களும் அளித்ததாகக் குறிப்பிடுகிறது.

ஆதித்தன் கொங்குமண்டலம் வென்ற செய்தியைச் சைவத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி 'சிங்கத் துருவனைச்செற்றவன் சிற்றம்பல முகடுகொங்கிற் கனகம் அளித்த ஆதித்தன்' - என்று கூறுகிறார்.[4] அன்பில் செப்பேடுகள், காவிரியின் இருமருங்கும் உள்ள சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான் என்று இவனது புகழைப் பாடுகின்றன.

கி.பி. 885 - இல் நிகழ்ந்த திருப்புறம்பியப்போர் இவனது காலத்தே குறிப்பிடத்தக்க ஒரு பெரும் போராகும். பாண்டிய மன்னனாகிய இரண்டாம் வரகுணனுக்கும் பல்லவ மன்னன் அபராசிதன், சோழ மன்னன் ஆதித்தன் ஆகியவர்களுக்கும் கடும் சமர் நடந்து பாண்டியன் தோற்கடிக்கப்பட்டான். ஆதித்தனின் ஆட்சி வேரூன்ற இப்போரின் வெற்றி உதவியது.

ஆதித்தனுக்கு இரு தேவியர் இருந்தனர். அவர்கள் இளங்கோபிச்சி, திரிபுவனமாதேவியாகிய வயிரியக்கன் என்போராவர். இளங்கோபிச்சி, வல்லவரையர் மகள் என்பதும்[5] திரிபுவனமாதேவி பல்லவர் குடியில் தோன்றியவள் என்பதும் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன.[6] இவனுக்குப் பராந்தகன், கன்னரதேவன் என்ற இரண்டு மகன்கள் இருந்தனர்.[7]

சித்தூர் மாவட்டம் தொண்டைமான் பேராற்றூரில் கி. பி. 907-இல் இறந்த இம்மன்னவனுக்கு இவன் மகன் ஒரு பள்ளிப்படைக் கோயிலெடுத்தான்.[8] இது ஆதித்தேசுவரம், கோதண்டராமேசுவரம் என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.

## ஆதித்தன் கலைப் பாணி

ஆதித்தசோழனின் கலைப் பாணியை முற்காலச்சோழர்களின் கலைப்பாணியில் ஒரு பகுதியாகப் பிரித்து, கலை வல்லுநர்கள் போற்றுகின்றனர். பல்லவ - சோழர் கலைப்பாணியிலிருந்து மாறி, தனித்தன்மையுடன் திகழும் இவன் காலத்துப் படைப்புகள் மிக உயரியன. இவன் காலத்திய கற்றளிகளாக இன்று தெளிந்த கல்வெட்டுச் சான்றுகளோடு திகழ்பவை சுமார் 50-இற்கும் மேற்பட்ட திருக்கோயில்களாகும்.

விசயாலயன், முதல் ஆதித்தன், முதல் பராந்தகன் ஆகிய மூவரும் எடுப்பித்த அருங்கலைச் சின்னங்கள் பலவற்றையும் தனித்தனியே கூர்ந்து நோக்கியபின் , இம் மூன்று மன்னர்கள் காலத்துக்கலைப்பாணிகளையும் ஆதித்தன் கலைப்பாணி என்றே கலை வல்லுநர்கள் அழைக்கலாயினர்.

ஆதித்தன் காலத்திய கற்றளிகள் ஒரு தளம் முதல் நான்கு தளம் அமைந்த விமானம், கீரிவம், சிகரம், தூபி ஆகியவை கொண்டு எண்பட்டையாகவோ, சதுரமாகவோ திகழும். அடித் தளம் குழைவு பெற்றுப் பத்ம படைகளும் யாளி வரிமானங்களும் பெற்றுக் காணப்படும். தேவ கோஷ்டங்கள் 3 முதல் 5 வரை இருக்கும். தென்புறம் ஆலமர் செல்வனும், மேல் திசையில் திருமாலும், வடபுறம் பிரமனும் இடம்பெறும் கோஷ்டங்களில் ஆதித்தன் திருமாலுக்குப் பதில் அர்த்தநாரியையும், பராந்தகன் லிங்கோற்பவரையும் வைக்கும் புதிய முறையை உருவாக்கினர்.



முதலாம் ஆதித்தன் - செம்பொனார் கோயில்

சுற்றுக் கோயில்களாக எட்டுப் பரிவாராலயங்களையும், கோஷ்டங்களில் மனிதர்களின் உருவச் சிலைகளையும், சிற்றுருவச் சிற்பங்களில் இராமாயணம் போன்ற காவியங் களையும் இடம்பெறச் செய்தனர்.

செப்புத்திருமேனிகள் வார்க்கும் கலை மிகவும் ஆக்கம் பெற்றது. தனித்த அம்மன் கோயில் எடுக்கும் வழக்கம் இவர்கள் காலக் கோயில்களில் இடம் பெறவில்லை. மிக நேர்த்தியான சிற்பத்திறன் கொண்ட மிக அதிகமான கோயில் களைப் (கற்றளிகளாக) படைத்து, தன் பெயரால் ஒரு கலைப் பாணியையே உருவாக்கி, வரலாற்றில் ஈடிணையில்லா நாயகனாகத் திகழும் பேறு ஆதித்த சோழனுக்குக் கிட்டியது.

## ஆதித்தனின் உருவச்சிலைகள்:

செம்பொன் பள்ளியில்...

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், செம்பனார் கோயில் திருக்கோயில் சோழப்பெருமன்னர்கள் காலத்தில் செம் பொன் பள்ளியார் திருக்கோயிலென்று அழைக்கப்பட்டது. இவ்வூரில் முதல் ஆதித்த சோழன் காலத்திய கற்றளி ஒன்று இருந்து பின்னாளில் அழிந்து விட்டது. அக்கற்றளியில் இடம் பெற்றிருந்த இறையுருவங்களையும், கட்டுமானக் கற்களையும் அப்படியே பின்னாளில் திருப்பணி செய்யப்பட்டபோது பயன் படுத்தியுள்ளனர். இங்குள்ள கருங்கல் திருமேனிகள் எல்லாம் ஆதித்தன் காலத்திய அற்புதப் படைப்புகளாகும். யாது காரணத்தால் ஆதித்தன் காலத்துக்கோயில் அழிந்தது என்பதை அறிய, ஒரு கல்வெட்டு துணை புரிகிறது.

ஸ்ரீ இராசாதிராச சோழதேவர் சிங்களவருடன் போர் தொடுத்த காலத்தில் எதிரிகளுக்கு அஞ்சி இந்திருச்செம்பொன் பள்ளி உடையார் கோயில் தேவரடியாரும், நியாயத்தாரும் இக்கோயில் திருமேனிகளை எல்லாம் திருவிடைக்கழி திருக் கோயிலில் வைத்துப் பாதுகாப்பு செய்திருந்ததனையும், மூன்றாம் குலோத்துங்க சோழதேவர் அவற்றினை மீண்டும் இக்கோயிலுக்கே கொண்டு வந்து எழுந்தருளுவித்துப் பூசை தொடங்கச செய்ததனையும், பெருமழை, பெரும்புயலால் இடிபாடுற்ற திருச்செம்பொன்பள்ளியார் திருக்கோயிலில் வடக்குத்

திருமதில், திருத்தேரேற்றுக்கூடம் இவற்றை எடுத்துக் கட்டி, நன்னிலைப்படுத்த 'ஆக்கூர் நாடாள்வார்' என்பாருக்கு ஆணை யிட்டதனையும் இக்கோயிலில் உள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[9]

எனவே, ஆதித்தன் காலத்திய கற்றளி இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் இயற்கையின் சீற்றத்தால் இடி பாடுற்றதை மூன்றாங் குலோத்துங்கன் மீண்டும் சரி செய்திருக் கிறான். இவ்வாறு குலோத்துங்கன் காலத்தில் திருப்பணி செய்யப் பட்டபோது முன்பு இத்திருக்கோயிலில் இடம் பெற்றிருந்த முதல் ஆதித்த சோழனின் உருவச்சிலை உள்ள கற்பலகையை மீண்டும் முன்மண்டபத்தின் தென்புறச் சுவரில் இடம் பெறச் செய்தனன்.

சுவரில் பதிக்கப்பட்டுள்ள இக் கற்பலகையின் நடுவில் தாடி மீசைகளுடன் கைகூப்பிய நிலையில் ஒருவரும், இவருக்கு வலப்புறம் தாடி மீசைகளுடன் பிறிதொருவரும், இடப்புறம் தாடி மீசைகள் இல்லாமல் இளம் வயதினராக ஒருவரும் ஆக மூவரின் உருவச்சிலைகளும் இடம் பெற்றுள்ளன. நடுவில் உள்ள உருவச்சிலை ஆதித்த சோழனுடையதாகவும், அருகில் தாடியுடன் உள்ளவர் அவரது அமைச்சர் போன்ற உயர் அலுவலராகவும், இளம் வயதினராகத் திகழும் உருவம் இம்மாமன்னனின் மகனான பராந்தக சோழனின் சிலையாகவும் கொள்ளலாம்.

ஆக்கூரில்...

செம்பனார் கோயிலில் இருந்து நான்கு கல் தொலைவி லுள்ளது ஆக்கூர். இவ்வூர் திருக்கோயிலும் ஆதித்தன் காலத் தில் ஏற்றம் பெற்றிருந்து, பின்னாளில் (பிற்காலச் சோழர் களால்) முற்றிலுமாகத் திருப்பணிகள் செய்யப்பட்டு, பிற்காலச் சோழர்களின் கலைப் பாணியுடன் மாடக் கோயிலாகத் திகழ்கிறது.

இத்திருக்கோயிலில் கருவறையின் தென்புறம் இரண்டு படிமங்கள் சுவரில் பதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று ஆதித்த சோழனின் படிமமாகும். இதன் சிற்ப அமைதி, செம்பனார் கோயிலில் உள்ளது போன்றே ஆதித்தன் காலப் பாணியாகத் திகழ்கிறது. இங்கு ஒரு மேடைமீது காணப்படும் சிவலிங்கத்தை நின்ற நிலையில் தாடி மீசை

களுடன் திகழும் ஆதித்த சோழனின் சிற்பம் வணங்கும் கோலத்தில் உள்ளது. இடுப்பிலுள்ள ஆடை அலங்காரம் மிகச் சிறப்பாக உள்ளது. இச்சிற்பம் சுமார் இரண்டடி உயரம் உடையது.

திருக்கருகாவூரில்...

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் திருக்கருக்காவூர் அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோயில் ஆதித்தன், பராந்தகன் காலங்களில் ஏற்றம்பெற்ற ஒரு திருக்கோயிலாகத் திகழ்ந்தது. இக்கோயிலின் கருவறை, ஆதித்தன் காலத்திய கலைப்பாணி சற்றும் குன்றாமல் மிளிர்கிறது. இக் கருவறையின் பின்புறத் தேவ கோஷ்டத்தை ஒட்டி இருமருங்கும் இரண்டு உருவச்சிலைகள் உள்ளன. ஒன்றை ஆதித்தனின் உருவச்சிலையாகவும், பிறிதொன்றை அவனது தேவியின் சிலையாகவும் வரலாறு-சிற்ப இயல் வல்லுநர்கள் குறிப்பர். பட்டாபிராமன் அவர்கள் (புதுவை மாநில, பிரஞ்சு இந்தியக்கழகம்) இவ்வுருவச்சிலையை ஆதித்தனின் சிலையாகவே குறிப்பிட்டுள்ளார்.[10] இச்சிலையை ஒட்டியுள்ள கல்வெட்டொன்று ஆதித்தன் காலத்தியதாகும்.

திருப்பழனத்தில்...

திருவையாற்றுக்கு அருகிலுள்ள திருப்பழனம் திருக்கோயில் சோழப் பெருமன்னர்கள் காலத்தில் திருப்பழனத்து மகாதேவர் கோயிலென்று அழைக்கப்பட்டது. முதல் ஆதித்த சோழனின் கற்றளியான இத்திருக்கோயிலின் கோஷ்டம் ஒன்றில் இம் மன்னனது அரச கோலத் திருவுருவச் சிலையுள்ளது.

தலையில் மகுடம், மார்பில் புரிநூல், இடுப்பில் அணி ஆடை, கையில் மலர் கொண்டு நிற்கும் இச் சிலை மிக அழகிய ஒன்றாகும். இது இம்மன்னனின் இளமைப் பருவத் திருக்கோல மாகும். இத்திருக்கோயிலில் உள்ள பல கல்வெட்டுகள் இத் திருக்கோயிலுக்கு இம்மன்னவன் செய்த அறக்கொடைகள் பற்றிக் கூறுகின்றன.

## குறிப்புகள்

1. Trivancore Archaeological Series Vol. III, No: 34, Verse 55

2. Ep. Ind Vol. III. No. 384
3. S. I. I. Vol. III. No. 89
4. திருத்தொண்டர்-திருவந்தாதி-பாடல் 65
5. Ep. Ind. Vol. XXVI, pp: 233 & 234
6. A. R. E. Ins. No. 100 & 180 of 1931
7. S. I. I. Vol. V. No. 665
8. S. I. I. Vol. VIII, No. 529
9. A. R. E. Ins. 170 of 1925
10. K. A. Nilakanda Sastri-Falicitation Volume Page: 467

# முதலாம் பராந்தக சோழன்

(கி.பி. 907-953)

முதலாம் ஆதித்த சோழன் கி.பி. 907 - இல் இறந்த பிறகு அவனது மகனான பராந்தக சோழன் முடிசூட்டிக் கொண்டான். சுமார் நாற்பத்தாறு ஆண்டுகள் நல்லாட்சி புரிந்து, சோழ மண்டலம் மட்டுமன்றி வடக்கே திருக்காளத்தி, மேற்கே கொங்குமண்டலம், தொண்டை மண்டலம் ஆகிய பகுதிகளையும் அகப்படுத்தினான்.[1]

இவன் தன் தந்தையைப் போன்றே பல கற்றளிகளை எடுத்து,சோழர்களின் கலைத்திறனுக்கு மேலும் மெருகூட்டினான். கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் 'இவனைக் கொற்றவையின் திருவவதாரம்' என்றும் பிரமன் சுவர்க்கத்தைப் படைத்துத் தேவர்களுக்கு வழங்கியது போலப் பராந்தகன் வீர நாராயணம் முதலிய செல்வ வளம் கொழிக்கும் சீரூர்களைப் படைத்துக் கற்றுவல்ல அந்தணர் பலருக்கும் அருங்கொடையாக வழங்கினான்' என்றும் புகழ்பாடுகின்றன.[2] இவன் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதால் மதுராந்தகன் என வழங்கப்பட்டான்.அருச்சுனனை ஒத்த பெருவீரனான இம்மன்னன் பிறரால் வெல்லப்படாமல் செருக்கித் திரிந்த கிருட்டிணராசனை வென்று வீரசோழன் என்று விருதுப்பெயர் பூண்டான். 'மன்னர் பலரும் வணங்கும் பெருமை சான்ற பராந்தகன் தன் படையுடன் கடலைக் கடந்து ஈழ நாட்டின் எல்லையை அடைந்து, அங்குத் தன்னை எதிர்த்த ஈழ மன்னனை வென்று, வாகை சூடிச் சிங்களாந்தகன் என்று புலவர்கள் பாடும் புகழ் பெற்றான். குணங்களால் உயர்ந்த இச்செம்மலுக்கு உவமையாகக் கூறத்தக்க வேறு மன்னரும் உளரோ? பகைவர் பலரையும் போரிடை வென்று வாகை சூடிய இம்மன்னவனின் வீரத்திற்கு இணையான வீரம் சான்ற மன்னரும் உளரோ?

இவ்வாறு சோழர்கள் வரலாற்றில் மிகச் சிறந்த வீரனாக நாற்பத்தாறு ஆண்டுகளுக்குமேல் நீண்டதோர் ஆட்சியை நடத்தி, எண்ணிலாக் கோயில்கள் பலவற்றையும் பலநூறு செப்புத் திருமேனிகளையும் படைத்து, சிறந்ததோர் வரலாற்று நாயகனாகத் திகழ்ந்தான் முதற் பராந்தகன்.

## பராந்தகனின் உருவச்சிலை

திருவாவடுதுறையில்...

தஞ்சை மாவட்டம் திருவாவடுதுறை கோமுக்தீசுவரர் திருக்கோயில் பராந்தகன் காலத்தில் திருவாவடுதுறை பரம சுவாமி திருக்கோயில் என அழைக்கப்பட்டது. இக்கோயில் பராந்தகனின் 25-ஆம் ஆட்சியாண்டில் திருக்கற்றளிப்பிச்சன் என்பவனால் கட்டப்பட்டது என்பதை இக்கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது.[8]

இதே கோயிலிலுள்ள பிறிதோர் கல்வெட்டொன்று குடப் படைக்கு மேலுள்ள கோயிற் பகுதிகளை எடுப்பிக்கப் பராந்தக தேவனே 500 கழஞ்சுப் பொன் நன்கொடையாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு பராந்தகன் அளித்த 500 கழஞ்சுப் பொன்கொண்டு கற்றளிப்பிச்சன் இத்திருக்கோயிலை எடுத்து அதில் தனது உருவச்சிலையையும் பராந்தக தேவனின் உருவச் சிலையையும் அமைத்தான். இவை மட்டுமன்றி, திருவாவடு துறையைச் சார்ந்த அம்பலவன் திருவிசலூரான் என்ற திருநாவுக்கரையன் சிலை, இளைய திருநாவுக்கரையன் சிலை, திரைமூர் நாட்டுச் சிற்றாடியைச் சார்ந்த தாமன் அம்பலவன் என்ற நமசிவாயத்தின் சிலை, இக்கோயிலின் ஒரு படைத் தளம் அமைத்த வாரம்புசலைச் சார்ந்த எழுவன் சாந்நீர தனுடைய சிலை, அரண்மனையின் பணிமகளான நக்கன் வண்ணாத்தடிகளின் சிலை ஆகியவை கல்வெட்டுக் குறிப்பு களுடன் உள்ளமை இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

சுவரில் குடைவாகக் காணப்படும் பகுதியில், மேடை மீதுள்ள சிவலிங்கத்தை நின்ற நிலையில் பராந்தகதேவன் வணங்கும் கோலத்தில் ஒரு சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத்திற்கு மேலாகக் கொற்றக்குடையும் சாமரமும் உள்ளன. ஆதித்தன் காலக் கலைப்பாணிக்கேற்ப இச்சிற்ப அமைதி திகழ்கிறது.



பராந்தக சோழன் - கரந்தை

கரந்தையில்...

தஞ்சைக் கருந்தட்டாங்குடியிலுள்ள வசிட்டேசுரர் திருக்கோயில் பராந்தகன் காலத்திய கற்றளியாகும். இதனைப் பின்னர் மதுராந்தக உத்தம சோழன் திருப்பணிகள் செய்து கோஷ்டங்களையும், சிற்பங்களையும் அதிகரிக்கச் செய்தான். இதனால் இத்திருக்கோயிலில் ஆதித்தன் கலைப் பாணியையும், செம்பியன் மாதேவியின் கலைப் பாணியையும் காணலாம்.

இவ்வாறு சில மாறுதல்களைப் பெற்ற கருவறைச் சுவரின் அதிஷ்டானத்தில் பட்டிகை வர்க்கத்தில் மிகச்சிறிய சிற்பத் தொகுதி இடம் பெற்றுள்ளது. இதில் ஒரு மன்னவன் சிவலிங்கத் திருமேனியை வணங்கும் கோலத்தில் உள்ளது. இந்த அதிஷ்டானப் பட்டிகை வர்க்கம் பராந்தகன் காலத்தியது என்பதற்குக் கல்வெட்டுகளும் சான்று பகர்கின்றன. எனவே, இச்சிற்பத் தொகுதியில் இடம் பெற்றுள்ள மன்னவனின் உருவத்தைப் பராந்தகனது சிற்பமாகவே கொள்ளலாம்.

## குறிப்புகள்

1. Mysore Gazetteer Vol. II, Part-II, Page-917.
2. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் - எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பக்கம்-281.
3. Ibid - Page-266.

# கண்டராதித்த சோழர்

முதலாம் பராந்தக சோழனுக்குப் பிறகு சோழநாட்டு அரியணையில் (கி. பி. 950-இல்) அமர்ந்தவர்[1] கண்டராதித்த சோழராவார். சைவத்தின்பால் பற்று மிக்கோங்கியதால் தமது தம்பி அரிஞ்சய சோழனை அரியணையில் அமர்த்திவிட்டுத் தாம் சமயப் பணி மேற்கொண்டார். இவர் கி.பி.950-957 வரை ஆட்சி புரிந்தவர் என்று சதாசிவ பண்டாரத்தார் அவர்களும், கி. பி. 949 டிசம்பர் 28-ஆம் நாளுக்கும் கி. பி. 950 சனவரி 8-ஆம் நாளுக்குமிடையே முடிசூடி கி. பி. 958 வரை ஆட்சி புரிந்ததாக என். சேதுராமன் அவர்களும் குறித்துள்ளனர்.

இவருடைய கல்வெட்டுகள் இவரை 'மதுரை கொண்ட இராசகேசரி' என்று குறிப்பதால் இவர் பாண்டியர்களுடன் போரிட்டு வென்றவர் என்பது உணரப்படுகிறது.

"சீரான்மல்கு தில்லைச் செம்பொன் அம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர் கோன் கலந்த
ஆராவின் சொற் கண்டராதித்தன் அருந்தமிழ்மாலை -

என்ற திருவிசைப்பா பதிகத் திருக்கடைக்காப்பினால் இச் சோழ வேந்தர் பன்னிரு திருமுறைகளுள் ஒன்றான திருவிசைப்பா பதிகம் அருளியவர் என்பதை அறிய முடிகிறது.

மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவன்மனான முதற் பராந்தக சோழரின் இரண்டாம் புதல்வராகப் பிறந்தவர் கண்டராதித்தர். இவருக்கு வீரநாராயணி[2] செம்பியன் மாதேவி[3] என இரு மனைவியர் இருந்தனர். இவர்களுள் முதல் மனைவியாரான வீரநாராயணி, கண்டராதித்தர் முடிசூட்டப் பெறுவதற்கு முன்னரே இறந்தார். இரண்டாம் தேவியான செம்பியன் மாதேவியார் 'மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த பெருமாள் தேவியார் செம்பியன்மாதேவியார் என்று

கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறார். செம்பியன் மாதேவியாரின் புதல்வரே மதுராந்தக உத்தம சோழராவார். இவரும் தம் தந்தை கண்டராதித்தரைப் போலவே சில ஆண்டுகளே ஆட்சி புரிந்துவிட்டுப் பின்பு சமயப் பணியே சிறப்புடையதாக ஏற்றவர்.

கண்டராதித்தரின் திருவிசைப்பா பதிகம் தில்லைக் கூத்தனின் பெரும்புகழ் உரைப்பதாகும்.

" அத்தா ! உந்தன் ஆடல் காண
அணைவதும் என்று கொலோ ? "

" கோனை ஞானக் கொழுந்து தன்னைக்
கூடுவது என்று கொலோ ? "

என்பன போன்ற கண்டராதித்தரின் பாடல் வரிகள் சுவைக்கத் தக்கன.

இம்மன்னவர் பெயரால் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம்[4], கண்டராதித்த பேரேரி[5] கண்டராதித்த வாய்க்கால் என்று பல இடங்களுக்குப் பெயர்கள் திகழ்ந்தன. தென் ஆர்க்காடு மாவட்டம் பள்ளிச்சந்தல் எனும் இடத்தில் இவர் பெயரால் சமணப்பள்ளி ஒன்று இருந்தது என்பதைக் கல்வெட்டு கள் கூறுகின்றன[6]. சைவச் செம்மலாய்த் திகழ்ந்த இம்மன்னர் சமணசமயத்திற்கும் ஆக்கம் கொடுத்ததால் இவரது சமயப் பொறையை இக்கல்வெட்டுகளால் அறியலாம்.இவரது பெயரால் 'கண்டராதித்த விண்ணகரம்' என்ற திருமால் கோயில் ஒன்றும் இருந்தது.

மும்முடிச்சோழர், மேற்கெழுந்தருளிய தேவர்.[7] சிவஞான கண்டராதித்தர்,[8] கோச்சோழன், வளங்காவிரி நாடன், கோழியர் கோக்கண்டன் என்ற சிறப்புப் பெயர்களாலும் கண்டராதித்தர் அழைக்கப்பட்டதைச் சாசனங்கள் குறிக் கின்றன. இவர் கி. பி. 957 அல்லது 958-இல் இறந்திருக் கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[9] திருக் கோயிலூருக்கு அருகிலுள்ள சம்பை எனும் ஊரில் உள்ள திருக்கோயில் இவரது பள்ளிப் படையாக இருக்கலாம் என்பது அண்மைக்காலத்து ஆய்வுகளின் முடிவாகும்.[10]

## கண்டராதித்தரின் திருவுருவச்சிலைகள்

திருநல்லம் ( கோனேரிராயபுரம் ) திருக்கோயிலில்....

"வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்
நங்கோ னமையாள்வா னல்ல நகரானே"

என்று காழிப்பிள்ளை பாடும் திருநல்லம் எனும் ஊர் தற்போது கோனேரிராயபுரம் என்று அழைக்கப்படுகிறது. இது கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் அடைந்த பெயர் மாற்றமாகும்.[11] இவ் ஊரில் சோழப்பேரரசி செம்பியன்மாதேவியார் 'கண்டராதித்தம்' எனும் கற்றளி எடுப்பித்து அதில் தம் கணவரின் திருவுருவத்தையும் இடம்பெறச் செய்தார். இத்தளி தற்போது உமாமகேசுவரர் திருக்கோயிலென அழைக்கப்படுகிறது. இதன் தென்புறச் சுவரில் ஒரு சிற்பத் தொகுதியும் கல்வெட்டும் உள்ளன.[12] சிற்பத்தில் ஒரு சிவலிங்கத்திற்குப் பட்டர் ஒருவர் ஆடை சுற்றிக்கொண்டிருக்க எதிரே கால்களை மடித்து அமர்ந்த நிலையில் வணங்கும் கோலத்தில் கண்டராதித்தரும், அவருக்குப் பின்புறம் ஒரு கையில் வாளும், மறு கையில் சாமரமும் ஏந்தி நிற்பவரும், தாடியுடனும் கொண்டையுடனும் குடை தாங்கிக் கொண்டு பின்னால் அமர்ந்திருப்பவரும் காணப்படுகின்றனர்.

இச்சிற்பத் தொகுதிக்குக் கீழாக உள்ள கல்வெட்டு பின் வருமாறு குறிப்பிடுகிறது.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளாரான ஸ்ரீ செம்பியன் மாதேவியா

(2) ர் தம்முடைய திருமகனார் ஸ்ரீ மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழர் திருவிராஜ்யஞ் செய்த

(3) ருளா நிற்கத் தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்ல முடையார்க்கு

(4) த் திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத்திருக் கற்றளியிலேய் திரு நல்லமுடையாரைத் திருவடித் தொ

(5) ழுகின்றாராக எழுந்தருளுவித்த ஸ்ரீ கண்டராதித்த தேவர் இவர் உ.உ.





கண்டராதித்தர் - திருநல்லம்



கண்டராதித்தர் - ஆடுதுறை



கண்டராதித்தர் - திருவேள்விக்குடி

இந்தக் கல்வெட்டுக் குறிப்புடன் திகழும் கண்டராதித்தர் திருவுருவச்சிலை மிக அரிய, தெளிவான சான்றுகளுடன் உள்ள உருவச்சிலையாகும்.

இதே திருக்கோயிலில் கருவறையின் வடபுறச் சுவரில் கூத்தப்பெருமானின் (நடராசர்) திருவுருவம் ஒன்று கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இதனருகில் நின்ற வண்ணம் வணங்கும் கோலத்தில் கண்டராதித்த தேவர் காணப்படுகிறார்.

ஆடுதுறையில் ...

சோழமண்டலத்துத் திரைமூர்நாட்டுத் தென் குரங்காடு துறை எனக் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஆடுதுறையில் 'திருக் குரங்காடுதுறை மகாதேவர்' திருக்கோயில் உள்ளது. பரகேசரி உத்தம சோழனுடைய கல்வெட்டொன்று இத்திருக்கோயிலைக் கற்றளியாகப் புதுக்கியவர் சோழப் பேரரசி செம்பியன் மாதேவி யார் என்று குறிப்பிடுகிறது.[13] இக்கோவில் ஆபத்சகாயேசுவரர் திருக்கோயிலெனத் தற்போது அழைக்கப்படுகிறது.

இக்கற்றளியில் கருவறையின் சுவரில் கண்டராதித்த தேவர் சிவலிங்கத்தை வணங்கும் திருக்கோலத்தில் சிற்பமாகக் காணப்படுகிறார். செம்பியன் மாதேவியார் கட்டுவித்த திருக் கோயில்களில் தம் கணவரான கண்டராதித்தரின் உருவச் சிலைகளை எடுத்துள்ளது நோக்குதற்குரியது.

திருவேள்விக்குடியில் ...

தஞ்சை மாவட்டம் குற்றாலத்தை அடுத்துள்ள திருவேள்விக்குடி கலியாணசுந்தரர் திருக்கோயிலின் கருவறைச் சுவரில் சிவலிங்கத்திருமேனியை வணங்கும் கோலத்திலுள்ள கண்டராதித்தரின் சிற்பம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இத் திருக்கோயிலும் செம்பியன் மாதேவியாரால் திருப்பணிகள் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## குறிப்புகள்

1. Ep. Ind. Vol. XXII. No ; 34, S .I. I. Vol. III No.; 205
2. Ins. 108 of 1906.
3. S. I. I. Vol. III. No; 141.

4. 78 of 1920.
5. 140 of 1919.
6. 448 of 1938.
7. 540 of 1920.
8. Ep. Carnatica Vol. IX. No . 92
9. Ep. Indica Vol. XXVI. Page-84
10. Article by Dr. R. Nagasamy. Indian Express - 1982
11. History from a coin - M. Balasubramanian - Indian Express article - Dec. 18 - 1977.
12. S. I. I. Vol. III, No . 146.
13. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் - எஸ். ஆர். பாலசுப்ரமணியம்.

# செம்பியன் மாதேவியார்

சிவஞானச் செம்மல் கண்டராதித்த சோழரின் தேவியாரும், மதுராந்தக உத்தம சோழரைத் திருவயிறுவாய்த்தவரும், சிவபாத சேகரனாம் முதலாம் இராசராசப் பெருந்தகையை வளர்த்த பாட்டியுமான செம்பியன் மாதேவியார், மழவரையர் குலத்தில் பிறந்தவர். இதனைக் கல்வெட்டுகள் 'மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்த பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார்'[1] என்றும், 'உடைய பிராட்டியார் மாதேவிகளாராகிய மதுராந்தக உத்தமசோழனை மணிவயிறு வாய்த்தவரான மேதக்க செம்பியன் மாதேவியார்'[2] என்றும் புகழ்பாடுகின்றன.

சித்திரைக் கேட்டையில் பிறந்த இத்தேவி முதல் இராசராசனின் ஆட்சியில் கி. பி. 1001 வரையில் உயிர் வாழ்ந்தவர் என்பது திருவக்கரை கல்வெட்டுகளால் உறுதிப்படுகின்றது.[3] இத்தேவியார் தமிழகக் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும் தகுதியை உடையது. பராந்தகன் மாதேவடிகள் என்ற செம்பியன் மாதேவி தம் கணவரின் மறைவுக்குப் பின்பு தம் வாழ்நாள் முழுவதையுமே சிவனடி மறவாத சிந்தையராய், தம் ஆற்றலையும், செல்வத்தையும் புதுக்கோயில்கள் எழுப்புவதிலும் பழைய கோயில்களைப் புதுக்குவதிலும், திருக்கோயில்களுக்குரிய நன் கொடைகளையும் மானியங்களையும் மிகுப்பதிலுமே செலவிட்டு வரலாற்றில் அழியாப் புகழடைந்தார்.

## செம்பியன் மாதேவி கலைப்பாணி

உலகமே போற்றி வியக்கும் சோழர்களின் கலைப் படைப்புகளான திருக்கோயில்கள், கற்சிற்பங்கள், செப்புத்

திருமேனிகளை வரிசைப்படுத்தி நோக்கும்போது 'செம்பியன் மாதேவி பாணி' எனத் தனித்த ஒருவகைப் பாணியை உருவாக்கிய பெருமை இத்தேவியின் வரலாற்றுச் சாதனையாகும். 'பாரட்' போன்ற வெளிநாட்டுச் சிற்ப இயல் வல்லுநர்கள் 'செம்பியன் மாதேவி பாணி' எனத் தனித்த முத்திரையுடன் கலைப் படைப்புகளை அவர்தம் நூல்களில் வெளியிட்டுள்ளனர்.

செம்பியன் மாதேவியின் அறக்கொடைகளும், கலைப் பணிகளும் மதுராந்தக உத்தம சோழனின் இரண்டாம் ஆட்சி யாண்டில் தொடங்கப்பட்டன என்பதைக் காட்டுமன்னார்குடியில் உள்ள சாசனத்தின் வாயிலாக அறிய முடிகிறது. கி. பி. 972-இல் தொடங்கப்பட்ட இப்பணி இராசராசனின் 16-ஆம் ஆட்சி யாண்டான கி. பி. 1001 வரை தொடர்ந்தது. சுமார் 30 ஆண்டுக் காலப் பணியில் இத்தேவியின் கலைத்துறை மற்றும் சமயத்துறை சாதனைகள் எத்தனை . . . எத்தனையோ !

## சாதனைப் பணிகள்

செம்பியன் மாதேவியார் முன்பு செங்கற் கோயிலாகத் திகழ்ந்த கோயில்களைக் கற்றளியாக மாற்றுதல், முன்பு கற்றளியாக இருந்த கோயில்களின் தேவகோஷ்டங்களை அதிகரித்தல், திருமண்டபங்கள், திருச்சுற்றுகள் எடுத்தல், செப்புத்திருமேனிகள் சமைத்தல், திருக்கோயில்களுக்கு நிலம் முதலான முதலீடுகள் ஏற்படுத்தல் முதலியவற்றோடு அணிகலன்கள், பாத்திரங்கள், சாமரங்கள், பொற்பூக்கள் முதலிய பல அறக்கொடைகளையும் நல்கிச்சாதனை படைத்துள்ளார். தாம் கற்றளியாக எடுத்த கோயில்களிலெல்லாம் பெரும்பாலும் தமது கணவரான கண்டராதித்தரின் படிமத்தையும் தமது படிமத்தையும் எடுத்துக் கல்வெட்டுகளையும் வெட்டுவித்தது சிறப்பு அம்சமாகும். இவரது சாதனைகளாக இன்று திருநல்லம், ஆடுதுறை, குத்தாலம், திருமணஞ்சேரி, செம்பியன்மாதேவி, ஆரூர், திருநறையூர், திருக்கோடிக்கா, முதலான பல ஊர்களில் கற்றளிகள் அமைந்து கலை மணம் பரப்புகின்றன.

## செம்பியன் மாதேவியாரின் உருவச்சிலைகள்

**சக்கராப்பள்ளியில் . . .**

தஞ்சாவூர் மாவட்டம் ஐயம்பேட்டைக்கருகில் உள்ள சக்கராப்பள்ளி அருள்மிகு சக்கரவாகீசுவரர் திருக்கோயிலில்

கருவறையின் அர்த்த மண்டபத் தென்புறச் சுவரின் வெளிப் பக்கம் இரண்டு கோஷ்டங்களுக்கிடையே ஒரு நீண்ட கல்வெட்டுப் பகுதி உள்ளது. இக்கல்வெட்டுப் பகுதியின் நடுவில் ஒரு மாடம் போன்று குடையப்பட்டு அதில் புடைப்புச் சிற்பங் கள் இடம் பெற்றுள்ளன. இம்மாடத்தை நடுவில் கொண்டு திகழும் கல்வெட்டுச் சாசனம் மதுராந்தக உத்தம சோழனின் ஆட்சிக் காலத்தில் இத்தேவியால் அளிக்கப்பட்ட அறக் கொடைகள் பற்றிப் பேசுகின்றது. இந்தச் சக்கராப்பள்ளித் திருக்கோயில் செம்பியன் மாதேவியாரால் திருப்பணி செய்யப் பட்ட ஒன்றாகும்.



செம்பியன் மாதேவியார்-சக்கராப்பள்ளி

சிற்பங்கள் பொதிந்துள்ள மாடத்தின் ஒருபுறம் மேடை மீது இலிங்க உருவம் உள்ளது. ஒரு மாலை சிவலிங்கத்தின் மேல் சூட்டப்பட்டுள்ளது. இருபுறமும் இரண்டு விளக்குகள் எரிகின்றன. சிவலிங்க உருவத்திற்கு மேலாக ஒரு குடையும் இரண்டு சாமரங்களும் உள்ளன. எதிரே செம்பியன் மாதேவி யார் அழகிய கொண்டையும் அணி செய்யப்பட்ட ஆடைகளும் திகழ, இரு கரங்களைக் குவித்து நின்று சக்கராப்பள்ளி இறைவனாகிய இந்த இலிங்கத்தை வணங்குகிறார். இத் தேவிக்குப் பின்னால் ஒரு பெண் கையில் மாலை ஒன்றைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள். மிக நேர்த்தியாகச் செதுக்கப் பட்ட இவ்வுருவச்சிலையின் முகத்தைப் பின்னாளில் கலையறிவு இல்லாதவர்கள் சற்றுச் சிதைத்துள்ளது வருந்துதற்குரியது.

செம்பியன் மாதேவியில் . . . . .

நாகப்பட்டினம் அருகிலுள்ள செம்பியன்மாதேவி எனும் ஊரில் உள்ள கயிலாசநாதர் திருக்கோயில் செம்பியன் மாதேவியாரால் எடுக்கப்பட்டதைக் கண்டோம். இத்திருக் கோயிலில் கடாரம் கொண்ட பெருமன்னன் இராசேந்திர சோழனால் செம்பியன் மாதேவியின் படிமம் எடுக்கப்பட்டு அதற்குப் பூசைகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டதை இம்மன்னனின் 8-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று எடுத் தியம்பகிறது.[4]



செம்பியன்மாதேவியார்-
செம்பியன்மாதேவி

கி. பி. 1019-இல் இராசேந்திர சோழனால் எடுக்கப்பட்ட இப் படிமம் இன்றும் இத்திருக் கோயிலில் வழிபாட்டுக்குரிய தெய்வமாகப் போற்றப்படுகிறது. இறைவனை வணங்கும் கோலத் தில் நின்ற நிலையில் உள்ள இக்கற் படிமம் சற்றுச் சிதில மடைந்துள்ளதாலும், எண்ணெய் பூசப்பட்டு அழுக்கேறிய நிலை யில் இருப்பதாலும் தெளிவில்லா மல் இருக்கின்றது.

திருநல்லத்தில் . . . . .

'கண்டராதித்தன்' என்ற பெயரில் திருநல்லமெனும் கோனேரிராயபுரத்தில் இத்தேவி எடுத்த திருக்கோயிலின் தெற்குத் திருச்சுவரில் ஒரு சிற்பத் தொகுதி உள்ளது. இதில் நடுவே உள்ள மேடையின் மீது ஒரு சிவலிங்க உருவம் மாலையுடன் உள்ளது. அதன் வலப்புறம் செம்பியன் மாதேவியார் கைகூப்பிய நிலையி லும், இடப்புறம் உத்தம சோழன் இறைவனை வணங்கும் கோலத் திலும் காணப்படுகின்றனர். உத்தம சோழனின் உயரம் செம்பியன் மாதேவியைவிடச் சற்றுக் குறைவாக உள்ளது. இச்சிற்பம் முற்றுப் பெறா நிலையில் உள்ளதால் தெளிவில்லாமல் திகழ்கிறது.



செம்பியன்மாதேவியார்-திருநல்லம்

காமரசவல்லியில் . . . .

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் திருமழபாடியிலிருந்து 6 கல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூரே காமரசவல்லியாகும். இங்குச் சோழப் பெருமன்னர்கள் காலத்தில் எடுக்கப்பட்ட கார்க்கோடகேசுரர் திருக்கோயில் தற்போது சிதைவுற்ற நிலையில் காணப்படுகிறது. இத்திருக் கோயிலில் இடம்பெற்ற சோழப் பேரரசி செம்பியன் மாதேவி யாரின் செப்புப் படிமம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ் வூரின் செப்புத்திருமேனிகள் அனைத்தும் செம்பியன் மாதேவி யார் காலத்திய படைப்புகளாகும்.

இத்தேவியின் செப்புப் படிமம் நின்ற நிலையில் ஒரு பீடத்தின்மேல் காணப்படுகிறது. இடுப்பில் அணி செய்யப்பட்ட நீண்ட ஆடையுடுத்தி, கழுத்தில் அணிகலன்களும், கைகளில் வளையல்களும் சூடிக் காணப்படுகிறார். அலங்கரிக்கப்பட்ட கொண்டையுடன், துளையுள்ள நீள் செவிகளும் எடுப்பான முக அமைப்பும் இப்படிமத்திற்கு மேலும் அழகூட்டுகின்றன. இரு கரங்களும் நீட்டி மலர் தூவும் நிலையில் காணப்படு கின்றன.



நமக்குக் கிடைத்துள்ள சோழர்காலத்துச் செப்புப் படிமங்களில் இதனை ஒத்தசிறப்பான பிறிதோர் சிலை கிடைக்காததே இப்படிமத்தின் தனிப் பெருமையாகும்.

இதுவரை நாம் கண்ட செம்பியன் மாதேவியாரின் படிமங்களைத் தவிர, திருக்குருகாவூர், திருமணஞ்சேரி, நாங்கூர் முதலான இடங்களிலும் இத்தேவியின் கற்சிலைகள் இடம் பெற்றுள்ளன. அவை பற்றிய ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப் படவில்லை.

செம்பியன்மாதேவியார்-
காமரசவல்லி

## குறிப்புகள்

1. S. I. I. Vol. III. No. 141;
2. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் - எஸ். ஆர். பாலசுப்பிரமணியம். பக்கம்-345.
3. Ins. 200 of 1904
4. A. R. E. Ins. 481 of 1925.

# உத்தம சோழன்

(கி. பி. 970 - 985)

சிவஞான கண்டராதித்தர் செம்பியன்மாதேவியார் ஆகியோர்க்கு மகனாய்ப் பிறந்த மதுராந்தக உத்தம சோழனைக் 'கோப்பரகேசரி வன்மரான ஸ்ரீ உத்தம சோழதேவர்' என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன.[1] இவனது ஆட்சிக் கல்வெட்டுகள் திருமுல்லைவாயில்[2], காஞ்சிபுரம்[3], திருவொற்றியூர்[4], திருவிடந்தை[5], மீஞ்சூர்[6], வடஆர்க்காடு மாவட்டம் பழங்கோயில்[7], திருமால்புரம்[8] எனும் ஊர்களிலும், திருவதிகை வீரட்டானத்திலும்[9] காணப்படுவதால் இவன் சோழ மண்டலம் மட்டுமன்றி தொண்டைநாடு, திருமுனைப்பாடிநாடு ஆகிய வற்றையும் ஆட்சி புரிந்தான் என அறியலாம்.

பெரிய 'லைடன்' பட்டயங்களும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவனைப்பற்றி மிக விரிவாகக் கூறுகின்றன. ஆதித்த கரிகாலனின் மறைவுக்குப் பின்பு இவன் நாடாள விரும்பியதால், இராசராசன் வாய்ப்புகள் பல இருந்தும் தான் நாடாளாமல் தன் சிறிய தந்தையான உத்தம சோழனையே ஆட்சியில் அமர வகை செய்தான். ஆதித்த கரிகாலனின் கொலைக்கு இவன்தான் காரணம் எனச் சில வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் களங்கம் கற்பித்தனர். இதனை உடையார்குடிக் கல்வெட்டுகளின் சான்றால் மறுத்து, யார் உண்மைக் காரணம் என்பதைப் பல வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டனர்.[10]



உத்தம சோழன்
கண்டர்கோட்டை

சுமார் 15 ஆண்டுக்காலம் இம் மன்னனின் ஆட்சியில் இவனது தாய் செம்பியன் மாதேவியார் சோழர் காலக் கலைப்பணியில் ஒரு பொற்காலத்தையே படைத்தார். 'செம்பியன் மாதேவி பாணி' என்று இன்று உலகமே வியக்கும் ஒரு கலைப் பணி கமழ, மதுராந்தக உத்தம சோழன் உறுதுணையாய் நின்றான் என்பதே இவ்வரலாற்று நாயகனின் தனிப் பெருமையாகும். 15 ஆண்டு அரசாட்சிக்குப் பின்பு அரசியல் சலித்து, சமயப் பணியே சிறந்தது என்று தன் தந்தை, தாய் வழியை மேற்கொண்ட ஒரு பெரும் புகழாளனும் இவனாவான். இவனது மகனான மதுராந்தகன் கண்டராதித்தன் முதலாம் இராசராசன் காலத்தில் திருக்கோயில் நிருவாகங்களை எல்லாம் பேணிக் காத்த ஓர் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவன் ஆவான்.

## செப்புப் படிமம்

சென்னை அருங்காட்சியகத்தில் செப்புத் திருமேனிகள் பகுதியில் ஒரு மன்னவனின் செப்புப் படிமம் உள்ளது. இது கண்டர்கோட்டை (கந்தர்வகோட்டை) எனும் சோழ மண்டலத்து ஊர் ஒன்றிலிருந்து கிடைத்ததாகும். இதன் சிற்ப அமைதி செம்பியன்மாதேவியின் பாணியில் அமைந்துள்ளது. இதனையும், இவ்வூர்க் கோயில் கல்வெட்டுகளையும் ஆராய்ந்த வரலாற்று வல்லுநர்கள் இது சோழமன்னன் உத்தம சோழனின் படிமமாகக் குறித்துள்ளனர்.[11]

நின்ற கோலத்தில், தலையில் மகுடமணிந்து இரு கரங்களையும் கூப்பிய நிலையில் வணங்கும் திருக்கோலத்தில் பத்ம பீடத்தின்மேல் அமைந்துள்ளது இப்படிமம்.

## குறிப்புகள்


1 S. I. I. Vol. III, No. 128 and 150
2. Ibid - No. 141
3. A. R. E. Ins. 2 of 1906
4. S. I. I. Vol. III, No. 143
5. Ibid No. 145
6. A. R. E. Ins. 134 of 1916
7. A. R .E: Ins. 352 of 1925
8. S. I. I. Vol. III, No. 142
9. A. R. E. Ins. 398 of 1921
10. பிற்காலச் சோழர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார்
11. கல்லும் சொல்லும் -- முனைவர் இரா. நாகசாமி.

# முதலாம் இராசராசன்

(கி.பி. 985-1014)

சோழப் பெருமன்னர்கள் வரிசையில் தன் ஆட்சித் திறத்தால், கலைப்பணியால், சாதனைகளால், வீரத்தால் முதலிடம் வகிப்பவன் முதலாம் இராசராசனாவான். இவன் இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தரசோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் மகனாய்ப் பிறந்தவன். இவனது உடன்பிறந்தவர்கள் இவனது அக்கனாகிய குந்தவை தேவியும், அண்ணனாகிய ஆதித்த கரிகாலனும் ஆவர். இவன் ஐப்பசி சதயத்தில் பிறந்தவன்.

வானவன்மாதேவியைப் புகழும் திருக்கோயிலூர்க் கல்வெட்டு 'இந்திரசாமனன்' இராச சர்வக்ஞன் எனும் புலியைப் பயந்த பெண் மான் என்று கூறுகிறது. சர்வக்ஞன் என்பதற்-கேற்ப இவன் தன் சாதனைகளால் தலைசிறந்த வரலாற்று நாயகன் எனும் தகுதியை அடைந்தான். இயல், இசை, நாட்டியம் எனும் முத்தமிழையும் வளர்த்து ஆய கலைகள் அனைத்தையுமே கண்ணெனப் போற்றியவன் இம்மன்னன் ஆவான்.

## மாமன்னன் வளர்த்த கலைகள்

தமிழகத்தின் கலைகளெல்லாம் மிக உயரிய நிலையில் வளர்ந்து இராசராசனது காலத்தில் பொற்காலம் படைத்தன. இவற்றிற்குக் காரணம் இவன் எந்த ஒரு கலையையும் மாமன்னனாகிய தனக்கோ தனிநபர் எவருக்குமோ

அடிமைப்படுத்தாமல் அனைத்துக் கலைகளையுமே சமுதாய நலக் கேந்திரங்களாகத் திகழ்ந்த கோயில்களுக்கே அர்ப்பணிக்கச் செய்தான். உதாரணமாக, தலை சிறந்த ஒரு நாட்டிய அணங்கின் ஆடலைத் தனது அரண்மனைக்கோ, தனக்கோ அந்தப்புரத்திற்கோ கொண்டு செல்லவில்லை. உலக வரலாற்றில் நமது தமிழகத்தைத் தவிர வேறு எல்லா நாடுகளிலுமே கவின் கலைகள் மன்னனுக்காக அர்ப்பணிக்கப்பட்டு- அடிமைப் படுத்தப்பட்டு-அந்தப்புரம் வரை சென்று அவலநிலைஅடைந்தன. ஆனால்,நம் தமிழகத்தில் இராசராசனும்,மற்றெந்த மன்னர்களும் கலைகளை அடிமைப்படுத்தாமல் கோயில்களுக்கே அர்ப்பணித்து, புனிதமாகக் கொண்டாடிப் போற்றினர்.கலைஞர்களுக்கு ஊதியம் அரசுக் கருவூலத்திலிருந்து கொடுக்கப்படாமல் கோயில் பண்டாரங்களிலிருந்துதான் கொடுக்கப்பட்டது.

தஞ்சைப் பெருங்கோயிலில் மட்டும் 400-இற்கும் மேற்பட்ட ஆடல் அரசிகளை நியமித்து அவர்களுக்கு நிரந்தர வருவாய், குடியிருப்புகள், நிரந்தரப்பணி, சுதந்திர உரிமைகள் ஆகிய இத்தனையும் அளித்து அந்த 400 ஆடல் அரசிகளின் பெயர்களையும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம், குடியிருப்பின் கதவிலக்கம் முதலான விவரங்களையும் இக் கோயிற் கல்வெட்டுகளில் பொறிக்கச்செய்தான் இராசராசன். ஆனால், அவனது அரண்மனையில் ஒரு பெண் ஆடியதாக வரலாறே கிடையாது. இதுதான் கலைத் துறையில் இவனது வெற்றிக்கு அடிப்படைக் காரணம்.

முத்தமிழும் தஞ்சைக் கோயிலில் வளர்க்கப்பட்டன. இசைத் தமிழின் வளர்ச்சியாகத் திருமுறைகளைத் தொகுத்து, தினமும் இறைவன் முன்பு அத்தமிழ்ப் பதிகங்கைளப் பாட வல்லோர்களை நியமித்தான். இவ்வகையில் 48 தமிழ் இசை வல்லோர்கள் நியமிக்கப்பட்டுத் தினம் தினம் இத்திருக்கோயிலில் தமிழ் பாடினர். இவர்கள் பாடும்போது உடுக்கையும், கொட்டி மத்தளமும் வீணையும் இசைக்கப்பட்டன.

நாடகத் தமிழின் அங்கமாக இத்திருக்கோயிலில் இராசராசேசுவர நாடகம் எனும் தமிழ் நாடகம் மக்களுக்காக நடிக்கப்பட்டது. 400 ஆடல் மகளிரும் ஆடி, இசை நாட்டியங்களைப் போற்றினர்.

இயல் தமிழின் அங்கமாக யாப்பருங்கலம்-யாப்பருங்கலக் காரிகை எனும் அருந்தமிழ் நூல்கள் வடிவம் பெற்றன.

ஓவியக்கலை உயர்ந்த நிலையை எட்டியது. அஜெந்தா, எல்லோரா குகைஓவியங்களைப் போன்று மிகச்சிறந்த ஓவியப் படைப்புகளை இக்கோயிலில் தீட்டினான். தமிழகத்தில் உள்ள பனைமலை, சித்தன்னவாசல் ஓவியங்களைப் போன்று மிகச்சிறந்த ஓவியப் படைப்பை இக்கோயிலில் காணமுடிகிறது. ஓவியக்கலையிலும் தனித்தன்மையை வெளியிட்டு உலகமே போற்றும் ஓர் ஒப்பரிய கலைக்கூடத்தை இக்கோயிலில் நிறுவியுள்ளான்.

## கோயில் நிருவாகம்

தென்னவன் மூவேந்த வேளான் எனும் தலைமை அதிகாரியின் கீழ் ஆயிரத்திற்கும் மேம்பட்ட ஊழியர்களை நியமித்து நிருவாகம் சீராக இயங்க வகை செய்தான். கோயில் பண்டாரம் ஒரு பொதுவுடைமை வங்கியாகவே செயல்பட்டது. இதில் கருவூல அதிகாரிகள், கணக்கர்கள், கீழ்க்கணக்கர்கள், தணிக்கை அலுவலர்கள் முதலிய பலதரப்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்தனர்.

தஞ்சைப் பெருங்கோயில் போன்ற வரலாற்றுச் சிறப்புடைய திருக்கோயில்களைக் கட்டுவித்து அதனால் கவின் கலைகளை வளர்த்ததோடு சமுதாயமும் பயனடையச்செய்த சாதனைகளால் தான் இவனை மாமன்னன் இராசராசன் (RajaRaja The Great) என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். இத்தனைப் பெரும்புகழுக்கும் காரணமாய்த் திகழ்ந்த இராசராசனின் உருவச்சிலைகள் சிலஇன்றும் நம் சோழமண்டலத்தில் உள்ளன.

## இராசராசன்-உலக மாதேவி செப்புப்படிமங்கள்

மாமன்னன் இராசராசன் தான் கட்டுவித்த தஞ்சைப் பெருங்கோயிலின் தலைமை நிருவாக அதிகாரியாக (ஸ்ரீகாரியம்) பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்தவேளான் என்பானை நியமித்தான். இப்பெருந்தகை இராசராசேச்சரத்தில் திருஞானசம்பந்த அடிகள், திருநாவுக் கரைய தேவர், நம்பியாரூரர், நங்கை பரவையார், மெய்ப்பொருள்

நாயனார், சிறுத்தொண்டர் ஆகியோர் செப்புப் படிமங்களைச் செய்வித்து, அவற்றுக்கு அணிகலன்களும், திருவிளக்குகளும் நல்கியுள்ளார் என்பதைத் தஞ்சைக் கல்வெட்டுகள் குறிக் கின்றன.

இக்கல்வெட்டு இத்திருக்கோயில் திருச்சுற்றின் தென் மேற்குத் திசையில் அமைந்துள்ள பரிவாராலயத்துப் பிள்ளையார் கோயிலை ஒட்டி வலப்புறம் அமைந்துள்ள தூணில் தொடங்கி உப பீடப் பகுதியில் நீண்டு காணப்பெறுகின்றது. இத்தொடரின் முப்பதாவதுவரி பின்வருமாறு தொடர்கின்றது.

“.... பாதாதிகேசாந்தம் ஒருமுழமே நால்விரலரை உசரத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந் தருளுவித்த பெரிய பெருமாள் பிரதிமம் ஒன்று - இவர் எழுந் தருளி நின்ற ஐய்விரலே இரண்டு தோரை உசரத்து பத்மம் ஒன்று - இதனோடுங்கூடச் செய்த பதினொரு விரற்சம-சதுரத்து ஐய்விரலே ஆறு தோரை உசரத்து பீடம் ஒன்று - இருபத்து இருவிரலே இரண்டு தோரை உசரத்து இரண்டு திருக்கை யுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் பிரதிமம் ஒன்று - இவர் எழுந்தருளிநின்ற ஐய்விரல் உசரத்து பத்மம் ஒன்று. இதனோடுங்கூடச் செய்த ஒன்பதிற்று விரற் சமசதுரத்து ஐய்விரலே இரண்டு தோரை உசரத்து பீடம் ஒன்று - பெரிய பெருமாளுக்கு தேவார தேவராக எழுந்தருளுவித்த தேவர் பாதாதி கேசாந்தம் ஐவிரலே இரண்டு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளிவித்த சந்திரசேகரர் திருமேனி ஒன்று”- என்று கூறுகிறது.

மேலும், இதே கல்வெட்டுத் தொடரின் நாற்பத்தேழாவது வரி “பெரிய பெருமாளுக்கு குடுத்தன திருக்கைக்காறை ஒன்று பொன் கழஞ்சேய் ஆறுமஞ்சாடியும் மூன்று மாவாக இரண்டினுற் பொன் இரு கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் ஏழுமாவாக இரண்டினுற் பொன் முக்காலே இரண்டு மஞ்சாடியும் நான்குமா- இவனே இவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார்க்குக் குடுத்தன திருக்குதம்பை ஒன்று பொன் ஏழு மஞ்சாடியுங் குன்றியாக இரண்டினுற் பொன் முக்கால் - திருக்கைக்காறை ஒன்று பொன் கழஞ்சேய் இரண்டு மஞ்சாடியும் மூன்றுமா - திருக்கைக்காறை ஒன்று பொன்கழஞ்சே எட்டுமா ...” என்றும் குறிப்பிடுகின்றது.

இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டிற்குள் (கி.பி. 1014) தென்னவன் மூவேந்தவேளான் தனது மன்னன் இராசராசனின் (பெரியபெருமாள்) செப்புப் படிமத்தையும், இவனது தேவி உலகமாதேவியின் செப்புப் படிமத்தையும் செம்பால் வடிக்கச் செய்தான். இவை மாமன்னன் உயிருடன் வாழ்ந்த போதே எடுக்கப் பெற்றவை. படிமங்கள் மட்டுமன்றி அவற்றுக்குச் சூட்டப்பெறும் பொன் அணிகலன்களான திருக்கைக்காறை, குதம்பை முதலானவையும் அளிக்கப்பெற்றன.



மாமன்னன் இராசராசன்



உலகமாதேவி

செப்புத்திருமேனிகள்

உயிருடன் திகழும் தனது மன்னனுக்கு எடுக்கப்பெறும் படிமம் என்பதால் இவற்றை மற்றத் தெய்வத் திருமேனிகள் மற்றும் தெய்வ நிலைக்குரிய படிமங்களிலிருந்து(மூவர் முதலிகள்) வேறுபடுத்திக் காட்ட எண்ணினான் மூவேந்தவேளான். எனவே இவ்விரண்டு படிமங்களுக்கு முன்பாகப் பித்தளையால் செய்யப் பெற்ற சந்திரசேகரமூர்த்தியைப் "பெரிய பெருமாளுக்குத் (இராசராசனுக்கு) தேவார தேவராக" எழுந்தருளுவித்ததாகக் கூறுகிறான். இத்திருமேனி பித்தளையால் செய்யப்பெற்றது. மேலும் இரத்தினன்யாசம் (பீடத்தில் ஆகம விதிப்படி நவமணிகள் இட்டு நியாசம் செய்தல்) செய்யப்பெற்றதாகக் குறிப்பிடப் பெறவில்லை. தஞ்சைத் திருக்கோயில் கல்வெட்டுகளில் காணும் அனைத்துத் தெய்வத் திருமேனிகளும் செம்பால் செய்யப்பெற்று இரத்தினன்யாசம் செய்யப் பெற்றதாகக் குறிப்பிடப்படும்போது, இத்திருமேனிமட்டும் பித்தளையால் செய்யப்பெற்று நியாசம் செய்யப்பெறாமல் இருப்பதும் நோக்குதற்குரியது. சந்திரசேகரர் திருமேனி 'தேவார தேவராக' எழுந்தருளுவிக்கப்பெற்றதே தவிர மற்றத் திருமேனிகள் போன்று திருக்கோயில் பூசனைக் குரியதாக எடுக்கப்பெறவில்லை. எனவே, மாமன்னன் தனது ஆன்மார்த்த மூர்த்தத்தைப் பூசிக்கும் காட்சியாகக் காட்டப் பெறவே இப்படிமங்களும் திருமேனியும் எடுக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

'தேவார தேவராக' - என்ற சொல்லை நுணுகி ஆராயும் போது பல செய்திகளை அறிய இயலுகிறது. இங்குக் குறிப்பிடப் பெறும் 'தேவாரம்' என்ற சொல்லிலுள்ள தே என்பது தெய்வம் என்பதனைக் குறிக்கும் ஓரெழுத்தொருமொழி; வாரம் என்பது இசையின் கூறுபாட்டினைக்குறித்து வழங்கும் சொல். முதல்நடை, வாரம், கூடை, திரள் எனும் இசையியக்க வகைப்பாட்டுள் வாரம் என்பது ஒன்று. சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் பொருந்திய பாடலாற் கடவுளைப் போற்றி வழிபடுதல் என்ற பொருளில் சிலம்பில் கையாளப் பெறுகின்றது(அரகேற்றுக்காதை- பாடல் வரி 294). தேவபாணி என்று சிலம்பு பேசும் நெறியே பின்னாளில் தேவாரமாயிற்று. இசைபாடி இறைவனைப் போற்றும் வழக்கைத் 'தேவாரம்' என்ற சொல்லால் குறித்தனர்.

அடுத்து மூவர் முதலிகள் யாத்த பதிகங்களைத் தேவாரம் எனக் குறிக்கும் மரபு சோழர்கள் காலத்திலேயே இருந்திருக்கிறது. முதல் இராசேந்திரசோழன் ஆட்சிக்காலத்தில் நாங்கூருடையான் பதஞ்சலி பிடாரன் என்பான் தேவாரநாயகம் என்று அழைக்கப் பெற்றான். பிடாரன் என்பது தேவாரம் பாடும் ஓதுவா

மூர்த்திகளைக் குறிப்பிடும் சொல்லாகும். பல்லவர்கள் காலத்திலேயே திருக்கோயில்களில் பதிகங்கள் பாடும் வழக்கு இருந்தபோதிலும் மூவர் யாத்த பதிகங்களை முறையாகக் கோயில்களில் போற்றுவதற்கு ஒரு நெறியை முதன் முதலில் வகுத்தவன் முதலாம் இராசராசனேயாவான். இப்பெருமகன் தஞ்சைக் கோயிலில் பதிகம் பாடும் பிடாரர்கள் நாற்பத்தெண்மரையும் அவர்களுக்கு இசைக் கருவிகள் இயக்க இருவரையும் அமர்த்தினான். எனவே, பிடாரன் ஒருவன் தேவார நாயகமாகச் சோழர்கள் காலத்திலேயே குறிக்கப்பெறுவதால் மூவர் யாத்த பதிகங்களுக்குத் தேவாரம் என்ற சொல் வழக்கில் இருந்திருக்க வேண்டும். இதனைப் பிற்காலச் சோழர்களின் பல கல்வெட்டுகள் வலியுறுத்துகின்றன.

தேவாரம் என்பது ஆன்மார்த்த மூர்த்தியைத் தனது இல்லிலோ, மன்னர்தம் கோயிலிலோ (அரண்மனை) பூசை செய்யும் இடமாகவும் கூறுவதுண்டு. 'திருமாளிகைத் தேவாரத்தில்' என்பது போன்ற கல்லெழுத்து வரிகள் வாயிலாக இடம் என்ற பொருளிலும் கையாளப் பெற்றமையை அறிய முடிகிறது.

அடுத்து இங்குக் குறிப்பிடப்பெறும் இராசராசன் படிமத்தைத் தென்னவன் மூவேந்தவேளான் செய்தளித்தபோதே அவனால் அளிக்கப்பெற்ற மெய்ப்பொருள்நாயனார் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு "தத்தா நமரேகாண் என்கின்றாராக மிலாடுடையார் பிரதிமம்" - என்று கூறுகின்றது. தன்னைத் தாக்கிய முத்தநாதனைக் கொல்லவந்த தத்தன் என்ற மெய்க் காவலனைத் "தத்தா நமரேகாண்" என்று கூறிய வண்ணம் தடுக்கும் நிலையில் உள்ளதே இப்படிமம். இதே சொல்லாட்சியுடன் கூடிய காட்சியைச் சேக்கிழாரின் பெரிய புராணத்திலும், பின்னர் தாராசுரம் சிற்பத்தொகுதியிலும் நாம் காண இயலுகிறது.

இதே போன்று இராசராசனே அளித்த திருச்சேய்ஞலூர்ப் பிள்ளையார் பற்றிப்பேசும் தஞ்சைக்கல்வெட்டு, சண்டேசரால் தாக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கும் தாதை (தந்தை) சண்டேசருக்கு இறைவன் மலர் சுற்றும் காட்சி ஆகியவை பற்றி விரிவாகப் பேசுகிறது. எனவே மேலே குறிப்பிட்டுள்ள மிலாடுடையார் கதை, சண்டேசர் கதை ஆகியவற்றை ஒரு காட்சித்தொகுதியாகவே அமைக்கும் நிலை (Dramatic Scene) இராசராசன் காலத்தில் தான் முதன் முதல் இடம் பெறுகிறது.

இவ்விரண்டு காட்சிகளையும் இராசராசன் படிம அமைப்பு நிலைகளையும் ஒப்பிட்டு நோக்கும் போது தம் ஆன்மார்த்த மூர்த்தமாகிய சந்திரசேகரப்பெருமான் முன்பு இராசராசனும் உலகமாதேவியாரும் நின்றுகொண்டு சைவத்திருமுறையான தேவாரப் பதிகங்களைப் பாடிக்கொண்டே போற்றும் நிலையில் உள்ள ஒரு காட்சியாகவே இப்படிமங்களையும், திருமேனியையும் தென்னவன் மூவேந்தவேளான் செய்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. தமிழ்பாடி இறைவனைப் போற்றும் நிலையில் இங்கு மாமன்னனும் தேவியும் திகழ்கின்றனர்.

வரலாற்றில் ஈடிணையில்லாத அரிய கலைக் கருவூலங்களான இந்த இரண்டு படிமங்களும் இன்று தஞ்சைப் பெருங்கோயிலில் இல்லை. ஆனால் நற்பேறாக அகமதாபாத் கௌதம் சாராபாய் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுத் திகழ்கின்றன. மாமன்னனின் 'தேவாரதேவர் திருமேனி' கால வெள்ளத்தில் மறைந்துவிட்டது. கல்வெட்டுக் கூற்றுப்படி பாதாதி கேசாந்தம் ஒருமுழமே நான்கரைவிரல் உயரம் உடைய இராசராசன் படிமம் 73 செ.மீ. அளவிலும், கால் முதல் தலைவரை இருபத்தி இரண்டு விரல் இரண்டு தோரை உயரமுடைய உலகமாதேவி படிமம் 58.5 செ.மீ. அளவிலும் இன்றும் காட்சி நல்குகின்றன.

இராசராசனின் செப்புப் படிமம் கிரீட மகுடமணிந்து தோள்களில் பாகுமாலையும் புயங்களில் கேயூரமும் கால்களில் கழல்களும், இடுப்பில் சிம்மமுகக்கடிசூத்திரமும் அணிந்து கழுத்தில் அணியும், மார்பில் நூலும் மிளிரக் கூப்பியகரங்களுடன் காணப்பெறுகின்றது. இதே போன்று உலகமாதேவியின் படிமம் அழகிய கொண்டை, நெற்றியில் சுருள் முடிகள், கழுத்தில் தாலி, மார்பில் சன்னவீரம், புயங்களில் கேயூரம், கைகளில் வளையல், கால்களில் கொலுசு, நீண்ட இடுப்பாடை ஆகியவை திகழ ஒரு கரம் உயர்ந்தும், மறு கரம் தாழ்ந்தும் உள்ளன. உயர்ந்தகரம் மலர்மாலை ஏந்துவதாகவோ தாளமிடுவதாகவோ கொள்ளலாம்.

தஞ்சைப் பெருங்கோயில் நிருவாகம் சென்ற நூற்றாண்டில் தஞ்சை மராத்திய மன்னர்களின் கீழ் இருந்தது. 1855-இல் கடைசி சிவாசியின் மறைவிற்குப் பின்பும் காமாட்சிபாய் சாகேப்பின் காலத்திற்குப் பிறகும் தஞ்சை அரசுரிமை பற்றி மராத்தியக் குடும்பங்களுக்கிடையே பலத்த போட்டியும், குழப்பங்களும் ஏற்பட்டன. கடுமையான குழப்பங்கள் நிகழ்ந்த சூழலில் 1912-இதற்குப் பிறகு சொத்துகள் பற்றிய வழக்குகள் நீதிமன்றங்கள்

வரை சென்றன. மேலே குறிப்பிடப்பட்ட இக்காலக்கட்டத்தில் பல கோயில் உடைமைகள் கை மாறலாயின. அப்போது இராசராசனின் படிமமும் உலகமாதேவியின் படிமமும் கோயிலிலிருந்து இடம் பெயர்ந்து இறுதியாக அகமதாபாத் கௌதம் சாராபாய் அருங்காட்சியகத்தை அடைந்தன. இதே காலக்கட்டத்தில் இராசராசனின் சிலையை ஒத்த சிலை ஒன்று, பீடத்தில் "பெரிய கோயில் இராசா ராஜேந்திர சோளராசா" என்ற அண்மைக்காலப் பொறிப்போடு இத்திருக்கோயிலில் இடம் பெறலாயிற்று. இப்படிமமே தற்போது இராசராசன் என்ற பெயரில் விழாக்களின் போது போற்றப் பெறுகின்றது.

தஞ்சைப் பெருங்கோயில் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் உள்ள பிறிதோர் கல்வெட்டில் 'ஸ்ரீகார்யம் பொய்கைநாடு கிழவன் தென்னவன் மூவேந்தவேளான் இராஜேந்திரசோழரின் மூன்றுவது ஆட்சியாண்டில், முன்னர் தான் எழுந்தருளுவித்த பெரிய பெருமாளுக்குத் (இராசராஜனுக்கு) தராநிலை விளக்கு ஒன்று இருப்பு நாராசம் உட்பட நிறை நூற்றிருபதின் பலத்திலும், வெண்கல மடல் ஒன்று நான்கு பலத்திலும்' அளித்ததாகக் குறிப்பிடுகின்றது. இக்கொடை நல்கியது கி.பி. 1014-இல் ஆகும். இது இராசராசசோழன் இறந்த ஆண்டாகும். இக்கல்வெட்டு பெரிய பெருமாளான இராசராசன் பற்றியே பேசுகிறது. இங்கு உலகமாதேவியைப்பற்றியோ தேவாரதேவரானசந்திரசேகரதேவர் பற்றியோ குறிப்புகள் இல்லை. இதே ஆண்டிலும் பின்பும் உலக மாதேவி உயிருடன் திகழ்ந்தார் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல உள்ளன. எனவே, தெய்வநிலை அடைந்த தம் மன்னரின் படிமத்திற்கு முன்பு மூவேந்த வேளான் நிலை விளக்கு ஒன்றும் திருநீற்றுமடல் ஒன்றும் வைத்து, தெய்வமாகப் போற்றும் நெறியை இங்குக்காண இயலுகிறது.

உயிருடன் இருக்கும் போது தெய்வத்தை இசைபாடி வணங்குகின்றாராகப் போற்றப் பெற்ற இராசராசனின் படிமம், இறப்பிற்குப் பிறகு தெய்வமாகப் போற்றப்பெறும் தமிழகத்துப் பண்புநலனை இங்குக்காண்கிறோம். இதே திருக்கோயிலின் தென்புறப் பட்டிகையில் காணப்பெறும் பிறிதோர் கல்வெட்டு இராசராசனின் தமக்கையான குந்தவையார் தமது தந்தையான சுந்தரசோழருக்குப் 'பொன்மாளிகை துஞ்சின தேவராக' ஒரு திருமேனியும், தம் தாய் வானவன்மாதேவியாருக்கு ஒரு திருமேனியும் எடுத்து வழிபாட்டுக்கு நிவந்தங்களும் அளித்துப் பூசித்ததைக் குறிப்பிடுகின்றது. இங்குப் படிமம் என்று கூறாமல்

திருமேனி என்று கூறப்பட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது. இராசராசனின் குரு அவருடைய குருவுக்குப் படிமம் எடுத்தமையையும் கல்வெட்டு குறிக்கின்றது.

## ஓவியங்களில் இராசராசன்

தஞ்சைப் பெருங்கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ள 'அந்தராளம்' எனும் சுற்று அறையில் மாமன்னன் இராசராசன் காலத்திய ஓவியப் படைப்புகள் இடம் பெற்றுள்ளன. புராணக் காட்சிகளுடன் கூடிய இறையுருவங்கள், சுந்தரர் கதை முதலான படைப்புகளுடன் இராசராசனின் ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன. இதுவரை இவ்வோவியங்களைப் பற்றி ஆராய்ந்த பலர் ஒரு குறிப்பிட்ட ஓவியத் தொகுதியில் உள்ள இரண்டு உருவங்களை இராசராசன் மற்றும் கருவூர்த்தேவர் என்று குறிப்பிட்டு வந்தனர். இது முற்றிலும் தவறான கருத்தாகும்.

ஓவியக் கூடத்தின் மேற்குப் பகுதியில் எதிர் எதிராக உள்ள இரண்டு சுவர்களிலும் மிக எழில் வாய்ந்த படைப்புகள் இடம் பெற்றுள்ளன. ஒன்று தில்லைப் பொன்னம்பலத்தில் இராசராசனும் அவனது தேவிமார் மூவரும் நின்று ஆடவல்லானை வணங்கும் தோற்றமாகும். மிக எளிய அடியானாக எடுப்பான மீசை, குறைந்த தாடியுடன் மன்னவன் வணங்கி நிற்க, அருகிருக்கும் தேவியர்கள் அழகுப் பதுமைகளாகக் காட்சி நல்குகின்றனர்.

இவ்வோவியப் பகுதிக்கு எதிர்ப்புறச்சுவரில் உள்ள ஓவியங்கள் இதுவரை ஆராயப் படாமல் இருந்தன. இத்தொகுதியில் மாமன்னன் இராசராசன் தஞ்சை இறைவன் (சிவலிங்கம்) முன்பு அமர்ந்த வண்ணம் வணங்குகின்ற எழிற் கோலம் இடம் பெற்றுள்ளது. இதே தொகுதியில் இம் மன்னனின் மனைவியர் அனைவரது ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன. இங்குக் காணப்பெறும் நுண்படத்தொகுதிகள்கூட இராசராசன் காலத்து அலுவலர்கள் பலரைத் தெளிவாகக் காட்டுகின்றன.

### கருவூராரும் இராசராசனும் ?

தஞ்சை ஓவியக்கூடத்தின் வடமேற்கு மூலையில் உள்ள ஓர் ஓவியத்தொகுப்பில் நால்வர் உருவங்கள் வண்ணப்பொலிவோடு திகழ்கின்றன. மேலே இருவர் உருவங்களும் அவற்றுக்குக் கீழே இருவர் உருவங்களும் திகழ்கின்றன. இதுவரை இத்

தொகுப்பினைக் கண்ட வல்லுநர்கள் பலர் கீழ் இரண்டு உருவங்களை மட்டுமே அடையாளங் காண முற்பட்டனரே தவிர, இத்தொகுதி முழுவதையுமோ, மேல் இருக்கும் இருவர் உருவங்களையுமோ ஆராய முற்படவில்லை.



தஞ்சை ஓவியம்:
இராசராசனும் கருவூர்த்தேவரும் (?)

கீழ் இரண்டு உருவங்களைக் கருவூர்த் தேவராகவும் இராசராசனாகவும் ஏற்றுக்கொண்டு பல வெளியிடுகளைப் பதிப்பித்துள்ளனர்.[6] இக்கருத்து ஏற்புடையதாக அமையவில்லை இத்தொகுதியில் காணப்பெறும் நால்வரில் மூவர் உருவங்கள் எல்லா அமிசங்களாலும் ஒத்துக் காணப்பெறுகின்றன. உருவ அமைதி, எழிற்கோலம், மலரொன்றேந்திச் சின்முத்திரை காட்டும் நிலை, கமண்டலம் ஏந்தியமை, நரைத்த தாடி மீசைகள் உள்ளமை ஆகிய காரணங்களால் மூவரும் முனிபுங்கவராய்த் திகழ்கின்றனர். நாலாமவர் உருவம் தாடி மீசையின்றி இளமைக் கோலத்துடன்

காணப்பட்டாலும் ஆடைகள், சடாமுடி, கழுத்தணி மலருடன் சின்முத்திரைகாட்டும் கோலம், மார்பில் வலத்தோளிலிருந்து இடப்புறம் செல்லும் வெண்துகிலனைய யக்ஞோபவிதம் (புரிநூல்) அல்லது யோகபட்டம் இடுப்பாடை ஆகிய அனைத்தும் இம்மூன்று உருவங்களோடு ஒத்தே உள்ளன.

இந்நால்வர் ஓவியங்களையும் சனகாதி முனிவர்களான சநகர், சநந்தனர், சநாதனர், சனத்குமாரர் எனக்கொள்வது பொருத்தமுடையது. 'மூர்த்தி தியானம்' என்னும் வடமொழிச் சுவடி நூலொன்றில்[7] சனகாதி முனிவர்கள் பற்றிக் குறிப்பிடும் தியான சுலோகங்களில் சநகர் என்பவர் மட்டும் தாடி மீசைகள் இன்றி, பால வடிவுடன் இருப்பவராகவும் ('சுத்த ஸ்படிக ஸங்காசம் வந்தேஹம் பாலரூபிணம்'), மற்ற மூவரும் தாடிமீசைகளுடன் திகழ்பவர்களாகவும் 'ஜடாகூர்ச்சதரம்', 'ஜடா மண்டல ஸம்யுக்தம் லம்ப கூர்ச்சம்', 'தீர்க்க கூர்ச்சம்' - என்றெல்லாம் விவரிக்கப்படுகின்றது. மேலும் நான்கு முனிவர்களும் ஞான முத்திரையுடன் தவக்கோலத்தினராய் இருப்பதும் கூறப்படுகின்றது. இவை அனைத்தும் இங்கு ஓவியத்தில் திகழும் நால்வருடன் முழுவதும் ஒத்துக்காணப்பெறுகின்றன.

அடுத்து, இத்திருக்கோயிலின் கருவறையின் தென்புற மாடத்தில் முன்பு ஆலமர் செல்வர் மற்றும் சனகாதி முனிவர்களின் சிற்பங்கள் (இராசராசன் காலம்) இடம் பெற்றிருந்து பின்னர் அழிவுற்றன. தற்போது இம்மாடத்தில் பின்னாளில் செய்யப்பெற்ற சிறிய ஆலமர் செல்வர் சிற்பம் (விசயநகர காலம்) இடம் பெற்றுள்ளது. பழைய சிற்பங்கள் அழிந்தபோதும் இரண்டு சனகாதிமுனிவர்கள் சிற்பங்கள் சிதையாமல் அப்படியே உள்ளன. இவை இராசராசன் காலத்தியவை. இதில் ஒருவர் சடாமகுடம், தாடி மீசைகளுடன் திகழ்கிறார். மற்றவர் சடாமகுடத்துடன் தாடி மீசையின்றிப் பால வடிவினராய்க் காணப்பெறுகின்றார். இருவரும் சின் முத்திரை காட்டும் விரல்களுக்கிடையில் மலரொன்றேந்தியுள்ளனர். இவற்றின் சிற்ப அமைதி ஓவியத்தில் காணப்பெறும் இருவருடைய உருவங்களுடன் முழுதும் ஒத்தே காணப்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, கருவூர்த்தேவர் என்பார் இராசராசன் காலத்தில் வாழ்ந்தவரா என்பது சற்று ஐயத்திற்குரியதாகும். கருவூர்த்தேவர் என்பவர்பற்றி எந்த ஒரு கல்வெட்டுக் குறிப்போ மற்றைய

வரலாற்றுச் சான்றுகளோ இதுவரை கிடைத்தில. இவர் யாத்த திருவிசைப்பா தவிர, வேறு சான்றுகள் இல்லை. கருவூரார்ப் புராணம் எனும் நூல் 15-ஆம் நூற்றாண்டில் யாக்கப்பெற்றது. இதில் குறிப்பிடப்பெறும் செய்திகள் வரலாற்றுக்கும் அறிவியலுக்கும் பொருந்தாதவை. இராசராசனது குரு, அவர்தம் அதிகாரிகள், ஊழியர்கள், திருக்கோயில் திருவாகத்தில் இடம் பெற்றிருந்த குயவர்கள் நாவிதர்கள்முதல் நானூறு ஆடல் மகளிர் வரை அனைத்துத் தரப்பினர் பெயர்களும் கல்லில் காணப்பெறும் போது, இராசராசனால் மிகவும் போற்றப்பெற்றவராகக் குறிப்பிடப்பெறும் (புராண மற்றும் செவி வழிச் செய்திகள்) கருவூரார் பற்றி மன்னனது கல்லெழுத்துக்கள் கூறாமலா இருக்கும்? எனவே, இங்குக் குறிப்பிடப்பெறும் ஓவிய நாயகர்களை இராசராசன் கருவூர்த்தேவர் எனக் கொள்வதைவிட, சநகர் மற்றும் சநந்தனர் எனக் கொள்வதே சாலப் பொருந்தும்.

பல்லவர் காலம் தொடங்கிச் சோழர்கள், விசயநகர அரசர்கள் காலம் ஈறாகக் கிடைத்துள்ள பல நூற்றுக்கணக்கான மனித உருவச் சிலைகளில் ஒன்று கூட (உயிருடன் இருக்கும் போதே எடுக்கப்பட்டதால்) சின்முத்திரையோ, அபயகரமோ காட்டும் நிலையில் எடுக்கப்பெறவில்லை என்பதனை உணர்தல் வேண்டும். ஒரு மன்னன் இறந்த பிறகு பின்னவர்காளால் அவனுக்கு எடுக்கப்பெறும் உருவங்களில் அபயகரம் காட்டுவது உண்டு(எடுத்துக்காட்டு-திருமண்டங்குடி குலோத்துங்கன் சிலை). ஆனால் தெய்வங்கள், தெய்வ நிலையில் உள்ளமுனிவர்கள் தவிர மனிதர்கள் சின்முத்திரையைச் சுட்டுவதாக உள்ள உருவங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

அடுத்து, இவ்வோவியத் தொகுதியில் காட்டப்பெற்றுள்ள சடாமகுடம் - சோழர் கால மன்னர்களின் உருவச் சிலைகளில் ஒன்றில்கூடக் காட்டப்பெறவில்லை. மேலும் தெளிந்த சான்றுகளோடு பேசப்பெறும் இராசராசனின் செப்புத் திருமேனி, கற்சிலை மற்றும் ஓவியங்களில்கூட இந்தச்சடாமகுடம் இல்லை. மற்ற இடங்களில் இராசராசனுக்குக் காட்டப்பெறும் மார்பு நூலும் இங்குள்ள நூலும் முற்றிலும் மாறுபட்டவை. இடத் தோளிலிருந்து வலப்புறம் செல்லும் மார்புநூல் இங்கு மாறாக நால்வருக்கும் வலத்தோளிலிருந்து இடப்புறம் செல்வதும் நோக்குதற்குரியது. கமண்டலங்கள் ஏந்திய இந்த நால்வரையும் முனிபுங்கவர்களாகத்தான் கொள்ளல் வேண்டும்.

## சிற்பங்களில் இராசராசன்

1) திருவியலூரில் . . . . .

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திற் கருகிலுள்ள திருவியலூர் அருள்மிகு சிவயோகீசுவரர் திருக்கோயில் இராசராசனது வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்புடைய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் இம் மாமன்னன் தன் இறுதிக் காலத்தில் வரலாற்றுச் சிறப்புடைய 'துலாபாரமும்' இரணியகர்ப்பமும் செய்தான். இதற்கு இவனது தேவியான உலகமாதேவியும் துணை நின்றாள். தன் எடைக்கு எடை தங்கத்தை (துலாக் கோலில் அமர்ந்து) நிறுத்து, திருவியலூர்ப்பெருமான் முன்பு பல அறக்கொடைகள் நல்கினான். அதே சமயம் இவனது தேவியான உலகமாதேவி இரணிய கர்ப்பம் ஏறினாள். தங்கத்தால் செய்த பசுவின் கர்ப்பத்தில் (வயிற்றில்) புகுந்து வெளிவந்து, பின்பு அப்பொன்னால் அறக்கொடைகள் நல்குதலே இரணிய கர்ப்பமாகும். இதனைத் திருவியலூர் (திருவிசலூர்) கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன.[8]

இவ்வாறு திருவியலூரில் துலாபாரம், ஏம கர்ப்ப அறக் கொடைகள் நல்கிய பின்பு மீதம் இருந்த பொன்னால் இம்மா மன்னன் தங்கத்தாமரை மலர்களைச் செய்து, அவற்றைத் திருவலஞ்சுழி சேத்திரபாலர் திருவடி முன் இட்டு அட்டித் திருவடி தொழுதான் என்று வலஞ்சுழிக் கல்வெட்டுகள் பேசுகின்றன.

இத்தனைச் சிறப்புகள் வாய்ந்தது திருவியலூர்த் திருக் கோயிலாகும். இதன் கருவறை இராசராசனால் கற்றளியாகக் கட்டப்பட்டது. இதன் தென்புறச் சுவரில் சிவலிங்கம் ஒன்றை வழிபடும் நிலையில் இராசராசன் மற்றும் அவனது தேவியான உலகமாதேவி ஆகியோருடைய படிமங்கள் இடம்பெற்றிருந்தன. பின்னாளில் இக்கல் இயற்கையாகச் சிதைந்து உருவங்கள் தெளிவில்லாமல் போயின.



இராசராசனும் தேவியும் - திருவியலூர் திருக்கோயில்

பின்னாளில் இத்திருக்கோயிலைப் புதுப்பித்த அறவுளம் கொண்டோர் இப்படிமத்தின் பெருமையறிந்து சிதைந்த சிற்பத்தினை ஒத்த நகலாகப் புதிய சிற்பங்களைத் தென்புறத் திருச்சுற்றில் இடம்பெறச் செய்தனர். இதில் மாலை இடப்பட்ட ஓர் இலிங்கமும் அதன் முன்பு முக்காலியின் மேல் வலம்புரிச்சங்கும் உள்ளன. இலிங்கத் திருமேனியை இடுப்பில் அரையாடையும் தலையில் கொண்டையும் எடுப்பான மீசைகளும் திகழ மாமன்னன் இராசராசனின் வணங்கும் கோலப் படிமமும், அருகே அழகிய ஆடையும் காதில் குண்டலங்களும் எழில் செய்யும் கொண்டையும் திகழ, உலகமாதேவியின் படிமமும் காணப்படுகின்றன.

2) கோவிந்த புத்தூரில் . . . . .

திருச்சி மாவட்டம் கோவிந்தபுத்தூரில் உள்ள கங்காசடேசுவரர் திருக்கோயிலின் உட்சுற்றில் ஒரு கற்படிமம் உள்ளது. இக்கோயில் இராசராசப் பெருந்தகையால் ஆக்கம் பெற்றது என்பதனை இத்திருக்கோயில் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. இப்படிமத்தை ஆராய்ந்த திரு பி. இலட். பட்டாபிராமன் அவர்கள் இதனை இராசராசத் தேவரின் படிமமாகக் குறித்துள்ளார்.[9]

நின்ற நிலையில் தாடி, மீசைகளுடன் வணங்கும் திருக்கோலத்திலுள்ளது இப்படிமம். இப்படிமத்தின் தோற்றமும், தஞ்சை ஓவியத்திலுள்ள இராசராசனின் உருவமும் (தில்லையில் தேவியருடன் வணங்கும் கோலம்) ஒத்துள்ளன.

3) திருநாரையூரில் . . . . .

சிதம்பரம் வட்டம், திருநாரையூர் எனும் ஊர் தேவாரத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி பிறந்த ஊராகும். இவர் பதினோராந் திருமுறையாசிரியர்களுள் ஒருவர். இராசராச சோழனின் விருப்பத்திற்கிணங்க ஏழு திருமுறைகளாகத் தேவாரப் பாடல்களைத் தொகுத்தவர் இவரே. இத்தகைய சமய இலக்கியப் பணிகளின் காரணமாக இராசராசப் பெருந்தகைக்கும் திருநாரையூருக்கும் அதிகத் தொடர்பு உண்டாயிற்று. திருநாரையூர் சௌந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு இம்மன்னன் செய்த பணிகள் பற்றிப் பல கல்வெட்டுகள் விவரிக்கின்றன.

இத்திருக்கோயிலில் உள்ள ஒரு கற்படிமத்தையும், ஒரு செப்புத் திருமேனியையும் இராசராசசோழனின் சிலைகளாக

திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், திரு பட்டாபிராமன் ஆகியோர் தம் நூல்களில் குறித்துள்ளனர். இவ்விரண்டு சிலைகளுமே நின்ற கோலத்தில் வலக் கரம் செண்டு ஏந்தியும், இடக்கரம் ரிஷபாந்தகரின் கரம் போன்றும், மகுடம் தரித்தும் காணப்படுகின்றன. இச்சிலைகள் சுந்தரர் அல்லது இராச கோபாலன் சிலைகளைப் போல் உள்ளன.

4) விளநகரில் .....

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், விளநகர் அருள்மிகு துறைக்காட்டு வள்ளலார் திருக்கோயில் சோழப் பெருமன்னர்கள் காலத்தில் சிறந்து திகழ்ந்த ஒன்று. தற்போது திகழும் இக்கோயிலைத் தஞ்சை நாயக்க மன்னன் அச்சுதப்ப நாயக்கன் முற்றிலுமாகப் புதுப்பித்தான். இதனால் பழைய கல்வெட்டுகள் அழிந்தன. அப்படி அழிந்த கல்வெட்டுகளில் ஒரு சில துண்டுகள் இன்று எஞ்சி இத்திருக்கோயிலில் ஆங்காங்கே துண்டுக் கல்வெட்டுகளாய் உள்ளன. அவற்றில் இராசராசன் காலத்திய சாசனங்கள் சில உள்ளன.

இத்திருக்கோயிலின் திருச்சுற்றிலுள்ள மண்டபம் ஒன்றில் சோழர் கால உருவச்சிலை ஒன்று உள்ளது. இது கலைப் பாணியால் இராசராசன் கால அமைதியுடன் திகழ்கிறது. மேலும் இம்மன்னனின் மற்றச் சிலைகளை இதனுடன் ஒப்பிடும் போது இதனை இராசராசனின் படிமமாகவே ஏற்றுக் கொள்ளலாம்.

## குறிப்புகள்

1) S.I.I. Vol. II. No : 26
2) திருக்கோயிலூர் கல்வெட்டுப் பாடல் - தொல்லியல் துறை வெளியீடு.
3) தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் - முனைவர் இரா. நாகசாமி, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
4) S.I.I. Vol. II. No : 40
5) No. 97. ARE 1932
6) Middle Chola Temples, S.R. Balasubramaniam.
7) மூர்த்தி தியானம்-சரஸ்வதி மகால் வெளியீடு பக்கம் 112-115
8) Middle Chola Temples, S.R. Balasubramaniam
9) Prof. K.A. Nilakanta Sastri - Falicitation volume. Page 467

# முதலாம் இராசேந்திர சோழன்

**(கி.பி. 1012 - 1044)**

'பூர்வதேசமும் கங்கையும் கடாரமுங் கொண்ட கோப்பர-கேசரிவர்மன்' எனக் கல்வெட்டுகளால் புகழப்படுபவன் முதலாம் இராசேந்திர சோழன். இவன் இராசராச சோழனுக்குத் திரிபுவனமாதேவி என்ற பெயர் பெற்ற சேரர்குலப் பெண் வானவன்மாதேவியாரின் வயிற்றில் உதித்தவன்.[1] மார்கழித் திருவாதிரையில் பிறந்து சிறப்பெய்தியவன். இவனது இயற்பெயர் மதுராந்தகன் என்பதாகும். கி.பி. 1012 - இல் இளவரசாக முடிசூடியபோது அபிடேகப் பெயராக இராசேந்திரன் என்ற பெயரைக் கொண்டான். கி.பி. 1016 வரை தன் தந்தையுடன் இணைந்து ஆட்சி புரிந்தான்.[2] இவன் கங்கைகொண்ட சோழன், மும்முடிச்சோழன், உத்தமசோழன், பண்டிதசோழன், வீரசோழன், பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட ஐயன் என்ற பட்டப் பெயர்களைச் சூடியவன்.

'வடதிசை கங்கையும், தென்திசை ஈழமும், குடதிசை மகோதையும், குணதிசை கடாரமும்' இம்மன்னனது நாட்டின் எல்லைகளாகக் குறிக்கப்படுகின்றன. இவன் இளங்கோவாக இருந்தபோதே சுமார் ஒன்பது இலட்சம் வீரர்களுக்குத் தலைமை தாங்கி வடக்கே பீசப்பூர் வரை படையெடுத்து வெற்றிவாகை சூடி சாளுக்கியரை வென்ற புகழாளன். இராசராசன் காலத்தில் வேங்கி மண்டலத்தையும் கங்க மண்டலத்தையும் காத்து நின்றவன். பதின்மூன்றே ஆண்டுகளில் இந்திய நாட்டின் பல பகுதிகளை வென்றதோடு கடல் கடந்து பல கீழ்த்திசை நாடு களையும் தன் அடிமைப்படுத்தி சோழர் தம் கொடியைப் பறக்க விட்ட மாபெரும் சோழப் பேரரசனும் இவனே.

இவ்வாறு தனது பெரு வீரத்தாலும், தன் ஆற்றலாலும் தமிழக வரலாற்றில் அழியா இடம் பெற்ற மாமன்னன் இராசந்திரசோழனின் கல்லுருவச் சிலைகள் மூன்றும், பிற்காலச் (மராத்தியர் காலம்) செப்புத்திருமேனி ஒன்றும் கிடைத்துள்ளன.

இவை திருவாரூர்த்திருக்கோயிலில் பரவை நங்கை எனும் நல்லாளுடனும், மானம்பாடியில் (சோழபுரம்) இவனது தேவி-யுடனும், கோலாரில் இம்மன்னன்மட்டும் உள்ள உருவச்சிலை களும் தஞ்சைப்பெருங்கோயிலில் உள்ள ஒரு செப்புத்திருமேனி யுமாகும்.

## ஆரூரில் இராசேந்திரன்-பரவைநங்கை

கங்கை முதல் கடாரம் வரை வென்ற இம்மாமன்னனின் உளம் கவர்ந்த காதலியாய்த் திகழ்ந்து தனது இறைப்பற்றால் ஆரூர்க் கோயிலின் வரலாற்றில் ஓர் அழியா இடம் பெற்று, (பல கல்வெட்டுகளில்) தெய்வமும் ஆன பரவைநங்கையைப் பற்றித் தமிழகம் அறிந்தது குறைவே. ஒரு பட்டத்தரசிக்குக் கூடக் கிடைக்காத சிறப்புக்களைப் பெற்று, மாமன்னனின் புதல்வர்களாலேயே சிலை எடுத்துத் தெய்வமாக வணங்கும் பேறு பெற்ற, இந்தப் பரவை நல்லாளின் வரலாற்றை அறிவது தமிழ் வரலாறு அறியத் துடிக்கும் அனைவரின் கடமையுமாகும்.

## இராசேந்திரன் பரவை-தொண்டு

கி.பி. 1012-1044 வரை செங்கோலோச்சிய இம்மன்னனின் இதயச் சுடராய்த் திகழ்ந்தவள் ஆரூர்க் கோயிலில் பணிபுரிந்த ஆடலரசி நக்கன் பரவை நங்கையே. பரவை நங்கையின் அழகும் அவளது தூய இறைத் தொண்டுமே இம் மன்னனை மிகவும் கவரச் செய்திருக்க வேண்டும்....! தான் விரும்பியதை யெல்லாம் உலகாளும் இம் மன்னவன் செய்யத் தயாராய் இருந்த நிலையில் இத்தேவி சாதித்துக் கொண்டதெல்லாம் தனக்கென்று ஒன்றுமே இல்லை. அத்தனையும் ஆரூர் எம்மான் - வீதி விடங்கனுக்கே ஆகும். இராசேந்திரன் காலம் வரையில் செங்கற்கோயிலாய் இருந்த தியாகேசனின் திருக்கோயிலைக் கருங்கற் கோயிலாக (கற்றளியாக) மாற்றச் செய்த பெருமை இந்நங்கை நல்லாளையே சாரும். இத்தேவியின் விருப்பப்படி மாமன்னன் தனது 16 - ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1028 - இல்) துவங்கி 18 - ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1030 - இல்) கற்கோயிலாகக் கட்டி முடித்தான். இதனை அவனது சாசனமே சான்று பகர்கின்றது.[3]

கற்கோயிலாக எடுத்தது மட்டும் பரவை நங்கைக்கு நிறைவளிக்கவில்லை. வீதி விடங்கனின் கருவறையின் வெளிப்புறம் தொடங்கி உபானாதி தூபி வரையும், உட்புறம் முழுவதும் பொன் தகடுகளால் போர்த்தவும் செய்தாள். இது மட்டுமன்றி முன்புற மகாமண்டபத்தின் விதானம், தூண்கள் அத்தனையும் செப்புத் தகடுகள் போர்த்தி அணி செய்தாள். இதற்கெனச் செலவிடப்பட்ட பொன் 20643 கழஞ்சுகள் என்றும், செம்பு 42000 பலம் என்றும் கல்வெட்டு விவரிக்கின்றது. இப்பணி இம்மன்னனின் 18-ஆம் ஆட்சியாண்டின் 38-ஆம் நாளில் துவங்கி 199-ஆம் நாளில் நிறைவெய்தியதாகவும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[4]

ஆரூரன் திருக்கோயிலுக்குப் பொன் வேய்ந்த மாமன்னன் இராசேந்திரனும் - பரவை நங்கையும் கி.பி. 1030 -இல் ஆரூர் வீதியில் தேரில் பவனி வந்து இறைவன் முன்பு நின்றனர். இப்பெண்ணரசியும் இராசேந்திர சோழனும் ஆரூர் இறைவனைத் தரிசித்தனர். பின்பு அவர்கள் இருவரும் நின்று ஆரூரனை வணங்கிய புனித இடத்தில் ஒரு குத்து விளக்கை ஞாபகச் சின்னமாக ஏற்றினான் இம்மன்னவன். பட்டத்தரசிக்குக் கூடக் கிடைக்காத ஒரு சிறப்பைப் பரவை நங்கை பெற்றாள். இதனை இம்மன்னவனின் கல்வெட்டு,

"உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அனுக்கியார் பரவை நங்கையாரும் நிற்குமிடத் தெரியும் குத்துவிளக்கொன்றும்" என விவரிக்கின்றது. இப்பரவை நல்லாளிடம் கொண்ட காதலால் - பாசத்தால் இந்நங்கையின் பேரில் ஓர் ஊருக்குப் பரவைபுரம் எனப் பெயரிட்டு, அங்குப் 'பரவையீசுவரம்' என்ற கோயிலையும் கட்டுவித்துப் பெருமை சேர்த்தான் இம்மன்னர் மன்னவன்.

## நங்கையவள் நற்றொண்டு

தனக்கென வாழாது ஆரூரானின் திருத்தொண்டே தன் வாழ்வின் பெரும் பேறாகக் கருதிய இத்தேவி, ஆரூர் இறைவனுக்குச் செய்தளித்த அணிகலன்கள், நிலங்கள் இவற்றின் பட்டியலையும், மாமன்னர்கள் பலரும் செய்தளித்த பட்டியலையும் ஒப்பிடும் போது இத்தேவியின் பங்குதான் மிகுந்து நிற்பது வியப்பிற்குரிய ஒன்று. திருக்கோயில் திருப்பணிகளாலேயே வணங்குதற்குரிய பெருமை பெற்ற சோழப் பேரரசியான செம்பியன்மாதேவியாரை இங்கு நினைவுகூரத்தகும் அளவிற்குப்

பரவை நங்கையின் தொண்டு அமைந்தது நோக்குதற்குரிய தாகும்.

இந்நங்கை நல்லாள் அளித்த அறக்கொடைகளுள் குறிப்பிடத்தக்கவை 15,579 பலம் எடையுள்ள 28 மாபெரும் குத்துவிளக்குகள் (1) பச்சைப் பரவை உமை நங்கை (2) பரவை சரியாமுலை நங்கை எனப் பெயரிடப்பட்ட இரண்டு பரவை விளக்குகள்; பல ஆயிரக்கணக்கான கழஞ்சு எடையுள்ள பொன்னாபரணங்கள்; 428 உயர் முத்துகள்; 7 சிவப்புக்கற்கள் 86 வைரங்கள; இன்னும் கணக்கிலடங்கா அணிகலன்கள்...! எண்ணற்ற ஊர்கள்...! நிலங்கள்...! ஆகியவையாகும்.

'இராசேந்திர சோழன் -- திருமண்டபம்' என ஒரு மண்டபத்தை ஆரூர்த் திருக்கோயிலினுள் இராசாதிராசனின் உதவியுடன் கட்டுவித்து அம்மண்டபத்தின் மேற்பார்வைக்கும் மற்றப் பணிகளுக்குமாகத் தீபங்குடி, மேல்மங்கலம் முதலான ஊர்களையும் அளித்துச் சிறப்பெய்தினாள்.

## இராசேந்திரன் - பரவைநங்கை படிமம்

தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் அருகிலுள்ள பனையவரம் என்று தற்போது அழைக்கப்படும் ஊரே மாமன்னன் இராசேந்திர சோழனால் பரவை நங்கையின் பெயரில் 'பரவை புரம்' என நிறுவப்பெற்ற ஊராகும். இவ்வூரிலுள்ள பரவை ஈசுவரம் எனும் திருக்கோயிலும் ஆரூர்ப் பரவை நங்கையின் பெயரில் எடுக்கப்பட்டதாகும்.[5] இத்திருக்கோயிலில் பரவை நங்கைக்கும் இராசந்திர சோழனுக்கும் படிமம் எடுத்து நிலங்கள் அளித்து வணங்கியதாக இராசேந்திர சோழனின் புதல்வர்களான இராசாதிராசனும், இரண்டாம் இராசேந்திரனும் கூறுவதைப் பனையவரம் சாசனங்களில் காணலாம்.[6]

மாமன்னன் மற்றும் பரவை நங்கையின் மறைவிற்குப் பிறகு நங்கை பரவை வாழ்ந்த ஆரூர்த் திருக்கோயிலில் மாமன்னன் இராசேந்திர சோழனுடன் திகழும் பரவை நங்கையின் கற்படிமம் எடுக்கப்பட்டுத் தினசரி பூசைகள் செய்வதற்கு இராசேந்திர சோழனின் மகனான இராசாதிராசன் நிலங்களை அளித்து வழி பட்டான் என்ற செய்தியை இன்றும் ஆரூர்க் கல்வெட்டில் காணலாம்.[7] தனது தாயாகவோ மன்னனது தேவியாகவோ திகழாத ஒரு சாதாரணப் பணிப் பெண்ணிற்கு மன்னனுடன் தெய்வாம்சம் அளிக்கப்பட்டது, ஒரு சோழ அரசனாலேயே

(மன்னனின் மகன்) தெய்வமாக வணங்கப்பட்டதென்றால் அப் பரவை நல்லாளின் பெருமையும், தொண்டும், தியாகமும், தூய் மையும் சாதாரண ஒன்றா ?

இத்தனைப் பெருமைகளும் கொண்ட பரவைநங்கை - இராசேந்திர சோழனின் கற்சிலை இதுவரை இருக்குமிடம் தெரியாமல் இருந்தது. எமது 'ஆரூர்த் திருக்கோயில்' ஆய்வின் போது, இரண்டாம் திருச்சுற்று வடமேற்கு மூலையில் உள்ள அனந்தேசம் என்னும் கோயிலில் ஒரு மாடத்தில் அழுக்கடைந்து, பொலிவிழந்து மறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.[8] வரலாற்றுச் சிறப்புடைய இப்படிமம் தற்போது தூய்மை செய்யப்பெற்றுள்ளது.



இராசேந்திரனும் பரவைநங்கையும்-திருவாரூர்த் திருக்கோயில்

தலையில் கிரீட மகுடமும், இடுப்பில் ஆடையும் மார்பில் அணிகலன்களும் திகழ மாமன்னனின் உருவச்சிலையும், அருகே அழகிய கொண்டை திகழ எழில் கொஞ்சும் உடையலங்காரங் களுடன் பரவைநங்கையின் உருவமும் ஒரே கற்பலகையில் செதுக்கப்பட்டுள்ளன. இருவருமே ஆரூரனை வணங்கும் கோலத்தில் காணப்படுகின்றனர். இச்சிற்பம் சுமார் 2½ அடி உயரமுடையதாகும்,

(2) மானம்பாடியில் இராசேந்திரன்

கும்பகோணம் - திருப்பனந்தாள் பெருவழியில் சோழ புரத்தை ஒட்டி மானம்பாடி எனும் சிற்றூர் ஒன்றுள்ளது. இங்குள்ள சிவாலயம் இராசேந்திரனின் பணியாகும். இத்திருக்கோயில், இராசேந்திரனின் பிறிதோர் படைப்பான பழையாறை பஞ்சவன் மாதேவீச்சரத்தினை ஒத்தே காணப்படுகிறது. இவ் வழகிய கற்றளியில் தென்புறத்தில் நடராசப் பெருமானின் தேவகோஷ்டம் ஒன்றுள்ளது. இக் கோஷ்டத்தை ஒட்டிய சுவரில் மாமன்னன் இராசேந்திர சோழனும், அவனது தேவியும் மற்றும் சுற்றத்தாரும் ஆடவல்லானை வணங்கும் கோலத்தில் காட்சி நல்குகின்றனர்.

(3) கோலாரில் உள்ள படிமம்

முதலாம் இராசராசனின் திருமந்திர ஓலை நாயகமாகவும் தானைத் தளபதியாகவும் பணிபுரிந்தவன் கிருட்டிணன் இராமன் எனும் மும்முடிச் சோழ பிரம்மமாராயன் ஆவான். இவன் தஞ்சைப் பெருங்கோயிலின் திருச்சுற்று மாளிகையை எடுப்பித் தான். இதனைத் தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டு "உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருள இத் திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான் ஸேநாபதி சோழமண்டலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு அமண்குடியான கேரளாந்தக சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீ கிருஷ்ணன் இராமனை மும்முடிச் சோழ பிரம்ம மாராயன்" - என்று கூறுகிறது.

இம் மும்முடிச்சோழ பிரம்மமாராயன் இராசேந்திர சோழனிடத்திலும் தானைத் தளபதியாகவும் பணிபுரிந்தவன். இவனது மகன் கொற்றன் அருள்மொழி என்பவனாவான். இவனும் தன் தந்தையைப் போன்றே சேனாபதி பதவியை வகித்தான். இராசேந்திர சோழனின் ஆணையின்படி மைசூர் மாநிலக் கோலார் எனும் ஊரில் 'கோலாரம்மா கோயில்' என்று இந்நாளில் குறிப்பிடப்பெறும் பிடாரிக் கோயிலைக் கட்டி, பல நிவந்தங்களையும் அளித்தான். இத்திருக்கோயில் மகா மண்டபத்தில் முதலாம் இராசேந்திர சோழனின் உருவச்சிலை இடம் பெற்றுள்ளதாகத் திரு பட்டாபிராமனின் குறிப்புகள்

### (4) தஞ்சைப் பெருங்கோயிலில் செப்புத்திருமேனி

தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ள ஒரு செப்புத்திருமேனியை முதலாம் இராசராசனெனக் கொண்டு வழிபாடுகளும், விழாக்களும் நடத்தப்பெறுகின்றன என்று முன்னர்க் கூறினோம்.

மராத்தியர் காலப் படைப்பான இந்த உருவச்சிலையின் பொறிப்பும் மராத்தியர்கள் காலத்திலேயே எழுதப்பட்டதாகும். தலையில் கிரீட மகுடமணிந்து வணங்கும் கோலத்திலுள்ள இந்தப் படிமத்தை, அதில் உள்ள பொறிப்புக்களால் இராசேந்திரசோழனின் உருவச்சிலையாகவே கொள்ளவேண்டும்.

## குறிப்புகள்

1. S. I. I. Vol. V. No : 982, Ins. 460 of 1908
2. கங்கைகொண்ட சோழபுரம் விழா மலர், 1982, பக்கம்-2.
3. A. R. E. Ins. 580 of 1919
4. Ibid
5. A. R. E. Ins. 317 cf 1917
6. A, R. E. Ins. 320 of 1917
7. A. R. E. Ins. 679 of 1919
8. "விடங்கனுக்கோர் பொற்கோயில்" - குடவாயில் பாலசுப்பிரமணியம், தினமணி சுடர் - 1982.
9. S. I. I. Vol. II, Part-III, Ins. No : 38, 38, 45
10. A.R.E. Ins.480 cf 1911
11. Prof. K,A, Nilakanta Sastri, Felicitaticn Volume Page 470.

# மும்முடிச் சோழப் பிரம்ம மாராயன்

சோழர்கள் வரலாற்றில் தந்தை, மகன், பேரன் ஆகிய மூன்று மன்னர்களுக்குக்கீழ் பணியாற்றிப் பெருமை சேர்த்தவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் தானைத்தளபதி. மற்றொருவர் பெரும் புலவர். இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் எனும் முப்பெரும் மன்னர்களிடமும் பணி புரிந்தவர் சேனாபதி கிருட்டிணன் இராமன் எனும் மும்முடிச்சோழப் பிரம்ம மாராயன். விக்கிரமசோழன், குலோத்துங்கன், இராசராசன் ஆகிய மூவரது அவையிலும் தமிழ் கமழச் செய்தவர் பெரும்புலவர் ஒட்டக்கூத்தர்.

கிருட்டிணன் இராமன் சோழமண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டு, வெண்ணாட்டு அமண்குடியாகிய கேரளாந்தக சதுர்வேதிமங்கலத்தில் பிறந்தவர்.[1] அமண்குடி எனும் ஊர் தற்போது (கும்பகோணத்திற்கருகில்) அம்மங்குடி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கி.பி. 1009-இல் வெட்டப்பட்ட முதல் இராசராசனின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் கிருட்டிணன் இராமன், தொடர்ந்து இராசராசனது கல்வெட்டுகளிலும், இராசேந்திரனது கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டு இறுதியாக கி.பி. 1041-இல் வெட்டப்பட்ட இராசாதிராசனின் கல்வெட்டு களிலும் குறிப்பிடப்படுகிறார். எனவே கி.பி. 985 முதல் கி.பி. 1054 வரை ஆட்சி புரிந்த இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் காலம் வரை மும்முடிச் சோழப் பிரம்ம மாராயனின் அரசியல் பணி தொடர்ந்தது என்பதை அறியலாம்.

தஞ்சைப் பெருங் கோயிலைத் தன் பெயரில் எடுத்த இராச ராசன், இத்திருக்கோயிலின் திருச்சுற்றாலையைத் தனது சேனா பதி கிருட்டிணன் இராமனைக்கொண்டு எடுக்கச் செய்தான்.

இதனை இத்திருச்சுற்றாலைத் தூண்களில் உள்ள கல்வெட்டு
"...உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருள இத்திருச்சுற்றுமாளிகை எடுப்பித்தான் ஸேநாபதி சோழமண்டலத்து உய்ய கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு அமன்குடியான கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கிருஷ்ணன் இராமனான மும்முடி சோழப் பிரமமாராயன்" - என்று
கூறுகிறது.

இவர் தஞ்சைப் பெருங்கோயில் திருச்சுற்று மாளிகையை எடுப்பித்ததோடல்லாமல் இவரது பிறந்த ஊரான அமண்குடியில் "இராசராசேச்சரம்" எனும் பெயரில் ஒரு சிவாலயமும் எடுப்பித்தார். இப்பணிகளால் இவர் எந்த அளவுக்கு இராசராசனால் மதிக்கப்பட்டார் என்பது நன்கு புலனாகும்.

கிருட்டிணன் இராமன் இராசராச தேவரின் படைத்-தலைவரான சேனாபதி பதவி மட்டுமன்றி, பெருந்தரத்து அதிகாரியான திருமந்திர ஓலைநாயகம் எனும் தலைமைச் செயலர் பதவியையும் வகித்தார் என்பதைக் கல்வெட்டுகள்[2], செப்பேடுகள்[3] வாயிலாக அறிய முடிகிறது.

இராசராசனின் தமக்கையான குந்தவையார் தாதாபுரத்தில் எடுத்த குந்தவை விண்ணகரம் எனும் திருக்கோயிலுக்குக் கிருட்டிணன் இராமன் நிருவாகப் பொறுப்பாளனாக இருந்ததைத் தாதாபுரம் கல்வெட்டு கூறுகிறது.[4] திருநாகேசுவரம், திருவெண்காடு, திருமழபாடி ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் வாயிலாக அவ்வூர்த் திருக்கோயில்களுக்குக் கிருட்டிணன் இராமன் செய்த அறப்பணிகளை அறிய முடிகிறது.

தஞ்சைப் பெருங்கோயிலில் அர்த்தநாரீசுவரர் (உமையொரு பாகன்) திருமேனி ஒன்றைச் செம்பில் செய்வித்தான். இது மூன்று கரங்களைப் பெற்றுள்ளது. இடப்புற உமையவள் பாகம் ஒரு கரம் மட்டும் உள்ளதால் இச் செப்புத் திருமேனியில், இப்பகுதி மட்டும் பித்தளை பூசப்பட்டு உள்ளது. இத்திருமேனி 'ரத்னன்யாசம்' செய்யப்பட்டு, பீடத்தில் பதிக்கப்பட்டு இருந்ததாகக் கல்வெட்டு கூறுகின்றது.[5]

"பாதாதி கேஸாந்தம் முக்காலே ஒருவிரல் உசரத்து ஈஸ்வர பாகம் இரண்டு ஸ்ரீ ஹஸ்தமும், உமாபாகம் ஒரு ஸ்ரீஹஸ்தமும், உமாபாகம் செம்பின் மேல் பித்தளை கொண்டு

பூசிக் கனமாக எழுந்தருள்வித்த அர்த்தநாரீஸ்வரர் திருமேனி ஒன்று '' - என்று கூறும் கல்வெட்டால் திருமேனிகள் வார்ப்பதில் சில புதுமையான முறைகளை (ஒரு பகுதி மட்டும் பித்தளை பூசப்படுவது) கிருட்டிணன் இராமன் செய்வித்தார் என்பது புதுமையான செய்தியாகும்.

கிருஷ்ணன் இராமன் தாம் அளித்த செப்புத் திருமேனிக்குப் பல அணிகலன்களையும் அளித்தார். 121 முத்துகள், ஏழு குறுமுத்துகள், பளிக்கு வயிரம் பதினொன்று இழைக்கப்பட்ட ஸ்ரீமுடி ஒன்று, 10 குறுமுத்து, 26 பளிக்கு வயிரம், ஏழு பொத்திகள் இழைக்கப்பட்ட திருமாலை, வீரப்பட்டம், பாகுவலையம், திருஉதரபந்தம், முப்பது பொற்பூக்கள், திருக்கைக்காறை, திருவடிக்காறை, திருப்பட்டிகை முதலான எண்ணிலா அணிகலன்களையும் அளித்துள்ள கிருட்டிணன் இராமனின் கல்வெட்டுகளை[6] நோக்கும்போது இவரது கலை உள்ளம் பற்றி அறிய முடிகிறது.

இராசராசன் காலத்தில் மும்முடிச் சோழப் பிரம்ம மாராயன் என்றும், இராசேந்திரன் காலத்தில் இராசேந்திர சோழப் பிரம்ம மாராயன் என்றும் விருதுப் பெயர்கள் சூடிய கிருட்டிணன் இராமனுக்கு, கிருட்டிணன் கௌசலை[7], சரபன் தொண்டவை[8] என்ற இரு மனைவியர் இருந்தனர். இவரது மகனான கொற்றன் அருள்மொழி எனும் உத்தம சோழப் பிரம்ம மாராயன் இராசேந்திர சோழனிடம் அதிகாரியாகப் பணிபுரிந்தான். கிருட்டிணன் இராமன் பணி ஓய்வு பெற்றதும் சீவிதமாகச் 'சென்னை நாடு' என்ற பகுதியைப் பெற்றார். கி.பி.1045-இல் இவ்வாறு அளிக்கப்பட்ட சீவிதப் பகுதியை முதல்இராசாதிராசன் உறுதி செய்தான் என்பதைக் கருநாடக மாநிலக் கங்கவரம் கல்வெட்டு[9] கூறுகிறது. இவ்வாறு சோழ அரசியலில் வாழ்வாங்குவாழ்ந்த கிருட்டிணன்



மும்முடிச் சோழப் பிரம்ம மாராயன்

இராமனின் செப்புத் திருமேனி ஒன்று தற்போது தஞ்சைக் கலைக் கூடத்தில் இடம் பெற்றுள்ளது.

## செப்புப் படிமம்

இச்செப்புப் படிமம் திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் திருக்கோயிலில் திருச்சுற்றில் புதையுண்டிருந்து அண்மைக் காலத்தில் வெளிக் கொணரப்பட்டது. 70 செ.மீ. உயர முடைய இந்தச் சிலை, நின்ற கோலத்தில் இறைவனை வணங்கும் நிலையில் இடுப்பில் அரை ஆடையும் மார்பில் புரிநூலும் ( யக்ஞோபவிதம் ) தரித்துக் காணப்படுகிறது. வலக்கை மணிக்கட்டில் மட்டும் மணிமாலை ஒன்று உள்ளது. தலைமுடி மிக அலங்காரமாக்கப்பட்டு உச்சி வகிட்டில் சிகை முடியப் பட்டுள்ளது.

இச்சிலையைப் பற்றி ஆய்வு மேற்கொண்ட திரு டி. என். இராமச்சந்திரன் அவர்கள் இதனை ஒரு பிரம்ம மாராயன் சிலை யாகக் குறித்துள்ளார். இவரது கருத்தை வலியுறுத்தும் வண்ணம் திருவெண்காடு திருக்கோயிலில் கல்வெட்டொன்று உள்ளது.[10] அதில் இராசராசனின் அதிகாரியான கிருட்டிணன் இராமன் செய்த அறப் பணிகள் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் இத்திருக் கோயிலில் இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் காலத் தில் வடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகளைப் பற்றிக் கல்வெட்டுகள் பேசுகின்றன. இவை அனைத்தும் உலகப் புகழ் வாய்ந்தவை. இத்திருமேனிகளெல்லாம் பல நூற்றாண்டுகளாகப் புதையுண்டு அண்மையில் தோண்டி எடுக்கப்பட்டன. ( அனைத்தும் தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ளன. )

இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் காலத்தில் திருவெண்காட்டில் செப்புத்திருமேனி வடிக்கும் கலை உயர்நிலை எய்தியிருந்தது. இக்கால வரையறையில் வடிக்கப்பட்ட ஒரு பிரம்மாதிராசனின் சிலை நிச்சயம் கிருட்டிணன் இராமனின் சிலையாகத்தான் இருக்க முடியும். மேலும் தஞ்சையில் செப்புத் திருமேனி உருவாக்குவதில் ( அர்த்தநாரீஸ்வரர் ) சில புதிய முறைகளைச் செயல்படுத்திய கிருட்டிணன் இராமன் தமது உருவச்சிலையை வெண்காட்டில் வடித்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

## குறிப்புகள்


1. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் - முனைவர் இரா. நாகசாமி, பக்கம் · 189.
2. S. I. I. Vol. II, Page - 162.
3. Larger Laiden grants, Copper Plates.
4. A. R. E. 10 of 1918.
5. S. I. I. Vol. II, Pages - 162, 166.
6. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் - முனைவர் இரா. நாகசாமி தமிழக அரசு தொல்லியல் துறை வெளியீடு.
7. S. I. I. Vol. V, No : 636, 78 of 1895.
8. A. R. E. 256 of 1921.
9. A. R. E. 171 of 1911.
10. S. I. I. Vol. V.

# நக்கீரர்

சோழ நாட்டில் தேவாரப் பதிகம் பெற்ற திருக் கோயில்களின் எண்ணிக்கை 274 ஆகும். இவற்றில் முதல் தலமாகக் குறிக்கப்படுவது பொன்னி நதியின் கரையிலுள்ள மாணிக்க மலை எனப்படும் இரத்தின கிரீசர் கோயிலாகும். இந்நாட்டுத் தலவரிசையில் கடைசித் தலமாகக் குறிக்கப்படுவது திருஈங்கோய் மலை மரகதா சலேச்சரர் திருக்கோயிலாகும். இது காவிரியின் வடகரையில் மாணிக்க மலைக்கு நேர் எதிர்த் திசையில் அமைந்துள்ளது. ஆளுடையபிள்ளையின் பாடல் பெற்ற திருஈங்கோய் மலை திருச்சி - நாமக்கல் பெருவழியில் முசிரியையடுத்து மூன்று கல் தொலைவில் 'திருவேங்கி மலை' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. மரகதநாதர் உறையும் ஈங்கோய் மலையில் 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவத் திருமுறையாசிரியருள் ஒருவராகத் திகழ்ந்த நக்கீர தேவர் எனும் தமிழ்ப் பெரும் புலவருக்குச் சிலை எடுத்துக் கோயிலும் அமைந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகளால் அறியும்போது தமிழகத்தின் பெருமை மேலும் விரிகின்றது.

## திருஈங்கோய் மலை

நாமக்கல் நெடுஞ்சாலையை ஒட்டியே திகழும் இம் மலைக்குப் பொன்னி நதி ஓர் ஆரமாகவும், பசும் வயல்கள் ஆடையாகவும் உள்ளமை காணற்கரிய காட்சியாகும். இவ் வளங்களையெல்லாம் சுவைத்துத்தான் ஞானசம்பந்தரும் நக்கீர தேவரும் பைந்தமிழ்ப் பாடல்களை யாத்தனர் என்பது மிகையாகாது.

"ஏனத் திரள்வந் திழியுஞ்சாரல் ஈங்கோய் மலை"
"ஏலத்தோடு நல்லிலவங்கமழும் ஈங்கோய் மலை"
"என்குமரியுந் திரியுஞ்சாரல் ஈங்கோய் மலை"
"இறைவர் சிறை வண்டறை பூச்சாரல் ஈங்கோய் மலை"
"எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய் மலை"

என்றெல்லாம் காழிப்பிள்ளை போற்றும் பாங்கு சுவையுள்ள அர்த்தமுள்ளது.

மலைக் கோயிலுக்குத் தென்திசையில் வாயில் அமைந்து உள்ளது. நன்கமைந்த திருச்சுற்றுகள், சுற்றுத் திருக்கோயில்கள். தனித்த அம்மன் கோயில் சூழ அமைந்துள்ள மரகதநாதர் திருக்கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம் ஆகிய அனைத்தும் கற்றளிகளாகத் திகழ்கின்றன. மரகநாதர் பெயருக்கேற்பப் பசுமை வண்ண ஒளிவிடும் திருமேனியராகக் காட்சி நல்குகிறார். மகாமண்டபத்தில் மூவர் முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் கற் படிமங்கள் இடம் பெற்றுள்ளன. திருச்சுற்றிலுள்ள குமரன் கோட்டம் வரலாற்றுச் சிறப்புடையது.

## நக்கீர தேவர்

பன்னிரு திருமுறையுள் பதினோராம் திருமுறையில் நக்கீரருடைய நூல்களாகத் தொகுக்கப் பெற்றுள்ளவை : கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருவீங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுக்கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு, போற்றித்திரு கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் எனப் பத்து நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

நக்கீர தேவர் பற்றிப் பெரும்பற்றப் புலியூர்நம்பி, பரஞ்சோதி முனிவர், கல்லாட நூலாசிரியர், சிவப்பிரகாச சுவாமிகள், நிரம்ப அழகிய தேசிகர் முதலிய புலவர் பெருமக்களின் கூற்றுகளையெல்லாம் தொகுத்து நோக்கும்போது சங்க காலத்தில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் நக்கீரர் பற்றிய பல கதைகளும், அவற்றில் உள்ள பல முரண்பாடுகளும் புலப்படும். மேலும் இங்குக் குறிப்பிடப்படும் பதினோராந்திருமுறைத் தொகுப்பிலுள்ள 10 நூல்களுக்கும் 'நக்கீரர்' எனும் ஒருவரே ஆசிரியர் என்பது தவறானது. இது பற்றி ஆய்ந்த மொழி வரலாற்றறிஞர்கள் 'நக்கீரர்' என்ற பெயரில் வாழ்ந்த பல புலவர்களைக் குறிப்பிட்டு உள்ளனர்.[1]

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆய்ந்த அறிஞர் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள் திருஈங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, கார் எட்டு, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்றநான்கு சைவமறை நூல்களையும் யாத்தவர் 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நக்கீர தேவர் என்பதையும், நக்கீர தேவர் என்ற பெயரில் குறிப்பிடப்படும் பிற புலவர்களின் காலங்களையும் மிகத் தெளிவுபடத் தமது இலக்கிய வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

## திருஈங்கோய் மலை எழுபது

இது திருஈங்கோய்மலையிற் கோயில் கொண்டுள்ள கயிலையம் பெருமானைப் போற்றிப் பரவிய எழுபது வெண்பாக் களைக் கொண்டதோர் நூலாகும். பாடல்தோறும் மலை, குன்று, சிலம்பு, வெற்பு, கடறு, பொருப்பு என்ற முடிவினையுடையது. பாடல்களின் முதல் எழுத்துக்கள் அகர வரிசையில் அமைந் துள்ளமை சிறப்பு அமிசமாகும். எழுபது பாடல்கள் பாடுவது ஓர் இலக்கிய மரபு. இதனைப் பரிபாடல் எழுபது, ஐந்திணை எழுபது போன்ற நூல்களோடு ஒப்பிட்டு நோக்கலாம். 1942-ஆம் ஆண்டு வரை பதிப்பிக்கப்பட்ட சுப்பராயச் செட்டியார் பதிப்பு, ஆறுமுக நாவலர் பதிப்பு, காசி மடத்துப் பதிப்பு ஆகியவற்றுள் 48 - ஆம் பாடலில் தொடங்கி 62 - ஆம் பாடல்வரை பாடல் கள் கிடைக்கப்பெறாமல் வெளிவந்தன.

செப்பரைமடத்து ஏட்டுச்சுவடி ஒன்றில் 70 பாடல்களும் முழுமையாக இருப்பது கண்டு அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் 1942 - ஆம் ஆண்டில் 70 பாடல்களையும் பதிப்பித் தார். இதனைப் பின் பற்றிக் காசிமடம் 1968 - இல் (இரண்டாம் பதிப்பில்) முழுமையாக வெளியிட்டது. 10-ஆம் நூற்றாண்டின் அற்புத இலக்கியப் படைப்பு ஒன்றினைக் காத்துத் தமிழுலகத் திற்குத் தந்த மேற்குறித்த மடங்களுக்கும், பேராசியர் மு. அருணாசலம் அவர்களுக்கும் தமிழ்கூறும் நல்லுலகு நன்றிக் கடன்பட்டுள்ளது.

பெரும்புலவர் நக்கீரர் இந்நூலில் மலைவாழ் மக்களான குறவர்களின் வாழ்க்கையினை மிகத் தெளிவுபடக் காட்டுகிறார். மலைவளமும், விலங்கினச் சிறப்பும் பேசும் இவ்வாசிரியர் குறவர் வேட்டை, தேன் எடுத்தல், குறமகளிர் யானையின் மருப்பைக் கொண்டு தினையிடிக்கும் காட்சி, குரவைபாடுதல் முதலிய செய்திகளை நயம்பட விளக்குகிறார்.

காதல் சிறப்புப் பலபேசி, ஈங்கோய் மலையையும் அதன் இறைவரையும் போற்றும் பாங்குக் குறிப்பிடத்தக்க ஒன்று. ஒரு வேடன் பெண்மான் ஒன்றை வீழ்த்துவதற்கு வில்லில் அம்பைப் பூட்டிக் குறிபார்த்தபோது, அக் கன்னிமானின் கண் தன் குறத்தியின் கண்ணை ஒத்திருப்பது உணர்ந்து கையில் கணையை நழுவவிட்டுப் 'பையப்போ' என்று அம்மானைக் கொல்லாது விட்ட பண்பை,

> "எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
> கையிற் கணைகளைந்து, கன்னிமான்-பையப்போ
> என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
> சென்றன்று வென்றான் சிலம்பு."

என்றும் பாடுகிறார். மற்றொரு குறவன் ஓர் பெண் மானை அடித்துக் கொண்டு வந்து குறத்தியிடம் கொடுக்கவே அவள் ஆணும் பெண்ணுமாக இருந்த மான்களில் ஒன்றைப் பிரித்துக் கொணர்ந்தது இழுக்கு என்று அக்குறவன் மீது கோபிக்கிறாள். இதனை நக்கீரர்,

> "மலைதிரிந்த மாக்குறவன் மான்கொணர நோக்கிச்
> சிலைநுதலி சீறிச் சிலைத்துக்-கலைபிரிய
> இம்மான் கொணர்தல் இழுக்கு என்னும் ஈங்கோயே!
> மெய்ம்மான் புணர்ந்தகையான் வெற்பு"

என்று பாடுகிறார். இவ்வாறு அமைந்துள்ள எழுபது பாடல்களுமே தீந்தமிழ்ச்சுவை புள்ளனவாகும்.

## நக்கீர தேவரின் திருவுருவம்

இத்தனைச் சிறப்புகளுடன் 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புலவர் பெருமானுக்குச் சோழப் பெருமன்னர் மூன்றாம் குலோத்துங்கனின் 39-ஆம் ஆட்சியாண்டில் திருஈங்கோய் மலையில் கற்சிலை எடுக்கப்பட்டு, அதற்குத் தினமும் பூசையும் நடைபெற்று வந்தது என்பதைத் திருஈங்கோய் மலை மரகதாசலேச்சரர் திருக்கோயிலின் கருவறை வடபுறச் சுவரில் உள்ள கல்வெட்டு எடுத்தியம்புகிறது.[3] இக்கல்வெட்டில் திருவாலி நாட்டைச் சேர்ந்த புங்கனூரினன் உலகுய்ய நின்றாடுவான் விழுமியர் என்பவர் ஆளுடைய பிள்ளையார்க்கும், திருநாவுக்கரசு தேவர்க்கும், ஆலால சுந்தரப் பெருமானுக்கும், திருநக்கீர தேவர்க்கும் கற்சிலை எடுத்ததாகவும், பின்பு இராசராச வளநாட்டுச் செயங்கொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மகாசபையார் 500 நற்காசு பெற்றுக் கொண்டு மேற்படி திரு

வுருவங்களின் பூசைகளுக்காகக் குலோத்துங்க சோழ நல்லூர் கட்டளை என்ற நிலத்தை விற்றதாகவும் செய்திகள் காணப்படுகின்றன.

ஆனால் இன்று நக்கீர தேவரின் திருவுருவம் திருஈங்கோய் மலைக் கோயிலுக்குச் செல்லும் மலைப் படியின் அருகில் உள்ள ஒரு சிறிய கோயிலின் மூலத்தானத்தில் இடம் பெற்றுள்ளது. இக் கோயிலைப் போகமுனிவர் கோயிலென்றும் கற்படிமத்தைப் போகர் என்றும் இவ்வூர் மக்கள் தவறாகக் கருதி வழிபட்டு வருகின்றனர்.



நக்கிரர்-திருஈங்கோய்மலை

சுமார் 4 - அடி உயரமுடைய திருவுருவில் நக்கீர தேவர் யோக பட்டத்தில் அமர்ந்த நிலையில் இருந்து கொண்டு இரு கரங்களாலும் யாழ் ஒன்றை இசைத்துப் பாடும் கோலத்தில் வடிக்கப் பட்டுள்ளார். 13-ஆம் நூற்றாண்டின் சிற்பத்திறனுக்கு எடுத்துக் காட்டான இப் படிமம் தமிழக வரலாற்றில் மிகவும் சிறப்பிடம் வகிக்கக்கூடிய ஒன்று. ஒரு தமிழ்ப் புலவர் சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் தெய்வமாக வணங்கப்பட்டார் என்பதற்கு இதனினும் சிறந்த சான்று ஒன்று உண்டோ ?

## குறிப்புகள்


1. திருமுறை வரலாறு இரண்டாம் தொகுதி, பேரா. க. வெள்ளை வாரணனார், அண்ணாமலைப்பல்கலைக்கழகம். பக்கம்-627
2. தமிழ் இலக்கிய வரலாறு 10-ஆம் நூற்றாண்டு, பேரா.மு. அருணாசலம்.
3. A. R. of Indian Epigraphy year 1965-66, No. 332. செந்தமிழ், தொகுதி எண் : 17, பக்கம் - 313.

# களக்காடுடையர் மாலைதாழ்மார்பன்

சோழப் பெருமன்னர்களின் ஆட்சி சோழமண்டலத்தைப் பொறுத்தவரை 400 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. கி. பி. 9-ஆம் நூற்றாண்டு விசயாலய சோழனால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வரசு இடையூறின்றி 13-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. இக்காலம் தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு பொற்காலமே. கோயிற்கலை - சிற்பக்கலை - செப்புத்திருமேனி வார்த்தல் முதலானவை ஏற்றம் பெற்றன.

## செப்புத்திருமேனிகள்

பல்லவர்களின் இறுதிக் காலத்திலேயே சோழமண்டலப் பகுதியில் வார்ப்புக்கலை (செப்புத்திருமேனிகள்) சிறந்த ஒரு வளர்ச்சியை எய்தியது. தஞ்சை மாவட்டம் வடக்குப் பனையூர் எனும் ஊரில் உள்ள செப்புத்திருமேனிகள் இதற்குச் சான்றாக நிற்கின்றன. இங்குள்ள கலியாணசுந்தரர், சோமாஸ்கந்தர் ( இளமுருகு உடனுறையும் அம்மையப்பர் ) முதலிய செப்புத் திருமேனிகள் கி. பி. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதியில் இருந்த தலைசிறந்த வார்ப்புக் கலை வல்லுநர்களின் திறம் பேசுகின்றன.

இதேபோன்று சோழமண்டலத்தின் ஊர்களான திரு வெண்காடு, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், பருத்தியூர்-நல்லூர், தஞ்சாவூர், களக்காடு ஆகிய இடங்களில் மிகச்சிறந்த கைவினைஞர்கள் இருந்தனர் என்பதனை இன்று இப்பகுதிகளில் உள்ள செப்புத்திருமேனிகளின் வாயிலாக அறிய இயலுகிறது.

## செப்புப்படிமங்கள்

தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டுகளைத் தொகுத்து நோக்கும்போது மாமன்னன் இராசராசப் பெருந்தகை, அவனது அக்கன் குந்தவையார், அவனது தேவியர்கள், தானைத்தலைவர்கள், உயர் அதிகாரிகள் முதலான பலர் செய்தளித்த செப்புத் திருமேனிகள் (தெய்வத் திருவுருவங்கள்), படிமங்களின் (மனிதர்களின் செப்புச்சிலைகள்) நீண்ட பட்டியலைக் காணலாம். இராசராசன், அவனது தேவி உலகமாதேவி, பொன்மாளிகைத் துஞ்சின தேவரான சுந்தர சோழன், இராசராசனாகிய புலியைப் பயந்த பெண் மானாகிய சுந்தர சோழனின் தேவி ஆகியோர்களுக்காகப் படிமங்கள்எடுக்கப்பட்டதை அறிகிறோம்.[1] சோழ மன்னர்கள் காலத்தில் தெய்வத் திருவுருவங்கள் மட்டுமன்றி மனிதர்களின் படிமங்களும் செம்பில் வார்க்கப்பட்டன என்பதைத் தஞ்சைக் கல்வெட்டுகள் மிகச்சிறப்பாகக் கூறுகின்றன.

## குடவாயில் ஆடல்வல்லான்

தஞ்சை மாவட்டம் குடவாசல் எனும் பேரூர் சங்க காலத்துக் கோநகரங்களுள் ஒன்று. இங்குச் சங்க காலத்து நிதி சேமிப்புக் கிடங்கு, சிறைக் கோட்டம் முதலியன இருந்தன என்று புறநானூறு, நற்றிணை முதலான இலக்கியங்கள் கூறுகின்றன. கி.பி. 7 - ஆம் நூற்றாண்டிலேயே இங்குச் சிறந்ததொரு மாடக் கோயில் இருந்ததை ஞானசம்பந்தப் பெருமான் பாடுகிறார். இத்தகைய வரலாற்றுப் பெருமைகள் நிறைந்த குடவாயிலுடையார் திருக்கோயில் தற்போது கோணேசர் திருக்கோயிலென அழைக்கப்படுகிறது. இத்திருக்கோயிலினுள் இடம்பெற்றுள்ள ஆடல்வல்லான் செப்புத்திருமேனி ஈடிணையில்லா எழிற்கோலத்துடன் திகழ்கிறது. இது கி.பி.9-ஆம் நூற்றாண்டுப் படைப்பாகும். இச்செப்புத்திருமேனியின் கலை அமிசம் செம்பியன் மாதேவியார் காலப் பாணியாக உள்ளது.

சுமார் ஐந்தடி உயரமுள்ள இந்த ஆடல்வல்லான் திருமேனியின் சிறப்பு அமிசமாகத் திகழ்வது, கமல பீடத்திலேயே நடராசப்பெருமானின் திருமேனியும், திருவாசியும் இரத்தினன்யாசம் செய்யப்பட்டுள்ளமைதான். கமல பீடத்திற்குக் கீழாகத் திகழும் பத்ர பீடம் மிகப்பெரிய ஒன்று. இது தனித்துச் செய்யப்பட்டு அதன்மேல் கமல பீடத்துடன்கூடிய திருமேனி இணைக்கப்பட்டுள்ளது.



ஆடல்வல்லான் பீடத்தில் அடியவர் - குடவாயில்

## களக்காடுடையர் மாலைதாழ்மார்பன்

தனித்துத் திகழும் பத்தர பீடத்தின் முன் பகுதியில் பட்டிகை வர்க்கத்தில் ஒரு சிறிய மனித உருவச்சிலையும் அதனை ஒட்டியே மிகப்பெரிய எழுத்துகளும் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. 'களக்காடுடையர் மாலை தாழ் மார்பன்' என்ற தமிழ் எழுத்துகள் உளியால் வெட்டப் படாமல், இந்தப் பீடம் வார்க்கப்படும்போதே புடைப்பு எழுத்துகளாக வார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அமிசம் ஆகும். இவ்வரிகளால், இவ்வெழுத்துகளுடன் இணைந்து ஆடல் வல்லானை வணங்கும் கோலத்தில் இடம் பெற்றுள்ளவர் பெயர் மாலைதாழ் மார்பன் என்பதும், இவர் களக்காடு என்னும் ஊரினர் என்பதும் அறியப்படுகின்றன. இந்தப் பீடத்தின் எழுத்தமைதி கி.பி.10-11ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியாகக் காணப்படுகிறது. மேலும் ஆடல்வல்லான், மற்றும் பத்ம பீடத்தின் உலோக அமைப்பும், இந்தப் பத்ர பீடத்தின் உலோக அமைப்பும், வேறுபட்டு நிற்கின்றன, எனவே ஆடல்வல்லானின் திருமேனி பத்ம பீடத்துடன் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக் கப்பட்டது என்பதும், பின்பு அல்லது 11 - ஆம் நூற்றாண்டில் களக்காடுடையர் மாலை தாழ் மார்பன் என்பவர் பத்தர பீடம் செய்து ஆடல்வல்லானுடன் இணைத்துள்ளார் என்பதும் பெறப்படுகின்றது.

களக்காடு எனும் ஊர் குடவாயிலுக்கு 5 கல் தொலைவில் உள்ளது. இவ்வூரிலிருந்து கிடைத்துள்ள சோழர் காலச் செப்புத் திருமேனிகள் மிக உயரியவையாகும். இவை அனைத்தும் கி. பி. 10-11-ஆம் நூற்றாண்டுப் படைப்புகளேயாகும். களக்காடு சதுரத் தாண்டவ நடராசர் செப்புத் திருமேனியை அறியாத சிற்ப இயல் வல்லுநர் எவரும் இருக்க முடியாது. எனவே. கி.பி.10-11-ஆம் நூற்றாண்டுக் காலக்கட்டத்தில் களக்காட்டில் மிகச்சிறந்த செப்புத் திருமேனி செய்ய வல்லோர் சிறந்து திகழ்ந் திருத்தல். வேண்டும். மாலைதாழ் மார்பன் என்பவர் அத்தகைய சிலை வடிப்பாளர்களுள் ஒருவராய்த் திகழ்ந்திருக்கலாம். இவரது உள்ளத்தில் குடவாயில் ஆடல்வல்லான் திருமேனி நீங்கா இடம் பெற்றிருக்க வேண்டும். அதனால் எழில் மிகுந்த இந்த 9-ஆம் நூற்றாண்டுப் படைப்பிற்கு இவர் எழிலார்ந்த பீடம் ஒன்று செய் தளித்திருக்கலாம் எனக் கொள்ள வாய்ப்புகள் மிகுந்துள்ளன. பீடத்தில் இடம் பெற்றுள்ள இவரது உருவச்சிலையின் தலையில் கொண்டையும், தாடியும் மீசைகளும், இடுப்பில் ஆடையும் துண்டும் திகழ இருகரம் கூப்பி ஆடல்வல்லானின் திருவடி



எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பீடம்



களக்காடுடையார் மாலைதாழ்மார்பன்

களின் கீழ் என்றென்றும் நிலைத்து நிற்கும் காட்சிஉயரிய ஒன்று. பிற்காலத்தில் இந்தப் பீடத்தில் துளை செய்யப்பட்ட போது இந்தப் புடைப்பு எழுத்துகளின் ஒருசில பகுதிகள் சிதைந்துவிட்டன. புடைப்பு எழுத்துகளுடன் திகழும் இந்தப்பீடம் பற்றி 1972-ஆம் ஆண்டில் வரலாற்றுலகம் அறியச் செய்த பேறு எமக்குக் கிட்டியது.[2]

### குறிப்புகள்

1. S. I. I. Vol. II - PART II
2. குடவாயிற் கோட்டம் - குடவாயில் பாலசுப்பிரமணியன். பக்கம்-59

# கருணாகரத் தொண்டைமான்

கி.பி. 1070 - இல் தொடங்கி 1125 வரை ஐம்பத்தாறு ஆண்டுகள் சோழ மண்டலத்தையும், பிற மண்டலங்களையும் செங்கோலோச்சியவன் முதற் குலோத்துங்க சோழனாவான்.[1] இம்மாமன்னனை நெடுமாலாகக் குறிப்பிடும் கலிங்கத்துப் பரணி அவனது கையில் உள்ள சக்கராயுதமாகக் குறிப்பிடுவது அவனது தானைத்தலைவனான கருணாகரத்தொண்டைமான் எனும் வீரனையே. இதனை,

"கண் ஆகிய சோழன சக்கரம் ஆம் கருணாகரன்
வாரணம் மேற்கொளவே"

"அத்தண்டு கொண்டு அவன் சக்கரம் வந்ததே"

என்ற பரணியின் வரிகளால் நன்கறியலாம்.

கலிங்கத்துப் பரணியின் பாடல்களில் 'வண்டைமன் தொண்டைமான், வண்டைநகர் அரசன், வண்டையர்க்கு அரசு, வண்டை வேந்தன். வண்டையர் அரசன், வண்டையர் கோன்' என்றெல்லாம் கருணாகரத் தொண்டைமான் சிறப்பித்து அழைக்கப்படுகிறான். காளிக்குக் கூளி கூறும் படலத்தில்,

"தொண்டையர்க்கு அரசு முன்வரும் சுரவி
துங்க வெள்ளிடை உயர்த்த கோன்
வண்டையர்க்கு அரசு பல்லவர்க்கு அரசு
மால் களிற்றின் மிசை கொள்ளவே"

எனச் சயங்கொண்டார் இவனைப் புகழ்கிறார். இவன் பல்லவ மரபில் பிறந்தவன் என்பதால் பல்லவ நாட்டின் அரசன் என்பதும் சோழனது அமைச்சர் குழாத்தின் தலைவனாகத் திகழ்ந்ததால் சோழ மண்டலத்தின் வண்டை என்ற பகுதியின் தலைவன் என்பதும் அறியப்படுகின்றன.

## பரணி பேசும் வரலாற்று நாயகன்

முதற் குலோத்துங்கனுக்குத் திரை செலுத்த மறுத்த அனந்த பன்மன் சோட கங்கன் என்பானைக்கருணாகரன் கலிங்கம் சென்று வெற்றி கொண்டு வீர வரலாறு படைத்தான். இப்போரைச் சிறப்பித்துப் பாடியதே சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி எனும் அருந்தமிழ் நூலாகும். இது ஒரு கற்பனைக் காவியமல்ல. அன்று நடந்த போரை அப்படியே காட்டும் ஒரு வரலாற்றுப் பெட்டகம்.

பரிவேட்டைக்காகச் சென்றபோது காஞ்சி நகர் அடைந்த முதற்குலோத்துங்கன் தனக்குக் கலிங்க மன்னன் அனந்தபன்மன் திரை செலுத்த மறுத்த செய்தி அறிந்து வெகுண்டான். இதுகண்ட கருணாகரன் "இறைமொழிந்த அளவில் எழுகலிங்கம் அவை எறிவன்" என்று சூளுரைத்து, தன் நால்வகைப் படைகள் சூழக் கலிங்கம் நோக்கிப் பயணமானான்.

கலிங்க மன்னனுடன் கடுஞ்சமர் புரிந்து, வெற்றியைத் தழுவி அந்நாட்டின் சிறந்த குதிரைகளையும், மதம் பொழியும் யானைகளையும், ஒட்டகங்களையும், தேர்களையும்,ஒன்பது வகையான இரத்தினக்குவியல்களையும் உயர் குலப் பெண்களையும் கைப்பற்றினான்.கலிங்க நாடு அழிவுபட்டது. அங்கேயே வெற்றித் தூண்களைத் திக்கனைத்தும் நட்டான். காஞ்சி மாநகர் திரும்பி வந்தான். ஒளிவீசும் வாள் படையையும், தெய்வத் தன்மை பொருந்திய குலோத்துங்கனுடைய திருவடிகளையும் சூடிக் கொண்டான் என்பதைப் பரணியில் சயங்கொண்டார் இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார்.

## கல்வெட்டுகளில் கருணாகரன்

காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில்[2]

1. "சயங்கொண்ட சோழமண்டலத்து எயிற் கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழ
2. மண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளான
3. கருணாகரனான தொண்டைமானார் தேவியார் அழகிய மணவாளினி மண்டை யாழ்வார் வைத்த திரு நுந்தா விளக்கு"-

என்று காணப்படுகிறது. இங்குக் குறிப்பிடப்படும் சயங்கொண்ட சோழமண்டலத்து எயில் நாட்டுத் திருவத்தியூர் ஆழ்வார் என்பது காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயிலாகும். இத் திருக்கோயி லுக்கு முதலாம் குலோத்துங்கனின் நாற்பத்தி மூன்றாம் ஆண்டில் அதாவது கி.பி.1118இல் கருணாகரத்தொண்டைமானின் தேவியார் அழகிய மணவாளினி மண்டையாழ்வார் ஒரு நுந்தா விளக்கு வைத்த செய்தி அறியப்படுகிறது. வரலாற்றுச் சிறப்புமிகு இக்கல் வெட்டால் கருணாகரத் தொண்டைமானின் மனைவியார் 'அழகிய மனவாளினி மண்டையாழ்வார்' என்ற தேவியே என்பது மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

திராட்சாராமம் என்ற ஊர் தற்போது ஆந்திர மாநிலத்தில் கோதாவரி மாவட்டத்தில் இராச மகேந்திரபுரம் அருகில் உள்ளது. சோழர்கள் காலத்தில் இவ்வூர் 'இடர்க் கரம்பை' எனத் தமிழில் அழைக்கப்பட்டது.இங்கு முதற் குலோத் துங்கன் காலத்திய பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஒரு கல்வெட்டு வடமொழிச் செய்யுளால் அமைந்து, தெலுங்கு எழுத்துக்களால் வெட்டப்பட்டுள்ளது. இதுவே கருணாகரன் பற்றி விரிவாகப் பேசும் கல்வெட்டாகும்.[3]

அரிய இக்கல்வெட்டில் குலோத்துங்கன் - கருணாகரன்- அவன் பெற்ற ஈடிணையில்லாக் கலிங்க வெற்றியும்,அவன் செய்த அறக் கொடைகளும் சாதனைகளும் கூறப்பட்டுள்ளன. மேலும் சயங்கொண்டாரின் இலக்கியம் ஓர் உண்மையான வரலாற்றுக் காவியம் என மெய்ப்பிக்கும் கல்வெட்டும் இதுவேயாகும்.

இராசேந்திர சோழ ஆச்சாரியன் என்ற சாசனமெழுது பவனால் எழுதப்பட்ட இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்கனின் முப்பத்து மூன்றாம் ஆண்டான கி.பி.1108-இல் வெட்டப் பட்டதாகும். இன்று திராட்சாராமம் திருக்கோயிலில் உள்ள இக் கல்வெட்டால் கி.பி. 1108-இற்கு முன்பே கலிங்கப்போர் நிகழ்ந் தது என்பதை அறுதியிட்டுக் கூறலாம். மேலும் இக் கல் வெட்டால் பரணி பாடப்பெற்றது என்ற உண்மை 'தன்வீரம் பாடப்பட்டோன்' என்ற வரிகளால் உய்த்துணரப்படுகிறது.

அடுத்து, திருநறையூர் நாட்டு மண்டலஞ் சேரியைச் சேர்ந்த கருணாகரனைப் பற்றி விவரிக்கின்றது. கருணாகரனின் தந்தை பெயர் சீரிளங்கோ என்பதும் கருணாகரனின் இயற் பெயர் திருவரங்கன் என்பதும், இவன் வைணவ சமயத்தினன் என்பதும் ஆகிய அரிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மண்டலஞ்சேரியின் தலைவனான இவன் திருவரங்கன், வண்டு

வராசன், பல்லவர் கோன், பல்லவராசன் என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகிறான். பரணியிலோ வண்டுவராசன், வண்டையர் கோன், பல்லவர்க்கரசு, பல்லவர்கோன் என்றெல்லாம் குறிப்பிடப் படும் ஒப்புமை நோக்குதற்குரியது.

கலிங்கப் போரைப் பற்றி இக்கல்வெட்டு குறிப்பிடும்போது இராசேந்திர சோழனின் (குலோத்துங்கனின்) ஆணையை மேற் கொண்டு திக்விசயம் செய்து வீரத்திருமடந்தையைத் தானே மணந்து கொண்டானாம். சகல கலிங்கமும் (கலிங்க நாட்டின் ஏழு பிரிவுகளையும்) சாம்பல்படுத்தி, தனது மன்னனின் கீர்த்தியைத் திக்கனைத்தும் செயத்தம்பம் ஊன்றிப் பரப்பியதாக எடுத்தியம்பு கிறது.

திருமாலுக்காக ஆலவேலி என்னும் ஊரில் நீலக் கற்களைக் கொண்டு அழகியதொரு கற்கோயில் எடுப்பித் திருக்கிறான். இதுமட்டுமன்றி, தினமும் தீபம் ஏற்ற நிவந்தமும், நித்திய அமுதுபடிக்கு நிவந்தமுமாக அதே ஊரில் விலை கொடுத்து நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறான். மேலும் தபசியர் ஐவர், அந்தணர் பதின்மர், வானகாமிகள் ஐவர் ஆக 20 பேர் களுக்குத் தினமும் உணவளிக்க ஓலராப்பாக்கம் என்ற ஊரில் மூன்று கண்டிகை நெல் விளையும் நிலமும் விலை கொடுத்து வாங்கி இறையிலி நிலமாகத் ( வரி இல்லாத நிலமாக ) தானம் அளித் தான். வேங்கி மண்டலம் செல்லும் கோதாவரித் தடத்தையும் அமைத்துக் கொடுத்தான். பஞ்சவடியில் திருமார்பவரான திருமாலுக்கு மாடம் அமைத்துப் பூசைகளுக்கு நிலமும் அளித் தான். குத்தவாதி நாட்டில் மண்டபம் ஒன்று அமைத்ததோடு இடர்க்கரம்பைப் புரியில் எண்ணிலாக் கொடைகளும் அளித்தான் என்றும் கூறுகிறது.[4]

காஞ்சி மற்றும் இடர்க்கரம்பைக் கல்வெட்டுகளால் கருணா கரத் தொண்டைமானின் குடும்பம் அவன் செய்த போர், நல்கிய அறக்கொடைகள் இவையனைத்தையும் அறிய முடிகிறது. கலிங்க வெற்றிக்குப் பின்பு அவனது வாழ்க்கை பற்றி அறிய ஒரு சில தடயங்கள் கிடைத்திருக்கின்றன இவ்வகையில் சில கல்வெட்டுகளும், விக்கிரம சோழனுலாவும் துணை புரிகின்றன.

கருணாகரன் கலிங்கப்போரில் யாரையெல்லாம் வென்று வாகை சூடினான் என்பதைத் தமிழகத்திலுள்ள இரண்டு கல்வெட்டுகள் மட்டுமே கூறுகின்றன. அவற்றில் ஒன்று தஞ்சை மாவட்டம் ஆலங்குடியிலும்[5] பிறிதொன்று திருச்சி மாவட்டம் சீனிவாசநல்லூரிலும்[6] உள்ளன.

## விக்கிரம சோழன் காலத்தில் கருணாகரன்

மாமன்னன் முதலாம் குலோத்துங்கனுக்குப் பிறகு கி. பி. 1118-இல் அவனது மகனான விக்கிரம சோழன் முடிசூடினான்[7], விக்கிரம சோழன் இளமைப் பருவத்தில் இருந்தே தன் தந்தையுடன் அரசியலில் பங்கேற்றான். குலோத்துங்கன் காலத்தில் நிகழ்ந்த முதல் கலிங்கப் போரில் (கி. பி. 1096 - இல்) இவன் பங்கேற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். விக்கிரம சோழன் காலத்திலும் கருணாகரத் தொண்டைமான் உயிர்வாழ்ந்து அரசியலில் பங்கேற்றனன் என்பதை ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரம சோழனுலா திறம்படக் கூறுகிறது. அதில் விக்கிரம சோழனுடன் சென்ற அதிகாரிகளைக் கூறும்போது

"தென்னரும் மாளவருஞ் சிங்களருஞ் தேற்றுதகை
மன்னருந் தோற்க மலைநாடு - முன்னம்
குலையப் பொருதொரு நாட் கொண்ட பரணி
மலையத்தருந் தொண்டை மானும்"

எனக் கூறுவதிலிருந்து முதற் குலோத்துங்கன் ஆட்சியில் இவன் கலிங்கம் வென்று பரணி சூடியது மட்டுமன்றி விக்கிரம சோழனது ஆட்சியில் பாண்டிநாடு, மாளவதேயம், ஈழ மண்டலம், மலைநாடான சேரமண்டலம் ஆகியவற்றை வென்று சோழராட்சிக்கு உட்படுத்தினான்-என்ற அரிய செய்தியும் காணக்கிடக்கிறது. கவிச்சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தரின் இவ்வாக்கு, நிச்சயம் அன்று வரலாற்றில் நிகழ்ந்த ஒன்று எனத் துணியலாம்.

விக்கிரமசோழன் ஆட்சியில் பல்வேறு வெற்றிகளைக் குவித்து மண்டலீகனாய் விளங்கிய கருணாகரத் தொண்டைமான் சோழ சாம்ராச்சியத்தின் பாண்டி மண்டலத்துப் பிரதிநிதியாய்ப் பணியாற்றிய செய்தியும் அறிய முடிகிறது.

பாண்டி மண்டலத்திலிருக்கும்போது ஈழநாட்டுடன் இவனுக்கு வணிகம் தொடர்பான நெருங்கிய உறவு இருந்ததாகவும், அங்கு (ஈழநாட்டில்) இனுவில் என்ற ஊரில் இவன் தங்கியிருந்தபோது குருணாவை எனுமிடத்தில் கருணாகரப் பிள்ளையார் என்ற பெயரில் ஒரு விநாயகர் கோயில் எடுத்ததாகவும் அறிய முடிகிறது. பின்பு ஈழத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகம் வந்து சோழநாட்டுத் திருக்கண்ணபுரத்தில் இருந்த கருணாகர வீரதேவர் மடத்திற்கு அறக்கொடைகள் அளித்த செய்திகளையும் கல்வெட்டுச் சான்றுகளால் அறிய முடிகிறது.[8]

## கருணாகரனின் உருவச்சிலை

தன் இறுதிக் காலம் வரை இரு பெரும் சோழமன்னர்களான முதலாம் குலோத்துங்கன்,விக்கிரமசோழன் ஆகியோரிடம் தானைத்தலைவனாகவும் மண்டலீகனாகவும் திகழ்ந்து வரலாற்றில் ஈடிணையில்லா வெற்றிகள் பல குவித்து, ஈழத்து மக்கள்கூடப் போற்றுமளவு வாழ்ந்து, சயங்கொண்டாரால் பரணியிற்பாடப்பட்ட இந்த வரலாற்று நாயகனின் உருவச்சிலை இன்றும் இவன் வாழ்ந்த மண்ணில் உள்ளது வரலாற்றுலகம் செய்த பெரும் பேறாகும்.

கருணாகரத் தொண்டைமானின் சொந்த ஊராகக் கலிங்கத்துப்பரணி குறிக்கும் 'வண்டை நகர்' 'வண்டை வளம்பதி' என்பது சோழர்கள் காலத்தில் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி என்பதும், தற்போது வண்டுவாஞ்சேரி என அழைக்கப்படும் கும்பகோணம் குடவாசல் பெருவழியில் உள்ள ஊரே என்பதும் 'கருணாகரத் தொண்டைமான்' எனும் எமது ஆய்வு நூலில் மிகத் தெளிந்த சான்றுகளுடன் விளக்கியுள்ளோம்.

இன்று இவ்வூரில் பாமர மக்கள் அனைவரும் இவ்வூரின் பகுதிகளைத் 'தொண்டைமான் நத்தம்' - தொண்டைமான் திடல், பல்லவராயன் குளம், பல்லவராயன் களம், மாளிகை நத்தம் என்ற பெயர்களில் அழைக்கின்றனர். இவை சென்ற நூற்றாண்டு அரசுப் பதிவேடுகளிலும் குறிக்கப்பட்டுள்ளன. மாளிகை நத்தம் பகுதியில் மிகப்பெரிய மாளிகை இருந்ததற்கான சான்றுகள் உள்ளமை அண்மையில் செய்யப்பட்ட அகழ்வாய்வின்போது தெரியவந்தன. இதேபோன்று தொண்டைமான் நத்தம் - திடல் பகுதிகளில் மிகப்பெரிய சிவாலயம் ஒன்றும், திருமால் ஆலயம் ஒன்றும் இருந்து முற்றிலுமாக அழிந்த சுவடுகளே உள்ளன. இப்பரந்த இடிபாடுகள் புதைந்துள்ள பகுதியில் ஒரு பெரிய சிவலிங்கமும், ஓர் ஐயனார் சிலையும் ஒரு பெருவீரனின் சிலையும்தான் இன்று மிஞ்சி நிற்கின்றன. மேடைமீது தற்போது காணப்படும் இவ்வீரனின் சிலை இருக்கும் கற்பலகை முன்பு ஒரு கற்றூண் அல்லது நிலைக்காலின் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும். 2' × 1½' அளவில் இக் கற்றூண் குடையப்பட்டு அதில் ஒரு பெருவீரனின் படிமம் அரைச் செதுக்குருவாய்த் (BAS RELIEF) திகழ்கிறது.



கருணாகரத் தொண்டைமான்
தொண்டைமான் திடல்-வண்டுவாஞ்சேரி

பெருவீரனுக்குரிய மீசைகள் பெற்றும், இரு கரங்களைக் கூப்பியும் வணங்கும் திருக்கோலத்திலுள்ளான் இவ்வண்டை வேந்தன். மாமன்னர்களுக்குரிய மகுடம் தலையில் இல்லை. அழகிய கொண்டையும்,அதில் அலங்கரிக்கப்பட்ட பறந்த நிலையில் உள்ள நீண்ட துணி ஒன்றும் காணப்படுகின்றன.நிற்கும் இப் பெருவீரன் உடை வாளைத் தரிக்கவில்லை. பணிவுடன் அருகே கீழே வைத்துள்ளான். சிற்பத்தில் காட்டப்பட்டுள்ள உடைவாள் இவன் பெருவீரன் என்பதோடன்றி, பெரும் வெற்றிகளையும் தழுவியவன் என்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்கிறது. இச் சிற்பத்தின் அழகெலாம் காணும்போது,

" கடற் கலிங்கம் எறிந்து சயத்தம்பம் நாட்டிக்
கடகரியும் வயமாவும் தனமும் கொண்டு
சுடர்படை வாள் அபயன் அடி அருளினோடும்
சூடினான் வண்டையர் கோன் தொண்டைமானே"-

என்ற சயங்கொண்டாரின் வரிகள் நம்முன்னே தோன்றத்தான் செய்யும்.

இவ்வுருவச்சிலை தெய்வத்திற்குரிய வடிவமைப்பில் இல்லை. இச்சிலையை நேரில் பார்வையிட்ட முனைவர் இரா. நாகசாமி போன்ற சிற்ப இயல் - வரலாற்று அறிஞர்கள் இச்சிலையின் காலத்தை 10-11-ஆம் நூற்றாண்டுச் சோழர்காலச் சிலை என்றும், பெருவீரன் ஒருவனது சிலை என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். பிற்காலச் சோழர்களின் சிற்ப அமைதியுடன், உடை வாளுடன் பெருவீரனாகச் சிற்பத்தில் திகழ்ந்து, வண்டை நகரில் தொண்டைமான் நத்தம் - திடல் பகுதியில் (திருக்கோயிலிருந்து அழிந்த இடத்தில்) இருக்கும் இச்சிலைக்குரியவன் கலிங்கம் வென்ற கருணாகரத் தொண்டைமான் என்பதில் ஐயமே இல்லை.

## குறிப்புகள்

1. கருணாகரத் தொண்டைமான் - குடவாயில் பாலசுப்பிர மணியன், வரலாற்றுப் பேரவை, சென்னை, பக்கம் - 25
2. S. I. I. Vol. V. No : 862
3. S. I. I. Vol. IV No : 1239 & Ep. I, Vol. XXII, No : 23
4. Historical Sketches of Ancient Dekhan, Vol. III. By K. V. Subramaniya Iyer.
5. S. I. I. Vol. IV. No : 445
6. Ins, No : 608 of 1904, MER 1904,-05 Part-II. Para-18.
7. பிற்காலச் சோழர் சரித்திரம் - சதாசிவ பண்டாரத்தார்.
8. கருணாகரத்தொண்டைமான்-குடவாயில் பாலசுப்பிரமணியன் பக்கம் - 40.

# விக்கிரம சோழன்

## (கி.பி. 1118 - 1136)

சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி சூடிய முதற் குலோத்துங்கனின் புதல்வனே விக்கிரம சோழனாவான். இளமைப் பருவத்திலேயே வேங்கி நாட்டில் சோழ மண்டலப் பேராளனாய் (பிரதிநிதியாய்) இருந்தவன். கி.பி.1118-இல் இளவரசாகப் பொறுப்பேற்று பின்னர் கி.பி.1120-இல் மாமன்னனாக முடி சூடிக்கொண்டான். ஆனி மாத உத்திரட்டாதியில் பிறந்தவன். இவனது மெய்க்கீர்த்திகள் 'பூமாலைமிடைந்து பொன்மாலை திகழ்'[1] - 'பூமாது புணரப் புவிமாது வளர'[2] என்ற இரு வகைகளாகத் துவங்குகின்றன.

இவ்வேந்தன் காலத்து மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்படும் போர் நிகழ்ச்சிகள் ஒன்றும் அமையவில்லை. மிக அமைதியாகவே இவனது நல்லாட்சி நடைபெற்றது. இதற்குக் காரணம் இவனது தந்தையின் பெரு வீரமும், அவனுக்குத் துணை நின்ற கருணாகரத் தொண்டைமானின் சாதனைகளுமேயாகும். விக்கிரம சோழனிடம் கருணாகரத்தொண்டைமான் பணிபுரிந்தான் என்பதை ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரம சோழனுலா கூறுகிறது. அதில் விக்கிரமனுடன் துணைநின்ற தளபதிகளைக் குறிப்பிடும்போது,

> "தென்னரும் மாளவருஞ் சிங்களருஞ் தேற்றுதகை
> மன்னருந் தோற்க மலைநாடு - முன்னம்
> குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
> மலையத்தருந் தொண்டைமானும்"

எனக் கூறுகிறது. இவ்வேந்தன் ஆட்சியில் கருணாகரன் பாண்டிநாடு, மாளவதேயம், ஈழமண்டலம், மலை நாடான

சேரமண்டலம் இவற்றை வென்று சோழராட்சிக்கு உட்படுத்தினான் என்ற செய்தி பெறப்படுகிறது. எனவே கருணாகரன் போன்ற வலிமையாளர்களின் துணையுடன் சோழமண்டலத்தைச் சிறப்பாகப் பேணிக்காத்தான் என்பதை அறிய முடிகிறது.

இவனது அவைக்களப் புலவராய்த் திகழ்ந்தவர் ஒட்டக்கூத்தர். இவன் பெற்ற கலிங்க வெற்றியைப் பாராட்டி இவர் பாடிய பரணி நூல் ஒன்று இருந்ததாகவும், அது அழிந்து விட்டதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

விக்கிரம சோழனின் கலைத்துறைச் சாதனைகளின் பெரும் பகுதி தில்லைக் கோயிற் பணிகளாகும். தென் திருக்காளத்தி எனும் ஊரில் (துக்காச்சி) விக்கிரம சோழீசுவரம் என்ற ஓர் அற்புதக் கலைக்கோயிலைப் படைத்தான். இதில் சரப மூர்த்தம் இடம்பெற்றது. திருவாரூர்த் திருக்கோயிலில் இவனது பல பணிகள் இன்றும் திகழ்கின்றன. தேரூர்ந்த சோழனின் கதையை ஆரூர்த் திருக்கோயிலில் கல்வெட்டாக வெட்டுவித்த பெருமை இவனுக்குரியதாகும். மேலும் தேரூர்ந்த சோழன் நினைவாகத் தேர் வடிவ மண்டபம் ஒன்றையும், இக்கதைத் தொடர்புடைய சிற்பங்களையும் படைத்தான். இவ்வாறு பல்வகைச் சிறப்புகளுடன் வாழ்ந்த இம்மன்னவனின் படிமங்கள் சில சோழ மண்டலத்துத் திருக்கோயில்களில் இடம்பெற்றுள்ளன.

## தில்லைத் திருக்கோயிலில்...

விக்கிரம சோழன் தான் பெற்ற திறைப் பொருள்களைக் கொண்டு தில்லைக் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்தான். இப்பணிகள் இவனது பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.1128) நடைபெற்றதாக இவனது கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன[3]. தில்லைச் சிற்றம்பலத்தைச்சூழ்ந்த திருச்சுற்று மாளிகை, மேற்குக் கோபுரவாயில், கூடசாலை, பலிபீடம் என்பவற்றிற்குப் பொன் வேய்ந்தது, தான் பிறந்த உத்திரட்டாதி நாளில் எடுத்த விழாவில் இறைவன் எழுந்தருளும் திருத்தேரைப் பொன் வேய்ந்தது, அணிகலன்களும் பொற்கலங்களும் அளித்துப் பொன்னாலாகிய கற்பகத் தருக்களையும் இடம்பெறச் செய்தது முதலான பெரும் பணிகளைச் செய்தான். திருச்சுற்று மாளிகையை எடுத்து அதற்குத்தன் பெயரினை இட்டான்[4].ஒரு வீதிக்குவிக்கிரமசோழன் திருவீதி என்று பெயரும் மாற்றினான். இந்நிகழ்ச்சிகளை எல்லாம் இவனது மெய்க்கீர்த்தி பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"தன் குல நாயகன் தாண்டவம்பயிலும் செம்பொன் அம்பலஞ் சூழ் திருமாளிகையும், கோபுரவாசல் கூடசாலைகளும், உலகு வலங் கொண்டு ஒளி விளங்கு இக்குலவரை உதய குன்றமொடு நின்றன. பசும் பொன் வேய்ந்த பலிவளர் பீடமும், விசும் பொளி தழைப்ப விளங்கு பொன் வேய்ந்து இருநிலந் தழைப்ப, இமயவர் களிப்பப் பெரிய திருநாள் பெரும் பெயர் விழாவெனும், உயர் பூரட்டாதி உத்திரட்டாதியில் அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர் இம்பர் வாழ எழுந்தருளுவதற்குத் திருத்தேர்க்கோயில் செம்பொன் வேய்ந்த பருத்திரள் முத்தின் பயில் வடம் பரப்பி, நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன் திருவளர் பெயரால் செய்து சமைத்து அருளி, பைம்பொற் குழித்த பரிகல முதலாச் செம்பொற் கற்பகத் தொடு பரிச் சின்னமும் அளவில்லாதன ஒளிபெற அமைத்துப் பத்தாம் ஆண்டில் சித்திரைத் திங்கள் அத்தம் பெற்ற ஆதி வாரத்துத் திருவளர் மதியின் திரையோதசி பக்கத்து இன்ன பலவும் இனிது சமைத்தருளி . . ." என்று பாடும் இவனது மெய்க்கீர்த்தியால் கி. பி. 1128-ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் நாளில் இத்தனைப்பணிகளும் நிறைவேறின என்பதை அறிய முடிகிறது.

## மேலைக் கோபுரத்துப் படிமம்



விக்கிரம சோழன் தில்லை மேற்குக் கோபுரம்

இம்மன்னன் கட்டுவித்த மேலைக் கோபுரத்தின் நுழை வாயிலில் தென்புறம் ஒரு மாடம் உள்ளது. அதில் தாடி, மீசை யுடன் உள்ள இம்மன்னனின் உருவச்சிலை கைகள் உடைக் கப்பட்டுக் காணப்படுகிறது. இத்திருக்கோயில் மாலிக்காபூரின் கடுமையான தாக்குதலுக்கு இரையான ஒன்று. இதில் உள்ள பல சிற்பங்கள் உடைந்து காட்சி தருகின்றன. இம்மன்னனின் உருவச்சிலை இடம் பெற்றுள்ள இக்கோபுரத்தில் பரதக் கலை யின் நூற்று எட்டுக் கர்ண முத்திரைகளும், கோஷ்டங்களில் எண் திசைக்காவலர்களும்(அட்டதிக்குப்பாலகர்கள்),இராகு கேது முதலான கோள்களுக்குரிய தெய்வ உருவங்களும், தன்வந்திரி போன்றவர்களின் சிற்பங்களும் கல்வெட்டுப் பொறிப்புகளோடு இடம்பெறச் செய்தமை இம்மன்னனின் சாதனைகளாம்.

## திருப்பாற்றுறையில்



விக்கிரமசோழன்
திருப்பாற்றுறை

திருப்பாற்றுறை திருவானைக்காவிற்கு நேர்கிழக்கே கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ள ஊராகும். முதல் பராந்தக சோழனின் புதல்வருள் ஒருவனான உத்தம சீலிஎன்பவன் பெயரால் அமைந்த பிரமதேயமான உத்தம சீலி சதுர்வேதி மங்கலத்தில் ஒரு கூறாகத் திருப்பனம்பூதூர் என்ற பெயருடன் திருப்பாற் றுறை முற்காலச் சோழர்கள் காலத்தில் திகழ்ந்தது.

முதல் பராந்தகன் காலத்திய இத்திருக் கோயிலில் விக்கிரம சோழனின் உருவச்சிலை உள்ளது. இதில் இம்மன்னவன் இளவயதுத் தோற்றத்துடன் (தாடி, மீசைகள் இல்லாமல்) திகழ்கிறான். தலையில் சிறிய கொண்டை, காதுகளில் பத்ர குண்டலம் மார்பில் அணிக லன்கள் திகழ இறைவனை வணங்கும்கோலத் தில் திகழ்கிறான் இம்மன்னவன். இவ்வுருவச் சிலை பற்றிப் புதுவை பிரஞ்சு இந்தியக் கழகத் தில் பணியாற்றிய பி. இலட். பட்டாபிராமன் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.[5]

## திருவாரூரில் . . .

ஆரூர்த்திருக்கோயிலில் இம்மன்னனின் எட்டுக் கல்வெட்டுகள் உள்ளன. தென்புறத் திருச்சுற்றிலுள்ள ஒரு கல்வெட்டு மனுநீதிச் சோழனின் கதையைக் கூறுகிறது.[6] இதில் மனுவின் அமைச்சன் பெயர் இங்கநாட்டுப் பாலையூரனான உபய குலாமலன் என்றும் மனுவின் மைந்தன் பெயர் பிரியவிருத்தன் என்றும் கூறுகிறது, உபய குலாமலனின் வழித்தோன்றலாக விக்கிரம சோழன் காலத்தில் வாழ்ந்த சந்திரசேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்க சோழ மாபலி வாணாதிராயனுக்கு விக்கிரம சோழன் மாளிகை மனையும் நிலங்களும் அளித்ததைக் கூறுகிறது.[7] மனுச்சோழன் கதை சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுவதற்கு முன்பே விக்கிரம சோழனின் கல்வெட்டு கூறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

தேரூர்ந்த சோழன் வரலாற்றில் நாட்டம் கொண்டு திகழ்ந்த விக்கிரம சோழன் இதே திருக்கோயிலில் தேர்மண்டபம் ஒன்றும், அதனுள்ளே தேரின்காலில் மனுவின் மகன் கிடப்பதாகவும், எதிரே மாய்ந்த கன்றும் மணி இசைக்கும் பசுவும் இருப்பதாகவும் சிற்பங்களில் இடம்பெறச் செய்தான்.

இந்தத்தேர் மண்டபத்தின் உட்பகுதியில் இக்கதையின் இறுதிக்காட்சியான விடையருகில் அமர்ந்திருக்கும் ஆரூர் இறைவன் முன்பு ஒரு புறம் மனுச்சோழனும், அவனது அமைச்சன் உபய குலாமலனும், மகன் பிரியவிருத்தனும் நின்று வணங்க எதிர்த் திசையில் பசுவும் கன்றும் நிற்கும் காட்சியுள்ளது. எழில்மிகு இச் சிற்பத்தைத் தாங்கிநிற்கும் மண்டபத்தின் தூண் ஒன்றில் விக்கிரம சோழனும், சந்திரசேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்க சோழ மாபலி வாணாதிராயனும் வணங்கும் திருக்கோலத்தில் சிற்றுருவச் சிலைகளாகக்காட்சி நல்குகின்றனர்.

விக்கிரம சோழனின் உருவம் தாடி, மீசைகளுடன் தில்லைக் கோபுரத்தில் உள்ளது போலவே திகழ்கின்றது.

### குறிப்புகள் :

1) S.I.I. Vol. III, No : 79
2) Ibid - No : 80
3) S.I.I. Vol. V, No :458
4) Ins. 312 of 1913
5) K.A.N.Sastri - Falicitation Volume Page - 467
6) 163 of 1894; S.I.I. Vol.V, No : 455
7) 164 of 1894 S.I.I. Vol.V, No : 456
545 of 1904; S.I.I. Vol. XVII, No : 590

## அரும்பாக்கிழான் மணவிற்கூத்தனான காலிங்கராயன்

அரும்பாக்கிழான் மணவிற்கூத்தனான காலிங்கராயன், முதற் குலோத்துங்க சோழனிடத்திலும், பின்னர் விக்கிரம சோழனிடத்திலும் படைத்தலைவனாய் இருந்து புகழ் எய்தியவன். இவன் தொண்டை மண்டலத்து மணவிற்கோட்டத்து மணவில் என்ற ஊரில் பிறந்தவன். நரலோக வீரன், அருளாகரன், அரும்பாக் கிழான், பொன்னம்பலக் கூத்தன் என்ற பெயர்களாலும் அழைக்கப் பட்டான்[1] தில்லையம்பலத்திலும் திருவதிகையிலும் எண்ணிலாத் திருப்பணிகள் புரிந்தவன், சமய குரவர்கள் பாடிய மூவர் தேவாரங்களையும் செப்பேடுகளில் எழுதி, தில்லையில் வைத்துப் போற்றியவன் என்று கல்வெட்டுப் பாடலொன்று குறிக்கின்றது.[2]

நரலோக வீரன் என்று அழைக்கப்பட்ட இப்பெருமகன் தில்லைத் திருக்கோயிலினுள் நூற்றுக்கால் மண்டபம் எனும் மண்டபத்தைக் கட்டினான். இதன் பன்னிரண்டு தூண்களிலும் ' விக்கிரம சோழன் திருமண்டபம்' என்ற பெயர்கள் பொறிக்கப் பெற்றுற்றுள்ளன.[3] விக்கிரம சோழனின் ஆணையின்படி மணவிற் கூத்தன் இச்சீரிய பணியை மேற்கொண்டான்.

காலிங்கர் கோனாகிய இவன், நூற்றுக்கால் மண்டபம் எடுத்த செய்தியைத் தில்லைக் கல்வெட்டுப் பாடல்,

> "மல்லற் குலவரையா நூற்றுக்கான் மண்டபத்தைத்
> தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான் - கொல்லம்
> அழிவு கண்டான் சேரனைப்பரிய வாற்றற்
> கிழிவு கண்டான் தொண்டைய ரேறு"

என்று புகழ்கிறது.[4] தில்லைக் கல்வெட்டுகளில் 37 பாடல்களும், திருவதிகைக் கல்வெட்டுகளில் 25 பாடல்களும் இவன் செய்த அத்தனைப் பணிகளையும் விவரிக்கின்றன.

திருவதிகையில் வாகீசருக்குத் திருக்கோயில் அமைத்ததை,

"ஈசனதிகையில் வாகீச னெழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான் - பூசல்
விளைவித்த வேணாடும் வெற்பனைத்துஞ் செந்தீ
விளைவித்தான் தொண்டையர் மன்" -

என்று கூறுகிறது அதிகைக் கல்வெட்டுப் பாடல்[5].

தில்லையிலும், திருவதிகையிலும் ஒரு மாமன்னன் செய்யும் அளவுக்கு ஒரு தலைவன் செய்துள்ளமை திருப்பணிகள் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்தலைவனின் உருவச்சிலைகள் தில்லைத்திருக்கோயிலில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளமை நோக்குதற்குரியதாகும்.

## நூற்றுக்கால் மண்டபத்தில் . . .

தனது மன்னன் விக்கிரமனின்பேரில் 'விக்கிரம சோழன் திருமண்டபம்' என்ற மண்டபத்தை இத்தலைவன் எடுத்தான் என்பதைத் தில்லைக் கல்வெட்டுப்பாடல்கள் வாயிலாக அறிந்தோம். இம்மண்டபம் இத்திருக்கோயிலின் வடமேற்கு மூலையில் உள்ளது. எழில்மிகு இம்மண்டபத்தில் தென்புற வாயிலில் ஒரு படி அமைப்பு உள்ளது.



மணவிற்கூத்தன் காலிங்கராயன்-தில்லை நூற்றுக்கால் மண்டபம்.

இப்படிக்கட்டின் கீழ்ப்புறம் அழகிய சிற்பத் தொகுதிகள் இடம் பெற்றுள்ளன, இவற்றிடையே உள்ள ஒரு மாடத்தில் இம்மாவீரனின் உருவச்சிலை இடம் பெற்றுள்ளது. தாடி, மீசை களுடன் திகழும் இம்மாவீரன் அம்பலவனின் திருக்கோயிலை நோக்கிய வண்ணம் வணங்கும் திருக்கோலத்தில் காணப் படுகிறான்.

சுமார் இரண்டடி உயரமுடைய இச்சிலை நூற்றுக்கால் மண்டபத்தின் படிகளமைப்பின் புறப்பகுதியில் உள்ளதைக் காணும்போது,

"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியோனே வேங்கடவா நின்கோயில் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பனே"

என்ற குலசேகராழ்வாரின் அடிச்சுவட்டில், நரலோக வீரன் படியாய்க் கிடந்து அம்பலவனின் பொற்பாதம் காணும் நிலையை உணர முடிகிறது.

## கிழக்கு இராசகோபுரத்தில்

தில்லைக் கோயிலின் கிழக்கு இராசகோபுரம் சோழப்பெரு மன்னர்களால் கட்டப்பட்ட ஒன்று. இதன் வாயிலை ஒட்டியுள்ள மாடங்களில் பலருடைய திருவுருவச்சிலைகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாயிலின் வடபுறம் உள்ள ஒரு மாடத்தில் தாடி, மீசைகளுடன் வணங்கும் கோலத்தில் சுமார் 4 அடி உயரமுடைய ஒருவரது உருவச்சிலையும் இவருக்கருகில் அடியவர் ஒருவரது உருவச் சிலையும் உள்ளன.

வணங்கும் நிலையிலுள்ள சிலை இத்திருக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுப் பாடல்கள் இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது இவ்வுருவச்சிலையை நரலோக வீரனின் உருவச்சிலையாகவே கொள்ள முடிகிறது.

## குறிப்புகள்

1. பிற்காலச் சோழர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார், பக்கம் - 335.
2. S.I.I. Vol.IV P-34
3. Ins 616 of 1930
4. S.I.I. Vol. IV, pp. 33 and 34.
5. திருவதிகைக் கல்வெட்டுகள் - பெருந்தொகை, பக்கம்-257

## கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

தமிழகத்துப் புலவர்கள் வரிசையில் மூன்று சோழப் பெருமன்னர்களுக்கு அவைக்களப் புலவராய்த் திகழ்ந்த ஒரே புலவர் ஒட்டக்கூத்தராவார். கூத்தரென்பது இவரது இயற்பெயர். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வடமொழி நூல்களிலும் மிகுந்த பயிற்சி வாய்ந்தவர். விக்கிரம சோழன், குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய முப்பெரு மன்னர்களின் காலத்தே தமிழ் இலக்கியச் செழுமைக்கு ஒட்டக்கூத்தர் காரணராய்த் திகழ்ந்தார். இவர் பிறந்த ஊர் மலரியென்பர். 'மலரிவரும் கூத்தன்' என்று தண்டியலங்காரம் மேற்கோள் கூறுகின்றது.

விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, இராசராச சோழனுலா என்னும் மூன்று உலாக்களையும், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழையும் இயற்றினார். இவரது நூல்களில் தலையாய சிறப்புடையது தக்கயாகப் பரணி என்பதாகும். இது தக்கனது யாகம் அழித்த சிவபெருமானைப் புகழும் அருந்தமிழ்க் காப்பியமாகும். இதன் பாட்டுடைத் தலைவனாக இராசராசபுரீசர் (தாராசுரம் இறைவன்) போற்றப்படுகிறார்.

கலைமகளின் திருவருள் வாய்க்கப்பெற்றவராதலின் அரசிலாற்றங்கரையில் கலைமகளுக்குக்கோயில் அமைத்து வழிபட்டார். அவ்வூர் தற்போது கூத்தனூர் (குடவாயில் ஒன்றியம்) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இவரால் தோற்றுவிக்கப்பட்ட அந்த ஆலயம் இன்றும் சிறப்பாக உள்ளது. ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் 'ஆற்றங்கரை சொற்கிழத்தி வாழியே' என்று கூத்தனூர்க் கலைமகளைப் போற்றுகிறார். இவரது வழித் தோன்றலான ஓவாக்கூத்தன் என்பார் கலைமகள் கோயிலுக்கு அளித்த நிவந்தங்கள் பற்றிய கல்வெட்டொன்று இன்றும்உள்ளது.

விக்கிரம சோழன் இவருக்கு யானை, காளம் முதலான பரிசுகளை அளிக்க, இவர் "இவ்விருதுகளைப்பெறுவதற்கு யான் உரியேனல்லேன்" என்று பணிவுடன் இருந்ததாகத் தமிழ் நாவலர் சரிதை குறிப்பிடுகிறது.

இரண்டாம் இராசராசன் பேரில் இராசராசனுலாவைப் பாடியபோது, கூத்தருக்கு இம்மன்னன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் ஆயிரம் பொன் வழங்கினான் என்பதனை,

"தெள்ளித்தம், முன்னாய கரிலவன் மூதுலாக்
கண்ணிதோறும் பொன்னாயிரஞ் சொரிந்த பூபதியும்"

என்று சங்கர சோழனுலாவும்,

"கூட, னராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர்
கண்ணிக் கொராயிரம் பொனீந்த வுலாவும்"

என்று தமிழ் விடு தூதும் கூறுகின்றன.

இவர் விக்கிரம சோழன்பேரில் ஒரு பரணி நூலும் பாடியிருக்கக் கூடும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கலிங்கத்துப் பரணி பாடிய சயங்கொண்டாரை,

"பாடற் பெரும் பரணி தேடற் கருங்கவி கவிச் சக்கரவர்த்தி"

என்று குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில் ஒட்டக் கூத்தர் புகழ்வதால் சயங்கொண்டார் போன்ற பெரும் புலவர்களை இவர் மதித்த பண்பு தெள்ளிதின் விளங்குகின்றது. இவர் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் நம்பிகாளியார், நெற்குன்றவாண முதலியார் முதலானவர் ஆவர். கூத்தரைக் கவிராட்சசன், கவிச்சக்கரவர்த்தி, காளக்கவி, சருவஞ்ஞகவி என்றெல்லாம் அழைத்தனர்.

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே,
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள் - ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர் நோக்கொன்று,
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு"

என்ற தண்டியலங்கார மேற்கோள் செய்யுளால் இவரது புலமையும், தண்டியலங்கார மேற்கோளாசிரியர் இவரது சம காலத்தவர் என்பதும் அறியப்படுகின்றன.

## கூத்தரின் சிலை



ஒட்டக்கூத்தர் - கும்பகோணம் பெரியமடம்

கும்பகோணத்தில் வீரபத்திர சுவாமித் திருக்கோயிலும் மடமும் மகாமகக்குளத்திற்கண்மையில் உள்ளன. சுமார் 4 அடி உயரத்தில் இறைவனை வணங்கும் கோலத்தில் ஒட்டக்கூத்தரின் சிலை வழிபாட்டிலுள்ளது. இது மிக எழில் வாய்ந்த, கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக் கற்படிமமாகும். வீரசைவம், மற்றும் சாக்த அடிப்படையில் தோன்றிய இம்மடம் சோழர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. சிற்ப அமைதி, வழிபாட்டு நெறி மற்றும் தொன்மையின் எச்சங்களாலும் இச் சிலையை ஒட்டக்கூத்தருடைய படிமம் என்று ஏற்றுக்கொள்ள முடியும்.

# குன்றத்தூர் சேக்கிழார்

தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த செயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர் சேக்கிழார் எனும் சைவ சமய அருட்கவிஞர் சோழப்பெருமன்னன் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1188-1150) வாழ்ந்தவர். இவரைப்பற்றி உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சேக்கிழார் புராணமும், சோழமண்டலத்துக் கல்வெட்டுகளும் தெளிவாக உரைக்கின்றன.

சேக்கிழார் குன்றத்தூரில் பிறந்தவர். அனபாயனிடம் அமைச்சராகப் பணி புரிந்தவர். சோழநாட்டுத் திருநாகேச்சரம் திருக்கோயிலின்மீது கொண்டிருந்த பற்றின் மிகுதியால் தமது ஊராகிய குன்றத்தூரிலும் திருநாகேச்சரம் என்ற கோயிலை எடுப்பித்தவர். இவரது தம்பி பாலறாவாயர் என்றும், அவர் அமைச்சர் பதவி மேற்கொண்டார் என்றும் அறியப்படுகின்றன. முதலில் சைவத்தின்பால் நாட்டம் இல்லாமல் இருந்த சோழனிடம் சேக்கிழார் திருமுறைகளின் பெருமைகளைச்சொல்ல, பின்பு மன்னனின் வேண்டுகோளின்படி சேக்கிழார் பெரியபுராணம் இயற்றியதாக உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார்.

குன்றத்தூர்[1], பிரம்மதேசம்[2], ஓமாப்பேரூர்[3], திருவையாறு[4], திருவாரூர்[5], திருப்புறம்பியம்[6], திருக்கோகர்ணம்[7], ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுகளை எல்லாம் தொகுத்து நோக்கும் போது அனபாயன் என்பவன் இரண்டாம் குலோத்துங்கன் என்பதும், அவன் தில்லைக்குப் பொன் வேய்ந்தான் என்பதும், சேக்கிழார் இவனது சம காலத்தவர் என்பதும் உறுதியாகின்றன.

சேக்கிழார்புராணம் மற்றும் பெரியபுராணம் கூறும் நிகழ்ச்சிகளெல்லாம் வரலாற்றோடு ஒத்துக் காணப்படுகின்றன.

கி. பி. 4-4-1139 சனிக்கிழமை திருஞானசம்பந்தரின் திருநாளான சித்திரை ஆதிரையில், தில்லைக் கோயிலில் சேக்கிழாரின் பெரியபுராண அரங்கேற்றம் துவங்கியதாகவும், 22-4-1149-இல் இவ்வரங்கேற்றம் நிறைவெய்தியதாகவும் ஓர் ஆய்வு அறிக்கை கூறுகிறது.[8] இதன்பின் சோழப் பெரு மன்னனால் சேக்கிழாருக்கு 'உத்தம சோழப் பல்லவரையர்' என்ற பட்டமளிக்கப்பட்டது. கி. பி. 1163-இல் வெட்டப்பட்ட கல்வெட்டொன்று "ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர் கோட்டத்து குன்றத்தூர் நாட்டு குன்றத்தூர் சேக் கிழான் உத்தம சோழப் பல்லவரையன் மாதவ அடிகள்" - செய்த நிவந்தங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.[9] எனவே கி. பி. 1163-இல் சேக்கிழார் உயிருடன் திகழ்ந்தார் என்பதை அறிய முடிகிறது.

## சேக்கிழாரின் தம்பி

மாதவ அடிகள் சேக்கிழாரின் தம்பி பாலறாவாயர் என்று உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார். இவருக்குத் தொண்டை மான் என்ற பட்டத்தைக் குலோத்துங்கன் அளித்தான். களத்தூரிலுள்ள இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டும்[10] திருவத்துறையிலுள்ள இரண்டாம் இராசராசனின் கல்வெட்டும்[11] கோட்டூரில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டும்[12] இப்பாலறாவாயர் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவர் மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரை வாழ்ந்தவர் என்பது தெரிய வருகிறது.

## சேக்கிழாரின் திருவுருவச் சிலைகள்

### திருச்சி மலைக்கோயிலில் . . .

திருச்சிராப்பள்ளி தாயுமானவர் திருக்கோயிலின் மண்ட பத்தில் மாதவ அடிகள் சேக்கிழாரின் திருவுருவச்சிலை வழிபாட்டி லுள்ளது. இச்சிலை அமர்ந்த நிலையில் சுமார் மூன்றடி உயர முடையதாக உள்ளது. பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் ஒரு கரத்தில் சுவடி ஏந்தி, சின் முத்திரையுடன் வடிக்கப்பட் டுள்ளது இச்சிற்பம். தலையிலும் கைகளிலும் உருத்திராக்க மாலைகளும், கழுத்தில் மணி மாலைகளும் திகழ்கின்றன. இது பிற்காலத்திய சோழர்களின் சிற்பமாகும்.



சேக்கிழார் - திருச்சி மலைக் கோயில்



சேக்கிழார் - திருநாகேசுரம்

திருநாகேச்சரத்தில்...

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருநாகேச்சரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் மண்டபத்தில் சேக்கிழாரின் அமர்ந்த கோலப் படிமம் உள்ளது. உருத்திராக்க மாலையோ, அணிகலன்களோ இல்லாமல் திகழ்கிறது இவ்வுருவச்சிலை. இதனருகே இவரது தம்பியான பாலறாவாயரின் உருவச்சிலையும், இவரது தாயாரின் உருவச் சிலையும் உள்ளன. இவரது தாயார் ஒரு புறக்கொண்டையும், காதில் குழைகளும், எல்லா வகை அணிகலன்களும் சூடி, புடவை அலங்காரத்துடன் நின்ற கோலத்தில் இறைவனை வணங்கும் நிலையில் காணப்படுகிறார். இவையனைத்தும் சோழப் பெருமன்னர்கள் காலத்தில் எடுக்கப்பட்ட சிலைகளாகத்தான் இருக்க வேண்டும். மூன்றாம் குலோத்துங்கன் திருவாஞ்சியத் திற்கருகிலுள்ள செவ்வூர் சிவன் கோயிலில் திருத்தொண்டர் சீர் உரைத்தாராகிய சேக்கிழாருக்குத் திருமேனி எடுத்துப் பூசை வழிபாடுகளுக்கு நிவந்தங்கள் அளித்ததால் சோழர்கள் காலத்திலேயே இவரது படிமம் வணங்கப்பட்டது என்பது தெரியவருகிறது.

## குறிப்புகள்

1. A.R.E. Ins. 198, 229 of 1929-30
2. A.R.E. Ins. 271 of 1915
3. A. R. E. Ins. 533 of 1921
4. A. R. E. Ins. 157 of 1918
5. S. I. .I Vol. VII. of 484
   S. I. I. Vol. IV - 397
6. A. R. E. Ins. 350 of 1927
7. S. I. I. Vol. IV - 104
8. செங்கற்பட்டு வரலாற்றுக் கருத்தரங்குக் கட்டுரை - என். சேதுராமன், தமிழக அரசுத் தொல்லியல் துறை 1977
9. A. R. E. Ins. 95 of 1920
10. A, R. E, Ins. 348 of 1911
11. A. R. E. Ins. 221 of 1928-29
12. A. R. E. Ins. 445 of 1912.

# இரண்டாம் இராசராசன்

**(கி.பி. 1146 - 1163)**

இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பிறகு கி.பி. 1150-இல் சோழ மண்டலத்தில் மாமன்னனாக முடிசூடியவன் இரண்டாம் இராசராசனாவான். பரகேசரி எனும் பட்டம் புனைந்த இவனது மெய்க்கீர்த்திகள் 'பூமருவிய திருமாதும்' என்றும் 'பூமருவிய பொழிலேழும்' என்றும் தொடங்குகின்றன.[1] இவனது கல்வெட்டுகள் ஆந்திர மாநிலத்துக் கிருஷ்ணா[2], குண்டூர்[3], நெல்லூர்[4], முதலான இடங்களிலும் கருநாடக மாநிலத்தில் கோலார்[5], மாவட்டங்களிலும் காணப்படுவதால் வேங்கிநாடு, கொங்குநாடு, கங்க நாடு ஆகியவை இவன் ஆட்சிக்கு உட்பட்டுத் திகழ்ந்தன. என அறியலாம்

இவன் பன்மொழிப் புலமையுடன் திகழ்ந்தவன் என்பதைக் கல்வெட்டுகளும் இலக்கியங்களும் உணர்த்தும். தன் தந்தை இரண்டாம் குலோத்துங்கன், பாட்டன் விக்கிரம சோழன் ஆகி-யோருடைய அவைக்களப் புலவராய்த் திகழ்ந்த ஒட்டக்கூத்தர் இவனது அவையையும் அலங்கரித்தார். இவரிடம் பயின்ற காரணத்தினால்தான் இவனை 'முத்தமிழுக்குக் காவலன்'[6] 'இராச பண்டிதன்'[7] என்றெல்லாம் மெய்க்கீர்த்தி புகழ்கிறது.

இவனுக்குப் புவன முழுதுடையாள், தரணி முழுதுடையாள் ஏழுலகும் உடையாள், உலகுடை முக்கோக்கிழானடிகள் என்ற தேவியர்கள் இருந்தனர். இவன் சித்திரை உத்திரட்டாதியில் பிறந்தவன்.[8]

இவன் சேரமானோடு போர் புரிந்ததாக இராசராச சோழனுலா கூறுகிறது. எனினும் இவனது ஆட்சியின் பெரும் பகுதி போர்க்களம் காணாமல் அமைதியாகவே நடைபெற்றது.

இம்மன்னவன் பழையாறை நகரை ஒட்டி இராசராசபுரி எனும் நகரைத் தோற்றுவித்துத் தன் தலைநகராகக் கொண்டான். இந்நகரை ஒட்டக்கூத்தர் 'எண்டிசைத் தேவரும் புகுதும் இராசராசபுரி', 'செம்பொன் மாட நிரை இராசராசபுரி' என்றெல்லாம் போற்றுகிறார். இந்த இராசராசபுரியில் இராசராசேச்சரம் எனும் சிவாலயத்தை எடுப்பித்து அழியாப் புகழ் எய்தினான்.[9] இத் திருக்கோயில் ஈசனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணி எனும் அருந்தமிழ்க் காப்பியத்தைப் படைத்தார்.

இம்மாமன்னனால் ஒட்டக்கூத்தர் மட்டுமன்றி, கேசவ சுவாமி என்ற வட மொழிப் புலவரும் ஆதரிக்கப்பட்டார். இவனது ஆதரவால் 'நானார்த்தார்ணவ சம்க்ஷேபம்' எனும் வடமொழி அகராதியை இப்புலவர் யாத்தார்.[10] இப் பெரும்புலவர்களின் பாடல்களும் கல்வெட்டுப் பாக்களும் இவனைச் சோழேந்திர சிங்கன், தெய்வப்பெருமான், கண்டன், சொக்கப் பெருமாள், இராசகம்பீரன் என்றெல்லாம் புகழ்கின்றன. தன் தந்தையான இரண்டாம் குலோத்துங்கனின் காலத்தில் சேக்கிழார் எழுதிய பெரிய புராணத்திற்குச் சிற்ப வடிவம் கொடுத்தான் இம் மன்னவன்.

## கல்லெல்லாம் கதைசொல்லும் இராசராசேச்சரம்

இராசராசபுரியில் இராசகம்பீரன் எடுத்த இராசராசேச்சரம் எனும் திருக்கோயில் சாக்த வழிபாட்டின் அடிப்படையில் எழுப்பப் பட்டது. இங்குக் கருவறையின் வெளிப்புறம் திருத்தொண்டரின் மாக்காதை முழுவதும் கல்வெட்டுக் குறிப்புகளுடன் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகளாகவும் படைக்கப்பட்டுள்ளன. மேலும் இங்கு இடம்பெற்றுள்ள மாயசக்தி, மோகினி, நதி தெய்வங்கள் கண்ணப்பர் ஆகியோர் சிற்பங்களும், கஜசம்கார மூர்த்தி, திரிபுராந்தகர் கங்காள மூர்த்தி (தற்போது தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ளவை) ஆகியோர் சிற்பங்களும் பிற்காலச் சோழர்களின் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்பவை.

திரும்புமிடமெல்லாம் புராணக் கதைகளையும், வரலாற்றுக் கதைகளையும் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகளாகத் தாங்கி

நிற்கும் இத்திருக்கோயில் உலக நாட்டுக் கலை வல்லுநர்களால் மிகவும் போற்றப்படும் ஓர் அரிய கற்றளியாகும். இக் கோயிலைப் படைத்ததனால் இராசகம்பீரனாம் இரண்டாம் இராசராசனின் புகழ் விண்ணளவு ஓங்கி நிற்கிறது.

## இராச கம்பீரனின் திருவுருவம்

இம்மாமன்னன் தான் எடுப்பித்த திருக்கோயிலான இராசராசேச்சரத்தில் இத்திருக்கோயில் இறைவனைத் தானும் தனது பட்டத்தரசியான புவனமுழுதுடையாளும் வணங்கும் கோலத்தில் உள்ள படிமங்களை இடம்பெறச் செய்தான். இவை இராசராசேச்சரத்தின் வடபுறத் திருச்சுற்று மாளிகையில் ஒரு தனி மண்டபத்தில் இடம்பெற்றுத் திகழ்ந்தன. பின்னர் இத் திருக்கோயில் இடிபாடுற்றபோது இவ்வுருவச்சிலைகள் இங்கிருந்து இடம்பெயர்ந்து தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ளன.

சுமார் 5அடி உயரமுடைய இம்மன்னவனின் உருவச் சிலையின் அருகே 3அடி உயரமுடைய புவனமுழுதுடையாளின் சிலைகாணப்படுகிறது. இம்மன்னவன் மகுடம் அணிந்து இடுப்பில் உடை வாள் தரித்து வணங்கும் கோலத்திலுள்ளான். அருகே உள்ள தேவியின் சிலை அழகிய கொண்டையும், அணி கலன்களும் ஆடையும் எழில் செய்யச் சிறப்பாகத் திகழ்கிறது. தாராசுரம் கோயிலில் இவ்வுருவச்சிலைகள் இடம் பெற்றிருந்த மண்டபம் மிக எழிலுடன் பீடங்கள் பெற்றுச் சிறப்புடன் விளங்குகின்றது.

இரண்டாம் இராசராசனின் புதல்வனான மூன்றாம் குலோத் துங்கன் தனது நீண்ட மெய்க்கீர்த்தியில், தான் செய்த சாதனை களைக் கூறும்போது

"தாரணி கொள் திருத்தாதைக்கும், இராசராசேச்சுரத்தார்க்கும்
காரணச் சிறந்த கோயில் அணிதிகழ் பொன் வேய்ந்தருளி"

எனக் குறிப்பிடுகிறான். எனவே தன் தந்தையின் இந்தச் சிலை உள்ள தாராசுரம் கோயில் மண்டபத்திற்கும், தாராசுரம் திருக்கோயிலுக்கும் இவன் பொன் வேய்ந்தான் என்பது பெறப்படுகிறது.



இரண்டாம் இராசராசன் - புவனமுழுதுடையாள்.

இவ்வாறு இராசகம்பீரன் மற்றும் அவனது தேவியான புவனமுழுதுடையாளின் திருவுருவச் சிலைகள் பிற்கால மன்னர்களால் போற்றப்பட்டு வந்தன என்பதை நன்கறிய முடிகிறது. மேலும், இதே திருக்கோயிலில் வடமேற்கிலுள்ள ஒரு மண்டபத்தின் அதிஷ்டானப் பகுதியில் மிகுதியாகச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்ப வரிசையில் ஒரு மன்னவன் மார்பில் உடை வாளை அணைத்த வண்ணம் தாராசுரம் திருக்கோயிலின் விமானத்தை வணங்கும் கோலத்தில் காணப்படுகிறான். அருகே ஒரு மன்னவனுக்குரிய மங்கலச் சின்னங்களைத் தாங்கிய பலரது சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த உருவச்சிலையையும் இராசகம்பீரனின் சிலையாகவே கொள்ளலாம்.

## குறிப்புகள்

1. Ins. 465 of 1919
   Ins. 248 of 1980
2. S. I. I. Vol. VI. No. 626
3. S. I. I. Vol. VI. No. 163 and 175
4. *Nellore Inscriptions* 51 and 59
5. Ep. Car Vol. X, K-1.75
6. இராசராசன் மெய்க்கீர்த்தி - பிற்காலச் சோழர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார்
7. ' உலகுய்ய முடிசூடும் ராஜபண்டிதன் ' - மெய்க்கீர்த்தி.
8. THE CHOLAS - N. SETHURAMAN - P 125
9. தக்கயாகப் பரணி - தா. 772.
10. Journal of Oriental Research Vol. XI, P-2.

# இராசராசபுரியில் நூற்றெண்மர்

எத்துறைக்கும் இறைவனெனவும், அறஞ்செயும் பெருந்தவ னெனவும், முத்தமிழுக்கும் தலைவனெனவும், மூன்றுலகின் முதல்வ னெனவும் கல்வெட்டுப் பாடல்களால் புகழப்படும் மாமன்னன் இரண்டாம் இராசராசனால் எடுக்கப்பட்டது இராசராசபுரத்து (தாராசுரத்து) இராசராசேசுவரம் எனும் இத்திருக்கோயில். இதன் வடபுறத்துத் திருச்சுற்று மாளிகையினுள் நூற்று எண்மருக்குப் படிமங்கள் எடுத்து அவர் தம் ஊரும் பேரும் எழுதிப் போற்றியவன் இம்மாமன்னன். வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர்களுக்கும் வரலாறு படைத்தவர்களுக்கும் படிமம் அல்லது பிரதிமம் எடுப்பது நமது தொன்மையான மரபு. இராசராசனால் இத்திருக்கோயிலினுள் படிமங்கள் எடுத்துப் போற்றப்பட்ட இந்நூற்றெண்மர் படிமங்கள் பற்றிக் காண்போம்.

## நூற்றெண்மர் யாவர்?

இங்குள்ள நூற்றெண்மர் சிலைகளில் ஒவ்வொரு சிலைக்கும் மேலாக அவர் எந்த ஊரினர், அவரது இயற்பெயர், அவர் பெற்ற தீட்சை நாமம் போன்ற குறிப்புகள் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக 'அண்ணவாயிலுடையார் தில்லைக்கூத்தரான அகோர சிவர், குடவாயிற் கிழார் உமாபதி ஆழ்வாரான சிகாசிவர்' என்பன போன்ற குறிப்புகள் கல்வெட்டுகளாக உள்ளன. ஒரு சில கல்வெட்டுக்குறிப்புகள் முழுவதுமாகச் சிதைவு பெற்றுள்ளமை யால் சிலரது பெயர்களை அறிய முடியவில்லை. இந்நூற்றெண்மர் வரிசையில் முதல் 7 சிலைகள் மட்டும் தனித்தன்மையுடன் உள்ளன. முதலாவதாகக் காணப்படும் அடியவர் மார்பில் உருத் திராக்க மாலை அணிந்து, இடுப்பில் முழங்கால் அளவு ஆடையும் அதன்மேல் துண்டும் சுற்றிய நிலையில் இறைவனை வணங்கும்



நூற்றெண்மர் ↕ தாராசுரம் திருக்கோயில்



கோலத்தில் உள்ளார். இதனையடுத்த இரண்டு, மூன்று, நான் காவது சிலைகளும், ஆறு, ஏழாவது, சிலைகளும் மற்றச் சிலை களைப்போல் தலை மழிக்கப்படாமல் தாடி, மீசைகளுடனும், உடையலங்காரங்களுடனும் கூப்பிய கரங்களுடனும் உள்ளன.

இரண்டாவதாகத் தாடி, மீசைகளுடன் திகழும் அடியவர் மார்பில் உடை வாளை அணைத்த வண்ணம் அஞ்சலி ஹஸ்த ராய்த் திகழ்கிறார். மேற்கூறிய முதல் ஏழு சிலைகளுக்கும் மேலாக உள்ள கல்லெழுத்துகள் முழுவதும் சிதைந்துள்ளன. தாடி, மீசைகளுடன் உள்ள சிலைகளுக்கு மட்டுமே மார்பில் புரிநூல்கள் உள்ளன.

பலவகையான அலங்காரங்களுடன் திகழும் மேற்கூறிய ஏழு சிலைகளைத் தவிர மற்ற 101 சிலைகளு 'ம ஒன்றினைப் போலவே மழித்த தலையும், உருத்திராக்க மாலையுங்கொண்டு திகழ்கின்றன. எந்த ஓர் அடியவர் சிலையின் மார்பிலும் புரிநூல் (யக்ஞோபவீதம்) இல்லையென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

இச்சிலைகளையும், கல்வெட்டுகளையும் ஆராய்ந்த சில ஆராய்ச்சியாளர்களின் நூல்களும்,[1] மத்தியத் தொல்லியல் துறை யின் ஆண்டறிக்கையும் இவை நூற்றெட்டு சிவாச்சாரியர்களின் சிலைகள் என்றே குறிப்பிட்டுள்ளன. இங்குள்ள நூற்றெண்மர் சிலைகளையும் சிவாச்சாரியர்கள் என்று கொண்டால் அனைவர் மார்புகளிலும் நிச்சயம் புரிநூல்கள் திகழும். அனைவருமே மழித்த தலையுடன் திகழ்வதும் சிவாச்சாரியர்களுக்குப் பொருந்தாத ஒன்று. மற்ற இடங்களில் காணப்படும் சிவாச்சாரியர்களின் சிற்பங்களில் தலையில் சிகையும் மார்பில் புரிநூலும் உள்ளமை இங்கு நோக்குதற்குரியது. மேலும் இங்கு முன்பே குறிப் பிட்டுள்ள தாடி, மீசைகளுடனும், உடையலங்காரங்களுடனும், மார்பில் அணைத்த உடைவாள்களுடனும் நிற்கும் கோலம் இவர்களைச் சிவாச்சாரியர்களாக ஏற்றுக் கொள்ள இடம்தர வில்லை. சிவாச்சாரியர்கள் எனக் குறிப்பிடப் போதிய கல் வெட்டுச் சான்றுகளும் இல்லை.

இந்த இராசராசேச்சரத்து நூற்றெண்மர் சிலைகளைப் பற்றி அறிய வேண்டுமாயின் தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் நாற்பத்தெண்மர் பற்றிய செய்தி களையும் ஒப்பிட்டு நோக்க வேண்டும். தஞ்சைப் பெருங்கோயில் திருச்சுற்றின் வடபுறத்தில் உள்ளது இந்த நீண்ட கல்வெட்டு.[2]

அதில் முதலாம் இராசராசப் பெருந்தகை இராசராசேசுவரமுடைய பரமசுவாமி முன்பு தினமும் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய (தேவாரம் பாட) நாற்பத்தெண்மரையும் உடுக்கை மற்றும் கொட்டி மத்தளம் வாசிப்பான் இருவரையும் நியமித்து அவர்களின் ஊர், பெயர், தீட்சை நாமம், அவர்களுக்குரிய ஊதியம், சலுகைகள், உரிமைகள் அனைத்தையும் தெளிவுபட எழுதிச் சென்றுள்ளார்.

பிடாரர்களாகத் திகழ்ந்த இவர்களது இயற்பெயர்களுடன் சதா சிவன், ஞாந சிவன், மநோத்ம சிவன், பூர்வ சிவன், தர்ம சிவன், கவச சிவன், சத்ய சிவன், வாம சிவன், நேத்ர சிவன், ஓங்கார சிவன், தத்புருஷ சிவன், உருத்ர சிவன், அகோர சிவன், விக்ஞானசிவன், யோக சிவன், ஈசான சிவன், இருதய சிவன், சிகா சிவன், சோம சிவன் என்ற பெயர்கள் இணைந்து காணப் படுகின்றன. இதேபோன்று தாராசுரம் கல்வெட்டுகளிலும் ஒவ்வொருவர் இயற்பெயருடனும் ஞான சிவர், பூர்வ சிவர், சோம சிவர், இருதய சிவர் போன்ற பெயர்களே காணப்படுகின்றன. இப்பெயர்களால் சிவாலயத்தில் பிடாரர்களாக (தேவாரம் பாடுபவர்களாக) நியமிக்கப்படும்போது அவர்கள் சிவதீட்சை பெற்றவர்களாக இருந்தால்தான் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யும் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டார்கள் என்பதை நன்குணர முடிகிறது. தேவாரம் பாடுபவர்களாகிய இப் பிடாரர்களுக்குச் சமுதாய நிலை உயர்ந்து விளங்கியது என்பதையும் இவர்களது மாதவூதியம் இன்றைய மதிப்பீட்டில் ரூ. 1200/- இற்கும் மேம்பட்டு இருந்தது என்பதையும் தஞ்சைப் பெருங் கோயில் கல்வெட்டுகளை ஆய்ந்த வல்லுநர்கள் கணக்கிட்டு உள்ளனர்.[3]

திருக்கோயில்களில் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வார்களாகிய பிடாரர்களை நியமிப்பது பல்லவ மன்னனாகிய நந்திவர்மன் காலத்திலேயே தோன்றிய ஒன்று. இவர்களுக்கு மாமன்னன் முதலாம் இராசராசன் காலத்தில் மிகுந்த ஆக்கம் கிட்டியது. ஆனால் நமது இரண்டாம் இராசராசனோ முன்னவர்களையும் விஞ்சி நிற்கிறான். நூற்றுக்கும் மேற்பட்ட பிடாரர்களைத் தமது சோழமண்டலத்தின் பல்வேறு ஊர்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து அவர்களை இராசராசபுரியான தாராசுரம் திருக் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய நியமித்ததோடல்லாமல் அவர்களது உருவச்சிலைகளையும் - கல்வெட்டுக் குறிப்புகளுடன் இந்திருக்கோயில் உள்ளளவும் நிலைத்து நிற்குமாறு செய்வித்த பணி வேறு எந்த மன்னனும் செய்யாத ஒன்றாகும்.

தனித்தன்மையுடன் திகழும் 7 சிலைகள் பற்றி அறிஞர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இவை மன்னர்கள் மற்றும் அவர்களால் ஆதரிக்கப்பட்ட சேக்கிழார், ஒட்டக்கூத்தர் போன்ற பெரும் புலவர்களின் சிலைகளாகக்கூட இருக்க வாய்ப்புள்ளது. வரலாற்று முக்கியத்துவமுடைய இந்தக் கல்லெழுத்துகள் சிதைந்து விட்டன. இவை மேலும் சிற்ப இயல் வல்லுநர்களால் ஆராயப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

முத்தமிழுக்கும் காவலனாகத் திகழ்ந்த இந்த இராசராசப் பெருந்தகை திருத்தொண்டர் தொகையடியார்களின் வரலாற்றை எவ்விதம் சிற்பமாக வடித்தானோ, அதே அளவு ஈடுபாட்டுடன் நாள்தோறும் இத்திருக்கோயிலில் தமிழ் பாடிய பெருந்தகையாளர்களுக்கும் நிலையான சிற்பங்களைச் செய்து போற்றியது சைவத்தின்பால் கொண்ட ஈடுபாடு மட்டுமன்றி தமிழின்பால் கொண்ட நாட்டமும் காரணமாகும்.

## குறிப்புகள்


1. Dr. Sivaramamoorthy - Chola Temples,
   S. R. Balasuaramaniam - Later Chola Temples.
2. தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகள் - தமிழக அரசுத் தொல்லியல் துறை வெளியீடு.
3. Dr. R. Nagasamy's article - about Tanjore Big Temple.

# மூன்றாம் குலோத்துங்கன்

**(கி.பி. 1178 - 1218)**

இரண்டாம் இராசாதிராசனுக்குப் பிறகு மூன்றாம் குலோத்துங்கன் கி.பி.1178- ஆம் ஆண்டு சோழ மண்டலத்தின் மாமன்னனாக முடிசூடினான்.[2] இவன் இரண்டாம் இராசராசனின் புதல்வன். சோழமன்னர்களின் ஒழுகலாற்றின்படி பரகேசரி என்ற பட்டம் புனைந்தான். இவனது மெய்க்கீர்த்திகள் 'புயல் வாய்த்து வளம் பெருக'. 'புயல் வாய்த்து மண் வளர','புயல் பெருக வளம்பெருக' 'மலர்மன்னு பொழிலேழும்' என்றும் மற்றும் 'பூமருவிய திசை முகத்தோன்' என்றும் தொடங்குகின்றன'. இவன் நாற்பது ஆண்டுகள் தமிழக வரலாற்றில் ஈடிணையில்லாப் பெரும் வீரனாக வாழ்ந்து வரலாறு படைத்தான்.

தெற்கே குமரி முதல் வடக்கே வேங்கி நாடு வரையிலும் இவனாட்சி பரவி இருந்தது. சேரநாடு, கொங்கு நாடு, பாண்டி நாடு, கங்க நாடு, தெலுங்க நாடு முதலிய புறநாடுகளெல்லாம் இவனது ஆட்சிக்கு உட்பட்டுத் திகழ்ந்தன என்பது வரலாறு கூறும் உண்மை.

சிறந்த சிவ பக்தனாய்த் திகழ்ந்த இம்மன்னவன் சிறந்த சமயப் பொறையாளனாகவும் திகழ்ந்தான். இவனது ஆட்சியில் வைணவம் கமழ்ந்து, பல விண்ணகரங்கள் ஏற்றம் பெற்றன. சமண, பௌத்தப் பள்ளிகளும் வளர்ச்சி கண்டு ஆக்கம் பெற்றன. பிற்காலச் சோழர்களின் கலை வளர்ச்சியில் இவனது காலமே பொற்காலமாகத் திகழ்ந்தது. திரிபுவனம் எனும் நகரையே தோற்றுவித்து அதில் திரிபுவன வீரேசுவரம் என்ற கோயிலையும் திருமாணித்தான்.[3] எண்ணிலாக் கோயில்கள் இவன் காலத்தில் திருப்பணி கண்டன.

மெய்க்கீர்த்திப் பாடல்கள் மட்டுமன்றி மற்றக் கல்வெட்டு களின் துணை கொண்டும் நோக்கும்போது மதுரைக் கோயிற் பணிகளைத் தவிர, தில்லையம்பலத்தில் பேரம்பலம் பொன் வேய்ந்தது, அம்பலவாணரது திருக்கோயில் முகமண்டபம் மூன்றாம் திருச்சுற்று மற்றும் சிவகாமியம்மையின் கோயிற் கோபுரம் முதலியவற்றை எடுத்தது, காஞ்சி, திருவிடைமருதூர், இராச ராசபுரம் (தாராசுரம்) ஆகிய இடங்களில் திருப்பணிகள் செய்தது, திருவாரூரில் இராசகோபுரமும் சபா மண்டபமும் கட்டுவித்தது முதலான வரலாற்று நிகழ்ச்சிகளைத் தெளிவாக அறிய முடிகிறது.

## தமிழ் வளர்த்த செம்மல்

தன் முன்னவர்களைப் போலவே தமிழ் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுப் புலவர் பெருமக்கள் பலரைப் போற்றினான். இவனது அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர் வீராந்த பல்லவ ரையர் ஆவர். இவரது வேண்டுகோளுக்கிணங்க இம்மன்னவன் காலவிநோத நிருத்தப் பேரரையன் பாரசிவன் பொன்னன் என்பவனுக்குத் திருக்கடவூர்க் கோயிலில் 'நட்டுவநிலை' என்ற விருத்தியளித்தான்.[4] இப்புலவர் குலோத்துங்கன் மீது பிரபந்தங் களும் பல தனிப்பாடல்களும் இயற்றி இருத்தல் கூடும் என்று பண்டாரத்தார் அவர்கள் கருதுகிறார்.

நேமிநாதம், வச்சணந்தி மாலை வெண்பாப் பாட்டியல் என்ற இலக்கண நூல்களை இயற்றியவரும் களந்தை வச்சணந்தி முனிவரின் மாணவரும் ஆகிய குணவீரபண்டிதர் என்பார் இம் மன்னவனால் ஆதரிக்கப்பட்ட புலவராவார்.[5] குலோத்துங்கன் காலத்தில் நிகழ்ந்த ஓர் அரிய நிகழ்ச்சி மாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகும். இப்பெருஞ்செயலை ஆற்றியவர் தொண்டைமண்டலத்துக் குன்றவர்த்தனக் கோட்டத்து இல் லத்தூர் நாட்டு அரும்பாக்கமுடையான் அறநிலை விசாகன் திரைலோக்கிய மல்லன் வத்சராசன் என்பார். வட திருவாலங் காட்டிலுள்ள குலோத்துங்கனது கல்வெட்டொன்று இப்புலவர் பெருந்தகையைப் 'பாரதந்தன்னை அருந்தமிழ்ப்படுத்துச் சிவநெறி கண்டவர்' என்று குறிப்பிடுகிறது.[6] தமிழ் இலக்கண நூலான 'நன்னூல்' என்பதனை இயற்றிய பவணந்தி முனிவர் இவ்வேந்தன் காலத்தில் வாழ்ந்தவராவார். இவனது காலத்தில் திருஈங்கோய் மலையில் தமிழ்ப் பெரும்புலவர் நக்கீரருக்குப் படிமம் எடுக்கப்

பட்டது. சைவ சமய குரவர்களான மூவர் முதலிகளுக்குப் பல திருக்கோயில்களில் படிமம் எடுத்துப் போற்றிய பெரு மன்னனும் இவனே. திருத்தொண்டர் மாக்காதை பாடிய சேக்கிழாருக்குத் திருவாஞ்சியத்திற்கு அருகிலுள்ள செவ்லூர் சிவன் கோயிலில் படிமம் எடுத்து நிவந்தங்கள் வழங்கினான். இவனது ஆட்சியில் தமிழ் மணம் நன்கு வீசிற்று.

## குலோத்துங்கனின் உருவச் சிலைகள்

நாற்பது ஆண்டுக்கால நல்லாட்சியில் எண்ணிலா அரும் பணிகளாற்றி, தலைசிறந்த கலைக்கூடங்களைப் படைத்துச் சென்றுள்ள இம் மன்னவனின் உருவச்சிலைகள் சோழமண்டலத்துத் திருக்கோயில்கள் பலவற்றுள் இன்றும் இடம் பெற்றுத் திகழ்கின்றன. இவற்றுள் பெரும்பாலான சிலைகள் இம்மன்னவன் தனக்குத் தானே எடுத்துக்கொண்ட சிலைகளாகும். இவனது மைந்தனான மூன்றாம் இராசராசன் தன் தந்தை இறந்த பிறகு அவனுடைய படிமத்தை எடுத்துப் போற்றினான். இச்சிலைகள் பற்றித் தெளிவாகச் சான்றுகளுடன் காண்போம்.

### திரிபுவன வீரேச்சரத்தில்...

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூருக்கு அருகில் திருபுவனம் எனும் ஊர் உள்ளது. இங்கு மூன்றாம் குலோத் துங்கன் மதுரையை வெற்றிகொண்ட பின்பு சூடிய 'திரிபுவன வீரதேவன்' என்ற தன் பெயரால், இப்பெரும் போரினால் கொணர்ந்த செல்வத்தைக் கொண்டு, விரிசடைப் பெருமானுக்குத் திரிபுவன வீரேச்சரம் எனும் கோயிலைச் சமைத்தான். இக் கோயிலில் மூன்று இடங்களில் உள்ள கல்வெட்டுப் பாக்களில் ஒன்று.[7]

"ஜித்வா ப்ருத்வீந்த்ரிபுவன வீரச்சதுரந்தாம்
ஞ்சக்ரே ஸ்தான ந்த்ரிபுவன வீரேச்வரமேதத்
நாநாஹர்ம்யப்ரகடித சோபஹம் பஹுத்யம்
வைமோத்துங்க ப்ரஹவிமானாஸ்தகிதார்கஹ"

என்று கூறுகிறது. இதனால் திசை நான்கும் வெற்றி கொண்ட திரிபுவன வீரதேவன் இவ்வூரையே தனது இருப்பிடமாகக் கொண்டு, பல திருச்சுற்றுகளையும், மாளிகைகளையும், வீதி களையும் உடையதும், கதிரவனின் பயணத்தையே தடுத்து

திருத்தக்கூடிய வானை முட்டும் உயர்ந்த விமானத்தையுடையது மாகிய திரிபுவன வீரேச்சரம் எனும் இக்கோயிலைப் பொன் மயமாக எடுப்பித்தான் " என்று அறிய முடிகிறது.

இம்மன்னவன் தோற்றுவித்த இத்திருக்கோயிலின் விதானத்திலும் உள் மண்டபத்தின் விமானத்திலும் இவனது உருவச் சிலைகளைக் காணலாம். விமானத்தில் இடம்பெற்றுள்ள கற்சிலையின் மேல் பிற்காலத் திருப்பணிகளின்போது சுதை பூசப்பட்டதால் எழில் குறைந்துவிட்டது. தலையில் முடிந்த கொண்டையும், இடுப்பில் அரையாடையும் கொண்டு, தாடி மீசைகளுடன் இறைவனை வணங்கும் கோலத்தில் உள்ளது இவ்வுருவச்சிலை.

இத்திருக்கோயிலின் தென்புறம் திகழும் மண்டபத்தின் உட்புற விதானம் முழுவதும் தொடர் சிற்பத் தொகுதிகள் பெற்றுள்ளன. இதில் ஓர் அற்புத வரலாற்று நிகழ்ச்சி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய மன்னனுடன் போரிடும் காட்சி, வெற்றி பெற்ற சோழன் முன்பு பாண்டியன் முடியை வைத்துப் பணியும் காட்சி, அரியணை முன்பு குலோத்துங்கன் நிற்பது போன்ற காட்சி முதலிய பல காட்சிகள் இடம் பெற்றுள்ளன. மார்பில் உடை வாளை அணைத்த வண்ணம் திரிபுவன வீரதேவனாகிய இம்மன்னவன் இறைவனை வணங்கும் கோலக் காட்சியும் இடற்பெற்றுள்ளது.

இத்திருக்கோயிலில் இராமாயணக் காட்சிகள், தேரூர்ந்த சோழன் வரலாற்றுக் காட்சிகள் இடம்பெற்று இருப்பது போலவே திரிபுவன வீரதேவன் பெற்ற மாபெரும் வெற்றிக் காட்சியும் இடம்பெற்றுத் திகழ்வதும் நோக்குதற்குரிய தாகும். இச்சிற்பக் காட்சி பற்றிய ஆய்வுகளோ, கட்டுரை களோ இதுவரை எதுவும் வெளிவரவில்லை.

திருவாலங்காட்டில்...

திரிபுவனத்திலிருந்து கிழக்கே நான்கு கல் தொலைவி லுள்ள ஓர் ஊரே திருவாலங்காடாகும். இத்திருவாலங் காட்டில் உள்ள சிவாலயம் குலோத்துங்கன் காலத்தில் ஏற்றம் பெற்றுத் திகழ்ந்ததாகும். இது இம்மன்னனால் பல திருப்பணிகள் செய்யப்பட்டுச் சிறப்படைந்தது. இத்திருக்கோயிலினுள் இடம் பெற்றுள்ள குலோத்துங்கனின் உருவச்சிலை இதுவரை நமக்குக்

கிடைத்துள்ள உருவச்சிலைகளின் வரிசையில் கலைச் சிறப்பால் முதன்மையானதாக மதிக்கப்படுவதாகும். இச் சிலையைக் குடந்தை திரு என். சேதுராமன் அவர்கள் முதன்முதலில் கண்டு வரலாற்றுலகுக்கு அறிமுகம் செய்தார். முனைவர் இரா. நாகசாமி, திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ஆகிய வரலாற்று வல்லுநர்கள் இச்சிலை பற்றிய சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.[8] இக்கட்டுரைகளில் இது மூன்றாம் குலோத்துங்கன் சிலைதான் என்பதைத் தெளிவுபட விளக்கி யுள்ளனர்.



மூன்றாம் குலோத்துங்கன்
திருவாலங்காடு

திருவாலங்காட்டுப் படிமத்தில் மாமன்னன் தன் கூப்பிய கரங்களால் மார்பில் வீர வாள் ஒன்றினை அணைத்துள்ளான். எழில்மிகு இச் சிலைக்கு மகுடமாகத் திகழ்வது முடிபோட்ட கொண்டைக்குமேல் திரு வடிகள் இரண்டினைச் சுமந்து நிற்பதே யாகும். தாடி, மீசைகள் திகழ, மார்பில் உருத்திராக்க மாலைகள் அணி செய்ய, பல மடிப்புகளுடன் நீண்ட ஆடை உடுத்தி நிற்கிறான். மாவீரன் ஒருவன் சைவச் செம்மலாய்க் கயிலைநாதனின் திருவடிகளைச் சுமந்து நிற்கும் இக் கோலக் காட்சியில் இதுவரை வேறு எந்த ஒரு மன்னனது சிலையும் நமக்குக் கிடைக்கவில்லை.

இத்தகைய கோலத்தில் தனது சிலையைப் படைத்துக் கொண்ட குலோத்துங்கனின் பெருமை சாதாரண ஒன்றா? பன்னிரு திருமுறைகளில் திருவிசைப் பாவினை வகுத்த கண்ட ராதித்த சோழர், சிவபாத சேகரன் எனத் தன்னைக் கூறிக் கொண்ட முதலாம் இராசராசசோழன், திருத் தொண்டர் மாக்காதை எழுதச் செய்து, தில்லையம்பலக் கூத்தனின் பொற் பாதங்களாகிய தாமரை மலரை மொய்க் கின்ற வண்டுதான் தான் என்று கூறிக்

கொண்ட இரண்டாம் குலோத்துங்கன் ஆகிய மாமன்னர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவனல்லவா இவன் . . . ! அதனால் தான் தனது உருவச்சிலையில் சிவனடிகளைத் தன் தலையால் தாங்கும் கோலம் பெற்றான்.

பா தொடுப்பவராகவும், பாத சேகரராகவும், பாத கமலங்களை மொய்க்கும் வண்டுகளாகவும் தங்களைப் பெருமைப்படுத்திக் கொண்ட சோழர்களின் வழிவந்த இம்மன்னவன், சிவ பெருமானின் திருவடிகளைத் தன் தலைமேல் சூடிக்கொண்டு சிலையாகத் திருவாலங்காட்டில் நிற்பதைக் காணும்போது,

" நனைந்து அனைய திருவடி என் தலைமேல் வைத்தாய்
நல்லூ ரெம் பெருமானார் நல்லவாறே " -

என்ற அப்பர் பெருமானின் நல்லூர்ப் பதிகமும், திருச்சிராப்பள்ளி லலிதாங்குர பல்லவேசுர கிருகத்தில் சிவபெருமானின் திருவடிகளைத் தன் தலையால் தாங்குகிறேன் என்று கல்வெட்டுப் பாக்களால் கூறி, அவ்வாறே தாங்கிச் சிலையாக நிற்கும் மகேந்திர போத்தரையனின் சிற்பமும் நம்முன் தோன்றி, தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவும் ஒரு பண்பு நலனை நம் நினைவிற்குக் கொணர்கின்றன.

**ஆரூரில் . . . . .**

" சிறைகொண்ட புனல் வையைச் சேர பாண்டிய மண்டலத்து இறைகொண்ட பசும்பொன்னும் இறையிலியும் எயிற்புலியூர் ஆடும் அம்பலவாணர் கூடி வாய்ந்த திருநடங் கண்டருளும் பாடகக்காற் பைங்கிளிக்கும் பைம்பொன் மதிள் திருவாரூர் வானவற்குந் திரிபுவன வீரேச்சுர அருந்தவர்க்கும் தேன்விரிசடை திருவாலவாய்ச் செழுஞ் சுடர்க்கும் கொடுத் தருளியதாகப்" பெருமை பேசும் மூன்றாம் குலோத்துங்கன் தான் மதுரை நகரில் சூடிய 'திரிபுவன வீரன்' என்ற பட்டத்தைத் திருவாரூர்க் கல்வெட்டுகளில்தான் முதன் முதலில் குறித்தான்.[9] கி. பி, 1202 - ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட இக் கல்வெட்டின் துணையால்தான் மதுரைப் போர் கி. பி. 1202 - இற்கும் முற்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்.

இவனது திருபுவனம் கிரந்தக் கல்வெட்டு,
" வல்மீகேமச்வர வேச்வசேதி நிகிலம்
நிர்மாய ஹைமந்த் ந்ருபோ
வல்மீகாதிபதேச்சகாரச ஸபாம்
திவ்யாம் மஹத் கோபுரம் "

என்று கூறுகிறது. எனவே திருவாரூரில் வன்மீக நாதருடைய கோயிலைப் பொன்மயமாகச் செய்ததோடு வன்மீக நாதரின் சபையையும், பெரிய இராச கோபுரத்தையும் கட்டினான் என்பதையும் அறிய முடிகிறது.

எனவே மதுரை வெற்றிக்குப் பிறகு திருவாரூரில் கிழக்கு இராச கோபுரத்தை இம்மன்னவன் எடுத்து, பல அரிய சிற்பங்களையெல்லாம் இடம்பெறச் செய்தான். வரலாற்றுச் சிறப்புடைய இந்த இராச கோபுரத்தின் உட்புறம் திருக்கோயிலை நோக்கிய வண்ணம் உள்ள கோஷ்டம் ஒன்றில் (தென்புறம்) தன் உருவச்சிலையையும், வடபுறக் கோஷ்டம் ஒன்றில் தனது குருவான ஈஸ்வரசிவனாரின் உருவச்சிலையையும் இடம்பெறச் செய்ததோடு இவ்விரு சிலைகளின் பீடத்திலும் அவர்கள் பெயர்களைக் கல்வெட்டுகளாகப் பொறிக்கவும் செய்தான்.

சுமார் மூன்றடி உயரமுடைய இப்படிமம் தலையில் கொண்டையும், தாடி, மீசைகளும் திகழ, இடுப்பில் ஆடை உடுத்தி, வன்மீக நாதனை வணங்கும் கோலத்திலுள்ளது. இவ்வுருவச்சிலை மற்ற இடங்களிலுள்ள இவனது சிலைகளை ஒத்தே உள்ளது.

கொற்கையில் . . .

கும்பகோணத்தை ஒட்டியதோர் சிற்றூர் சோழர்கள் காலத்தில் குறுக்கை என்றழைக்கப்பட்டது. தற்போது இது கொற்கை என்ற பெயரில் பழையாறை, நந்திபுரம் எனும் ஊர்களுக்குக் கிழக்காகத் திகழ்கிறது. இவ்வூரில் உள்ள சிவாலயத்தில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய கல்வெட்டும் அவனது உருவச்சிலையும் உள்ளன. இவ்வுருவச்சிலை சுமார் 6 அடி உயரமுடைய ஒன்றாகும். திருவாலங்காட்டிலுள்ள உருவச்சிலையை ஒத்தே காணப்படுகிறது. தலையில் திருவடிகள் சுமந்து நில்லாமல் முடிந்த கொண்டை, தாடி, மீசைகள், மார்பில் அணைத்த உடை வாள், நீண்ட ஆடை, மார்பில் உருத்திராக்க மாலை இவற்றுடன் இச்சிலை காட்சி நல்குகின்றது.

கும்பகோணத்தில்

திருக்குடந்தை சாரங்கபாணித் திருக்கோயிலின் முதல் திருச்சுற்று மண்டபத்தில் கருவறைக்கு நேர் பின்புறம் இம் மன்னவனின் உருவச்சிலை கொற்கையில் உள்ளது

போன்றே உள்ளது. இத் திருக்கோயிலின் கருவறை மூன்றாம் குலோத்துங்கனால் தேர் அமைப்பில் கட்டப்பட்ட ஒன்று என்பதைக் கல்வெட்டு மற்றும் சிற்ப இயல் வல்லுநர்கள் குறித்துள்ளனர். இன்று இக்கோயிலில் காணும் அனைத்துச் சிற்பங்களும் இம்மன்னவன் காலத்திய கலைப்பணிகளே. ஆனால் இன்று இம்மன்னவனின் உருவச்சிலைக்கு ஒரு வைணவ அடியாரின் பெயரிட்டு, திருமண் சாத்தி வழிபாடு நடத்துகின்றனர்.

குடவாயிலில்....

தற்போதைய குடவாசல் எனும் பேரூரின் ஒரு பகுதியாகத் திகழ்வது அகரஓகை எனும் கிராமமாகும். இது சோழர்கள் காலத்தில் அருள்மொழித்தேவ வளநாட்டுச் செற்றூர்க் கூற்றத்து ஓகை என அழைக்கப்பட்டது. இவ்வூரிலுள்ள கைலாயநாதர் திருக்கோயில் சோழர்காலக் கற்றளியாகும். இதில் மூன்றாம் குலோத்துங்கனின் ஒரே கல்வெட்டு மட்டும் உள்ளது. இக் கல்வெட்டு இவனது பத்தாம் ஆட்சியாண்டுக்கு முன்பு எழுதப் பட்டதாகும். எனவே இக்கற்றளி இவனது ஆரம்ப காலப் படைப்பு களுள் ஒன்று.



மூன்றாம் குலோத்துங்கன்
அகர ஓகை

இத்திருக்கோயிலின் மண்டபம் ஒன்றில் சோழமன்னன் என்ற பெயரில் பூசிக்கப்படும் ஒரு சிலை உள்ளது. இது சுமார் நான்கடி உயரமுடையது. தலையில் கொண்டையிட்டு, சிறிய தாடியும், மீசைகளும் திகழ இடுப்பில் ஒரு வாளைத் தரித்த வண்ணம் வணங்கும் கோலத்தில் வடிக்கப் பட்டுள்ளது. இச்சிலையின் தோற்றத்தாலும், கல்வெட்டுச் சான்றாலும் இது குலோத்துங்கனின் மத்திய வயதில் வடிக்கப்பட்ட சிலை எனக்கொள்ள முடிகிறது.

பின்னாளில் உள்ள அனைத்துச் சிலைகளிலும் உடை வாளைத் தரிக்காமல் மார்பில் அணைத்த வண்ணம் திகழ்வதும், இங்கு இடுப்பில் தரித்த வண்ணம் உள்ளதும் நோக்குதற்குரியதாகும்.

திருக்கொள்ளம் பூதூரில்

'கோட்டமே கமழும் கொள்ளம் பூதூர்' என்று ஞான சம்பந்தப்பெருமானார் போற்றும் திருக்கொள்ளம் பூதூர் தஞ்சை மாவட்டம் குடவாசல் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூராகும். இங்கு மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகளுடன் திகழ்ந்த கற்பலகைகளை இந்த நூற்றாண்டில் நகரத்தார் புதுக்கியபோது முற்றிலுமாக அழித்துவிட்டனர். மத்தியத் தொல்லியல் துறையி னரின் பதிவேடுகளில் இவ்வூரிலிருந்து படி எடுத்த கல்வெட்டுகள் அனைத்தும் மூன்றாம் குலோத்துங்கனுடையவை என்று குறிப்பி டப்பட்டுள்ளன.

புதுக்கிய இத்திருக்கோயிலின் முதல் திருச்சுற்று மண்டபத்தின் மேற்குப் பகுதியில், கருவறைக்குப் பின்புறம் ஒரு மன்னவனும் அவனுடைய தேவியும் இறைவனை வணங்கும் கோலத்திலுள்ளனர். இச்சிலைகளைச் சோழமன்னனும் அவனது பட்டத்தரசியும் என்று பாரம்பரியமாகக்கூறி, பூசைகளும் செய்து வருகின்றனர். இது தாடியில்லாத குலோத்துங்கனின் இளமைக் கோல உருவச்சிலை எனக் கொள்ள வாய்ப்புள்ளது. சிற்ப அமைதி பிற்காலச் சோழர்களின் பாணியாகும். இதனை மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் அவனது தேவி என்று திரு பட்டாபிராமன் புதுவை மாநிலப் பிரெஞ்சு-இந்தியக் கழகத்தின் பதிவேட்டில் குறித்துள்ளார்.[10] இது ஏற்புடைய கருத்தேயாகும்.

திருமண்டங்குடியில்...

மண்டங்குடி எனும் ஊர் திருவேரகமாம் சுவாமிமலைக்கு வடமேற்கே சிலகல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூராகும். இவ் வூருக்கு முன்பு கூனஞ்சேரி என்ற ஒரு சிறிய ஊர் உள்ளது. இங்கு உள்ள மிகப் பிற்காலத்திய கோயிலொன்றுள், மண்டங்குடி இடி பாடுற்ற கற்றளியிலிருந்து எடுத்துவரப்பட்ட பல சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வரிசையில் இரண்டு மிக எழில்வாய்ந்த கற்படிமங்கள் உள்ளன. இவற்றுள் ஒரு படிமம் தலையில் கொண்டை, தாடி, மீசைகளுடன், நின்ற கோலத்தில் வலக்கரம் அபய முத்திரையும், இடக்கரம் வாளையும் தாங்கிய வண்ணம் திகழ்கிறது.



மூன்றாம் குலோத்துங்கன்
திருமண்டங்குடி

இடிபாடுற்ற கற்றளியில் (மண்டங்குடி) உள்ள கல்வெட்டுகளைத் தொகுத்து நோக்கும் போது கி. பி. 1210 - 1216-இல் மூன்றாம் குலோத்துங்கன் திரிபுவன வீரேச்சரமுடையார் திருக்கோயில் என்ற பெயரில் ஒரு திருக்கோயில் கட்டத் துவங்கியதை அறிய முடிகிறது.[11] இப்பணி இவன் இறந்த பிறகு இவனது மகனான மூன்றாம் இராசராசனால்தான் நிறைவெய்தியது என்பதையும் இக்கோயில் கல்வெட்டுகளே எடுத்தியம்புகின்றன.

மூன்றாம் இராசராசன் தன் தந்தைக்கும், தனக்கும் இக்கோயிலில் படிமம் எடுத்தான். தன் படிமத்தை இறைவனை வணங்கும் கோலத்திலும், தன் தந்தையான குலோத்துங்கன் மறைந்த காரணத்தால், பிதுர் எனக் கொண்டு அவனுக்குத் தெய்வ அமிசமளித்து அபய கரத்துடனும், மாவீரன் என்பதால் வாள் ஏந்தும் கரத்துடனும் சிலையை வடித்து இங்கு இடம்பெறச் செய்தான். பின்னாளில் திரிபுவன வீரேச்சரமுடையார் கோயில் இடிபாடுற்றுப் பாழடைந்தவுடன் இவ்வூர் மக்கள் இக்கோயிலிலிருந்த சிற்பங்கள் அனைத்தையும் கூனஞ்சேரியில் வைத்துப் பேணினர்.

திருவலஞ்சுழியில்...

தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழி அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயில் சோழப்பெருமன்னர்கள் காலத்தில் மிகவும் ஏற்றம் பெற்ற ஒரு திருக்கோயில். இத்திருக்கோயிலின் முக மண்டபத்தில் பலி பீடத்தை ஒட்டி ஒரு விநாயகர் கோயில் உள்ளது. இது முற்றிலும் கலை அமிசத்தால் மூன்றாம் குலோத்துங்கன்

காலத்திய ஒன்றாகும். புதுமையாக உள்ள இக்கோயில் எடுக்கப் பட்டதன் காரணம் இம்மன்னன் காலத்தில் இவ்வூரில் நிகழ்ந்த சில தீய நிகழ்ச்சிகளேயாகும். இறைவனின் கோபத்தைத் தணிக்கும் பொருட்டு அவனது பார்வையில் இக்கோயில் அமைக்கப்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர். இந்த விநாயகர் கோயிலின் முன் மண்டபத்தில் உட்புறச் சுவரில் குலோத் துங்கனின் சிறிய உருவச்சிலை இறைவனை வணங்கும் கோலத்தில் உள்ளது. இதன் தோற்றம் மற்ற இடங்களிலுள்ள சிலைகளை ஒத்தே காணப்படுகிறது.

பட்டீச்சரத்தில் . . . .

பட்டீச்சரம் தேனுபுரீசுவரர் திருக்கோயிலில் அம்மன் திருக்கோயிலுக்குச் செல்லும் வழியின் சுவரில் ஒரு சிற்பத் தொகுதி காணப்படுகிறது. இங்குத் தாடி, மீசைகளுடன் உள்ள ஒரு மன்னவன் சிவலிங்கத்தை வணங்கும் கோலத்தில் காணப்



மூன்றாம் குலோத்துங்கன்-பட்டீசுவரம்.

படுகிறான். இத்திருக்கோயில் பின்னாளில் விசயநகர மன்னர் களால் திருப்பணி செய்யப்பட்டு, புதிய கட்டுமானங்கள் பெற்றன. பழைய கல்வெட்டுகள் (சோழர்கள் காலம்) மறைந்துவிட்டன. எனவே, இது மூன்றாம் குலோத்துங்கனின் உருவச்சிலை என்று மெய்ப்பிப்பதற்குப் போதிய கல்வெட்டுச் சான்றுகள் இல்லையாயினும், சிற்ப அமைதி, மற்றச் சிற்பங்

களுடன் ஒப்புமை ஆகிய காரணங்களால் இதனை மூன்றாம் குலோத்துங்கனின் சிற்பமாகவே கொள்ளலாம்.

மாத்தூரில் . . . . .

தஞ்சை மாவட்டம் ஐயம்பேட்டைக்கருகிலுள்ள மாத்தூரில் குலோத்துங்கன் காலத்திய கற்றளி இருந்து பின்னர் இடிபாடுற்றதாகவும், அதில் அம்மன்னவனின் சாசனப் பகுதிகள் இருப்பதையும், அங்குத் தலை வேறு, உடல் வேறாகக் காணப்பட்ட ஓர் உருவச்சிலையையும் கண்டுபிடித்து, இது இக்கோயில் எழக் காரணமாகத் திகழ்ந்த மூன்றாங் குலோத்துங்கனின் சிலை என்பதாகவும் தஞ்சை திரு ந. செல்வராஜ் அவர்கள் தம் கட்டுரையில் கூறியுள்ளார். மேலும் இவ்வுருவச் சிலையைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாகவும் நல்கியுள்ளார். இவ்வுருவச்சிலை தாடி, மீசைகளுடன் மார்பில் உடை வாளை அணைத்த வண்ணம் வணங்கும் கோலத்தில் உள்ளது. இது அவனது மற்றச் சிலைகளை ஒத்தே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பல திருக்கோயில்களில் இம்மன்னவன் உருவச் சிலைகள் இடம் பெற்றுள்ளன. இதனை ஒத்த உருவச்சிலைகள் மயிலாடுதுறை மயூரநாதர் திருக்கோயில் முதலான பல திருக்கோயில்களிலும் காணப்படுகின்றன. இவை பற்றி மேலும் முழுமையாக ஆராயப்பட வேண்டும்.

## குறிப்புகள்

1) Ep. Ind. Vol.VIII, P.260
2) Inscriptions of pudukottai State, No: 166
3) A.R.E. for 1908 Part-II, Para-64.
4) Ins. 255 of 1925
5) வச்சணந்தி மாலை வெண்பாப் பாட்டியல் பாயிரவுரை.
6) Ins.482 of 1905
7) South Indian Temple inscriptions Vol.II.pp.945-50.
8) South Indian Studies Vol.I By Dr.R.N. Later Chola Temples, By S R.B.
9) Ins. 554 of 1904
10) Felicitation Volume of K.A.N.Sastri-Page 467
11) Article of N.Sethuraman (in Print)
மன்னு பெரும்புகழ் மண்டங்குடி-குடவாயில் பாலசுப்பிரமணியன், தினமணி 26-2-1978.

# ஈசுவரசிவர் எனும் சோமேசுவரர்

கி.பி.1178-1218 வரை சோழமண்டலத்தைச் செங்கோலோச்சிய பெருமன்னன் மூன்றாங் குலோத்துங்கனாவான்.[1] இம்மன்னனின் வணக்கத்திற்குரிய இராச குருவாகத் திகழ்ந்தவர் ஈசுவரசிவர் எனும் சோமேசுவரராவார். இம்மன்னனின் வெற்றிச் சின்னமாக எடுக்கப்பட்ட திரிபுவனஈச்சரம்எனும் திருக்கோயிலுக்குக் கடவுண் மங்கலம் செய்தவரும் இத்த ஈசுவரசிவரேயாவார். அதனைத் திரிபுவனம் திருக்கோயிலில் மூன்று இடங்களில் காணப்படும் கிரந்தக் கல்வெட்டுப் பாடல்களால் அறியலாம்.[2] இவற்றில் மிகத் தெளிவாக உள்ள கல்வெட்டு, கிழக்கு இராசகோபுர வாயிலின் வடபுறச் சுவரில் காணப்படுகிறது.

பத்து சுலோகங்களால் ஆன இக்கல்வெட்டுப் பாவில் ஒன்பது, பத்தாவது சுலோகங்கள் ஈசுவரசிவரின் பெருமைகளைப் பேசுகின்றன, எட்டாவது சுலோகம் "புவனத்தின் திசை நான்கும் வெற்றிகொண்ட திரிபுவன வீரதேவன் இவ்வூரையே (திரிபுவனம் எனும் குடந்தைக்கருகே அமைந்த ஊர்) தன் இருப்பிடமாகக் கொண்டு, கதிரவனின் பயணத்தையே தடுத்து நிறுத்தக்கூடிய விண்ணை முட்டும் விமானத்துடனும், பொன் மயமான அழகுடனும் திகழும் திரிபுவனவீரேச்சரம் எனும் இத்திருக் கோயிலை எடுப்பித்தான்" என்று கூறுகிறது.

ஒன்பதாம் சுலோகம் :

ஸ்ரீகண்டசம்புத நயே ந பதிம் நிருபாணும் பாண்டாரீ ரீசரசிவே
கமனை

ஸோமேசரேண குருணு புவநஸ்யபித்ரோச்சரேஷ்டா தகாரய
தஸௌ சிவயோ : ப்ரதிஷ்டாம்

ஸ்ரீ கண்ட சம்புவின் புதல்வரும், தன்னுடைய குருவுமான ஈசுவர சிவர் எனும் சோமேசுவரரைக் கொண்டு அகிலமனைத்திற்கும் அம்மையப்பராகத் திகழும் பரமசிவன் பார்வதி ஆகிய இரு-வரையும் மிகச் சிறப்பாகப் பாண்டியாரி எனும் குலோத்துங்கன் கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) செய்வித்தான்.

பத்தாம் சுலோகம் :

வித்யாயேந மநிஷிணு நிகஷிதா
ஸ்தாணோர்யேந விவிக்தமோபநிஷதம்
விச்வாஸகத்பர் பஹோா :
வேதாகார ச் சைவதர்சநத்ருசா
வித்தாந்தே ரத்நாகரோ
ராக்ஞோயஸ்ய குருஸ்ஸ சிவரசிவ ;
அஸ்ஸ்ய ம்ருக்யோ குண :

"இராச குருவான அந்த ஈசுவரசிவர் வித்வான்களில் சிறந்தவர். பதினெட்டு சிவபுராணங்களையும் தெளிய அறிந்தவர். பெருமானின் உயர்வைச் சொல்லும் உபநிடதங்களை விரிவுபடச் சொல்பவர். சைவ தர்சனத்தை அனுபவத்தில் கண்டவர். சித்தாந்த இரத்னாகரம் எனும் நூலை இயற்றியவர். யாரே அவரது குணத்தைத் தேடியடைய முடியும்..." ?- என்று கூறுகிறது.

இவர் அச்சுதமங்கலம் திருக்கோயிலைக் கட்டுவித்தவர் என்பதையும்[3], தில்லைத் திருக்கோயிலில் சரசுவதி பண்டாரகம் எனும் நூலகம் ஒன்றை நிறுவினவர் என்பதையும்[4] கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது.

இக்கல்வெட்டுச் சாசனங்களால் ஈசுரவசிவர் மூன்றாம் குலோத்துங்கனின் இராச குருவாக மட்டுமன்றி, தலைசிறந்த அறிஞராகவும் திகழ்ந்திருக்கிறார் என்பதனை அறிய முடிகிறது. இவரது தந்தையான ஸ்ரீ கண்ட சம்பு என்பவர் விக்கிரம சோழனின் (கி. பி. 1118-1136) இராச குருவான ஸ்ரீகண்ட சம்பு என்பவராக இருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.[5] இதே திரிபுவனக் கல்வெட்டின் 7-ஆம் சுலோகம்

"வன்மீகநாதரின் (ஆரூர்) கோயிலை இப்பூவுலகில்
பொன்மயமாக விளங்கும்படி அமைத்ததோடு
வன்மீகநாதரின்
சபையையும் பெரிய கோபுரத்தையும் கட்டினான்" -

என்று குலோத்துங்கனின் புகழ் பாடுகிறது. இவனது தமிழ்க் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி, புனல் வையை சோழ பாண்டிய மண்டலத் திறை கொண்ட பசும்பொன்னைத் திருவாரூர் வான வர்க்கு அளித்ததாகக் குறிப்பிடுகிறது. மேலும், திருவாரூர்த் திருக் கோயிலின் கிழக்கு இராசகோபுரம் மூன்றாம் குலோத்துங்கனால் தான் எடுக்கப்பட்டது என்பது அக்கோபுரத்தின் தென்புறக் கோஷ்டம் ஒன்றில் கல்வெட்டுக் குறிப்புடன் தனது உருவச் சிலையை இம்மன்னவனே வைத்துள்ளதால் உறுதிப்படுகிறது.

### ஈசுவரசிவரின் உருவச்சிலை

இதே கிழக்குக் கோபுரத்தின் நுழைவாயிலை ஒட்டி, வடபுறம் (திருச்சுற்று உள்ள பகுதி) உள்ள கோஷ்டம் ஒன்றில் (மாடம் ஒன்றில்) ஓர் அடியவரின் உருவம் இரண்டு கைகளும் உடைக் கப்பட்ட நிலையில் உள்ளது. மிக அழகிய இவ்வுருவசசிலை நீண்ட தாடியும், அணி செய்யப்பட்ட கொண்டையும் பெற்று இடையில் உள்ள நீண்ட ஆடை யின்மேல் வேலைப்பாடுகள் கொண்ட துண்டு ஒன்றும் கட்டப் பட்டுக் காணப்படுகிறது. கொண் டையின் மீது பரிவட்டம் சுற்றப் பட்டுள்ளது. மார்பில் மிக நீண்ட உருத்திராக்க மாலையும், முப்புரி நூலும் திகழ்கின்றன.



ஈசுவரசிவர்
திருவாரூர்த் திருக்கோயில்

மன்னனுக்குரிய மகுடமோ, இடுப்பில் உடைவாளோ அன்றி, ஒரு பெரிய ஞானிக்குரிய பொலிவு டன்மார்பில் புரிநூலும்(யக்ஞோப விதமும்)உருத்திராக்க மாலையும் கொண்டு திகழும் இப்படிமம் ஒரு சைவச் சான்றோருடையது என் பதைப் பார்த்த அளவிலேயே கூறிவிட முடியும். இவ்வுருவச் சிலையின் பீடத்தில் ஒரு கல் வெட்டு இருந்து பின்னாளில் சிதைந்துள்ளது. சிதைந்த நிலை யில் உள்ள இக்கல்வெட்டைப் படி எடுத்துப் படித்தபோது 'சோமேஸ்..' என்ற சில எழுத்

துக்களையே படிக்க இயலுகிறது. இக்கல்வெட்டுச் சான்றாலும், சிலையின் தோற்றத்தாலும் இவ்வுருவச்சிலை ஈசுவரசிவர் எனும் சோமேசுவரருடையதுதான் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

திரிபுவனம் இராசகோபுரத்திலும் அதே திருக்கோயிலின் பிற இரண்டு இடங்களிலும் தனது புகழையும், தனது குருவான ஈசுவரசிவனாரின் புகழையும் கல்வெட்டுகளில் பொறித்துள்ள குலோத்துங்கன், திருவாரூர் இராச கோபுரத்தில் தன் உருவச் சிலையையும், தன் இராச குருவான ஈசுவரசிவரின் உருவச்சிலையையும் எடுத்துள்ளது எத்தனைப் பொருத்தமாக உள்ளது.

## குறிப்புகள்

1) பிற்காலச் சோழர் வரலாறு - *சதாசிவபண்டாரத்தார், 1974,* பக்கம்-*395.*
2) Ins. 190 of 1907
3) A.R.E. 1925-Achutamangalam inscriptions.
4) A.R.E. 1981-82-Chidambaram inscriptions.
5) A.R.E. for 1908, Part-III, Para-64.
   பிற்காலச் சோழர் வரலாறு சதாசிவபண்டாரத்தார்,
   பக்கம்-412.

# கௌதமன் தில்லை வனமுடையான்

தமிழக வேந்தர்களுக்கும் மேலைச் சாளுக்கியர்களுக்கும் பல்லவர்கள் காலத்திலிருந்து பகைமையும் போர்களும் தொடர் கதைகளாகவே திகழ்ந்தன. சாளுக்கியர்களைப் பல்லவர்களும், சோழர்களும் வென்ற பல வரலாறுகள் உண்டு. மேலைச் சாளுக்கியர்களுடன் நிகழ்ந்த போர்களில் முதலாம் இராசேந்திர சோழன் பெற்ற பெருவெற்றி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதில் சாளுக்கிய மன்னனான செயசிம்மனை கி. பி. 1020-இல் தோல்வி யுறச் செய்து வெற்றி வாகை சூடினான்[1], இப்பெரு வெற்றிக்குக் காரணமாய்த் திகழ்ந்தவன் இவனது தளபதியான அரையன் இராசராசனாவான்.[2]

சாளுக்கிய மன்னனோடு பொருதுபட்டுக் களத்தில் வாகை சூடிய அரையன் இராசராசனுக்குக் கடாரம் கொண்ட இம் மன்னவன் 'செயசிம்ம குலகாலன்' என்ற சிறப்பு விருதை அளித்துப் பாராட்டினான். இதை இராசேந்திரனின் கல் வெட்டுகள் சிறப்பாகப் பேசுகின்றன. சோழ மன்னர்கள் தங்கள் வெற்றியின் சின்னங்களாகச் சூடிக்கொண்ட தங்கள் விருதுகளின் பெயர்களிலேயே சோழமண்டலத்து வளநாடுகளுக்கும், கூற்றங் களுக்கும், ஊர்களுக்கும் பெயரிட்டனர். இதை அவர்கள் வீரத்தைச் சிறப்பிக்கும் மரபாகப் போற்றினர். இவ்வகையில் அமைந்ததே பாண்டிய குலாசனி வளநாடு (பாண்டிய குலாசனி = பாண்டியர் குலத்திற்கு இடி போன்றவன்). கேரளாந்தக வளநாடு போன்றவையாகும்.

ஜெயசிங்க குலகாலன்' - (செயசிம்மன் என்ற சாளுக்கிய மன்னனின் குலத்திற்கே இயமன் போன்றவன்) என்ற விருதைச் சிறப்பிக்கும் வண்ணம் சோழ மண்டலத்து

ஊர் ஒன்று 'ஜெயசிங்க குலகாலபுரம்' என்றும், ஒரு வளநாடு 'செயசிங்க குலகால வளநாடு' என்றும் சிறப்புப் பெயர்களை இராசேந்திர சோழன் காலத்தில் பெற்றன.

செயசிங்க குலகாலபுரம் எனும் இவ்வூர் இன்று தஞ்சை மாவட்டம் குடவாயில் வட்டத்திலுள்ள 'சேங்காலிபுரம்' என அழைக்கப்படும் ஒரு சிற்றூராகும். இவ்வூரிலுள்ள 'இராசேந்திர சோழீச்சரம்' என்ற கற்றளியில் உள்ள மூன்றாம் குலோத் துங்கனின் கல்வெட்டும், 'பூம்பொழிலீச்சரம்' எனும் பிறிதோர் கோயிலில் உள்ள சோழர்கள் மற்றும் போசல மன்னன் வீர சோமேசுவரனின் கல்வெட்டுகளும் இவ்வூரைச் 'ஜெயசிங்க குலகாலபுரம்' என்றே குறிப்பிடுகின்றன.

சோழர்கள் ஆட்சியில் குலோத்துங்க சோழ வள நாட்டுச் செற்றூர்க் கூற்றத்துச் செயசிங்க குலகாலபுரம் என அழைக்கப்பட்ட இவ்வூர் காலப் போக்கில் சிங்க குலகாலபுரமாகி, பின்பு சேங்காலிபுரமாக மருவி விட்டது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய இவ்வூரில் உள்ள 'பூம் பொழிலீச்சரம்' எனும் திருக்கோயிலைக் கி.பி. 12-ஆம் நூற் றாண்டில் கற்றளியாகத் திருப்பணி செய்தவர் சலிகன் கௌதமன் தில்லைவனமுடையான் அரையன் என்பவராவார். இவர் இக்கற்றளித் திருப்பணி செய்வித்தமையை இத் திருக்கோயிலில் கல்லில் பொறித்ததோடன்றி, சிறப்புமிகு இக் கல்வெட்டிற்குக் கீழாகவே தனது உருவச்சிலையையும் அமைத் துள்ளார்.

இன்று மேலக்கோயில், துந்துபீசுரர் திருக்கோயில் என்றெல்லாம் அழைக்கப்படும் இப் பூம்பொழிலீச்சரத்தில் கருவறையின் தென்புறச் சுவரில் அதிஷ்டானத்திற்கு மேலாக (பாதவர்க்கப் பகுதியில்) ஆலமர் செல்வரின் தேவ கோஷ்டத் திற்குக் கீழ்ப்புறம் சுமார் ஓர் அடி உயரத்தில் இரு கைகளையும் கூப்பிய வண்ணம் முடிந்த கொண்டை, தாடி. மீசைகளுடனும் நீண்ட துளைக்காதுகளுடனும் கைகூப்பி வணங்கும் கோலத்தில் அடியவர் ஒருவரின் உருவம் கற்சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இச் சிற்பத்திற்கு மேலாக "ஸ்வஸ்தி ஸ்ரீ இத் திருக்கோயில் திருக்கற்றளி திருப்பணி செய்வித்தார் கங்கைகொண்ட சோழ புரத்து முடிகொண்ட சோழப் பெருந்தெருவில் இருக்கும் சலிகன் கௌதமன் தில்லைவனமுடையான் அரியான்" - என்ற கல்லெழுத்து வரிகள் காட்சி நல்குகின்றன.





கௌதமன் தில்லைவனமுடையான்

கி.பி.12-13 நூற்றாண்டு எழுத்தமைதியுடன் திகழும் இக் கல்வெட்டுச் செய்திகளால் இங்கு இடம் பெற்றுள்ள வரலாற்று நாயகன் சலிகன் கௌதமன் தில்லைவனமுடையான் என்பதை அறிய இயலுகிறது. இவர் கடாரம் வென்ற இராசேந்திர சோழன் அமைத்த தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழப்பெருந்தெருவில் வசித்தவர் என்பதும், இப் பெருமகனே பூம்பொழிலீச்சரம் எனும் இத் திருக்கோயிலைக் கற்றளியாகத் திருப்பணி செய்தார் என்பதும் அறியப் படுகின்றன.

மேலும், இவ்வூரின் பிறிதோர் கற்றளியான இராசேந்திர சோழீச்சரம் எனும் திருக்கோயிலின் கல்வெட்டுகள் கங்கை கொண்ட சோழபுரத்துக் குலோத்துங்க சோழப் பெருந்தெருவில் இருக்கும் சாலிகன் பெருமான் என்பானின் மனைவி அளித்த பல அறக்கொடைகள் பற்றி விவரிக்கின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள கல்வெட்டுகளால் புகழ்பெற்ற கங்கை கொண்ட சோழபுரத்தில் முடிகொண்ட சோழப் பெருந்தெரு, குலோத்துங்க சோழப் பெருந்தெரு என்ற தெருக்கள் இருந் தமையை அறிகிறோம். இவ்வரலாற்று நாயகனான கௌதமன் தில்லைவனமுடையானும் மற்றும் சலிகன் பெருமான் குடும்பத்தின ரும் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து செயசிங்க குலகாலபுரம் வந்து கற்றளி கட்டுவித்து அறக் கொடைகளும் நிலங்களும் அளித்துள்ளமை போற்றுதற்குரிய ஒன்று.

கங்கைகொண்ட சோழபுரம் படைத்த இராசேந்திர சோழனின் தானைத் தளபதியானஅரையன் இராசராசனின் சிறப்பு விருதான செயசிங்க குலகாலன் என்ற பெயரில் இவ்வூர் இருப்பது, இங்குள்ள கற்றளிக்கு இராசேந்திர சோழீச்சரம் என்ற பெயர் காணப்படுவது, கல்வெட்டு எழுதியவன் பெயர்கூட இராசேந்திர சோழ ஆசாரியன் என்றிருப்பது முதலான காரணங்களைத் தொகுத்து நோக்கும்போது இராசேந்திரனின் தளபதிக்கும் இவ் ஊருக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்திருக்கலாம்; அல்லது அவன் பிறந்த ஊராகக்கூட இருந்திருக்கலாம். அழகிய கற்றளி எடுத்துப் படிமமாகத் திகழும் கௌதமன் தில்லைவனமுடையான் அரையன், சாளுக்கிய மன்னன் செயசிம்மனை வெற்றி கொண்ட அரையன் இராசராசனின் வழித் தோன்றலாகக்கூட இருந்திருக் கலாம்.

## குறிப்புகள்

1) A.R.E. Ins. 624 of 1920
2) A.R.E. Ins. 23 of 1917
3) The Cholas - Nilakantasastry, Madras University.
4) Political Geography of the Chola country-By
Y. Subbarajalu 1937,Department of Archaeology Madras
5) குடவாயிற் கோட்டம் - குடவாயில் பாலசுப்பிரமணியம்.
பக்கம் - 89

# மூன்றாம் இராசராசன்

**(கி.பி. 1216 - 1256)**

கி.பி. 1216-இல் இளவரசனான மூன்றாம் இராசராசன், கி.பி. 1218-இல் மூன்றாம் குலோத்துங்கனின் மறைவுக்குப் பிறகு சோழப் பேரரசனாக முடிசூடிக் கொண்டான்[1]. இவனது கல்வெட்டுகள் 'சீர்மன்னி இருநான்கு திசை விளங்கும்'[2] என்ற மெய்க்கீர்த்தியுடன் துவங்குகின்றன. 'சீர் மன்னு மலர் மகளும்' எனத் தொடங்கும் நீண்ட மெய்க்கீர்த்தியும் இவனுக்குண்டு.[3]

இவனது ஆட்சியில்தான் பல நூறு ஆண்டுகளாகத் தலை நிமிர்ந்து நின்ற சோழப் பேரரசு தளர்ச்சியடையத் துவங்கியது. இதற்குக் காரணம் வடமேற்கே போசளர்களும், தெற்கே பாண்டியர்களும் வல்லரசுகளாகத் திகழ்ந்தது தான். இவன் மாறவர்மன் சுந்தரபாண்டியனிடம் தோல்வியுற்று, சோழ நாட்டின் பேரிழப்புகளுக்குக் காரணமாய் நின்றான். போசள மன்னனான வல்லாளதேவனின் உதவியுடன் எதிர்ப்புகளைச் சமாளித்தான். காடவகுல மன்னன் கோப்பெருஞ்சிங்கனால் சிறைப்படுத்தப்பட்ட இவனைப் போசள மன்னன் வீர நரசிம்மன் தண்டநாயகனைக் கொண்டு விடுவித்தான்[4].

இவனது தேவி புவனமுழுதுடையாள் என்பவளாவாள். இத்தேவியை 'வாணர்குல நிலை விளக்கு' என்று இவனது மெய்க்கீர்த்தி புகழ்கிறது. இம்மன்னவன் காலத்தில் சைவம் உயர் நிலையிலிருந்தது. ஆகமத் தொடர்புடைய சைவ மடங்களும், பாசுபதம் காபாலிகம் முதலான அகச் சமயங்களும் ஆக்கம் பெற்றுத் திகழ்ந்தன. இவன் ஆட்சியில் நடந்த ஓர் அரிய செயல் சித்தாந்த சாத்திரங்களுக்கெல்லாம் முதனூலாகவுள்ள 'சிவஞான போதம்'

என்ற ஒப்பற்ற தமிழ்நூல் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவரால் எழுதப்பெற்றதாகும்.[5]

## திருவுருவச்சிலைகள்

திருமண்டடங் குடியில்.....

சோழமண்டலத்து உலகுய்ய வந்த வளநாட்டு இன்னம்பர் நாட்டுத் திருமண்டங்குடி எனும் ஊர் தொண்டரடிப்பொடியாழ் வார் பிறந்த ஊராகும். இது திருவேரகம் எனும் சுவாமிமலைக்கு வடக்காகக் கொள்ளிடக் கரையுலுள்ளது. இவ்வூரின் மத்தியில் பிற்காலச் சோழர்களின் கலைப்பாணி மணக்கும் ஓர் எழிற்கோயில் முற்றிலும் சிதைந்த நிலையில் உள்ளது. இதில் இடம்பெற்றிருந்த சிற்பங்களை எல்லாம் சென்ற நூற்றாண்டில் இவ்வூரவர் அகற்றி, இவ்வூருடன் இணைந்த கூனஞ்சேரி எனும் இடத்தில் ஒரு கோயில் கட்டி அதில் இடம்பெறச் செய்துள்ளனர்.

கூனஞ்சேரிக் கோயிலில் முறைப்படி கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப்படாமல் வைக்கப்பட்டுள்ள சிற்பங் களின் வரிசையில் இரண்டு மன்னவர்களின் உருவச்சிலைகள் உள்ளன. ஒன்று தாடி, மீசைகளுடன் ஒரு கரம் உடைவாள் ஏந்தியும், மறு கரம் அபய ஹஸ்தமும் கொண்டு நின்ற நிலையில் உள்ளது. அடுத்துள்ள படிமம் தாடி, மீசை கள் திகழ இருகரம் கூப்பி வணங்கும் கோலத்தில் உள்ளது. இரண்டுமே பிற்காலச் சோழர்களின் சிற்ப அமைதியுடையன வாகும்.

இந்தச் சிற்பங்களை ஆராய்ந்த குடந்தை என். சேது ராமன் அவர்கள் திருமண்டங்குடியில் இடிபாடுற்ற கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டைக் கண்டு அதன் காலத்தை ஆராய்ந் தார். இக்கல்வெட்டே இவ்விரு படிமங்களும் எவருடையவை என்பதை வரலாற்றுலகு அறியச் செய்தது.

இக்கல்வெட்டு மூன்றாம் இராசராச தேவரின் 16-ஆம் ஆண்டு வெட்டுவிக்கப்பட்டதாகும். இதில் உள்ள பஞ்சாங்கக் குறிப்புகள் கி. பி. 1230-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பத்தாம் நாளைக்குறிக்கின்றன. இதில் இத்திருக்கோயில் கி.பி.1210-இற்கும் 1216-இற்கும் இடைப்பட்ட காலத்தில் 'சிரிபுவன வீரேசுவர முடையார்கோயில்' என்ற பெயரில் மூன்றாங் குலோத்துங்கனால் கட்டப்பட்டதாகவும், இது முற்றுப் பெறுவதற்கு முன்பே அம் மாமன்னன் இறந்துவிடவே, அப்பணியினை இராசராசன்

மூன்றாம் இராசராசன்



முனியூர்



திருமண்டங்குடி.

முடித்ததாகவும் குறிப்பிடுகிறது, எனவே, தன் தந்தையான திரிபுவன வீரன் எடுத்த திரிபுவன வீரேசுவரத்திற்குத் தான் பல அறக்கொடைகள் நல்கியதோடு இறந்த தன் தந்தைக்கும் தனக்கும் படிமம் எடுத்துள்ளான். மறைந்த குலோத்துங்கனைத் தெய்வ அமிசமாகக் கருதியதால் அவனது படிமத்தின் ஒரு கரம் அபய ஹஸ்தமாக (அருள் வழங்கும் கரம்) அமைக்கப்பட்டிருக்கிறது. இவனது படிமம் வணங்கும் கோலத்தில் (அஞ்சலி ஹஸ்தம்) காணப்படுகிறது.

முனியூரில்...

தஞ்சைக்கு அண்மையிலுள்ள முனியூர் சோழர்கள் காலத்தில் சோழமண்டலத்து நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து முனியூர் என்றழைக்கப்பட்டது. இவ்வூரிலுள்ள அகத்தீசுவரமுடையார் கற்றளி மூன்றாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இத்திருக்கோயிலில் காணப்படும் அனைத்துக் கல்வெட்டுகளும் இம் மன்னவன் காலத்தில் வரையப்பட்டனவாகும்.

இம்மன்னனது இருபத்திரண்டாம் ஆண்டுக் கல்வெட்டொன்று இக்கோயிலின் தென்புறம் இருந்த திருஞானசம்பந்தர் குகை பற்றிக் குறிப்பிடுகிறது. அவனது நாலாம் ஆண்டுக் கல்வெட்டொன்று இவனது அதிகாரியான உதயபெருமாள் சோழக்கோன் பற்றி விவரிக்கின்றது. 27-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று திருக்கழுமலத்திலுள்ள திருத்தொண்டீசுவரமுடைய நாயனார் திருக்கோயில் பற்றிக் கூறுகிறது.

இம்மன்னவனின் நல்லாட்சியில் ஏற்றம் பெற்றிருந்த முனியூர் அகத்தீசுவரமுடையார் கோயில் கருவறையின் தென்புறம் ஒரு கோஷ்டத்திற்கு அருகே தலையில் கொண்டை, தாடி, மீசைகளும், இடுப்பில் ஆடையும், அதன்மேல் சுற்றிய துண்டும் திகழ, வணங்கும் கோலத்தில் இம்மன்னவனின் திருவுருவச்சிலை இடம் பெற்றுள்ளது.

## குறிப்புகள்

1) EP. Ind Vol. VIII. P. 260.
2) S.I.I. Vol. IV. Nos : 424 and 540
3) A.R.E. Ins. 392 of 1918
4) கர்ணாமிர்தம் எனும் நூலின் குறிப்பு.
5) பிற்காலச் சோழர் வரலாறு - சதாசிவ பண்டாரத்தார், பக்கம்-450.

# மூன்றாம் இராசேந்திரன்

**(கி.பி. 1246 - 1279)**

மூன்றாம் இராசராசனின் புதல்வனான இம்மன்னவன் கி.பி. 1246 - இல் முடிசூடினான். இவனே 400 ஆண்டுகள் தழைத்தோங்கிய சோழப்பேரரசின் இறுதி மன்னனாவான். இவனது மெய்க்கீர்த்திகள் கிரந்தத்தில் காணப்படுகின்றன. இவனது ஆட்சியில் பல போர்களை இவன் சந்திக்கும் நிலைக்கு ஆளானான்.

தன் தந்தை பாண்டியர்களால் பெற்ற அவமானத்தைக் களைய, இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனைப் போரில் தோல்வியுறச்செய்தான். திரிபுராந்தகத்திலுள்ள கல்வெட்டொன்று இவனை 'இருவர் பாண்டியர் முடித்தலைக் கொண்டருளிய மகாராசாதிராச நரபதி' என்று கூறுகிறது.[1]

இம்மன்னவன் காலத்தில் போசளரின் பகைமை ஏற்பட்டது. தெலுங்குச் சோழனான கண்ட கோபாலனின் நண்பனாய் இருந்து பல உதவிகளைச் செய்தான். கி.பி.1257-இல் சுந்தர பாண்டியன் இராசேந்திரனை வென்று அடிமைப்படுத்தினான். பிறகு இவனது துணைவர்களாய்த் திகழ்ந்த வீர சோமேசுவரனையும், கண்ட கோபாலனையும் போரில் கொன்று அவர்களது நாடுகளையும் கைப்பற்றினான். தன் நண்பர்களை இழந்ததால் இவனால் மீண்டும் எழமுடியாத நிலைக்கு ஆளாகி இவனது ஆட்சி 1279-இல் நிறைவெய்தியது.

## இராசேந்திரனின் உருவச்சிலை

திருத்துறைப்பூண்டி பிறவி மருந்தீசுவரர் திருக்கோயிலில் சோழர் காலக் கல்வெட்டுகள் பல உள்ளன. இவை பெரும்பாலும் மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் காலத்தியனவாகும். பிற்காலத்தில் செய்த நகரத்தார் திருப்பணிகள் காரணமாகப் பல கல்வெட்டுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன. ஆனால் அதற்குமுன்பே (1912-ஆம் ஆண்டு) இத்திருக்கோயிலின் கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டதால் இன்று நமக்கு அக்கல்வெட்டுகளின் நகல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் பிள்ளையாருக்குத் தேவதான நிலம் விட்டது, தேவிக்கு ஆடிப்பூர விழாவிற்காகக் காசு கொடுத்தது, மூன்றாம் திருச்சுற்றில் உள்ள தெங்கந்தோப்பைப் பராமரிக்க நிலம் விட்டது முதலான செய்திகள் உள்ளன.[1]

மருந்தீசுவரர் கோயிற் கருவறை முன்னுள்ள மண்டபத்தின் அதிஷ்டானத்தில், முன்பு இருந்த ஒரு கல்வெட்டு மூன்றாம் இராசேந்திரனின் 10-ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டதாகும்[2]. இது வடகரை விருதராச பயங்கர வளநாட்டுத் தனியூர் வீர நாராயணச் சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த ஒருவன் வடக்குத் திருச்சுற்று மாளிகையில் தான் எழுந்தருளுவித்த கஜசம்கார மூர்த்திக்கு நிலத்தைத் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கின்றது. தற்போது இக்கல்வெட்டு, திருப்பணிகளினால் அழிந்துவிட்டது.

இன்று இத்திருக்கோயிலின் முன் மண்டபத்தின் வடபுறம் தனிக்கோயில் ஒன்று உள்ளது. இதில் கஜசம்கார மூர்த்தியின் கற்சிற்பம் உள்ளது. சிவபெருமான் கஜாசுரனின் உடலைக் கிழித்துக் கொண்டு வெளிவரும் கோலமே இவ்வுருவச்சிலையாகும். இதுவரை சோழ மண்டலத்தில் நமக்குக் கிடைத்துள்ள கஜசம்கார மூர்த்தியின் சிற்பங்களை எல்லாம் இதனுடன் ஒப்பிடும் போது இது தனித்தன்மையுடன் திகழ்கிறது.

பத்துக் கரங்களுடனும், மூன்று தலைகளுடனும் சிவ பெருமான் யானையின் உடலைக் கிழித்துக்கொண்டு வெளி வருகிறார். அருகே, உமையவள் குழந்தை முருகனைத் தாங்கிய வண்ணம் நிற்கிறாள். யானையின் மேலிரு கால்களில் முறையே கணபதியும் துர்க்காதேவியும் காட்சி நல்குகின்றனர். யானை யின் தலையில் இடப்புறம் அமர்ந்த நிலையில் சிவபெருமானும் வலப்புறம் நாயுடன் நிற்கும் பைரவ மூர்த்தியும் சிற்றுருவச்





மூன்றாம் இராசேந்திரன் - திருத்துறைப்பூண்டி

சிற்பங்களாக உள்ளனர். பைரவருக்கு அருகே சுமார் ஓர் அடி உயரத்தில் ஒரு மன்னவன் சிலை உள்ளது.

இம்மன்னவன் தலையில் கொண்டையிட்டு, தாடி, மீசைகளுடன். மார்பில் உடைவாளை அணைத்த வண்ணம் காட்சி நல்குகிறான். கஜசம்கார மூர்த்தியின் அருகே வணங்கும் திருக்கோலத்தில் நிற்கும் இம்மன்னவனின் சிலை, மூன்றாம் இராசேந்திரனின் சிலைதான் என்பதைக் கல்வெட்டுச் சான்றுகள், சிற்ப அமைதி முதலியவற்றால் அறுதியிட்டுக் கூறலாம்.

## குறிப்புகள்

1. A. R. E. Ins. 201 of 1905
2. திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டுகள். - தமிழக அரசு தொல்லியல்துறை வெளியீடு.
3. A. R. E. Ins. 474 of 1912.

# இயல் 5

## விசயநகர அரசு இயல்

# அரங்கத்து நாயகர்கள்

**(கி. பி. 15-ஆம் நூற்றாண்டு)**

செம்பொன் மதில் ஏழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில் தமிழகத்துத் திருக்கோயில்களிலெல்லாம் தலையாயதாகப் போற்றப் பெறும் பெருமையுடையது. அரவணையில் துயிலும் பெருமானை,

"விரிதிரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இளங்கோவடிகள் சிலம்பில் பேசும் பெருமையுடையவன் அரங்கன். இவனுறையும் இத்திருப்பதியில் காலவெள்ளத்தில் எத்தனை எத்தனையோ வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. 400-இற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளைச் சுமந்து நிற்கும் இக் கற்கோயில் கூறும் வரலாறுகள் ஒன்றல்ல! இரண்டல்ல!! வரலாறு கூறும் கல்வெட்டுகள் போன்றே இத்திருக்கோயிலில் நூற்றுக்கும் மேற்பட்ட வரலாற்று நாயகர்களின் உருவச்சிலைகளும் உள்ளன.

இவ்வாறு திருவரங்கம் கோயிலில் இடம் பெற்றுள்ள வரலாற்று நாயகர்களின் சிலைகளின் வரிசையில் தெற்கு இராசகோபுர வாயிலின் கீழ்ப்புறம் கல்வெட்டுக் குறிப்புடன் உள்ள ஓர் சிலையும், கிழக்குக் கோபுரங்களுள் மிகப் பெரிதான வெள்ளைக்கோபுர வாயிலின் வடபுறம் மற்றும் தென்புறம் உள்ள சிலைகளும் அங்குள்ள கல்வெட்டுக் குறிப்புகளும் தமிழக வரலாற்றில் 15-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டும் வண்ணம் திகழ்கின்றன

## உருவச்சிலைகள்

### அப்பாவய்யங்கார்

ஆசியாவிலேயே மிகப்பெரிய இராசகோபுரம் என அழைக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு தற்போது மேல் நிலைகள் எழுப்பப்பட்டு வரும் தெற்கு இராசகோபுரத்தின் கீழ்ப்புற நிலையில் சுமார் மூன்றடி உயரத்தில் நெற்றியில் திருமண் தரித்து மார்பில் மாலை புரள, கூப்பிய கரங்களுடன் உள்ள கற்படிமமே அப்பாவய்யங்காருடையதாகும்.



அப்பாவையங்கார்

இத்திருவுருவத்திற்குச் சற்று மேலே உள்ள கல்வெட்டில்[1] "சுபமஸ்து சௌமிய வருஷம் தை மாதம் நாலாந் தேதி வெள்ளிக்கிழமை நாள் ஸ்ரீரங்கநாத சுவாமிக்குப் படித்தனம் ஒன்றும் நடக்காமல் மிகவும் அன்னியாயம் பண்ணுகையில் குடுக்கமாட்டாதே இந்த திருக்கோவிரத்தில் ஏறி விழுந்து இறந்த காலம் எடுத்த அழகிய மணவாளதாசன் ஸ்ரீ காரியம் அப்பாவய்யங்கார். இவருக்கு சுவாமி யெக்காளைகள் திரித்தேற் புறப்பாட்டு முதலான அதிய வரிசை பிரசாதித்தருளி, பிரம்மமேத சமஸ்காரம் பண்ணிவித்தருளி முழுப் படித்தனம் கொண்டருளினர். இப்படி நடந்த இந்த முழு படித்தனத்துக்கு விரோதம்

பண்ணினவன் ரெங்கத் துரோகியாய் போகக்கடவன். அனுகூலம் பண்ணினவன் ஸ்ரீலட்சுமி பரிபூர்ண கடாட்ச பாக்கியஸ்தனு இருக்கக் கடவன்'' - என்று எழுதப்பட்டுள்ளது.



பெரியாழ்வார்

இதே திருக்கோயிலின் கிழக்குக் கோபுரமான வெள்ளைக்கோபுரத்தின் வடபுற நிலைக்காலில் நெற்றியில் திருமண் தரித்து, கையில் அரிவாள் ஒன்றினை ஏந்திய வண்ணம், இடுப்பில் அரையாடையும் கழுத்தில் மாலையும் சூடி அரங்கனை வணங்கும் திருக்கோலத்தில் ஓர் அடியவர் சிலையுள்ளது. இதற்கு மேலாக ஒரு கல்வெட்டும் உள்ளது.[9]

இக்கல்வெட்டு தெற்கு இராச கோபுரத்தில் உள்ள அப்பாவய்யங்கார் சிலைக்கு மேல் காணப்படும் அதே நாளில் அதே செய்திகளைக் குறிப்பிடும் வண்ணம் இருப்பினும், இதில் குறிக்கப்படும் நபரை ''...... ஸ்ரீரங்கநாத சுவாமிக்கு ஒண்ணும் நடப்பிவைய்யாமல் அன்னியாயம் பண்ணுகிர போது இந்த கோபுரத்தின் மேலேயிருந்து கீளை விழுந்து பரம பதத்துக்கு போனவற் ஸ்ரீகாரியம் பெரியாழ்வார் ..... '' என்று கூறுகிறது. எனவே கையில் அரிவாள் சுமந்து வணங்கும் கோலத்திலுள்ள இவ்வுருவச்சிலை பரம பதத்துக்குப் போன பெரியாழ்வார் என்பவருடையது என்று தெளிவாகிறது.

ஜீயர் இருவர்

இச்சிலைக்கு நேர் எதிர்ப்புறம் இரண்டு ஜீயர்களின் திருவுருவங்கள் நிலைக்காலில் காணப்படுகின்றன. இவர்கள் இருவரும் நெற்றியில்திருமண் தரித்து, தலையில் முண்டாசு, இடுப்பில்ஆடை அதன்மேல் கட்டப்பட்ட துண்டு, மார்பில் மாலைகள் புரளக்

கையில் சன்னியாசிக்குரிய தண்டும் தாங்கி வணங்கும் கோலத்தில் உள்ளனர். இச்சிலைகள் இரண்டும் வைணவ மதத் தலைவர்களான ஜீயர்களுடையவை என்பது தோற்றத்தால் விளங்குகின்றது.



உயிர்த் தியாகம் செய்த ஜீயர்கள்

இவர்களைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் இல்லையாயினும் திருவரங்கத்துப் பாரம்பரிய வரலாறு கூறும் சுவடி நூலான 'கோயிலொழுகு' வில் உள்ள கந்தாடை இராமாநுசதாசர் கைங்கரியம் எனும் பகுதியில்

'இரண்டு ஜியாளும் ஏகாங்கிகளும் கோபுரத்திலே
ஏறி சரீரத்தை பேக்ஷித்ததாலும்'

என்று கூறுகிறது. எனவே இங்கு நாம் சிலைகளாகக்காணும் இரண்டு ஜீயர்களும், பெரியாழ்வாரைப் போன்று வெள்ளைக் கோபுரத்தின் மேல் ஏறி உயிர் துறந்தவர்கள் என்பதை அறிய முடிகிறது.

## உயிர் துறக்கக் காரணம் என்ன ?

கி.பி.1489 தமிழ் சௌமிய ஆண்டு தை மாதம் நாலாம்நாள் வெள்ளிக்கிழமையன்று தெற்குக் கோபுரத்திலிருந்தும், வெள்ளைக் கோபுரத்திலிருந்தும் அப்பாவய்யங்கார், பெரியாழ்வார் மற்றும் இரண்டு ஜீயர்களும் கீழேவிழுந்து உயிர்த்தியாகம் செய்தகாரணம் யாது என்பதை ஆராய முற்படும்போது இதற்கான விளக்கத்தைக் கோயிலொழுகு விரிவாகப் பேசுகிறது.[3]



வெள்ளைக் கோபுரம் - திருவரங்கம்

இதன்மூலம் கரஆண்டு அதாவது கி.பி.1471-இல் திருச்சி தஞ்சைப்பகுதிகளுக்கு விசயநகரப் பேரரசின் சார்பாளராகத் திகழ்ந்த திருமலைராயன் இறந்த பின்பு, கோனேரிராசா பாளையக் காரராகத் திகழ்ந்ததாகவும் இவர் திருவானைக்கா கோயிலுக்கு எல்லா உதவிகளையும் செய்ததோடு, அரங்கன் கோயிலில் உள்ள புரவுவரி, காணிக்கை, பட்டு, பரிவட்டம் போன்ற பல வருமானங் களைப் பிடுங்கித் திருவானைக்கா கோயிலுக்கு அளித்ததாகவும் கூறுகிறது. திருவரங்கக்கோயில் நிலங்களைக் கோட்டைசாமந்தன், சென்னப்பநாயக்கன் என்பவர்களுக்கு அளித்ததோடு கோயில் நிருவாகிகளைப் பல நெருக்குதல்களுக்கு ஆளாக்கி, நிருவாகத் தையும் பூசைகளையும் சீர்குலைத்ததாகவும், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வண்ணம் இரண்டு ஜீயர்களும் ஏகாங்கிகளும் கோபுரத்தில் ஏறி விழுந்து உயிர்த் தியாகம் பண்ணினர் என்றும் குறிப்பிடுகிறது. இதன் பின்னர் கந்தாடை இராமாநுசதாசன் என்பவர் இந்நிகழ்ச்சியை விசயநகர அரசன் நரசநாயக்கரிடம் பலமுறை முறையிட்டதால் நரசநாயக்கன் கோனேரிராயனைப் போரிட்டு அழித்ததாகவும் பின்னர் திருவரங்கம் சீர்பெற்றதாகவும் விவரிக்கின்றது.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது கோனேரி ராயனின் நசுக்குதலுக்கு அரங்கன் கோயில் நிருவாகம் ஆட்பட்டதால் இரண்டு ஜீயர்கள், அப்பாவய்யங்கார், பெரியாழ்வார் ஆகியோர் கோபுரத்தின் மேலிருந்து விழுந்து தம் இன்னுயிர் ஈந்து கோனேரிராயனின் கொடுமைக்கு முடிவு கட்டினர் என்ற செய்தி பெறப்படுகிறது. இந்நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு இதுவரை ஆராய்ந்த வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கோனேரி ராயன் ஏதோ ஒரு குறுநிலத்தலைவன் என்றும், அவன் வைணவத் துரோகியாய் வாழ்ந்து நரசநாயக்கனால் முடிவுஎய்தியவன் என்றும் குறித்தனர்.[4] பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் மற்றும் விசய நகர அரசின்கீழ் தமிழகம்பற்றி ஆராய்ந்த பல வரலாற்று ஆசிரியர் கள்கூடக் கோனேரிராயனைப் பற்றி முழுமையாக ஆராயாமல் ஒதுக்கினர்.[5] மேலும் இவர்கள் இவனது கல்வெட்டுகளாக ஏழு சாசனங்களை மட்டுமே குறிப்பிட்டனர். இவன் வெளியிட்ட தமிழ் எழுத்துகள் பொறித்த நாணயத்தைப் பாண்டியர்களின் நாணய மாகத் திவான்பகதூர் தேசிகாச்சாரி என்பார் தம் 'சவுத்இண்டியன் காயின்ஸ்' எனும் நூலில் குறித்தார்.[6] மத்தியத் தொல்லியல் துறை யின் கல்வெட்டு ஆண்டறிக்கைகள்கூட இவனது வரலாற்றைத் தெளிவாக ஆராயாமல்இவனை ஒரு வைணவ எதிரியாகவும், விசய நகர அரசை எதிர்த்த ஒரு குறுநிலத் தலைவனாகவுமே கூறு கின்றன.

**கோனேரிராயன்**
**கல்வெட்டுகள் கூறும் வரலாறு**

இம் மன்னனது கல்வெட்டுகளாகக் கிடைத்த ஏழு சாசனங் களை மட்டும் தொகுத்து நோக்கியபோது இவன் சோழமண்டலம் முழுவதும் ஆட்சி செய்த ஒரு மன்னன் என்பதையோ, விசய நகரப் பேரரசுக்குப் பணியாமல் தனியாட்சி நடத்தினான் என்பதையோ பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் முதலானவர் களால் அறிய முடியவில்லை. திருவரங்கத்தில் உள்ள அப்பாவய்யங்கார், பெரியாழ்வார், மற்றும் ஜீயர்களின் உருவச் சிலைகள், கல்வெட்டுகள், கோயிலொழுகு ஆகியன கூறும் செய்திகள் அனைத்தையும் கொண்டு இவன் ஒரு புரட்சியாளன் என்றும் வைணவத்திற்கு எதிராகச் செயல்பட்டு வைணவத்தை நசுக்கிய ஒரு குறுநிலத்தலைவன் என்றும் கருத்துத்தெரிவித்தனர். ஆனால் அண்மைக் காலத்தில் இவனது கல்வெடுகளாக இந்நூலாசிரியரால் 20-இற்கும் மேற்பட்ட சாசனங்கள் தொகுக் கப்பட்டு, இவனது நாணயங்களும் ஆய்வு செய்யப்பட்டன. இப்புதிய வரலாற்று ஆய்வால் சோழமண்டலத்தைக் கி.பி.15-ஆம்

நூற்றாண்டில் கோனேரிராயன் மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்த தோடு விசயநகர அரசுக்குப் பணியாது தனியாட்சி ஏற்படுத்தி, தன் பெயரில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட நாணயங் களையும் வெளியிட்டுச் சைவம், வைணவம் இரண்டையுமே போற்றியவன் என்பது தெரியவந்துள்ளது. வரலாற்றுச் சிறப் புடைய இம்மன்னவனின் உருவச்சிலை ஒன்று தமிழ் மற்றும் தெலுங்கில் பெயர் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளது,[8] வரலாற்றுலகுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு பெரும் பரிசாகும்.

சாளுவத் திருமலைய்யன் சோழமண்டலத்தின் (தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை சீமைகளுக்கு) மகாமண்டலேசுவரனாய் இருந்தபோது இவனுக்குக் கீழ் கோனேரிராயன் பாதுகாப்புப் படையை வகித்த ஒரு தளபதியாய்த் (நாயக்கன்) திகழ்ந் திருக்கிறான். இது திருச்சி மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் நித்தி யேசுவரர் திருக்கோயில் கல்வெட்டொன்றால் வலியுறுத்தப் படுகின்றது.[9] அக்கல்வெட்டில் படை நிருவாகத்திற்காக முன்பு கோனேரிராயன் நாயக்கனாக இருந்தபோது அவனுக்கு அளிக்கப்பட்ட 11 கிராமங்களில் ஒரு கிராமத்தை அவன் ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீ நாராயணீசுவரமுடைய நாயனாருக்காக அளித்ததைக் கூறுகின்றது. இதனால் இவன் படைத்தளபதி போன்ற ஓர் உயர் இராணுவப் பதவியை வகித்திருக்க வேண்டும்.

திருவரங்கம் திருக்கோயிலின் வரலாறு கூறும் நூலான கோயிலொழுகு,

"முன் கரவருஷத்திலே திருச்சிராப்பள்ளி சீர்மை
முதலானதுகள் திருமலை ராஜாவுக்கு நடந்த பின்பு இந்த
ராஜ்யத்துக்குக் கோனேரிராஜா கர்த்தராய் திருச்சிராப்
பள்ளியிலே பாளையம் பண்ணிக் கொண்டிருக்கையில்"

எனக் குறிப்பிடுகிறது.[10] எனவே கி.பி. 1471-இல் (கர ஆண்டு) திருமலைய்யனுக்குப் பிறகு இவன் படைத்தளபதி பதவியிலிருந்து அரசாளும் ஆட்சியுரிமையைப்பெற்றான் என்பதைஉணரமுடிகிறது. கி.பி. 1471-இலிருந்து 1484 வரை கோனேரிராயனைப் பற்றிய கல்வெட்டுச்செய்திகள் இதுகாறும் கிடைத்தில. இந்தப் பதினான்கு ஆண்டுகள் கோனேரிராயன் விசயநகர அரசுக்குக் கடமைப் பாட்டுடன் திகழ்ந்த ஒரு பிரதிநிதியாய் இருந்திருக்க வேண்டும். இக்காலக்கட்டத்தில் விசயநகரப் பேரரசனாய்த் திகழ்ந்தவன் இரண்டாம் விருபாட்சனாவான். (கி.பி.1465-1485). இரண்டாம் விருபாட்சனுக்கும், கோனேரிராயனுக்கும் நல்லுறவு மிகுந்திருந்த காரணத்தால்தான் கோனேரிராயனின் தனித்த கல்வெட்டுகள் ஒன்றும் இல்லை.

கி.பி.1485-இல் இரண்டாம் விருபாட்சனின் மூத்த மகன் தன் தந்தையைக் கொன்றுவிட்டு, தான் அரியணை ஏறாமல் தன் தம்பி படியராவ் (பிரவுட தேவராயன்) என்பவனுக்கு முடிசூட்டி விசய நகரப் பேரரசனாக்கினான். பிரவுடதேவராயன் அரியணை ஏறியதும் முதலாவதாகத் தனக்கு முடிசூட்டிய தன் தமையனையே கொலை செய்தான். இந்தப் பிரவுடதேவராயனின் ஆட்சி சுமார் ஓராண்டுக் காலம் திறமையின்றித் திகழ்ந்தது. விசயநகரப் பேரரசன் பிரவுடதேவராயனின் தலைமையின்கீழும் கோனேரி ராயன் சிறப்புடன் சோழமண்டலத்தை ஆட்சி புரிந்தான். இவ்வாண்டில்தான் கோனேரிராயனின் முதல் கல்வெட்டு தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்திற்கருகில் உள்ள திருப்புறம்பியம் சாட்சிநாதசுவாமி திருக்கோயிலின் இரண்டாம் கோபுரம் வலப் புறச் சுவரில் வெட்டப்பட்டுள்ளது.[11]

இக்கல்வெட்டின் காலம் கி.பி.1485 மார்ச்சுத்திங்கள் 21-ஆம் நாளாகும். இச் சாசனத்தில் விசயநகரப் பேரரசன் தேவராயனின் (பிரவுடதேவராயனின்)பெயர் குறிக்கப்பட்டுள்ளதால் பேரரசனின் அபிமானத்திற்குரியவனாகவே கோனேரிராயன் திகழ்கிறான். காஞ்சிபுர நகரின் தலைவனாகவே (காஞ்சிபுர வரதீசுவரன்) தன் னைக் குறிப்பிடுவதால் கி.பி.1485-இல் தஞ்சை, திருச்சிப்பகுதிகள் மட்டுமன்றி காஞ்சி வரை உள்ள பழைய சோழமண்டலப் பகுதி இவனுடைய அதிகாரத்தின்கீழ் இருந்ததென்பதை நன்குணரலாம். திருப்புறம்பியம் கல்வெட்டே கோனேரிராயனின் முதல் கல்வெட்டாகக் காணப்படுகிறது.

திருச்சி மாவட்டம், திருமழபாடி திருக்கோயிலில் காணப் படும் இவனது கல்வெட்டொன்று கி. பி. 1488-இல் வெட்டப் பட்டதாகும்.[12] இக் கல்வெட்டில் இராய பசவ சங்கர கோனேரி தேவமகாராயனால் இத்திருக்கோயிலுக்கு அளித்த வரிச் சலுகை கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அம்ச மாகக் காணப்படுவது, விசயநகர மன்னர்கள் எவரைப் பற்றிய குறிப்பும் இல்லாததுதான். மாறாக 'மகா மண்டலேசுவரன், பட்டுக் கட்டாரி, மதியாத மன்னர் மணவாளன், இராய பசவ சங்கர கோனேரி தேவமகாராயர்' என்று குறிப்பிடுகிறது. எனவே, தன்னை மகா மண்டலேசுவரனாகவே (மாமன்ன னாகவே) அறிவித்துக் கொண்டான் என்பது தெளிவாகிறது.

கி. பி. 1487-ஆம் ஆண்டு விசயநகர அரியணையில் ஆட்சி புரிந்தவன் சாளுவ நரசிம்மனாவான். இவன் கி. பி. 1336-இல் தோன்றிய சங்கம குல மன்னர்களின் வரிசையில் கடைசியாகத்

திகழ்ந்த பிரவுடதேவராயனின் ஆட்சியை அகற்றிவிட்டுத் தனது தளபதியான நரசநாயக்கனின் துணையுடன் சாளுவ வமிசத்தைத் தோற்றுவித்தவனாவான். முறையான சங்கம வமிசத்தை அழித்துவிட்டுத் தனது தளபதியான நரசநாயக்கனின் ஆற்றலின் துணை கொண்டு பேரரசின் அரியணை ஏறியதை மாண்டலீகர்கள் பலரும், பாளையக்காரர்களும் எதிர்த்தனர். அவ்வாறு கடுமையாக எதிர்த்தவர்களில் சோழமண்டலத்தைச் சேர்ந்த கோனேரிராயனும், பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த சமர கோலாகலன் எனும் மாவலி வாணாதிராயனும் ஆவர்.

இவர்கள் சாளுவ நரசிம்மனின் ஆட்சியை எதிர்த்தனர் என்பதற்கு, இவர்களுடைய கல்வெட்டுகளில் விசயநகரப் பேரரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்படாதது, தம்மையே மகாமண்டலேசுவரர்களாக அறிவித்துக்கொண்டது, தமக்கெனத் தனி அரசு முத்திரையும், நாணயங்களும் வெளியிட்டுக் கொண்டது போன்றவை சிறந்தசான்றுகளாகத் திகழ்கின்றன. பொதுவாக விசயநகர நாணயங்களைத்தான் பயன்படுத்துவது வழக்கம். இதற்கு மாறாகத் தமக்கென நாணயங்களைத் தங்கள் நாட்டின் தாய்மொழியிலேயே வெளியிட்டுத் தனித்தன்மை பெற்றுத் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சகம் 1409-இற்குப் பிறகு இம்மன்னனின் கல்வெட்டொன்று[13] தென்ஆர்க்காடு மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் நித்யேசுவரர் திருக்கோயிலில் உள்ளது. இது இம்மன்னன் அளித்த அறக்கொடைகள் பற்றி விவரிக்கின்றது. இது கி.பி. 1488-இல் வெட்டுவிக்கப்பட்ட சாசனமாகும். இதேஆண்டு ஐப்பசிமாதம் குறிக்கப்பட்ட இம்மன்னனின் பிறிதோர் கல்வெட்டு[14] தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி பிரமபுரீசுவரர் திருக்கோயிலிலுள்ளது. சீர்காழிக்கோயிலுக்குரிய ஒரு கிராமத்தைச் சர்வமானிய கிராமமாக அறிவித்துப் பிறப்பித்த இம்மன்னனின் ஆணையே இச்சாசனமாகும். இக் கல்வெட்டுகளால் கி.பி. 1488-இல் தஞ்சை, தென் ஆர்க்காடு, திருச்சி, காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதிகள் கோனேரிராயனின் ஆளுகையிலிருந்தன என்பதை நன்குணரலாம்.

கி.பி. 1489-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 9-ஆம் நாள் குறிக்கப்பட்ட இரண்டு சாசனங்கள் திருச்சி மாவட்டம் உய்யக்கொண்டான் திருமலை அருள்மிகு உச்சீவநாதசுவாமி திருக்கோயிலில் உள்ளன.[15] இவை இரண்டும் மாமன்னன் கோனேரிராயனின் அரசு ஆணைகளாகவே திகழ்கின்றன. இதில் இவனது காலத்துப் பலவகைப்பட்ட வரிகள் குறிக்கப்பட்டுள்ளன. கி.பி.

1490 நவம்பர் திங்கள் 8-ஆம் நாளில் வெட்டுவிக்கப்பட்ட கல்வெட்டொன்று திருச்சி மாவட்டம் திருமழபாடித் திருக்கோயிலின் மண்டபம் ஒன்றில் உள்ளது.[16] இம்மண்டபம் 'கோனேரிராயன் திருமண்டபம்' என்றபெயரில் எடுக்கப்பட்டதாக அறியமுடிகிறது. இதே ஆண்டுக் குறிக்கப்பட்ட கோனேரிராயனின் பிறிதோர் கல்வெட்டு குடந்தைக் கீழ்க்கோட்டமெனும் அருள்மிகு நாகேசுவர சுவாமி திருக்கோயிலில் உள்ளது.[17] இதில் இம்மன்னன் காலத்தில் செய்யப்பட்ட அறக்கட்டளைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அடுத்து, சகம் 1414 (கி. பி. 1492) --ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட கல்வெட்டொன்றும் திருமழபாடி திருக்கோயிலில் உள்ள 'கோனேரிராயன் மண்டபத்தில்' காணப்படுகிறது.[18] இதில் சில அறக்கொடைகள் பற்றியும், 'கோனேரிராயன் பண்டாரம்' பற்றிய செய்திகளும் விரிவாகக் காணப்படுகின்றன. இதே ஆண்டு பஞ்சாங்கக் குறிப்புகளுடன் கோனேரிராயனின் இரண்டு கல்வெட்டுகள் திருவரங்கம் அரங்கப் பெருமான் ஆலயத்தில் காணப்படுகின்றன.[19] இதில் சகம் 1414 பரிதாபி ஆண்டு ஆவணி 26-ஆம் நாள் உத்திர விண்மீன் கூடிய வெள்ளிக் கிழமை அரங்கன் ஆலயத்தின் திருக்கோபுரமான சொக்கப்பனை வாசல் என்ற கோபுர வாயிலுக்கு மரக் கதவுகளைக் கோனேரிராயன் போடச் செய்தான் என்ற அரிய செய்தி ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டில் இதே பரிதாபி ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாள் (கி. பி. 1492 நவம்பர் 28-ஆம் நாள்) புதன்கிழமையன்று அரங்கப் பெருமானுக்குக் கோனேரிராயன் தன் பெயரால் தினசரி தயிர் அன்னம் (முசரோதரம்) நிவேதனம் செய்ய மூன்று வேலி நிலங்களைப் பிச்சாண்டார் கோயில் எனும் ஊரில் அளித்ததை விவரிக்கின்றது.[20]

கி.பி.1492-ஆம் ஆண்டுக்குறிப்புள்ள இம்மன்னனின் சிலாசாசனம் ஒன்று திருச்சிமாவட்டம் திருச்செந்துறை-திருச்செந்துறையுடைய நாயனார் கோயிலில் உள்ளது.[21] இதே ஆண்டு (தமிழ், விரோதிகிருது பங்குனி 9-ஆம் நாள்) குறிக்கப்பட்ட கோனேரிராயனின் பிறிதோர் கல்வெட்டொன்று தஞ்சைமாவட்டம் பந்தணைநல்லூர் ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் கருவறையின் மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.[22] இக்கல்வெட்டில் பந்தணைநல்லூர் பசுபதீசுவரர்க்கும், ஆதிகேசவப் பெருமானுக்கும் கோனேரிராயனால் அளிக்கப்பட்ட கொடைகள் பற்றி விவரிக்கப்பட்டு உள்ளன.

கி. பி. 1493-ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட கோனேரி ராயனின் கல்வெட்டுச் சாசனங்கள் இரண்டு கிடைத்துள்ளன.[23] ஒன்று தென்ஆர்க்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டம் நல்லூர்த் திருக்கோயிலிலும், பிறிதொன்று திருப்பதி திருமலைக் கோயிலிலும் காணப்படுகின்றன. திருமலைக் கல்வெட்டில் சகம் 1415 பிரமாதீச சம்வத்சரம், சிம்ம நாயிற்று, பூர்வ பட்சத்துச் சப்தமியும் சோம வாரமும் பெற்ற அநிஷத்து நன்னாள் அன்று (கி. பி. 1493-ஆகஸ்ட் 19-ஆம் நாள்) திருவேங்கடவனுக்குக் கோனேரிராயன் அளித்த சோழமண்டலத்து ஊர்கள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புடைய இக்கல்வெட்டில் 'சோழமண்டலத்துக் காவேரியாற்றுக்குத் தென்கரை, திருவாரூர் உசாவடி உய்யக் கொண்ட சோழ வளநாட்டில் மேற்கூறு திருமிகைச்சூர் பற்றில் மருத்துவக்குடிக் கிராமம் ஒன்றும், சோழமண்டலத்தில் சாலியக் கோட்டத்தில் வாழைக்குலைச்சேரி கிராமம் ஒன்றும் ஆக கிராமம் இரண்டிற்கு, திருவேங்கடமுடையான் கோனேரி ராஜாவின் பேராலே நாள்வழி அமுது செய்தருளும் திருப் போனகம் . . .'' என்று தொடர்கிறது. எனவே, கோனேரி ராயன் தன் பெயரால் ஒவ்வொரு நாளும் வேங்கடவனுக்கு அமுது செய்விக்கச் சோழமண்டலத்து ஊர்களைக் கொடுத்த செய்தி மட்டுமன்றி இவனது புகழ் திருவேங்கடம் வரை பரவி மிக்கோங்கி நின்றது என்பதும் தெளிவு.

தஞ்சாவூர் மாவட்டம் துக்காச்சித் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டொன்று கோனேரிராயனின் அமைச்சனது பிரதிநிதி ஒருவன் 'பல்லக்குச் சொக்கர்' திருமேனி செய்தளித்த செய்தி காணப்படுகிறது.[24] கோனேரிராயனின் இறுதிக் கல்வெட்டாகக் கி. பி. 1495-இல் திருச்செங்காட்டாங்குடிக் கல்வெட்டொன்று திகழ்கிறது. இதுவும் இவனது அரசு ஆணையைக் குறிக்கும் ஒன்றாகும்.[25]

இக்கல்வெட்டுகள் அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது முதலில் திருமலைய்ய தேவனிடத்தில் படைத்தளபதி யாகிய நாயக்கனாய்த் திகழ்ந்து, பின்பு கி. பி. 1471-இலிருந்து 1485 வரை விசயநகர அரசுக்குக் கீழ்ப்படிந்த பாளையக் காரனாகத் திகழ்ந்து, 1486-இலிருந்து - 1495 வரை காஞ்சிபுரம் உள்ளிட்ட சோழ மண்டலத்தின் மகாமண்டலேசுவரனாய் விசயநகரப் பேரரசின் தொடர்பின்றி, கோனேரி தேவ மகா ராஜாவாகத் திகழ்ந்தான் என்பதை நன்கறியலாம்.

கி.பி.1486-இல் விசயநகர மன்னன் பிரவுடதேவராயனின் ஆட்சி சாளுவ நரசிம்மன் மற்றும் நரசநாயக்கனால் கவிழ்க்கப் பட்டது. இதனால் விசயநகரப் பேரரசின் சங்கம குலம் அழிந்து சாளுவ குலம் உதயமாயிற்று. சங்கம குல மன்னர்களைப் பேரரச னாக ஏற்றுக்கொண்ட கோனேரிராயனுக்குத் தனக்குச் சமமான பதவியில் இருந்தவர்களைப் (பாளையக்காரர்கள்-மாண்டலீகர் கள்)பேரரசர்களாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.இதனால்தான் சோழமண்டலத்தில் கி.பி. 1486-இலிருந்து 1495 வரை கோனேரி ராயனின் தனி அரசு தொடர்ந்தது. விசயநகர அரசுக்கும் இவனுக்கும் பகைமை மூண்டது.

இவனது திருக்கோயிற் பணிகள் பெரும்பாலும் சிவாலயங் களுக்குச் செய்யப்பட்டபோதிலும் வைணவத் திருக்கோயில்களும் இவனால் பயனடைந்தன என்பதை மேற்குறிப்பிட்ட கல்வெட்டு களில் கண்டோம். திருப்பதி திருமலைக்கோயிலில் தினமும் தன் பெயரால் அமுதுபடி செய்வித்தான். பந்தணைநல்லூர் ஆதிகேசவ னுக்கு அறக்கொடைகள் கொடுத்தான். திருவரங்கம் திருக்கோயி லின் கோபுரவாயிலுக்குக் கதவுகள் செய்வித்தான். இத்தனைக்கும் மகுடமாக அரங்கப்பெருமானுக்குத் தினம் தன்பெயரால் தயிர் அன்னம் நிவேதனம் செய்ய நிலங்களும் அளித்தான். இவ்வளவு காரியங்களையும் செய்த கோனேரிராயனை வைணவத் துரோகி யாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

திருவரங்கம் திருக்கோயிலில் சிலைகளாக நிற்கும் அப்பா வய்யங்கார், பெரியாழ்வார், மற்றும் ஜீயர்களின் உயிர்த்தியாகத் திற்குப் பிறகு கந்தாடை இராமாநுசதாசனின் வேண்டுகோளுக் கிணங்க நரசநாயக்கன் தன் பெரும்படையுடன் வந்து கோனேரி ராயனுடன் போரிட்டு, அவனைத் தோல்வியுறச் செய்து சோழ மண்டலத்து ஆட்சி உரிமையைக் கி.பி.1496-இல் அகற்றினான்.

கி. பி. 1496-இல் நரசநாயக்கன் கோனேரிராயனை முறியடிக்க திக்விசயம் வந்த நிகழ்ச்சியைத் தென் ஆர்க்காடு மாவட்டம் வாரன்சரம் எனும் ஊரில் உள்ள கல்வெட்டொன்று வலியுறுத்துகிறது.[26] மேலும் திருமலாம்பா எழுதிய வரதாம்பிகா பரிணய சம்பு எனும் தெலுங்கு மொழிக் காவியம் நரசநாயக்கன் கோனேரிராயனுடன் நிகழ்த்திய போர் பற்றி விவரிக்கின்றது.[27]

## உயிர்த் தியாகத்தின் உண்மைக் காரணம்

வைணவத்தின்பால் வெறுப்பு இல்லாத கோனேரிராயனின் நெருக்குதலுக்குத் திருவரங்கம் கோயில் உட்பட்டமை, பூசைகள்,

நில உரிமைகள் தடை செய்யப்பட்டமை, இதனால் பாதிக்கப் பட்ட சிலர் எதிர்ப்புத் தெரிவித்துக் கோபுரத்தின் மேலேறி உயிர்விட்டமை முதலான காரணங்களுக்கு விளக்கம் தேட முற்படும்போது திருவரங்கம் வரலாறு கூறும் ' கோயிலொழுகே ' விடையாக நிற்கிறது. இதில் கந்தாடை இராமாநுசதாசர் நரசநாயக்கனுடன் உடன்பிறந்தவர் என்பதும், இவர் வைணவ மதத் தலைவராக அரங்கத்தில் திகழ்ந்தவர் என்பதும் கோயி லொழுகின் கூற்றுகளாகும்.

இதனை,''ப்ரபண்ட தேவராயரை வீரநரசிங்கராயர் ஜயித்து கநகரி நகரத்திலே இருந்து ராஜ்யபாரம் வகிக்கச் செய்தே அவருடைய தமையனுன ராமராஜா ஸ்தல சாத்திரம் படித்து, விரக்தராய் தீர்த்த யாத்திரை பண்ணி ஹநுமதுபாசனை பண்ணி திருவயோத்திக்குப் போய் ஸ்ரீராம மாடைகளையும் சபர்ஸ்வேதி களையும் லபித்து வைராகிவேஷத்துடனே கநகிரிக்கு வந்து தம்பியான வீரநரசிங்கராயரை கண்டு, ஒரு ஸ்ரீராமமாடையும் கொடுத்து, தனக்கு நூற்றெட்டு திருப்பதிகளிலேயும் தேசாந்தரி முத்திரை நடக்கத்தக்கதாக ராய சாசனமும் நிருபமும் வாங்கிக் கொண்டு திருமலை பெருமாள் கோயிலிலேயும் ஸ்ரீராம மாடை சமர்பித்து, அவ்விடத்தில் ஸ்தலங்களையெல்லாம் ராய சாசனப் படிக்கு ஸ்வாதீனம் பண்ணிக் கொண்டு சகாப்தம் ஆயிரத்து நானூற்றுப் பதினொன்றில் சௌம்ய வருஷத்திலே திருவரங்கத் திருப்பதியிலே பெருமாளுக்கு ஒரு ஸ்ரீராம மாடையும் சமர்ப் பித்து கந்தாடையண்ணன் திருவடிகளிலே ஆஸ்ரயித்து விசேஷ நிஷ்டராய் சகல சாத்திரங்களையும் படித்து ஏகாங்கி வேஷம் தரித்து அண்ணன் சந்நிதியிலே ' கந்தாடை ராமாநுஜதாசர் ' என்று தாஸ்ய நாமமும் பெற்று ராய சாசனப்படியே ஏகாங்கி களுக்கு தலைவராய் ஸ்தலத்திலே இருந்து . . . . .'' - என்று விரிவாகப் பேசுகின்றது.[25]

பிரவுட தேவராயனின் மறைவிற்குப் பிறகு நரசநாயக் கனால் ஏற்றம் பெற்ற விசயநகர அரசை மதிக்காமல் திகழ்ந்த இவனது இயற்பெயர் வைத்தியநாதக் காளிங்கராயன் என்பதாகும். கோனேரிராயனின் நாட்டில் அதுவும் திருவரங்கத்தில் தனதுஎதிரி யான நரசநாயக்கனின் சகோதரர் வைணவத் தலைவராகச் செயல் படுவது கோனேரிராயனுக்குப் பிடிக்காமல் இருந்திருக்க வேண்டும். அல்லது கந்தாடை இராமாநுசதாசன் மதத்தலைவர் என்ற போர்வையில் அரசு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கோனேரி ராயனின் வெறுப்புக்கு ஆட்பட்டிருக்கவேண்டும். இந்தக் காரணங் களால்தான் அரங்கன் கோயிலில் கோனேரிராயனால் சில

தடைகள் ஏற்பட்டிருக்கவேண்டும். இதன் பயனாக அப்பாவய்யங்கார், பெரியாழ்வார், மற்றும் ஜீயர்கள் இருவர் உயிர்த் தியாகம் செய்யும் நிலை ஏற்பட்டது.

## கோனேரிராயனின் உருவச்சிலை

சோழ மண்டலத்தில் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் ஒரு வீர வரலாறு படைத்த கோனேரிராயன் பிறப்பால் தமிழன். இவ்வரலாற்று நாயகனின் சிறப்பை, இரண்டு வகைகளில் வெளியிட்ட இவனது தமிழ் நாணயங்களேபுலப்படுத்தும்.[29] இந்நாணயங்களின் ஒரு புறத்தில் 'கோனேரிராயன்' என்ற பெயர் தமிழ் எழுத்துகளிலும் மறு பக்கத்தில் இவனது தனி இலச்சினையான உடைவாளும், எருதுச் சின்னமும் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. சோழமண்டலத்துப் பெரும்புகழ் பெற்ற 'திருநல்லம்' எனும் ஊர் இவன் பெயரில் 'கோனேரிராயபுரம்' எனும் பெயர்மாற்றம் பெற்றது.



கோனேரிராயன் - திருவோத்தூர்

இம்மன்னவனின் உருவச்சிலை காஞ்சிக்கருகில் உள்ள திருவோத்தூர் திருக்கோயிலின் திருச்சுற்று மதிலிலுள்ளது. இச் சிற்பத் தொகுதியில் கோனேரிராயன் பல்லக்கில் அமர்ந் துள்ளான். தலையில் தலைப்பாகையுடனும், சற்றுப் பெருத்த தொந்தியுடனும் திகழும் இம்மன்னவனின் மார்பில் முப்புரி நூல் திகழ்கிறது. இவனருகில் உரிமை மகளிர் இருவர் அமர்ந் திருக்கின்றனர். பல்லக்கை முன்புறம் இரண்டு வீரர்களும் பின்புறம் இரண்டு வீரர்களும் சுமந்து செல்கின்றனர். பல்லக்கிற்கு முன்னால் ஆறு வீரர்கள் கத்தியும் ஈட்டியும் ஏந்தி வருகின்ற னர். ஏழாவதாக வருபவன் கையில் கெண்டியுடன் செல்கிறான். எட்டாவதாக வருபவன் கையில் கொடியேந்திச் செல்ல, ஒன்ப தாமவன் தாரை ஊதிக்கொண்டு வருகிறான். இத்துடன் யானைப் படையும் குதிரைப்படையும் வருகின்றன. குதிரைப் படைக் கிடையே ஒட்டகம் ஒன்றும் செல்கின்றது.

கோனேரிராயனின் சிற்பத்திற்குக் கீழாகக் 'கோனேரி ராயன்' எனத் தெலுங்கிலும் தமிழிலும் பொறிக்கப்பட்ட கல்லெழுத்துகள் காணப்படுகின்றன. திருவோத்தூர் திருக் கோயிலில் திருப்பணிகள் பல புரிந்த இம்மன்னவன் தனது சிலை மட்டுமன்றி தனது தேவியர் மற்றும் படைகளுடன் சிற்பமாகக் காட்சி நல்குவது மிக அரிய ஒன்றாகும். இச் சிற்பத் தொகுதியுள்ள திருவோத்தூர் சோழமண்டலத்தில் ஒரு காலத்தில் இணைந்திருந்த ஓர் ஊராகும்.

## குறிப்புகள்


1. South Indian Temple inscriptions Vol. II, No: 788
2. A. R. E. No. 87 of 1937
3. கோயிலொழுகு - கந்தாடை இராமாநுசதாசன் கைங்கர்யம்.
4. 1. Annual report 1912 - Page-79, p. 54
   2. Mr. Krishna Sastri's article.
5. 1. தென் இந்திய வரலாறு - கே. ஏ. நீலகண்ட சாத்திரி.
   2. The Tamil country under Vijayanagar,
   By - A. Krishnaswami, Annamalai University.
6. South Indian Coins - By Desikachary
7. Paper By R. Krishnamoorthy - Salem Seminar
   Tamil Nadu Archaeology Department

8. A.R.E. 249 of 1916
9. கோயிலொழுகு - கந்தாடை இராமாநுசதாசன் கைங்கர்யம்
10. A. R. E. Ins. 160 of 1932
11. A.R.E. Ins. 54 of 1920
12. A.R.E. Ins. 249 of 1916
13. A. R. E. Ins. 396 of 1918
14. A. R. E. 378 of 1939-40, 747 of 1911
15. A. R. E. Ins. 49 of 1920
16. A. R. E. 259 of 1911
17. A. R. E. 51 of 1920
18. A. R. E. 115, 116, of 1937-38.
19. A. R. E. 116 of 1937-38
20. A. R. E. 145 of 1937-38
21. A. R. E. 119 of 1932
22. A. R. E. 158 of 140-41, 106 (No. 369)
Vol. II, Tirumalai Tirupati inscriptions.
23. A. R. E. 4 of 1918
24. A. R. E. 74 of 1918
25. A. R. E. 190 of 1941
26. Varadambika parinaya campu of Tirumalamba -
By-Prof. Surya Kanta.
27. கோயிலொழுகு - கந்தாடை இராமாநுசதாசன் கைங்கரியம் பக்கம் 92.
28. History from a coin - Indian Express -
Dec. 18-1977 Kudavayil Balasubramanian.
29. 15-ஆம் நூற்றாண்டு தமிழ் நாணயம் - தினமணி சுடர் கட்டுரை - 6-11 - 1977 குடவாயில் பாலசுப்பிரமணியன்.

# கிருட்டிண தேவராயர்

விசய நகரப் பேரரசு கி. பி. 1336-இலிருந்து 1485 வரை சங்கம குல மன்னர்களாலும், கி. பி. 1486 முதல் 1491 வரை சாளுவ குல நரசிம்மனாலும், 1505 முதல் துளுவ குல மன்னர்களாலும், பின்னர் கி. பி. 1570 முதல் ஆரவீடு குல மன்னர்களாலும் நிருவகிக்கப்பட்டது.[1] துளுவ குல அரசாட்சியைத் தோற்றுவித்த வீரநரசிம்மனுக்குப் பிறகு கி.பி. 1509 - இல் கிருட்டிண தேவராயர் விசயநகரப் பேரரசரானார். விசயநகரப் பேரரசர்கள் காலத்தைப் பொற்காலமாக்கிய பெருமை இவருக்கு உண்டு.

காஞ்சிப் பகுதியின் காடவத் தலைவர்களை வென்று தமிழகத்தின் பெரும் பகுதிகளைத் தனக்குக்கீழ் கொண்டுவந்தவர். பீசப்பூரைச் சுல்தான்களிடமிருந்து கைப்பற்றியவர். 'ஆமுக்த மால்யதா' என்ற தெலுங்கு நூலை யாத்தவர். பெத்தண்ணா, திம்மண்ணா முதலிய பெரும் புலவர்களைத் தமது அவைக்களப் புலவர்களாகக் கொண்டவர். தெனாலிராமன் இவரது அவையிலிருந்தவர். சிதம்பரம், காஞ்சி, திருவண்ணாமலை முதலிய இடங்களில் கோபுரங்களை எழுப்பியவர். ஹம்பியில் சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கியவர்.

இவரது மனைவியர்களாகத் திகழ்ந்தவர்கள் திருமலாதேவியும் சின்னதேவியும் ஆவர். கிருட்டிண தேவராயர் அரியணையேறியபோது இருபத்தைந்து வயதிருக்கும். இதன் பின்பு பத்து ஆண்டுகள் கழித்து கிருட்டிண தேவராயரைச் சந்தித்த 'பேயிஸ்' என்ற வெளிநாட்டவர் குறிப்பொன்றில் அவரது தோற்றம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.[2] "அரசன் நடு உயரமும் சிவப்பு நிறமும் அழகிய தோற்றமும் உடையவன். அவன் சிறிது தடித்து

இருக்கிறான். எல்லா வகையிலும் குறைபாடற்றவனாக இருக்கிறான். இனிய இயல்புடையவன். வெளிநாட்டினரை வரவேற்று அவர்களை மதித்து நடக்கிறான். அவர்கள் எந்த நிலையிலிருப்பவர்களாயினும் அவர்களுடன் இனிமையாகப் பேசி அவர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் விசாரிக்கிறான். அவன் ஒரு பெரிய அரசன். நீதிநெறி வழுவாதவன். கடுமையான உடற்பயிற்சியின் மூலம் தன்உடல் வலிமையைப் பேணுகிறான். குதிரை ஏற்றத்தில் வல்லவன். காண்போர் களிக்கும் கம்பீரமான தோற்றமுடையவன். தானே போர்க்களம் புகுந்து தனது போர் வீரர்களுக்குத் தலைமை தாங்கி நடத்துவதில் ஆர்வமுடையவன்! ஆபத்தைக் கண்டு அஞ்சாத வீரமும் தளராத ஊக்கமும் உடையவன். தன்னுடைய போர் வீரர்களிடத்தில் அன்பு மிகுந்தவன். அவர்கள் நலனில் அக்கறை உள்ளவன். ஒவ்வொரு போருக்குப் பின்பும் காயமடைந்த வீரர்களைப் பார்த்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் செய்வதில் தவறாதவன்" - என்றெல்லாம் போற்றுகிறார்.

இவ்வாறு மேனாட்டவரும் போற்றும் பண்பாளனாகத் திகழ்ந்த கிருட்டிண தேவராயர் காலத்தில் சோழமண்டலம் மிகவும் ஏற்றம் பெற்றது. சோழமண்டலத்துக் கோயில்கள் அனைத்தும் இம்மன்னனது அறக்கொடையால் சிறப்படைந்தன என்பதைத் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் வரையப்பட்டுள்ள கல்வெட்டொன்றும்,[8] திருஈங்கோய் மலைக் கல்வெட்டொன்றும் மிகச் சிறப்பாகக் குடுப்பிடுகின்றன. திருவண்ணாமலை, கும்பகோணம், சிதம்பரம் கோயில்களில் இம்மன்னன் செய்த பணிகள் மிகப் பலவாகும்.

## கிருட்டிண தேவராயரின் உருவச்சிலை

சோழமண்டலத்தின் வளர்ச்சிக்கு எண்ணிலாப் பணிகள் புரிந்த இம்மன்னனின் திருவுருவச்சிலை ஒன்று இன்றும் தில்லைத் திருக்கோயிலில் உள்ளது. கிருட்டிண தேவராயர் தில்லைத் திருக்கோயிலில் வடக்கு இராசகோபுரத்தைக் கட்டுவித்தார். இக் கோபுரத்தை மற்ற இராசகோபுரங்களைப் போன்று படைத்ததோடன்றி, பரதக் கலையின் நூற்று எட்டுக் கர்ண முத்திரைகளையும், ஆடும் ஆரணங்குகளின் சிற்பங்களையும் இக்கோபுரத்தில் இடம்பெறச் செய்தார். இத்தனையும் செய்த இம்மன்னவன் தனது உருவச்சிலையை வடக்கு இராசகோபுர வாயிலின் மேல்புறம் உள்ள மாடத்தில் இடம்பெறச் செய்தார்.



கிருட்டிண தேவராயர் - தில்லை வடக்குக் கோபுரம்



கிருட்டிண தேவராயரும் அவரது தேவியரும்.
செப்புத் திருமேனிகள்-திருப்பதி.

கருமையான, வழவழப்பான கருங்கல்லில் செய்யப் பட்டுள்ள இந்த உருவச்சிலை சுமார் 4 அடி உயரமுடையதாகும். தலையில் நீண்ட குல்லாய் அணிந்து உடைவாளை அணைத்த வண்ணம் அஞ்சலி செய்யும் கரங்களுடன் நின்ற நிலையில் உள்ளது இவ்வுருவச்சிலை. உடையலங்காரம் மிகவும் எடுப்பாக உள்ளது. இச் சிலையின் மூக்கு பின்னாளில் சிதைவுற்றது வருந்துதற்குரியது.

இந்தச் சிலையும் திருப்பதி திருமலையிலுள்ள கிருட்டிண தேவராயரின் செப்புத்திருமேனியும் உருவ அமைதியில் ஒத்தே காணப்படுகின்றன. திருப்பதி திருமலைக்கோயிலில் உள்ள இம்மன்னவனின் செப்புத்திருமேனியுடன் இவரது தேவிகளான திருமலாதேவி, சின்னதேவி ஆகியோரின் செப்புத்திருமேனிகளும் உள்ளன.

கிருட்டிண தேவராயரால் எடுக்கப்பட்ட தில்லை வடக்கு இராச கோபுரத்தில் இக்கோபுரத்தை கட்டுவித்த சிற்பிகள் நால்வரின் உருவச்சிலைகளும், அவற்றின் அருகில் அவர்கள் பெயர்கள் எழுதப்பட்டுள்ள கல்லெழுத்து வரிகளும் உள்ளன. முகமதியர் களின் தாக்குதலுக்கு இரையாகாமல் சோழமண்டலத்தைக் காத்து, இம்மண்டலத்துத் திருக்கோயில்களைப் பேணி ஒரு நல்லாட்சியை ஏற்படுத்திய கிருட்டிணதேவராயரின் உருவச்சிலை இன்றும் தில்லைத் திருக்கோயில் வடக்குக் கோபுர வாயிலில் இருப்பது சோழமண்டலத்தின் சிறப்புகளுள் ஒன்றாகும்.

## குறிப்புகள்

1. கையேடு, உலகத்தமிழ் மாநாட்டு வெளியீடு, 1968, பக்கம் - 147.
2. தென்னிந்திய வரலாறு - தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் - 1979, பக்கம் 436.
3, S. I. I. Vol. VIII, No; 852.

# அச்சுதராயர் - திருமலாம்பா

விசயநகரப் பேரரசின் துளுவ குல மன்னர்கள் வரிசையில் கிருட்டிண தேவராயருக்குப் பிறகு கி.பி.1529-இல் முடிசூடியவர் அச்சுத ராயராவார். இவரும் கிருட்டிண தேவராயரைப் போன்றே சோழமண்டலத்தின் மீது அதிக அக்கறை செலுத்தினார். இம் மன்னரின் கல்வெட்டுகள் தஞ்சை தொப்புள் பிள்ளையார் மற்றும் இராசகோபாலசுவாமித் திருக்கோயில்களிலும்,[1] திருமக் கோட்டை,[2] பந்தணைநல்லூர்,[3] திருவிடைமருதூர்[4] முதலிய இடங் களிலும் உள்ளன.

இவர் காலத்தில்தான் தஞ்சை இராசகோபாலசுவாமித் திருக்கோயில் கட்டப்பட்டது. இதனைக் கருவறையின் அதிஷ் டானத்திலுள்ள இவரது கல்வெட்டுகள் உறுதி செய் கின்றன. இக்கோயிலுக்குத் தஞ்சை நாயக்க மன்னர்களான இரகுநாதன் மற்றும் விசயராகவன் காலத்தில் இராசகோபுரம் எடுக்கப்பட்டது. இந்த இராசகோபுரத்தில் மேற்குறித்த தஞ்சை நாயக்கர்களின் இரண்டு உருவச் சிலைகளும் உள்ளன. ஆனால் அச்சுதநாயக்கனால் தோற்றுவிக்கப்பட்ட இந்த இராச கோபாலசுவாமிக் கோயிலிலிருந்த இராசகோபாலன் சிலை பின்னாளில் (தஞ்சை மராட்டியர் காலத்தில்) இடம் பெயர்ந்தது. இக்கோயில் மராட்டிய அரச குடும்பத்தைச் சேர்ந்த காமாட்சி பாய்சாகேப் என்பவரால் திருப்பணி செய்யப்பட்டு, சக்கரத் தாழ்வார் கோயிலாக மாற்றப்பட்டது. இதனை வெண்ணாற் றங்கரை தஞ்சபுரீசுவரர் கோயில் மண்டபத் தூணில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.

அச்சுத ராயரின் மனைவியருள் ஒருவரான திருமலாம்பா சிறந்த புலமை உள்ளவர். இத்தேவி யாத்த தெலுங்கு நூலான 'வரதாம்பிகா பரிணயம்' சிறந்ததோர் காவியமாகும். இத் தேவிக்கும் சோழநாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அச்சுதராயர்திருமலாம்பாவின் சகோதரியான மூர்த்திமாம்பாவைச் (மூர்த்தி அம்மாள்) செவ்வப்ப நாயக்கனுக்கு மணம் முடித்து, சீதனமாகத் தஞ்சை அரச உரிமையைச் செவ் வப்ப நாயக்கனுக்கே அளித்தார். எனவே, தஞ்சை நாயக்க அரசு உதயமாவதற்குக் காரணமாகத் திகழ்ந்தவர்கள் அச்சுத ராயரும், திருமலாம்பாவுமேயாவர்.



அச்சுத தேவராயரும் - திருமலாம்பாவும்

தஞ்சை-சியாமளாதேவி அம்மன் கோயில்.

இவர்கள் இருவருடைய கல் உருவச்சிலைகள் தஞ்சை இராசகோபாலசுவாமிக் கோயிலில் இடம்பெற்று இருந்து, தற்போது இக்கோயிலுக்கு அருகமைந்த சியாமளாதேவி அம்மன் கோயிலில் உள்ளன. அச்சுத ராயராலும், தஞ்சை நாயக்க மன்னர்களாலும் கட்டப்பட்ட இராசகோபாலசுவாமிக் கோயில், மராட்டியர் காலத்தில் சக்கரத்தாழ்வார் கோயிலாக மாறியதை முன்பே கண்டோம். இராசகோபாலன் திருமேனி இடம் பெயர்ந்தது போன்று, அச்சுத ராயர் - திருமலாம்பா உருவச்சிலைகளும் சியாமளாதேவி அம்மன் கோயிலுக்கு இடம் பெயர்ந்ததன் வரலாற்றுக் காரணங்களை அறியச் சான்றேதும் இதுகாறும் கிடைக்கவில்லை.

தலையில் நீண்ட குல்லாய் அணிந்து, எடுப்பான மீசையுடன், வணங்கும் திருக்கோலத்தில் நின்ற நிலையில் அச்சுதராயரும், அவருக்கருகே முடிந்த கொண்டையும், புடவையும் அணிந்து வணங்கும் கோலத்தில் திருமலாம்பாவின் உருவச் சிலையும் இன்றும் காட்சி நல்குகின்றன.

## குறிப்புகள்

1. A. R. E. Ins. 39 & 40 of 1897
2. A. R. E. Ins. 261 of 1917
3. A. R. E. Ins. 116 of 1931-32
4. A. R. E. Ins. 271 of 1907.
5. தஞ்சாவூரு ஆந்திர ராஜுலு சரிதமு - தெலுங்கு நூல் - சுவடிகள் நூலகம், சென்னை.

# இயல் 6

## நாயக்கர் இயல்

# செவ்வப்ப நாயக்கன்

**(கி. பி. 1532-1580)**

வட ஆர்க்காடு மாவட்டம் நெடுங்குன்றம்[1] எனும் ஊரினைத் தலைநகராகக் கொண்டு விசயநகர அரசர்களின் சார்பாளர்களாக வாழ்ந்த நாயக்கர்களில் திம்மப்ப நாயக்கர் பாயாம்பிகா தம்பதி களுக்கு நான்கு புதல்வர்கள் பிறந்தனர். இவர்கள் முறையே பெத்த செவ்வா, சின்ன செவ்வா, பெத்த மல்லா, சின்ன மல்லா ஆவர்.[2] இவர்களில் சின்ன செவ்வா என்பவரைச் செவ்வபூபா செவ்வனார்பதி, சிறு செவ்வன், செவ்வப்பன் என்ற பெயர்களால் அழைத்தனர். சின்ன செவ்வன் எனும் செவ்வப்பன் விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயர் காலத்தில் தளவாயாகப் பணி புரிந்தவர். இவர் அச்சுத தேவராயரின் மனைவி திருமலாம்பாவின் சகோதரியான மூர்த்திமாம்பாவை மணந்தவர். விசயநகர அரசியின் தங்கையை மணந்ததால் செவ்வப்ப நாயக்கனுக்குச் சீதனமாகச் (ஸ்ரீதனமாக) 'சோழமண்டல அரசு கிடைத்தது.[3]

செவ்வப்ப நாயக்கனால் தோற்றுவிக்கப்பட்ட தஞ்சை நாயக்கர்களின் ஆட்சியின் திறம் தஞ்சை, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு பகுதிகளில் உள்ள கல்வெட்டுக்களால் அறியப்படு கின்றது. இம்மன்னனின் அமைச்சராகத் திகழ்ந்த கோவிந்த தீட்சிதர், இவனது பெயரனான விசய இரகுநாதன் காலம் வரை நாயக்கர் ஆட்சியில் பெரும் பங்கு வகித்தவர். எல்லப்ப நாவலர் எனும் தமிழ்ப் புலவர் இம்மன்னனால் போற்றப்பட்டவர்களுள் ஒருவர்.

கி. பி. 1532-இலிருந்து 1563 வரை 31 ஆண்டுகள் செங்கோலோச்சிய செவ்வப்ப நாயக்கன், பின்பு தஞ்சை அரசைத்

தனது தமயன் அச்சுதப்ப நாயக்கனிடம் ஒப்படைத்துவிட்டுக் கி. பி. 1580- இல் இறக்கும் வரை பல இறைத் தொண்டுகள் புரிந்தான்.[4] இவனது சாதனைகளாகப் பல அருஞ்செயல்கள் அமைந்தன.

தமிழகத்திலேயே மிக உயரமான கோபுரமாகிய திருவண்ணா மலை இராசகோபுரத்தை எடுப்பித்து அழியாப் புகழடைந்தான். இவன் கட்டுவித்த கோபுரங்களும் திருமதில் சுற்றுகளும், திருப் பணிகளும் மிகப் பல. இவற்றுள் குறிப்பிடத் தக்கவைகளாகக் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில், தீர்க்கசைலம், விருத்தாசலம் முதலிய கோயில்களுக்குத் திருப்பணிகள் புரிந்தமையும்,ஸ்ரீசைலம், திருப்பதி முதலிய கோயில்களில் விமானங்களுக்குப் பொன் வேய்ந் தமையும் ஆகும். இவரது சாதனைகளை இராமபத்ராம்பா எழுதிய 'இரகுநாதாப்புதயா'[5] யக்ஞநாராயண தீட்சிதரின் 'சாகித்ய ரத்னா கரம்'[6] கோவிந்த தீட்சிதரின்'சங்கீதசுதா'[7] மற்றும் விஜயவிலாசம்,[8] இராசகோபால விலாசம்[9] தஞ்சாவூரு ஆந்திர ராஜுலுசரித்திரமு[10] போன்ற பல நூல்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

இவனது சாதனைகளை இவனது அமைச்சரான கோவிந்த தீட்சிதர் தம் சங்கீத சுதாவில்,

கர்ணுட சிம்மாஸன கார்யதுர்ய:
பராக்ராமா க்ராந்த பராவநீக:
சோணுத்ரி நாதஸ்யச செவ்வ பூபோ
நிர்மாய சாத்வார்யபி கோபுராணி
பிரகார பங்தீர்னவ மண்டபாணி
தடாகா திவ்யோ பவனுனி பூய:
கிராமா நனேகா நுப கண்ட ஸிம்னீ
தத்வா விசித்திராணிச பூஷணுனி
ரதானனேகா ந்விரசய்ய ரம்யான்
சக்ரே மஹாராஜ விபுதி மஸ்ய
ந கேவலம் சோன கிரீஸ்வரஸ்ய
கைங்கர்ய மேவம் க்ருதவான்ஸபூப:

என்று பல புதிய கோபுரங்கள், மண்டபங்கள், தடாகங்கள் எடுத்த தையும், புதிய ஊர்களை உருவாக்கியதையும் அழகுபடக் கூறு கிறார்.இதனைக்கல்வெட்டுச் சாசனங்களும் எடுத்தியம்புகின்றன.

செவ்வப்ப நாயக்கனின் மாபெரும் சாதனை, தஞ்சை நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளித்ததுதான். தஞ்சைப் பெருங்கோயில் சிவகங்கைக் கோட்டை உள்ள பகுதிகளுக்குக் கோட்டைச்சுவர் எடுத்து அகழியைத் தோண்டி[11] பணியும்

இவருடையதே.[11] சிவகங்கைக் கோட்டையின் உள்ளே உள்ள சிவகங்கைக் குளத்திற்குத் தேவையான நீர் கிடைப்பதற்காக, தஞ்சைப் பெருங்கோயிலுக்குப் பின்புறம் மிகப்பெரிய ஏரி ஒன்றை வெட்டுவித்தார். தஞ்சையின் மேற்குப் பகுதியில் பல சதுரமைல்கள் பரப்பளவில் பெய்யும் மழைநீர் பல வாரிகள் மூலமாக இவ்வேரியில் தேங்கவும் வழி செய்தார். ஏரியில் தேங்கிய மழைநீர் தெளிந்தபின்பு, ஒரு மதகு வழியாகக் கோட்டை அகழி நீரில் கலக்காமல், அதனைக் கடந்து குளத்திற்கு வர ஒரு பாதுகாக்கப்பட்ட பால அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் சிவகங்கைக்குளம் நிரம்ப ஏற்பாடுகள் செய்தார். பின்பு அந்த நீர் பூமியில் புதைக்கப்பட்ட சுடுமண் குழாய்கள் வழியாகத் தஞ்சை நகரிலுள்ள முக்கியக் குளங்களான ஐயங் குளம் (கோவிந்த தீட்சிதர் பெயரில் ஏற்பட்டது), சாமந்தன் குளம் முதலிய குளங்களுக்கும், நகரில் உள்ள முக்கியக் கிணறுகளுக்கும் அனுப்பப்பட்டது. செவ்வப்ப நாயக்கனால் ஏற்படுத்தப்பட்ட இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் பின்னாளில் தஞ்சை மராத்தியர்கள் காலத்தில் கண்ணும் கருத்துமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டது. இதுபற்றிய பல சான்றுகள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள மோடி ஆவணங்களில் உள்ளன. இவ்வாறு செவ்வப்ப நாயக்கனால் வெட்டப்பட்ட ஏரி 'செவ்வப்ப நாயக்கன் ஏரி' என்று அழைக்கப்பட்டது. இது தற்போது மருவி 'சேப்பனவாரி' என அழைக்கப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டிலேயே தஞ்சை நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை அளித்த மாபெரும் சாதனையாளர் இம்மன்னரே.

## செவ்வப்ப நாயக்கனது உருவச்சிலைகள்

இம்மன்னனது கற்படிமங்கள் இரண்டு, சோழமண்டலத்தில் கிடைத்துள்ளன. ஒன்று தஞ்சாவூர் மாவட்டம் சுவாமிமலைத் திருக்கோயிலில் இடம் பெற்றுள்ளது. மலைக்கோயிலில் அர்த்த மண்டபத்தை ஒட்டிய மகாமண்டப வெளித் திருச்சுற்றில் உள்ள ஒரு தூணில் இவ்வுருவச்சிலை காணப்பெறுகின்றது. இதில் இம்மன்னன் தலைப்பாகை, எழில் கொஞ்சும் ஆடை அணிகலன்கள் சூடி, இடுப்பில் குத்துவாள் தரித்து இறைவனை வணங்கும் திருவுருவக் கோலத்தில் சிலையாக வடிக்கப்பட்டுள்ளான்.

இதுவரை நமக்குக் கிடைத்துள்ள செவ்வப்ப நாயக்கனின் உருவச் சிலைகளில் இதுவே மிக அழகிய நேர்த்தியான வேலைப்பாடமைந்த ஒன்றாகும். இவனது வரலாற்றைப் புரட்டும்போது திருவண்ணாமலை இராசகோபுரம் இவனால்

எடுக்கப்பட்டதற்கு விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயரும் ஒரு முக்கியக் காரணராகத் திகழ்ந்தார் என்பதனை, திருவண்ணா மலைத் திருக்கோயில் சாசனங்கள் வாயிலாக அறியலாம். திருக் கோயிற் பணிகளில் கிருட்டிண தேவராயர் திட்டமிட்டவற்றை யெல்லாம் செயல் வடிவாக்கியவன் செவ்வப்ப நாயக்கனே என்பது வரலாற்று உண்மை. அதன்படியே சுவாமிமலைத் திருக்கோயிலின் பணிகள் கிருட்டிண தேவராயரால் திட்டமிடப்பட்டுச் செவ்வப்ப நாயக்கனால் நிறைவேற்றப்பட்டது.

அறுபடைவீடுகளுள் சங்ககால நக்கீரர் குறிப்பிடும் திருவேரகம் இதுதானா என்பது ஆய்வுக்குரிய ஒன்று. இதுவரை சோழமண்ட லத்தை ஆண்ட களப்பிரர்கள், முத்தரையர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், சோழப் பெருமன்னர்கள் ஆகிய மன்னர்கள் வரி சையில் எந்தவொரு மன்னன் காலத்துக் கல்வெட்டோ, செப் பேடோ இலக்கியக் குறிப்புகளோ இத்திருவேரகம் பற்றிக் குறிப்பிட வில்லை. மேலும், இக்கோயிலுக்கு அண்மையில் உள்ள வலஞ்சுழித் திருக்கோயிலில் பல சோழர் காலத்துக் கல்வெட்டுகள் இருந்தபோதிலும் இவ்வூர் (திருவேரகம்) பற்றியோ, குமரன் கோட்டம் பற்றியோ எந்த ஒரு செய்தியும் இல்லை. இத் திருவேரகம் பற்றிய இலக்கியச் செய்திகள் கி பி. 15-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த அருணகிரியாரின் திருப்புகழில்தான் நமக்குக் கிடைக்கின்றன.

கல்வெட்டுச் சான்றுகளாக இத்திருக்கோயிலில் நமக்குக் கிடைப்பன கிருட்டிண தேவராயரின் கல்வெட்டொன்றும் செவ் வப்பநாயக்கனின் கல்வெட்டொன்றும்தான்.[18] திருத்தணிகை முரு கன் கோயில் (அறுபடைகளுள் ஒன்று) பற்றிப் பல்லவர் காலத் துச் செப்பேடான வேலஞ்சேரி செப்பேடுகள் கூறுகின்றன. இதேபோன்று ஆதித்தசோழனின் செப்பேடொன்று திருத் தணிகை முருகன் கோயில் பற்றி விவரிக்கின்றது. ஆனால், சுவாமிமலை என அழைக்கப்படும் திருவேரகம் பற்றிய சோழர் காலத்து வரலாற்றுச் சான்றுகள் ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. தற்போது கோயில் உள்ள இடத்தில் முன்பு ஒரு பௌத்தப் பள்ளி இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதை மெய்ப்பிக்கும் வண்ணம் இங்குக் கிடைத்த பௌத்தத் திருவுருவங்கள் தஞ்சைக் கலைக்கூடம், சென்னை அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது 'திருவேரகம்' என்ற பெயரில் சோழர்கள் காலத்தில் செவ்வேள் குமரனுக்கு இங்குக் கோட்டம் அமையாமல் பின்பு -15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே - இவ்வாலயம் எடுக்கப்

பட்டதை அறிய முடிகிறது. இதன் திருப்பணிகள் கிருட்டிண தேவராயர் காலத்தில் தொடங்கப்பட்டு, செவ்வப்ப நாயக்கனால் நிறைவேற்றப்பட்டது என்பதைக் கல்வெட்டுகள், சிற்ப அமைதி, இலக்கியச் சான்றுகள் துணைகொண்டு அறிய முடிகிறது.

அருணகிரியார் தம் திருப்புகழில் திருவேரகமாம் இவ் ஊரினைச் 'சுவாமிமலைப்பதி' 'குருமலை' 'காவேரி வடகரைச் சாமிமலை', 'குருகிரி' எனப் பல பெயர்களால் குறிப்பிடுகிறார். கோவிந்த தீட்சிதர் சங்கீதசுதா எனும் நூலில் செவ்வப்ப நாயக்கன் செய்த திருப்பணிகளைக் குறிப்பிடும்போது

"ஏகாம்பர நாதஸ்ய தீர்கசைல
நிவாஸினசாபி ரகூத்வஹஸ்ய
விருத்தாசலஸ்ய ஸமஸ்தமேததத்
பிரகார முக்கியான்வ்யதனே திவிஸேஷான்
ஸ்ரீ சைலநாதஸ்ய சவேங்கடாத்ரி
நிவாஸின: பத்ம விலோசனஸ்ய
ஹைமம் விமானம் விரஸ்ய ஹர்ஷா
தன்யச்ச கைங்கர்ய மஸா வதாநீதா" -

என்று குறிப்பிடுகிறார். காஞ்சிபுரம், தீர்க்கசைலம், விருத்தாசலம் ஸ்ரீசைலம், திருப்பதி திருமலை போன்ற கோயில்களுக்கு இம்மன்னன் திருப்பணிகள் செய்ததாகக் குறிப்பிடுகிறார். இங்குத் தீர்க்க சைலம் என்று கோவிந்த தீட்சிதர் குறிப்பிடுவது சுவாமிமலைத் (திருவேரகம்) திருக்கோயிலையேயாகும்.

செவ்வப்ப நாயக்கனால் திருப்பணி செய்யப்பட்ட இக் குமரவேள் கோட்டத்தின் சந்நிதியிலேயே இம்மன்னனின் சிலையையும் நாம் காண முடிகிறது. தற்போது இச்சிலையைக் 'கார்த்தவீரியார்ச்சுனன்' என்று தவறாகக் குறிப்பிட்டு வணங்கி வருகின்றனர்.

### திருவாரூர் சிற்பம்

வரலாற்று நாயகனான செவ்வப்பனின் உருவச்சிலை, திருவாரூர்த் திருக்கோயிலிலும் இடம்பெற்றுள்ளது. இங்குள்ள வடக்கு இராசகோபுரம் இவனது ஆதரவால் எடுக்கப்பட்டது. இதன் நுழைவாயிலின் கீழ்ப்புறம் உள்ள ஒரு மாடத்தில் இம் மன்னனின் படிமத்தைக் காணலாம். இதனையடுத்துள்ள பிறி தோர் மாடத்தில் சைவ அடியார் ஒருவரின் உருவச்சிலையும்



செவ்வப்ப நாயக்கன்
திருவாரூர்

உள்ளது. மன்னன் தலையில் மகுடமேதும் சூடாமல் முடிந்த கொண்டையுடன் நின்ற கோலத்தில் அஞ்சலி செலுத்தும் பாங்கில் காட்சி நல்குகிறான். இடுப்பில் நீண்ட ஆடை, கையில் காப்புகள், நீண்ட உடைவாள் ஆகியவை இவனுக்கு அணி செய்கின்றன.

இத்திருக்கோயிலின் கிழக்கு வாயிலில் இம்மன்னனது அரசு ஆணை ஒன்று கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது.[13] மேலும், சிக்கல் கோயிலில் உள்ள கல்வெட்டு,[14] தருமை ஆதீன ஆவணங்கள் ஆகியவற்றின் துணை கொண்டும் ஆராய முற்படும் போது, இவ்வடக்குக் கோபுரம் இம்மன்னனது ஆதரவில் கமலை ஞானப்பிரகாசர் என்பவரால் கட்டப்பட்டது என்பது தெளிவாகின்றது. எனவே, இங்குள்ள மன்னனின் சிலையைச் செவ்வப்ப நாயக்கனாகவும், அடியவர் சிலையைக் கமலை ஞானப்பிரகாசர் சிலையாகவும் ஏற்றுக் கொள்ள முடிகிறது.

**தஞ்சையில் சுதைச்சிற்பம்**

தஞ்சைப் பெருங்கோயிலான இராசராசேச்சரத்தின் திருச்சுற்று மதிலுக்கு வெளிப்புறம் உள்ள கோட்டைச் சுவரும், அகழியும் செவ்வப்ப நாயக்கனால் எடுக்கப்பட்டன என்பதை முன்பே கண்டோம். இக் கோட்டைச் சுவரில் பல சோழர் காலக் கல்வெட்டுகள் உள்ள கற்பலகைகள் மற்றும் சிற்பங்கள் தலைகீழாகவும். இடம் மாறியும் காணப்படுவன எல்லாம், இவை பிற்காலத் திருப்பணிகளே என்பதற்குச் சான்றாக நிற்கின்றன.

இராசராசப் பெருந்தகையால் எடுக்கப்பட்ட இந்தத் திருக்கோயிலின் முதல் இராசகோபுரத்தை 'இராசராசன் திருவாயில்' என்றும், இரண்டாம் கோபுரத்தைக் 'கேரளாந்தகன் திருவாயில்'

என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. புகழ்பெற்ற இந்தக் கேரளாந்தகன் திருவாயில் செவ்வப்ப நாயக்கன் காலத்தில் திருப் பணி செய்யப்பட்டது. அப்போது கோபுரத்தின் வெளிப்புறம் சுண்ணச்சுதைகளால் திருத்தப்பட்டது. இவ்வாறுஇடம்பெற்றுள்ள கோபுரச் சுதை அமைப்பில் கோபுரத்தின் கீழ்ப்புறம் இரண்டாம் அடுக்கில் செவ்வப்ப நாயக்கனின் வணங்கும் கோலச் சுதைச்சிற்பம் இடம் பெற்றுள்ளது. இது தோற்றத்தில் சுவாமிமலையில் உள்ள சிற்பத்தினை ஒத்தே காணப்படுகிறது. இராசராசன் திருவாயிலின் உபபீடத்தின் அதிஷ்டான வர்க்கத்தில் செவ்வப்ப நாயக்கனின் கல்வெட்டொன்றும் உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

## குறிப்புகள்

1) A.R.E. 497 of 1907, 75 of 1925.
2) இரகுநாதாப் புதயம்-சரசுவதிமகால் நூலகச்சுவடி எண்: 857
3) தஞ்சாவூரி ஆந்திர ராஜுல சரிதமு சுவடிகள்நூலகம் சென்னை.
4) Nayaks of Tanjore-Vridagirisan
5) இரகுநாதப் புதயம் - இராமபத்ராம்பா, சரசுவதிமகால் நூலகச் சுவடி எண்: 10145.
6) சரசுவதி மகால் நூலகச் சுவடி எண் : 1767, 4872
7) சரசுவதி மகால் நூலகச்சுவடி எண் : 958, 1368
8) சரசுவதி மகால் நூலகச் சுவடி எண் : (தெலுங்கு) 251-255.
9) சரசுவதி மகால் நூலகச் சுவடி எண் (தெலுங்கு) 222-224.
10) சென்னை ஓரியண்டல் நூலகச் சுவடி-நூல்.
11) Annual report of Archaeological Department Southern Circle 1912-13.
12) A.R.E. 497 of 1907.
13) திருவாரூர்த் திருக்கோயில்-குடவாயில் பாலசுப்பிரமணியன்.
14) A.R.E. 104 of 194.

# கமலை ஞானப்பிரகாசர்

இவர் சைவ ஆசார்ய பரம்பரையில் தோன்றியவர். திருவாரூர் செட்டித்தெருவில் வசித்த ஞானப்பிரகாசரிடத்தில் சிவஞான உபதேசம் அருளப்பெற்றவர். இவரது இயற் பெயர் சிதம்பரநாத மாசிலாமணி ஞானப்பிரகாசப் பண்டாரம் என்பதாகும். பின்னாளில் கமலை ஞானப்பிரகாசர் என அழைக்கப் படலானார். திருவாரூர் சித்தீச்சரத்தில் உள்ள ஆலமர் செல்வரையே தமது வழிபாட்டுத் தெய்வமாகப் போற்றியவர். இவரது மாணாக்கர்களில் குறிப்பிடத்தக்கவர் தருமபுர ஆதீனத்து ஆதி குருமூர்த்திகளாகிய குருஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளாவார். 'தியாகப்பள்ளு' எனும் நூலை யாத்தவர் இவர்[1]

செவ்வப்ப நாயக்கன் (கி. பி. 1585-1561) தஞ்சையை ஆட்சிபுரிந்த காலத்தில் இவரது அருளாட்சியின் கீழ் திருவாரூர், சிக்கல், வடகுடி முதலிய ஊர்களில் திருக்கோயில்கள் இருந்தன வெனக் கி. பி. 1482-இல் வரையப்பட்ட சாசனம் ஒன்று கூறு கிறது.[2] இக்கல்வெட்டுச் சாசனத்தினால் இவர் பல திருக் கோயில்களுக்குத் திருப்பணி செய்தவர் என்பதையும் அறிய முடிகிறது.

திருவாரூர்த் திருக்கோயிலின் வடக்கு இராசகோபுரம் தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்பன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோபுரத்தின் நுழைவு வாயிலின் கீழ்ப்புறம் உள்ள ஒரு மாடத்தில் செவ்வப்ப நாயக்கனின் உருவச்சிலை உள்ளதை முன்பே கண்டோம். இம்மாடத்தை ஒட்டிய பிறிதோர் மாடத்தில் ஒரு சிவனடியாரின் உருவச்சிலை உள்ளது. இவ்வடியவர்

இடுப்பில் துண்டு போன்ற அரையாடை ஒன்றை உடுத்திக் கொண்டு தலையிலும், மார்பிலும் உருத்திராக்க மாலை அணிந்த வண்ணம் இறைவனை வணங்கும் கோலத்தில்காணப்படுகிறார்.



கமலை ஞானப்பிரகாசர்
திருவாரூர்

ஆரூர் கிழக்கு இராச கோபுரத்திலுள்ள ஒரு கல்வெட்டுச் சான்றாலும்,[3] தருமையாதீனத்திலுள்ள ஆரூர் அறக்கட்டளைக் குறிப்புகளாலும், செவ்வப்ப நாயக்கனது பிறிதோர் கல்வெட்டாலும் (104 of 1911) இவ்வடியவர் ஞானப்பிரகாசப் பண்டாரம் எனும் கமலை ஞானப்பிரகாசரே என்பதை அறிய முடிகிறது. செவ்வப்பன் காலத்தில் ஞானப்பிரகாசப் பண்டாரமும், சகசி மன்னன் காலத்தில் அருணாசலப் பண்டாரமும், இரகுநாதன் காலத்தில் பிறிதோர் பண்டாரமும் இத்திருக்கோயிலை நிருவகித்தனர் என்பதைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும்[4] கூறுகின்றன.

## குறிப்புகள்

1. திருவாரூர்-ச. தண்டபாணி தேசிகர், தருமை ஆதீன வெளியீடு எண் : 189.
2. A. R. E, Ins. 104 of 1911.
3. திருவாரூர்த் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன், ஆரூர்க் கல்வெட்டு எண் : 2.
4. ஓவியச் செப்பேடுகள் - குடவாயில் பாலசுப்பிரமணியன், தினமணி சுடர் கட்டுரை, 1980.

# மூர்த்தியம்மாள்

(மூர்த்திமாம்பா)

தஞ்சை நாயக்க மன்னர்களின் வரிசையில் முதலாமவர் செவ்வப்ப நாயக்கராவார். இவர் விசயநகரப் பேரரசர் அச்சுதராயரின் மனைவியான திருமலாம்பாவின் தங்கை மூர்த்தியம்மாளின் கணவர் ஆவார். இதனை விசயவிலாசம் எனும் நூல் சிறப்பாகக் கூறுகிறது. திருமலாம்பா பேரரசியானாலும் கூடச் சிறந்த புலவரும் ஆவார். திருமலாம்பா இயற்றிய 'வரதாம்பிகா பரிணயம்' எனும் நூலில் 'ராஜாதிராஜ அச்சுதராய சர்வபூமா பிரேம சர்வஸ்வ விஸ்வாச பர' எனக் குறிப்பிடும் வரிகளால் அச்சுதராயரின் உள்ளம் கவர்ந்தவள் என்பது தெளிவாகின்றது. மன்னனின் உள்ளங்கவர் நாயகியின் தங்கையான மூர்த்திமாம்பாவிடம் உள்ள பாசத்தால் அவளது கணவனான தளவாய் செவ்வப்ப நாயக்கனைத் தஞ்சையின் அரசனாக்கி, சீதனமாகச் சோழமண்டலத்தை அவனுக்கே அளித்தார்.

எனவே, சோழநாட்டில் நாயக்கர் ஆட்சி உதயமாவதற்குக் காரணமாகத் திகழ்ந்தவள் மூர்த்திமாம்பா என அழைக்கப்படும் அரசியேயாவாள்.

இவ்வம்மையாரின் செப்புப் படிமம் ஒன்று (சுமார் 60செ.மீ. உயரமுடையது) இன்றும் திருவிடைமருதூர் திருக்கோயிலில் உள்ளது. நின்ற கோலத்தில், அழகிய புடவையணிந்து, வணங்கும் திருக்கோலத்தில் உள்ளது. தலையில் இடப்பட்ட கொண்டை ஒரு பக்கமாகக் காணப்படுகிறது. இச்சிலையின் பீடத்தில் 'மூர்த்தியம்



மூர்த்தியம்மாள் - திருவிடைமருதூர்

மாள்' என்ற 16ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியுடைய தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன. இச் செப்புப் படிமம் கி. பி. 1550-ஆம் ஆண்டுக் காலத் தஞ்சை நாயக்கர்களின் வார்ப்புக் கலைத் திறனுக்குச், சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழக வரலாற்றில் அதிலும் சிறப்பாகத் தஞ்சை வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கும் மூர்த்திமாம்பாவின் பெயரில் ஒரு மண்டபம் இன்றும் தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ளது. நடராசர் திருமேனி உள்ள மண்டபத்தில் ஒரு தூணில் மூர்த்தியம்மாளின் உருவம் கல்லில் செதுக்கப்பட்டுக் கல்லெழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் செய்யப்பட்ட திருப்பணிகளால் இம்மண்டபத்தின் தரை உயர்த்தப்பட்டு இச் சிலையின் பெரும்பகுதி தளவரிசையினுள் புதைந்துள்ளது. அம்மன் திருக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில்.

1. தஞ்சாவூர் பெரிய உடைய நாயனூர் கோயில் மல்லப்ப நாயக்கர் மண்டபம்
2. மூர்த்தி அம்மன் மண்டபம் புலியூரார்தன்மமாக கல்லு வருகையி
3. னூலும் அவர்கள் பண்ணிற ஊழியத்தினுலும் சன்னதியில் ஒடுக்கும் பிற
4. சாதம் கட்டளையிட்டபடியாலே சந்திராதித்த வரையும் நடக்கவும்

என்று எழுதப்பட்டுள்ளது. இச் சாசனத்தினால் கி.பி.16ஆம் நூற்றாண்டில் 'மூர்த்தியம்மன் மண்டபம்' என்ற மண்டபம் கட்டப்பட்டதை அறிகிறோம்

தஞ்சை வரலாற்றில் அழியா இடம் பெற்ற இவ்வம்மையாரின் பெயரால் மூர்த்தியம்மாள்புரம் எனும் ஊர் ஒன்று மன்னார்குடி தஞ்சைப் பெருவழியில் வடுவூருக்கு அண்மையில் உள்ளது.

# மல்லப்ப நாயக்கர்

தஞ்சை நாயக்க மன்னரான விசயராகவ நாயக்கர் இயற்றிய 'இரகுநாத நாயக்காப்புதயமு', 'இராஜ கோபால விலாசம்' எனும் நூல்களின் முற்பகுதியான விசயராகவ வம்சாவளியாலும், தஞ்சை நாயக்கர்கள் காலக் கல்வெட்டுகளாலும், முதல் நாயக்க மன்னனான செவ்வப்ப நாயக்கனுடன் பிறந்தவர்கள் முறையே பெத்த செவ்வா, பெத்த மல்லா, சின்ன மல்லா என்பவர்கள் என்பதையும் அறியமுடிகிறது. திம்மப்ப நாயக்கர்-பாயாம்பா தம்பதியர்களின் புதல்வர்களான இவர்களில் சிறு மல்லப்ப நாயக்கரின் (சின்ன மல்லா) செப்புப் படிமம் தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் திருக்கோயிலில் உள்ளது. இப்படிமத்தின் பீடத்தில் 'சிறு மல்லப்ப நாயக்கர்' என்று 16-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியுடைய தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்புப் படிமத்தில் நீண்ட குல்லாயும், மார்பில் அணிகலன்களும்சூடிய மல்லப்ப நாயக்கர் இறைவனை வணங்கும் கோலத்தில் உள்ளார். இடுப்பில் அரையாடையும், கையில் புரளும் துண்டும் காணப்படுகின்றன. உயரமான சற்று ஒல்லியான அழகிய சிலையாக உள்ளது இப்படிமம். இந்தச் செப்புப் படிமமும், இதே கோயிலில் உள்ள செவ்வப்பனின் தேவியான மூர்த்திமாம்பாவின் செப்புச் சிலையும் உருவ அமைப்புகளால் திருப்பதி திருமலைத் திருக்கோயிலில் உள்ள கிருட்டிண தேவராயர்-அவரது தேவி இவர்களுடைய செப்புப் படிமங்களைப் போன்றே உள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள எல்லாச் சிலைகளுமே ஒரே சிற்பியால்தான் வடிக்கப்பட்டிருக்கவேண்டும். ஏறக்குறைய இந்தச் சிலைகள் எல்லாம் ஒரே காலத்தில் ஒரே மாதிரி வடிவத்தில் (Style)



மல்லப்ப நாயக்கர்
திருவிடைமருதூர்

வடிக்கப்பட்டவையே. மேலும் திருப்பதி திருமலையில் உள்ள கல்வெட்டொன்றில் கி. பி. 1540 -இல் அச்சுதராயர் (கிருட்டிண தேவராயரின் தம்பி) காலத்தில் நெடுங்குன்றத்தைச் சேர்ந்த திம்மப்ப நாயக்கரின் மகனான மல்லப்ப நாயக்கர் அளித்த அறக்கொடை பற்றி விவரிக்கின்றது.[1] இக்கல்வெட்டுச் சான்றால் மல்லப்ப நாயக்கருக்கும் திருப்பதித் திருக்கோயிலுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு தெரிகிறது.

திருப்பதி கோயிலில் கிருட்டிண தேவராயர் மற்றும் தேவியர்களுடைய சிலைகளை வடித்த சிற்பியே, அச்சுதராயரின் (கிருட்டிண தேவராயர் தம்பி) மைத்துனியான மூர்த்திமாம்பா, மற்றும் அவரது கணவரின் தம்பி மல்லப்பன் இவர்களுடைய சிலைகளையும் வடித்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

அடுத்து, தஞ்சைப் பெருங்கோயிலில் முருகன் திருக்கோயிலுக்கு முன்பு ஒரு பெரும் மண்டபம் உள்ளது. இதனையும் முருகன் கோயிலையும் இணைக்கும் படிகள் பிற்காலத்தில் இரண்டாம் சரபோசி மன்னரால் கட்டப்பட்டன என்பதற்கு இப்படியில் உள்ள கல்வெட்டுகளே சான்று பகர்கின்றன.

இம்மண்டபத்தின் பெயர் மல்லப்ப நாயக்கர் மண்டபம் என்பதனைப் பெரியநாயகி அம்மன் கோயில் அதிட்டானத்தில் உள்ள கல்வெட்டால் அறியலாம்.[2] இம்மண்டபத்தின் தென்புறச் சுவரில் ஒரு மாடம் அமைக்கப்பட்டு அதில் கைகூப்பி வணங்கும் மன்னர் ஒருவரின் கற்சிலை உள்ளது. மல்லப்ப நாயக்கர் மண்டபம் எனப் பெயரிட்டுப் புலியூரார் தன்மமாக

எடுக்கப்பட்ட இம்மண்டபத்தில் உள்ள கற்சிலை மல்லப்ப நாயக்கருடையதே என்பது தெளிவு.

திருமணஞ்சேரி திருக்கோயிலில் மல்லப்ப நாயக்கர் பெயரால் ஒரு இராசகோபுரம் உள்ளதாகவும், மேலும் அதே திருக்கோயிலில் அவரது உருவச் சிலை உள்ளதாகவும் சில குறிப்புகள் கூறுகின்றன.

## குறிப்புகள்

1. திருமலை திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டுத் தொகுதி.
2. S. I. I. Vol II.

# அச்சுதப்ப நாயக்கன்

**(கி. பி. 1560-1614)**

தஞ்சை நாயக்க மன்னர்கள் வரிசையில் இரண்டாவது மன்னனாகத் திகழ்ந்தவன் அச்சுதப்ப நாயக்கனாவான். இவன் தன் தந்தை செவ்வப்ப நாயக்கர் கி. பி. 1580-இல் இறந்த பிறகு மன்னனாக முடிசூடிக்கொண்டான். கி.பி.1560 முதல் தன் தந்தையுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்புகளைக் கவனிக்கத் தொடங்கினான். தன் தந்தைக்கு அமைச்சராய்த் திகழ்ந்த கோவிந்த தீட்சிதரின் உதவியுடன் நல்லாட்சி புரிந்தான். கோவிந்த தீட்சிதர் இவனுக்கு அரசியல் துணைவர் மட்டுமன்றி அரசியல் குருவுமாவார். வல்லம் கோட்டையில் நிகழ்ந்த போரில் மதுரை வீரப்ப நாயக்கரைத் தோல்வியுறச் செய்தான். இவனது மனைவியின் பெயர் மூர்த்திமாம்பா.

அச்சுதப்பநாயக்கன் மூர்த்திமாம்பா தம்பதிகளுக்கு மகவாய்ப் பிறந்தவனே அச்சுத இரகுநாத நாயக்கன். இராம பத்ராம்பா எழுதிய 'இரகுநாத நாயக்காப்புதயம்' எனும் நூல் அரங்கப் பெருமானின் விமானத்தைப் பொன்மயமாகச் செய்தவன் என்று இம்மன்னவனைப் புகழ்கிறது. இது மட்டுமன்றி இராமேசுவரம் கோயிலுக்குப் பல பணிகள் செய்தவன் என்றும் புகழ்கிறது.[1]

மூவலூரில் ஒரு சத்திரமும், விளநகரில் கற் கோயிலும் எடுத்ததாக இம்மன்னனது கல்வெட்டுச் சாசனங்கள் கூறுகின்றன.[2] மன்னார்குடிக் கோயிலின் முன் கருடஸ்தம்பம் எனும் ஓர் உயரிய கல்தூணை நட்டுவித்ததோடு அக்கோயிலுக்குப் பல திருப்பணிகளையும் செய்வித்தான். புள்ளிருக்குவேளூர் எனும் வைத்தீசுவரன் கோயிலில் இவன் பெயரால் ஒரு மண்டபம்

எடுக்கப்பட்டது. விசயநகரப் பேரரசுக்கும், மற்றும் தென்நாடுகளுக்கும் முகமதிய ஆட்சி பரவா வண்ணம் தடுத்த மன்னர்கள் வரிசையில் இவனது பங்கு குறிப்பிடத் தக்கதாகும். அச்சுதப்ப நாயக்கனின் சாதனைகளையும், புகழையும் கோவிந்த தீட்சிதரின் 'சங்கீத சுதா', யக்ஞ நாராயண தீட்சிதரின் 'சாகித்ய ரத்னகரா' இராம பத்ராம்பாவின் 'இரகுநாத நாயக்காப்புதயம்' ஆகிய நூல்கள் மிக விரிவாகக் குறிப்பிடுகின்றன.[4]

## அச்சுதப்ப நாயக்கன்-மூர்த்திமாம்பா உருவச்சிலைகள்

**புள்ளிருக்குவேளூர்த் திருக்கோயிலில் . . .**

இதுவரை கிடைத்துள்ள இம்மன்னனின் உருவச்சிலைகளில் முதலிடம் வகிப்பது புள்ளிருக்குவேளூர் எனும் வைத்தீசுவரன் கோயில் அருள்மிகு வைத்யநாதசுவாமித் திருக்கோயிலின் முன் மண்டபத்திலுள்ள படிமமாகும். இம்மண்டபம் அழகப்பெருமான்



அச்சுதப்ப நாயக்கரும், மூர்த்திமாம்பாவும்
புள்ளிருக்குவேளூர்

பிள்ளைஎன்பவரால் அச்சுதப்ப நாயக்கன் பெயரில் எடுக்கப்பட்டதாகும். இவர் இம்மன்னனின் நலனுக்காக அளித்த அறக்கொடைகள் பற்றிய கல்வெட்டொன்று இத்திருக்கோயிலில் உள்ளது.[5]

இம்மண்டபத்திலுள்ள தூண் ஒன்றில் அழகிய கொண்டை, எடுப்பான மீசை, காதில் குண்டலங்கள், கைகளில் காப்பு, ஒரு காலில் 'விருது பெண்டேரம்' எனும் கழல் அணிந்த நிலையில் கைகூப்பி இறைவனை வணங்கும் கோலத்தில் அச்சுதப்ப நாயக்கனின் உருவச்சிலை இடம்பெற்றுள்ளது. இடுப்பில் ஆடையும், தோளில் போர்த்தப்பட்டுள்ள துண்டும் இச்சிலைக்கு எழிலூட்டுகின்றன. இம்மன்னவன் அருகில் ஒரு பக்கம் சாய்ந்த கொண்டையுடன் காதில் அகலமான தோடுகள் சூடி, எழில் செய்யும் அணிகலன்களும், புடவையும் அணிந்து, கைகூப்பும் நிலையில் மூர்த்திமாம்பாவின் உருவச்சிலையும் உள்ளது.

**மன்னார்குடி இராசகோபால சுவாமித் திருக்கோயில் ...**

மன்னார்குடி 'மன்னார் கோயில்' எனும் இத்திருக்கோயிலின் கிழக்குக் கோபுரத்தின் முன் 54 அடி உயரமுடைய கருட ஸ்தம்பம் எனும் உயரிய கல்தூண் நடப்பட்டு உள்ளது. இது அச்சுதப்ப நாயக்கனின் திருப்பணியாகும். இக்கல்தூணின் பீடத்தில் வடதிசையில் உடைவாளைக் கையில் அணைத்த வண்ணம் அஞ்சலி ஹஸ்தங்களுடன் (வணங்கும் திருக்கோலத்தில்) ஒரு புறம் சாய்ந்த கொண்டையும், காதுகளில் குண்டலங்களும், கழுத்தில் முத்துமாலையும், மார்பில் புரிநூலும், கைகளில் காப்புகளும், இரண்டு கால்களிலும் கழல்களும் திகழ அச்சுதப்ப நாயக்கனின் திருவுருவச்சிலை காணப்படுகிறது.

இதே கருட ஸ்தம்பத்தின் பீடத்தின்மேல் மேற்குப் பகுதியில் இம்மன்னனின் தேவியான மூர்த்திமாம்பாவின் உருவம் எழிலுடன் காட்சி நல்குகிறது. இத்தேவி சாய்ந்த கொண்டையும், அகலமான காதணிகளும் அணிந்து, உடையலங்காரமும், அணிகலன்களும் எழில் சேர்க்க இறைவனை வணங்கும் கோலத்தில் காட்சி நல்குகிறாள்.

இதே திருக்கோயிலின் மகாமண்டபத்திற்கு முன் உள்ள மண்டபத்தில் அச்சுதப்ப நாயக்கன் மூர்த்திமாம்பா உருவச்சிலைகள் உள்ளன. இதில் இம்மன்னவன் இடுப்பில் சிறிய குத்து வாளை அணிந்து கொண்டு இராசமன்னாரை வணங்கும் கோலத்தில் கற்சிலையாக இடம்பெற்றுள்ளான். அருகிலுள்ள மூர்த்திமாம்பாவின் உருவச்சிலையும் உயரிய ஒன்றாகும்.



அச்சுதப்ப நாயக்கரும் மூர்த்திமாம்பாவும்
மன்னார்குடி

பிற இடங்களில் . . .

இரகுநாத நாயக்கனால் கும்பகோணத்தில் எடுக்கப்பட்ட இராமசுவாமித் திருக்கோயிலின் மகாமண்டபத்தில் அச்சுதப்ப நாயக்கனின் உருவச்சிலை இடம் பெற்றுள்ளது. இது மிகச் சிறிய சிலையாகும்.

திருவரங்கம் திருக்கோயிலின் வடபுறம் கொள்ளிடம் ஆற்றுக்குச் செல்லும் வழியில் எல்லைக்கரை மண்டபம் என்ற ஒரு மண்டபம் உள்ளது. இதிலுள்ள ஒரு தூணில் இம் மன்னனது உருவச்சிலை காணப்படுகிறது. இச்சிற்பம் மிகவும் எழில் வாய்ந்ததாக அமையாவிட்டாலும், இத்தூணில் அச்சுதப்ப நாயக்கர் என்ற பெயர் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டு இருப்பது வரலாற்றுச் சிறப்புடைய ஒன்றாகும்.

## அழகப்பெருமான் பிள்ளையும் அவரது மனைவியும்

புள்ளிருக்கு வேளூர் எனும் வைத்தீசுவரன் கோயில் அருள்மிகு வைத்தியநாத சுவாமித் திருக்கோயிலின் முன் மண்டபத்தில் அச்சுதப்ப நாயக்கன், மூர்த்திமாம்பா அம்மையார் உருவச் சிலைகள் இடம்பெற்றுள்ளதைக் கண்டோம். இவ்வுருவச் சிலைகள் இடம்பெற்றுள்ள தூணின் எதிர்ப்புறம் உள்ள பிறி தோர் தூணில் ஓர் அடியவர் மற்றும் அவரது மனைவியின் உருவச்சிலைகள் உள்ளன. இவர் தலையில் குல்லாய் போன்ற முண்டாசு அணிந்து, இடுப்பில் அரை ஆடையும், மார்பில் உருத்திராக்க மாலையும் தரித்து வணங்கும் கோலத்திலுள்ளார். அருகிலுள்ள இவரது மனைவி அழகிய புடவை அணிந்து, சாய்ந்த கொண்டையும், கழுத்தில் அணிகலன்களும் அழகூட்ட இறைவனை வணங்கும் கோலத்தில் காட்சி நல்குகிறார். இத் திருக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் இவ்வுருவச்சிலை அழகப்பெருமான் பிள்ளை என்பவருடையது என அறிய முடிகிறது.[6] இவர் அச்சுதப்ப நாயக்கனின் பிரதிநிதியாக இப் பகுதியில் திகழ்ந்தவராய் இருந்திருக்க வேண்டும். இவர் அச்சுதப்ப நாயக்கனின் நலனுக்காகச் சிதம்பரேச சுவாமிக்கு மகாசிவராத்திரி அபிஷேகத்திற்காக மண்ணிப்பள்ளம் என்ற கிராமத்தில் நிலம் விட்ட செய்தியும் இதே கல்வெட்டால் அறிய முடிகிறது. மண்ணிப்பள்ளம் எனும் ஊர் வைத்தீசுவரன் கோயிலிலிருந்து சில கல் தொலைவில் உள்ள ஓர் ஊராகும்.



அழகப்பெருமான் பிள்ளையும், அவரது மனைவியும்
புள்ளிருக்குவேளூர்

## குறிப்புகள்

1. Nayaks of Tanjore - Virudagirisan.
2. சரசுவதிமகால் நூலகச் சுவடி நூல். - பி. 10145-டி. 8722.
3. 84 of 1905 dated A, D. 1583 and 259 of 1913.
4. சரசுவதிமகால் நூலகச் சமஸ்கிருத நூல்கள் டி. 10804, 10781, 8722.
5. A. R. E. 423 of 1918.
6. A. R. E. Ibid.

# இரகுநாத நாயக்கன்

**(கி. பி. 1600 - 1634)**

சேர மன்னர்களில் செங்குட்டுவன் போலவும், சோழர்களில் இராசராசப் பெருந்தகை போலவும், பல்லவர்களில் இராசசிம்மன் போலவும், பாண்டியர்களில் பராந்தக நெடுஞ்சடையன் போலவும், விசயநகர அரசர்களில் கிருட்டிண தேவராயர் போலவும், மதுரை நாயக்கர்களில் திருமலை நாயக்கர் போலவும் தஞ்சை நாயக்கர்களின் வரிசையில் மிகச் சிறப்பித்துக் கூறப்படும் தகுதியைப் பெற்றவன் இரகுநாத நாயக்கனாவான்.

அச்சுதப்ப நாயக்கன் மூர்த்திமாம்பிகா தம்பதிகளுக்கு இராமனது அருளால் இரகுநாதன் பிறந்ததாக 'இரகுநாத நாயக்காப்புதயம்' எனும் நூல் கூறுகிறது.[1] சிறுவயதிலிருந்தே கோவிந்த தீட்சிதரிடம் கல்வி பயின்று அச்சுதப்ப நாயக்கனின் ஆளுகையின் போதே இளவரசனாகப் பணியேற்றவன். கி. பி. 1600 முதல் 1634 வரையில் தஞ்சை அரசனாகத் திகழ்ந்தவன்.[2] இவனது திறமையை மெச்சி 'அபிநவ போஜன்' என்று விஜயவிலாசம் புகழ்கிறது.[3] இவனது முழு வரலாற்றை விசயராகவ நாயக்கன் எழுதிய 'இரகுநாத நாயக்காபுதயமு' மற்றும் 'இரகுநாதாப்புதயமு' என்ற இரண்டு தெலுங்கு நூல்களும், இராமபத்ராம்பா சமஸ்கிருதத்தில் எழுதிய 'இரகுநாதாப்புதயம்', கோவிந்த தீட்சிதர் சமஸ்கிருதத்தில் எழுதிய 'சாகித்யசுதா', யக்ஞநாராயண தீட்சிதர் எழுதிய 'சாகித்ய இரத்திநாகரா', இரகுநாதனே எழுதிய 'சங்கீத சுதா' ஆகிய நூல்கள் மிகத் தெளிவாகக் கூறுகின்றன.

இசையில் மாமேதையாகத் திகழ்ந்த இம்மன்னன், தானே 'இரகுநாதேந்திரவீணை' என்ற ஒரு வீணையையும் ,ஜெயந்த சேனா' என்ற ஓர் இராகத்தையும், 'இராமானந்தா' என்ற ஒரு தாளத்தையும் கண்டுபிடித்தான் என்பதைச் சங்கீத சுதா என்ற நூலின் மூலம் அறிய முடிகிறது.

மாவீரனாகத் திகழ்ந்த இம்மன்னன் அச்சுதப்ப நாயக்கனின் பல வெற்றிகளுக்கெல்லாம் காரணமாய்த் திகழ்ந்ததுடன், தனது ஆட்சியிலும் மாபெரும் சாதனைகளைச் செய்தான். விசயநகர அரசர் வேங்கடபதியின் பேரனும், ஸ்ரீரங்கனின் குழந்தையுமான இராமராயனுக்குச் சக்கராயன் என்பவனால் ஆபத்து ஏற்பட்ட போது யாசம நாயக்கன் என்ற நன்றியுள்ள அமைச்சன் குழந்தையைப் பாதுகாப்புக்காகக் கொடியவர்களின் பிடியிலிருந்து கடத்திச் சென்று ஆளாக்கி அரசு கட்டிலில் ஏற்ற முயற்சிகள் மேற்கொண்டபோது, அவர்களுக்கு இரகுநாதன் அடைக்கல மளித்ததோடு, அவர்களுக்காகச் சக்கராயன், செஞ்சி நாயக்கன், மதுரை நாயக்கன் இவர்களோடு போரிட்டுக் கல்லணைக்கருகில் பெருவெற்றியைத் தழுவினான். போரில் சக்கராயன் மாண்டான். இராமராயனுக்குக் குடந்தையில் முடிசூட்டு விழாவையும் நடத்தினான். ஒரு விசயநகரப் பேரரசனுக்குச் சோழ மண்டலத்தில் வைத்து முடிசூட்டிய பெருமகன் இவன். இதன் நினைவாகக் கும்பகோணத்தில் இராமசாமிக் கோயிலைக் கட்டுவித்தான்.

கொள்ளிட ஆறு கடலில் சேருமிடத்திலுள்ள தேவி கோட்டையின் தலைவனான சோழகனைச் சிறைப் பிடித்தது, யாழ்ப்பாணம் வரை படையெடுத்துச் சென்று போர்த்துக்கீசியர்களின் கடற்படையைத் தோற்கடித்தது முதலியன இவனது மற்றப் போர்க்களச் சாதனைகளாகும்.

'உஷாபரிணயம்' எனும் நூல் இவனது பட்டத்தரசியின் பெயர் கலாவதி என்றும்,இவனது மற்றொரு தேவியின் பெயர் செஞ்சுலெட்சுமாம்மா என்றும் கூறுகிறது. இவனது மகனான விசயராகவ நாயக்கன் கலாவதியின் மகனாவான்.

சிற்பக் கலைக்கு இரகுநாதன் செய்த தொண்டு மிகப் பலவாகும். கும்பகோணம் இராமசுவாமிக் கோயில்,திருக்கண்ண மங்கைத் திருக்கோயில், மன்னார்குடி இராசகோபாலசுவாமிக் கோயில் முதலிய இடங்களில் உள்ள படைப்புகள் மிக உயரிய கலைச் செறிவுடையவை. ' அநவீரத இராம காதம்ருத சேவகன்' எனத் தன்னைக் கூறிக்கொண்ட இம்மன்னன், இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு திகழ்ந்ததால் குடந்தை இராமசாமிக்

கோயிலில் இராமாயணச் சிற்ப மண்டபத்தைப் படைத்தான். இது சோழநாட்டுக் கலைக்கூடங்களிலேயே தலையாய இடம் பெறத்தக்க ஒன்று.

இம்மன்னன் சிறந்த சமஸ்கிருதப் புலமையுடையவன். இவன் பாரிஜாதஹரணம், நளாப்புதய நாடகம், வால்மீகி சரிதம், அச்சுதாப்புதயம், இராமாயண சாரசங்கிரகம், மகாபாரத சார சங்கிரகம் முதலான நூல்களையும் சங்கீத சுதா என்ற இசை நூலையும் யாத்தவன். மகான் இராகவேந்திரருக்குக் கனகாபிஷேகம் செய்தவன் என்பதை இராகவேந்திர விஜயம் எனும் நூல் குறிப்பிடுகின்றது.

## சிற்பங்களும்-ஓவியங்களும்

### குடந்தைச் சிற்பங்கள்

#### இரகுநாதன்-கலாவதி-செஞ்சுலெட்சுமம்மா

கும்பகோணம் இராமசாமிக் கோயிலை இவன் எடுப்பித்தான் என்பதை இவனது அவைப் புலவர்களின் நூல்களும், விசயராகவ நாயக்கனின் நூல்களும், இவனது கல்வெட்டுகளும் கூறுகின்றன. இக்கோயிலின் முன் மண்டபம் இராமாயண மண்டபம் என அழைக்கப்படுகிறது. இம்மண்டபத்துள் நுழைந்தவுடன் இரண்டாவது கல்தூணில் காணப்படும் சிற்பமே இரகுநாதனின் படிமமாகும். கிழக்கு நோக்கியுள்ள இச்சிற்பத்தில் இரகுநாதன் நீண்ட வளைவுக் குல்லாய் அணிந்து, முறுக்கிய மீசையுடனும், காதில் குண்டலங்கள் அணிந்து, கையில் அணைத்த உடைவாளுடனும் இறைவனை வணங்கும் கோலத்திலுள்ளான். இடுப்பில் குறுவாள் ஒன்றும் உள்ளது. நெற்றியில் திருமண் திகழ்கிறது. அருகில் இவனது தேவியின் உருவமும் உள்ளது. இத் தேவி அவனது பட்டத்து அரசியான கலாவதியே என்று கொள்வது பொருத்தமுள்ள ஒன்று.

இத் தூண்களுக்கு எதிர்ப்புறம் இரண்டு அரசியர்கள் வணங்கும் கோலத்திலுள்ளனர். அழகிய கொண்டைகள், எண்ணிலா அணிகலன்கள், வேலைப்பாடுகளுடைய புடவைகளுடன், வணங்கும் திருக்கோலத்தில் நிற்கும் இருவரும் முறையே கலாவதி, செஞ்சுலெட்சுமம்மா ஆகியோராவர். இராமபத்ராம்பா தனது இரகுநாதநாயக்காபுதயம் எனும் நூலில் பாண்டிய மன்னன் மகளை மணந்ததாகக் கூறுகிறார். அவள் அதிவீரராம



இரகுநாத நாயக்கரும், கலாவதியும்
இராமசாமித் திருக்கோயில்-கும்பகோணம்

பாண்டியனின் மகளாக இருக்க வாய்ப்புள்ளது[4]. கலாவதியை விசயராகவ நாயக்கன் தனது நூலில் கூறும்போது 'பட்டம்புராணி' என்று குறிப்பிடுவதால், இத்தேவியே பட்டத்தரசி என்பது தெளிவாகிறது. மற்றொரு தேவியான செஞ்சுலெட்சுமம்மா செஞ்சி நாயக்கனின் மகளென வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

### மன்னார்குடிச் சிற்பங்கள்

### இரகுநாதனும்-தீட்சிதர் ஐயனும்

மன்னார்குடி இராசகோபாலசுவாமித் திருக்கோயில் அர்த்த மண்டபத்திற்கு முன்னுள்ள தூண்களில் நான்கு சிற்பத் தொகுதி

கள் உள்ளன. இவற்றுள் முதல் தொகுதியில் இரகுநாதனும், கோவிந்த தீட்சிதரும் கோதானம் கொடுக்கும் காட்சி வடிக்கப் பட்டுள்ளது. இதில் இரகுநாதன் வளைந்த தொப்பி அணிந்து, இடுப்பில் ஆடையும் குத்துவாளும் திகழ நெற்றியில் திருமண் தரித்துக் கொண்டு எதிரே இருக்கும் தீட்சிதர் ஐயன் கையில் எதையோ கொடுக்கிறார். தீட்சிதரும் தலையில் நீண்ட குல்லாயும், நெற்றியில் விபூதிப் பட்டையும், மார்பில் நீண்ட ஆடையும் திகழ மன்னனிடமிருந்து எதையோ பெறுகிறார். இதனையடுத்து, தீட்சிதர் ஐயன் பசுவின் பின்புறம் நின்று கொண்டு எதிரே நிற்கும் ஆயன் ஒருவனுக்குக் கோ தானம் அளிப்பது போன்றுள்ளது. சிறப்புமிகு இச்சிற்பம் இம்மண்ட பத்தின் வடபுறத்தூணில் உள்ளது.

### சுவர்ணதானம் அளிக்கும் இரகுநாதன்

இதே மண்டபத்தின் தென்புறத் தூணில் மலையாகக் குவிக்கப்பட்டுள்ள தங்கப் பாளங்களுக்கு எதிரே ஒரு புறம் இரகுநாதனும் அவனது பட்டத்தரசி கலாவதியும் இருக்க, மறு புறம் தீட்சிதர் ஐயனும் மற்றொருவரும் அமர்ந்திருக்க, கைகளை நீட்டி இருவரும் நீர் வார்ப்பது போன்ற காட்சி வடிக்கப் பட்டுள்ளது.

### துலாதானம் அளிக்கும் இரகுநாதன்

இதே மண்டபத்தில் தென்புறமுள்ள பிறிதோர் தூணில் இரகுநாதன் துலாத்தட்டில் அமர்ந்திருக்க எடைக்குஎடை பொன் நிறுக்கப்படுகிறது. தரை பிற்காலத்தில் உயர்த்தப்பட்டுள்ளதால் இச்சிற்பத்தொகுதியின் பாதியளவு புதைந்துள்ளது.

### வணங்கும் இரகுநாதனும் தேவியரும்

வடபுறமுள்ள நான்காவது தூணில் இரகுநாதனும் அவனது தேவியர் இருவரும் (கலாவதி, லெட்சுமம்மா) சேர்ந்து நின்று கொண்டு இராசகோபாலனை வணங்கும் கோலத்திலுள்ளனர்.

### சுண்ணச் சுதைச் சிற்பத்தில்...

மன்னார்குடி இராசகோபாலசுவாமித் திருக்கோயிலின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு இராசகோபுரங்களில் இரகுநாதன், அவனது தேவியர்கள், மற்றும் கோவிந்த தீட்சிதரின் உருவங்





சுதைச்சிற்பங்கள் - மன்னார்குடி

கள் சுண்ணச் சுதைச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றன. வடக்குக் கோபுரத்தின் வெளிப்புறம் இரகுநாதனும் அவனது இரு தேவியரும் வணங்கும் கோலத்திலுள்ளனர். அருகே தீட்சிதர்ஐயன் எதையோ மன்னன் முன்பு கொடுப்பது போன்று காணப்படுகிறது. இதில் இரகுநாதன் கொண்டையுடனும், ஆடை அலங்காரங்களுடனும் காணப்படுகிறான்.

இதே போன்று மேலைக் கோபுரத்தின் உட்புறம் முதல் நிலையில் பூரணி, புஷ்கலையுடன் ஒய்யாரமாக அமர்ந்துள்ள ஐயனார் (சாஸ்தா) முன்பு தீட்சிதர் ஐயன், இரகுநாதன், அவனது தேவியர் மூவரின் சுண்ணச் சிற்பங்கள் வணங்கும் கோலத்திலுள்ளன. இதிலும் இரகுநாதன் கொண்டையுடன்தான் காணப்படுகிறான்.

தெற்குக்கோபுரத்தின் வெளிப்புறம் முதல் நிலையில் இரண்டு காட்சித் தொகுதிகள் சுண்ணச் சிற்பங்களாக உள்ளன. இதில் ஒன்றில் இரகுநாதன், இரண்டு தேவியர், மற்றும் கோவிந்த தீட்சிதர் முதலியோர் இறைவனை வணங்கும் கோலக்காட்சியும், இதனை அடுத்து அரியணையில் இரகுநாதன் மற்றும் அவனது தேவியும் அமர்ந்திருக்க, இரகுநாதனின் கால்களை அவனது மகனான விசயராகவன் தாங்கும் காட்சியும் உள்ளன. விசயராகவனின் முகம் மிகவும் சிதைந்துவிட்டது.

இதே திருக்கோயிலின் கிழக்கு இராசகோபுரத்துக்கு வெளிப்புறமுள்ள பதினாறு கால்களையுடைய திருவந்திக்காப்பு மண்டபத்தின் தூணிலும், மடைப்பள்ளிக்கு எதிரே உள்ள ஊஞ்சல் மண்டபத்தின் தூணிலும் இர்குநாத நாயக்கனின் கற்சிற்பம் இடம் பெற்றுள்ளது.

### மகாமகக் குள மண்டபத்துச் சிற்பங்கள்

இரகுநாதன் கும்பகோணம் மகாமகக் குளத்தின் கரையில் சோடச மகாதானங்கள் எனும் 16 வகையான தானங்கள் அளித்ததாக இவனது காலத்து இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாறு அளிக்கப்பட்ட பதினாறு தானங்களுக்கும் பதினாறு மண்டபங்களையும் அத்துடன் இணைந்த 16 கோயில்களையும் கட்டினான். இந்தப் பதினாறு மண்டபங்களில் மிகப் பெரியது துலா புருட மண்டபமாகும். இதில் இம்மன்னன் துலாத்தட்டு அமைந்து, பொன் தானம் அளித்தான். இக்காட்சி அம் மண்டபத்து உட்புற விதானம் முழுவதும் சிற்பமாக இடம்

பெற்றுள்ளது. இது மட்டுமன்றி, துலாக் கோல் மாட்டுவதற்காக அமைத்துள்ள கற் பகுதியில்கூட இரகுநாதன் ஒரு தட்டில் அமர்ந்திருப்பது போன்றும், மறு தட்டில் பொற்குவை உள்ளது போன்றும் செதுக்கப்பட்டுள்ளன. துலாத் தட்டில் அமர்ந்துள்ள இரகுநாதன் வாளும் கேடயமும் ஏந்தியுள்ள நிலையில் காணப் படுகின்றான். இதே போன்று மற்றப் பதினைந்து மண்டபங் களிலும் அந்தந்தத் தானத்திற்குரிய காட்சிகள் இடம் பெற் றுள்ளன.

### இரகுநாதனின் செப்புத் திருமேனி

தஞ்சைப் பெருங்கோயிலில் இடம் பெற்றிருந்த இம் மன்னனின் செப்புத் திருமேனி தற்போது தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ளது. 108 செ. மீ. உயரமுடைய இந்தச் செப்புச் சிலையில் இரகுநாதன் மிக அழ கிய வேலைப்பாடமைந்த இடுப்பு ஆடையும் சிறிய குத்து வாளும் தரித்து கூப்பிய கரங்களுடன் திகழ்கிறான். கைகளில் காப்பும், ஒரு காலில் ‘விருது பெண்டேரம்’ என்னும் கழலும், தலையில் வளைந்த குல்லாயும்,[5] மார்பில் அணிகலன்களும் திகழ்கின்றன. பத்ரபீடமும் அதன்மேல் கமலபீட மும் உள்ளன. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் வரி சையில் இரகுநாதனின் செப்புத் திருமேனி மட்டும்தான் இதுவரை நமக்குக் கிடைத்துள்ளது.



இரகுநாத நாயக்கன்
தஞ்சைக் கலைக்கூடம்

### தஞ்சை நந்தி மண்டபத்தில் இரகுநாதன்

தஞ்சைப் பெருங்கோயிலிலுள்ள நந்தி மண்டபம் நாயக்கர் காலப் பணியாகும். இதில் உள்ள தூண் களில் மூன்று நாயக்கர்களின் உருவச்சிலைகள் உள்ளன. நந் திக்கு வடமேற்காக உள்ள தூணில் வணங்கும் கோலத்தில்

இடம் பெற்றுள்ள சிலை, இரகுநாதனுடைய சிலை என்பதை மற்ற இவனது சிலைகளுடன் ஒப்பிடும் பாங்கால் அறியலாம்.

### செப்பேட்டு ஓவியத்தில் இரகுநாதன்

தஞ்சை மாவட்டம் திருக்கண்ணமங்கை பக்தவத்சல பெருமாள் திருக்கோயிலில் உள்ள ஒரு செப்பேட்டில் இரகுநாதனின்

செப்பேட்டு ஓவியம்-திருக்கண்ணமங்கை



ஓவியம் உள்ளது. இச் செப்பேடு இம்மன்னனால் சகம் 1580. கலியுகம் 4709-இல் (கி. பி. 1698-இல்) இராமநவமியன்று 60 வேலி நிலம் இத்திருக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட செய்தி யைத் தெரிவிக்கின்றது. 34.5X25.5 செ. மீ. உள்ள இச் செப்பேட்டின் முதல் பக்கம் முக்கால் பகுதி ஓவியத் தொகுதியும் கால் பகுதி சாசன எழுத்துகளும் வரையப்பட்டுள்ளன.

எழில்மிகு ஓவியப் பகுதி மூன்று பிரிவுகளாகப் பகுக்கப் பட்டுள்ளது. முதல் பகுதியில் கண்ணமங்கை இறைவனான பக்தவத்சலன் ஆழியும் சங்கும் ஏந்தி தேவியர் இருவருடன் நடுவே நிற்க, வலப்புறம் அபிடேகவல்லித் தாயாரும், இடப்புறம் ஆண்டாளும் காட்சி நல்குகின்றனர். இதன்கீழ் உள்ள இடைப் பகுதியில் காளிங்க நர்த்தனன் நடுவே நிற்க, இடப்புறம் நம்மாழ் வாரும் நான்முகனும் இருக்க, வலப்புறம் மான் மழு ஏந்திய சிவபெருமானும் சூரியனும் மற்றத் தேவர்களும் இறைவனைத் துதிக்கும் கோலத்திலுள்ளனர்.

கீழே உள்ள ஓவியப் பகுதியில் நடுவே கருட மண்டபமும், துவஜஸ்தம்பமும் உள்ளன. அவற்றின் இடப்புறத்தில் மாமன்னன் விசயரகுநாதன் கூப்பிய கரங்களுடன் நிற்க, எதிரே பட்டர் ஒருவர் பூரண கும்பம் ஏந்தி வரவேற்கும் காட்சியும், அருகே மன்னனின் காப்பாளர்கள் வாளேந்தி நிற்கும் காட்சியும் இடம் பெற்றுள்ளன. வரலாற்றுச் சிறப்புடைய இந்த ஓவியத்தை வரைந்தவன் தஞ்சாவூரைச் சேர்ந்த வெங்கிடாச்சல ஆச்சாரி என்று இச் சாசனத்தின் கடைசியில் குறிக்கப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. இரகுநாத நாயக்காபுதயம்-இராம பத்ராம்பா, சரசுவதிமகால் நூலகச் சுவடி எண் : 3722.
2. கல்லும் சொல்லும் - முனைவர் இரா நாகசாமி பக்கம்-115
3. விசயவிலாசம் - பத்யம் - 53,
4. The Nayaks of Tanjore - Annamalai University Journal.
5. மன்னார்தாச விலாசம் - தெலுங்குச் சுவடி நூல். சரசுவதி மகால் நூலகம். - டி. 556.

# கோவிந்த தீட்சிதர்

சோழமண்டல வரலாற்றில் இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன் எனும் முப்பெரும் மன்னர்களுக்கும் கிருட்டிணன் இராமன்எனும் மும்முடிச்சோழ பிரமமாராயன் எப்படித்தளபதியோ, விக்கிரமசோழன், குலோத்துங்கன், இராசராசன் ஆகிய மூவேந்தர்களுக்கும் ஒட்டக்கூத்தர் எப்படி அவைக்களப்புலவரோ, அப்படியே செவ்வப்ப நாயக்கன், அச்சுதப்ப நாயக்கன், இரகுநாத நாயக்கன் எனும் (தஞ்சை) மூன்று நாயக்க மன்னர்களுக்கும் மதி அமைச்சராக, அறிவு சான்ற ஆசிரியராக, பெரும்புலவராகத் திகழ்ந்தவர் கோவிந்த தீட்சிதராவார்.

ரிக் வேதத்தின் ஆஸ்வலாயன பிரிவை மேற்கொண்ட கரு-நாடக அந்தணர் குலத்தில் பிறந்தவர்.[1] இவரது தந்தை'காலத்திலிருந்தே நெடுங்குன்றத்தில் வசித்த செவ்வப்ப நாயக்கனின் குடும்பத்துடன் தொடர்புகொண்டவர்.செவ்வப்பன் கி.பி.1582இல் தஞ்சை மன்னனாக முடிசூடியதிலிருந்து அவனது அமைச்சராகப் பணிபுரியத் தொடங்கினார். சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக இவரது பணி சோழ நாட்டிற்குக் கிடைத்தது

செவ்வப்ப நாயக்கனின் நல்லாட்சிக்கு உதவி புரிந்த தீட்சிதர் அச்சுதப்பனுக்கு உற்ற துணைவராகத் திகழ்ந்தார். திருமாலின் மூன்று பெயர்களான அச்சுதா, அனந்தா, கோவிந்தா என்பனவற்றுள் முதல் பெயரை மன்னனும், கடைசிபெயரை அமைச்சனும் ஏற்றுக்கொண்டு மன்னன் சஸ்த்திரத்திலும் (போரிலும்) அமைச்சர் சாத்திரத்திலும் நிபுணர்களாகத் திகழ்ந்தனர் என்பதை,

த்ரிநாம் அத்யந்த நாமாநௌ மஹிக்ஷி தீக்ஷிதாவிபௌ:
சஸ்த்ரே சாஸ்த்ரேச நிபுணௌ வாகவேஷீச

என்று சாகித்திய ரத்னாகரம் கூறுகிறது.[2]

இரகுநாதனைக் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்துச் சிறந்த வீரனாக, இசை வல்லுநனாக, பெரும்புலவனாகச் செய்த பெருமை கோவிந்த தீட்சிதரையே சாரும். இரகுநாதன் போர் மேற் சென்றபோதெல்லாம் அரண்மனை நடவடிக்கைகளைக் கவனித் ததுடன் போர் முகாம்களுடன் நாள்தோறும் தொடர்பு கொண்டு வழி நடத்திய சான்றோர் இவர் என இரகுநாதன் காலத்து இலக் கியங்கள் புகழ்கின்றன.

கோவிந்தகுடி

இவர் பட்டீச்சரத்திற்கருகிலுள்ள கோவிந்தகுடியில் வசித்த வர். செவ்வப்ப நாயக்கன் காலம் வரை சிங்கரசன்பாளையம் எனும் பெயரில் திகழ்ந்த இவ்வூர் அச்சுதப்ப நாயக்கன் காலத்தில்தான் கோவிந்தகுடி எனும் பெயர் மாற்றம் அடைந்தது. இதனை அண்மையில் யாம் (இந்நூலாசிரியர்) கோவிந்தகுடியில் பூமியில் புதைந்திருந்த ஒரு கல்வெட்டை வெளிக்கொணர்ந்தபோது கண்டு பிடிக்க முடிந்தது.

சூலக்கல் எனும் நிலத்தின் எல்லையில் நடப்படும் ஒரு கல்லில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் திரிசூலமும் அதன்கீழ் சிவலிங்கத்திற்குப் பால் சொரியும் பசுவின் உருவமும் பொறிக்கப்பட்டு, அதன்கீழ் கல்வெட்டெழுத்துகள் காணப்படு கின்றன. இக்கல்வெட்டில் 'சகாத்தம் 1500 இதில்லா நிண்ண வெதாநிய வருஷம் பங்குனி மாதம் 15ந்தேதி பசுபதிசுரர்க்கு செவ்வப்ப நாயக்கர் தன்மமாக சக்கரை அப்பர் உதிகம் பண்ணிந சிங்கரசன்பாளையம்' என்று எழுதப்பட்டுள்ளது.

ஆவூர் பசுபதீசுரர்க்குச் சொந்தமான சிங்கரசன்பாளையம் எனும் கிராமம் தீட்சிதர் ஐயன் குடியிருந்த ஊராகத் திகழ்ந்ததால் கோவிந்தகுடி எனப்பெயர்மாற்றம் அடைந்தது. இன்றும் இவ்வூரில் தீட்சிதர் ஐயன் பெயரால் வேத பாடசாலை, அறக்கட்டளைகள் திகழ்கின்றமை தீட்சிதர் ஐயனின் பெருமைகளின் சின்னங்கள் ஆகும்.

இவ்வூரிலிருந்து தினம் பல்லக்கில் தஞ்சை சென்று அரசு அலுவல்களைக்கவனித்ததாகவும், இவரால் பட்டீச்சரம் தேனுபுரீச் சரர் திருக்கோயில் திருப்பாலைத்துறை பாலைவன நாதர் திருக் கோயில், குடந்தை மங்களாம்பிகா சமேத கும்பேசர் கோயில், திருநாகேச்சரம் நாகநாத சுவாமித் திருக்கோயில் ஆகியவை மிக வும் ஆக்கம் பெற்றனவென இலக்கிய, கல்வெட்டுச் சான்று களால் அறியலாம்.

பட்டீச்சரத்திலுள்ள வடமொழிக் கல்வெட்டொன்றால் பட்டீச்சரத்தில் பட்டு நூல் செட்டியார்களின் இரண்டு பிரிவினரிடத்தில் நிகழ்ந்த வழக்கொன்றை விசாரித்து அதற்கு ஏற்ற தொரு முடிவைக் கோவிந்த தீட்சிதர் வழங்கியதை அறிய முடிகிறது.[9]

தீட்சிதரின் புலமை

வடமொழி, தமிழ், தெலுங்கு முதலான பன் மொழிகளிலும் வித்தகராய்த் திகழ்ந்த இவரது தமிழார்வத்திற்கு இதோ ஒரு சான்று. வட மொழியில் இருந்த திருவையாறு புராணம் எனும் நூலைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தார் என்பதனை,

"மலிபுனல் சூழ்சோணாடு தஞ்சையிற் காத்திகுமரசர் மதியமைச்சனொலி மறைதேர் கோவிந்த தீட்சதராயன் திருவாக்குடைமையாலே கலியுகத்துச்சகணுண்டு மூவைஞ் நூற்றிருபதின் மேற்காணுமோய்ப் பொலி வருடத்தை பேரய்யாற்றுப் புராண வடமொழி
தமிழாற் புகலுற்றேன்"

என்ற பாடலால் அறிய முடிகிறது. இத்தமிழ்ப் பணி கி.பி.1605-இல் நிகழ்ந்தது என்பது தெரிகிறது.

இவரது தலைமையில் திகழ்ந்த நாயக்க மன்னனின் புலவர் குழாத்தில் பன்மொழிப் புலவர்களும் வாக்கேயகாரர்களும் திகழ்ந்தனர் என்பதை,

கவிப்ரவேணகர் அபிகாளிதாஸ மயூர ஸௌமில்ல முராரி
தேச்யைஹ.
கர்நாடகாந்த்ர த்ரவி-ப்ராந்தா நிர்மான வித்யா நிபுணைச்சை
கைச்சித்
வாக்கேயகார ப்ரமுனகர் அனேனகர் விசித்ர கீதாதி கலாப்ர
விணைஹி

என்று சாகித்ய ரத்னாகரம் புகழ்கிறது.

கோவிந்த தீட்சிதர் இயற்றிய நூல்களில் இன்று நமக்குக் கிடைப்பது 'கௌமாரில தர்சன' 'சங்கீத சுதா' என்பவையாகும். இவரது இருமகன்களான யக்ஞ நாராயண தீட்சிதரும்,வெங்கடேசுவரமகியும் பல அற்புத நூல்களை இயற்றினர். யக்ஞ நாராயண தீட்சிதரின் 'சாகித்ய ரத்னகரம்' கோவிந்த தீட்சிதர் அத்துவைத வேதாந்தத்திலும், ஆறுவகைத் தர்சனங்களிலும் தலைசிறந்த நிபுணர் என்று கூறுகிறது.

"இதி ஸ்ரீ பதவாக்ய ப்ரமாண பாராவார பாரீண
ஸ்ரீமதத்வைத வித்யாசார்ய ஸாக்னிசித்ய

ஸ்ர்வதோ முகாதி ராத்ர ஸாக்னி சித்யாப்த
வாஜ பேயயாஜி கோவிந்த தீக்ஷிதவர நந்தனஸ்ய''

என்று இரகுநாத விலாசம் குறிப்பிடுகின்றது.

இவரது இல்லத்தில் எப்போதும் வேள்வித்தீ திகழும்; வேத விற்பனர்களும் சூழ்ந்தே காணப்படுவர் என இலக்கியங்கள் புகழ்கின்றன. மேலும் சிறந்த அக்கினிஹோத்திரியாக வாழ்ந்த இவரது இல்லத்தில், காருகபத்யம், ஆஹவநீயம் தெட்சிணாக்கினி என்ற மூவகை வேள்விக் குண்டங்களிலிருந்து தீ எழும்பிக் கொண்டே இருக்குமெனவும் விவரிக்கின்றன.[4]

சிறந்ததொரு வேத விற்பனராகத் தீட்சிதர் திகழ்ந்த தால்தான் நாயக்க மன்னர்கள் சோடச மகாதானம், ஹேம கர்ப்பம்,துலாபாரம் முதலான அறப் பணிகள் புரிந்தனர் என்பதை அறியலாம். இவரது மனைவியின் பெயர் நாகமாம்பா. இவரது மறைவிற்குப் பின்பு இவர் போற்றிய திருக்கோயில்களான கும்பகோணம் கும்பேசர் திருக்கோயிலில் மங்களாம்பிகை சந்நிதிக்கு எதிரிலும், திருவையாறு ஐயாறப்பர் திருக்கோயி லிலும் கோவிந்த தீட்சிதலிங்கம் என்ற பெயரில் இலிங்கத் திருவுருவங்கள் வைக்கப்பட்டு இன்றும் வழிபாடு நடைபெற்று வருகின்றன. கும்பகோணம் மங்களாம்பிகை சந்நிதிக்கு எதிரே உள்ள கோவிந்த தீட்சிதலிங்கத்திற்கு அருகே நாகமாம்பா அம்மையாரின் வணங்கும் கோலத் திருவுருவச் சிலையுள்ளது.

கோவிந்த தீட்சித ஐயன் பெயரால் கோவிந்தகுடி, கோவிந்தபுத்தூர், ஐயன்பேட்டை, ஐயங்கடை வீதி, ஐயன்குளம், முதலான பல ஊர்களும், இடங்களும் இன்றும் திகழ்கின்றன. தருமபுர ஆதீனத்து மடாதிபதிகள் முதலானோர் தீட்சிதர் ஐயனை மிகவும் போற்றினர். இவரது மறைவிற்குப் பின்பு விசய ராகவ நாயக்கன் காலத்தில் தீட்சிதர் ஐயன் வகித்த அமைச்சர் பதவியை ஏற்ற நல்லவாணன் என்பான் தன் பெயரைக் கோவிந்ததாசன் ( தாஸ்ய நாமம் ) எனக் கொண்டது இவர் பால் கொண்ட பெருமதிப்பின் காரணமேயாகும்.

## தீட்சிதரின் உருவச்சிலைகள்

பட்டீச்சரத்தில்·

சோழ மண்டலத்தின் கோநகரான பழையாறை நகரின் ஒரு பகுதியே தற்காலத்தில் பட்டீச்சரம் எனப் பெயர் மாற்றம் கொண்டு திகழ்கிறது. இங்குள்ள தேனுபுரீசுவரர் திருக்கோயில்

கோவிந்த தீட்சிதரால் போற்றப்பட்ட ஒரு திருக்கோயில் என்பதனை இக்கோயில் கல்வெட்டுகளால் அறியலாம். இத் திருக் கோயிலினுள் உள்ள ஞானாம்பிகை சந்நிதியில் கோவிந்த தீட்சிதர் மற்றும் அவரது துணைவியார் நாகமாம்பா அம்மையாரின் உருவச் சிலைகள் உள்ளன.



கோவிந்த தீட்சிதரும் நாகமாம்பாவும்

சுமார் 6 அடி உயரமுடைய இந்த உருவச்சிலையில் தீட்சிதர் நின்ற நிலையில் வணங்கும் (அஞ்சலி ஹஸ்தங் களுடன்) கோலத்தில் காணப்படுகிறார். தலையில் முத்துக்கள் பதிக்கப்பட்ட நீண்ட குல்லாய், காதுகளில் குண்டலங்கள், இடுப்பில் முழுநீள ஆடை, அதன்மேல் நீண்ட துண்டு சுற்றப் பட்டு அதன் ஒரு முனையை வலக் கையால் அணைத்த வண் ணம் உள்ளார். மார்பினை மேலாடை (சட்டை போன்றுள்ளது) அணி செய்கிறது. இவ்வுருவச் சிலை மிக அழகிய, நேர்த்தியான வேலைப்பாடமைந்த ஒன்று. தீட்சிதரின் அருகில் சுமார் 5½ அடி

உயரமுடைய நாகமாம்பா அம்மையாரின் உருவச்சிலையுள்ளது. தலையிலும் பின்னல் போடப்பட்ட சடையிலும் புல்லகம், தொய்ய கம், அளகசூடம் முதலிய பல அணிகலன்கள் திகழ்கின்றன. காது களில் மலரொத்த தோடுகளும், கை நிறைய வளையல்களும், சூடக மும், தோள்வளையும், கடகவளையும் காணப்படுகின்றன. கழுத்தில் முத்தாரம், காறை, சவடி போன்ற அணிகளும், கை விரல்களில் மோதிரங்களும், கால் விரல்களில் மெட்டிகளும், இடுப்பில் உடைதாரமும் எழில் செய்கின்றன. புடவையின் தலைப்பு பின்புறமாகக் கொண்டு தோளின் மேல் காணப் படுகிறது. கும்பகோணம் கும்பேசர் கோயிலிலுள்ள இவ் வம்மையாரின் படிமமும் இதே போன்று காணப்படுகிறது.

மன்னார்குடியில்...

மன்னார்குடி இராசகோபால சுவாமித் திருக்கோயிலினுள் உள்ள ஊஞ்சல் மண்டபத்தின் தூண்களில் இரகுநாத நாயக்கன், மற்றும் கோவிந்த தீட்சிதரின் உருவச்சிலைகள் இடம் பெற் றுள்ளன. தீட்சிதரின் சிற்பத்தில் மூக்கு மட்டும் உடைந்து காணப்படுகிறது. இம்மண்டபத்திலுள்ள அனைத்துச் சிலை களுமே திருமண் தரித்துள்ளபோது தீட்சிதர் மட்டும் நெற்றி மற்றும் உடலெங்கும் விபூதி அணிந்துள்ளதைச் சிற்பத்தில் தெளிவாகக் காணலாம். நீண்ட குல்லாய், மடிசார் வேட்டி, இடுப்பில் துண்டு, இருக்கமாக உடலை ஒட்டிய மேலாடை, காதில் குண்டலங்கள் திகழக் காட்சி நல்குகிறார்.

இதே திருக்கோயிலின் இராசகோபாலன் சந்நிதியில் அமைந் துள்ள பிறிதோர் மண்டபத்தின் தூண்களில் இரகுநாத நாயக்கன் கோதானம், ஹேமதானம், துலாதானம் அளிக்கும் காட்சிகள் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. இக்காட்சிகள் அனைத்திலும் இரகுநாதனுடன் தீட்சிதர் ஐயனும் இடம் பெற்றுள்ளார்.

வடக்கு, மேற்கு, மற்றும் தெற்கு இராசகோபுரங்களின் முதல் நிலையில் தஞ்சை மன்னர் குடும்பத்தவர் (நாயக்கர்கள்) பலரது சுண்ணச் சுதைச் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் தஞ்சை மன்னனான இரகுநாதனின் சுதைச் சிற்பம் உள்ள இடங்களி லெல்லாம் நீண்ட குல்லாயுடன் தீட்சிதர் ஐயனின் சுதைச்சிற்பமும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

விளநகரில்...

சீர்காழி வட்டம் திருவிளநகர் துறைக்காட்டு வள்ளலார்

திருக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியவை அச்சுதப்ப நாயக்கன் காலத்தில் தருமபுர மடத் தலைவர் ஒருவரால் திருப்பணிகள் செய்யப்பட்டன என்பதனை இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன.

இதில் துறைகாட்டுவார் மண்டபம் எனும் மகாமண்டபம் கோவிந்த தீட்சிதரின் பெயரால் எடுக்கப்பட்டது என்பதை இம்மண்டபத் தூண் ஒன்றில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.[5] இதில் "கீலக வருஷம் ஆடி மாதம் 15-ஆம் தேதி துறைக் காட்டுவார் மண்டபம் தீட்சித ஐயன் தன்மமாகப் பெரிய தேவ பண்டாரம் தன்மம்..." என்று எழுதப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் அருகிலேயே இம்மண்டபத்தை எடுத்த தருமபுர மடத் தலைவரின் உருவச்சிலையும், இதற்கடுத்த தூணில் கோவிந்த தீட்சிதரின் உருவச்சிலையும் உள்ளன. இவ் உருவச் சிலை சுமார் 2½ அடி உயரமுடையதாகும்.

## குறிப்புகள்

1. ஸ்ரீ காமகோடி ப்ரதீபம், மலர்-22, இதழ்-10, 11, 12.
2. சாகித்ய ரத்னாகரம் - சரசுவதிமகால் சுவடி எண். டி. 10781, பி. 11496.
3. A. R. for 1920 & 1927.
4. J. A. H. R. S. Vol. 2, Page-229.
5. A. R. E. 259 of 1918.

# விசயராகவ நாயக்கர்

(கி. பி. 1633-1673)

தஞ்சை நாயக்கர்களின் வரிசையில் தலைசிறந்த மன்னராகத் திகழ்ந்த இரகுநாத நாயக்கரின் மகனே விசயராகவ நாயக்கராவார். இவர் தம் தந்தையைப்போல் சிறந்த ஆட்சியாளராகத் திகழ்ந்ததோடன்றி சிறந்த கலைஞராகவும், பெரும் புலவராகவும் திகழ்ந்தார். சீனுவாச தாத்தாச்சாரி எனும் இராசகுருவைப் போற்றியவர்.[1] நல்லவாணன் எனும் கோவிந்த தாசனையும், இராயசம் வெங்கண்ணா என்பவரையும் துணையாகக்கொண்டு நல்லாட்சி புரிந்தார்.

இவர் இயற்றிய நூல்களின் பட்டியல் பிரகலாத சரிதம் எனும் சுவடி நூலில் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வரிசையில் கிருஷ்ண விலாசம், காளீய மர்த்தனம், பிரகலாத நாடகம், இரகுநாதாப் புதயம், இரகுநாத நாயகாப்புதயம், விப்ர நாராயண சரித்திரம், பூதனா ஹரணம் (இது கி.பி.1651-இல் இயற்றப்பட்டதாகக் குறிப்பு உள்ளது) எனும் தெலுங்கு நாடகங்களும், காவியங்களும் இன்றும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ளன.

இராசகோபால விலாசம், கோவர்த்தன நாடகம், இரதி மன்மத விலாசம் இராசக்கிரீடை, பாரிஜாதா பஹரணம், ருக்மணி கல்யாணம்,இராதாமாதேவ விவாகம், சத்யபாமா விவாகம், உஷா பரிணயம், தெட்சிண துவாரகை வர்ணனை, மோகினி விலாசம், கண்ணிகள் அடங்கிய பிரபந்தம், சமுத்திர மதனம், பாதுகா சகஸ்ரம் (சமஸ்கிருத நூலைத் தெலுங்கில் மொழி பெயர்த்தது) விரக பதங்கள் (பிரணய கலகம்),கம்ச விஜயம்,ஜானகிகல்யாணம், புண்ணியக விரத நாடகம், பால்குணோத்சவ ரகடா, இராஜ

கோபால தண்டகம் என்ற பெயர்களில் விசயராகவன் எழுதிய நூல்கள் இதுவரை கிடைக்கவில்லை.[2]

விசயராகவ நாயக்கரின் அவையில் இவரது தேவி இரங்கா சம்மா இயற்றிய மன்னாரு தாச விலாசம், இவரது மகன் மன்னாரு தேவன் யாத்த ஹேமாப் ஜநாயிகாஸ்வயம்வரமு, காம ரசு வேங்கடபதி ஸோமயாஜி இயற்றிய விஜயராகவ சந்திரிகா விலாசம், கோனேட்டி தீட்சிதன் எழுதிய விஜயராகவ கல்யாணம், புருஷோத்தம தீட்சிதன் இயற்றிய தஞ்சா புரான்னதான மகா நாடகம் முதலான நூல்கள் மலர்ந்து மணம் பரப்பியதோடு வரலாற்றுச் செய்திகளையும் விரிவாகத் தருகின்றன.

மன்னார்குடி இராசகோபால சுவாமியைத் தம் குல தெய்வ மாகப் போற்றிய விசயராகவன் தம் வாழ்நாள் முழுவதையும் இத் திருக்கோயில் திருப்பணியிலேயே கழித்தார்.எல்லா இராசகோபுரங் களையும் கட்டுவித்ததோடு ஆயிரங்கால் மண்டபம், கருடவாகன மண்டபம்,யானைவாகன மண்டபம்,வெண்ணெய்த்தாழி மண்டபம் ஆகிய மண்டபங்களையும், திருச்சுற்று மதிலையும் எடுப்பித்துக் கலைப்பணி புரிந்தார்.

தஞ்சை நாயக்க அரசு விசயநகர அரசின்கீழ் செவ்வப்பன் காலம் முதல் செம்மையாகச் செயல்பட்டது. இரகுநாத நாயக்கர் விசயநகர மன்னனான ஸ்ரீஇராமனுக்குக் கும்பகோணத்தில் முடி சூட்டு விழாவை நடத்திப் பெரும்புகழ் அடைந்தார்.[3] தஞ்சை நாயக்காகள் முழு வலிமையுடன் திகழ்ந்ததற்கு விசயநகரப் பேர ரசின் பெருந்துணையே காரணமாக இருந்தது. விசயராகவனின் ஆட்சியின் போது கி.பி.1646-இல் விசயநகர மாமன்னர் ஸ்ரீரங் கனின் தோல்வி விசயநகரப்பேரரசைச் சரியச் செய்தது. இதுவே தஞ்சை நாயக்க அரசும் வலிமை இழக்கக் காரணமாயிற்று. பீசப்பூர் சுல்தானுக்கு விசயராகவன் திறைசெலுத்தும் நிலைமை உருவாயிற்று.

மதுரை நாயக்கனான சொக்கநாதனுடன் இருமுறை விசய ராகவன் போரிட நேர்ந்தது. கி.பி. 1664-இல் ஒரு போர் நிகழ்ந்து செஞ்சி, மதுரை, தஞ்சை நாயக்கர்களிடையே ஓர் உடன்பாடு ஏற் பட்டது. பின்னர் கி. பி. 1673-இல் மதுரைச் சொக்கநாதனுக்கு விசயராகவன் தம் மகளைத் திருமணம் செய்துதர மறுத்ததால் பகை மூண்டு போர் ஏற்பட்டது. வல்லம் கோட்டையைக் கைப் பற்றியபின் சொக்கநாதனின் படைகள் தஞ்சையையும் முற்றுகை இட்டன. வெற்றிகொள்ள முடியாத நிலைமை உருவானபோது, விசயராகவன் பகைவனிடம் சரண் அடைவதைவிட, சாவே மேல்

எனக்கொண்டு தம் அரண்மனையின் ஒரு பகுதியில் தமது உரிமை மகளிர், மகன் மற்றுமுள்ள அனைவரையும் ஒருமுகமாக இருக்கச் செய்து, அப்பகுதிக்கு வெடிகுண்டை வைத்து அனைவரையும் செந்தழலுக்கு இரையாக்கியதோடு தாமும் தமது மகனும் சேர்ந்து மாண்டனர்.[4] இறுதிவரை அடிபணியாது வரலாறு படைத்த பெருமை விசயராகவனுக்குண்டு.

மேற்குறித்த செய்திகள் யாவும் டெய்லர் எனும் மேனாட்டார் சேகரித்த சுவடிக்குறிப்புகள் அடிப்படையில் கூறப்படுபவையாகும். ஆனால் சரபோசி மன்னர் தஞ்சைப் பெருங்கோயிலில் கல்வெட்டாகப் பொறித்துள்ள போன்ஸ்லே வம்ச சரித்திரம் மற்றும் அமரசிம்மனால் தொகுக்கப் பெற்ற மராத்திய வம்சாவளிச் சுவடி ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும்போது, தஞ்சை நாயக்க மன்னனுக்கு உதவுவதற்காக வந்த பெங்களூர் ஜாகீர்தார் ஏகோசி, தனது முகமதிய தளபதிகளின் தூண்டுதலால் தஞ்சை இராசகோபாலசுவாமி கோயில்முன்பு, விசயராகவ நாயக்கருடன் போரிட்டதாகவும், இம்மோதலில் விசயராகவ நாயக்கர் வீரமரணம் அடைந்ததாகவும் குறிக்கப்பெற்றுள்ளது.

## விசயராகவனின் கற் படிமங்கள்

மன்னார்குடியில் . . . . .

பல திருக்கோயில்களில் விசயராகவ நாயக்கரின் கற்படிமங்கள் இருந்தபோதிலும் இவை அனைத்தையும்விட சிறப்பான படிமங்கள் மன்னார்குடி இராசகோபால சுவாமித் திருக்கோயிலில் உள்ளன. இத்திருக்கோயிலின் இராசகோபுரம் கடந்து உள்ளே செல்லும் வழியில் ஆயிரங்கால் மண்டபத் தூண் ஒன்றில் சுமார் 5½' உயரமுடைய விசயராகவ நாயக்கரின் உருவச்சிலை உள்ளது. இவரது இருபுறமும் இரண்டு தேவியர் வணங்கும் திருக்கோலத்தில் நிற்கின்றனர்.

விசயராகவன் தலையில் ஒரு பக்கம் சாய்ந்த கொண்டை, நெற்றியில் திருமண், மெலிந்த மீசை, மார்பில் அணிகலன்கள், காதுகளில் குண்டலங்கள், கையில் அணைத்த வாள், இடுப்பில் அரையாடை, அதன்மேல் அணிகலன்கள், வலக் காலில் விருதுபெண்டேரம் எனும் கால் காப்பு - இவை திகழ இராசகோபாலனை வணங்கும் திருக்கோலத்திலுள்ளார். ஹேமாப்ஜநாயிகாஸ்வயம்வரமு எனும் நூல் விசயராகவனின் பட்டத்தரசியாக இராசகோபாலாம்பிகா என்ற தேவியைக்

குறிப்பிடுகிறது. மன்னார்குடித் தலவரலாறு காந்திமதி எனும் தேவியைப் பட்டத்தரசியாகக் குறிப்பிடுகிறது.எனவே இவ்விரு புறமும் உள்ள தேவியர் இராசகோபாலாம்பிகா, காந்திமதி ஆகியோராக இருக்கலாம்.



விசயராகவ நாயக்கரும் அவரது இரு தேவியரும்
மன்னார்குடி

அடுத்து, இதே திருக்கோயிலில் திருச்சுற்று மதிலின் உட்புறம் இரண்டு இடங்களில் மாடம் போன்று குடையப்பட்டு உள்ள பகுதிகளில் விசயராகவனும், அவரது ஒரு பட்டத்தரசியும் வணங்கும் கோலத்திலுள்ள படிமங்கள் உள்ளன. இவற்றுள் ஒரு மாடம் தென்புறச் சுற்றிலுள்ள தேர் மண்டபத்தின் மையப் பகுதியில் உள்ளது.

கிழக்கு இராசகோபுர நிலை, கிழக்கு இராசகோபுரத் திற்கும் கருட ஸ்தம்பத்திற்கும் இடையில் உள்ள 16 கால் மண்டபத் தூண்கள், கருட வாகன மண்டபம்,பலகணி மண்டபம் முதலான பல இடங்களில் இம்மன்னரின் படிமங்கள் உள்ளன.

இதேபோன்று தெற்கு, வடக்கு மற்றும் மேற்கு இராசகோபுரங்களில் சுண்ணச் சுதைச் சிற்பங்களாக இம்மன்னரின் படிமங்கள் இடம் பெற்றுள்ளன.

**தஞ்சையில்...**

தஞ்சாவூர் இராசகோபாலசுவாமி கோயிலின் இராசகோபுர நிலையில் ஒருபுறம் இரகுநாத நாயக்கரின் சிலை உள்ளது. இதற்கு நேர் எதிரே விசயராகவ நாயக்கரின் வணங்கும் கோலப் படிமம் உள்ளது. இதில் விசயராகவன் வளைந்த குல்லாய் அணிந்துள்ளார்.

இதேபோன்று தஞ்சைப் பெருங்கோயில் நந்தி மண்டபத்துத் தூண்களில் எதிரெதிரே இரகுநாதன் மற்றும் விசயராகவ நாயக்கர்களின் கற்சிலைகள் இடம் பெற்றுள்ளன.

**திருச்சேறையில்...**

கும்பகோணத்திற்கருகிலுள்ள திருச்சேறை அருள்மிகு சாரநாதப்பெருமாள் திருக்கோயில் முன்மண்டபத்தை விசயராகவனுக்காக அவரது அமைச்சர் கோவிந்த தாசன் கட்டுவித்தார். இதனை இத்திருக்கோயிலிலுள்ள கல்வெட்டொன்று கூறுகிறது. இத்திருக்கோயில் மண்டபம் ஒன்றில் இரகுநாதன், விசயராகவன், அவரது தேவி, அமைச்சர் கோவிந்த தாசன் எனும் நல்லவாணன் ஆகியோருடைய படிமங்கள் உள்ளன.

## குறிப்புகள்

1. தஞ்சா புராண்னதான மகா நாடகம் - புருஷோத்தம - தீட்சிதன் - சரசுவதி மகால் நூலகத் தெலுங்குச்சுவடி, டி-529.
2. பிரகலாத சரிதம் - தெலுங்குச் சுவடி, சரசுவதி மகால் நூலகம் டி. 541.
3. கல்லும் - சொல்லும் - முனைவர் இரா. நாகசாமி சேகர் பதிப்பகம், சென்னை.
4. The Maratha Rajas of Tanjore - K. R. Subramaniyan, Page - 10.

## நல்லவாணன்

### (கோவிந்த தாசன்)

கி.பி. 1633-1673 வரை ஆட்சி புரிந்த நாயக்க மன்னர் விசயராகவனின் அமைச்சராகத் திகழ்ந்தவர் நல்லவாணன் என்பார். இவர் தமது பெயரைக் கோவிந்த தாசன் எனக்கொண்டார். மூன்று பெரும் நாயக்க மன்னர்களுக்கும் அரசியல் குருவாகவும், மதி அமைச்சராகவும் திகழ்ந்தவர் கோவிந்த தீட்சிதர். இப்பெருமகனார் வகித்த அமைச்சுப் பதவியை இவரது அடிச்சுவட்டில், விசயராகவன் காலத்தில் வகித்தவரே நல்லவாணன். விசயராகவன் மன்னாருதாசன் என்றும், நல்லவாணன் கோவிந்த தாசன் என்றும் தாஸ்ய நாமங்கள் சூடியமை குறிப்பிடத் தக்கனவாம்,

> கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போல் கூந்தலாளை
> மண்சேர முலையுண்ட மாமதலாய் வானவர்தம் கோவே யென்று
> விண்சேரு மிளந்திங்கள கடுரிஞ்சு மணிமாட மல்கு செல்வத்
> தண்சேறை யெம்பெருமான் தான்தொழுவார் காண்மினென்
> தலை மேலாரே

என்று திருமங்கையாழ்வார் பாடிப் போற்றிய பதி திருச்சேறையாகும்.[1] இது சோழமண்டலத்துச் சத்திரிய சிகாமணி வளநாட்டில் செற்றூர்க் கூற்றத்தில் திகழ்ந்த ஓர் ஊராகும். இவ்வூரிலுள்ள சாரநாத சுவாமித் திருக்கோயிலின் முன்மண்டபத்தையும் ஆழ்வார் கோயிலையும் நாயக்க மன்னர் விசயராகவன் தம் அமைச்சர் கோவிந்ததாசனின் துணையுடன் கட்டுவித்து,ஆழ்வார் கோயிலின் பூசைகளுக்காக நிலமும் அளித்தார். இதனைச் சகம் 1566-இல் (கி.பி.1644-இல்)வெட்டுவிக்கப்பட்ட இத்திருக்கோயில் கல்வெட்டொன்று எடுத்தியம்புகிறது.[2]



நல்லவாணன்-திருச்சேறை

இவ்வாறு மன்னர் விசய ராகவன் மற்றும் அமைச்சர் கோவிந்தாசன் ஆகியோரால் கட்டப்பட்ட முன் மண்டபத்துத் தூண்களில் முறையே இரகுநாத நாயக்கர் ( விசயராகவனின் தந்தை) விசயராகவ நாயக்கர், அவரது தேவி மற்றும் கோவிந்த தாசனின் திருவுருவச்சிலைகள் சாரநாதனை வணங்கும் திருக் கோலத்திலுள்ளன.

கோவிந்த தாசனது சிலையின் பீடத்தில் 17-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் 'நல்லவாணன் சதாசேவை' என்று எழுதப்பட்டு உள்ளது. அழகிய தலைப்பாகை, இடுப்பில் சிறிய கத்தி அணிந்து, இரு கரம் கூப்பி வணங்கும் நிலையில் இப்படிமம் உள்ளது. சுமார் 4' உயரமுடைய இக்கற்சிலையின் கைகள் உடைக்கப்பட்டு, பிற் காலத் திருப்பணிகளின் போது சுதையால் கை செப்பம் செய்யப் பட்டுள்ளது.பீடத்தில் கல்வெட்டுப்பொறிப்புடன் திகழும் இச்சிலை தஞ்சை நாயக்கர்கள் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு சிலை ஆகும்.

## குறிப்புகள்

1) நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்-பெரியதிருமொழி 7-ஆம் பத்து
2) A. R. E. 614 of 1909

## சிவ நாராயணாநந்த தீர்த்தர்

நாராயண தீர்த்தர் எனச் சிறப்பாக அழைக்கப்படும் இவர் தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கர் மற்றும் விசய ராகவ நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்திலுள்ள காஜா என்னும் ஊரில் பிறந்தவர். தல்லவல்லஜ என்ற அந்தணர் குலத்தில் பிறந்த இவரது இயற்பெயர் கோவிந்த சாஸ்திரி என்பதாகும். 12 ஆண்டுகள் வாசுதேவ சாஸ்திரி என்பவரிடம் கல்வி பயின்ற இவர், வேதாத்திரி என்ற இடத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் தவப் பயிற்சி மேற்கொண்டார். பின்னர் காசிக்குச் சென்று ஸ்ரீ சிவ இராமானந்த தீர்த்தர் என்பவரின் சீடரானார். சிறிது காலம் குச்சிமஞ்சி என்ற கிராமத்தில் வாழ்ந்தார் என அறியப்படுகிறது.[1]

புகழ்பெற்ற 'கிருஷ்ணலீலா தரங்கிணி' எனும் சமஸ்கிருதக் காவியத்தை இயற்றி, சோழமண்டலத்து வரலாற்றில் அழியாப் புகழைப் பெற்றார்.[2] இவரது பிற நூல்கள் 'பாரிஜாதா பகரணம்' எனும் இசை நாட்டிய நாடகமும் 'சாண்டில்ய பக்தி மீமாம்ச பாஷ்யம்' எனும் நூலும் ஆகும்.[3]

இவர் கிருஷ்ண பக்தியில் மிகவும் ஈடுபட்டவர். தமது இறுதிக் காலத்தை வரகூர் வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் கழித்தார். இவரது சீடராகத் திகழ்ந்த ஒருவர் 'பஞ்சக்ரோச மஞ்சரி' என்ற வடமொழி இசை நூலை யாத்துள்ளார். இந் நூல் இன்றும் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்நூலை மராத்தி மன்னர் துக்கோசி எனும் துளசா மன்னர் மிகவும் போற்றினார் என்பதை இச்சுவடியின்

இறுதிக் குறிப்புகளால் அறிய முடிகிறது. இந்நூலாசிரியர் தம்மை 'சிவ நாராயணாநந்த தீர்த்த சிஷ்யா' என்றே கூறிக் கொள்கிறார்.

நாராயண தீர்த்தர் (28-2-1645) தாரண வருடம் மாசி மாதம் 23-ஆம் நாள் சுக்கிலபட்ச அட்டமித் திதி மிருகசீருட விண்மீன் கூடிய ஞாயிற்றுக்கிழமையன்று வராகபுரி எனும் வரகூரில் சீவ சமாதியடைந்தார். இதனை

"ஸ்ரீமத் தாரண வத்ஸரே சுபதினே
சுக்லாஷ்டமீ சம்யுதே
நக்ஷத்ரே மிருக சீர்புஷகே நவதினே
ஸ்ரீமாகமாஸே கலௌ
கிரிஸ்த்வாதௌ சத ஷோடஸான் விதசது:
பஞ்சாச தாப்தே மஹான்
ஸ்ரீ நாராயண தீர்த்த சத்குருவரோ
ஜீவத் ஸாமாதிம் யயௌ -

என்று ஒரு சுலோகம் கூறுகிறது.[6]

## நாராயண தீர்த்தரின் செப்புப் படிமம்

தலைசிறந்த சமஸ்கிருத நூல்களைப் படைத்து இறுதியில் வரகூரில் சீவ சமாதியடைந்த மகான் நாராயண தீர்த்தரின் செப்புப் படிமத்தை வரகூரினை அடுத்த ரங்கநாதபுரம் கிராமத்தில் இன்றும் காணலாம். இங்குள்ள ருக்மணி சத்ய பாமா சமேத பாலகிருட்டிணனது செப்புத்திருமேனியின் பீடத்தில் நாராயண தீர்த்தரின் உருவம் (சுமார் 6 அங்குல உயரம்) இடம் பெற்றுள்ளது.

கமல பீடத்தின்மேல் கையில் வெண்ணெய் உருண்டையை ஏந்திய பாலகிருட்டிணன் தனது வலக்காலை உயர்த்தி, இடக் கரத்தை நீட்டி நர்த்தனக் கிருட்டிணனாய் (ஆடும் கோலம்) ஒரு மரத்தடியில் திகழ்கிறார். இருபுறமும் கமலமேந்திய ருக்மணியும், பாரிசாதமேந்திய சத்திய பாமாவும் இரண்டு கமல பீடங்களில் நிற்க, பின்புறம் ஒரு பிரபாவளி அணி செய்கிறது. இவர்கள் மூவரும் நிற்கும் கமல பீடங்கள் ஒரு நீண்ட பத்ர பீடத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இப் பத்ர பீடத்தில் கண்ணனின் திருவடிகளுக்குக் கீழாகக் கையில் தண்டும் (கோல்) தோளில் ஆடையும் திகழ நாராயண தீர்த்தர் வணங்கும் திருக் கோலத்தில் காணப்படுகிறார்.



**கண்ணன் காலடியில் நாராயண தீர்த்தர்**
**ரங்கநாதபுரம் - செப்புத்திருமேனி**

மிக எழிலுடன் திகழும் இச்செப்புத் திருமேனி நாயக்கர்கள் காலப் படைப்பு என்பது சிற்ப இயல் வல்லுநர்களின் ஒருமித்த கருத்தாகும். சோழ மண்டலத்தில் உள்ள வராகபுரியிலேயே ( வரகூர் ரங்கநாதபுரம் ), 'கிருஷ்ணலீலா தரங்கிணியின்' நாயகனான கண்ணனின் திருவடிகளுக்குக் கீழாகவே துறவுக் கோல அடியவராக நாராயண தீர்த்தர் விளங்குவது எத்தனைப் பொருத்தமாக உள்ளது.

## திருப்பூந்துருத்தி அனந்த பத்மநாப தீர்த்தர்



அனந்த பத்மநாத தீர்த்தர்
திருப்பூந்துருத்தி

இவரையும் - நாராயண தீர்த்தரையும் ஒருவர் எனக்கொண்டு பலர் வரலாறு எழுதினர். நாராயண தீர்த்தரினின்று வேறு பட்ட இவரது பெயர் அனந்த பத்மநாபன் என்பதாகும். இவர் தஞ்சையைஅடுத்துள்ள திருப்பூந் துருத்தியில் சீவ சமாதியடைந் தார். மராத்திய மன்னர் இரண் டாம் துளசா, மற்றும் அமர சிம்மன் காலத்தில் வாழ்ந்தவர். இவர் பல சித்திகள் கைவரப் பெற்றுப் பல அற்புதங்களை நிகழ்த்தியவர். திருவண்ணாமலை யில் சில காலம் தங்கியிருந்தவர். இவரது வண்ண ஓவியம் ஒன்று திருப்பூந்துருத்தி சமாதிக் கோயி லில் இன்றும் உள்ளது.

### குறிப்புகள்


1. Bhavan's Journal - **1959.** Article by K. Setharamaiya.
2. Madras University Publication. Sanskrit Catalague.
3. சரசுவதிமகால் நூலக சமஸ்கிருத சுவடிகள் - பி. ஏ. 107 (பி)
4. தஞ்சை என். சீனுவாசன் எழுதிய நாராயண தீர்த்தர் பற்றிய கட்டுரை. ( அச்சில் )

# பொற்பண்டாரம் கர்ணம்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் முன் உள்ள நந்தி மண்டபம் தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப் பட்டது என்பதை இம்மண்டபத்துச் சிற்பப் பாங்காலும், தூண் களில் இடம்பெற்றுள்ள நாயக்க மன்னர்களின் சிற்பங்களாலும் அறிய முடிகிறது. இம்மண்டபத்தில் அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர், விசயராகவ நாயக்கர் ஆகியோரின் சிலைகள் இடம் பெற்றுள்ளதால், இது இரகுநாத நாயக்கர் காலத்திலோ, அவரது மகன் விசயராகவன் காலத்திலோ திருப்பணி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

வரலாற்றுச் சிறப்புடைய இம்மண்டபத்துத் தூண் ஒன்றில் கல்வெட்டுக் குறிப்புடன் ஓர் அடியவர் சிலை உள்ளது. எம்மால் முதன் முதலில் இக்கல்வெட்டு படி எடுக்கப்பட்டு, அச்சிலை பற்றிய கருத்துகளும் ஆராயப்பட்டன. நந்தி மண்டபத்தில் வடபுறமுள்ள தூண்களின் மேற்கிலிருந்து இரண்டாவது தூணில் மேற்குத்திசை நோக்கிய வண்ணம் ஒரு சிற்பத் தொகுதி காணப் படுகிறது. இதில் ஒரு மரம் மிக அழகாக வடிக்கப்பட்டு அதன் கீழ் ஒரு விநாயகர் கோயிலும் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலினுள் உள்ள வேழமுகக் கடவுளை அதன் எதிரே தாடி மீசைகளுடனும் இடுப்பில் உடுத்திய அரை ஆடையுடனும் அடியவர் ஒருவர் வணங்கி நிற்கிறார்.

வணங்கும் கோலத்திலுள்ள இந்த அடியவரின் திருவடி களுக்குக் கீழாக,

"பொற் பண்டார
ங் கர்ணம்" -

என்ற கல்லெழுத்துகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு வரிகளால் மேற் காணப்படும் அடியவர் தஞ்சைப் பெருங் கோயிலிலோ, தஞ்சை நாயக்க மன்னரது அரண்மனையிலோ இருந்த பொற் பண்டாரத்தின் கணக்கராகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

தஞ்சை நாயக்கர்கள் காலத்தில், தங்களது ஆட்சிக்குத் துணையாகத் தெலுங்கு நாட்டிலிருந்து அந்தணர்கள் பலரை இங்குக் குடியேற்றினர். அவ்விதம் இங்குக் குடியேறிய அந்தணர் கள் பல பிரிவுகளைச் சார்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். நியோகி கர்ண கம்மலு, முலக்கநாடு, வேங்கிநாடு, வெலநாடு என்ற உட்பிரிவுகளில் இவர்கள் அடங்குவர். நியோகிகள் அரசு நிருவாகப் பணிகளையும், கர்ண கம்மலுகள் அரசுக் கணக்குப் பணிகளையும், முலக்க நாடு பிரிவினர் மக்களுக்குச் செய்யும் பஞ்சாங்கப் பணிகளையும், வேங்கி நாடு பிரிவினர் அரசு அலுவல், போர் உதவி போன்ற பணிகளையும், வெலநாடு பிரிவினர் வேதியர் பணிகளையும் மேற்கொண்டனர்.

எனவே தஞ்சைப் பெருங்கோயில் நந்தி மண்டபத்தில் காணும் அடியவர், இரகுநாதன் அல்லது விசயராகவ நாயக்கர் காலத்தில் கணக்குப் பணி மேற்கொண்டவர் என்பது தெளிவு. இவரது மார்பில் புரிநூல் திகழ்வதால் தெலுங்கு மாநிலத்திலிருந்து இங்குக் குடிபெயர்ந்த கர்ணகம்மலு பிரிவைச் சேர்ந்த பொற் பண்டாரத்தின் கணக்கர் என்பது உறுதியாகிறது.



பொற்பண்டாரம் கர்ணம்
தஞ்சைப் பெருங்கோயில்

# தாயுமான அடிகள்

சோழ மண்டலத்திலுள்ள திருமறைக்காட்டில்(வேதாரண்யம்) கி.பி.17-ஆம் நூற்றாண்டில் சைவ வேளாளரான கேடிலியப்பப் பிள்ளை, கசவல்லியம்மை என்ற தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அந்நாளில் திருச்சிராப்பள்ளியில் அரசுபுரிந்த விசயரங்க சொக்க நாதன் (கி.பி.1706-1732) கேடிலியப்பப் பிள்ளையின் நற்குணங் களைக் கேள்வியுற்று அவரை வரவழைத்துத் தமது அரசியல் கணக் கர் தொழிலில் அமர்த்தினார். கேடிலியப்பப்பிள்ளை திரிசிரபுரத் தில் பணியாற்றி வரும்போது தமக்கிருந்த சிவசிதம்பரம் என்ற புதல்வனைத் தமது தமையனாருக்குச் சுவீகாரம் செய்து கொடுத்து விட்டதினால் தமக்குச் சந்ததி உண்டாகும்படி திருச்சிராமலை யில் கோயில்கொண்டிருக்கும் அருள்மிகு தாயுமானப் பெருமானைத் தினந்தோறும் அன்புடன் வழிபட்டு வந்தார்.பெருமான் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்று பெருமான் பெயரையே வைத்தார்.

தாயுமானவர் இளம் வயதிலேயே கற்று, கேட்பன கேட்டுப் பலரும் புகழும் நிலையில் வளர்ந்து வரும்போது தந்தையார் காலஞ்செல்லவே அரசனது விருப்பப்படி தம் தந்தையார் தொழிலை ஏற்று வேலை பார்த்து வந்தார்.தம் தமையனார் சிவசிதம்பரத்தின் வற்புறுத்தலாலும், குருவாணையாலும் இல்லறம் மேற்கொண்டார். கனகசபாபதி என்னும் மகனை ஈன்ற துணைவியார் காலமாகி விடவே இல்லற வாழ்வில் நாட்டம் குறைந்தது.தாயுமானவருடைய மனம் ஞானாசிரியனைக் கண்டு நல்லுபதேசம் பெற்றுப் பிறவிப் பிணியை நீக்கிக் கொள்ள வேண்டும் என்ற தீவிர எண்ணத்தில் இருந்ததினால்,அவர் அருள்மிகு தாயுமானப்பெருமானிடம் தம்மை ஈடேற்றும்படி நாள்தோறும் வழிபட்டு வந்தார். அப்போது திருமூல நாயனார் மரபில் தோன்றிய மௌனகுரு சுவாமிகள் தல யாத்திரையாக வந்து, இக்கோவிலில் உள்ள அருள்மிகு

தட்சிணாமூர்த்தி சந்நிதியில் தியானத்தில் இருந்தார். தாயுமானவர் வழக்கம்போல் சுவாமி தரிசனம் செய்ய வந்ததும் காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பு போல் தியானத்திலிருந்த மௌன குருவின் பாதத்தில் விழுந்து இறைஞ்சி நிற்க, தாயுமானவரின் மனப்பக்குவ நிலையைக்கண்டு மௌனகுரு ஞானஉபதேசம் செய்தார்.

தாயுமானவர் சிவானுபூதிச் செல்வராய் விளங்கி "அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது" என்ற பாடலைப் பாடத்தொடங்கினார். மேலும் வேதாந்த சித்தாந்த சமரசக் கருத்துகள் அடங்கியதும் யாவராலும் புகழப்படுவதுமான மெய்ஞ்ஞானப் பாடல்களைப் பாடி ஆன்மிக உலகிற்கு அருளினார். அதனால் இவருக்குத் தாயுமான அடிகள் என்ற பெயர் அமைந்தது. அவர் அருளியிருக்கும் பாடல்களில் இக்கோயிலில் திருமேனி கொண்டிருக்கும் அருள்மிகு தட்சிணாமூர்த்தியின் பேரிலும் தம்மை ஆட்கொண்ட மௌன குருவின் பேரிலும் அருள்மிகு தாயுமானப் பெருமான் பேரிலும் பாடிய பாடல்கள் அடங்கும்.

இவ்வாறு அடிகள் பற்றற்ற நிலையில் வாழ்ந்து பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு முடிவில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த இலட்சுமிபுரத்தில் 1742-இல் நிர்விகற்ப சமாதியில் இருந்து இறைவன் திருவடியை அடைந்தார். அங்கு அடிகளுடைய கோயிலும் உள்ளது. இவருடைய அருட்கவிகள் 'தாயுமானவர் பாடல்' எனும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் சமரச நோக்குடையவை. இவருடைய மாணாக்கர்களுள் சிறந்தவர் அருளையர் என்பவர். தாயுமான அடிகள் தை மாதம் விசாக நட்சத்திரத்தில் சிவத்தோடு கலந்தார்.



தாயுமான அடிகள்
திருச்சி மலைக்கோயில்

## தாயுமானவர் உருவச்சிலை

திருச்சிராப்பள்ளி மலையில்

உள்ள அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில் மண்டபத்தில் தாயுமான அடிகளாரின் திருவுருவச் சிலையுள்ளது. கற்படிமமாக உள்ள இவ்வுருவச் சிலையில் தாயுமானவர் யோக நிலையில் பத்மாசனத்தில் அமர்ந்து காணப்படுகிறார். தலையிலும், மார்பிலும் உருத்திராக்க மாலைகள் அணி செய்கின்றன. இச் சிலை வழிபாட்டிலுள்ளது. இது நாயக்க மன்னர்கள் காலத்துப் படைப்பாகும்.

# இயல் 7

# மராட்டியர் இயல்

# வெங்கோசி எனும் ஏகோசி

(கி. பி. 1676-1683)

மராத்திய மாநிலத்தில் வாழ்ந்த சகசி என்பாருக்குப் பிறந்த இரு மக்களில் முதலாமவர் மராத்திய மாநிலத்தில் பொற் காலத்தை உருவாக்கிய சத்திரபதி சிவாசியாவார். இவர் சகசியின் முதல் மனைவியின் மகன். இரண்டாவது மனைவிக்கு மகனாய்ப் பிறந்தவரே வெங்கோசி எனும் ஏகோசி.

இவர் பீசப்பூர் சுல்தானின் ஆளுகையின்கீழ் பெங்களூர் ஜாகீருக்குத் தலைவராய்த் திகழ்ந்தார். அவ்வமயம் தஞ்சை யில் நாயக்கர் ஆட்சி அழியத் தொடங்கியது. விசயராகவ நாயக்க ருடன் மதுரை சொக்கநாத நாயக்கர் போரிட்டு வல்லம் கோட் டையைக் கைப்பற்றினார். இப்போரில் மதுரை நாயக்கரின் தளவாய் வெங்கடப்ப நாயக்கன் விசயராகவனின் தம்பி இராம பத்திரனைக் கைது செய்தான். இறுதியில் விசயராகவன் தமது அரண்மனையின் ஒரு பகுதியில் தமது உரிமை மகளிர், மகள் ஆகியோர் தங்கியிருந்த பகுதிக்கு வெடி வைத்துத் தகர்த்துத் தாமும் மரணம் அடைந்தார். பின்னர்த் தஞ்சைக் கோட்டை மதுரை நாயக்கரின் தம்பி அழகிரியின் கைக்கு மாறியது. இவ்வமயம் விசயராகவ நாயக்கரின் அதிகாரியான இராயசம் வெங்கண்ணா விசயராகவனின் கடைசி மகன் செங்கமலதாசை நாகப்பட்டினத்திலிருந்த சுப்பாசெட்டி, ஏனுசெவ்வை என்ற தெலுங்குப் பெண் ஆகியவர்களின் உதவியுடன் ஆளாக்கினார். பின்னர் அவனைப் பீசப்பூர் சுல்தானிடம் அடைக்கலப் படுத்தினார். அழகிரியைத் தஞ்சையைவிட்டு அகற்றத் திட்டம் தீட்டி அடில்சாவின் (பீசப்பூர் சுல்தான்) உதவியை நாடிய போது, அடில்சா பெங்களூர் ஜாகீர்தார் வெங்கோசியிடம்,

தஞ்சையை மீட்டுச் செங்கமலதாசுக்கு அளிக்க ஆணையிட்டார். அதன்படி வெங்கோசி தஞ்சையை மீட்க, அழகிரி நாயக்கனுடன் ஐயம்பேட்டையில் கடும் சமர் புரிந்து தஞ்சையைக் கைப்பற்றினார்.

பின்னர்ச் செங்கமலதாசைத் தஞ்சை மன்னனாக அமரச் செய்துவிட்டு, வெங்கோசி திருமழபாடியில் முகாமிட்டிருந்தார். அவ்வமயம் செங்கமலதாசு வெங்கண்ணாவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சுப்பாசெட்டிக்குப் பதவிகள் அளித்ததால் ஏமாற்றமடைந்த இராயசம் வெங்கண்ணா திருமழபாடியிலிருந்த வெங்கோசியைச் சந்தித்து, தஞ்சை அரசை ஏற்க வேண்டினார். வெங்கண்ணாவை முழுமையாக நம்பாத வெங்கோசி தஞ்சையை நோக்கித் தம் படையுடன் வந்தபோது, முன்பே பயந்திருந்த திறமையற்ற செங்கமலதாசு தஞ்சையைவிட்டுத் தப்பி ஓடிவிட்டான். தஞ்சைக் கோட்டைக்குள் வெங்கோசி நுழைந்தபோது எந்த ஓர் எதிர்ப்பும் இல்லை. இங்கு அரசாளத் திறமையான எவரும் இல்லாததால் தானே வலிய வந்த அரசை விட மனமில்லாமல் வெங்கோசி தஞ்சை மன்னராக மணிமுடி சூடினார்.

மேற்குறித்த செய்திகள் அனைத்தும் 'டெய்லர்' என்ற மேனாட்டாரின் குறிப்புகள் ஆகும். ஆனால் போன்சலே வம்ச சரித்திரம் என்ற சரபோசி மன்னரின் கல்வெட்டுகள், மராத்திய வம்சாவளி என்ற அமரசிம்மனின் சுவடித்தொகுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும்போது, முதலில் உதவிக்காக வந்த ஏகோசி, பின்னர் முகமதிய படைத்தலைவர்களின் தூண்டுதலால் தஞ்சை நாயக்க மன்னர் விசயராகவனைப் போரிட்டுக்கொன்று, பின்பே தஞ்சை அரசு கட்டிலில் அமர்ந்தான் என்ற செய்தி பெறப் படுகிறது. மேலும், இதனை வலியுறுத்தும் வண்ணம் ஏகோசியின் அமைச்சர் ரகுநாத்பந்த் ஏகோசியை விட்டு விலகி,சத்ரபதி சிவாசியுடன் இணைந்துகொண்டு ஐயம்பேட்டைப் போரில் ஏகோசியை முறியடித்த செய்திகளும், சத்ரபதி சிவாசி ஏகோசிக்கு எழுதிய கடிதங்களும் சான்றுகளாக நிற்கின்றன.

கி. பி. 1676-1683 வரை தஞ்சையை ஆண்ட முதல் மராத்திய மன்னரான வெங்கோசியின் மூன்று புதல்வர்களே சகசி, முதலாம் சரபோசி, துக்கோசி எனும் துளசாசி ஆவர். புகழ் பெற்ற வெங்கோசியின் வண்ண ஓவியங்கள் தஞ்சை அரண்மனை நூலகத்திலும் தஞ்சைப் பெருங்கோயிலில் சுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டபத்திலும் இடம் பெற்றுள்ளன.





வெங்கோசி - அழிந்த ஓவியங்கள் - தஞ்சை அரண்மனை நூலகம்

## நூலக ஓவியங்கள்

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 1'×1' அளவுள்ள வண்ண ஓவியம் ஒன்று உள்ளது. இதில் வெங்கோசி முகமதியர்கள் போன்று குல்லாய் அணிந்து அமர்ந்த நிலையில் உள்ளார். வெங்கோசியின் உடை மற்றும் தோற்றம், மற்ற மராத்திய அரசர்களின் தோற்றங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

தஞ்சை அரண்மனையில் முன்பு இடம்பெற்று அழிந்து போன திரைச்சீலை ஓவியங்களில் வெங்கோசியின் ஓவியமும் ஒன்றாகும். இதில் முதலாம் சகசி மன்னரின் முன்பு சத்ரபதி சிவாசியும், வெங்கோசியும் அமர்ந்திருக்கும் காட்சி தீட்டப்பெற்றிருந்தது. இதன் ஒளிப்படம் தற்போது தஞ்சை நூலகத்தில் உள்ளது.

தஞ்சைப் பெருங்கோயில் மண்டபத்தில் உள்ள மராத்திய மன்னர்களின் ஓவிய வரிசையில் வெங்கோசியின் ஓவியமும் உள்ளது. இது கடைசி மன்னர் சிவாசியின் காலத்தில் தீட்டப்பட்ட வண்ண ஓவியமாகும்.

## சகசி

( கி. பி. 1684 - 1712 )

'சஹஜி' என்று மராத்தியிலும், சகசி என்று தமிழிலும் அழைக்கப்பட்ட இம்மன்னவர் தஞ்சையை ஆட்சிபுரிந்த மராத்திய மன்னர்களின் வரிசையில் இரண்டாவதாக முடி சூடியவர். இவர் தஞ்சையில் மராத்திய ஆட்சியைத் தோற்று வித்த வெங்கோசியின் மூத்த புதல்வர். இவருடன் பிறந்தவர் கள் முறையே முதலாம் சரபோசியும், துளசாவும் ஆவர். இவர் கள் மூவரும் இணைந்தே தஞ்சை ஆட்சியை நடத்தினர் என்று ஒரு மராத்தியக் கல்வெட்டு கூறுகிறது.[1] 'தர்மாகூடம்' எனும் நூல் இம்மூவரின் நெருக்கத்தை விவரிக்கின்றது.[2]

சகசி தஞ்சை அரண்மனையில் செங்கோலோச்சும்போது கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டையில் முதலாம் சரபோசியும், மன்னார்குடிக்கு அருகில் உள்ள மகாதேவ பட்டினத்தில் துளசாவும் இருந்து கொண்டு அந்தந்தச் சுபாக் களைத் ( நாட்டுப் பிரிவுகளை ) திறம்பட நிருவகித்தனர். கருநாடக மாநிலத்தில் பிறந்த இவர், தமது இளம் வயதிலேயே தம் தந்தையுடன் தஞ்சை அரசுப் பணிகளைக் கவனித்ததால் தமது ஆட்சியில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தினார். தஞ்சை மராத்திய அரசர்களின் வரிசையில் மிகச்சிறந்த அரசர் என்ற பெயரையும் பெற்றார். சகம் 1688 - நந்தன வருடம் - கி. பி. 1712-இல் தஞ்சையை அடுத்த வல்லத்தில் இயற்கை எய்தினார்.[3]

சகசி பீசப்பூர் சுல்தான்களுடன் நல்லுறவு கொண்டு திகழ்ந்தார். பீசப்பூர் சுல்தான்களுக்குத் திறை செலுத்திய தஞ்சை அரசு, பின்னர் சிவாசிக்கும் அடுத்து முகலாயர்களுக்கும்

திறை செலுத்திற்று. மிக இளம் வயதிலேயே தம் தந்தையிடம் அரசியல் பயிற்சி பெறும் சூழ்நிலை சகசிக்குக் கிட்டியது. பதினைந்து வயதடைவதற்குள் அரசு கட்டில் ஏறும் வாய்ப்பும் ஏற்பட்டது. வெங்கோசியின் அமைச்சர்கள் பாவாசி, கங்காதர மகி போன்றவர்களின் துணையும் சகசியின் வளர்ச்சிக்குக் காரண மாய்த் திகழ்ந்தது.

இராமநாதபுரம் அரசர் கிழவன் சேதுபதி, மங்கம்மாள், சகசி இவர்களிடையே அடிக்கடி நட்பும், மோதல்களும் மாறி மாறி நிகழ்ந்ததாகச் சில குறிப்புகள் கூறுகின்றன.[4]

## தஞ்சை மண்ணில் இலக்கியச் செழுமை

தாமே ஓர் பெரும்புலவராகத் திகழ்ந்ததால் சகசி மன்னரது அவை பன்மொழிப் புலவர்கள் சூழத் திகழ்ந்தது. இவரது காலத்தில் இலக்கியங்கள் மலர்ந்த அளவு, தஞ்சை மண்ணில் வேறு எந்த அரசர் காலத்திலும் இலக்கியங்கள் தோன்றவில்லை. இவரது அவையில் மலர்ந்த தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத் தக்கவை (1) பூலோக தேவேந்திர விலாசம் (2) அதி ரூபவதி கல்யாணம் (3) சங்கர நாராயண கல்யாணம் (4) சந்திரகாச விலாச நாடகம் (5) தியாகேசர் குறவஞ்சி (6) விஷ்ணு சாஹராஜ விலாசம் முதலியனவாகும்.[5] இவரது ஆதரவால் பல தமிழிசை நாட்டிய நாடக நூல்கள் மலர்ந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்க நாடகங்கள் மனுநீதி சோழ மகாராஜன் நாடகம், பிரகலாதன் மாக்கதை முதலியனவாகும்.

தஞ்சை அரண்மனையில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகள் சங்கமித்தன. சகசி மன்னரே பன்மொழிப் புலமையுடன் திகழ்ந்ததால், இவரே பல மொழி-களிலும் கவிதைகள் புனைந்தார். இவரது சான்றாண்மைக்குக் காரணமாய்த் திகழ்ந்தவர்கள் பெரும்புலவர்களாகவும், அமைச்சர் களாகவும் திகழ்ந்த திரயம்பகராய மகி, பகவந்தராயா ஆகியோ ராவர். 'திரிபுரவிசய சம்பு' எனும் நூல் நரசிம்மராய மகியாலும், 'ஆசார நவநீதா' ஆனந்தராய மகியாலும், 'ஸ்ரீதர்மபத்ததி' திரயம்பக மகியாலும், இராகவாப்புதய நாடகம், முகுந்த விலாசம், உத்தர சம்பு என்ற நூல்கள் கங்காஜி எனும் பெரும் புலவராலும் இவரது அவையில் மலரப்பெற்றன.[6]

சகசி கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சாகராசபுரம் எனும் திருவிசநல்லூரை நாற்பத்தாறு பெரும்புலவர்களுக்கு அளித்து

அழியாப் புகழ் எய்தினார்.[7] இந்த நாற்பத்தாறு புலவர்கள் வரிசையில் குறிப்பிடத் தக்கவர்கள் ஸ்ரீதரவெங்கடேசன் எனும் திருவிசலூர் ஐயாவாள் மற்றும் இராமபத்திர தீட்சிதர் ஆகியோ ராவர். ஜானகி பரிணயம், சிருங்கார திலகபாணம், பரிபாஷவிருத்தி, சுதர்சன சித்தாந்த சங்கிரகம், இரத்தின தூலிகா, சித்தாந்த சித்தாஞ்சனா வித்யா பரிணயம், ஜீவானந்தா, அப்புதார்பன நாடகம், சுகசந்தேசா, சிருங்கார மஞ்சரி சாஹஜியம் ஆகிய நூல்கள் இவரது அவையில் உதித்த முத்துக்களாகும்[8]. திருவிசலூர் ஐயாவாள் எழுதிய 'சாகேந்திர விலாசம்' எனும் நூல் சகசியின் வாழ்க்கையைப்பற்றி விவரிக்கும் ஓர் அரிய சமஸ்கிருத நூலாகும்.[9]

## சகசி எனும் பெரும்புலவன்

கருநாடக இசையின் சாகித்தியங்களுக்குத் தந்தையெனக் கூறப்படும் புரந்தரதாசர், அன்னமாச்சாரியார் ஆகியோருக்குப் பின்னும், சங்கீத மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் தியாகையர், முத்துசாமித் தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோருடைய காலத்திற்கு முன்னும் வாழ்ந்த சகசி மன்னர் பல நூறு கிருதிகளையும் அரிய நூல்களையும் தெலுங்கு, மராத்தி முதலிய மொழிகளில் படைத்தார். இவரால் பல இசை, நாட்டிய நாடக நூல்கள் எழுதப்பட்டன.

சங்கர காளீ நடன சம்வாத நாடகம், சங்கர பல்லக்கி சேவாபிரபந்தம், விஷ்ணு பல்லக்கி சேவாபிரபந்தம், கிராத விலாசமு, பக்தவச்சல விலாசமு, கங்கா பார்வதி சம்வாதமு, பஞ்சரத்தின பிரபந்தமு, சீதாகல்யாணமு, சதிபதிதான விலாசமு, கிருஷ்ண லீலா விலாசமு, ருக்மணி சத்யபாமா சம்வாதமு முதலான தெலுங்கு நாட்டிய நாடகங்களும், இலட்சுமி நாராயண கல்யாணம், இலட்சுமி பூதேவி சம்வாதம், மிருத்தியுஞ்சய சிரஞ்சீவி நாடகம், தியாகராச விலாசம், கங்கா காவேரி கல்யாணம் முதலான மராத்தி இலக்கியங்களும் பஞ்சபாஷா விலாசம் என்ற பன்மொழிக் காப்பியமும் இம்மன்னர் தஞ்சையில் யாத்த அரும்பெரும் நூல்களாகும்.[1]

இந்தி மொழியில் விஸ்வாதீத விலாசமும், சமஸ்கிருதத்தில் சந்திரசேகர விலாசமும், தமிழில் காவேரி கல்யாணமும் இவர் படைத்த முத்தான நாடக நூல்களாகும். இம்மன்னரது அவைக் களப் புலவர்களாகத் திகழ்ந்த கிரிராஜகவி, முத்துக்கவி முதலி யோர் பல நாட்டிய நாடகங்களைப் படைத்து ஆங்காங்கே இம்மன்னரின் புகழ் பேசுகின்றனர். ஆரூர்த் தியாகராசனையே

தமது குல தெய்வமாகப் போற்றிய சகசி மன்னர் தமது கவிதை களில் 'தியாகேச' முத்திரையையே பதித்தார். ஆரூர்ப் பெருமான் மீது அளவற்ற அன்பு கொண்டு திகழ்ந்ததால்தான் 'தியாகேசபதமுலு' என்ற பெயரில் பல நூறு கிருதிகளை இவரால் படைக்க முடிந்தது. தியாகேசர் குறவஞ்சி எனும் நூலின் காப்புச் செய்யுள் இம்மன்னரைப் பற்றிப் பின்வருமாறு விவரிக்கின்றது.

"தங்கமா மகுடஞ் சூடுஞ்
சகசி ராசேந்திரன் போற்றும்
வங்கமா வரைய ராரூர்
வன்மீகத் தியாகர் மீதில்
கொங்குசேர் குழலாள் தெய்வக்
குறவஞ்சி தன்னைப் பாடச்
செங்கை வேலவனுந் தேவ
தேவனுங் காப்புத் தானே"

இயல், இசை, நாட்டியம் எனும் முத்துறைகளையும் வளர்த்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சகசி மன்னர் தஞ்சை மன்னர்கள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தகுந்த பெரும்புகழாளர் என்பது மிகையன்று.

## சகசியின் வண்ண ஓவியம்

இதுவரை சகசி மன்னரின் கற்படிமமோ, செப்புப்படிமமோ, சுதைச்சிற்பமோ நமக்குக் கிடைக்கவில்லை. தஞ்சை அரண்மனை மராத்தியர் கொலுமண்டபத்தில் (தர்பார் மண்டபம்) மிக அண்மைக்காலம் வரை இம்மன்னரின் வண்ண ஓவியம் இடம் பெற்று இருந்தது. 1952-ஆம் ஆண்டு வீசிய கடும் புயலின் போது இப்படம் முற்றிலுமாக அழிந்து விட்டது. நற்பயனாக இதன் ஒளிப்படம் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் இடம் பெற்று உள்ளது. இது ஒன்றே இம்மன்னரின் தெளிவான உருவம் பற்றி அறிய நமக்குக் கிடைக்கும் ஓவியமாகும்.

தலைப்பாகையும், எடுப்பான மீசையும், தெளிவான தோற்றமும் திகழ இம்மன்னர் ஒரு கையில் வாளை ஏந்தி, கால்களை மண்டியிட்டு அமர்ந்த நிலையில், தமது வலக்கரத்தை மார்புக்கு நேரே உயர்த்தி வணக்கம் செலுத்தும் கோலத்தில் காணப்படுகிறது இவ்வோவியம்.



சகசி – அழிந்த ஓவியம்

## வெங்கோசியும் சகசியும்

தஞ்சை அரண்மனையில் மராத்தியர் தர்பார் மண்டபத்தில் இருந்து புயலால் அழிந்துபோன வண்ண ஓவிய வரிசையில் பிறி தொன்றில் சகசியின் தந்தையான வெங்கோசி அரியணையில் அமர்ந்திருக்க எதிரே சகசியும், அவரது தம்பி முதலாம் சரபோசியும் சற்றுத் தாழ்வான பகுதியில் அமர்ந்துகொண்டு தம் தந்தைக்கு வணக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் இரு கரங் களையும் கூப்பி வணங்காமல் ஒரு கரத்தால் உடைவாளைப் பிடித்துக்கொண்டு வலக்கரத்தை மார்புக்கு நேரே உயர்த்தி முகலாயர்களின் வணக்க முறைப்படி வணங்குகின்றனர். இவ் வோவியத்தில் சகசி பல வண்ண ஆடைகளையும், அழகிய முத்து மாலைகளையும் அணிந்து காட்சி நல்குகிறார்.

## ஆரூரில் சிதைந்த ஓவியம்

'தேரூர்ந்த சோழன் கதை' சகசி மன்னரை மிகவும் கவர்ந்த ஒன்று என்பதைத் தியாகேசர் குறவஞ்சி, தேரூர்ந்த சோழ புராணம்,[11] மனுநீதி சோழராஜன் நாடகம்[12] ஆகிய

இவர் காலத்து நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. மனுநீதிச் சோழன் கதையில் மிகவும் நாட்டங்கொண்ட இம்மன்னர் திருவாரூர்த் திருக்கோயில் தேவாசிரியன் மண்டபத்தின் உட்புறம் வடபுறச் சுவரில் தேரூர்ந்த சோழன் மாக் கதையை ஓவியத் தொடராகப் படைத்து ஒவ்வொரு ஓவியத்தின் கீழும் காட்சி விளக்கங்களும் இடம்பெறச் செய்தார். இவ்வரிய ஓவியக் காட்சியைப் படைத்த கலைஞன் சித்திர வேலைச் சிங்காதனம் என்பவனாவான். இவ்வோவியத் தொகுப்பின் இறுதியில் சகசி மன்னர், ஓவியன் சிங்காதனம் மற்றும் சிலர் ஆரூர் இறைவனை வணங்கும் கோலத்தில் வண்ண ஓவியமாகக் காட்சிக் குறிப்பு களுடன் காணப்படுகின்றனர். இவ்வரிய ஓவியக் காட்சியில் சகசி மன்னரின் முகம்மட்டும் சுவரில் காரை பெயர்ந்து சிதைந்து விட்டது. இது வரலாற்றுலகிற்குப் பேரிழப்பாகும்.

## செப்பேட்டு ஓவியத்தில் சகசி மன்னர்



சகசி, சரபோசி, துளசா, அருணாசலப்பண்டாரம்
திருவாரூர்ச் செப்பேட்டு ஓவியம்

திருவாரூர்த் திருக்கோவிலுக்குரிய செப்பேடொன்று[13] தற்போது சென்னை அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளது. இது கி. பி. 1694-இல் வடிக்கப்பட்டதாகும். இச் செப்பேட்டின் முதல் பக்கத்தில் மூன்றில் இரண்டு பங்கு அளவு ஓர் ஓவியத்தொகுதி காணப்படுகிறது. இந்த அழகிய வரைகோட்டு ஓவியத்தொகுதியில் மேலே நடுநாயகமாகத் திருவாரூர்த் தியாகப்பெருமான் (இளமுருகு உடனுறையும் அம்மையப்பராக) வீரசிங்காசனத்தில் காணப்படுகிறார். இதன் வலப்பக்கம் வியாக்கிர பாதரும் இடப்பக்கம் பதஞ்சலியும் உள்ளனர். விநாயகரும் முருகனும் தியாகப் பெருமானுக்கு இருபுறமும் காட்சி நல்குகின்றனர். இதற்குக் கீழாகச் செப்பேட்டின் நடுப்பகுதியில் இச் செப்பேட்டிற்குரிய மன்னரான சகசியும், அவரது சகோதரர்களான முதலாம் சரபோசியும் துளசாவும் அரசர்க்குரிய திருக்கோலத்தில் கைகூப்பி வணங்கி நிற்கின்றனர். தலையில் தலைப்பாகையும், மார்பில் அணிகலன்களும், கைகளில் வாகுவலயம், காப்பு ஆகியவையும் அணி செய்கின்றன.

சகசி மன்னருக்கு எதிரே இச் செப்பேட்டுச் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள கொடையை ஏற்று நடத்தும் பொறுப்புடைய திருவாரூர் அருணாசலப் பண்டாரமும் சமய அடிகளார் ஒருவரும் நிற்கின்றனர். அருணாசலப் பண்டாரம் துறவுக் கோலத்தில் தலையிலும் கழுத்திலும் உருத்திராக்க மாலை அணிந்து, உடலெங்கும் திருநீறு பூசிக் காணப்படுகிறார். அருகிலுள்ளவர் உழவாரம் ஏந்தி நிற்கிறார்.

வரலாற்றுச் சிறப்புடைய இச்செப்பேட்டுச் சாசனம் கி.பி.1694-ஆம் ஆண்டு சகசியின் ஆட்சிக்காலத்தில் கொடுக்கப்பட்ட ஓர் அறக்கொடை பற்றி மிக விரிவாகப் பேசுகிறது. திருவாரூர்க் கமலாலயத்தில் தியாகராசர் திருமுன்னிலையில் மன்னர் சகசியின் ஆட்சிக்குட்பட்ட பண்டாரவாடையில் குடியிருந்த குடியானவர்களும் அக்கிரகாரத்திலிருந்த மகாசெனங்களும் ஒன்றாகக்கூடி அதிதிகளாக வந்த பிராமணர்களுக்கும், பரதேசிகட்கும் அன்னதானத்திற்காகவும், திருவாரூர்த் தியாகராசர் வன்மீகேசுவரர், கமலாலயம்மன், அல்லியங்கோதை அம்மன் சந்நிதிகளின் திருப்பணிகளுக்காகவும், அபிடேகம், நைவேத்தியத்திற்காகவும் கொடையளிக்க முடிவு செய்தனர். அதனை அருணாசலப்பண்டாரம் என்பவர் முன்னிருந்து நடத்தவேண்டும் என்றும் வழிவகை செய்தனர். அம்முடிவினைத் திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தில் அத்தலத்தார், தானத்தார் முன்னிலையில் சாசனமாக எழுதிய செய்தி காணப்படுகிறது.

தெளிவான சான்றுகளுடன் நின்று, சகசி மன்னரின் உருவம் பொறிக்கப்பட்டுத் திகழும் இந்தச் செப்பேட்டு ஓவியம் ஒன்றுதான் இன்றும் காலவெள்ளத்தில் அழியாமல் நின்று நிலைத்துள்ளது.

## குறிப்புகள்


1. போன்சலே வம்ச சரிதம்-தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டு சரசுவதிமகால் வெளியீடு, எண் : 46.
2. Dharmakudam
3. The Maratha Rajas of Tanjore-K. R. Subramanian 1928 - Page - 26.
4. Ibid - Page 28.
5. தஞ்சை சரசுவதிமகால் நூலகம்-மராத்தி மற்றும் தெலுங்குச் சுவடி நூல்கள். Vol. I-III.
6. Ibid-சமஸ்கிருதப் பிரிவுச் சுவடி நூல்கள் Vol. 19.
7. T. S. Kuppusamy Sastri's article in Indian Antiquary Vol.38 Page-12.
8. தஞ்சை சரசுவதிமகால் நூலகச் சமஸ்கிருதப் பிரிவுச் சுவடி நூல்கள் Vol. 19.
9. சரசுவதிமகால் நூலக வெளியீடு எண் : 54.
10. தஞ்சை சரசுவதிமகால் நூலகச் சுவடி நூல்கள் தெலுங்கு, மராத்திப் பிரிவு Vol. I-III.
11. தஞ்சை சரசுவதிமகால் நூலகத் தமிழ்ப் பிரிவுச் சுவடி Vol. I.
12. தஞ்சை மாவட்டம் ஆண்டாங்கோயில் காத்தையா வாயாடியாரிடம் உள்ள தமிழ்ச் சுவடி நூல்.
13. 'ஓவியச் செப்பேடுகள்' - குடவாயில் பாலசுப்பிரமணியன்-தினமணி சுடர் - 29—6—1980.

# முதலாம் சரபோசி

(கி. பி. 1712 - 1728)

சகசி மன்னரின் இரண்டு தம்பியர்களுள் முதலாமவர் சரபோசி. இவரது தம்பி துக்கோசி எனும் முதலாம் துளாசாசி யாவார். தஞ்சையில் சகசி ஆட்சி நடத்தும்போது சாக் கோட்டையில் ஒரு சிறிய கோட்டை அமைத்துக்கொண்டு சோழ மண்டலத்தின் ஒரு பகுதியைச் சகசியின் சார்பாளராகச் சரபோசி ஆட்சி புரிந்தார். கி. பி. 1712-இல் சகசி அரசுப் பொறுப்புகளி லிருந்து ஓய்வு பெற்றதும் இவர் தஞ்சை மன்னரானார்.

சிறந்த அறிவுடன் திகழ்ந்த இவர் பன்மொழிப் புலமை யுடனும் திகழ்ந்தார். இவர் வடமொழியில் 'இராகவ சரிதம்' எனும் நூலை எழுதினார்.[1] சகசி மன்னர் காலத்தில் இசை, நாட்டியம், நாடகம், இலக்கியம் முதலிய பல துறை வளர்ச்சி களுக்குச் சரபோசியும் காரணமாய்த் திகழ்ந்தார். திருக்கட ஊரில் வாழ்ந்த அபிராம பட்டர் இம்மன்னரின் வணக்கத்திற் குரியவராக மதிக்கப்பட்டார். அபிராம பட்டர் எழுதிய அபிராமி அந்தாதி, சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகம் முதலிய தமிழ் இலக்கியங்கள் முதலாம் சரபோசியின் காலத்தில் மலர்ந்த நூல்களாகும்.

## சரபோசியின் வண்ண ஓவியம்

தஞ்சை அரண்மனை மராத்தியர் கொலு மண்டபத்தில் திரைச்சீலையில் இடம் பெற்றிருந்த முதலாம் சரபோசியின் வண்ண ஓவியம் அண்மைக் காலத்தில் புயல், பெருமழையால் முற்றிலுமாக அழிந்துவிட்டது. இவ்வண்ண ஓவியத்தின் ஒளிப்

படம் தஞ்சை அரண்மனை நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. இவ்வரிய ஓவியத்தில் சரபோசி மன்னர் முத்துவடங்கள் கோக்



முதலாம் சரபோசி - அழிந்த ஓவியம்

கப்பட்ட தலைப்பாகை, காதில் குண்டலம், சிறிய எடுப்பான மீசை, மராத்திய பாணி அரச உடை, தோளில் துண்டு, இடுப்பில் துணிப்பட்டை, மார்பில் பன்மணி மாலைகள் திகழ, திண்டுகள் உள்ள ஆசனத்தில் அமர்ந்த நிலையிலுள்ளார்.

செப்பேட்டு ஓவியத்தில் . . .

திருவாரூர்த் திருக்கோயிலில் பாதுகாப்பிலுள்ள செப்பேடுகளில் ஒன்று முதலாம் சரபோசி மன்னர் காலத்தில் (கி. பி. 1719-இல்) எழுதப்பட்டதாகும்.[3] இச்செப்பேட்டில் "சரபோசி மகாராஜா பிருதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற



முதலாம் சரபோசி
திருவாரூர்ச் செப்பேடு

சாலிவாகன சகாப்தம் 1641, இதன்மேல் செல்லா நின்ற விகாரி வருஷம் ஆவணி மீ 11உ புதன் வாரமும் சத்தமியும் ரோகணி நக்ஷத்திரமும் வச்சிர நாமயோகமும் பெவகரணமும் கூடின சுபதினத்தில் சிதம் பரம் அகோர பண்டாரம் அவர்கள் பாரிசமாக நடக்கிற அரிசியப்ப முதலியார் அவர் கள் கட்டளை நடத்தும் சரவ ணைத்தம் பிரான் அவர்கள் முகாந்திரமாக சுவாமியார் சிதம்பரேசுர சுவாமியார்க்கும் தில்லை கோவிந்தராச சுவாமி யாருக்கும்...'' என்று சாசன வரிகள் தொடர்கின்றன.

இச்சாசனம் தொடங்கு வதற்கு மேலாக இச்செப்பேட் டில் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஓவியப் படைப் புகள் காணப்படுகின்றன. இதன்மேல் தொகுதியில் நடுவில் அம்பலத்திலாடும் தில்லைக் கூத்தனும், அருகே சிவகாமியம்மையும் வலப்புறம் விநாயகர்,பதஞ்சலி,வியாக்கிர பாதர், சண்டேசர் சிற்றுரு வங்களும், இடப்புறம் முருகப்பெருமானும் காட்சி நல்குகின்றனர். இரண்டாம் தொகுதியில் தில்லைக் கோவிந்தராசப் பெருமான் அர வணையில் துயில, எதிரே மராத்திய மன்னன் சரபோசி, அருகே இளவரசன், மற்றும் ஓர் அதிகாரி ஆகிய மூவரும் நின்றுகொண்டு தில்லைக் கூத்தனையும் கோவிந்தராசப் பெருமானையும் வணங்கு கின்றனர். இவர்கள் முன்பாகக் கொடிமரம் (துவஜஸ்தம்பம்) நந்தி மண்டபம், பலிபீடம் ஆகியவையும் காணப்படுகின்றன.

தில்லை நடராசப் பெருமானுக்கும், கோவிந்தராசப் பெருமா னுக்கும் அளிக்கப்பட்ட அறக்கொடை பற்றி விவரிக்கும் இச்

செப்பேடு இம்மன்னவரின் ஓவியத்தையும் தாங்கி நிற்கிறது. சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் உருவம் பொறிக்கப் பட்ட செப்பேடுகள் வரிசையில் இது மூன்றாவதாகத் திகழ்கிறது.

## சரபோசியின் பித்தளைப் படிமம்

கும்பகோணம் அருள்மிகு சக்கரபாணித் திருக்கோயில் முதலாம் சரபோசிமன்னர் காலத்தில் நல்ல ஆக்கம் பெற்றுத் திகழ்ந்தது



முதலாம் சரபோசி - பித்தளைப்படிமம் - கும்பகோணம்

திருமாலைச் சக்கரத்தாழ்வாராக வழிபடுவது மராத்தியர் மரபு. தஞ்சை இராசகோபால சுவாமி கோயில், மராத்தியர்கள் காலத்தில் சக்கரத்தாழ்வார் கோயிலாக மாற்றப்பட்டது என்பதைத் தஞ்சைபுரீசுவரர் கோயில் மண்டபத்துக் கல்வெட்டுகள் கூறுகின்றன. முதலாம் சரபோசி சாக்கோட்டையில் தங்கி யிருந்தபோது இக்கோயில் ஏற்றம் பெற்றது.

இத்திருக்கோயில் மகாமண்டபத்தில் சுமார் 6 அடி உயர முடைய சரபோசி மன்னரின் பித்தளைப் படிமம் ஒன்று உள்ளது. இதனருகே சுமார் 3 அடி உயரமுடைய ஒரு பெண் ணின் உருவமும் பித்தளையில் காணப்படுகிறது. மராத்தியர் பாணித் தலைப்பாகை, நீண்ட அங்கிகளோடு கூடிய மராத்திய அரச உடை தரித்து வலக் கையில் மலர் ஒன்றை ஏந்திய நிலை யில் நின்ற கோலத்தில் காணப்படுகிறார். மீசை மெலிந்து காணப்படுகின்றது. அருகிலுள்ள பெண் இவரது மகளாக இருக்க வாய்ப்புள்ளது. இப்படிமம் மராத்தியர் பாணியில் வடிவமைக்கப்பட்டது.

## குறிப்புகள்

1. சரசுவதி மகால் வடமொழிச் சுவடிப் பிரிவு.
   சுவடி எண்-பி. 4758, டி. 3623.
2. ஓவியச் செப்பேடுகள் - குடவாயில் பாலசுப்பிரமணியன்
   தினமணி சுடர் 29-6-1980.

# துக்கோசி எனும் முதலாம் துளசா

(கி. பி 1729-1735)

முதலாம் ஏகோசி மன்னருக்கும், தீபாம்பா அம்மையாருக்கும் மூன்றாம் மகனாய்ப் பிறந்தவரே துளசா. தம் சகோதரர்களான சகசி, முதலாம் சரபோசி மன்னர்களின் ஆளுகைக்குப் பின்பு தஞ்சை அரியணையில் கி. பி. 1729-இல் அமர்ந்தார். சகசி தஞ்சையை ஆளும்போதே துளசா மன்னார்குடிக்கு அருகிலுள்ள மகாதேவ பட்டினத்தில் ஒரு கோட்டையை அமைத்துக்கொண்டு அப்பகுதியின் திருவாகப் பொறுப்புகளை ஏற்றார்.[1]

மகாதேவ பட்டினத்து வாழ்க்கை துளசா மன்னருக்கு ஏற்புடையதாக அமைந்தது. சிறந்த புலமையும், மருத்துவ அறிவும் பெற்றுத் திகழ்ந்த இவர், பல நூல்களை மகாதேவ பட்டினத்தில் இருக்கும்போது யாத்தார். இவரது அவையைப் பல புலவர்கள் அலங்கரித்தனர். கனச்யாம பண்டிதர் எனும் வடமொழிப் புலவரும், மானம்பட்டர் எனும் சிறந்த அறிஞரும் துளசாவால் போற்றப்பட்டவர்கள்.

துளசா தமிழ், மராத்தி, தெலுங்கு, சமஸ்கிருதம், பாரசீகம் ஆகிய பன்மொழிகளிலும் புலமை மிக்கோங்கித் திகழ்ந்தார். மகாதேவ பட்டினத்தில் இவரெடுத்த மகாதேவர் திருக்கோயிலும், சுவேதவராகர் திருக்கோயிலும் இவரது கலைத் திறமையை எடுத்துக்காட்டும் சிறந்த சின்னங்களாகும்.

## துளசா படைத்த நூல்கள்

துளசா எழுதிய நூல்களாக நமக்குக் கிடைப்பவை ஒன்பது சுவடிகளாகும். இவையனைத்தும் தஞ்சை அரண்மனை நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

### 1. சங்கீத சாராம்ருதம்

கருநாடக இசை பற்றி விளக்கும் இந்நூல் 14 பிரிவுகளைக் கொண்டது. சதுர் தண்டிப் பிரகாசிகை என்று வேங்கடமகி

தொகுத்து உருவாக்கிய 72 மேளகர்த்தாக்களைத் துளசா இந்நூலில் விரிவாகக் கூறியுள்ளார். இது இசைத் துறையில் இம்மன்னரின் பெருஞ்சாதனையாகும்.

2. தன்வந்திரி விலாசம்

இந்நூல் ஆயுர்வேத வைத்தியம் பற்றித் தெளிவுபட விவரிக்கின்றது. தஞ்சை அரண்மனை நூலகத்தில் டி. 11066-9 என்ற எண்ணில் இந்நூல் உள்ளது.

3. தன்வந்திரி சாரநிதி[2]

இதுவும் ஆயுர்வேதம் பற்றியது. இந்நூலைத் துளசா "மகா தேவ பட்டினத்தில் எழுதினேன்" என்று குறிப்பிடுகிறார். இந் நூலிறுதியில், தன் நாட்டு மக்களில் ஒருவருக்கும் ஒருபோதும் எந்த நோயும் வரக்கூடாது என்று பெருங் கருணையுடன் இந்நூலை யாத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

4 இனகுல ராஜதேஜோநிதி[3]

இது முழுவதும் சோதிடம் பற்றி விவரிக்கின்றது. துளசா வுக்குச் சோதிடத் துறையிலிருந்த பட்டறிவு இந்நூலால் விளங்கு கின்றது.

5. வாக்யாமிருதம்[4]

இதுவும் சோதிடம் பற்றிக் கூறும் அற்புதப் படைப்பாகும்.

6. ராஜதர்ம ஸார சங்கிரகம்[5]

இந்நூல் தர்ம சாத்திரத்தைப் பற்றிக் கூறுகிறது. இதனை யாத்ததால் துளசா மன்னருக்குத் தர்மங்களின் மேல் இருந்த பெரு மதிப்பு புலனாகிறது.

7 மந்திர் சாத்திர சங்கிரகம்[6]

மந்திர சாத்திரத்தையும் ஆயுர்வேத வைத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட நூலாகும்.

8. இராஜ ரஞ்சன வித்யாவிலாச நாடகம்[7]

இது தொடர் உருவகக் கதையையும் அத்துவைதத்தையும் பொருளாகக் கொண்ட தெலுங்கு யக்ஷகான நூலாகும். இந் நூலால் துளசாவின் நாடகத்திறனும் கூத்திசை அனுபவமும் நன்கு விளங்கும்.

9. சிவகாமசுந்தரி பரிணய நாடகம்[8]

இதுவும் ஓர் அரிய இசை நாட்டிய நாடகமாகும். சிவகாமி, தில்லை நடேசன் திருமணத்தைப்பற்றி இம்மன்னர் கற்பனை வளத்துடன் எழுதிய நூலாகும். இந்நாடகம் மகாதேவ பட்டினத்தில் விழாக்களின்போது நடைபெறும் என்ற குறிப்பு இச் சுவடியின் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு இசை, நாடகம், மருத்துவம், சோதிடம் போன்ற பலதுறை நூல்களையும் படைத்துத் தம் நாட்டு மக்களின் நலனுக் காகவே வாழ்ந்த துளசா மன்னர் சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் வரிசையில் சிறப்பிடம் வகிக்கிறார்.

## துளசா மன்னரின் ஓவியம்



துளசா-அழிந்த ஓவியம்

அலங்கரிக்கப்பட்ட யானைத் தந்தத்தால் அமைந்த ஆசனத்தில் இம்மன்னர் அமர்ந்த கோல ஓவியம் ஒன்று திரைச் சீலையில் எழுதப்பட்டு மராத்தியர் கொலுமண்டபத்தில் இருந்தது. இயற்கையின்சீற்றத்திற்கு இவ்வரிய ஓவியமும் இரையாகிவிட்டது. இதன் ஒளிப்படம் தஞ்சை அரண்மனை நூலகத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் துணிகளால் ஆன தலைப்பாகையும், மராத்திய அரச உடையான நீள அங்கியும் மார்பில் பல அணி கலன்களும், கைகளில் காப்பும், காதுகளில் தோடும் அணிந்த வண்ணம் வலக்கரத்தில் குத்து வாளும், இடக்கரத்தில் மலர் போன்ற ஓர் பொருளும் கொண்டு காட்சியளிக்கிறார். மெலிந்த மீசையும், கூரிய மூக்கும், கனிவான கண்களும் ஓவியத்திற்கு மேலும் எழிலூட்டுகின்றன.

## குறிப்புகள்

1. சிவகாமசுந்தரி பரிணய நாடகம் - சரசுவதிமகால் வெளியீடு.
2. சரசுவதி மகால் சுவடி எண் : 11069-72.
3. சரசுவதி மகால் சுவடி எண் : 11323-6
4. சரசுவதி மகால் சுவடி எண் : 11327
5. சரசுவதி மகால் சுவடி எண் : 18750-2
6. சரசுவதி மகால் சுவடி எண் : 17661
7. சரசுவதி மகால் நூலக வெளியீடு.
8. சரசுவதி மகால் சுவடி எண் : டி.633-695.

## பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோசி

(கி. பி 1736-37)

கி. பி. 1728 - 1786 வரை தஞ்சையை ஆட்சிபுரிந்த துக்கோசியின் புதல்வரான பாவாசாகிப் தம் தந்தையின் மறைவிற்குப்பின் அரியணையில் அமர்ந்தார். இவரது ஆட்சி ஓராண்டுக் காலமே நீடித்தது. உடல்நலக் குறைவால் 41-ஆவது வயதிலேயே காலமானார். இவரது ஆட்சியின்போது சந்தா சாகிப் போர் தொடுத்தார். சந்தா சாகிப்பின் படைகள் திருச்சிக்குச் செல்லும் வழியில் தஞ்சையைத் தாக்கத் தொடங்கின. பாவா சாகிப் தீரமுடன் போரிட்டுச் சந்தா சாகிப்பின் படைகளைப் பின்னடையச் செய்தார். தஞ்சையைச் சாந்தா சாகிப்பின் வலையில் விழாமல் காப்பாற்றிய சாதனை இவருடையதாகும்.

தஞ்சை அரண்மனையின் கோட்டைக் காவல் அதிகாரியான கில்லேதார் சையத் என்பான் பாவாசாகிப்பின் காலத்திலேயே பல சூழ்ச்சிகளில் இறங்கினான். திறமையற்ற சிலரை அமைச்சர்களாக நியமித்தது, கருவூலத்தின் நிதி நிலைமைக் குறைபாடு முதலான பல காரணங்கள் இவரது ஆட்சியைப் பாதித்ததோடு, இவரது மனைவியான சுசான்பாயின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தன. சாகிப்பின் மனைவி சுசான்பாய் தஞ்சை அரியணையில் அமர்ந்து ஆட்சி செய்து, எதிரிகளுடன் வாளேந்திப் போரிட்டு வீரமரணம் அடைந்த ஒரே வரலாற்று நாயகி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### ஓவியங்கள்

தஞ்சை அரண்மனை மராத்தியர் கொலுமண்டபத்தில் (தர்பார் ஹால்) இடம் பெற்றிருந்து அழிந்து போன ஓவியங்



பாவாசாகிப்-அழிந்த ஓவியம்

களின் வரிசையில் பாவாசாகிப்பின் ஓவியமும் ஒன்று. இவ்வோவியத்தின் ஒளிப்படம் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. இது பாவாசாகிப் காலத்தில் எழுதப்பட்ட ஓவியத்தின் நகலாகும். இதில் சற்று ஒல்லியான உடலமைப்பும் மெலிந்த மீசையும் கொண்டு, மராத்திய அரச உடை, அணிகலன்களுடன் காட்சி நல்குகிறார்.

தஞ்சைப் பெருங்கோயிலிலுள்ள மல்லப்ப நாயக்கர் மண்டபத்தில் மராத்திய அரசர்கள் அனைவருடைய ஓவியங்களும் பின்னாளில் வந்த சிவாசி மன்னர் காலத்தில் எழுதப்பட்டன. இதில் பாவாசாகிப்பின் ஓவியமும் உள்ளது. ஆனால், அவ்வோவியம் பாவாசாகிப் காலத்து ஓவியத்திலிருந்து தோற்றத்தில் வேறுபட்டுக் காணப்படுகிறது.

## சுசான் பாய்

( கி. பி. 1737-38 )

தஞ்சை மராத்தியர் ஆட்சியிலே அரியணையில் அமர்ந்த ஒரே பெண்ணரசி சுசான் பாய் ஆவார். கி.பி. 1736-37-இல் ஒரே ஆண்டு மட்டும் மன்னராகத் திகழ்ந்த பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோசியின் மனைவியே சுசான் பாய். தமக்கு மகப்பேறு இல்லாததால் தம் கணவரின் மரணத்திற்குப் பின்பு, தாமே அரியணையில் அமர்ந்து வரலாறு படைத்தார்.

சுசான் பாயின் அரசாட்சி மூன்றாண்டுகள் நீடித்ததாகச் சுவடிகள் கூறுகின்றன. சகம் 1690-இல் (கி. பி. 1737-இல்) பாவாசாகிப் இறந்தவுடன் காட்டுராசா எனத் தன்னைக் கூறிக் கொண்ட சாகுசி தானே மராத்திய அரசுக்கு முறையான வாரிசு என அறிவித்து, தஞ்சை அரண்மனையில் கலகம் விளைவித்தான். சித்தோசி, துளசி, துக்காசி, சுப்பாசெட்டி போன்ற உயர் பதவி வகித்த அதிகாரிகள் மறைமுகமாகக் காட்டுராசாவுக்கு ஆதரவு அளித்துச் சுசான் பாய்க்கு எதிராகச் சூழ்ச்சிகள் பல செய்தனர்.

கோட்டையின் இராணுவப் பாதுகாப்புத் தலைவனான கில்லேதார் பதவி வகித்த சையத் இராணுவத்தினரைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு காட்டுராசாவுக்கு உதவி அளிப்பதுபோல, சுசான்பாயைக் கைதுசெய்ய முற்பட்டான். அப்போது சுசான்பாய் தாமே வாளேந்தி சையத்துடன் போரிட்டு வீர மரணம் அடைந்தார். இக்கடுஞ்சமர் தஞ்சைக் கோட்டையினுள் அரண்மனையின் வடக்கு உள் வாசலருகே நடைபெற்றது.

சோழமண்டலத்து வரலாற்றிலேயே ஒரு பெண் அரியணையமர்ந்து அரசாட்சி செய்து, வாளேந்திக் கடுஞ்சமர் புரிந்து, வீர மரணம் அடைந்தார் என்றால், அது சுசான் பாயைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. இவ்வகையில் தனி வரலாறு



சுசான் பாய்—தஞ்சைப் பெருங்கோயில் ஓவியம்

படைத்த சுசான் பாயின் ஓவியம் இன்றும் தஞ்சையிலுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## வண்ண ஓவியம்

தஞ்சாவூர் இராசராசேச்சரம் எனும் பெருங்கோயிலில் சுப்பிரமணிய சுவாமித் திருக்கோயிலுக்கு முன்பாக ஒரு மண்டபம் உள்ளது. இது மல்லப்ப நாயக்கர் பெயரால் கட்டப்பட்டது என்பதனை இத்திருக்கோயிலின் அம்மன் கோயிலில் உள்ள கல்வெட்டொன்று கூறுகிறது. பின்னாளில் இரண்டாம் சரபோசி மன்னர் சுப்பிரமணிய சுவாமி கோயில் முன்மண்டபத்தையும் மல்லப்பன் மண்டபத்தையும் இணைக்கும் வகையில் புதிய படிகளை அமைத்து அதில் கல்வெட்டுகளையும் வெட்டுவித்தார்.

இம்மண்டபத்து உட்புறச் சுவரில் இரண்டு பக்கங்களிலும் சரபோசியின் மகனான சிவாசி மன்னர், மராத்திய மன்னர்கள் அனைவருடைய ஓவியங்களையும் பெயர்க்குறிப்புகளுடன் தீட்டியுள்ளார். இதில் சுசான் பாயின் ஓவியம் மிக எழிலுடன் காணப்படுகிறது. இரண்டு எருதுகள் பூட்டப்பெற்ற சிறு தேரில் இத்தேவி ஒய்யாரமாக அமர்ந்துள்ளார். இரண்டு பெண்கள் சாமரம் வீசுகின்றனர். மராத்திய உடை அணிந்த வீரனொருவன் தேரைச் செலுத்துகிறான். வண்ணமிகு வேலைப்பாடுடைய புடவையும், எழில் கொஞ்சும் அணிகலன்களும் இத்தேவிக்கு மேலும் அழகூட்டுகின்றன.

# பிரதாப சிம்மன்

## ( கி. பி. 1739-1763 )

கி. பி. 1676-இல் துவங்கிய தஞ்சை மராத்திய அரசு வெங்கோசி, சகசி, முதல் சரபோசி, துக்கோசி, பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோசி வரை தொடர்ந்தது. பாவாசாகிப் (கி. பி. 1736-37-இல்) ஒரே ஆண்டு மட்டும் தஞ்சை மன்னராகத் திகழ்ந்தார்.[1] இவரது இறப்புக்குப் பிறகு இவரது மனைவி சுசான் பாய் அரியணையில் அமர்ந்தார். இரண்டு அல்லது மூன்றாண்டுகளே நீடித்த இவரது ஆட்சியில் அரசு உரிமைபெற, பல குழப்பங்கள் ஏற்பட்டன. காட்டுராசா என்பவரின் தலையீடு பல கலவரங்களைத் தோற்றுவித்தது. கில்லேதார் சையத் என்பவரின் தூண்டுதல்களே இதற்கு வித்திட்டன. இறுதியில் தஞ்சை அரண்மனையில் சையத்துடன் நடந்த கடுஞ்சமரில் அரசி சுசான் பாயே போர்க்கோலம் பூண்டு, கடுஞ்சமரிட்டு அரண்மனையின் உட்புற வடக்கு வாயில் அருகே வீர மரணம் அடைந்தார்.[2]

சுசான் பாயின் மரணத்திற்குப் பிறகு ஆட்சி உரிமை பெறப் பலர் முயன்றனர். பாவாசாகிப் (இரண்டாம் ஏகோசி) சுசான் பாய் தம்பதியர்களுக்கு முறையான வாரிசு இல்லாததால், பாவாசாகிப் - அன்னபூர்ணா அம்மையாருக்கு மகனாய்ப் பிறந்த பிரதாப சிம்மனுக்கே ஆதரவு இருந்ததால், அவர் கி.பி. 1739-இல் தஞ்சை அரசராக மணிமுடி சூட்டிக்கொண்டார்.

தஞ்சை மராத்தியர்கள் வரலாற்றில் பிரதாப சிம்மனின் ஆட்சியில்தான் பல போர்க்களங்களைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டது. பிரதாப சிம்மனுக்கு முன்னவர்களின் ஆட்சி, போர்

நிகழ்ச்சிகளின்றி அமைதியாகவும், பின்னவர்கள் ஆட்சி ஆங்கிலேயர்களுக்குப் பணிந்த அரசாகவும் திகழ்ந்தது. இவரது ஆட்சியில் நவாப்புகள், நிசாம்கள், ஆங்கிலேயக் கம்பெனியர், பிரஞ்சுக்காரர்கள் முதலானவர்களின் பலமுனைத் தாக்குதல்கள் மற்றும் தலையீடுகளைச் சமாளிக்க வேண்டிய மிகக் கடுமையான நிலை உருவாயிற்று. தமது தானைத் தலைவரான மானோசி என்பவரின் பெரு வீரத்தாலும், நுண்ணறிவின் திறனாலும் பிரதாப சிம்மன் பல வெற்றிகளை அடைய முடிந்தது.

மானோசியைப் போலவே டபீர் பண்டிதரின் உறுதுணை யும் இம்மன்னர் செவ்வனே செயலாற்ற உதவிற்று. தஞ்சை அரசைத் தவிர சுற்றுப்புறம் முழுவதும் முகலாயர்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஒரு காலக் கட்டத்தில், பிரதாப சிம்மன் தமது நாட்டை முகமதியர்களின் வலையில் சிக்காமல் காக்க வேண்டியதாயிற்று. திருச்சியில் பிரஞ்சுக்காரர்களுடன் சந்தா சாகேப், தஞ்சையில் காட்டுராசாவான சாகுசி மற்றும் கில்லேதார் சையத் முதலியவர்களின் சதி, கிழக்கிந்தியக் கம்பெனியின் உறவுடன் கருநாடக நவாப் மற்றும் நிசாம் போன்ற அனை வரின் எதிர்ப்பு ஆகியவற்றைச் சந்தித்து, சமாளித்து, தஞ்சை அரசை நடத்திய ஒரு பெருவீரர் பிரதாப சிம்மனாவார்.

முகமதியர்களின் தாக்குதல் அதிகமானபோது தஞ்சை மராத்தியர்களின் உறவினரான சாகு மகாராசா மராத்திய மாநிலமான சதாராவிலிருந்து இராகோசி போன்சலே என்பவரின் தலைமையில் பத்தாயிரம் போர் வீரர்களைஅனுப்பிப் பிரதாப சிம்ம னுக்கு உதவினார். பின்னர் பிரதாப சிம்மன் கி. பி. 1740-இல் நடத்திய போரில் தோஸ்த்அலிகான், சந்தா சாகிப் எனும் இருவரும் தோல்வியடைந்து கைதிகளாகச் சதாராவுக்குக்கொண்டு செல்லப்பட்டனர்.[3] இவ்வெற்றி தஞ்சை மராத்தியர்கள் சோழ நாட்டில் நிலைப்பதற்குப் பேருதவியாய் இருந்தது.

காட்டுராசா பிரஞ்சுக்காரர்களின் துணை கொண்டு ஆட்சியைப் பிடிக்கச்செய்த முயற்சிகள் தோல்வியுறவே, கிழக்கிந்தியக் கம்பெனியார் பிரதாப சிம்மனின் ஆளுகையின்கீழ் இருந்த தேவிகோட்டையைக் கைப்பற்ற முயன்றனர். இக் கோட்டையைக் காத்த மானோசியின் திறமையாலும் வலிமையா லும் கிழக்கிந்தியக் கம்பெனியார் எடுத்த முதல் முயற்சி தோல்வி யடைந்தது. இரண்டாம் முயற்சியில் லாரன்சு, கிளைவ் முதலான கம்பெனியின் தளபதிகள் தலைமை தாங்க, தேவிகோட்டை கம்பெனியாரிடம் வீழ்ச்சியடைந்தது. பிரதாப சிம்மன் கம்பெனி

யாரிடம் சமாதானமாகச் செல்ல வேண்டியதாயிற்று. இந்நிகழ்ச்சி தான் இந்திய வரலாற்றிலேயே கிழக்கிந்தியக் கம்பெனியார் வணிகத்தை விடுத்து அரசு கட்டிலில் ஏறக் கால்கோள் விழாவாக அமைந்தது.

தாக்குதல்கள் காரணமாகப் பிரஞ்சுக்காரர்களுக்குக் காரைக் காலையும், டச்சுக்காரர்களுக்கு நாகப்பட்டினத்தையும் பிரதாப சிம்மன் சோழமண்டல மராத்திய ஆட்சியிலிருந்து தானம் அளிக்கும் சூழ்நிலைகள் உருவாயின. முகமதியர்களின் ஆதிக்கத்தைத் தவிர்க்க முற்பட்ட பிரதாப சிம்மன், தஞ்சை அரசு அமைதியாக நடைபெற வேண்டிய நெருக்கடி நிலையால் மேலைநாட்டவர் களின் ஆதிக்கத்திற்கு இடம் கொடுக்க வேண்டியதாயிற்று. இவை இந்திய வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

மிகப்பெரிய வீரராகத் திகழ்ந்த பிரதாப சிம்மன் ஓர் இராம பக்தர். அனும உபாசகர். பல திருக்கோயில்களையும், அற்புதக் கலைக்கூடங்களையும் உருவாக்கியவர். தஞ்சாவூர் புன்னைநல்லூரில் உள்ள இராமன் திருக்கோயில், நீடாமங்கலம் சந்தான இராமசுவாமித் திருக்கோயில், காசி விசுவநாதர் கோயில், தஞ்சை மேலவீதி பிரதாப வீர அனுமன் கோயில், நீடாமங்கலம் யமுனாம்பாள் சத்திரம் முதலானவை அவரது கலைப் படைப்பு களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

யமுனாம்பாள் சத்திரம் பிரதாப சிம்மனுடைய மனைவியின் பெயரால் கட்டப்பட்டதாகும். செங்கற் சிற்பங்களும், சுதைச் சிற்பங்களும் நிறைந்த இம்மண்டபம் தேர் போன்ற தோற்றத்தில் காணப்படுகிறது. மராத்தியர் காலப் புதுமைப் படைப்புகளான செங்கற் சிற்பங்கள் நிறைந்த இந்த மண்டபம் மராத்தியர்களின் கலைவண்ணத்தின் உச்ச நிலையை எடுத்துக்காட்டும் ஒரு கருவூலமாகும்.

சிறந்த இராம பக்தராகத் திகழ்ந்த இம்மன்னர் புறச் சமயங்களின்பாலும் அன்புடன் திகழ்ந்தார். பெரிய தூபிகளைக் கொண்டு திகழும் நாகூர் தர்காவை இவர் கட்டு வித்ததோடு 15 கிராமங்களையும் இத்தர்காவிற்காக அளித்த செய்தியை இத்தர்காவில் உள்ள பிரதாப சிம்மனின் கல்வெட்டு கூறுகிறது.[4] காஞ்சி காமகோடி பீடம் சங்கர மடத்திற்கு ஆர்க் காடு நவாப்பால் இன்னல்கள் விளைந்தபோது சங்கராச்சாரியார் உடையார்பாளையம் சமீனிடம் அடைக்கலம் புகுந்தார். இதனை யறிந்த பிரதாப சிம்மன் தம் அமைச்சரான டபீர் பண்டிதருடன் உடையார்பாளையத்திற்கு நேரில் சென்று சங்கரரை வணங்கி,

அவரைக் கும்பகோணத்தில் பாதுகாப்புடன் சமயப்பணி செய்ய வேண்டி, பெரிய மடமும், பல நிலங்களும் அளித்து உதவிய இம் மன்னவரின் ஆன்மிகப் பணியும் சிறப்புடையது.

## இலக்கியக் கர்த்தா

பிரதாப சிம்மன் யமுனாம்பாள் ஆகியோர்க்கு மகனாய்ப் பிறந்தவரே இரண்டாம் துளசா. பிரதாப சிம்மன் கருநாடக நவாப்பின் சுபேதாரான தோஸ்த்அலிகானைக் கி. பி. 1740-இல் போர்க்களத்தில் வெற்றி கண்டதைப் புகழ்ந்து இராமகிருஷ்ணகவி என்பார் 'பிரதாப சிம்மேந்திர விஜய பிரபந்தம்' எனும் நூலை யாத்துள்ளார். இந்நூல் இன்றும் தஞ்சை அரண்மனை நூலகத்தில் சுவடி வடிவில் உள்ளது. இம்மன்னரே பல மராத்திய இலக்கியங்களைப் படைத்துள்ளார். உமாசம்ஹிதா, இராமதினாச்சார்ய, கிருஷ்ண மஞ்சரி, இந்திராயஜய, ஆனந்த சதுர்தசி வருத்தகதா, மதனசஞ்சீவன, பாகவத, பிரபோதசந்திரோதய சம்க்ஷேப, சுவர்ணமாலிகா முத்ரா ராட்சத நாடக கதா போன்றவை மராத்திய இலக்கியக்கருவூலத்திற்குப் பிரதாப சிம்மன் அளித்த முத்துக்களாகும்.[5]

இவை மட்டுமன்றி, பதினோரு நாடகங்களையும் யாத்து நாடக இலக்கியத்திற்கு மெருகூட்டினார். கிருஷ்ண ஜனன, உஷா கல்யாண, துருவசரித, பாரிஜாதபஹரண. பார்வதி கல்யாண, பிரபோத சந்திரோதய நாடக, மாயாவதி பரிணய, மித்ரவிந்தபரிணய, யயாதிசரித, லெக்ஷ்மண பரிணய ரூபக, சீதா கல்யாண நாடக, - என்ற இவரது நாடகங்கள் இன்றும் தஞ்சை அரண்மனை நூலகத்தில் உள்ளன.

பிரதாப சிம்மன் மட்டுமன்றி இவரது மனைவியருள் ஒருவரான முத்துபழனியின் (தெலுங்கர் குலப்பெண்) இலக்கியப் படைப்புகளும் குறிப்பிடத்தக்கவையாகும். கி. பி. 1739-இலிருந்து 63 வரை 24 ஆண்டுகள் சோழமண்டலத்தில் ஒரு குறிப்பிடத் தக்க வரலாற்று நாயகராய்த் திகழ்ந்த பிரதாப சிம்மன் கி. பி. 1763 டிசம்பர் திங்கள் 12-ஆம் நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். இவருடன் இவரது இரண்டு மனைவியர்கள் தீப்பாய்ந்தனர். இம்மூவரின் நினைவு மண்டபங்களும் மிக எழிலுடன் தஞ்சையை ஒட்டியுள்ள வெண்ணாற்றங்கரையில் உள்ளன.

## பிரதாப சிம்மனின் ஓவியங்கள்

### தஞ்சை நூலகத்தில் . . .

பிரதாப சிம்மன் காலத்தில் தீட்டப்பட்ட மிகப் பெரிய திரைச் சீலை ஓவியம் ஒன்று தஞ்சை அரண்மனை மராத்தியக் கொலு மண்டபத்தில் இடம் பெற்றுத் திகழ்ந்து அண்மைக் காலத்தில் முற்றிலுமாக அழிந்துவிட்டது. இவ்வண்ண ஓவியத்தின் ஒளிப் படம் தஞ்சை அரண்மனை நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.



பிரதாப சிம்மன் - அழிந்த ஓவியம்

முத்துக்களாலும் மணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட தலைப் பாகை, வண்ணப் பூக்களுடன் திகழும் மேலாடை, முத்தாரங்கள், பதக்கங்கள் மார்பில் அணி செய்ய, ஒரு கரத்தில் குத்துவாள் ஏந்தி, திண்டில் சாய்ந்த வண்ணம் பிரதாப சிம்மன் அமர்ந்திருக்க எதிரே அவரது மகன் துளசா கை கட்டிய நிலையில் இடம் பெற்றுள்ளார். அகலமான முகத்திற்கு எடுப்பான மீசை அழகு செய்கின்றது.

இதனை ஒத்த பிறிதோர் வண்ணப் படம் (பலகையில் தீட்டப்பட்ட ஓவியம்) இதே நூலகத்தின் பாதுகாப்பிலுள்ளது. இதில் பிரதாப சிம்மன் மட்டும் வண்ண ஓவியமாக மிளிர்கிறார்.



பிரதாப சிம்மன் - பலகை ஓவியம்

யமுனாம்பாள் சத்திரத்தில் . . .

நீடாமங்கலம் யமுனாம்பாள் சத்திரம் பிரதாப சிம்மனால் கட்டப்பட்டது என்பதைக் கண்டோம். இவ்வெழில் மண்டபத்தில் ஒரு வண்ணப்படம் 2' × 1' அளவில் உள்ளது. இதில் பிரதாப சிம்மன் அவரது மனைவி யமுனாம்பாள், குழந்தை துளசா ஆகிய மூவரது உருவங்களும் உள்ளன. மராத்தியர் கால அரிய படைப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

## பிரதாப சிம்மனின் உருவச் சிலைகள்

### புள்ளிருக்கு வேளூரில்

தற்போது வைத்தீசுவரன் கோயில் என அழைக்கப்படும் புள்ளிருக்கு வேளூர் அருள்மிகு வைத்தியநாதர் திருக்கோயிலில்,



புள்ளிருக்கு வேளூர்



பிரதாப சிம்மன்

சீர்காழி

அம்மன் கோயிலிலிருந்து குளத்திற்குச் செல்லும் வழியில் உள்ள மண்டபம் ஒன்றில் நான்கு தூண்களில் நான்கு உருவச்சிலைகளும் அவற்றிற்கு மேலாகக் கல்வெட்டுப் பொறிப்புகளும் காணப் படுகின்றன. அவற்றில் ஒரு தூணில் அழகிய தலைப்பாகை, எடுப்பான மீசை, நீண்ட மேலாடை, அணிகலன்கள் திகழ வணங்கும் கோலப் படிமம் ஒன்றுள்ளது. அதற்கு மேலாகத் தமிழில் " உ ஸ்ரீ பிறதாப சிங்கு மகாராசா சாயபு " என்ற கல்வெட்டுகள் உள்ளன. இத்திருக்கோயில் திருக்குளத்தைச் சுற்றியுள்ள மண்டபம் மற்றும் சில திருப்பணிகள் தருமபுர மடத்தலைவர்களால் செய்யப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் பிரதாப சிம்மனின் சிலை உள்ள மண்டபத்தில் மல்லார்சி காடேராவ், தருமபுர பண்டார சந்நிதி சிவஞான தேசிகர், முத்துக் குமாரசாமித் தம்பிரான் ஆகியோர் உருவச் சிலைகளும் உள்ளன. பிரதாப சிம்மனின் இவ்வுருவச்சிலை தருமபுர மடத்தலைவர்களால் அமைக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

**சீர்காழியில்**

சீர்காழி பிரமபுரீசுவரர் திருக்கோயிலின் கிழக்கு இராச கோபுரத்தை ஒட்டியுள்ள பெரிய மண்டபத்தின் தூண் ஒன்றில் பிரதாப சிம்மனின் உருவச்சிலை இடம்பெற்றுள்ளது. பிரதாப சிம்மனின் ஆட்சியில் சீர்காழி வட்டம் ஒரு சீமையாகத் திகழ்ந்தது. இங்குப் பிரதாப சிம்மனின் மகன் துளசா காலத்தில் மல்லார்சி காடேராவ் என்பவர் முகாசு நடத்திவந்தார். இவர் காலத்தில் இம் மண்டபம் கட்டுவிக்கப்பட்டதால் இதில் பிரதாப சிம்மன் மற்றும் துளசா ஆகியோருடைய சிலைகள் இடம் பெற்றன.

மராத்திய மன்னர்களுக்கே உரிய நீண்ட அங்கி, எழிலுடன் திகழும் தலைப்பாகை, மார்பில் அணிகலன்கள் திகழ, நின்ற கோலத்தில் மார்பில் உடை வாளைத் தாங்கிய வண்ணம் வணங்கும் திருக்கோலத்திலுள்ளது இவ்வுருவச்சிலை.

**பிரதாப வீர அனுமன்கோயிலில். : .**

தஞ்சாவூர் மேலவீதி மற்றும் வடக்குவீதி கூடும் இடத்தில் மூலை அனுமார் கோயில் என்ற மிகப்பெரிய அனுமன் கோயில் திருச்சுற்றுகள், மண்டபங்கள், இராசகோபுரம் முதலியவற்றுடன் திகழ்கிறது. இவ்வனுமன் கோயிலை ஸ்ரீ பிரதாப வீர அனுமன் கோயிலெனத்தஞ்சை அரண்மனை நூலகத்து மோடி ஆவணங்கள்



பிரதாப சிம்மன் - தஞ்சை மூலை அனுமார் கோயில்

குறிப்பிடுகின்றன. இந்தத் திருக்கோயிலைப் பிரதாப சிம்மன் கட்டுவித்ததாகவும் இவ்வாவணங்களே கூறுகின்றன.

பிரதாப சிம்மன் காலத்தில் சோழநாடும், தஞ்சை நகரும் கடுமையான தாக்குதலைக் காணும் சூழலுக்கு இலக்காயின என்பதைக் கண்டோம். இந்நாள்களில் மக்கள் வீரத்தின் - வெற்றியின் அதி தேவதையான அனுமனை இநய தெய்வமாக வழிபடத் துவங்கினர். அனும வழிபாட்டு நெறியை ஆராய முற்படும்போது சோழர் காலச் சிற்பங்களில் அனுமன் கை கட்டி வாய்பொத்திய ஒரு பணிவுடைய பண்பாளனாகவே சித்திரிக்கப்பட்டுள்ளான். ஆனால் பின்பு விசயநகர அரசு காலத்தில் இந்துமதம் முகமதியர்களின் நசுக்குதலுக்கு ஆளான போது மக்களின் வீரப்போராட்ட மனநிலைக்கேற்ப அவர்களது உணர்வைத் தூண்டும் வண்ணத்தில் விசுவரூப அனுமனாக,

விசய வீர அனுமனாகச் சிற்பங்களில் இடம்பெறச்செய்தனர். இவ்வுருவே மராத்தியர்களின் வீர எழுச்சிக்குரிய வழிபாட்டுத் தேவதையாகத் திகழ்ந்தது.

இதே அடிப்படைக் காரணத்தால்தான் பிரதாப சிம்மன் தஞ்சையில் பிரதாப விசய வீர அனுமன் திருக்கோயிலை எழுப்பினார். இத்திருக்கோயிலின் கருவறைக்கு வடபுறம் இரண்டு மாடங்களைக் குடைந்து அதில் தாமும் தம் மகன் துளசாவும் அனுமனை வணங்கி நிற்கும் சிலைகளை இடம்பெறச் செய்தார்.

இம்மாடங்களுள் ஒன்று கீழ்த்திசையில் உள்ளது. இதில் பலவகை விலங்கினங்கள் உள்ள ஒரு மலையின்மேல் அனுமன் யோகபட்டத்தில் அமர்ந்து மேலிரு கரங்களில் ஆழியும் சங்கும் ஏந்தி, கீழிருகரங்களில் அபய வரத முத்திரைகளுடன் திகழ்கிறார். எழில் மிகுந்த இந்த யோகஅனுமனின் அருகில் பிரதாப சிம்மன் மராத்திய மன்னர்களுக்கே உரிய அரச உடையில் நின்ற வண்ணம் வணங்கும் திருக்கோல உருவம் இடம் பெற்றுள்ளது. பிரதாப சிம்மனின் இவ்வுருவம் சுமார் ஓரடி உயரத்தில் மிகச் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. The Maratha Rajas of Tanjore - K. R. Subramanian.
2. Madras Manuscripts.
3. The Maratha Rajas of Tanjore - K. R. Subramanian.
4. Ins. 898-A & B - Topographical list of Madras Presidency, Vol. 2.
5. சரசுவதி மகால் நூலகச் சுவடிகள் (மராத்திப் பிரிவு) Vol. I-III.

# இரண்டாம் துளசா

(கி. பி. 1763-1787)

கி. பி. 1789-1768-இல் தஞ்சையை மிகச்சிறப்பாக ஆட்சி புரிந்த பிரதாப சிம்மனுக்கும் - யமுனாம்பாள் அம்மையாருக்கும் மகவாய்ப் பிறந்தவரே துளசா. தம் தந்தையின் சிறப்பான ஆட்சிக்கு உறுதுணையாய் நின்றவர். இவருக்குத் தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி இலக்கியங்களில் ஆர்வம் மிகுந்திருந்தது. கஸ்தூரி ரங்கய்யாவின் மாணவரான அல்லூரி குப்பண்ணாவுக்கு 'ஆந்திர காளிதாசன்' என்ற விருதை அளித்துச் சிறப்பித்தார். இக் குப்பண்ணா 'பஞ்சநதஸ்தல புராணம்', இராமாயண யக்ஷ கானங்கள், பாகவத கதைகள், பரம பாகவத சரிதம், இந்துமதி பரிணயம், கர்மவிபாகம் முதலான நூல்களை யாப்பதற்குப் பெரிதும் துணைபுரிந்தார்.

கி. பி. 1771-இல் துளசா இராமநாதபுரம் பாளையக்காரருடன் போரிட ஆயத்தமானார். இதனால் அனுமந்தகுடியையும், சின்னமருது, பெரியமருது ஆகியோரிடமிருந்து திறையையும் பெற்றார். ஆர்க்காட்டு நவாப்பும் கம்பெனியாரும் சேர்ந்து கொண்டு துளசா மன்னருக்குக் கடும் தொல்லைகள் கொடுத்தனர். இதன் முடிவாக ஆர்க்காட்டு நவாப்பிற்கு ஒரு பெரும் தொகை செலுத்துவது என உடன்படிக்கையாயிற்று. கிழக்கிந்தியக் கம்பெனி இதற்கு ஆதரவு காட்டியது. ஆனால் துளசாவால் அத்தொகையைச் செலுத்த முடியவில்லை.

நவாப் முகமதுஅலி, கம்பெனியாரின் உதவியுடன் கி. பி. 1778-இல் தஞ்சையைத் தாக்கி, துளசாவைச் சிறை கொண்டான். மூன்றாண்டுகள் துளசா அரண்மனையிலேயே

சிறையில் இருந்தார். தஞ்சை அரசு நவாப்பின் ஆளுகையில் இருந்தது. கி. பி. 1776-இல் ஆங்கில நிருவாகம் (Court of Directors of England) இதனைத் தள்ளுபடி செய்து, சென்னையில் கவர்னராக இருந்த லார்டு பிகாட் என்பவரைத் தஞ்சைக்கு அனுப்பித் துளசாவை மீண்டும் அரியணையில் அமர்த்தியது. கி. பி. 1787-இல் துளசா இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## துளசா மன்னரின் ஓவியங்கள்



இரண்டாம் துளசா - அழிந்த ஓவியம்

தஞ்சை அரண்மனையிலிருந்து அழிந்துபோன ஓவியங்கள் வரிசையில் பிரதாப சிம்மன் அருகில் துளசா இடம்பெற்றிருந்த ஓவியமும் ஒன்றாகும், இதன் ஒளிப்படம் தற்போது தஞ்சை அரண்மனை நூலகத்திலுள்ளது. இதில் அரியணையில் அமர்ந்துள்ள பிரதாப சிம்மன் முன்பு துளசா இரு கைகளையும் கட்டிய நிலையில் மண்டியிட்டுக் கீழே அமர்ந்துள்ளார். பிரதாப சிம்மனைப் போன்றே எடுப்பான மீசையும் கம்பீரமான உடல் அமைப்பும் இவருக்கு உள்ளன. தலையில் மராத்திய அரசர்களுக்

குரிய தலைப்பாகை, நீண்ட அங்கி, அணிகலன்களுடன் திகழ்கிறார்.



பிரதாப சிம்மனும், இரண்டாம் துளசாவும்

இதேபோன்று பிரதாப சிம்மன் முன்பு அமர்ந்துள்ள துளசா மன்னரின் வண்ண ஓவியம் வேறு ஒன்றும் இந்நூலகத்திலுள்ளது. இதுவரை நமக்குக்கிடைத்துள்ள துளசா மன்னரின் ஓவியங்களுள் இதற்கிணையானது வேறொன்றும் கிடையாது. தங்க ரேக்குகள் இழைக்கப்பட்ட இவ்வோவியம் மிகச்சிறந்த படைப்பாகும்.

## குழந்தைப் பருவ ஓவியம்

இம்மன்னரது தாயார் யமுனாம்பாள் பெயரில் கட்டப்பட்ட நீடாமங்கலம் (யமுனாம்பாள்புரம்) சத்திரத்திலுள்ள ஓர் ஓவியத்தில் பிரதாப சிம்மனும், யமுனாம்பாளும் அமர்ந்திருக்க, அருகே துளசா குழந்தை வடிவில் காட்சி நல்குகிறார். இவ்வோவியமும் மிக அரிய ஒன்றாகும்.

## துளசா மன்னரின் கற்சிலை

தஞ்சை மூலை அனுமார் கோயில் எனும் பிரதாப வீர அனுமன் கோயில் துளசா மன்னரின் தந்தையால் கட்டப்பட்டதாகும். இதன் கருவறையின் வடபுறச் சுவரில் யோக அனுமன் முன்பு பிரதாப சிம்மன் நிற்கும் திருக்கோலச் சிற்பம் உள்ளதை முன்பே கண்டோம். இச்சிற்பம் இடம்பெற்றிருக்கும் மாடத்திற்கு



இரண்டாம் துளசா - தஞ்சை மூலை அனுமார் கோயில்

அருகே பிறிதோர் மாடத்தில், பல விலங்கினங்கள் உள்ள மலை உச்சியில் அனுமன் யோக பட்டத்தோடு நான்கு கரங்களுடன் அமர்ந்துள்ளார். பின்னிருகரங்கள் ஆழியும் சங்கும் ஏந்தியுள்ளன. முன்னிரு கரங்கள் அபயமும் வரதமும் காட்டுகின்றன. இவ்வெழிலுரு முன்பு எடுப்பான மீசை, தலைப்பாகை, மராத்திய அரச உடையுடன் துளசா மன்னர் அனுமனை வணங்கி நிற்கிறார். சுமார் ஓரடி உயரமுடைய இச்சிற்பம் வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

# அமர சிம்மன்

( கி. பி. 1787-1798 )

கி. பி. 1739-63 வரை தஞ்சையை ஆட்சிபுரிந்த பிரதாப சிம்மனுக்கும் சக்குவார் பாய் என்ற அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவரே அமரசிம்மன். பிரதாப சிம்மன் சக்குவார்பாயை மராத்தியர்களின் மணச்சடங்குகளில் ஒன்றான வாள் மணம் (கத்தி கட்டிக் கல்யாணம்) புரிந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. பிரதாப சிம்மனின் மறைவிற்குப் பிறகு துளசா ஆட்சி புரிந்தார். கி. பி. 1787-இல் துளசா மரணமடைந்தார். இவரது மறைவுக்கு முன் சரபோசி என்ற இளைஞனைத் தத்து எடுக்க ஏற்பாடுகள் செய்தனர். துளசாவின் மறைவிற்குப் பின் சரபோசிக்குக் காப்பாளராகத் திகழ்ந்த அமர சிம்மன் கி. பி. 1787-ஆம் ஆண்டு ஏப்ரல் 7-ஆம் நாள் (பிரபாவ வருடம் பங்குனி 28-ஆம் தேதி சனிக்கிழமை) பட்டாபிஷேகம் செய்துகொண்டார்.

கி. பி. 1776-இல் கோவிந்தராவ் காடேராவின் மகளையும், கிருஷ்ணம்மா காடேராவின் மகளையும் திருமணம் புரிந்து கொண்டதாகச் சரசுவதி மகால் நூலக மோடி ஆவணம் குறிப்பிடுகிறது. தாம் முடிசூடுவதற்கு முன் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த கவர்னர் சர். அர்ச் பால்டு கேம்பல் என்பவரைத் தலைமையாகக்கொண்ட குழுவைத் தஞ்சைக்கு வர ஏற்பாடுகள் செய்தார். அர்ச் பால்டு-சரசுவதி மகாலிலிருந்த தர்ம சாத்திரிகளை விசாரணை செய்து, சரபோசியின் சுவீகாரம் செல்லாது என அறிவித்தார். இதனால் அமரசிம்மன் தஞ்சை மன்னராக அங்கீகரிக்கப்பட்டார். அமரசிம்மன் ஆட்சி பீடம் ஏறுவதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் உதவி தேவைப்பட்டதெனினும், தாம் அரியணை அமர்ந்தது முதல் இறுதி வரை அவர்களை எதிர்த்து வீர வரலாறு படைத்தார்.

அமரசிம்மன் (அமர்சிங்) தம் ஆட்சியின் துவக்கக் காலத்திலிருந்தே வெள்ளையர்களைச் சோழ மண்டலத்திலிருந்து வெளியேற்ற, மராத்திய சாம்ராச்சியத்தின் துணையைத் திரட்டுவதில் முனைந்தார். இவருக்குக் கருநாடக நவாப்பாலும், ஹைதர் போன்றவர்களாலும் அடிக்கடி இன்னல்கள் இருந்து வந்தன. கருநாடக நவாப் அடிக்கடி பெருந்தொகையைக் கப்பமாகக் கேட்டுப் பெருந் தொல்லைக்குள்ளாக்கினான். கருநாடக நவாபிற்குக் கிழக்கிந்தியக் கம்பெனி மறைமுகமாக உதவிகள் அளித்து அமர்சிங்குக்குத் தொல்லைகள் தரத்தூண்டியது.

எப்படியும் ஆங்கிலேயர்களைச் சோழ நாட்டைவிட்டுத் துரத்துவது என முடிவெடுத்த அமரசிம்மன் ஒரு பெரும் படையைத் திரட்ட இரகசியத் திட்டங்கள் மேற்கொண்டார். இதன்படி அப்போதைய ஆட்சியாளர்களான நாநாபத்னாவிஸ், மாதவ ராவ், அகல்யாபாய், மகதாசி சிந்தியா, சத்ரபதி சிவாசி, துக்கோசி, ஓல்கார் முதலானவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பியும், தமது தூதுவர்களான நரசிங்கராவ் போன்சுலே, தபோநிதி காசிவாசி குமர குருபர கோசுவாமி ஆகியவர்களை அவர்கள் சந்திக்க ஏற்பாடுகள் செய்தும் மாபெரும் திட்டமொன்றைச் செயல்படுத்த முனைந்தார்.

காசிவாசி குமரகுருபர கோசுவாமி என்று இங்குக் குறிப்பிடப் படுபவர் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபரான இரண்டாம் குமரகுருபரர் ஆவார். ஆங்கிலேயர்களை நாட்டைவிட்டு விரட்ட அமரசிம்மன் மற்ற அரசர்களுடன் தொடர்புகொண்ட கடிதங்களின் நகல்கள் தஞ்சை அரண்மனை சரசுவதி மகால் நூல் நிலைய மோடி ஆவணப் பிரிவில் உள்ளன. இக்கடிதப் போக்கு வரத்தில் கிடைத்த பல கடிதங்களுள் [1] இரண்டை மட்டும் இங்குக் காண்போம்.

1. நரசிங்கராவ் போன்சுலே, விங்கோசிராவ் போன்சுலே என்பவர்களால் மகதாசி சிந்தியாவிற்கு எழுதப்பட்டது.

அமர்சிங் மகாராசா அவர்கள் ஒரு சுருக்கமான கடிதம் எழுதியுள்ளார். 'தாங்கள் தஞ்சைக்கு முன்பு பல சமயங்களில் உதவி செய்துள்ளீர்கள். ஆங்கிலேய உதவியுடன் தாக்கிய தகோபராவ் என்ற எதிரியைத் தால்காவன் என்னுமிடத்தில் தோற்கடித்து அவனைச் சிறைப்பிடித்தபோது நாம் இருவரும் கடைசியாகப் புனாவில் சந்தித்தோம். அதன் விளைவாக ஏற்பட்ட உடன்படிக்கையில் மாதவராவ், சதாசிவராவ் இருவருக்கும்

தஞ்சைக்கு இனிமேல் இடையூறு செய்வதில்லை என்று ஷரா கண்டு எழுதிக்கொடுத்துள்ளனர். ஆனால் தஞ்சை தற்போது மீண்டும் தொல்லைக்கு ஆட்பட்டுள்ளது. தாங்கள் இப்போது அலட்சியமாக இருக்கவேண்டாம். காசிவாசி தபோநிதி குமர குருபர கோசுவாமிகள் தங்களைப் பார்க்க வருகிறார். அவர் எல்லாவற்றையும் கூறுவார். தயவு செய்து இரகசியமாக ஆவன செய்யுங்கள்.

2. சதாரா சத்ரபதி சிவாசி மன்னர் அமர்சிங்குக்கு எழுதியது
(சரவண சுதா, பிரதனம்-ஆண்டு குறிக்கப்படவில்லை)

தங்கள் கடிதத்தில் ஐரோப்பியர்கள் (நிவாத கவசர்கள்) நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதாகவும் அல்லும் பகலும் அவர்களை விரட்டியடிக்கத் தாங்கள் ஆவன செய்து கொண்டிருப்பதாகவும் எழுதப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக திட்டங்கள் பற்றி விவாதிக்க இராஜ தூதர்களை அனுப்புமாறு நான் எழுதியுள்ளேன். இதுவரை ஒருவரும் வரவில்லை. சாஸ்திகர்கள் இருவரும் ஆலோசிக்க புனாவிற்கு வந்து கொண் டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இன்னும் சிறிது நாட்களில் ஆங்கிலேயர்களை விரட்டியடிக்க தீட்டியுள்ள திட்டம் பற்றி நீங்கள் அறிவீர்கள். ராஜஸ்ரீ காண்டிகே ஜுன்ஜார் ராவ் நான் சொல்லி அனுப்பிய விவரங்களைக் கூறுவார்.

இக்கடிதங்கள் அனைத்தும் அமரசிம்மன் ஆங்கிலேயர் களை விரட்ட மேற்கொண்ட இரகசிய நடவடிக்கைகளைப் பற்றி விவரிக்கும் ஆவணங்களாகும். இச் சதி நடவடிக்கைகள் ஆங்கிலேயர்களுக்கு எட்டியதாலும் சுவார்ட்ஸ் பாதிரியார் சரபோசிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளாலும், சரபோசிதான் உண்மையான வாரிசு எனக் கூறி, கம்பெனியார் கி.பி. 1798-இல் அமரசிம்மனது ஆட்சி உரிமையை அகற்றினர்.

அமரசிம்மன் தமது ஆட்சி உரிமை பறிக்கப்பட்ட பின்பு தஞ்சையைவிட்டு வெளியேறி, திருவிடைமருதூர் அரண்மனையில் நிரந்தரமாகத் தங்கினார். கி.பி. 1785-இல் சமர்த்த இராம தாசரின் சீடரான ஸ்ரீ இராம கோசுவாமி என்ற குருவிடம் முறைப் படி உபதேசம் பெற்று ஆன்மிக அறிவை மிகவும் வளர்த்துக் கொண்டார். திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். சிறந்த இசை ஞானம் வாய்க்கப் பெற்ற இவர் மகாலிங்க சுவாமி மீது பஞ்சரத்தினக் கீர்த்தனை ஒன்றை இயற்றினார்.

இவர் ஆட்சியிலிருந்தபோது குடிவார முறையை முதன் முதலில் ஏற்படுத்தி விவசாயிகளின் நன்மதிப்பைப் பெற்றார். பரமக்குடியிலிருந்து ஆயிரம் சௌராட்டிரர்களைச் சோழ நாட்டிற்கு அழைத்து வந்து அவர்களைத் திருபுவனத்தில் குடியேறச் செய்தார், சரிகை மற்றும் பட்டுநூல் தறி வேலையில் ஈடுபட்ட அவர்களுக்குப் பல வரிச் சலுகைகளும் 1187½ சக்கரம் உதவிப் பணமும் அளித்து, ஓர் அற்புதக் கலையை நிலைபெறச் செய்தார்.[2] அன்று அமர சிம்மனால் திரிபுவனத்தில் துவங்கப் பட்ட இத்தொழில் இன்று மிகவும் ஏற்றம் பெற்றுத் திகழ்கிறது. கி. பி. 1786-இல் பட்டுக்கோட்டைக்கு அருகில் சுலக்ஷனாம்பா புரம் எனும் ஊரில் சத்திரம் மற்றும் அந்தணர் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார். பல புலவர்களை ஆதரித்தார். சேஷகவி என்ற புலவர் இவ்வரிசையில் குறிப்பிடத் தக்கவராவார்.

கி. பி. 1802-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள் திருவிடைமருதூரில் இவ்வுலக வாழ்வை நீத்த அமர சிம்மனின் சாதனைகளும், முயற்சிகளும் சோழ மண்டலத்து வரலாற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். சிறந்ததொரு வரலாறு படைத்த அமரசிம்மனின் வண்ண ஓவியங்கள் பல கிடைத்துள்ளன.

தஞ்சை நூலகத்தில் . . .

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் சுமார் $1\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$ அளவில் ஒரு வண்ண ஓவியம் உள்ளது. இதில் அமரசிம்மன் திண்டின்மேல் சாய்ந்த வண்ணம் ஓர் ஆசனத்தில் அமர்ந்துள்ளார். தலையில் தலைப்பாகை, மெலிந்த மீசை, காதில் வளையம், நெற்றியில் பொட்டு, மராத்திய நீள அரச உடை, பூ வேலைப்பாடமைந்த மேல் ஆடை (கோட் போன்றது) திகழ ஒரு கரத்தில் ரோசா மலர் ஏந்தி எதிரே நிற்கும் வெங்கண்ணய்யா என்பவருடன் உரையாடுவது போன்று காணப்படுகிறார். தரையில் வேலைப்பாடமைந்த கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது.

வெங்கண்ணய்யா தலையில் தலைப்பாகை, எடுப்பான மீசை, நெற்றியில் நாமம், பஞ்சகச்ச வேட்டி, முழுக்கையுடன் உள்ள மேலாடை, இடுப்பில் சுற்றப்பட்ட துண்டு ஆகிய கோலத்துடன் இரு கைகளையும் கட்டிக்கொண்டு நிற்கிறார். மன்னருக்கு மேலாக 'அமரசிங்' என்றும், எதிரே நிற்பவருக்கு மேலாக 'வெங்கண்ணய்யா' என்றும் நாகரி எழுத்துகளில் எழுதப் பட்டுள்ளன.



அமரசிம்மன் - தஞ்சை நூலக ஓவியம்



அமரசிம்மன் - அழிந்த ஓவியம்

இதே நூலகத்திலுள்ள பிறிதோர் படத்தில் அமர சிம்மன் தர்பாரில் கொலுவீற்றிருக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. மன்னர் குடும்பத்திலுள்ள ஓர் ஓவியத்தில் அமர சிம்மன் தன் பரிவாரங்கள் சூழ குதிரைமேல் பவனி வரும் காட்சி இடம் பெற்றுள்ளது.

## குறிப்புகள்

1. அமர சிம்மனும் – காசிமடமும், கட்டுரை – எஸ். கோபாலன், தமிழ்ப் பல்கலைக்கழக மோடி கருத்தரங்கு.
2. மோடி ஆவணப் பிரிவு-சரசுவதி மகால் நூலகம்.

# இரண்டாம் சரபோசி

## (கி. பி. 1798-1833)

இரண்டாம் துளசா மன்னரின் மறைவிற்குப்பின் அமர சிம்மனை ஆதரித்து ஒரு பிரிவினரும் எதிர்த்து ஒரு பிரிவினரும் செயல்பட்டனர். அப்போது இதனை ஏற்றதொரு சந்தர்ப்ப மாகக் கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியார் செயல்படத் துவங்கினர். சுவார்ட்ஸ் பாதிரியாரின் பராமரிப்பில் வளர்ந்த சரபோசியைக் கம்பெனியார் அமர சிம்மனுக்குப் பதிலாக நியமித் தனர். கி. பி. 1798-இல் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தயவால் முடிசூட்டப்பட்ட சரபோசியின் தனியாட்சி ஓராண்டு மட்டுமே நீடித்தது. பின்னர் கம்பெனியார், சரபோசியின் ஆட்சியில் குறைகளெனக் கூறி அவரது நாடாளும் உரிமையைப் பறித்து, அதற்குப் பதிலாக ஓய்வூதியம் வழங்கினர். ' இதன்படி கம்பெனி யாரிடமிருந்து 1 இலட்சம் பகோடா ஓய்வூதியத்தையும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்கையும் பெற்றார்.[1] மன்னர் என்ற பெயர் இருந்ததேயன்றி நாடாளும் உரிமை அனைத்தையும் கம்பெனி யாரே கவனித்தனர். அரசு நிருவாகச் சுமையில்லாததால் கவின் கலைகளை வளர்ப்பதிலும், தலைசிறந்த நூலகம் ஒன்றைப் பேணிக் காப்பதிலும் தம் வாழ்நாளை அர்ப்பணித்தார். யமுனாம்பாபாயி, அகில்யாபாயி என்ற இரு மனைவியரை மணந் தார். கி. பி. 1832 மார்ச்சு 7-ஆம் நாள் (கர வருஷம் பால்குண சுத்தபஞ்சமி) இவ்வுலக வாழ்வை நீத்தார்.[2]

தஞ்சை மராத்திய அரசர்களில் முத்தமிழுக்கும் அருந்தொண்டு ஆற்றியவர்களில் இரண்டாம் சரபோசி குறிப்பிடத்தக்கவர். இவர் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளில் சிறந்திருந்ததோடு ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன் ஆகிய மொழி

களிலும் வல்லுநராயிருந்தார். வைத்தியத்தில் ஈடுபாடு கொண்டு சரபேந்திரர் வைத்திய முறைகள் என்ற பெயரில் 18 தொகுதிகளைத் தொகுத்துள்ளார். இவர் பல கல்வி நிலையங்களை நிறுவியதோடு, தஞ்சைப் பெருங்கோயிலில் பல திருப்பணிகளையும் செய்து, தஞ்சை மராத்திய அரச வம்சாவளியை அக்கோயிற் கல்வெட்டில் பொறித்தும் வைத்துள்ளார். அது போன்சுலே வம்ச சரித்திரம் என்று அழைக்கப்படும். இவர் செய்த திருப்பணிகளில் குறிப்பிடத்தக்கவை பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றிலுள்ள கணேசர் ஆலயத்தினைத் திருப்பணி செய்து புதிய சிலை ஒன்றை எழுந்தருளச்செய்ததும், சுப்பிரமணியர் கோயில் திருப்பணி செய்ததும், பெரியநாயகி அம்மன் கோயிலின் அர்த்த மண்டபத்துக்குத் தளவரிசை அமைத்ததும் ஆகும். (கி.பி. 1800-1808). சரபோசியின் கட்டிடப் பணிகளில், ஒரத்தநாட்டிலுள்ள முக்தாம்பாள் சத்திரமும், சரபேந்திர ராச பட்டினத்திலுள்ள மனோரா என அழைக்கப்படும் கட்டிடமும் குறிப்பிடத்தக்கவை.

பல அருங்கவிஞர்கள் இவரது அவையை அலங்கரித்தனர். இவர் தன்வந்தரி மகால் என்ற நிறுவனத்தை உருவாக்கி நாட்டிலுள்ள சிறந்த வைத்தியர்களை அழைத்து வைத்திய முறையைப் பாடல்களாகத் தொகுத்துள்ளார். சிவக்கொழுந்து தேசிகர், காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர், சுப்பராயக் கவிராயர் முதலானோர் இவர் அவையைச் சிறப்பித்தனர். மெலட்டூர் பாகவதமேளா மரபிற் சிறந்த வெங்கட்டராம சாத்திரியாரும் உலகு புகழ் கருநாடக சங்கீத மேதை தியாகராச சுவாமிகளும் இவரது காலத்தில் வாழ்ந்தவர்களாவர். இவரது அவையில் புகழ்வாய்ந்த நட்டுவனார்கள் பரதநாட்டியத்திற்கு அருந்தொண்டு ஆற்றினர். தஞ்சாவூர் சகோதரர்கள் என்று அழைக்கப்படும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய சகோதரர்கள் இவரது அவையில் நாட்டியப்பணி புரிந்தனர். சரபேந்திர பூபால குறவஞ்சி என்ற நாடகம் இயற்றப்பட்டுத் தஞ்சைப் பெருங்கோயிலில் நாட்டியமாக நடத்தப்பெற்றது.

## நாட்டிய இசைத் தொண்டு

சரபோசி மன்னர் மராத்திய மொழியில் கணேச லீலார்ணவம், கணேச விஜயம், ஸ்ரீ சிவராத்திரி உபாக்கியானம், ஸ்ரீ மீனாட்சி கல்யாணம், மோகினி மகேசுவர பரிணயம், தேவேந்திர குறவஞ்சி, ராதா கிருஷ்ண விலாசம் ஆகிய நாட்டிய நாடகங்களை எழுதியுள்ளார். நாட்டியத்தில் சிறந்த

ஈடுபாடு கொண்டு பல நிருபணங்களை யாத்துள்ளார். 'கோர்வியாசே சாஹித்யாசே ஜினஸ' என்ற அவருடைய மராத்திய நூலில் இந்நிருபணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்நூலில் இப் பாடல்களும் இவற்றின் இசையமைப்புகளும் நாட்டியத்துக்கேற்பச் சொற்கட்டுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பாடல்கள் மராத்திய மொழியில் உள்ளன. ஆனால் தமிழ்க் கருநாடக மரபில் இசையமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிருபணமும் பதினேழு அல்லது பதினெட்டு உருப்படிகளைக் கொண்டது. இந்த நிருபணத்திலுள்ள பதினெட்டு உருப்படிகளும் ஒரே ராகத்தில் ஒரே தாளத்தில் அமைக்கப்பட்டுள்ளமை தனிச் சிறப்பாகும். தமிழ் மரபை மராத்திய மொழியில் உருவாக்கிய பெருமை இம்மன்னருக்கு உண்டு. மராட்டியர் மரபுக்கும் சோழர் மரபுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திச் சிறப்புச் செய்த மன்னர் இவர்.

சரபோசியின் நிருபணங்கள் தோடையமங்களத்தில் தொடங்குகின்றன. 'ஜெயஜெய' அல்லது 'ஸ்துதி' என்ற பெயருடன் இம்மங்களம் தொடங்குகிறது. அடுத்து 'சரணு சரணு' என்ற துதி பாடப்படுகிறது. அலாரிப்பு என்பது 'அலாரு' என்ற மூன்றாவது உருப்படியாகக் கொள்ளப்படுகிறது. நான்காவதான சொல்லுக்கட்டு (ஜதிஸ்வரம்) 'சொல்லு' எனப்படுகிறது. 'சப்தம்' ஐந்தாவதாகவும், 'வர்ணம்' ஆறாவதாகவும், பதம் ஏழாவதாகவும், 'ஸ்வரஜதி' என்பது எட்டாவதாகவும் இதில் இடம்பெறுகின்றன. அபிநயம் ஒன்பதாவதாகவும், தில்லானா பத்தாவதாகவும், அபிநய பதம் பதினொன்றாவதாகவும். ஜக்கினி பன்னிரண்டாவதாகவும், கீதம் பதின்மூன்றாவதாகவும், பிரபந்தம் பதினான்காவதாகவும், த்ரிபுடம் பதினைந்தாவதாகவும், ஸ்லோக வர்ணம் பதினாறாவதாகவும், கௌத்தம் பதினேழாவதாகவும், மங்களம் பதினெட்டாவதாகவும், இவ்வாறு பதினெட்டு உருப்படிகள் கொண்ட புதிய பாணியைப் படைத்தார்.

## அரண்மனை நூலகம்

சரபோசியின் பெரும் ஆர்வத்தாலும் ஊக்கத்தாலும் சரசுவதி பண்டார் எனும் நூலகமும், நவ வித்யா கலாசாலை என்ற அச்சுக்கூடமும் சிறப்பாகச் செயல்பட்டன. இவர் தமது முன்னவர்களான நாயக்க, மராத்திய மன்னர்களின் சுவடி நூல்களை எல்லாம் மேனாட்டுக் காகிதத்தில் படி எடுக்கச் செய்தார். ஓலைச் சுவடிகளையும், காகிதச் சுவடிகளையும்

முறையாகப் பாதுகாத்ததோடு 5,000-இற்கும் மேற்பட்ட மேனாட்டு நூல்களையும் இங்கு இடம்பெறச் செய்தார். ஆங்கிலம் செர்மன், பிரஞ்சு, லத்தீன் போன்ற மேனாட்டு மொழி நூல்களில் இவரது கையொப்பமும், ஆண்டும் குறிக்கப்பட்டுக் காணப்படு கின்றன. இவரது அவைக்களப் புலவர்கள் இயற்றிய நூல்களும், இவரே எழுதிய நூல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

நவ வித்தியா கலாசாலையில் கல்லெழுத்து அச்சுகளைக் கொண்டே பல நூல்களை அச்சிடவும் செய்தார். இவ்வாறு அச்சிடப்பட்ட நூல்கள் இன்றும் இந்நூலகத்திலுள்ளன.

## உன்னத ஓவிய வளர்ச்சி

சரபோசி மன்னர் இயல், இசை, நாட்டியம் முதலான கலை களைப் பேணிக் காத்தது போன்றே ஓவியக் கலையையும் புத்துயிர் பெறச் செய்தார். ஓவியக்கலை வளர்ப்பதற்கு இவர் அருந் தொண்டாற்றினார் என்பதற்குத் தஞ்சைப் பெருங்கோயில் அம்மன் சந்நிதி மண்டபத்து ஓவியக்கூடமும், தஞ்சை நூலகத்து ஓவியப் படைப்புகளும் சான்றுகளாக நிற்கின்றன. பெரிய கோயில் அம்மன் சந்நிதி மண்டபத்தில் காணப்படும் தேவி மகாத் மியத் தொடர் ஓவியங்கள் தமிழில் காட்சி விளக்கங்களுடன் உள் ளன.இதேபோன்று சரசுவதி மகால் நூலகத்திலுள்ள கஜ சாத்திரம், அசுவ சாத்திரம். ரிக் வேதம், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலான சுவடி நூல்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் சரபோசி மன்னர் வளர்த்த ஒப்பரிய அருங்கலையின் முத்திரைகளே யாகும். இவரது காலத்து ஓவியங்களின் வண்ணமும், பாணியும் மேனாட்டு முறைகளைத் தழுவின என்பது ஓவிய ஆய்வாளர் களின் கருத்தாகும்.

முத்தமிழுக்கும் அரும்பணி புரிந்து, ஓவியக் கலைக்கு ஒரு பொற்காலத்தைத் தோற்றுவித்த சரபோசி மன்னரின் திருவுருவம் இன்று நமக்குப் பல்வகைகளிலும் கிடைக்கின்றன. கற் சிற்ப மாக, செப்புப் படிமமாக, சலவைக் கற் சிற்பமாக, திரைச்சீலை ஓவியமாக, மர ஓவியமாக மற்றும் தந்த ஓவியமாகக் காட்சி யளிக்கும் இவரது சிற்பங்களும் ஓவியங்களும் சோழ நாட்டிற்குக் கிடைத்த அரிய கலைப் பொருள்களின் கருவூலமாகும்.

## கற் சிற்பம்

இராமோசி சர்சோராவ் காட்கே எனும் இவரது மைத்துனர் தஞ்சை வெண்ணாற்றங்கரையில் (பள்ளியக்கிரகாரம்) சரபோசி



சரபோசியும் யமுனாம்பாபாயியும்
தளிகேசுவரர் கோயில் - தஞ்சை

மன்னரின் உதவியுடன் தளிகேசுவரர் கோயிலைப் புதுப்பித்தார். அக்கோயிலின் முகமண்டபத்தில் சரபோசி மன்னர் மற்றும் அவரது மனைவி யமுனாம்பாபாயி ஆகிய இருவருடைய கற்சிலைகளையும் இராமோசி எடுப்பித்தார் என்பதனைச் சரசுவதி மகால் நூலக மோடி ஆவணங்களின் துணையால் அறிய முடிகிறது. இராமோசி சர்சேராவ் காட்கே சரபோசி மன்னரின் சகோதரி இலெட்சுபாய் என்பவரை மணந்தார். அவர் சரபோசியின் மைத்துனர் மட்டுமன்றி ' சர்க்கேல் ' என்ற தலைமைச் செயலர் பதவியையும் வகித்தவர்.

மராத்திய அரசர்களுக்குரிய தலைப்பாகை. நீளமான அங்கி, எடுப்பான மீசையுடன் நின்ற நிலையில் தளிகேசுவரரை வணங்கும் கோலத்திலுள்ளது இப்படிமம். அருகேயுள்ள யமுனாம்பாபாயி அம்மையார் அழகிய புடவை அணிந்து வணங்கும் கோலத்திலுள்ளார். சரபோசி மன்னரின் சிலைகள் வரிசையில் தளிகேசுவரர் கோயில் படிமம் சிறப்பிடம் வகிக்கிறது. காரணம், இங்கு மட்டும்தான் சரபோசி மன்னர் தம் மனைவியுடன் காணப்படுகிறார்.

## பித்தளைப் படிமங்கள்

சுமார் 80 செ.மீ. உயரமுடைய இரண்டு பித்தளைப் படிமங்கள் தஞ்சையில் தனியார் ஒருவரிடமிருந்ததைத் தமிழக அரசுத் தொல்லியல் துறையினர் பெற்றுள்ளனர். இதில் ஒன்றில் சரபோசி மன்னர் அமர்ந்த நிலையிலும் பிறிதொன்றில் நின்ற நிலையிலும் உள்ளார்.

அமர்ந்த நிலைப் படிமத்தில் ஒரு காலைக் குத்திட்டும் ஒரு காலைத் தொங்கவிட்டும் வலக் கரம் அவர் வளர்த்த இராசாளிப் பறவையைப் பிடித்துக் கொண்டும், இடக் கரம் குத்திட்ட காலின் மேலும் உள்ளன. தலையில் மராத்திய பாணித் தலைப்பாகையும், மார்பில் அணிகலன்களும் உள்ளன. காலணி மொகலாயப் பாணியில் திகழ்கிறது.

இதேபோன்ற ஆடை அலங்காரங்களுடனும் அபய கரத்துடனும் காட்சி நல்குகிறது நின்றநிலைப் படிமம்.

## சலவைக் கற் படிமம்

இதுவரை சரபோசி மன்னருக்காக எடுக்கப்பட்ட படிமங்கள் வரிசையில் தஞ்சை அரண்மனைக் கலைக்கூடத்திலுள்ள



சரபோசி - சலவைக் கற்படிமம
தஞ்சைக் கலைக்கூடம்

சலவைக்கற் சிற்பம் போன்ற உயரிய, ஈடு இணையற்ற சிற்பம் ஒன்றைக் காண முடியாது.

மூன்றடி உயரமுடைய மேடையின் மீது சரபோசி மன்னர் நின்ற வண்ணம் கூப்பிய கரங்களுடன் காட்சி நல்குகிறார். தலையில் தனியாக எடுக்கக்கூடிய தலைப்பாகை, இடுப்பில் உடைவாள், மராத்திய அரச உடை, கழுத்தில் முத்து வடங்களுடன் திகழும் இச்சிற்பத்தைக் காணும்போது சரபோசி மன்னரே உயிருடன் நேரில் நிற்பது போன்ற உணர்வே எழும்.

உலகப் புகழ்பெற்ற இச்சிற்பத்தைச் செதுக்கியவர் இத்தாலி நாட்டுச் சிற்பியான ஜான் ப்ளாக்சுமேன், ஆர். ஏ (1765-1826) என்பவராவார். இச் சலவைக்கற் சிற்பத்தைச் சிவாசியின் சிலை என்றும், இதனை வடித்தவர் பிரான்சிஸ் லீகாட் சந்ரே (1781 - 1841) என்பார் என்றும் தவறான கருத்துகளைச் சில ஆசிரியர்கள் குறித்துள்ளனர்[3]

சிவகங்கைத் தோட்டம் சுவார்ட்சு தேவாலயத்தில் உள்ள சுவார்ட்சு மரணப் படுக்கைக் காட்சியான சலவைக்கற் சிற்பத்தைச் செதுக்க, ஜான் ப்ளாக்சுமேன் என்பவரைக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் உதவியுடன் சரபோசி மன்னர் நியமித்தது, அதற்கான கடிதக் கோப்புகள் உள்ளது போன்ற பல சான்றுகளுடன்[4] நோக்கும் போது அரண்மனையிலுள்ள சலவைக் கற் சிற்பத்தையும் ப்ளாக்சுமேன் செய்திருக்கமுடியும் எனலாம்.



இரண்டாம் சரபோசி
இளமைக்கோலம்

சோழமண்டலத்தில் உள்ள மன்னர்களின் உருவச்சிலைகள் வரிசையில் சலவைக்கற் சிற்பமாகக் கிடைக்கும் ஒரே சிற்பம் சரபோசி மன்னருடையதுதான். மேலும் இதன் எழிலும், சிற்பச் செழுமையும் ஏட்டில் வடிக்க இயலாத ஒன்று.

## வண்ண ஓவியங்கள்

சரபோசி மன்னருடைய ஓவியங்களுள் சிறப்பிடம் வகிப்பது



சரபோசி - சரசுவதி மகால் ஓவியம்



சரபோசியின் பித்தளைப் படிமங்கள்

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள ஓவியமாகும். 7' X 5' அளவு துணியின்மேல் தீட்டப்பட்டுள்ள இவ்வோவியத்தில் சரபோசி மன்னர் அமர்ந்திருக்க, எதிரே சிவாசி இளவரசர் நின்று கொண்டு இருக்கிறார். இவ்வோவியம் சரபோசி மன்னரின் முதுமைப் பருவத்தில் தீட்டப்பட்டதாகும். இவரது இளமைப் பருவ ஓவியங்களில் மெலிந்த மீசையுடனும், முதுமைக் காலத்தில் மிகப்பெரிய எடுப்பான மீசையுடனும் திகழ்கிறார். இவர் கால மராத்திய அரச உடையில் பல வேலைப்பாடுகள் உள்ளதும், பலவிதமான முத்தாரங்களை இம்மன்னர் அணிந்திருப்பதும் இவ்வோவியத்தின் சிறப்பு அம்சங்களாகக் காணப்படுகின்றன.

இதே நூலகத்திலுள்ள கஜ சாஸ்திரம் எனும் வண்ண நூலொன்றில் இவரது ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அரண்மனைக் கொலுமண்டபத்தில் வீற்றிருப்பதுபோன்ற இவ்வோவியம் மிகச் சிறப்பான ஒன்று. தஞ்சை மன்னர் குடும்பங்களில் உள்ள இவரது ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை. இளவரசர் இராசாராம் சாகேப் அவர்கள் இல்லத்தில் உள்ள ஓர் ஓவியத்தில் அரச உடையின்றி சாதாரண உடையில் சரபோசி காணப்படுகிறார். இவை மட்டுமன்றி மரப்பலகை, தந்தம், மைக்கா போன்றவற்றிலும் இவரது உருவங்கள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுக் காணப்படுகின்றன.

## குறிப்புகள்


1. The Maratha Rajas of Tanjore- K. R. Subramanian Page 72.
2. மோடி ஆவணங்கள், சரசுவதி மகால் நூலகம், தஞ்சை, Vol. VIII. (தமிழாக்கம்).
3. Illustrated guide to the South Indian Railway Published in the year 1918.
4. 1. Portrait Sculpture in South India by T. G. Aravamudan.
   2. Indian Architecture-By M. A. Ananthalvar.
   3. South Indian Bronzes by O. C. Gangoly.
   4. South Indian Portrait Sculpture by O. C. Gangoly.
   5. James Fergusson-History of Indian & Eastern Architecture, Page 343-345.
   6. John Flaxman R. A. By Royal Accademy of Arts.

## அம்முனு அம்மணி-பாவை விளக்கு

கி. பி. 1787 - 1798 வரை தஞ்சை அரண்மனையில் மன்னராகத் திகழ்ந்த அமர சிம்மனைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் நீக்கிவிட்டு, சரபோசி என்பவரை அரியணையில் அமர்த்தினர். அமர சிம்மன், தஞ்சை அரசு கட்டிலை இழந்தவுடன் திருவிடைமருதூர் அரண்மனையில் தங்கி அப்பகுதியின் தலைவராக ஆளத் தொடங்கினார். இவ்வமர சிம்மனின் புதல்வர் பிரதாப சிம்மன் என்பாவராவார்.

பிரதாப சிம்மன் மீது அவரது அம்மான் பெண் அம்முனு அம்மணி என்பாள் காதல் கொண்டாள். இவள் தன் காதல் நிறைவேறத் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமிக்கு இலட்சத் தீபம் ஏற்றுவதாக வேண்டிக்கொண்டாள். அவளது காதலும் நிறைவேறி, பிரதாப சிம்மன் அம்முனு அம்மணியை மனைவியாகக் கரம் பிடித்தார். இதனால் மனம் மகிழ்ந்த இத்தேவி தனது வேண்டுதலை மகாலிங்கப் பெருமான் சந்நிதியில் நிறைவேற்றினாள்.

இலட்சத் தீபம் ஏற்றப்பட்டது. அவற்றுள் ஒரு விளக்காகத் தனது உருவத்தையே பாவை விளக்காக்கித் தனது படிமமே தீபம் ஏந்தும் வண்ணம் செய்தாள்.

### பாவை விளக்கு

120 செ. மீ. உயரமுடைய இப்பாவை விளக்கு அழகிய பீடத்தின் மேல் வடிக்கப்பட்டுள்ளது. நின்ற நிலையில் அம்முனு அம்மணி தன் இரு கரங்களாலும் விளக்கேந்தியுள்ளாள்.



அம்முனு அம்மணி-பாவைவிளக்கு-திருவிடைமருதூர்

தோளில் கிளி ஒன்று உள்ளது. சடை அலங்காரம் மிக அழகாகத் திகழ்கிறது. அனைத்து அணிகலன்களும் உள்ளன. 411 ¾ சேர் எடையுள்ள பித்தளையால் இதனைச் செய்த சிற்பி 'கன்னார அரிய புத்திர பத்தர்' என்பது பீடத்திலுள்ள தமிழ்ப் பொறிப்புகளால் அறியப்படுகிறது.

சிறப்புமிகு இப்பாவை விளக்கின் பீடத்தில் அம்முனு அம்மணியின் காதல் காவியம் தமிழ்ப் பொறிப்புக்களாக இடம் பெற்றுள்ளது

1. சாலி வாகன சகாப்தம் 1775 பிறமாதிச வருசம் ஆனி மாதம்
2. 22 தேதி சோமவாரம் மத்யாற்ஜுனம் ஸ்ரீ மகாலிங்க சுவாமி
3. சன்னிதானத்தில் (ஸ்ரீ) பிறதாப சிம்ம மகாராஜா அவர்களுடைய.
4. அம்மான் பொன் ஒருத்தருக்கொருத்தர் மனசினாலே வரிக்கப்பட்ட

5. பாரியை ஆகிய அம்முனு அம்மணி அவர்கள் லட்ச தீபம் உத்தி
6. யாபணம் பன்னினத்துக்காக தன்னுடைய சுவருபமாகிய தீபம் பிறதிமா.
7. ஸ்தாபன தற்மத்தை நிரந்தரமாயி நடப்பிவித்துக் கொண்டு வருகிறவர்கள்
8. சிவதறும பலத்தை அடைய்வார்கள் நிருத்து கண்ட சேர் 411

வார்ப்பு வேலை கன்னார அரியபுத்ர பத்தர் என்று எழுதப்பட்டுள்ளது.

காலக் குறிப்பின்படி இதன் காலம் 4—7—1858 ஆகும். ஒரு மன்னரின் மனைவியே தீபம் ஏந்திய பாவை விளக்காக இன்றும் திருவிடைமருதூர்க் கோயிலில் நிற்பது வரலாற்றுச் சிறப்புடைய ஒரு நிகழ்ச்சியாகும்.

## சிவாசி

**(கி. பி. 1833-1855)**

தஞ்சை மராத்திய அரசின் கடைசி மன்னராகத் திகழ்ந்தவர் சிவாசி ராசா ஆவார். இவர் சரபோசி மன்னரின் ஒரே புதல்வர், சரபோசி மன்னரின் மறைவிற்குப் பிறகு தஞ்சை அரண்மனையில் மன்னர் என்ற பெயரில் கி. பி. 1833-இல் அரியணையில் அமர்ந்தார். அரசு நிருவாகம் அனைத்தையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரே நடத்தினர். எனவே, இவரது அரசியல் சாதனைகளாக எதுவும் அமையவில்லை. இவரது முயற்சியால்தான் தஞ்சைக்கும் திருவையாற்றுக்கும் இடையே உள்ள எல்லா ஆறுகளிலும் பாலங்கள் கட்டப்பட்டன. இதற்குச் சான்று கூறும் கல்வெட்டுகளை இன்றும் தஞ்சை வெண்ணாற்றுப் பாலத்தில் காணலாம்.

சொயிராம்பா பாயிசாயேப், உமாம்பா பாயிசாயேப் ஆகிய பட்டத்து மனைவிகளைத் தவிர 20-இற்கும் மேற்பட்ட மனைவியர்களை மணந்தவர் இவர். இவருக்கு ஆண் மகவு இல்லாமல் இரண்டே பெண்கள் பிறந்தனர். அப்பெண்களில் ஒருவர்தான பல திருக்கோயில் பணிகள் புரிந்த காமாட்சி பாயி சாயேப் ஆவார்.

கி. பி. 1855-இல் மறைந்த சிவாசியின் சாதனைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று, தஞ்சைப் பெருங்கோயில் திருச்சுற்று மண்டபத்தில் ஆலவாய்ப் புராணத்தை வண்ண ஓவியங்களாகத் தமிழில் காட்சி விளக்கங்களுடன் இடம்பெறச் செய்ததுதான். தஞ்சை அரண்மனை நூலகத்தைத் தம் தந்தையைப் போன்று போற்றிக் காத்தார்.

## சிவாசியின் வண்ண ஓவியங்கள்

தஞ்சை அரண்மனை மராத்திய தர்பார் மண்டபத்தில் அரியணை இடம்பெறும் கொலு மண்டபத்தின் பின்புறச் சுவரில் சிவாசி மன்னரின் எழிலோவியம் இடம்பெற்றுள்ளது. இரண்டு பக்கங்களிலும் இவரது அமைச்சர்கள் நிற்க அரியணையில் அமர்ந்துள்ளார் சிவாசி மன்னர். மராத்திய மன்னர்களுக்கே உரிய உடையமைப்பு மற்றும் அணிகலன்களுடன் எடுப்பான மீசை, அழகான தாடி இவைகளுடன் அமர்ந்த கோலத்தில் திகழ்கிறார்.



சிவாசி - அழிந்த ஓவியம்

இதே மண்டபத்தில் இடம் பெற்றிருந்த துணி ஓவியம் இயற்கையின் சீற்றத்தால் அண்மைக்காலத்தில்அழிந்துவிட்டது. இதன் ஒளிப்படம் தஞ்சை நூலகத்தில் இன்றும் உள்ளது.

சிவாசி மன்னரின் வழித்தோன்றலான தஞ்சை மராத்திய இளவரசர் இராசாராம் ராசா சாகேப் அவர்களுடைய இல்லத்தில்

உள்ள இராமர் பட்டாபிடேக ஓவியம் குறிப்பிடத்தக்க ஒன்று. இதில் இராமபிரான் எடுப்பான மீசையுடன் திகழ்கிறார். இப்பட்டாபிடேகக் காட்சியின் ஒரு பகுதியில் சிவாசி மன்னர் நின்ற வண்ணம் இராமனை வழிபடும் காட்சியும் இடம் பெற்றுள்ளது.

சிவாசியின் குழந்தைப் பருவத்திலிருந்து முதுமை வரை உள்ள பல நிலை ஓவியங்கள் தஞ்சை மன்னர் குடும்பங்களில் உள்ளன. தஞ்சைப் பெருங்கோயிலில் உள்ள இவரது ஓவியமும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வரலாறு படைத்த மொழி பெயர்ப்பாளர்கள்

இதுவரை நாம் கண்ட வரலாற்று நாயகர்களின் வரிசையில் இங்கு நாம் காணப்போவது ஒரு புதிய கோணப் பார்வையே. இவர்கள் மன்னர்களோ, தானைத் தலைவர்களோ அல்லர். சோழநாடு மேனாடுகளுடன் கொண்டிருந்த வணிகம் மற்றும் நட்புறவிற்குப் பாலமாகத் திகழ்ந்து சாதனை புரிந்தவர்கள். இவர்கள் ஆற்றிய பணியோ மொழிபெயர்ப்பு. சோழநாடு இவர்களைத் 'துபாசி' என அழைத்தது. துபாசி என்பது த்விபாஷி என்ற சமஸ்கிருதத் தொடர் மொழியின் திரிபு. கி. பி. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் டென்மார்க் நாட்டு அரசு உயர் அலுவலர்களுக்கும் சோழநாட்டு மன்னர்களுக்கும் இடையே மொழி பெயர்ப்பாளர்களாகப் பணியாற்றி வரலாறு படைத்த துபாசி காலிங்கராயப் பிள்ளை, துபாசி தஞ்சாவூர் குப்பண்ணன் ஆகியோரது உருவச் சிலைகளும் வண்ண ஓவியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. இவர்களது சிற்பம் மற்றும் ஓவியங்களை நாம் காணும் முன்பு டென்மார்க் நாட்டோடு சோழமண்டலம் கொண்டிருந்த நட்புறவையும் சற்று நோக்குவோம்.

## பொன்னேட்டில் தமிழ்க் கடிதம்

கி. பி. 1616-இல் டென்மார்க் நாட்டில் நான்காம் கிறிஸ்டியன் என்ற மன்னர் ஆட்சி புரிந்தபோது டேனிசுக்காரர்கள் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியை நிறுவினர். கி. பி. 1618-இல் ஆகஸ்ட்டு மாதம் டென்மார்க் நாட்டைவிட்டு அவர்களின் முதற் கப்பல் 'ஒரேசண்டு' ரூலெண்ட் கிரேப் என்பவர் தலைமையில் புறப்பட்டது. இக்கப்பல் சோழமண்டலக் கடற்கரைப் பகுதியில் போர்த்துக்கீசியரால் தாக்கப்பட்டு அழிந்தது. உயிர் தப்பிய

மாலுமித் தலைவர் பதின்மூன்று மாலுமிகளோடு தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கரிடம் அடைக்கலம் புகுந்தார். பின்னர் கி. பி. 1618-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஓவ் கீட் ( Ove Gedde ) என்ற டேனிசுக்காரரின் தலைமையில் ஐந்து கப்பல்கள் புறப் பட்டுச் சோழ மண்டலக் கடற்கரையை வந்தடைந்தன. ஓவ் கீட் தஞ்சை மன்னர் இரகுநாதன், அமைச்சர் கோவிந்த தீட்சிதர் ஆகியோரைச் சந்தித்து ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.[1] இதன்படி சோழமண்டலக் கடற்றுறையான தரங்கம்பாடியும் அதனைச்சுற்றியுள்ள ஊர்களும் டென்மார்க் நாட்டவரின் வணிகத் திற்காக அளிக்கப்பெற்றன.

இதனால் சோழமண்டலம் டென்மார்க் நாட்டோடு வணிக உறவை வளர்த்துக் கொண்டது. இரகுநாதன் தம் திறமையால் மேனாட்டவரை நாடு பிடிக்கும் நிலைக்குக் கொண்டு செல்லாமல் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். மேலும், சோழநாடு டென்மார்க் நாட்டோடு தூய்மையான நட்புறவு கொண்டு திகழ்ந்தது என்பதனை இரகு நாதன் டென்மார்க் மன்னன் நான்காம் கிறிஸ்டியனுக்கு எழுதிய பொன்னோலை மெய்ப்பிக்கின்றது. ஓலைச் சுவடியின் வடிவிலே செய்யப்பெற்ற தங்கத் தகட்டில். தமிழில் நட்புறவுக் கடிதம் எழுதப்பெற்று, தஞ்சை மன்னர் தெலுங்கில் தமது கையொப்பம் இட்டுள்ளார்.[2] இந்திய வரலாற்றில் இத்தங்கத் தமிழ்க் கடிதம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தற்போது இப்பொன்னோலை டென்மார்க் நாட்டுத் தலைநகரான கோபன்கேகன் அருங்காட்சி யகத்திலுள்ளது. இரகுநாத நாயக்கர் காலத்தில் தொடங்கிய இந்நட்புறவு தொடர்ந்து மராத்தியர் காலம் வரை நீடித்தது.

இவ்வாறு இரண்டு நாட்டு மன்னர்களுக்கும் இடையே நிகழ்ந்த உறவுகளுக்குத் துபாசி பதவி வகித்த அலுவலர்களே பாலமாகத் திகழ்ந்தனர். இருநூறு ஆண்டுகள் செம்மையாகத் திகழ்ந்த இவ்வணிக நட்புறவிற்காகப் பெரும் பங்காற்றிய துபாசிகளில் இருவரே வரலாற்றில் தனி இடம் பெற்று நிலைத் துள்ளனர்.

## காலிங்கராயப் பிள்ளை

கடற்றுறை ஊரான தரங்கம்பாடியில் டென்மார்க் நாட்டவர் வணிக மையம் துவங்கியவுடன் மொழித் தொடர்புக்காக நியமிக்கப் பெற்ற முதல் துபாசி காலிங்கராயப் பிள்ளை என்பவராவார். இவர் கி. பி. 1620-இல் இப்பதவியைப் பெற்றார் என்பதனைக்

'கப்பல் சாஸ்திரம்' என்ற ஏட்டுச்சுவடி கூறுகிறது.[3] இச்சுவடியின் முதல் ஏட்டில்,

'கப்பல் சாஸ்திரத்தைப் பத்தி யெசமான கஞத்தாரப்படிக்கு தரங்கம்பாடியில் முதன்மையாக 1620 வரு தின மாரக்கா துபாசியான காலிங்கராயப் பிள்ளை வீட்டில் அவாள் வர்க்கத்தார் கையிலிருந்து மனரூசி பண்ணி வெளிப்படுத்தி வாங்கின கப்பலுகள் வைப்பிக்கிற சாஸ்திரத்தை பார்த்து சரியாக திருப்புகிற புஸ்தகம்'— என்று குறிக்கப் பெற்றுள்ளது.

இக்குறிப்பால் காலிங்கராயப் பிள்ளை அவர்கள் சிறந்ததொரு மொழி பெயர்ப்பாளராக இருந்ததோடன்றி அவரது இல்லத்தில் தமிழில் மிக அரிய நூலான கப்பல் சாஸ்திரம் என்றதொரு ஏட்டுச் சுவடி இருந்து, அது அவரது வழித் தோன்றல்களால் பேணிக் காக்கப்பட்டது என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

இரகுநாத நாயக்கர் காலத்தில் துபாசியாகத் திகழ்ந்த இப்புகழாளரின் உருவச்சிலை தற்போது தரங்கம்பாடி அஞ்சல் நிலையத் தெருவிலுள்ள சின்னக்கோயிலில் இடம் பெற்றுள்ளது. கற்படிமமான இதனை இன்றும் இவ்வூரவர் போற்றி வருகின்றனர். நின்ற கோலத்தில் இறைவனை வணங்கும் நிலையில் உள்ளது இப்படிமம்.

### குப்பண்ணன்

தஞ்சையில் அரசோச்சிய இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் தஞ்சை மராத்திய மன்னருக்கும் டேனிசு கவர்னருக்கும் துபாசியாகப் பணியாற்றியவர் குப்பண்ணன் என்பார். இவர் தரங்கம்பாடியில்(கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இறுதியில்) பர்வர்த்திக்காரர் (PROVIDITEER) பதவி வகித்த தண்டாச்சியா பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனச் சில சான்றுகள் அடிப்படையில் திரு எஸ். இராமச்சந்திரன் கருதுகிறார். தஞ்சை அரண்மனை நூலகத்திலுள்ள சரபோசி மன்னர் காலத்துப் பாவார்த்த இராமாயணம் என்ற அச்சுநூல் ஒன்றிலுள்ள மராத்தி மொழிக்குறிப்பால், அந்நூல் குப்பாக்கிய பட்டர் என்பவரது அச்சு எந்திரத்தில் அச்சிடப் பெற்றதாக அறிய முடிகிறது.

சரபோசி மன்னரது அரண்மனையில் 'நவ வித்யா கலா சாலா' என்ற அச்சுக்கூடம் இருந்ததும், அதனைக் குப்பாக்கிய பட் என்பவர் நிருவகித்து வந்ததும் ஆகிய பல குறிப்புகள் சரசுவதி மகால் ஆவணங்களில் உள்ளன. சோழமண்டலத்தில் முதன்

முதலாக அச்சு எந்திரங்களை அறிமுகப்படுத்தியவர்கள் டேனிச நாட்டவர்களே. எனவே, அவர்களுக்கும் மராத்திய அரசுக்கும் பணிபுரிந்த குப்பண்ணன் தஞ்சை அரண்மனையில் அச்சுக் கூடம் நிறுவி இருக்க வாய்ப்புகள் உள்ளன. மராத்திய மொழியில் குறிப்பிடப்பெறும் 'குப்பாக்கியபட்' என்பது குப்பண்ணன் எனத் தமிழில் குறிக்கப் பெற்றிருக்கலாம் எனவே, அச்சுக்கலை அறிமுகத்திற்கும் இவரது பணி உதவியுள்ளது.

## ஓவியங்கள்

துபாசி குப்பண்ணனின் வண்ண ஓவியங்கள் இரண்டு நமக்குக் கிடைத்துள்ளன. தரங்கம்பாடி பர்வர்த்திக்காரர் தண்டாச்சியா பிள்ளையின் வீட்டு அரும் பொருள்கள் அண்மைக் காலத்தில் ஏலத்திற்கு வந்தபோது புதுச்சேரி முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் திருமுடி சேதுராம செட்டியார் அவர்கள் மேற்கூறிய குப்பண்ணன் ஓவியங்கள் இரண்டையும் ஏலத்தில் எடுத்து ஒன்றைச் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை அருங் காட்சியகத்திற்கும், பிறிதொன்றைத் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்திற்கும் நன்கொடையாக வழங்கினார்.



தஞ்சை நூலகத்திலுள்ள குப்பண்ணனின் ஓவியம் டென்மார்க் ஓவியர் ஒருவரால் தீட்டப் பெற்றதாகும். காகிதத்தில் தீட்டப் பெற்றுள்ள இவ்வோவியத்தில் மராத்திய அரண்மனை உடையில் குப்பண்ணன் காட்சி நல்குகிறார். ஒரு கையில் நீண்ட கோல் ஏந்தி வலக்கரம் வயிற்றை ஒட்டி மடித்த நிலையில், எடுப்பான மீசையும் தலைப்பாகையும் எழில் செய்ய, நின்ற வண்ணம் காணப்பெறுகிறார். பின்புறம் அழகு வண்ணத் திரைச்சீலைகள் அணி செய்கின்றன. ஓவியத்தின் இட மூலையில் டேனிசு மொழியில் 1798 அக்டோபர் 8 என்ற நாட்குறிப்பும், குப்பண்ணன் தஞ்சாவூர் என்ற வரிகளும் எழுதப் பெற்றுள்ளன.

சென்னைக் கோட்டை அருங்காட்சியகத்திலுள்ள குப்பண்ணன் ஓவியமும் இதனை ஒத்தே திகழ்கின்றது.

ஆங்கிலேயர்களுக்குப் பச்சையப்ப முதலியாரும், பிரஞ்சுக்காரர்களுக்குப் புதுவை ஆனந்த ரங்கம் பிள்ளையும் எவ்வாறு துபாசிகளாகத் திகழ்ந்து வரலாறு படைத்தார்களோ, அவ்வாறே சோழமண்டல வரலாற்றில் காலிங்கராயப் பிள்ளையும், குப்பண்ணனும் டேனிசு நாட்டு நட்புறவிற்குத் துபாசிகளாகத் திகழ்ந்து வரலாறு படைத்தனர்.

## குறிப்புகள்

1. போர்த்துக்கீசிய மொழியில் எழுதப்பெற்ற உடன்படிக்கை — கோபன்கேகன் அருங்காட்சியகம், — டென்மார்க்.
2. Tarangampadi - Dr. R. Nagasamy, Page 21.
3. கப்பல் சாஸ்திரம் - கீழ்திசைச் சுவடிகள் நூலகம் சென்னை பக்கம் 1.

# இராமோசி சர்சேராவ் காட்கே-
# இலெட்சுபாயி அம்மாள்

தஞ்சை மராட்டிய மன்னராக இரண்டாம் சரபோசி மன்னர் அறிவிக்கப்பட்டு, கி. பி.1798-ஆம் ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் உதவியுடன் ஆட்சிபுரிந்து வந்தார். அப்போது அவருக்குப் பக்கபலமாய் நின்று பணிபுரிந்த உயர் அதிகாரிகளுள் குறிப்பிடத்தக்கவர் இராமோசி சர்சேராவ் காட்கே என்பவராவார். இவர் சர்க்கேல் என்ற உயர் பதவியை வகித்தவர் என்பது தஞ்சை சரசுவதிமகால் நூலக மோடி ஆவணங்களால் அறிய முடிகிறது. இரண்டாம் சரபோசி மன்னர் காலத்துப் பல ஆவணங்களில் சர்க்கேல் இராமோசி சர்சேராவ் காட்கே அவர்களின் கையொப்பம் உள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று. சர்க்கேல் என்ற பதவி தலைமைச் செயலாளர் பதவிக்கு ஒப்பான ஒன்று. மன்னரது வாய்மொழி ஆணைகள் அனைத்திற்கும் அதிகார பூர்வமான கையொப்பமிடும் தகுதி சர்க்கேலுக்கு மட்டும் தான் உண்டு

இராமோசி சர்சேராவ், இரண்டாம் சரபோசி மன்னரின் சர்க்கேல் மட்டுமன்றி, அவருக்கு மைத்துனர் உறவின் முறையினரும் ஆவார். இவர் சரபோசி மன்னரின் தங்கை இலெட்சுபாய் (இலட்சுமிபாய்) இராசமணி அம்மையாரை மணந்தார். காட்கே குடும்பத்தில் பிறந்த இவர் சரபோசி மன்னரின் காசி யாத்திரையின்போது தஞ்சை அரண்மனையின் முழுப் பொறுப்புகளையும் நிருவகித்தார்.

தஞ்சை நகர் தெற்குவீதியில் 'யோகவிலாஸ்' எனும் மாளிகையில் வசித்தார். இவர் தம் வாழ்நாளில் மிகவும் போற்றி:

திருக்கோயில் பள்ளியக்கிரகாரம் தளிகேசுவரர் திருக்கோயிலாகும் இத் திருக்கோயிலின் முழுப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு திறம்படத் திருப்பணிகளும் செய்தார். இத்திருக்கோயிலுக்கு எதிரே உள்ள வெண்ணாற்றங்கரை சந்தியா மண்டபம், மற்றும் அன்ன சத்திரம் முதலிய மராட்டியர்களின் கலைச் சிறப்பினை எடுத்துக்காட்டும் சிறந்த கட்டிடங்களை உருவாக்கியவரும் இவரே. இராமோசி சர்சேராவின் மனைவியின் பெயரில் இவ் ஊர் 'இலெட்சுமி ராசபுரம்' எனப் பெயர்மாற்றம் அடைந்தது.[1]

கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னராகத் திகழ்ந்த சர் தாமஸ் மன்றோ கி.பி. 1826 ஆகஸ்ட் மாதம் 6-ஆம் தேதி தம்முடைய அதிகாரிகளுடன் தஞ்சைக்கு வந்தார். அப்போது அவரை சர்க்கேல் இராமோசி தம் பரிவாரங்களுடன் வெண்ணாற்றங் கரையில் வரவேற்ற நிகழ்ச்சியை ஒரு மோடி ஆவணம் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

இவ்வாவணம் தஞ்சை வரலாற்றில் இராமோசி சர்சேராவின் பங்கைத் திறம்பட உரைக்கின்றது, மராத்தியரின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற இவரின் உருவச்சிலை வெண்ணாற்றங்கரை பள்ளியக்கிரகாரம்(இலெட்சுமி ராசபுரம்) தளிகேசுவரர் திருக்கோயி லின் மகாமண்டபத்தில் உள்ளது. இவரது மனைவி இலெட்சு பாயி அம்மாளின் உருவச்சிலையும் அருகமைந்துள்ளது. இருவரும் இறைவனை வணங்கும் கோலத்திலுள்ளனர். மராத்தியர்களின் நீண்ட உடையலங்காரங்களுடனும் அழகிய பெரிய மீசையுடனும் மிக எடுப்பாக உள்ளது இவ்வுருவச்சிலை. இலெட்சுபாயி அம்மையாரின் உருவச்சிலையும் அழகிய புடவை, கொண்டை அலங்காரங்களுடன் உள்ளது.

இதே திருக்கோயிலின் தென்புறம், மற்றும் கீழ்ப்புற நிலைப் படிகளில் இரண்டு பித்தளைத் தகடுகள் போர்த்தப்பட்டு அதில் வணங்கும் கோலத்தில் இருவர் உருவச்சிலைகளும், தமிழ் மற்றும் மராத்தி மொழிகளில் பொறிப்புகளும், அருகே அழகிய வேலைப்பாடமைந்த தாமரை மலர், அன்னம் போன்ற சிற்ப வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன. இப்பித்தளைத் தகட்டில் சுமார் 1' × 1' உள்ள பகுதியில் தலையில் குடுமி, முறுக்கிய மீசை, நீளமான பூ வேலைப்பாடமைந்த அங்கி, மடிசார் வேட்டியுடன் வணங்கும் கோலத்தில் ஓர் அடியவரின் உருவம் உள்ளது. இவரது அருகில் ஓர் அம்மையார் அழகிய புடவை உடுத்தி அணிகலன்கள் சூடி இறைவனை வணங்கும் கோலத்தி லுள்ள ஒரு சிற்பமும் உள்ளது. இவ்விரண்டு பக்கத் தகடுகளிலும் ஒரே மாதிரியான சிற்ப உருவங்களே உள்ளன.







இராமோசி சர்சேராவ் காட்கேவும் இலெட்சுபாயி அம்மையாரும்
தளிகேசுவரர்த் திருக்கோயில் - தஞ்சை.

## தென்புறக் தகட்டில் உள்ள தமிழ்ப் பொறிப்பு

1. உ சாலி வா (க) ன சகம் 1747 வருசம்
பாற்திவ வருசம் வ சௌதமாபு ராரா
யிராமோசி சுல்தான்சி சற்சே றாவு
சாயிச் சௌவு சாயெப்பு செவுடா தெவதி
மாதோ ஸ்ரீ லெட்சு பாயி அமள் யிவாள்
சையித தற்மம் யிந்த தற்மத்துக்கு
யாறாகிலும் அசிச்சால் காசி கங்கே
கரையில் கோ அத்தியே பிரம அத்தி

2. யே சையித பாவத்தில் போவாள் வசௌ செற்ச யெவ

3. உ யிந்த தற்மத்துக்கு விகாதம்
னினெக்கறவாளுக்கு புத்திர சோகம் ஆகும்
கன் போயிவிடும் மூக்கு போயி விடும்
யிதுக்கு வல்லது பன்னு குறவாளுக்கு
குசாலா யிருப்பால்

4. யிது செருவந்திராளுக்கு தெரிய வேண்டி
உபதாயி யெழுதினது

## இழுக்கு நிலைப்படியில் உள்ள பொறிப்பு

1. யிதுக்கு விகாதம் னினெக்கெறவாளுக்கு
புத்திர சோகம் ஆகும் கன் போயிவிடு(ம்)
மனசிலே விசாதம் னினச்சால் னாக்கு
உதிந்து போயிவிடு(ம்) காது போயிவிடும்
மூக்கு போயிவிடு(ம்) யிதுக்கு னல்லது
பன்னுகுற வாளுக்கு குசாலாயிருப்பால்

2. யது செருவத்தினருக்கு தெரிய வேண்டி
உபதாயி யெழுதினது.

3. (மராத்தி பகுதி)
ஸ்வஸ்தி ஸ்ரீ நிருப சாலீகவாஹன சகம் 1747
பார்வதி நாம சம்வத்சரம் பாஞ்ச கிராம
ஸ்ரீ ராமோஜிசுல்தான்ஜி சர்ஜேராவ் காட்கே
ராவு சௌ. மாதோஸ்ரீ லெட்சுபாயி அமள்
தர்மகேலா தர்மாசா தர்மாச கோபாரி ஆசாகேலி
தாகாசி கங்கேசே காண்டி கோ ஹத்யாச
பிரமஹத்தியாச கர்தா பாபா அசவ

என்றுள்ளது, இந்த இரண்டு பித்தளைத்தகடுகளிலும் உள்ள உருவங்களையும், மகாமண்டபத்தில் கற்படிமமாக உள்ள இரண்டு உருவச்சிலைகளையும், இச் சாசன வரிகளின் துணை கொண்டு சர்க்கேல் இராமோசி சர்சே ராவ் காட்கே மற்றும் அவரது மனைவி லெட்சுபாயி ஆகியவர்களுடையவை என உறுதியாகச் சொல்ல முடிகிறது.

## குறிப்புகள்

1. சரசுவதிமகால் நூலக மோடி மொழிபெயர்ப்பு நூல், Vol.-6
2. மோடி ஆவணம்-சரசுவதிமகால் நூலகம், எண். 851, பண்டில்-5, எண். 51.

## ஞானேசுவரர் எனும் ஞானதேவர்

ஞானதேவர் மராத்திய இலக்கியத்தின் இரண்டாம் இலக்கியக் கர்த்தராவார். இவர் மராத்திய மாநிலத்தில் கி. பி. 1275-இல் பிறந்தார். தமது 15-ஆவது வயதிலேயே சிறந்த நூல்களைப் படைக்கும் திறன் பெற்றார். பகவத் கீதைக்கு மராத்தி மொழியில் முதலில் உரை எழுதியதோடு. அமிர்தானுபவ, அத்துவைத நிருபண, உத்தர கீதா, உத்தர பஞ்சலிசி பத்திரிகா, தர்ம கீதா, நமனம், பஞ்ச முத்ரா, பஞ்சிகரண, புராண சாங்களி, பகவத் கீதா சார, லலிதபான்சஷ்டி, சுகாசஷ்டகடீகா, சுவாத் மசுக என்ற இலக்கியங்கள் மட்டுமன்றி லேகளி என்ற எழுத்திலக்கண நூலும், தீர்த்தாவளி என்ற யாத்திரை நூலும் எழுதினார்.[1]



ஞானதேவர் - பலகை ஓவியம்

'பாவார்த்த தீபிகா' அல்லது 'ஞானேசுவரி' - எனும் பகவத் கீதையின் உரையாக்க நூல் தஞ்சை அரண்மனை நூலகத்தில் உள்ளது.[2] இந்நூலின் முகப்பு ஏட்டில் சிறந்த வண்ண ஓவியப் படைப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் ஞானேசுவரர் சமாதி யடைந்த நிலையில் சித்திரிக்கப்பட்டுக் காணப்படுகிறார். இரு புறமும் இரண்டு தீப விளக்குகள் ஒளிவீச, பத்மாசனத்தில் சின் முத்திரைகளுடனும் கழுத்தில் மாலையுடனும் பூமியின்கீழ் உள்ள சமாதியறையில் உள்ளார். அவருக்கு மேலாக ஒரு மரம் முளைத்து அதன் வேர் ஒன்று ஞானேசுவரரின் உடலின்மேல் செல்கின்றது. இவ்வோவியப் பகுதிக்கு இருபுறமும் இரண்டு அடியவர்கள் உள்ள னர். ஒருவர் தீபாராதனை காட்ட, மற்றவர் பூக்கள் உள்ள தட்டை ஏந்திக்கொண்டு மலர் அர்ச்சனை செய்கிறார். சோழ மண்டலத்தில் இன்று இடம்பெற்றுள்ள இவ்வோவியம் மாரத்திய மாநிலத்தை மிகவும் கவர்ந்த ஓவியமாகும். ஞானேசுவரரின் ஓவியம் இதுவரை ஒன்றுகூட அம் மாநிலத்தில் கிடைக்கவில்லை. எழில்மிகு இவ்வோவியம் மராத்தியர்கள் ஆட்சிக் காலத்தில் தஞ்சை ஓவியர்களால் தீட்டப்பட்டதாகும்.

## குறிப்புகள்

1. History of the Marathi literature, S. G. Tulpulay, Pune Vidya Peed - PUNE 1951.
2. சரசுவதிமகால் மராத்தி மொழிச் சுவடிகள் பிரிவு– சுவடி எண் 46

# சமர்த்த இராமதாசர்

மராத்திய மாநிலத்தில் கோதாவரி ஆற்றின் கரையிலுள்ள ஜாம்ப் எனும் ஊரில் சூர்யாஜி பந்த், இராணுபாயி தம்பதியர் களுக்குச் சகம் 1580 கீலக ஆண்டு சைத்ர சுத்த நவமியன்று இராமதாசர் பிறந்தார். இவரது இயற்பெயர் நாராயணன். இளம் வயதிலிருந்தே துறவை விரும்பிய இவர் பின்னாளில் டாகளி எனும் ஊரில் தவம் மேற்கொண்டு சந்நியாசியானார்.

இவர் கி.பி. 1682-இல் தீர்த்த யாத்திரையைக் காசியிலிருந்து துவங்கி அயோத்தி, துவாரகை, காச்மீரம் வழியாக இமாலயம் அடைந்தார். பின்னர் இமயத்திலிருந்து புறப்பட்டுக் கிழக்குக் கடற்கரை வழியாக இராமேசுவரம், இலங்கை ஆகிய இடங் களுக்குச் சென்றுவிட்டுப் பின்னர் மராத்திய மாநிலம் அடைந்தார். அங்கு அத்துவைத சித்தாந்தங்களைத் தம் சீடர்கள் மூலம் பரப்பினார். அவ்வமயம் மராத்திய மாநிலத்தின் தலைசிறந்த ஞானியாக மதிக்கப்பட்டார்.

கி. பி. 1649-இல் மாவீரன் சிவாசி சமர்த்தரைச் சிங்கன வாடி எனும் ஊரில் சந்தித்துத் தமது ஞான குருவாகவும், அரச குருவாகவும் ஏற்றுக் கொண்டார். சிவாசியின் வேண்டுகோளுக் கிணங்க இவர் 'சஜ்ஜன்கட்' எனும் ஊரில் நிலையாகத் தங்கி ஆன்மிகப் பணி மட்டுமன்றி சிவாசிக்கு அறிவுரை வழங்கும் ஆசான் பணியையும் மேற்கொண்டார்.'

மராத்திய மாநிலமே தெய்வமெனப் போற்றும் இப்பெரிய வருக்கும் சோழமண்டலத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் ஏற் பட்டன. சிவாசியின் தம்பியான வெங்கோசி சோழ மண்டலத்தை ஆளும் உரிமை பெற்ற பின்பு, அவரது வேண்டுகோளுக் கிணங்க சமர்த்த இராமதாசர் தஞ்சைக்கு வருகை புரிந்தார். இங்கு 15 தினங்கள் தங்கிப் பல அறப்பணிகள் புரிந்தார் இதன் பிறகு, தஞ்சை மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டாம் முறையும் வந்து சென்றார்.

இவர் தஞ்சைக்கு வந்தபோது இவரது சீடர்களான அனந்த மௌனி, பிகாசி முதலானவர்களைத் தஞ்சையிலேயே தங்க வைத்து ஆன்மிகப் பணியில் ஈடுபடச் செய்தார். இச்சீடர்களால் தோற்றுவிக்கப்பட்ட மடங்கள் இன்றும் தஞ்சையில் உள்ளன. தஞ்சையின் கலையழகில் மயங்கிய இராமதாசருக்கு, மன்னர் வெங்கோசி இராமபிரானின் செப்புத் திருமேனியை (பட்டாபிஷேகம்) இங்குள்ள சிற்பிகளைக் கொண்டு செய்யச் செய்து மல்லாரிராவ், நிம்பதேவர், கேசவ கோசுவாமி என்பவர்கள் மூலமாக அனுப்பி வைத்தார். இச்சிலைகளையே இராமதாசர் தம் இறுதி மூச்சுள்ளவரை போற்றிப் பணிந்தார்.[1]

## சமர்த்தர் இயற்றிய நூல்கள்

தாசபோதம், ஆத்மராம், மனாசேச்லோக், இராமாயணம் ஆகிய மிகப்பெரிய நூல்களையும் பல துதிப் பாடல்களையும் மராத்தி மொழியில் இயற்றினார்.



சமர்த்த இராமதாசர்

தாசபோதம் எனும் இந்நூல் அத்துவைத மார்க்கத்தை உரைப்பதாயினும், மக்கள் வாழ்க்கை முறையை ஒட்டிய கோட்பாடுகளையுடைய அரும்பெரும் நூலாகும். இது 7750 பாக்களையுடைய ஓர் உன்னத நூலாகும். புகழ் பல பெற்ற இம் மராத்தி மொழி நூலை மாதோபரத்தினாகரர் தமிழில் கூற அதனைக் கோபாலன் என்பவர் நூலாக எழுதியுள்ளார். இந்தத் தமிழ் நூல் சுவடி இன்று தஞ்சை அரண்மனை நூலகத்தில் இடம்பெற்றுள்ளது.[2]

## சமர்த்தரின் வண்ண ஓவியங்கள்

சமர்த்தரின் ஓவியங்கள் பல இன்று தஞ்சையிலுள்ள மடங்கள் மற்றும் மராத்தியர்களின் வீடுகளிலெல்லாம் இடம்பெற்றுள்ளன. அனைத்திலும் சமர்த்தர் தாடி மீசையுடன், கோவணம் கட்டிக்கொண்டு புலித்தோலைத் தோளில் சுமந்த வண்ணம் காட்சி நல்குகிறார். இவ்வகையில் எழுதப்பட்ட அற்புத ஓவியம் ஒன்று தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் உள்ளது.



சத்ரபதி சிவாசியும் சமர்த்த இராமதாசரும் - சுவடி ஓவியம்

மேலும் இதே நூலகத்தில் 'ஆத்மராம்' எனும் சுவடி ஒன்றின்[3] முகப்பேட்டில் சமர்த்த இராமதாசர் ஒருபுறம் சின் முத்திரை காட்டி அமர்ந்திருக்க, எதிரே மண்டியிட்டு வணங்கும் கோலத்தில் சிவாசி மன்னர் திகழ்கிறார். இவ்வண்ண ஓவியம் தஞ்சைக்குக் கிடைத்த ஓர் அரிய கலைப் படைப்பாகும். இவை மட்டுமன்றி இந்நூலகத்தில் பல சுவடிகளில் சமர்த்தரின் வண்ண ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

### குறிப்புகள்

1. சரசுவதிமகால் வெளியீடு எண் 109.
2. சரசுவதிமகால் மராத்திச் சுவடி எண் 153.
3. சரசுவதிமகால் மராத்திச் சுவடி எண் 75.

## முகுந்த ராச சுவாமி

இவர் மராத்திய மாநிலத்தின் முதலாம் இலத்கியக் கர்த்த ராவார். இவர் வாழ்ந்த காலம் சகம் 1162 (கி.பி. 1240) என்பதை இவரது நூலில் குறித்துள்ள காலக்குறிப்பால் அறிய முடிகிறது.

மராத்திய மாநிலத்திலுள்ள அம்பாநகர் எனும் ஊரே இவர் வாழ்ந்த ஊர் என்று 'மராத்தி இலக்கிய வரலாறு' எனும் நூல் கூறுகிறது.

'விவேக சிந்து[1] எனும் நூல் இவர் யாத்த நூல்கள் வரிசையில் முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. இவர் யோக சாத்திரம், வேதாந்தம், அத்துவைதத் தத்துவ நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். 'பஞ்சிகரன்'[1] 'பரமாமிருத'[3] எனும் நூல்களும் மராத்தியம் போற்றும் மாபெரும் படைப்புகளாகும்.



முகுந்த ராச சுவாமி — சுவடி ஓவியம்

'விவேக சிந்து' எனும் இவரது முதல் நூல் தஞ்சை அரண்மனை நூலகத்தில் இடம் பெற்றுள்ளது. காகிதச் சுவடியான இந்நூலின் முகப்பட்டையில் முகுந்த ராச சுவாமி மற்றும் செயந்த பால ராசா என்பவர்களின் வண்ண ஓவியங்கள், அவர்களது பெயர்க் குறிப்புகளுடன் உள்ளன. தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்துப் படைப்பான இவ்வண்ணச் சுவடி அரிய ஒன்றாகும். மராத்தி மாநிலத்தில்கூட முகுந்த ராச சுவாமியின் ஓவியம் இதுவரை கிடைக்கவில்லை.

பத்மாசனமாக அமர்ந்து, திண்டில் சாய்ந்த வண்ணம் கையில் சுவடியேந்தி எதிரே இருக்கும் மன்னருக்கு நூலின் பொருள் உணர்த்தும் கோலத்தில் இவ்வோவியம் உள்ளது. மன்னரும் மண்டியிட்டு அமர்ந்த வண்ணம் இருகரம் கூப்பிப் புலவரைப் போற்றுவதுபோன்று காணப்படுகிறார். இப்புலவரது பல நூல்கள் இன்றும் தஞ்சை அரண்மனையில் உள்ளமை சிறப்பு அமிசமாகும்.

## குறிப்புகள்

1. சரசுவதி மகால் மராத்திச் சுவடி எண் : 858.
2. சரசுவதி மகால் மராத்திச் சுவடி எண் : 191.
3. சரசுவதி மகால் மராத்திச் சுவடி எண் : 206.

## செய ராம சுவாமி
### (கி. பி. 1599-1672)

மராத்திய மாநிலத்தில் வடகாம் எனும் ஊரில் பிறந்தவர் செயராம சுவாமி. இவர் தம்மைச் செயராம கிருட்டிண தாசர் என்று கூறிக்கொண்டார். பிகாசிபந்த் - கிருட்டிணபாயி தம்பதியர் களுக்குக் கி. பி. 1599 - இல் கிருட்டிண ஜெயந்தியன்று பிறந்தார். இவரது இயற்பெயர் தேஷ்பாண்டே என்பதாகும். மராத்திய மன்னர் சிவாசியின் குருவான சமர்த்த இராமதாசரின் சமகாலத்தில் வாழ்ந்தவர்.[1] தாச பஞ்சாயத்தார் என்று சமர்த்தர் தோற்றுவித்த மரபுவழியில் இவரும் ஒருவராவார். மராத்திய மொழியில் பல அரிய நூல்களை யாத்தார்.[2]

இவரது நூல்கள் பல மராத்திய மாநிலத்தில் கிடைக்கப் பெறாமல், தஞ்சையில் தான் கிடைக்கப் பெற்றன. தஞ்சை மராத்திய மன்னர்கள் இவரது நூல்களுக்குப் பெரும் மதிப்பளித்துத் தஞ்சையில் பாதுகாத்தனர். இவ்வாறு தஞ்சை அரண்மனையில் பாதுகாக்கப்பட்ட ஒரு காகிதச் சுவடியில் இவரது வண்ண ஓவியம் இடம்பெற்றுத் திகழ்கிறது. இவர் யாத்த நூல்களாக இன்று தஞ்சைஅரண்மனை நூலகத்திலிருந்து (1) அபராகானுபவ (2) சீதா சுயம்வரம் (3) ஞானபக்த சம்வாதம் (4) ருக்மணி சுயம் வரம் (5) பிரபோத சுதாகர டிகா (6) திரிபஞ்ச ரத்தின மாலிகா ஆகிய நூல்கள் கிடைக்கின்றன.

அபரோக்ஷானுபவ எனும் காகிதச் சுவடியின் முதல் ஏடு அழகிய வண்ண ஓவியங்களால் தீட்டப்பட்டு மிளிர்கிறது.[3] 24 × 12 செ. மீ. அளவுள்ள இச்சுவடியின் இடப் பக்கம் சங்கராச்சாரிய சுவாமிகளின் ஓவியம் இடம் பெற்றுள்ளது. ஐந்தலை அரவின்கீழ் உள்ள சிவலிங்கத்தின் முன்பு சங்கராச்

சாரிய சுவாமிகள் பூசை செய்யும் காட்சி காணப்படுகிறது. இக் காட்சிக்குக் கீழ் நாகரி எழுத்துகளில் 'ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி' என்று எழுதப்பட்டுள்ளது. நடுவில் நூலின் பெயர் நாகரி எழுத்துகளில் உள்ளது. வலப்புறம் நின்ற நிலையில் வணங்கும் கோலத்தில் செயராம சுவாமி காட்சியளிக்கிறார்.



சங்கராச்சாரியார் முன்பு செயராம சுவாமி.

தலையில் தலைப்பாகையும், நீண்ட பஞ்சகச்ச வேட்டியும், தோளில் நீண்ட துண்டும் அணிந்த வண்ணம் சங்கரரையும் சிவ லிங்கத்தையும் வணங்கும் வண்ணக் காட்சிக்குக் கீழ் 'ஜெயராம சுவாமி' என்ற நாகரி எழுத்துகள் காணப்படுகின்றன. இவ் வோவியம் காகிதச் சுவடியில் 1823-ஆம் ஆண்டு சுக்கிலபட்ச சதய நாளில் புசங்காச்சாரியார் என்பவரால் தீட்டப்பட்டது என்ற குறிப்பும், இந்நூலுக்கு மூலச் சுவடியாய்த் திகழ்ந்த ஓலைச் சுவடி தஞ்சை சதாசிவ மொகிதேயின் குமாரர் கேசவ ராவ் மாதவ ராமசாமி மொகிதே என்பவரிடம் இருந்த விவரமும் இந்நூலின் இறுதிப் பகுதியில் கூறப்பட்டுள்ளன.

## குறிப்புகள்

1. History of Marathi Literature & Authors -S. G. Tulplay pune vidya peed PUNE - **1951.**
2. Sathpurusha - Kavi - Kavya susi - G. K. Chandarkar - Printing Agency Budnarpet - PUNE **1915:**
3. சரசுவதிமகால் மராத்திச் சுவடி நூல் எண். டி. **26.**

## மேரு சுவாமி

தஞ்சை மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து பல அரிய மராத்தி நூல்களை யாத்துப் பெரும்புகழ் எய்திய சமயச் சான்றோர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் மேரு சுவாமிகளாவார். கிருஷ்ணா நதிக் கரையிலுள்ள மேருலிங்கம் எனும் ஊரில் பிறந்து, பின்னாளில் யாத்திரையாகப் பல தலங்களை வணங்கிவரும்போது திருவண்ணா மலையில் அனந்தமௌனி எனும் சான்றோரைக் கண்டு அவரது சீடராகி, பின்பு இருவருமே சேர்ந்து தஞ்சைக்கு வந்தனர். முதலாம் துளசா, பாவாசாகேப் (பாவாசாகிப்) என்ற தஞ்சை மராத்திய மன்னர்களின் காலத்தில் மேரு சுவாமி பெரும் புகழாள ரானார்.

இவரது குருநாதரான அனந்தமௌனி தஞ்சையிலும், மேரு சுவாமி மன்னார்குடியிலும் தங்கிச் சமயப் பணியும், இலக்கியப் பணியும் மேற்கொண்டனர். இறுதியில் இருவரும் மன்னார் குடியிலேயே சமாதி அடைந்தனர். மேரு சுவாமிகள் எழுதிய பல அரிய நூல்கள் இன்றும் தஞ்சை அரண்மனை நூலகத்தில் மராத்தி மொழிப் பிரிவில், சுவடிகளாகக் காட்சி நல்குகின்றன.

இவர் யாத்த நூல்கள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்க நூல்களாக ராமசோகளா - பீமோஉபதேச, அவதூத கீதா, சிவானந்தலகிரி, ஆத்ம சாட்சாத்கார. பூரணாம்ருதகர, சோட சகலா, பிரம்மசம விதி, அனந்த வால்மீகி இராமாயணம் முதலானவை திகழ்கின்றன.

தஞ்சை அரண்மனை நூலகத்தில் ராமசோகளா[1] எனும் காவியம் காகிதச் சுவடியாகக் கவின்மிகு வண்ணப் படைப்புகள் கொண்ட முகப்புடன் காட்சி நல்குகிறது. அரிய இவ்வண்ணப் படைப்பில் மேரு சுவாமிகளுடைய ஓவியம் பெயர் பொறிக்கப் பட்டுத் திகழ்கிறது. இதில் வலப்புற ஓரத்தில் நாரதர் வீணை மீட்டுவதும், அடுத்து இராமர் பட்டாபிஷேகக் காட்சியும்.

மத்தியில் நூல் பற்றிய தலைப்பும் உள்ளன. இடப்புறம் சமர்த்த இராமதாசர் கோவணத்துடன் இராமனை வணங்க, அவருக்குப் பின் மேரு சுவாமிகள் குடுமியும் பொட்டும் திகழ, மடிசார் வேட்டியும் நீண்ட சால்வையும் அணிந்து இராமனை வணங்குகிறார். இவரை அடுத்துள்ள பகுதியில் தும்புரு வீணை இசைக்கும் காட்சியும் உள்ளது. சமர்த்தருக்குக் கீழாக 'சமர்த்தர்' என்றும் மேரு சுவாமிகளுக்குக் கீழாக 'மேருசாமி' என்றும் நாகரி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. சமர்த்த இராமதாசர் மேரு சுவாமிகளின் குருவான அனந்தமௌனியின் குருவாவார். தன் குருநாதரின் குருவுக்குப் பின்பு நின்றுகொண்டு இராமனை வணங்கும் இக்காட்சி காணக்கிடைக்காத ஒன்று.

குறிப்பு

1. மராத்திக் காகிதச் சுவடி எண். டி 335.



## ஸ்ரீதர சுவாமி

மராத்திய மாநிலத்தில் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் தலைசிறந்த கவியாகத் திகழ்ந்தார். இவர் எழுதிய நூல்களாக இன்று நமக்குக் கிடைப்பவை இராம விஜயம், வேதாந்த சூர்ய, சிவ லீலாம்ருத, பாண்டவ பிரதாப, ஹரிவிஜய என்பவைகளாகும். இவர் பிரமானந்த யதி, சாவித்திரியம்மையார் என்ற தம்பதிகளுக்கு மகவாய்ப் பிறந்தவர். இவருடைய சமாதி பீமா நதிக்கரையில் உள்ளது.[1]



ஸ்ரீதர சுவாமி - சுவடி ஓவியம்

தஞ்சை அரண்மனைச் சுவடிகள் நூலகத்தில் 'வேதாந்த சூர்ய' எனும் இவருடைய நூல் காகிதச் சுவடியாக இடம் பெற்றுள்ளது.[2] இதன் முதல் ஏடு அழகிய வண்ண ஓவியங்களுடன் மிளிர்கிறது. இதில் ஸ்ரீதர சுவாமிகளின் உருவ ஓவியம் பெயர்க் குறிப்புடன் காணப்படுகிறது. தலையில் அணி செய்யப்பட்ட தலைப்பாகையணிந்து திண்டில் சாய்ந்து அமர்ந்த வண்ணம் காட்சி நல்கும் ஸ்ரீதர சுவாமிகளுக்கு எதிரே பாமா, ருக்மணி சமேதராக நிற்கும் பாண்டுரங்கன் கீழ் இரு கரங்கள் இடுப்பிலும்

மேல் இருகரங்கள் ஆழியும் சங்கும் ஏந்திய நிலையிலும் இடம் பெற்றுள்ளார். இவ்விரு ஓவியப் பகுதிகளுக்கிடையே நூலின் தலைப்புப் போன்ற மராத்திக் குறிப்புகள் நாகரி எழுத்துகளில் உள்ளன.

இவ்வரிய ஓவியம் இடம் பெற்றுள்ள சுவடியின் மற்றப் பகுதிகள் எல்லாம் எழில் கொஞ்சும் வண்ண வண்ணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

குறிப்புகள் :

1. History of Maratta literature & Authors - S. G. Tulpulay Pune Vidya Peed - 1951.

2. தஞ்சை சரசுவதிமகால் நூலக மராத்திப் பிரிவுச் சுவடி எண் : 879.

## இராம பண்டிதர்

இவர் மராத்திய மன்னர்களான முதலாம் துளசா, பாவா சாகிப், பிரதாப சிம்மன் காலத்தில் ( 1728 - 1763 ) வாழ்ந்தவர். மாதவ சுவாமிகள் என்பவருக்கு மகனாய்ப் பிறந்த இக்கவிஞரை மக்கள் 'மாதவ சுதன்' என்றும் 'அத்துவைத கேசரி' என்றும் அழைத்தனர். தஞ்சை மாவட்டம் திருவிந்தளூரில் (மயிலாடுதுறை) வாழ்ந்தவர்.

25-இற்கும் மேற்பட்ட மராத்தி மொழிக் காவியங்களைப் படைத்தவர். சிறந்த சமஸ்கிருதப் புலமையும் பெற்றுத்திகழ்ந்தவர். இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவை இராமாமிருத தரங்க, சிதா தேவசே பல சோபனா, இராம பஞ்ச ரத்ன மாலிகா, கிருஷ்ண பஞ்ச ரத்ன மாலிகா, நாம கல்பதரு, ஆத்ம வித்யா விலாசடிகா, கலிவிடம்பணம், கமலாலய மகாத்மியம், தியாகராஜ மகாத்மியம், விநாயக மகாத்மியம், முசுகுந்தன்கதா தசம ஸ்கந்த பாகவதம் முதலியன ஆகும்.[1]

கமலாலய மகாத்மியம், தியாகேச மகாத்மியம், முசுகுந்தன் கதா எனும் நூல்கள் ஆரூர்த் தியாகேசப்பெருமான் பற்றியும், ஆரூர்த் திருக்கோயில் பற்றியும் விவரிக்கும் அற்புத நூல்களாகும். முசுகுந்தன் பற்றிய கதை மராத்திய மன்னர்களால் மிகவும் போற்றப்பட்ட ஒன்று. பிரதாப சிம்மனை இப்புலவர் முதன் முதலில் சந்திக்கும்போது 'மதாள சோபாக்கியான' எனும் தாம் யாத்த நூலைக் கொடுத்துச் சந்தித்ததாகக் குறிப்புகள் உள்ளன.[2]

### இராம பண்டிதரின் ஓவியம்

தஞ்சாவூர் அரண்மனை நூலகத்தின் மராத்தி மொழிப் பிரிவிலுள்ள 'ஸ்ரீ இராமாமிருத தரங்க[3] எனும் காகிதச் சுவடியின் முகப்பு ஏட்டில் மராத்தியர்களின் வண்ணப் படைப்பு

இடம் பெற்றுள்ளது. அழகிய பூ வேலைகளுக்கிடையில் ஒரு புறம் வில்லேந்திய இராமன், வாள், கேடயம் சூடிய இளவல், மலரேந்திய மிதலைச் செல்வி ஆகியோர் காட்சி நல்குகின்றனர். இக் காட்சிக்குக் கீழாக நாகரி எழுத்துகளில் 'கோதண்ட இராம' என்று எழுதப்பட்டுள்ளது.



இராம பண்டிதர் - சுவடி ஓவியம்

இடையில் நூல் பற்றிய தலைப்பு மற்றக் குறிப்புகள் நாகரி எழுத்துகளில் உள்ளன. இடப்புறம் தலைப்பாகை, இடுப்பி லிருந்து கால்வரை ஆடை, மார்பில் நீண்ட சால்வையைப் போர்த்திய வண்ணம் எதிரே இருக்கும் இராமபிரானை வணங்கும் கோலத்தில் இராம பண்டிதர் நிற்கிறார். இக்காட்சிக்குக் கீழாக நாகரி எழுத்துகளில் 'இராம பண்டித' என எழுதப்பட்டு உள்ளது.

குறிப்புகள் :

1. சரசுவதி மகால் நூலக (தஞ்சாவூர்) மராத்தி மொழிப் பிரிவுச் சுவடி நூல்கள், Vol. I - III.
2. பிரதாப சிம்மன் வரலாறு - கட்டுரை - சரசுவதி மகால் வெளியீடு.
3. சுவடி எண் : 339-சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

## சத்திய சந்தர்

துவைத சித்தாந்தியான மத்துவாச்சாரியார் தோற்றுவித்த மடங்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது உத்திராதி மடமாகும். உத்திராதி மடத்துப் பாரம்பரியத்தில் 26-ஆவது பீடத்தை அலங்கரித்தவர் சத்திய சுந்தராவார். இவரது வாழ்க்கையில், பல அற்புதங்கள் நிகழ்ந்தன. இப்பெருமகனாரின் பெருமைகளைக் கண்டு உலகமே வியந்து போற்றிய காலக்கட்டத்தில் தஞ்சையை மராத்திய மன்னர் அமர சிம்மன் ஆட்சி புரிந்து வந்தார். இவ்வமயம் சென்னைப் பட்டினத்துக்கு வருகை தந்த சத்திய சந்தரைச் சான்றோர்கள் பலர் தஞ்சைக்கு அழைக்க, அவரும் ஏற்றுக்கொண்டு தஞ்சைக்கு விசயம் செய்தார்.

ஞான குருவின் தஞ்சை விசயத்தைச் சிறப்பிக்க இராச கவியான கோனேரியாத்மச எனும் சேஷ கவி (தஞ்சை அரண்மனைக் கவிஞர்களுள் ஒருவர்) சத்திய 'சந்த விஜயம்' என்னும் கவின் மிகு காவியத்தை மராத்தி மொழியில் படைத்தார். இந்நூல் ஒரு சமயக் காப்பியமாக மட்டும் திகழாமல் ஓர் அற்புத வரலாற்று நூலாகவும் பரிணமிக்கிறது.

### சென்னையில் நிகழ்ந்த அற்புதம்

'சத்திய சந்த விஜயம்' எனும் இந்நூல் 10 பகுதிகளாகப் படைக்கப்பட்டுள்ளது. முதல் 5 பகுதிகளிலும் மத்துவரில் தொடங்கி, பல பீடாதிபதிகளின் பெருமைகள் பேசப்படுகின்றன. 6-ஆவது பகுதியிலிருந்து சத்திய சந்தரின் பெருமைகள் விவரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் சென்னைப் பட்டினத்தில் ஓர் அடியவர் வீட்டிற்குச் சத்திய சந்தர் வருகை புரிந்த நிகழ்ச்சி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

'இராமன் இருக்குமிடமெல்லாம் அயோத்தி' என மக்கள் புனிதமாகக் கருதியதால், சத்திய சந்தர் தன்னுடனேயே வைத்துப் பூசை செய்யும் இராமபிரானின் திருவுருவை மக்கள் தங்கள் இல்லங்களில் எழுந்தருளச் செய்து புனிதம் பெற்றனர். இவ்வாறு சென்னைப் பட்டினத்தில் 1792-இல் ஓர் அடியவர் தம் வீட்டில் அயோத்தியர் கோமானுக்கு மகான் சத்தியசந்தரின் உதவியால் பூசைகள் நிகழச் செய்தார். பூசைகளை முடித்த சத்திய சந்தர் அதிதிகளுக்கும் மற்றவர்களுக்கும் 'ஹஸ்தோதகம்' எனும் உப சரணைகளைச் செய்தார். பின்பு, வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை உணவு படைக்க ஏற்பாடுகள் செய்தார்.

மகானின் ஆக்ஞைப்படி சீடர்கள் விருந்து படைத்தபோது சமையலறையில் இருந்த ஒரு மணங்கிற்கும் அதிகமான நெய்ப் பாத்திரம் தவறி விழுந்து அனைத்து நெய்யும் வீணாகிவிட்டது. நெய் இல்லாமல் வருந்தி நின்ற சீடர்களைக் கவனித்த சத்திய சந்தர் ஒரு நபரை அழைத்து, இராமபிரானின் திருமேனி இடம் பெற்றுள்ள பூசை அறையைக் காண்பித்து அங்கிருந்து நெய்ப் பாத்திரம் எடுத்து வரப் பணித்தார். பூசை அறையில் நெய் ஏது? என்ற வினாவுடன் சென்ற நபருக்கு இராமன் திருமேனி முன்பு சிறிய நெய்ப் பாத்திரம் ஒன்று இருப்பது கண்டு ஆச்சரியத்துடன் எடுத்து வந்தார். குருவின் ஆணைப்படி பந்தியிலும் பரிமாறச் செய்தார்.

மிகச்சிறிய பாத்திரத்து நெய் பந்திக்கு எப்படிப் போதும் என்ற கலக்கத்துடனேயே சென்ற சீடருக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக எடுக்க எடுக்க நெய்யின் அளவு குறையவே இல்லை! ஐந்து, ஆறு பந்திகளுக்குப் பரிமாறியும் நெய் குறையாமல் இருந்ததைக்கண்ட அடியவர்கள் மனம் நெகிழ்ந்தனர். இவ்வற்புத நிகழ்ச்சியைக் கவிஞர் தத்ரூபமாகத் தம்முடைய கவிதையில் வடித்துள்ளார்.

## தஞ்சையில் விழாக்கோலம்

சென்னைப் பட்டினத்தைவிட்டுப் புறப்பட்ட சத்திய சந்தர் திருவையாறு சென்று பஞ்சநதீசுவரரான ஐயாறப்பனைக் கண்டு தரிசித்தார். திருவையாறு வந்த செய்தியை அறிந்த மன்னர் அமரசிம்மன் குருவை எதிர்கொண்டழைக்க சந்தியா நதி எனக் குறிப்பிடப்படும் வெண்ணாற்றங்கரைக்குத் தமது பரிவாரத்துடன் சென்றார். நீலமேகனும், மணிக்குன்றனும், சிங்கப்பெருமாளும் ஒருங்கே அருள் வழங்கும் அப்புனித பூமி தெய்வலோகம் போன்று பிரகாசித்தது.

மந்திரிகளும் பிரதானிகளும் புடைசூழ, பட்டத்து யானை துணை வர, தம் கையில் வெள்ளிக் குடத்தைப் பூரண கலசமாக அமர சிம்மன் ஏந்திக்கொண்டு அருளரசரை வரவேற்ற காட்சி அற்புதமான ஒன்றாகும். பின்பு, பட்டத்து யானையின் மேல் அமைக்கப்பட்டிருந்த வெள்ளிரதமாகிய அம்பாரியில் சத்திய சந்தரை அமரச் செய்து அவரருகில் மன்னர் அமர்ந்து கொண்டு, மந்திரி ஒருவர் சாமரம் வீச, பட்டத்து யானை தஞ்சை நகரம் நோக்கிப் புறப்பட்ட கவின்மிகு காட்சியைக் கவிஞர் மிகஅழகாகக் காட்டுகிறார்.

இரவு வேளையில் தஞ்சை நகரம் நோக்கிப் பரிவாரங்களுடன் சென்ற இக்காட்சியைத் தமது நூலில் ஓர் அற்புதமான நேர்முக வருணனையாகக் காட்டியுள்ள பாங்கு கவிஞரின் தனிச் சிறப்பாகும். சத்திய சந்தரின் இவ்விசய நாளாக சாலிவாகன சகாப்தம் 1714 - பரிதாபி ஆண்டு ஆஷாட மாதம் திரயோதசி சுக்கில பட்சம் சோமவாரம் என்று குறிப்பிட்டுள்ளார். இது கி. பி. 1792 - ஆம் ஆண்டு சூலை மாதம் 30-ஆம் நாளாகும்.

தம்முடன் யானைமேல் அமரச் செய்து அழைத்து வந்த அமர சிம்மன் ஞான குருவுக்குச் சோழநாட்டின் பெருமைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல மிக்க மகிழ்வுடன் சென்ற இவர் களின் இரதத்தைப் பார்த்து ‘ இந்திர விமானம் ’ நாணி வெட்கப் பட்டதாக வருணனை செய்யும் கவி நயம் சிறப்பான ஒன்று. கோட்டைக் கீழவாயிலில் காத்து நின்ற காவல் யானை. மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தால் மிரண்டு ஒருவரையும் கோட்டைக்குள் செல்ல விடாமல் தடுத்து நின்றதும், பின்னர் சத்திய சந்தரைக் கண்டவுடன் ஒதுங்கி, மண்டியிட்டு வழி





சத்திய சந்தர்

விட்டதும் தஞ்சை நகரின் நான்கு வீதிகளிலும் பவனி வந்த காட்சியும் மிக அருமையாக விளக்கப்பட்டுள்ளன.

முதல்நாள் இரவு மன்னரின் அமைச்சரான சிவராவ் (சிவராயன்) என்பவரது இல்லத்தில் சத்திய சந்தர் தங்கியிருந்த நிகழ்ச்சிகளும், பின்னர் ஐந்து தினங்கள் வெண்ணாற்றங்கரையில் குருதேவர் நிகழ்த்திய வித்வத் சதஸ் நிகழ்ச்சிகளும் மன்னரின் வேண்டுகோளின்படி அரண்மனைக் 'கிருஷ்ண மந்திர்' எனும் இடத்தில் செய்த இராம பூசைகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளன.

வரலாற்றில் அழியா இடம்பெறும் இச்சுவடி நூலினைச் சரபோசி மன்னரின் புலவரொருவர் காகிதச் சுவடியில் படி எழுதி, அந்நூலின் முகப்பு அட்டையில் இராமபிரான், இலக்குவன், மிதிலைச்செல்வி மற்றும் மாருதி இவர்களைச் சத்திய சந்தர் பூசை செய்வது போன்ற ஓவியப் படைப்பை இடம்பெறச் செய்துள்ளார். இவ்வரிய ஓவியம் இன்றும் தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் உள்ளது.[2]

## குறிப்புகள் :

1. சத்தியசந்த விஜயம் - மராத்திச் சுவடி நூல் - சரசுவதிமகால், தஞ்சை, வெளியீட்டு எண் 24.
2. சத்தியசந்த விஜயம் - மராத்திக் காகிதச் சுவடி எண் 1593 சரசுவதிமகால் நூலகம், தஞ்சை.

## மராத்தியர் கால மடாதிபதிகள்

சோழ மண்டலத்தில் சோழப் பெருமன்னர்கள் காலத்திலிருந்தே சமயப் பணி மேற்கொண்ட மடாதிபதிகள் பலர் இருந்தனர். இவர்களுடைய மடங்களைக் குகைகள் எனக் குறிப்பிடுவர். கடாரம் கொண்ட இராசேந்திரன் காலத்தில் லகுளீச பண்டிதர் எவ்வாறு போற்றி மதிக்கப்பட்டார் என்பதை இம்மன்னரின் கல்வெட்டுகள் கூறுகின்றன. இதே போன்று மராத்திய மன்னர்களும் பல மடாதிபதிகளுக்கு ஆக்கம் அளித்தனர். சைவ மடங்களான தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், கும்பகோணம் பெரியமடம் முதலிய மடங்கள் ஆதரவு பெற்றமைபோல், சமர்த்த இராமதாசரின் சீடர்களைத் தலைவர்களாகக் கொண்ட மடங்களும் ஆதரவு பெற்றன. இம்மடாதிபதிகள் சிறந்த கல்வியறிவு பெற்றுத் திகழ்ந்ததால் பல அரும் நூல்களைப் படைத்துச் சோழ மண்டலத்திற்கு அவற்றைக் காணிக்கையாக்கினார்கள்.

### பீமராச கோசுவாமிகள் (கி.பி. 1642 - 1741)

இவர் கி. பி. 1642-இல் மராத்திய மாநிலத்தில் பிறந்தவர். கி. பி. 1680-இல் தஞ்சைக்கு வந்தார். சமர்த்தரின் முக்கியக் கோட்பாடான இல்லற நெறியே இறைவன் நெறி என்ற தத்துவ அடிப்படையில் தோன்றிய சமர்த்த சம்பிரதாயத்தினைக் கொண்ட மடத் தலைவர்களுள், பீமராச கோசுவாமி சமர்த்தரின் 18-ஆவது சீடராகத் திகழ்ந்தார். இச்சான்றோர் மராத்திய மன்னர்களான வெங்கோசி, சகசி, சரபோசி, துளசா, பாவா சாகிப் ஆகியோர் மட்டுமன்றி, பிரதாப சிம்மனின் ஓராண்டு ஆட்சி வரையிலும் வாழ்வாங்கு வாழ்ந்து அறப் பணிகள் புரிந்தார்.

இவர் இயற்றிய மராத்தி நூல்களாகப் போற்றப்படுபவை சமர்த்தரின் சரித்திரமும், பக்திப் பாடல்களின் தொகுப்புமாகும். பீமராச கோசுவாமிகளுடன் மராத்திய மாநிலத்திலிருந்து வந்த

சமர்த்தரின் மற்ற இரு சீடர்களான அனந்தமௌனி மன்னார் குடியிலும், இராகவ சுவாமி கோனூரிலும் மடங்களை நிறுவித் தொண்டுகள் புரியத் தொடங்கினர்.

தஞ்சை சாமந்தான் குளக் கரையிலிருந்த அந்த மடம் பின்னாளில் இவரது சீடர்களான கோவிந்தபாள சுவாமி, சோளிராம் கோசுவாமி, ஆத்மராம் கோசுவாமி என்பவர்களைத் தலைவர்களாகக் கொண்டு மூன்று மடங்களாகப் பிரிந்து சமயப் பணிகளை மேற் கொண்டன. சமர்த்தர் இருமுறை தஞ்சை வந்த போது பீமராச கோசுவாமிகள் மடத்தில் தங்கி யிருந்ததை அறிய முடிகிறது.



சமர்த்த இராமதாசர் முன்பு பீமராச கோசுவாமியின் சீடர்

பீமராச கோசுவாமிகளின் நேர் சீடர்கள் வரிசையில் வந்த இராமநாத கோசுவாமி (கி. பி. 1717-இல் பட்டம்) சீனப்பா கோசுவாமி ஆகியோருடன் பீமராச கோசுவாமி அமர்ந்த வண்ணம் உள்ள ஓர் அற்புத வண்ண ஓவியம் தஞ்சை தெற்குவீதி ஆதி பீம ராச கோசுவாமிகள் மடத்திலுள்ளது.

இதே மடத்தில் இவர்களுக்குப் பின்பு வந்த இராமச்சந்திர கோசுவாமி (கி. பி. 1834-இல் பட்டம்) எனும் மடாதிபதி, தம் ஆதி குரு பீமராச கோசுவாமிகளின் சமாதியின் மீதுள்ள அனு மனை வணங்கும் கோலத்தில் உள்ள வண்ண ஓவியம் ஒன்றும் உள்ளது. மிக அரிய வண்ணப் படங்கள் உள்ள இம் மடத்தில் சமர்த்தரும், பின்பு பீமாராச கோசுவாமிகளும் பூசை செய்த அயோத்தியர் கோமான், இளவல் இலக்குவன், மிதிலைச்செல்வி ஆகியோரின் செப்புத் திருமேனிகளும், அனுமனின் சிலையும் இன்றும் உள்ளன. வரலாற்றுச் சிறப்புடைய இம்மடம் தற்போது பீமராச கோசுவாமி எனும் எட்டாவது மடாதிபதியால் பழமை நலம் குன்றாமல் அருளாட்சி நடத்தபெற்று வருகின்றது.



பீமராச கோசுவாமிகளும் சீடர்களும்



பீமராசரின் சமாதி முன்பு இராமச்சந்திர கோசுவாமி

## சித்திரவேலைச் சிங்காதனம்

சோழ மண்டலத்துக் கேயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர்த் திருக்கோயிலின் வரலாற்றுப் பெருமைகள் மிகப் பலவாகும். இவ்வாரூர்த் திருக்கோயிலினுள் உள்ள தேவாசிரிய மண்டபம் மிகத் தொன்மையானதாகும். இதன் பெருமையை இலக்கியங்களும், கல்வெட்டுகளும், ஓவியங்களும் சிறப்பாகப் பேசுகின்றன.

### தேவாசிரிய மண்டபம்

ஆரூர்க் கோயிலினின் கிழக்கு இராசகோபுரம் கடந்து உள்ளே நுழைந்ததும் வலப்புறம் காணப்படும் மிகப்பெரிய மண்டபமே தேவாசிரிய மண்டபமாகும். இதனைச் சேக்கிழார் பெருமான்,

"தேனுறை கற்பக வாசமாலைத் தேவாசிரியன்
தொழுதிறைஞ்சி"
—பெரிய : 270

"மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின்"
—பெரிய : 301

"கண்ணுதல் கோயில் தேவாசிரியனாங் காவணத்து"
—பெரிய : 335

எனவெல்லாம் குறிப்பிட்டு, இம்மண்டபத்திற்கு வந்த சுந்தரர்,

"வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனிவே றடியேன் என்று
ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம்
அருள்செய்வார்" -பெரிய : 347

என்று கூறி, தாம் எழுதிய திருத்தொண்டர் புராணத்திற்கும் நம்பியாண்டார் நம்பியின் திருவந்தாதிக்கும் மூதன் நூலாய்த்

திகழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டத் தொகை மலர்ந்த இடம் தேவாசிரிய மண்டபம் எனக் குறிப்பிடுகிறார். இது இலக்கியம் சுட்டும் தேவாசிரிய மண்டபத்தின் பெருமையாகும்.

ஆரூர்க் கல்வெட்டுகள் சோழப் பெருமன்னர்கள் பலர் இங்கு வந்து நாட்டியம் கண்டதையும் தியாகப் பெருமானே பல தலைக் கோலியரின் ஆடல்களைக் கண்டதையும் சிறப்பாகப் பேசுகின்றன.[1] எனவே, விழாக் காலங்களில் தேவாசிரிய மண்டபத்தில் தியாக விநோதனின் செப்புத்திருமேனி இங்கு எழுந்தருளப் பெற்றுத் தலைக்கோலியரின் நடனங்கள் நடத்தப்பெற்றன. 'வீரனுக்க விஜயம்' எனும் கூத்து இங்கு இடம்பெற்றது. பல ஊர்ச் சபையினர் இங்குக் கூடி நிருவாக முடிவுகள் எடுத்தமை போன்ற பல வரலாற்று நிகழ்ச்சிகளால் இம்மண்டபத்தின் பெருமை மேலும் விரிகின்றது.

## தேவாசிரிய மண்டப ஓவியத் தொகுப்பு

இம்மண்டபத்தின் மேல் விதானத்திலும் உட்புறச் சுவரிலும் இரண்டு பெருங்காவியங்கள் தொடர் ஓவியங்களாய்க் காட்சி விளக்கங்களுடன் படைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்து ஓவியங்கள் சகசி மன்னர் காலத்துப் படைப்புகளாக இருக்கலாம் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன.

சகசி மன்னர் தம் குல தெய்வமாகப் போற்றியது ஆரூர்த் தியாகப் பெருமானையேயாகும். இம்மன்னர் யாத்த பல நூறு கிருதிகளிலும் மூத்திரையாகத் தியாகராசனையே குறிப்பிடுவது இவரது சிறப்பு. இம்மன்னர் காலத்தில் வாழ்ந்த ஒரு தமிழ் ஓவியன் சிங்காதனம் என்பவனாவான். இப்பெருமகன் கரத்தால் மலர்ந்த ஆரூர் ஓவியக்கூடம் இன்று தமிழகத்தில் உள்ள தலை சிறந்த ஓவியக் கூடங்களுள் ஒன்று. மற்ற மராத்தியர் கால ஓவியர்களைவிட சிங்காதனத்திற்குரிய தனிச்சிறப்பு, இவன் தீட்டிய ஓவியக் காவியத்தில் பல இடங்களில் தன் உருவத்தையும் வரைந்து அதன் அருகில் 'இந்தச் சித்திரம் எழுதுகிற சிங்காதனம் நித்தம் சதாசேவை' என்று எழுதியுள்ளதுதான்.

தேவாசிரிய மண்டபத்து ஓவியத்தொகுதி இரண்டில் ஒளி மங்காமல் திகழ்வன முசுகுந்த புராண ஓவியங்களே. இவை விதானத்தில் வரையப்பட்டுள்ளன. மனுநெறிகண்ட சோழன் காவியம் சுவரில் காணப்படுகிறது. சூரிய ஒளியின் கதிரியக்கம்,

மழைநீர் போன்ற காரணங்களால் மனுநீதிச் சோழனது காவியத்தின் பெரும் பகுதி சிதைந்தும் அழிந்தும் மங்கியும் உள்ளன. சகசி மன்னர் காலத்தில் அவரது ஆதரவில் மலர்ந்த தமிழ் நூல்கள் தியாகேசர் குறவஞ்சி, தேரூர்ந்த சோழன் புராணம், மனுநீதிச் சோழன் தமிழிசை நாட்டிய நாடகம் போன்ற நூல்களாகும். இவை அனைத்திலும் தேரூர்ந்த சோழனின் கதை சிறப்பாகப் பேசப்படுகிறது. சகசி மன்னரைக் கவர்ந்த இக்காவியம் ஆரூரில் இவரது ஓவியனால் வண்ணம் பெற்றதில் வியப்பில்லை.

## முசுகுந்த புராணம்

ஆரூர்த் தியாக விடங்கர் பற்றிய புராணக் கதைகள் பல உண்டு. இதில் முசுகுந்த புராணம் நாயக்கர்கள் காலத்தை விட மராத்தியர் காலத்தில் பல மாற்றங்கள் பெற்றது.[9] இதன் அடிப்படையில் உருவானதே இவ்வண்ண ஓவியத் தொகுப்பு. தேவாசிரிய மண்டபத்தின் தென் பகுதியில் ஓர் காட்சித் தொகுதியும் வடமேற்கு மூலையில் பிறிதோர் காட்சித் தொகுதியும் தொடங்குகின்றன. ஒவ்வொரு காட்சியின் கீழும் அன்றைய பேச்சுத் தமிழ் வழக்கில் காட்சி விளக்கமும் எழுதப் பட்டுள்ளது. ஒவ்வொரு நபரின் பெயரும் சில பொருள்களின் பெயர்களும்கூட அவற்றின் மேலே சிறிய எழுத்துகளால் எழுதப் பட்டுள்ளன.

திருமால் தனக்கெனப் புதல்வன் வேண்டி யாகம் மேற் கொள்ளல் - சிவபெருமானின் அருளால் மன்மதன் பிறத்தல் - தேவியின் சாபம் - சாப விமோசனம் - விடங்கர் திருமேனி கிடைத்தல் - திருப்பாற் கடலில் பூசித்தல் - தேவேந்திரன் வாரகலி அசுரன் சண்டை - திருமால் தேவேந்திரன் சந்திப்பு - திருமால் வாரகலி அசுரனுடன் சமர்புரிந்து அவனை வீழ்த்துதல் - திருமாலிடமிருந்து விடங்க மூர்த்தியைப் பெற தேவேந்திரன் சிதம்பரத்தில் பூசித்தல் - விடங்கரைப் பெற்றுத் தேவ லோகம் செல்லல் - ஊர்வசி, அரம்பையர் ஆடல் - கற்பகத்தரு போன்ற காட்சிகளுடன் ஒரு பகுதிக் கதை முடிவு பெறுகிறது.

அடுத்த பகுதியாக முசுகுந்தன் எனும் குரங்கு முகம் உள்ள மன்னன் அயோத்தியாபுரியில் கோசலையோடும் தன் தம்பி களாகிய நவ வீரர்களோடும் ஆட்சி புரிந்து நாடகச் சாலையில் நடனம் காணுதல் - இந்திரனின் கட்டியங்காரன் முசுகுந்தனைத் தேவந்திரனிடம் அழைத்தல் - முசுகுந்தனின் படைகள் - தேவேந் திரன் வாலாசுரன் சண்டைக் காட்சி - முசுகுந்தன் இந்திரன்

சந்திப்பு - வாலாசுரனுடன் முசுகுந்தன் போரிடும் காட்சி - வாலா சுரனை வீழ்த்துதல் - இந்திரன் முசுகுந்தனைத் 'தேவலோகம் அழைத்துச் செல்லல் - தேவலோகக் காட்சிகள் - இந்திரன் தியாகராசரை வழிபடுதல் - முசுகுந்தன் தியாகராசரைத் தனக் கெனக் கேட்டல்- இந்திரன் விசுவகர்மா சூழ்ச்சி-முசுகுந்தன் கனவு-ஏழு விடங்கர்களில் உண்மை விடங்கரை முசுகுந்தன் எடுத்தல் - முசுகுந்தன் எல்லா விடங்கர்களையும் திருவாரூர் எடுத்து வருதல் - திருவாரூரில் நிகழும் பத்துநாள் விழாக் காட்சி கள் - வாண வேடிக்கைகளுடன் முடிவடைகின்றன.

இவ்வோவியக் காட்சிகளால் கி. பி. 1700-ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தில் திருவாரூர்த் திருக்கோயிலில் நிகழ்ந்த திருவிழாக் கள் பற்றிய விரிவான செய்திகள் தெரிய வருகின்றன. துஜா ரோகணத்திலிருந்து பல விழாக் காட்சிகள் உள்ளன. அதில் 'பைரவர் திருவிழா', 'மூவர் முதலியர் திருவிழா', 'காட்சிக் கொடுத்த திருவிழா', போன்றவை புதுமையாக உள்ளன. இரண்டாம் குலோத்துங்கனின் திருவாரூர்க் கல்வெட்டிலும் மூன் றாம் குலோத்துங்கனின் திரு ஈங்கோய் மலைக் கல்வெட்டிலும் குறிப்பிடப்பெறும் 'மூவர் முதலியர்' வழிபாடு இங்கு ஓவியத் திலும் நோக்குதற்குரிய ஒன்று.

அன்று திருவாரூரில் வாழ்ந்த முக்கிய நபர்களின் உருவ ஓவியங்களும் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருப்பதும், பல வகையான வாண வேடிக்கைகள் காட்டப்பட்டு வாணங்களுக்குப் பெயர்கள்கூட ஓவியத்திலேயே எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கவை. தரையில் சுற்றும் வாணத்திற்கு 'நிலச் சக்கர வாணம்' என்று அந்த வாணத்திலேயே எழுதியிருப்பது அரிய ஒன்று.

அன்று ஆரூர் விழாவில் எவ்வகையான இசைக் கருவிக ளெல்லாம் இசைத்தார்கள், மன்னரது அவையில் என்னென்ன நாட்டியங்கள் நடத்தினார்கள் என்ற விவரங்களும், 'கைக்காட்டு முறைக்காரி' என்ற குறிப்புகளுடன் ஓர் ஆடல் அணங்கு வீதியில் நடனம் புரிதலும், முட்டுக்காரர், மேளக்காரர் முதலான இசைக் கருவி வல்லோர்கள் பற்றிய விளக்கங்களும் காணப்படுகின்றன.

ஆரூரில் இருந்த செப்புத் திருமேனிகள் மக்கள் உடையலங் காரங்கள், திருக்கோயிலின் வரைபடம், விதவிதமான அணி கலன்கள், வீதியின் அழகு, போர்ப் படைகளின் அமைப்பு, கோயில் நிருவாகம் பற்றிய பல வரலாற்றுத் தகவல்களையும் நம் கண்ணுக்கு விருந்தாகப் படைத்துள்ள சித்திர வேலைச் சிங்கா தனத்தின் சாதனை போற்றுதற்குரியதாகும்.

## ஓவியங்களில் சிங்காதனம்

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவ்வோவியனின் உருவங்கள் முசுகுந்த புராணக் காட்சித் தொகுப்பில் நான்கு இடங்களில் காணப்படுகின்றன. முதலாவதாக இந்திர லோகத்திலிருந்து முசுகுந்தன் தியாகராச சுவாமியைத் திருவாரூர்ப் பட்டணத்திற்கு எழுந்தருளச் செய்யும் காட்சியில் ஒரு புறமாகத் தலையில் முண்டாசு, முகத்தில் தாடி, மீசை திகழ, இடுப்பில் வெண்மையான வேட்டி, உடலிலும், நெற்றியிலும் திருநீறு பூசிய நிலையில் வணங்கும் கோலத்தில் ஓர் உருவம் தீட்டப்பட்டு, இடுப்பு ஆடையில் ' சிங்காதனம் ' என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காட்சிக்குக் கீழ் 'தியாகராச சுவாமியார் தேவலோகத்தை விட்டுப் பூலோகத்துக்கு முசுகுந்தனிடமாய் நல்லூரிலே வந்த பின்பு தியாகராச சுவாமியானார் ரதத்தை விட்டுசகல தவாதிகளும் அன்பத்தாறு தேசத்து ராசாக்களும் அநேகம் உபசாரம் பண்ணத் தக்கதாக முசுகுந்தனும் நவ வீராளும் எழுந்தருள பன்னிகொண்டு அநேக உபசாரத்துடனே திருவாரூர் பிரசத்தனமாக வந்து இவ்விடம் திருவாரூர் பட்டணம். இதற்கு வடக்கு ஆலயம். குருபாதமே துணை இந்த சித்திரம் எழுதுகிற சிங்காதனம் நித்தம் சதா செர்வை'' - என்று எழுதப்பட்டுள்ளது. இங்கு நாம் இக்காட்சியை வண்ண ஓவியமாகப் படைத்து, காட்சி விளக்கமும் எழுதிய சிங்காதனத்தைக் காண்கிறோம்.

அடுத்து ஆரூர்க் கோயிலின் வரைபடம் உள்ளது. வன்மீக நாதர் கோயிலில் சிவலிங்கமும், போக சக்தி அம்மனும், தியாகராசர் கோயிலிலே தியாகராச சுவாமியின் சிலையுமுள்ளன. முசுகுந்தன் ஒரு புறமும், மகுடம் தரித்த மன்னவர் ஒரு புறமும் உச்சிமேல் கை குவித்து வணங்குகின்றனர். ஆறு விடங்க மூர்த்திகளும் அருகே உள்ளனர். வானத்திலிருந்து தேவர்கள் பூமாரி பொழிகின்றனர். திருவாரூரின் பிற கோயில்களும் காட்டப்பட்டுள்ளன. இதற்குக் கீழே செட்டியார் ஒருவரும் அவரது மனைவியும் நின்று வணங்குகின்றனர். இதன் வடபுறம் நான்முகன், திருமால், பதஞ்சலி, புலிக்கால் முனி (வியாக்கிர பாதர்) மற்றும் முனிவர்களும், ஆரூர் மக்களும் வணங்குகின்றனர். இவர்களில் சிலரது உருவங்கள் மேலேயே அவர்களுடைய பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் மத்தியில் சிங்காதனமும் நிற்கிறான். கீழே 'சித்திர வேலை சிங்காதனம் நித்த சதா சேவை', என்று எழுதப்பட்டுள்ளது.



- திருவாரூர் தேவாசிரிய மண்டபம்
(சாமந்தனார் கதவு திறக்கும் காட்சியில்)
திருவாரூர்த் திருக்கோயில்



ஓவியன் சிங்காதனர்

மூன்றாவதாக, சாமந்தனார் கதவு திறக்கும் காட்சியில் தியாகேசர் கோயில் காட்டப்பட்டுக் கதவு பூட்டப்பட்டுள்ளது. கதவின் வலப்புறம் 'தெற்கு வாசல்' என்றும் இடப்புறம் 'கெர்பக்கிரகம்' என்றும் எழுதப்பட்டுள்ளன. கதவின் ஒரு புறம் ஓவியன் சிங்காதனமும், சாமந்தனாரும் நிற்கின்றனர். இவர்களின் கால்களுக்குக் கீழே 'சிங்காதனம்'. 'சாமந்தனார்' என எழுதப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிரே ஒருவன் கதவைத் திறக்க முற்படுகிறான். அவனுக்குப் பின்னால் இருவர் நின்று கொண்டு கை கட்டிப் பாடுகின்றனர். கீழே 'ஓதிவார்' என்று எழுதப்பட்டுள்ளது. இக்காட்சி முழுமைக்கும் கீழாக 'சாமந்தனார் கதவு திறக்கிறது யிவிடம்'' என்று காட்சி விளக்கம் உள்ளது. சாமந்தனார் என்பது படைத்தலைவருக்குரிய பெயர். இங்கு ஒருவர் மராத்திய அரச உடையில் காணப்படுகிறார். எனவே உயர் அதிகாரியான சாமந்தனாருடன் சிங்காதனமும் நிற்பதால் இவனது நிலை மதிப்பிற்குரியதாகத் திகழ்ந்தது என்பதை அறிய முடிகிறது.

நான்காவதாக, திருவாரூர் வீதிகளில் விழா நடக்கும் காட்சிகளில் ஆங்காங்கே சிங்காதனத்தின் பெயர் குறிப்பிடப்பட்ட ஓவியங்கள் உள்ளன. இதேபோன்று மனுநெறி கண்ட சோழன் வண்ண ஓவியத் தொகுப்பின் இறுதிக் காட்சியில் சகசி மன்னர். அவரது அமைச்சர்கள் முன்பு சிங்காதனத்தின் ஓவியமும் திகழ்கிறது.

சிங்காதனம் படைத்திட்ட ஆரூர் ஓவியக் கூடத்தால் சிங்காதனத்தைக் காண முடிகிறது. இரண்டு பெரும் புராணக் காவியங்கள் மட்டுமன்றி ஆரூரின் வரைபடங்கள், 250 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த விழாக்கள், நகரின் முக்கிய நபர்கள், நடனங்கள், இசை வல்லோர்கள், தமிழ் எழுத்துக்களின் அன்றைய வடிவமைப்பு,பேச்சு வழக்கு முதலிய அனைத்தும் காண நமக்கு வழி செய்த ஓவியன் சிங்காதனம் சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களில் ஒரு சிறப்பிடம் பெறும் கலைஞன் என்பது மிகையாகாது. மேலும் இதுவரை தமிழகத்திலுள்ள எந்த ஒரு ஓவியக்கூடத்திலும் அந்த ஓவியம் தீட்டிய கலைஞனின் ஓவியத்தை நாம் காணவில்லை. இவ்வகையிலும் சிங்காதனத்தின் சாதனை ஈடிணையற்ற ஒன்று.

## குறிப்புகள்

1. I திருவாரூர்த் திருக்கோயில்-குடவாயில் பாலசுப்பிரமணியன்
   II TYAGARAJA TEMPLE - By Ponnusamy
   State Archaeology publication.
   III 541, 553 and 561 of 1904.
   IV S.I.I. Vol. XVII, Nos. 586, 598 and 606
2. முசுகுந்த புராணம்-தஞ்சை சரசுவதி மகால் நூலக சமஸ்கிருத மராத்திப் பிரிவுச் சுவடிகள் - Vol. 19.

# இயல் 8

## பொதுவியல்

# குடந்தைக் கீழ்க் கோட்டத்துப் படிமங்கள்

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
    சொற்பொருளுங் கடந்தசுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலும்
    கடல்நஞ்சம் உண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
    மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொன்மலிந்த மூவிலைவேற் குழகர் போலும்
    குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே

அப். தே. 6 : 748

என நாவுக்கரசர் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் பதிகம் பாடிய வரலாற்றுப் பெருமை பெற்ற திருக்கோயிலே குடந்தைக் கீழ்க் கோட்டமெனும் அருள்மிகு நாகேசுவரன் திருக்கோயில்.

## கருவறை

இத் திருக்கோயில் சோழ மண்டலத்துக் குடமூக்கு எனும் கும்பகோணத்தின் மையப் பகுதியில் திகழ்கிறது. இதனை முதலாம் ஆதித்த சோழன் கற்றளியாக எடுப்பித்தான். இரு தளக் கற்றளியான இதன் சிகரம் வட்டமானது. கருவறையின் முப்புறங்களிலும் தேவ கோஷ்டங்கள் உள்ளன. தெற்கில் ஆலமர் செல்வரும் மேற்கில் உமையொருபாகனும் வடக்கில் பிரமனும் தேவகோஷ்ட சிலைகளாக நிற்கின்றனர். அர்த்த மண்டபத் தேவகோஷ்டங்களில் பிச்சைத்தேவரும், துர்க்கையும் இடம் பெற்றுள்ளனர்.

## சோழ மன்னர்களின் உருவச் சிலைகள்

கருவறையின் கோஷ்டங்களுக்கு இடையில் உள்ள பகுதிகளில் எட்டு மனித உருவச் சிலைகள் இடம்பெற்றுள்ளன. தென்புறம் உள்ள கோஷ்டம் போன்ற ஒரு பகுதியில் மொட்டைத் தலையும் துளைக் காதுகளும் இடுப்பில் நீண்ட ஆடையும் தோளில் துண்டும் திகழ ஓர் அடியவர் நிற்கிறார். அடுத்துள்ள பகுதிகளில் இரண்டு பெண்கள் அழகான கொண்டையுடன் கூடிய தலையலங்காரத்துடன் மார்பில் ஆடையின்றி நிற்கின்றனர்.

ஒருவர் அபய கரத்துடன் (அபய ஹஸ்தம்) மொட்டைத் தலை, நீள் செவிகளுடன் திகழ்கிறார். ஒருவருடைய தலையலங்காரம் ஜுவாலா மகுடம் (தீப்பிழம்பு) போன்றுள்ளது. ஒருவர் அழகிய தலையலங்காரத்துடன் கையில் மலர் ஏந்தி நிற்கிறார். ஒருவர் மட்டும் தலைப்பாகை அணிந்து அழகிய மீசையுடன் கையில் உளி போன்ற ஏதோ ஒன்றை ஏந்தியுள்ளது போன்று காட்சி நல்குகிறார்.

இப்படிமங்கள் பற்றி ஆராய்ந்த படிம இயல் வல்லுநர்கள் இவை அனைத்தையும் சோழ மன்னர்களாகவும், சோழ அரசிகளாகவுமே குறித்துள்ளனர். இங்குக் காணப்படும் பல சிலைகள் அபய முத்திரையுடன் திகழ்வதால் இவை முதலாம் ஆதித்த சோழனுக்கு முன்பு வாழ்ந்த சோழ மன்னர்களின் நினைவாக எடுக்கப்பட்ட சிலைகளாக இருக்கலாம்.

இவ்வரிசையில் காணப்படும் மலர் ஏந்திய ஒரு மன்னவர் சிலை, திருப்பழனம் திருக்கோயிலில் மலர் ஏந்திய நிலையில் காணப்படும் ஆதித்தனின் சிலையை ஒத்துக் காணப்படுவதால் இதனை ஆதித்தனின் சிலையாக ஏற்றுக் கொள்ளலாம். தலைப்பாகையும் மீசையும் கொண்டு திகழும் ஒரு படிமத்தை இக்கோயில் எடுத்த சிற்பியாக அல்லது மன்னரின் உயர்அதிகாரியாக்கொள்ள வாய்ப்பு உள்ளது. இதனை ஒத்த படிமங்கள் ஆரூர் அரநெறியிலும் சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலிலும் உள்ளன.

தெளிவான சான்றுகளோடு இப்படிமங்களைப் பற்றி விளக்க இயலவில்லை. எனினும் இதுவரை சோழமண்டலத்தில் நமக்குக் கிடைத்துள்ள பல நூறு படிமங்களுள் இவ்வளவு நேர்த்தியான, சிறப்பான, எழில் கொஞ்சும் கற்சிலைகளை நாம் காணவில்லை. சோழ மண்டலத்துப் படிமங்கள் வரிசையில் சிறந்த தொகு சிற்பக்கலை நயத்தால் முதலிடம் வகிப்பவை குடந்தைக் கீழ்க் கோட்டத்துச் சோழ மன்னர்களின் படிமங்களேயாகும்.

# திருவாவடுதுறையில் சோழர் காலப் படிமங்கள்

கும்பகோணத்திற்கருகிலுள்ள திருவா (வ) டுதுறை கோமுகீசுவரர் திருக்கோயில் பண்டு திருவாவடுதுறை உடையார் கோயிலெனவும், திருவாவடுதுறை பரம சுவாமித் திருக்கோயில் எனவும் அழைக்கப்பட்டது. முதல் பராந்தகன் காலத்துக் கற்றளிக்கு இத்திருக் கோயில் சிறந்த எடுத்துக்காட்டு. முதற் பராந்தக தேவனுடைய 38-ஆம் ஆட்சியாண்டுக்கல்வெட்டுஒன்று[1] குமுதப் படைக்கு மேலுள்ள கோயிற் பகுதிகளை எடுப்பிக்க, பராந்தகத் தேவனே 500 கழஞ்சு பொன் நன்கொடை வழங்கியதாகக் குறிப்பிடுகிறது.

எழில்மிகுந்த இக்கற்றளியில் பலரது திருவுருவங்கள் கற்படிமங்களாகக் கல்வெட்டுக் குறிப்புகளுடன் காணப்படுகின்றன.

(1) கற்றளிப் பிச்சன்

கோமுகீசுவரர் திருக்கோயில் கருவறையின் தென்புறச் சுவரில் ஒரு சிவலிங்கத்தை வழிபடும் நிலையில் ஓர் அடியவர் இரு கரம் கூப்பி நிற்கிறார். இப் படிமத்திற்குக் கீழாகக் கற்றளிப் பிச்சன் என்ற கல்வெட்டுக் குறிப்பு உள்ளது.[2] இவர்தான் இக் கற்றளியை எடுப்பித்தவர் என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். கற்றளிப் பிச்சனுக்குப் பின்புறம் மற்றொரு அடியவர் நின்று கொண்டு தலைக்கு மேல் இரு கரங்களையும் உயர்த்தி வணங்குகிறார்.

பரகேசரி வர்மனின் மூன்றாம் ஆண்டில் இக்கற்றளிப் பிச்சன் அடுத்த கிராமமாகிய சிற்றானைச்சூரில் சில நிலங்களை விலைக்கு வாங்கி, அவற்றைக் கோயிலில் திருப்பதிகம் பாடுவாருக்கும் திருமஞ்சனத்திற்கு நீர் கொணர்வாருக்கும் இன்னியம் இயக்குவாருக்கும் தனித்தனியே மானியமாக விடுத்தான். மீண்டும்



கற்றளிப் பிச்சன்

இம்மன்னரின் 25 - ஆம் ஆண்டில் இன்னியம் இயக்குவாருக்கு இவன் மானியம் அளித்ததும், 35 - ஆம் ஆண்டில் காளம் ஊது வோன், சங்கு ஊதுவோன், குடை பிடிப்போன், திருநந்தவனம் பராமரிப்போன் போன்றவர்களுக்கு மானியம் அளித்த செய்தி களும் இத்திருக்கோயில் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம்.

எனவே கற்றளிப் பிச்சன் திருவாவடுதுறை மகாதேவர் கோயிலைக் கற்றளியாக எடுத்ததோடல்லாமல், தொடர்ந்து இக் கோயில் செவ்வனே செயல்பட வழிவகுத்தான் என்பதையும் அறியலாம். கலைப் பணியும் சமயப் பணியும் புரிந்த இப்பெரு மகனின் படிமம் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கும் பெருமை யுடையதாகும்.

(2) இளைய திருநாவுக்கரையர்[3]

இதே தென்புறச் சுவரில் இக்கற்றளிப் பிரானைத் தலைக்குமேல் கை கூப்பித் தொழும் ஓர் அடியவர் சிலை உள்ளது. இதனருகில் உள்ள கல்வெட்டு இவரை இளைய திருநாவுக்கரையர் என்று குறிக்கிறது.

(3) அம்பலவன் திருவிசலூரான்[4]

தென்புறச் சுவரில் உள்ள பிறிதோர் படிமம் ஒரு சிவலிங் கத்தை வணங்கும் கோலத்திலுள்ளது. இதனருகிலுள்ள கல்வெட்டு 'திருவாவடுதுறையைச் சார்ந்த அடியவரான அம்பலவன்

திருவிசாலூரான் என்ற திருநாவுக்கரையர்' என்று இப்படிமத்தைக் குறிக்கிறது.

(4) எழுவன் சந்திராதித்தனும் - பணிமகளும்[5]



கருவறையின் வடபுறச்சுவரில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு சிலைகள் ஒரு சிவலிங்கத்தை நோக்கியுள்ளன. இதன் அருகிலுள்ள கல்வெட்டு முதலில் நிற்பவரை இக்கோயிலின் ஒரு படை (தளம்) அமைத்த வாரம் புசலைச் சார்ந்த எழுவன் சந்திராதித்தன் என்றும், பின்னால் உள்ளது பெரிய அம்பலவன் திருவிசலுரான் வேளம் எனும் அரண்மனையின் பணிப் பெண்ணான நக்கன் வண்ணாத்தடிகளின் சிலை என்றும் குறிப்பிடுகிறது.

(5) தாமன் அம்பலவன்[6]

இதே திருக்கோயிலின் கருவறைச் சுவரில் திருநரையூர்



தாமன் அம்பலவன்

நாட்டுச் சிற்றாடியைச் சார்ந்த தாமன் அம்பலவன் என்ற நமசிவாயத்தின் சிலை கல்வெட்டுக் குறிப்புகளுடன் உள்ளது. இவ்வாறு முதல் பராந்தகன் காலத்தில் வாழ்ந்து திருவாவடுதுறை திருக்கோயிலோடு நெருங்கிய தொடர்பு கொண்ட பலருடைய சிற்பங்கள், கல்வெட்டுக் குறிப்புகளோடு இருப்பதும், அரண் மனையின் சாதாரணப் பணிப் பெண்ணும் திருக்கோயிலில் உரிய வகையில் மதிக்கப்பட்டாள் என்பதும் இவற்றால் அறியப் படுகின்றன.

## குறிப்புகள்

1. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்
   எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்-பக்கம்-266.
2. P.26 of A. R. E. 1925
3. P.26 of A. R. E. 1925
4. P.26 of A. R. E. 1925
5. P.24, No: 106, A. R. E. 1925.
6. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்-எஸ். ஆர்.பி. பக்கம்-266-67.

## மணி மண்டபங்களில் வரலாற்று நாயகர்கள்

சோழ மண்டலத்திலுள்ள பெரும்பாலான திருக்கோயில்களில் அத்திருக்கோயிலுடனோ, தமிழகத்து வரலாற்றுடனோ தொடர்புடைய வரலாற்று நாயகர்களுடைய படிமங்கள் இடம் பெற்றுள்ளன. இவை பெரும்பாலும் கற்றூண்களில் இறைவனை வணங்கும் கோலச் சிற்பங்களாகவே உள்ளன. சில இடங்களில் செப்புத் திருமேனிகளாகவோ, சுண்ணச்சுதைச் சிற்பங்களாகவோ, தந்தப் பதுமைகளாகவோ. தேரில் இடம் பெற்றுள்ள மரப் பதுமைகளாகவோ திகழ்கின்றன. திருக்கோயிற் சுவர்களிலும் விதானங்களிலும் திரைச்சீலைகளிலும் காகிதம், மைக்கா, கண்ணாடி போன்ற பொருள்களிலும் வண்ண ஓவியங்களாகச் சிலரது திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளமையையும் கண்டோம். இவ்வகையில் மிகஅதிகமான சிற்பங்களையும் ஓவியங்களையும் கொண்டு திகழும் சில திருக்கோயில்களை மட்டும் இங்குக் காண்போம்.

### திருவரங்கம்

1, கற்படிமங்கள்-சுதைச் சிற்பங்கள்

சோழ மன்னர்கள் மற்றும் பாண்டிய மன்னர்களின் கலைப் பணிகள் திருவரங்கம் திருக்கோயிலில் இடம் பெற்றிருப்பினும் பெரும்பாலான மண்டபங்களும் கோபுரங்களும் நாயக்கர்கள் மற்றும் ஒய்சாள மன்னர்களின் கலைப் பணிகளாகவே உள்ளன. திருவரங்கத்தைப் பொறுத்தவரை, தஞ்சை நாயக்கர்களைவிட மதுரை நாயக்கர்களின் கலைப்பணிகள்தான் மிகுந்து காணப் படுகின்றன. தென்புறம் உள்ள நான்முகக் கோபுரம் கடந்து உள்ளே சென்றால் காணப்படும் முதல் மண்டபமான திருவந்திக்



மதுரை நாயக்க மன்னர்
-கருட மண்டபம்



ஒய்சாளமன்னர் ஒருவரின் சிலை.
-வேணுகோபாலன் கோயில்

காப்பு மண்டபத்திலும், அடுத்துள்ள அரங்க விலாச மண்டபத்திலுமுள்ள தூண்களில் மதுரை நாயக்க மன்னர்களின் படிமங்கள் உள்ளன. நான்முகக் கோபுர வாயிலின் உட்புறம் இரண்டு மாடங்களில் சுதைச் சிற்பமாக இரண்டு மராத்திய மன்னர்களின் படிமங்கள் (?) உள்ளன.

வேணுகோபாலன் சந்நிதியும் மண்டபமும் ஒய்சாள மன்னர்கள் சோழ மண்டலத்துக்கு அளித்த அரிய பரிசாகும். வேணுகோபாலன் திருக்கோயிலின் சிற்ப எழில் உலகச் சிற்ப வல்லுநர்களைக் கவரும் சிறப்புடையதாகும். இத்திருக்கோயிலின் முக மண்டபத்தில் இரண்டு ஒய்சாள மன்னர்களின் படிமங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றை இங்குக் காணலாம்.

கார்த்திகைக் கோபுரம் கடந்து உள்ளே சென்றால் முதலில் காணப்படும் மண்டபம் கருட மண்டபமாகும். இதனை ஒரு 'படிமாலயம்' என்றே கூறலாம். இதில் மதுரை நாயக்க மன்னர்களின் அனைவரது படிமங்களும் உள்ளன. அவற்றுள் ஒன்றை இங்குக் காணலாம்.

212 தூண்களைக் கொண்டு எழிலுடன் திகழும் இம்மண்டபம் சொக்கநாத நாயக்கரால் (கி. பி. 1659 - 1682) கட்டப்பட்டது. இதில் தம் குல முன்னவர்களாகிய விசுவநாத நாயக்கர் (கி. பி. 1529 - 1564), முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி. பி. 1564-1572), வீரப்ப நாயக்கர் (கி. பி. 1572-1595), இரண்டாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி. பி. 1595-1601), முத்துக் கிருட்டிணப்ப நாயக்கர் (கி. பி. 1601 - 1609), முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் (கி. பி. 1609 - 1623), திருமலை நாயக்கர் (கி. பி. 1623-1659) ஆகியோருடைய படிமங்கள் உள்ளன. எல்லாப் படிமங்களுமே சுமார் 6' உயரமுடையவையாகும். மதுரையில் உள்ள படிமங்கள் போன்றே தோற்றத்தால் ஒத்து இவை திகழ்கின்றன.

ஆரியபட்டாள் வாசல் கடந்து உள்ளே உள்ள மண்டபங்களிலும் திருச்சுற்று மண்டபங்களிலும் மதுரை மற்றும் தஞ்சை நாயக்கர்களின் படிமங்கள் உள்ளன. ஒரு மண்டபத்துத் தூணில் தஞ்சை அழகிய மணவாளன் என்பவரின் சிலை கல்லெழுத்துப் பொறிப்புகளோடு உள்ளது. தமிழ் மற்றும் தெலுங்கு எழுத்துப் பொறிப்புகளுடன் பல படிமங்கள் இங்கு இடம் பெற்றுள்ளன.

இவையன்றி ஆயிரங் கால் மண்டபம், குதிரை மண்டபமெனும் சேஷராய மண்டபம், கம்பர் மண்டபம், ஸ்ரீரங்க நாச்சியார் மண்டபம், மற்றுமுள்ள மண்டபங்களின் தூண்களில் மதுரை, தஞ்சை நாயக்கர்கள், விசய நகர மன்னர்கள், அமைச்சர்கள், மற்றும் கொடையாளர் பலரின் சிற்பங்கள் உள்ளன.

திருவரங்கம் திருக்கோயிலுக்கு வெளியே உள்ள மண்டபங்களிலும் பல மன்னர்களின் சிற்பங்கள் உள்ளன. கொள்ளிடக் கரைக்குச் செல்லும் வழியிலுள்ள எல்லைக் கரை மண்டபத்தில் தஞ்சை அச்சுதப்ப நாயக்கரின் உருவச்சிலை கல்வெட்டுப் பொறிப்புகளோடு உள்ளது. திருவரங்கம் திருக்கோயிலில் மட்டும் வரலாற்று நாயகர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட கற்படிமங்கள் உள்ளன. இவை முழுமையாக ஆராயப்பட வேண்டும்.

2. தந்தப் பதுமைகள்

ஆர்யபட்டாள் வாசல் கடந்து உள்ளே சென்றால் அரங்கனின் திருக்கோயிலைச் ( உண்ணாழிகையை ) சுற்றியுள்ள மண்டபத்தின் மேற்குப் பகுதியில் விசயரங்க சொக்கநாத நாயக்கரது குடும்பத்தினரின் உருவங்கள் தந்தப் பதுமைகளாக உள்ளன. இவை அனைத்தும் ஆள் உயரப் பதுமைகளாகும். தந்தப் பகுதிகளை இணைத்து உருவாக்கியுள்ள இப்பதுமைகள் உயிர்ப் பதுமைகளாகவே திகழ்கின்றன. இவற்றின்மேல் வண்ணம் பூசப்பட்டுள்ளது. விசயரங்க சொக்க நாதர், அவரது மனைவி, மகள் ஆகியோருடன் திகழும் இப்பதுமைகள் நாயக்கர் காலக் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும் தமிழகத்தில் வேறு எந்த மன்னருடைய உருவங்களும் இவ்வாறு ஆள் உயரத்தந்தப்பதுமைகளாக இல்லாமை இவற்றின் தனிச்சிறப்பாகும். திருவரங்கம் திருக்கோயிலிலுள்ள கலைக் கூடத்தில் சுமார் ஓர் அடி உயரமுடைய தந்தச் சிற்பங்கள் பல உள்ளன. இவை திருமலை நாயக்கர் (கி. பி. 1623-1659) காலத்தில் செய்யப் பட்டவையாகும். இச்சிற்பங்களில் இடம் பெற்றுள்ளவரின் உருவம் திருமலை நாயக்கரது உருவமாக ஆய்வு அறிஞர்கள் கருதுகின்றனர்.



ஸ்ரீரங்கநாயக்கர்



சொக்கநாத நாயக்கர், திருமலை நாயக்கர்

3. செப்புப் படிமங்கள்

திருவரங்கம் திருக்கோயிலின் கலைக்கூடத்தில் மூன்று செப்புப் படிமங்கள் ஒரே மாதிரியாக உள்ளன. இவை முறையே திருமலை நாயக்கர் (கி.பி. 1633-1659) மற்றும் சொக்கநாத நாயக்கர் ( கி. பி. 1659 - 1682 ) ஆகியோருடையனவாகும். திருமலை நாயக்கர் நின்ற நிலையில், வலக் கரத்தைத் தூக்கி மலர் அர்ச்சிக்கும் கோலத்தில் காணப்படுகிறார். தனித்த பத்ர பீடத்தின்மேல் உள்ள கமல பீடத்தில் இப்படிமம் இடம் பெற்றுள்ளது.

திருமலை நாயக்கரின் படிமத்தைவிட சற்று உயரம் குறைவாகச் சொக்கநாத நாயக்கரின் படிமம் உள்ளது. இவரும் மலர் ஏந்தும் கோலத்தில் காணப்படுகிறார். இப்படிமத்தில் கண்கள் மட்டும் வெள்ளித் தகடுகளால் அணி செய்யப் பட்டுள்ளன.

மூன்றாவதாகக் காணப்படும் படிமம் மிக உயரிய பீடத்தின் மேல் காணப்படுகிறது. இது விளக்கேந்திய படிமமாக (பாவை விளக்குப் போன்று) வடிக்கப்பட்டது. இதன் கைகளிலும் மார்பிலும் விளக்கு இணைக்கப்படும் அமைப்புகள் உள்ளன. ஆனால் விளக்கு காணப்படவில்லை. மராத்திய மன்னர்கள் போன்று தலைப்பாகை, எடுப்பான மீசை, தோளில் கிளி, மார்பில் அணிகலன்கள், கைகளில் வளை, கால்களில் காப்பு, நீண்ட இடுப்பு ஆடையுடன் திகழும் இப்படிமத்தின் பீடத்தில்

(1) ஸ்ரீரங்கனாயகரு

(2) பிங்கள வரு சித்திரையி மீ 5 தருச
நகரத்திலிருக்கும் குழந்தைவேல்
ரபுள மளகாரு மாலா ரெங்க
யுத
சாமி உபயம்
யிதை

- என்று எழுதப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துகளும், எழுத்தின் வரிசை அமைப்புகளும் மேலும் கீழுமாகத் தெளிவின்றி உள்ளன ஸ்ரீரங்கநாயகர் என்பவரது படிமத்தைக் குழந்தைவேல் என்பவருக்காக ரெங்கசாமி என்பவர் செய்தளித்துள்ளார் என்பது மட்டும் தெரிய வருகிறது. பீடத்திலுள்ள பொறிப்புகள் 17-18-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் காணப்படுகின்றன.

## திருவானைக்கா

திருவரங்கத்தை ஒட்டியுள்ள திருவானைக்கா திருக்கோயிலில் உள்ள பெரிய மண்டபத்தின் வலப்புறம் சிறிய கோயிலொன்று கட்டப்பட்டுள்ளது. இதன் முன் மண்டபத்தின் தூண்களில் 6 சுற்படிமங்கள் இடம் பெற்றுள்ளன. இவை கலை நயத்தால் சோழர் பாணியிலிருந்தும் நாயக்கர்கள் பாணியிலிருந்தும் வேறுபட்டு நிற்கின்றன. இத்திருக்கோயில் கல்வெட்டுகளை ஆராயும்போது ஓய்சாள மன்னர்களின் பணிகள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. திருச்சிக்கு அண்மையிலுள்ள சமயபுரம் எனும் ஊர் கி.பி. 13-14 நூற்றாண்டுகளில் கண்ணனூர் என அழைக்கப்பட்டது. இதனைத் தலைநகராகக் கொண்டு ஓய்சாள மன்னர்களான வீரசோமேசுவரன், வீர இராமநாதன் முதலானவர்கள் சோழமண்டலப் பகுதியை ஆட்சிபுரிந்தனர். சடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியனின் தாக்குதலுக்குப் பின்பு கண்ணனூர் வீழ்ந்தது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய கண்ணனூரில் வாழ்ந்த ஓய்சாள மன்னர்கள் திருவானைக்கா இறைவனுக்குப் பல அரும் பணிகள் புரிந்தனர். இவர்களால் திருப்பணி செய்யப்பட்ட இத்திருக்கோயிலில் உள்ள மேற்குறிப்பிட்ட ஆறு படிமங்களும் ஓய்சாள மன்னர்களின் படிமங்களாகக் கொள்ள, கல்வெட்டுகளும் சிற்ப அமைப்புகளும் துணை புரிகின்றன.

இதே திருக் கோயிலின் மேற்குத் திசையில் அமைந்திருக்கும் இரண்டாம் இராச கோபுரத்திற்கு முன்பு உள்ள நான்குகால் மண்டபத்தில் எல்லாத் தூண்களிலும் நாயக்க மன்னர்கள் மற்றும் அவர்களது அதிகாரிகளின் சிற்பங்கள் உள்ளன. இங்குள்ள நாயக்க மன்னர்களின் சிற்பங்களும் திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் உள்ள சிற்பங்களும் ஒத்துக் காணப்படுகின்றன.

## திருச்சி மலைக்கோயில்

கி.பி. 1616-இல் மதுரை நாயக்கர்கள் திருச்சியைத் தங்கள் தலைநகராகக் கொண்டனர். முதலாம் முத்து வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், முத்து வீரப்ப நாயக்கர், மங்கம்மாள், விசயரங்க சொக்கநாத நாயக்கர், மீனாட்சி அரசி ஆகியோர் திருச்சிராப்பள்ளி மலைக் கோயிலான தாயுமானவர் திருக்கோயிலுக்கு அறக் கொடைகள் அளித்து, திருப்பணிகள் பல செய்தனர். இவர்கள் காலங்களில் பல மண்டபங்கள் எடுக்கப்பட்டன.

மலை வாசலில் தொடங்கி முகப்பு மண்டபம், மலைப்படி மண்டபங்கள், நூற்றுக்கால் மண்டபம், தாயுமானவர் ஆலய மண்டபங்கள் முதலிய இடங்களில் 30-இற்கும் மேற்பட்ட நாயக்க மன்னர்களின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. 6 இடங்களில் நாயக்க அரசியரது சிற்பங்களும் உள்ளன.

இத்திருக்கோயில் மண்டபங்களில் நாயக்க அரச குடும்பத்துப் படிமங்களைத் தவிர, தருமபுரப் பண்டார சந்நிதி, சமீன்தார் குடும்பத்தினர் படிமங்கள், தாயுமானவர், சேக்கிழார், அநுப்பி என்ற தேவரடியார் பெண் ஆகியோரின் கற்சிற்பங்களும் உள்ளன.

## பட்டிச்சரம் (பட்டீசுவரம்)

சோழர்களின் கோநகரமாகத் திகழ்ந்த பழையாறை நகரின் ஒரு பகுதியே இன்று பட்டீச்சரம் என அழைக்கப்படுகிறது. இங்குள்ள அருள்மிகு தேனுபுரீசுவரர் திருக்கோயிலும் திருச்சத்தி முற்றத்துத் திருக்கோயிலும் வரலாற்றுச் சிறப்புடைய திருக்கோயில்களாகும். சோழர் காலத்திய இக்கற்றளிகளுக்கு விசயநகர மன்னர்கள் காலத்தில் சோழ மண்டலத்தில் மகா மண்டலேசுவரனாய்த் திகழ்ந்த திருமலைய்ய தேவ மகாராசன் திருப்பணிகள் பல செய்தார். இதனைத் தேனுபுரீசுவரர் திருக்கோயில், திருச்சத்திமுற்றம், கோபிநாதப் பெருமாள் கோயில் (கோனப் பெருமாள் கோயில்) கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. இந்தத் திருமலைய்ய தேவ மகாராசனின் பெயரால் சோழ மண்டலத்து ஊர் ஒன்று 'திருமலைராயன் பட்டினம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. இவருக்குப் பின்பு இவரது அரியணையில் அமர்ந்தவன்தான் கோனேரி தேவ மகாராசனாவான்.

பட்டீச்சரம் கோயில்களைப் புதுப்பித்ததோடு பல மண்டபங்கள், இராசகோபுரம் முதலியவற்றையும் திருமலைய்ய தேவன் எடுத்தார். இவ்வாறு இவரால் எடுக்கப்பட்ட தேனுபுரீசுவரர் திருக்கோயில் மகாமண்டபம், அம்மன்கோயில் மண்டபம், திருச்சத்தி முற்றம் முன் மண்டபம் ஆகிய இடங்களில் உள்ள தூண்களில் திருமலைய்ய தேவனின் படிமத்தோடு, விசயநகர அரசர்களான மல்லிகார்ச்சுனர், வீரப் பிரதாப தேவராயர், சாளுவ திம்மன், கொப்பய்ய தேவமகாராசா ஆகியோரின் படிமங்களையும் எடுத்துள்ளார். சோழமண்டலத்தில் 15-ஆம் நூற்றாண்டு விசய நகர மன்னர்களின் படிமங்கள் இங்கு மட்டும்தான் உள்ளன.



பட்டமச்சாத்துப் படிமங்கள்.

## திருவாரூர்த் திருக்கோயில்

ஆரூர்த் திருக்கோயிலிலுள்ள தேவாசிரிய மண்டபம் சுந்தரர் காலத்திலிருந்து வரலாற்றுச் சிறப்புகள் பலபெற்ற திருமண்டபமாகும். இதன் உட்புற விதானத்தில் தஞ்சை மராத்திய மன்னர் சகசிகாலத்தில் சித்திரவேலைச் சிங்காதனம் என்பவனால் இரண்டு புராணக் கதைகள் ஓவியக் காட்சிகளாகத் தீட்டப்பட்டுள்ளவற்றை முன்பே கண்டோம். சித்திரவேலைச் சிங்காதனத்தால் தீட்டப் பட்டுள்ள இவ்வோவியக் காட்சிகளில் தன்னுடைய ஓவியத்தை வரைந்தது மட்டுமன்றி கி. பி. 1700-இல் திருவாரூரில் வாழ்ந்த பலரது உருவங்களைத் தீட்டி, அவர்களது பெயர்களையும் குறித்துள்ளமை சிறப்பு அமிசமாகும்.

இவ்வோவியக் காட்சிகளில் சாமந்தனார் என்ற மராத்தியத் தலைவர், பல ஓதுவார்கள், கோயில் அர்ச்சகர்கள், நாட்டிய ஆசிரியர்கள், ஆரூர் நடன மங்கையர்கள், பெரிய மடத்துப் பண்டாரம், துருவாச மகரிஷி, கனிக்குப்பெருமாள் நயினாப் பிள்ளை, பெரியமடம் தியாகராசய்யன் முதலிய பலரது உருவங்கள் இடம் பெற்றுள்ளன. அவர்களது பெயர்களும் ஓவியத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சோழ மண்டலத்துத் திருக்கோயில்கள் பலவற்றுள் எண்ணிலா வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.

# மல்லார்சி காடேராவும் தருமை ஆதீனத் தலைவர்களும்

கி. பி, 1763-1787 வரை தஞ்சையை மராத்திய மன்னர் இரண்டாம் துளசா ஆட்சிபுரிந்த நாளில் சீர்காழிச் சீமையை இவரது சார்பாளரான மல்லார்சி காடேராவ் என்பவர் நிரு வகித்தார். காடேராவ் குடும்பம் தஞ்சை மராத்திய அரசர் களுடன் மணவினைத் தொடர்புள்ள குடும்பமாகும்.

மல்லார்சி காடேராவ் சீர்காழியில் அரசச் சார்பாளராய் இருந்து ஆட்சிப் பொறுப்புகளை நிருவகித்து வரும் நாளில் தருமை ஆதீனத்தின் தலைவராகத் திகழ்ந்தவர் சிவஞான தேசிக சம்பந்த ராவார். இவரது அருளாட்சியின்கீழ் இருந்த புள்ளிருக்குவேளூர்த் திருக்கோயிலை (வைத்தீசுவரன் கோயில்) முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் நிருவகித்தார். அவ்வமயம் இத்திருக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்று, மதில்கள், அம்மன் திருக்கோயில், தட்டி சுற்றி மண்டபம், வௌவால் நத்தி முதலியன கருங்கல் திருப்பணிகளாக மேற்கொள்ளப்பட்டன.

தருமை ஆதீன கர்த்தரான முத்துக் குமாரசாமித் தம்பிரானால் கி. பி. 1767-இல் நிறைவேற்றப்பட்ட இப்பணி பற்றி இத்திருக் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

### கல்வெட்டு-1

1. உஸ்வஸ்தி சாலிவாகன சகாத்தம் 1689 கலியுக ௵4898 இதன்மேல் செல்லா நி
2. ன்ற சறுவசித்தி ஆவணி மீ" போஸலெ வங்சொத்தாரகரான ஸ்ரீ துளசா மகாராசா சாயெபு
3. அவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகுற னாளையில் ஸ்ரீ மல்லார்சி காடோராயரவர்களுக்கு சீகாழிச் சீமை மு
4. காசு நடக்கையில் தற்ம்மபுரம் பண்டாரச் சன்னதி சிவஞான தேசிக சம்மந்தன் அனுக்கிறகத்தைப் பெற்ற
5. முத்துக்குமார சுவாமித்தம்பிரானவர்கள் வயித்தியனாத சுவாமி கட்டளை அதிகாரம் பண்ணு

6. குற காலத்தில் இரண்டாம் பிறகாரம் நாலு பிறத்து மதிளும் திருமாளிகைப் பற்றியும் அ
7. ம்மன் சன்னதி தட்டிசுற்றி மண்டபமும் சாங்கமாக கருங்கல் திருப்பணியாயிக் கட்டி
8. நிறைவேற்றி திருமாளிகைப் பற்றியின் மேலே னாலு பிறமும் வவ்வால் நெற்றி கட்டி நிறைவேறின.

இதேபோன்று முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் திருக் குளத்திற்கு நாற்புறமும் மண்டபம் கட்டி, குளத்தின் நடுவே மண்டபமும் எடுப்பித்தார் என்பதைப் பின்வரும் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

## கல்வெட்டு-2

1. உ ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் 1692 கலியுக ஸு4871 இதன் மேற்
2. செல்லாநின்ற விகுற்தி வையாசி மீ பொஸலெ வங் சொத்தார கரான ஸ்ரீ துளசா மகாராசா சா
3. யெபு அவர்கள் ராச்சிய பரிபாலநம் பண்ணுகிற னாளையிலே ஸ்ரீ மல்லார்சி காடேராயரவர்
4. களுக்கு சீகாழிச் சீமை மூகாசு நடக்கயில் தற்மபுறம் பண்டாரச் சன்னதி சிவஞான தேசிகச்
5. சம்மந்தன் அனுக்கிறகத்தைப் பெற்ற ஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரானவர்கள் வயி
6. த்தியனாத சுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகுற காலத் தில் தீர்த்தக்கரை நாச்சாரியும (ய்ய)
7. மண்டபமும் சாங்கமாக கருங்கல் திருப்பணியாயிக் கட்டி நிறைவேறினது உ.

இவ்வாறு திருப்பணிகள் பல செய்தபோது கட்டப்பட்ட மண்டபம் ஒவ்வொன்றிலும், குளத்தைச் சுற்றியுள்ள மண்டபத்தி லும் இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் மல்லார்சி காடேராவ், தருமபுரம் பண்டாரசந்நிதி சிவஞான தேசிக சம்பந்தர், கட்டளைத்தம்பிரான் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் மற்றும் துளசாவின் தந்தை பிரதாப சிம்ம மகாராசா ஆகியோருடைய படிமங்களைத் தூண்களில் இடம்பெறச் செய்து அவ்வவர்களின் திருவுருவங்களுக்கு மேலாக அவரவர்களுடைய பெயர்கள் தமிழில் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.



வைத்தீசுவரன் கோயில் படிமங்கள்.

## திருச்சிராப்பள்ளி
## தாயுமானவர் கோயில் மண்டபத்தில்

திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமித் திருக் கோயிலின் மகா மண்டபத்துத் தூண் ஒன்றில் தருமை ஆதீன கர்த்தர் ஒருவருடைய திருவுருவம் உள்ளது. அவர் தலையில் சடா முடியுடன் இறைவனை வணங்கும் கோலத்திலுள்ளார். இத்திருக் கோயிலுக்குத் தருமை ஆதீனக் கட்டளை ஒன்றும் உள்ளது. இம்மண்டபத் திருப்பணி தருமை ஆதீனகர்த்தரால் செய்யப் பெற்றிருக்க வேண்டும்.

இதுபோலவே விளநகர் திருக்கோயில், மயிலாடுதுறை மயூரநாதர்த் திருக்கோயில், தஞ்சை கொங்கணேசுவரர்க் கோயில் முதலிய இடங்களிலும் இம் மடாதிபதிகளின் உருவச் சிலைகள் தூண்களில் வடிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

### குறிப்புகள்

1. A.R.E 421 of 1918
2. A.R.E 420 of 1918.

# தில்லைக் கோயிற் சிற்பிகள்

சோழப் பெருமன்னர்கள் காலத்தில் திருக்கோயில்களையும் சிற்பங்களையும் செப்புத் திருமேனிகளையும் உருவாக்கிய சிற்பிகள், ஸ்தபதிகள் போன்றவர்களை மாமன்னர்கள் பெரிதும் மதித்துப் பல விருதுகள் வழங்கிப் போற்றினர் என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம். முதலாம் இராசராசன் காலத்தில் தஞ்சைப் பெருங்கோயிலை உருவாக்கிய தலைமைத் தச்சனான குஞ்சரமல்லனுக்கு மாமன்னன் தமது பெயரையே விருதுப் பெயராக்கி 'இராஜராஜப் பெருந்தச்சன்' எனச் சிறப்பித்தனன் என்பதைத் தஞ்சைப் பெருங் கோயிலின் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். இதே போன்று செம்பியன் மாதேவியார் தாம் போற்றி மதித்த சக்கடி சமுதியன் என்ற சிற்பிக்குப் பல சிறப்புகள் செய்தார் என்பதையும் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் இத்தச்சர்கள் அவ்வக் கோயில்கள் கட்டுதற்கு உபயோகப்படுத்திய அளவுகோல்கள் பற்றியும் கல்வெட்டுகள் விவரிக்கின்றன. பெரும்பாலும் அவ்வக் கோவில் இறைவனின் பெயரால் அளவுகோல்களின் நீளத்தைச் சில கோயில்களில் கல்லில் குறித்தனர். இவ்வாறு ஸ்தபதிகளால் குறிக்கப்பட்ட அளவுகோல்களின் குறியீடுகளைத் திருவாலங்காடு, திருவண்ணாமலை, தில்லை போன்ற திருக்கோயில்களில் காண முடிகிறது.

தில்லைத் திருக்கோயிலில் பல்வேறு காலங்களில் வாழ்ந்த சிற்பிகளின் திருவுருவச் சிலைகளையும் அவர்களது பெயர்களையும் அவர்கள் உபயோகித்த அளவுகோல்களின் அளவுகளையும் இன்று நாம் காண முடிகிறது. தில்லைத் திருக்கோயிலின் மேலைக் கோபுரத்தை விக்கிரம சோழனும் கீழைக் கோபுரத்தைக் குலோத்துங்கனும் வடக்குக் கோபுரத்தைக் கிருஷ்ண தேவராயரும்





தில்லைக் கோயில் சிற்பிகள்

தெற்குக் கோபுரத்தைக் கோப்பெருஞ்சிங்கனும் எடுத்ததாகத் தில்லைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கோபுரங்களில் வடக்கு மற்றும் கீழைக் கோபுர வாயில்களில் அக்கோபுரங்களை எடுத்த சிற்பிகளின் உருவச் சிலைகள் உள்ளன.

வடக்குக் கோபுர வாயிலின் மேற்குப் பகுதியில் உயரமான மேல் மாடத்தில் கிருட்டிண தேவராயரின் வணங்கும் கோலக் கற் படிமம் உள்ளதைக் காணலாம். இம் மாடத்திற்கு நேர் கீழாகத் தரை மட்டத்திற்குச் சற்று மேலாக இரண்டு குடைவுப் பகுதிகளில் நான்கு சிற்பிகளுடைய உருவச்சிலைகள் உள்ளன. ஒவ்வொருவர் தலைக்கு மேலும் அவரவர்களுடைய பெயர்கள் கல்வெட்டாகக்



தில்லைக் கோயிற் சிற்பிகள் அளவுகோலுடன்

காணப்படுகின்றன. இடுப்பில் நீண்ட ஆடை, காதில் குண்டலங்கள், தலையில் நீண்ட குல்லாய்; மார்பில் அணிகள், கைகளில் காப்புகள் திகழ இறைவனை வணங்கும் கோலத்தில் நால்வரும் உள்ளனர். இதில் முதலாமவர் பெயர் விருத்தகிரியில் சேவகப் பெருமாள் என்றும், அடுத்து "இந்தச் சேவகப்பெருமாள் மகன் விசுவமுத்து" என்றும், அதற்கடுத்து "இவன் தம்பி காரணாகாரி" என்றும், நான்காவதாகத் "திருப் பிறைக்கொடை ஆசாரி திருமருங்கன்" என்றும் பதினாறாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்தமைதியில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இதேபோன்று கீழை இராச கோபுரத்தில் இரண்டு குடைவுகளில் நால்வருடைய உருவச் சிலைகள் உள்ளன. இவர்கள் தலைப்பாகை, கழுத்தில் உருத்திராட்ச மாலை, மார்பில் புரிநூல், கைகளில் காப்புகள், இடுப்பில் நீண்ட ஆடை, ஆடைக்கு மேல் ஒரு துண்டு சுற்றப்பட்டுள்ள நிலையில் இரு கரம் கூப்பி இறைவனை வணங்கும் கோலத்தில் காணப்படுகின்றனர். இதில் ஒருவருக்கு அருகே ஒரு நீண்ட அளவுகோல் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு கோலின் உள் அளவுகளும் குறியீடுகளாகக் காட்டப்பட்டுக் காணப்படுகின்றன. இதே கோபுர நுழை வாயிலில் உள்ள இரண்டு மாடங்களில் இரண்டு தனித்த கற்சிலைகள் தோளில் உழவாரம் போன்ற ஒரு கருவியைச் சுமந்து கொண்டு இறைவனை வணங்கும் கோலத்தில் காணப்படுகின்றன. இப்படிமங்கள் அனைத்தும் இக்கோயிற் பணியில் ஈடுபட்ட சிற்பிகளுடைய உருவச் சிலைகளாகும். தில்லைத் திருக்கோயிலில் உள்ள சோழர் கால மற்றும் விசயநகரக் காலச் சிற்பிகளின் உருவங்களில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதேபோன்று இவர்கள் படைத்திட்ட சிற்பங்களின் கலை நயங்களும் காலத்தாலும் பாணியாலும் வேறுபட்டு நிற்கின்றன.

## துணை நின்ற நூல்கள்


1. Annual Reports on Epigraphy - all volumes - *Archaeological Survey of India*
2. South Indian Inscriptions all volumes - - *Archaeological Survey of India*
3. Epigraphia Indica - all volumes Archaeological Survey of India
4. Inscriptions of Puducottai State
5. Epigraphica Carnatica
6. Thirumalai Thirupathi Devasthanam Inscriptions
7. Prof. K.A. Nilakanta Sastri felicatation volume.
8. The Cholas - K.A. Nilakanta Sastri, Madras University *Publication* - 1938
9. Early Cholas, N. Sethuraman, Raman & Raman Kumbakonam - 1980
10. The Imperial Pandyas ... ,, ,, 1978
11. Medieval Pandyas ... ,, ,, 1980
12. The Cholas ... ,, ,, 1977
13. *History of the Pallavas of Kanchi*, - R. Gopalan. - 1928
14. Thyagaraja *Temple*, *Thiruvarur* - S. Ponnusamy, Department of State Archaeology, Madras - 1972
15. Portrait Sculptures *in South India* - T.G.Aravamuthan
16. Indian Architecture - M.A.Ananthalwar.
17. *South Indian Bronzes* - O.C. Gangoly. (Modern Review Journal)
18. South Indian Portrait Sculpture - O.C. Gangoly. (Modern Review Journal)

19. History of Indian and Eastern Architecture -
James Fergusson.
20. Illustrated guide to the South Indian Railway - 1913
21. Topographical list of Madras Presidency -
V. Rangacharya, Vol. 1-3
22. List of Antiqurian remains in the Presidency of Madras
Robert Sewell.
23. List of inscriptions of tombs or monuments in Madras.
Vol. 1-2, 1905, by James Cotton.
24. Early Cholas Temples ... S. R. Balasubramanian
Orient Longman - Madras - 1971
25. Middle Chola Temples ... ,,
Orient Longman - Madras - 1975
26. Later Chola Temples ... ,,
Mudgala Trust - Delhi - 1958.
27. Early Chola Art ... ,,
28. Nayaks of Tanjore ... Vridhagirisan
Annamalai University.
29. Maratta Rajas of Tanjore ... K. R. Subramanian
60, T.S.V. Koil St,
Madras-4—1928
30. Descriptive Catalogue of Sanskrit, Telugu, Marathi and
Tamil Manuscripts of Sarasvathi Mahal Library, Thanjavur
- all volumes.
31. South Indian Studies, Vol. I-II, - Dr. R. Nagaswamy
Saher - Abiramapuram - Madras - 1978-79.
32. Hero-stones in Tamil Nadu - Natana, Kasinathan.
Arun Publication - Mandaveli Madras - 28 - 1978.
33. Raghuvamsam of Kalidasa - Ed. by G. R. Nandargikar -
Motilal Banarsidas, Delhi-1971
34. Prathima Natakam of Basa - Ed, by Sridharanada Sastri
Motilal Banarsidas, Delhi. - 1958.
35. Political Geography of the Chola country -
Y. Subbarayalu, Department of State Archaeology,
Madras-1973
36. Art of India - Dr. C. Sivaramamurthi-India Book House.
Bombay - 1974

37. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் -
தமிழக அரசு தொல்பொருள்துறை வெளியீடு.
38. திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டுகள் -
தமிழக அரசு ,, வெளியீடு.
39. நன்னிலம் கல்வெட்டுகள் -
தமிழக அரசு ,, வெளியீடு.
40. திருக்கோயிலூர்க் கல்வெட்டுகள் -
தமிழக அரசு ,, வெளியீடு
41. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் - முனைவர் இரா. நாகசாமி, தமிழக அரசு தொல்பொருள்துறை வெளியீடு-1966.
42. பிற்காலச் சோழர் வரலாறு-தி.வை.சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு-முதற்பதிப்பு -1958
43. பாண்டியர் வரலாறு - தி. வை. சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு-முதற்பதிப்பு 1957
44. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் - எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் -தமிழ் வெளியீட்டுக்கழகம், தமிழ்நாடு அரசு 1966
45. சோழர் கலைப்பாணி - எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தமிழ் வெளியீட்டுக்கழகம்-தமிழ்நாடு அரசு- 1966.
46. மாமல்லை-முனைவர் இரா. நாகசாமி-தமிழக அரசு தொல் பொருள்துறை வெளியீடு இரண்டாம்பதிப்பு-1980.
47. தென்னிந்திய வரலாறு - கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி -சென்னைப் பல்கலைக்கழகம்.
48. பன்னிரு திருமுறை வரலாறு - க. வெள்ளைவாரணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்-1969.
49. திருத்தலப் பயணம் - இராய. சொக்கலிங்கம் - அழகப்பா அறநிலையம்- காரைக்குடி 1966.
50. தமிழ் இலக்கிய வரலாறு (10 ஆம் நூற்றண்டு) திரு மு. அருணாசலம்- காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம்-1972
51 கல்வெட்டுத் தேன் துளிகள்-வெ. மகாதேவன்,அன்னபூர்ணா பதிப்பகம், சிதம்பரம்-1981

52. வரலாற்று நோக்கில் பழையாறை - வெ. மகாதேவன்,
அன்னபூர்ணா பதிப்பகம், திருப்பனந்தாள்-1980.
53. குடவாயிற் கோட்டம்-குடவாயில் பாலசுப்பிரமணியன்
(வரலாற்றுப் பேரவை, சென்னை வெளியீடு)-1978
54. கருணாகரத் தொண்டைமான் - ,, ,, 1979
55. சங்கத் தமிழ் இலக்கியங்கள் -கழக வெளியீடு.
56. கல்லும் சொல்லும் - முனைவர் இரா. நாகசாமி
-சேகர் பதிப்பகம் சென்னை-88-1977
57. மதுரை நாயக்கர் வரலாறு-அ. கி. பரந்தாமனார்.1971

# சொல்லடைவு

## அ


அகத்தீசுரமுண்டயார் 198
அகமதாபாத் 100
அகர ஓகை 180
அகல்யாபாய் 882, 887
அச்சுதப்ப நாயக்கர் 4, 108, 282, 247—254, 264, 288 410.
அச்சுதமங்கலம் 186
அச்சுதராயன் 4, 281, 241 244, 255—257
அச்சுதாப்புதயம் 251, 255
அடில்சா 291
அண்ணவாயில் 48
அத்தியந்தகாமன் 88
அத்துவைதகேசரி 881
அத்துவைத நிருபண 867
அதிகமான் நெடுமானஞ்சி 19
அதிவீரராமபாண்டியர் 255
அந்தராளம் 102
அப்பர் 85, 124, 178
அப்பாவையங்கார் 206, 208, 218
அப்புதார்பன நாடகம் 297
அபராசிதன் 68
அபிநவபோஜன் 253
அபிராமபட்டர் 308
அபிராமி அந்தாதி 808
அம்பலவன் திருவிசலூரான் 72, 404
அம்பாநகர் 378
அம்மங்குடி 117
அம்முனு அம்மணி 847—849
அமண்குடி 114, 117
அமரசிம்மன் (அமர்சிங்) 292, 881—887, 847, 888, 885
அமிர்தானுபவ 867
அவனிப சேகரன் 47
அயோத்தி 884
அர்ச்பால்டு கேம்பல் 881
அரியபுத்திரபத்தர் 848, 849
அரிஞ்சய சோழன் 75
அரிசியப்ப முதலியார் 805
அரையன் இராசராசன் 189, 192
அருணகிரியார் 284
அருணாசலப் பண்டாரம் 240, 801
அரும்பாக்கமுடையான் 174
அருமொழித்தேவன் 7
அருளையர் 286
அழகப்பெருமான் பிள்ளை 248
அழகிய மணவாளன் 409.
அழகியமணவாள தாசன் 206
அழகிய மணவாளினி மண்டை-யாழ்வார் 187
அழகிரி 291
அறநிலை விசாகன் 174
அன்ன பூர்ணா 817
அன்னமாச்சாரியார் 297
அனந்த பத்மநாப தீர்த்தர் 282
அனந்தபன்மன் 186
அனந்த மௌனி 870, 877, 878, 888
அனந்த வால்மீகி இராமாயணம் 877
அனுப்பி 414
அனுமந்தகுடி 827
அஜெந்தா 51, 95


## ஆ


ஆக்கூர் நாடாள்வார் 67
ஆடுதுறை 80, 84
ஆத்மராம் 870, 871
ஆதித்த கரிகாலன் 89, 98
ஆதித்த சோழன் (முதலாம்) 4, 71, 68—69, 401, 402
ஆதித்தேசுவரம் 64
ஆதித்தன் சூர்யன் 95
ஆதிநாதர் 51
ஆதிவராக குகை 98
ஆதிவராக மண்டபம் 96
ஆந்திர காளிதாசன் 827
ஆந்திர மாநிலம் 187
ஆபத்சகாயேசுவரர் 80
ஆமுக்த மால்யதா 221
ஆர்க்காடு நவாப் 819, 827
ஆர்வலக் கூற்றம் 5
ஆரிய பட்டாள் 409, 410
ஆரூர் 84, 881
ஆரூர்க் கூற்றம் 5
ஆலங்குடி 188
ஆலவாய்ப் புராணம் 851
ஆலவேலி 188

ஆரூர்க் கூத்தம் 5, 198
ஆறுமுக நாவலர் 125
ஆனந்தரங்கம் பிள்ளை 359

இ

இங்கண் நாடு 5, 147
இடர்க் கரம்பை 187
இத்தாலி 344
இரத்தின கிரீசர் 128
இரத்தினன் யாசம் 98
இரகுநாத நாயக்கன் 4, 225
231, 247, 251, 258—262,
264, 271, 279, 283, 284
356
இரகுநாதர்ப் புதயமு 258
இரகுநாத நாயக்கா புதயம் 247,
248, 253, 255, 271
இரகுநாதநாயக்காபுதயமு
243, 258, 271
இரகுநாத விலாசம் 266
இரகுநாதேந்திர வீணை 254
இரட்டபாடி கொண்ட சோழ
வளநாடு 48
இரண்டாம் சேனன் 49
இரணிய கர்ப்பம் 106
இரத்தின தூலிகா 297
இரதி மன்மதவிலாசம் 271
இராகவசுவாமி 388
இராகவாப்புதயம் 296
இராகவேந்திரர் 255
இராகவேந்திர விஜயம் 255
இராகோசி போன்சலே 318
இராசகம்பீரன் 165
இராச கம்பீர ஈசுவரமுடையார்
21
இராசக்கீரீடை 271
இராச கோபால விலாசம் 271
இராச கோபாலாம்பிகா 273,
274
இராசசிம்மன் 88, 89, 258
இராச மகேந்திரன் 54
இராச மகேந்திரபுரம் 187
இராசராசன் (முதலாம்)
4, 5, 8, 24, 35, 58, 59, 83,
84, 89, 90, 98—109, 117, 119
120, 130, 170, 177
இராசராசன் (இரண்டாம்)
4, 21, 163, 167, 170, 178,
268
இராசராசன் (மூன்றாம்)
4, 182, 195—198, 200
இராசராச பெருந்தச்சன் 421
இராசராச சோழனுலா 161
இராச ராசேசுவர நாடகம் 94
இராச ராசபுரம் 22, 174
இராசராசன் திருவாயில் 286,
377
இராசராசபுரி 162
இராசராசமண்டலம் 6
இராசராசேச்சுரம் 56, 95, 118,
130, 162, 167, 285, 316
இராசராச வளநாடு 7, 126
இராசாதிராசன் (முதலாம்) 112,
117, 120, 268
இராசாதிராசன் (இரண்டாம்)
66, 67, 178
இராசாராம் ராசாசாகேப் 352
இராசேந்திரன் (முதலாம்) 4,
51, 86, 98, 101, 109—115,
117, 119, 120, 138, 190, 268
387
இராசேந்திரன் (இரண்டாம்) 4,
152, 154, 161—165
இராசேந்திரன் (மூன்றாம்)

இராசேந்திரசோழபிரம்ம
மாராயன் 119
இராசேந்திரசோழீச்சரம் 192
இராசேந்திர சோழ ஆச்சாரியன்
187, 192
இராசேந்திரவளநாடு 7
இராதாமாதேவ விவாகம் 271
இராமகிருஷ்ண கவி 320
இராமதாசர் 369, 375
இராமநாதன் கோயில் 21
இராமபத்ராம்பா 255
இராமநாதபுரம் 286, 296, 327
இராமபஞ்சரத்னமாலிகா 331
இராமபண்டிதர் 331—332
இராம பத்ரதீட்சிதர் 297
இராமபத்ராம்பா 247, 248, 258
இராமராயன் 254
இராமானந்தா 254
இராமாமிருத தரங்க 331

இராமாயணம் 66
இராமாயண சாரசங்கிரகம் 255
இராமாயணயக்ஷகானம் 327
இராமவிஜயம் 379
இராமேசுவரம் 247, 369
இராமோசி சர்ஜேராவ் காட்கே 361—365
இரானுபாயி 369
இராஜகோபால தண்டகம் 272
இராஜரஞ்சனவித்யா விலாச நாடகம் 310
இலங்கை 369
இலெட்சுபாயி (இலெட்சுமிபாய்) 361—365
இலெட்சுமிராசபுரம் 362
இலெட்சுமிபுரம் 236
இலெட்சுமிநாராயண கல்யாணம் 297
இலெட்சுமி பூதேவி சம்வாதம் 297
இளங்குடி குன்ற நாடன் 17
இளங்கோ பிச்சி 64
இளங்கௌதமன் 46, 47, 49, 50, 51
இளம் பொன் வணிகனார் 17
இளைய திருநாவுக்கரையர் 404
இன்னம்பர் நாடு 5, 196

ஈ

ஈசுவரசிவர் 135—136

உ

உடையார்குடி 89
உடையார்பாளையம் 87, 319
உத்தர கீதா 367
உத்தர சம்பு 293
உத்தம சீலி 146
உத்தம சோழன் 4, 5, 76, 77, 83—85, 89—91, 109
உத்தம சோழப் பல்லவரையர் 153
உத்தர பஞ்சலிசி பத்திரிகா
உதயபெருமாள் சோழக்கோன் 193
உபய குலாமலன் 147
உமாபதி சிவாச்சாரியார் 157
உமாம்பா பாயி சாகேப் 351
உய்யக் கொண்டார் சோழ வளநாடு 215
உய்யக் கொண்டான் திருமலை 213
உலகமாதேவி (லோகமாதேவி) 93—103, 130
உலக முடையாள் 7
உலகுடைமுக்கோக் கிழானடிகள் 7, 21, 161
உலகுய்ய வந்த வளநாடு 196
உலகுய்ய நின்றாடுவான் 126
உறையூர்க் கூற்றம் 5, 17
உஷாபரிணயம் 271

எ

எட்டுத்தொகை 12
எல்லப்ப நாவலர் 231
எல்லோரா 51, 95
எழுவன் சந்திராதித்தன் 72, 405

ஏ

ஏகவீரன் 47
ஏகோசி (முதலாம்) 4, 291, 309
ஏகோசி (இரண்டாம்) 313
ஏழுலகுமுடையாள் 21, 161
ஏனு செவ்வை 291

ஐ

ஐயங்குளம் — 233, 266
ஐயம்பேட்டை 34, 134, 266, 292
ஐயன் கடை வீதி 266

ஒ

ஒட்டக்கூத்தர் 114, 139, 143, 144, 153—155, 161, 162, 171
ஒய்சாளர் 4, 3, 403, 413
ஒரத்தநாடு 333
ஒரே சண்டு 355

ஓ

ஓய்மாநாடு 7
ஓல்கார் 332

ஓவ் கீட் 356

க

கங்காதரர் 81, 32, 34
கங்காஜி 296
கங்கபாடி 6
கங்கா காவேரி கல்யாணம் 297
கங்காதரமகி 296
கங்கநாடு 173
கங்கா பார்வதி சம்வாதமு 297
கங்கை கொண்ட சோழன் 109
கங்கை கொண்ட சோழபுரம் 190, 192
கங்கை கொண்ட சோழ வளநாடு 7
கசவல்லி அம்மை 285
கண்ணகி 22
கண்ணமங்கை 262
கண்ணனூர் 58
கண்டர்கோட்டை (கந்தர்வ கோட்டை) 90
கண்ட கோபாலன் 199
கண்டராதித்த சோழர் 4, 75, 80, 83, 84, 89, 177
கண்டராதித்த வாய்க்கால் 76
கண்டராதித்தம் 77
கண்ட ராதித்த சதுர்வேதி மங்கலம் 67
கண்டராதித்த பேரேரி 76
கண்டியூர் 57
கணேசலீலார்ணவம் 338
கணேச விஜயம் 338
கந்தாடை இராமானுஜ தாசன் 209, 216, 217
கப்பல் சாஸ்திரம் 357
கம்சவிஜயம் 271
கமலை ஞானப் பிரகாசர் 239, 240
கயலூர் உடையான் 56
கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி 124
கர்ணகம்மலு 284
கர்ம விபாகம் 327
கரந்தைத்திணை 18
கருடமண்டபம் 409
கருணாகரப் பிள்ளையார் 139
கருணாகர வீரதேவர் மடம் 139
கருணாகரத் தொண்டமான் 135—144
கருந்தட்டாங்குடி 74
கருநாடக நவாப் 318, 320, 332
கருவூர்த் தேவர் 102, 103, 105.
கலகப்பிரியன் 29
கலாவதி 254—257
கலிங்கம் 136, 138
கலிங்கத்துப்பரணி 136, 148
கவிச்சக்கரவர்த்தி 153—155
களக்காடு 182
களந்தை வச்சணந்தி முனிவர் 174
களப்பிரர் 3, 29
கற்பதுக்கை 17, 24
கற்றளிப்பிச்சன் 72, 403, 404
கற்றிட்டை 17
கனக சபாபதி 285
கனச்யாம பண்டிதர் 309
கஸ்தூரி ரங்கையா 327

கா

காகதீயர் 58
காசிமடம் 125
காஞ்சி நகர் 136, 138, 174, 232
காஞ்சிபுரம் 89, 136, 285
காஞ்சிபுரவரதீசுவரன் 212
காட்டுமன்னார்குடி 84
காட்டு ராசா 315, 317, 318
காட்சி கொடுத்த திருவிழா 394
காடவர் 58
காந்திமதி 274
காமரசவல்லி 87, 88
காமாட்சி பாய் 100, 351
காமாட்சி பாயி சாயேப் 225, 351
கார் எட்டு 124, 125
கார்க் கோடகேசுவரர் 87
கார்த்த வீரியார்ச்சுனன் 235
கார்த்திகை கோபுரம் 409
காரணாச்சாரி 424
காரைக்குறிச்சி வேலாயுத உபாத்தியாயர் 338
காலிங்கராயன் 149
காலிங்கராயப் பிள்ளை 356—359

காவேரி கல்யாணம் 297
காளிதாசன் 12

கி

கிராதவிலாசமு 297
கிருட்டிண தேவராயர் 4, 8, 221, 225, 234, 235, 243—245, 421
கிருட்டிண இராசன் 71
கிருட்டிண இராமன் 114, 117, 263
கிருட்டிண பாயி 375
கிருட்டிணன் கௌசலை 119
கிருஷ்ண லீலா தரங்கிணி 282
கிருஷ்ண லீலா விலாசமு 297
கிருஷ்ணம்மா காடேராவ் 331
கிருஷ்ணா 161
கில்லேதார் 317
கிழவன் சேதுபதி 296
கிழார்க் கூற்றம் 8
கிளைவ் 318
கிறிஸ்டியன் (நான்காம்) 355, 356

கு

குஞ்சர மல்லன் 421
குடந்தைக் கீழ்க் கோட்டம் 214, 401
குடமூக்கு 49, 401
குடவாயில் (குடவாசல்) 130, 132, 140, 180, 181, 190
குண்டூர் 279
குணபரன் 29, 31—34
குத்தவாதி நாடு 188
குந்தவை 98, 130
குப்பண்ணா 327
குப்பண்ணன் 355, 357—359
குப்பாக்கியபட் 357, 358
குப்தர்கள் 13
கும்பகோணம் 22, 49, 106, 114, 140, 155, 160, 178, 212, 222, 254, 259, 288, 268, 295, 306, 320, 401, 403
கும்பேசர் 22
குமரகுருபர சுவாமி 332
குமரகுருபர கோசுவாமி 332
குருஞான சம்பந்த தேசிகபரமாச்சாரியார் 289
குருணாவை 189
குலசேகர ஆழ்வார் 151
குலமங்கல நாடு 5
குலோத்துங்கன் (முதலாம்) 4, 8, 105, 139, 140, 143, 263
குலோத்துங்கன் (இரண்டாம்) 4, 117, 152, 157, 161, 162, 178
குலோத்துங்கன் (மூன்றாம்) 4, 67, 126, 127, 158, 160, 163, 178—184, 185—188, 195, 198, 200, 421
குலோத்துங்க சோழவளநாடு 8
குலோத்துங்க சோழ மாபலி வாணாதிராயன் 147
குலோத்துங்க சோழ நல்லூர் 127
குலோத்துங்க சோழப் பெருந் தெரு 190, 192
குமந்தைவேல் 412
குளித்தலை 6
குன்றத்தூர் சேக்கிழார் 157-160
குன்னூர் 47
குற்றாலம் 80, 84

கூ

கூனஞ்சேரி 182, 196

கே

கேசவசுவாமி 162
கேடியப்ப பிள்ளை 285
கேயமாணிக்க வளநாடு 391
கேரளாந்தகன் 7
கேரளாந்தக சோழ வளநாடு 48
கேரளாந்தகன் திருவாயில் 287

கொ

கொங்கணேசுவரர் 420
கொங்கு மண்டபம் 71
கொடும்பாளூர் உடையான் 56
கொப்பய்ய தேவ மகாராசா 414
கொல்லிமலை 6
கொற்கை 179

கோ

கோச்சோழன் 76
கோட்டூர் 158
கோட்டைக்கரை 7
கோதண்ட இராமன் 63
கோதண்ட இராமேசுவரம் 64
கோதாவரி 369, 138
கோப்பன் கேஹன் 356
கோப் பெருஞ்சிங்கன் 53, 195
கோப்பெருஞ் சோழன் 18
கோபப் பிரசாதம் 124
கோமுகீசுவரர் 403
கோயிலொழுகு 208, 217
கோர்வியாசே சாகித்யாசே ஜீனச 339
கோலார் 110, 114
கோலாரம்மா கோயில் 114
கோவர்த்தன நாடகம் 271
கோவிந்தசுடி 264, 266
கோவிந்ததாசன் 271, 275, 277, 278
கோவிந்த கீட்சிகர் 22, 231, 232, 247, 248, 257, 263—269, 277
கோவிந்தபான சுவாமி 388
கோவிந்தபுத்தூர் 107, 266
கோவிந்கராவ் காடேராவ் 331
கோமியர் கோக் கண்டன் 76
கோனேரி தேவமகாராசன் 414
கோனேரிராசபுரம் 77, 218
கோனேரிராயன் 4, 209, 211—219

கௌ

கௌதம் சாராபாய் 100, 101
கௌதமன் தில்லைவன முடையான் 189—193

ஞா

ஞானபக்த சம்வாதம் 375
ஞானேசுவரி 368

ச

சக்கடி சமுகியன் 421
சக்கரபாணி 306
சக்கராப்பள்ளி 84
சக்கராயன் 254
சக்கரவாகீசுவரர் 84
சக்குவார்பாய் 331
சகசி 240, 291, 292, 294, 295—302, 303, 309, 317, 387, 392, 393, 416
சங்கரகாளீசம்வாத நாடகம் 297
சங்கராச்சாரியார் 319, 376
சங்கரசோழனுலா 154
சங்கர நாராயண கல்யாணம் 296
சங்கர பல்லக்கி சேவா பிரபந்தம் 297
சங்கீத சாராம்ருகம் 309
சங்கீத சுதா 232, 235, 248, 253, 254, 255,
சடையமாறன் 47
சடையவர்மன் பராந்தக பாண்டியன் 47
சடாவர்மன் சுந்தரபாண்டியன் 53—59, 413
சண்டேசர் 99
சத்தியசந்தன் 29
சத்தியசந்தர் 383—386
சத்கியசந்த விஜயம் 383
சத்திரியசிகாமணி 7, 277
சத்துருமல்லன் 29
சத்தியபாமா விவாதம் 271
சத்திரபதிசிவாசி 291, 292, 294, 332, 369.
சதாரா 318
சதாசிவ மொகிதே 375
சதாசிவராவ் 332
சதிபதி கானவிலாசமு 297
சதுர்தண்டி பிரகாசிகை 309
சந்தா சாகிப் 313, 318
சந்கிரசேகர விலாசம் 297
சந்திரசேகரன் ஆதி-விடங்கன் 147
சந்திரஹாச விலாச நாடகம் 296
சம்பந்கர் 124
சமயபுரம் 53
சமர்த்த இராமதாசர் 369-371, 378, 387

சமுத்திர மதனம் 271
சநகர் 104
சநத்குமாரர் 104
சநந்தனர் 104
சநாதனர் 104
சயங்கொண்டார் 135, 140, 141, 143
சர் தாமஸ் மன்றோ 362
சரசுவதி பண்டாரகம் 186
சரபன் தொண்டவை 119
சரபேந்திர பூபால குறவஞ்சி 338
சரபேந்திர ராச பட்டினம் 338
சரபோசி (முதலாம்) 292, 295 303—307, 309, 317, 337
சரபோசி (இரண்டாம்) 273, 292, 316, 331, 337—347, 351, 361
சரவணைத் தம்பிரான் 305
சஜ்ஜன் காட் 369

சா

சாக்கோட்டை 295, 303, 306
சாகராசபுரம் 296
சாகித்திய ரத்னாகரா 232, 248 258, 263, 265
சாகு மகராசா 318
சாகூசி 115, 318
சாகேந்திர விலாசம் 297
சாண்டில்ய பக்தி மீமாம்ச பாஷ்யம் 279
சாதவாகனர் 18
சாமந்தனார் 416
சாவித்திரி அம்மையார் 379
சாளுக்கியர் 189
சாளுவத்திம்மன் 414
சாளுவ நரசிம்மன் 218
சாஹஜியம் 297

சி

சிக்கல் 239
சிங்கரசன் பாளையம் 264
சிங்களம் 47
சிங்களவாடி 369
சிங்களாந்தகன் 71
சித்தன்ன வாசல் 41, 49
சித்தாந்த இரத்தினாகரம் 186
சித்திரக்காரப் புலி 29
சித்திர வேலைச் சிங்காதனம் 300, 391 to 398, 416
சித்தீச்சரம் 239
சித்தூர் 64
சித்தோசி 315
சிதம்பரம் 221, 222
சிதம்பரம் அகோர பண்டாரம் 305
சிதம்பர நாத மாசிலாமணி 239
சிதம்பரேசுவர சுவாமி 305
சிம்ம விஷ்ணு 29. 38
சிம்ம விண்ணப்போத்திராதி ராசன் 37. 38
சியாமா சாஸ்திரிகள் 297
சிலப்பதிகாரம் 22. 23
சிவகங்கைக் கோட்டை 282
சிவகாமி சுந்தரி பரிணய நாடகம் 311
சிவக்கொழுந்து தேசிகர் 338
சிவஞான கண்ட ராதித்தர் 76
சிவஞான தேசிகர் 324
சிவஞான தேசிக சம்பந்தர் 417, 418
சிவஞான போதம் 195
சிவநாராயணானந்ததீர்த்தர் 279
சிவபாத சேகரன் 35, 83
சிவப்பிரகாச சுவாமிகள் 124
சிவராவ் (சிவராயன்) 336
சிவலீலாம்ருத 379
சிவாசி 100, 313, 316, 351-353
சிவானந்தம் 338
சிவானந்த லஹரி 377
சிற்றானைச்சூர் 403
சிறு கருந்தும்பியார் 18
சிறுத் தொண்டர் 96
சிறு மல்லப்ப நாயக்கர் 248
சின்ன செவ்வா 281
சின்ன மருது 327
சின்ன மல்லா 231, 248
சின்னமனூர் செப்பேடு 417
சின்னையா 338

சீ

சீதா சுயம்வரம் 375
சீய மங்கலம் 30
சீர்காழி 324

சீர்காழி அருணாசலக் கவிராயர் 308
சீனப்ப கோசுவாமி 388
சீனிவாச நல்லூர் 188
சீனுவாச தாத்தாச்சாரி 271

சு

சுகாஷ்ட கடிகா 367
சுசான் பாய் 318, 315, 316, 317
சுந்தரர் 416, 124
சுந்தர சோழன் 4
சுப்பராயக் கவிராயா 388
சுப்பராயன் செட்டியார் 125
சுப்பா செட்டி 29, 315
சுலக்ஷணாம்பா புரம் 384
சுவாத்ம சுக 367
சுவாமிமலை 181, 196, 233-235, 237
சுவார்ட்ஸ் 388, 387, 342
சுவேக வராகர் 309
சுவேதாரண்யேசுவரர் 120

சூ

சூரியாஜி பந்த் 369
சூலக்கல் 264

செ

செங்கமல தாசு 291, 292
செங்குட்டுவன் 258
செஞ்சி 7
செஞ்சு லட்சுமம்மா 254, 255, 256, 257
செந்தலை (சந்திர லேகை) 3
செப்பறை மடம் 125
செம்பனார் கோயில் 66
செம்பியன் தமிழவேள் 68
செம்பியன் மாதேவி 74—78, 83—90, 130, 421
செயங்கொண்ட சோழ மண்டலம் 6, 137, 157
செயந்த பாலராசா 374
செயராம கிருஷ்ண தாசர் 375
செயராம சுவாமி 375, 376
செயின்ட் ஜார்ஜ் கோட்டை 358
செவ்வப்ப நாயக்கன் 4, 226, 231, 239—241, 243, 247, 264
செவ்வூர் 160, 175

சே

சேக்கிழார் 37, 162, 117, 391, 414
சேக்கிழார் புராணம் 157
சேங்காலிபுரம் 190
சேத்ர பாலர் 106
சேரநாடு 178
சேரர் 29
சேவகப் பெருமாள் 424
சேஷகவி 388
சேஷராயர் மண்டபம் 410

சை

சையத் 318, 317

சொ

சொக்கநாதநாயக்கர் 272, 291, 409 412, 418
சொயிராம்பா பாயி சாயேப் 351

சோ

சோடச கலா 377
சோமேசுவரர் 185-188
சோழபுரம் 110
சோழ மண்டல சதகம் 6

ட

டயிர் பண்டிதர் 318, 319

டெ

டெய்லர் 278
டென்மார்க் 355, 356, 359

த

தக்கயாகப் பரணி 152, 182
தஞ்சாவூரு ஆந்திர ராஜுலு சரித்திரமு 282
தஞ்சை புரீசுவரர் 225, 306
தடிகை பாடி 6
தண்டியலங்காரம் 152, 154
தமிழ் விடு தூது 154
தர்மா கூடம் 295
தரங்கம்பாடி 356—358
தரணி முழுதுடையாள் 4, 161
தரும கீதா 367
தருமபுரம் 269, 387
தருமபுரபண்டாரம் 324

தருமை ஆதீனம் 239, 240, 420
தலைக்கோலியர் 392
தலையாலங்கானம் 24
தளவாய்புரம் செப்பேடு 47
தளிசேசுவரர் 342
தளியூர் 200
தன்வந்திரி சாரநிதி 310
தன் வந்திரி விலாஸம் 310

தா

தாச போதம் 370
தாதாபுரம் 118
தாமன் அம்பலவன் 405
தாயுமான அடிகள் 158, 285—288, 414
தாராசுரம் 22, 56, 99, 152, 167, 174

தி

திண்டிவனம் 7
திம்மண்ணா 221
திம்மப்ப நாயக்கர் 231, 243, 244
தியாகப் பள்ளு 239
தியாகராச சுவாமிகள் 388
தியாகராச விலாசம் 297
தியாகேசர் குறவஞ்சி 296, 298, 299, 393
தியாகையர் 297
திரயம்பக ராயமகி 296
திராட்சா ராமம் 187
திரிபஞ்ச ரத்னமாலிகா 375
திரிபுர விசய சம்பு 296
திரிபுராந்தகம் 199
திரிபுவன மாதேவி 64, 109
திரிபுவன வீர தேவன் 198
திரி புவன வீரேசுவம் 175, 176, 182, 185, 196
திரு இந்தளூர் நாடு 5
திரு ஈங்கோய்மலை 121—127, 174, 222, 394
திரு ஈங்கோய்மலை எழுபது 124, 125
திருக்கடவூர் 308
திருக் கண்ணப்ப தேவர் திருமறம் 124, 125
திருக்கண்ணபுரம் 139
திருக்கருகாவூர் 68
திருக்கழுக்குன்றம் 68
திருகாம்புலியூர் 7
திருக்காளத்தி 71
திருக்குருகாவூர். 88
திருக்கொள்ளம் புதூர். 181
திருக்கோகர்ணம் 157
திருக்கோடிக்கா 84
திருக்கோயிலூர் 76
திருச்சத்திமுற்றம் 414
திருச்சி 37, 128
திருசிரபுரம் 285
திருச்சிராப்பள்ளி 4, 29, 35, 37, 38, 39, 158, 178, 285, 286, 413, 420
திருசசெங்காட்டங்குடி 215
திருச்செந்துறை 214
திருசேய்ஞலூர்ப் பிள்ளையார் 99
திருச்சேறை 275—287
திருஞானசம்பந்த அடிகள் 95
திருஞானசம்பந்தர் குகை 198
திருத்தணிகை 284
திருத்துறைப்பூண்டி 129, 200
திருத்தொண் டீசுரம் 198
திருநரையூர் 5, 34, 137, 405
திருநல்லம் 77, 84, 86, 218
திருநாகேச்சரம் 118, 157, 160
திருநாரையூர் 107
திருநாவுக்கரையன் 72
திருநாவுக்கரைய தேவர் 95
திருநெய்த்தானம் (தில்லைஸ்தானம்) 68
திருப்பதி திருமலை 215, 232, 235, 244, 266
திருப்பழனம் 68
திருப்பனந்தாள் 114, 382, 387
திருப்பனம் பூதூர் 146
திருப்பாற்றுறை 146
திருப்பிறைக்கொடை 424
திருப்புகழ் 284
திருபுவனம் 178, 334
திருப்புறம்பியம் 68, 212
திருப்பூந்துருத்தி 56, 59, 287
திருமக்கோட்டை 232
திருமங்கை ஆழ்வார் 277

திருமண்டங்குடி 105, 196
திருமணஞ்சேரி 84, 88, 245
திருமருங்கன் 424
திருமலாம்பா 216,225-227,231
திருமலை நாயக்கர் 253, 410
412, 413, 409
திருமலைய்ய
தேவமகாராசன் 215, 414
திருமலை ராயன் 4, 209
திருமலை ராயன் பட்டினம் 214
திருமழபாடி 87, 118, 214, 292
திருமறைக்காடு 285
திருமால்புரம் 89
திருமாளிகை தேவாரம் 99
திருமுடி சேதுராம செட்டியார்
358
திருமுருகாற்றுப்படை 124
திருமுல்லை வாயில் 89
திருமுனைப்பாடி நாடு 89
திருவண்ணாமலை 7, 221, 222
232—234, 282, 377, 421
திருவத்துறை 158
திருவதிகை 89, 149, 150
திருவரங்கம் 54, 55, 187, 205
—219, 251, 407, 410, 412
418
திருவலஞ்சுழி 106, 182
திலவலஞ்சுழி மும்மணிக்
கோவை 124
திருவழுந்தூர் நாடு 5
திருவத்தியூர் 187
திருவாஞ்சியம் 160, 175
திருவாசிரியன் 45, 46
திருவாமத்தூர் 51
திருவாரூர் 110, 129. 147, 157
174, 178, 179, 187, 188,
235, 299, 301, 304, 391
395
திருவாரூர் உசாவடி 215
திருவாலங்காடு 85, 89, 174,
176—179, 421
திருவாலங்காட்டுச் செப்பேடு 89
திருவாலி நாடு 5, 126
திருவாவடுதுறை 72, 387
திருவானைக்கா 146, 209, 418
திருவிசலூர் (திருவியலூர்) 106,
293
திருவிசலூர் ஐயாவாள் 297
திருவிசலூரான்
திருநாவுக்கரையன் 405
திருவிசைப்பா 74, 75, 76,
105
திருவிடந்தை 89
திருவிடை மருதூர் 174, 175
225, 241, 333, 334, 347—
349
திருவிந்தளூர் 331
திரு வெண்காடு 118, 120, 129
திருவெண்ணெய் நல்லூர் 196
திருவெழுக்கூற்றிருக்கை 124
திருவேரகம் 181, 196, 234,
235
திருவேள்விக்குடி 80
திருவையாறு 157, 266, 384
திருவையாறு புராணம் 265
திருவொற்றியூர் 89
திருவோத்தூர் 218, 219
திரைமூர் நாடு 80
திரை லோக்கிய மல்லன்
வந்திராசன் 174
தில்லை 149, 150, 174, 421
424

## தீ

தீபங்குடி 112
தீபாம்பா 309
தீர்க்க சைலம் 232, 235
தீர்த்தாவளி 367

## து

துக்காச்சி 144, 215
துக்கோசி 315, 317, 332
துபாசி 355 356, 359
துளசா 295 315. 337 327
—330, 331, 337, 418

## தெ

தெட்சிண துவாரகை
வர்ணனை 271
தெய்வப் பெருமாள் 162
தெலுங்க நாடு 178
தென் குமரி 3
தென் திருக்காளத்தி 144

தென்னவன் மூவேந்த வேளான் 96, 97, 99, 100
தெனாலி ராமன் 221

தே

தேருர்ந்த சோழன் 147, 176
தேருர்ந்த சோழன் கதை 144, 299
தேருர்ந்த சோழன் புராணம் 299, 393
தேவ பாணி 98
தேவாசிரியன் (மண்டபம்) 300 301, 392 393
தேவார தேவர் 98, 100, 101
தேவார நாயகம் 98
தேவிகோட்டை 254, 318
தேவேந்திர குறவஞ்சி 338
தேனு புரீச்சுரம் 264
தேஷ்பாண்டே 375

தொ

தொண்டரடிப் பொடியாழ்வார் 196
தொண்டை நாடு 89
தொண்டை மண்டலம் 29, 71, 157, 174
தொண்டைமான் 140, 142
தொண்டைமான் பேராற்றூர் 64
தொல்காப்பியம் 12, 20, 22, 24

தோ

தோஸ்த் அலிகான் 318, 320

ந

நக்கன் வண்ணாத்தடிகள் 72
நக்கீரர் 121—127, 174
நங்கை பரவையார் 95
நட்டுவ நிலை 174
நடுகற்கள் 12, 16—25
நடுவில் நாடு 7
நம்பி காளியார் 154
நம்பியாண்டார் நம்பி 107
நம்பியாரூரர் 95
நரச நாயக்கன் 216
நரசிங்கராவ் போன்சலே 382
நரசிம்மன் (முதல்) 38
நரசிம்ம ராயமடு 296
நரலோக வீரன் 149, 151
நல்லவாணன் 266, 271, 275, 277, 278
நல்லூர் 35, 129, 215, 216
நவவித்யா கலா சாலை 339, 340, 357
நவாப் முகமது அலி 327
நளாப்புதய நாடகம் 255
நன்னூல் 174

நா

நாகமாம்பா 266—268
நாகாம்பா 22
நாகூர் 319
நாகோபராவ் 332
நாங்கூர் 88
நாங்கூருடையான் 98
நாநா பத்னாவிஸ் 382
நாமக்கல் 6, 128
நாம கல்பதரு 381
நாராயணன் 369
நாராயணீசுவரம் 211
நாவுக்கரசர் 30, 37, 401
நானார்த்தார்வை சம்க்ஷேபம் 162

நி

நித்த வினோத வளநாடு 57
நிம்ப தேவர் 370
நியோகி 284
நிரம்ப அழகிய தேசிகர் 124

நீ

நீடாமங்கலம் 329

நெ

நெடுங்குன்றம் 231
நெடுமானஞ்சி 18

ப

பக்தவத்சலன் 262
பக்தவத்சல விலாசமு 297
பகவத் கீதை 367, 368
பகவத் கீதாசார 367
பகவத் தஜ்ஜீகம் 30
பகவந்தராயா 296

பச்சையப்ப முதலியார் 359
பசவ சங்கரன் 212
பஞ்சக் ரோச மஞ்சரி
பஞ்சநத ஸ்தல புராணம் 327
பஞ்ச பாஷா விலாசம் 297
பஞ்ச முத்ரா 367
பஞ்ச ரத்தின பிரபந்தமு 297
பஞ்சவன் மாதேவீச்சரம் 114
பஞ்சிகரண 367
பஞ்சிகரன் 373
பட்டுக்கோட்டை 334
பட்டீச்சரம் 21, 183, 264, 265, 266, 414
படியராவ் 212
பண்டித சோழன் 109
பதஞ்சலி பிடாரன் 98
பந்தணைநல்லூர் 214, 216, 225
பர்வர்த்திகாரர் 357
பரசக்கர கோலாகலன் 47
பரஞ்சோதி முனிவர் 124
பரணி 136
பரம பாகவதம் 327
பரமா மிருதி 373
பரமேச்சுர மகாவராக விஷ்ணு கிருஹம் 37
பரவை ஈச்சரம் 111, 112
பரவை நங்கை 53, 110, 111, 113
பரவை புரம் 111, 112
பராந்தகன் (முதலாம்) 64, 68, 71—75, 403
பராந்தகன் (இரண்டாம்) 93
பராந்தகன் கன்னரதேவன் 64
பராந்தக நெடுஞ்சடையன் 253
பராந்தக மகாராஜன் 50
பராந்தகன் மாதேவ அடிகள் 83
பராந்தக வீர நாராயணன் 50
பரிபாடல் 31, 125
பரிபாஷ் விருத்தி 297
பருத்தியூர் 129
பல்லக்குச் சொக்கர் 215
பல்லவர் கோன் 188
பல்லவராசன் 138
பல்லவராயன் குளம் (களம்) 140
பழங்கோயில் 89
பழையாறை 114, 182
பள்ளிச் சந்தல் 76
பள்ளிப் படை 21
பனையவரம் 112
பனையூர் நாடு 5

## பா

பாகவதம் 327
பாகாப் பிடுகு 29
பாகவத மேளா 338
பாச மகா கவி 12
பாண்டி நாடு 139
பாண்டிய குலாசனி 7, 189
பாண்டிய குலபதி 57
பாண்டியாரி 196
பாதுகா சஹஸ்ரம் 271
பாம்புணிக் கூற்றம் 5
பாயாம்பா 243
பாயாம்பிகா 281
பார்சுவ நாதர் 48, 50, 51
பாரட் 84
பாரிஜாதாபஹரணம் 255, 271, 279
பால் குணோத்சவரகடா 271
பாலறாவாயர் 158
பாலையூரினன் 147
பாவாசாகிப் 313—315 317, 337
பாவாசி 296
பாவார்த்த இராமாயணம் 357
பாவார்த்த தீபிகா 368

## பி

பிகாசி 370
பிடாரன் 98, 99, 170
பிரஹலாத சரிதம் 271
பிரதாபசிம்மன் 317—326, 327, 331 348 387
பிரதாப சிம்ம மகாராஜா 418
பிரதாப சிம்மேந்திர விஜய பிரபந்தம் 320
பிரதிமா நாடகம் 12
பிரபோத சுதாகர ஸ்ரீகா 375
பிரம்ம தேசம் 157
பிரம புரீசுவரர் 324
பிரவுட தேவராயன் 212, 213, 216
பிரானசிஸ் லீகாட் சந்ரே 344
பிரளி மருந்தீசுவரர் 200

பீ

பீசப்பூர் 109, 221, 285
பீசப்பூர் சுல்தான் 291
பீமராச கோசுவாமி 387, 382

பு

புங்கனூரினன் 126
புசங்காச்சாரியார் 376
புதுக்குடி 5
புதுக் கோட்டை 29 43
புதுச்சேரி 358
புரந்தரதாசர் 297
புராண சாங்களி 367
புருஷோத்தமன் 29
புலிகேசி 30
புலியூர் கோட்டம் 153
புலியூரார் 244
புவன முழுதுடையாள் 21, 161, 163, 163, 165, 195
புள்ளிருக்கு வேளூர், 247, 248, 251, 322, 417
புறங்கரம்பை நாடு 5
புறநானூறு 17, 19, 130
புனா 392

பூ

பூதனாஹரணம் 271
பூம்புகார் (காவிரிப்பூம் பட்டினம்) 3
பூம் பொழிலீச்சரம் 190, 192
பூலோக தேவேந்திர விலாசம் 296

பெ

பெண்ணாறு 7
பெத்த செங்வா 231. 248
பெத்தண்ணா 221
பெந்த மல்லா 231, 248
பெரிய புராணம் 99
பெரிய பெருமாள் 97, 101
பெரிய மடம் 320
பெரிய மருது 327
பெரியாழ்வார் 207, 208, 213
பெருங்கதை 16
பெருந்தேவபாணி 124
பெரும்பற்றப் புலியூர் நம்பி 124

பை

பைரவர் திருவிழா 394

பொ

பொத்தப்பி சோழன் 50
பொய்கை நாடு 5
பொய்கை நாடு கிழவன் 101
பொய்யில் கூற்றம் 5
பொற்பண்டாரம் கர்ணம் 233
பொன் மாளிகை துஞ்சின தேவர் 101, 130
பொன் வேய்ந்த பெருமாள் 53, 55
பொன்வேய்ந்த மகிபதி 53
பொன்னம்பலக் கூத்தன் 149

போ

போக முனிவர் 127
போசளர் 53
போர்த்து கீசியர் 355
போன்சலே வமிச சரித்திரம் 292, 333

ம

மகதாசி சிந்தியா 332
மகாசேத்தகாரி 29
மகாதேவபட்டிணம் 295, 309
மகாபாரதசார சங்கிரகம் 255
மகாமகக் குளம் 259
மகா வம்சம் 49
மகேந்திரன் (இரண்டு) 38
மகேந்திர பல்லவன் 4, 28—, 39, 43, 45, 46, 47
மகேந்திர போத்தரையன் 29, 35
மகேந்திர போத் திராதிராசன் 38, 39
மகேந்திரவாடி 30
மங்கம்மாள் 296, 413
மங்களநாடு 5
மண்டகப்பட்டு 30
மண்டங்குடி 131, 132
மண்டலஞ்சேரி 137
மண்டல முதலிகள் 6
மண்ணிப் பள்ளம் 251
மணவில் 149
மணவிற்கூத்தன் 149
மணவிற்கோட்டம் 149

மணிமேகலை 16
மத்தகாச பிரகசனம் 80
மத்தியார்ஜுனம் 848
மத்துவாச்சாரியார் 888
மதுராந்தகன் 71
மதுராந்தகன்
கண்டராதித்தன் 90
மதுராந்தக உத்தம சோழன் 74
மதுரை 179, 407, 409
மதுரை ஈழத்துப் பூதன்
தேவனார் 17
மந்திரசாத்திர சங்கிரகம் 810
மயூரநாதன் 420
மயிலாடுதுறை 66, 184, 420
மருத்துவக்குடி 215
மல்லப்ப நாயக்கர் 242—
246, 818 816
மல்லார்சி காடேராவ் 824, 417
418
மல்லாரி ராவ் 870
மல்லிகார்ச்சுனர் 414
மழவரையர் 88
மன்னார்குடி 247, 254, 268,
272—274, 809, 877
மன்னாருதாசன் 277
மன்னிநாடு 5
மனுநீதிச்சோழன் 147, 800
மனுநீதிச் சோழன் மகாராஜன்
நாடகம் 296, 299, 898
மனுநெறி கண்ட சோழன் 892
மனோரா 888

மா

மாகதர் 49
மாங்குடி மருதனார் 18
மாண்டவீகன் 189, 140
மாணிக்கமலை 123
மாத்தூர் 184
மாதவ சுதன் 881
மாதவ சுவாமிகள் 881
மாதவராவ் 882
மாதோபரத்தினாகரர் 370
மாமல்லன் 88
மாமல்ல நரசிம்மன் 88
மாமல்லை 87
மாலைதாழ் மார்பன் 129
மாளவதேயம் 189, 148
மாளிகை நத்தம் 140
மாறவர்மன் சுந்தர
பாண்டியன் 195, 199
மானசேச்லோக் 870
மானம்பாடி 110, 114
மானோசி 818

மி

மிருத்தியுஞ்சய சிரஞ்சீவி
நாடகம் 297
மிலாடுடையார் 99

மீ

மீனாட்சி அரசி 418

மெ

மெய்கண்ட தேவர் 196
மெய்ப்பொருள் நாயனார் 95
மெலட்டூர் 888

மே

மேருசுவாமி 877—878
மேருலிங்கம் 877
மேல் மங்கலம் 76
மேற்கெழுந்தருளிய தேவர் 114

மோ

மோகினி விலாசம் 271

மை

மைசூர் 114

மௌ

மௌனகுருசாமி 286

ய

யக்ஞ நாராயண தீட்சிதர் 282,
248, 258
யமுனாம்பாள் 819, 820, 822
827
யமுனாம்பாபாயி 887, 842
யமுனாம்பாள்புரம் 829

யா

யாப்பெருங்கலம் 95
யாப்பெருங்கலக்காரிகை 95
யாசமநாயக்கன் 254

ர

ரங்கநாதபுரம் 280
ராதாகிருஷ்ண விலாசம் 338
ராஜஸ்ரீகாண்டிகேஜின ஜார்ராவ் 333
ராஜ தர்ம ஸார சங்கிரகம் 310

ரு

ருக்மணி கல்யாணம் 271
ருக்மணி சத்யபாமா சம்வாதமு 297

ரூ

ரூலெண்ட் கிரேப் 355

ல

லலிதபான் சஷ்டி 367
லலிதாங்குரன் 29
லலிதாங்குரபல்லவேசுவர கிருகம் 30, 38, 39

லா

லார்டு பிகாட் 328

லே

லேகளி 367

லை

லைடன் 89

வ

வச்சணந்திமாலை 174
வசிட்டேசுவரர் 74
வடக்குப்பணையூர் 129
வடகாம் 375
வடமோதங்கிழார் 18
வடவேங்கடம் 8
வடிவேலு 338
வடுவூர் 242
வண்டாழஞ்சேரி 140
வண்டுவராசன் 138
வண்டுவாஞ்சேரி 140
வண்டை 135
வண்டை நகர் 140, 142
வண்டைமன் 135
வண்டையர்கோன் 135, 138
வண்டைவளம்பதி 140
வயிரியக்கன் 84
வரகுணன் 47, 68
வரகூர் 279, 282
வரதாம்பா பரிணயம் 241, 216
வராகபுரி 280, 282
வல்லம் 30, 272, 291, 295
வல்லவரையன் 64
வல்லாளதேவன் 195
வளங்காவிரி நாடன் 76

வா

வாக்கியாம்ருதம் 310
வால்மீகி சரிதம் 255
வாழைக்குலச்சேரி 215
வாணகோப்பாடி 7
வானவன் மாதேவி 93, 101

வி

விக்கிரம சோழன் 4, 117, 139 140, 143—147, 150, 152, 154, 161, 185, 263, 421
விக்கிரம சோழ மண்டலம் 6
விக்கிரம சோழீசுவரம் 144
விக்கிரமன் 29
விங்கோசிராவ்போன்சுலே 332
விசயராகவன் 4, 225, 243 253, 254, 256, 271—275, 277, 279, 283, 284, 291, 292
விசய விலாசம் 232, 241. 253
விசயாலய சோழன் 3, 4, 63, 64, 129
விசித்திர சித்தன் 29
விசுவநாத நாயக்கர் 409
விசுவமுத்து 424
விப்ரநாராயண சரித்திரம் 271
விருத்தகிரி 424
விருத்தாசலம் 215, 282, 235
விருதராசபயங்கர வளநாடு 200
விருபாட்சன் 211
விழிஞம் 47, 49
விழுப்புரம் 112
விழுமியர் 126
விளநகர் 108, 247, 268, 249
விவேக சிந்து 373, 374
விஸ்வாதீத விலாசம் 297

விஷ்ணு பல்லக்கி சேவா பிரபந்தம் 297
விஷ்ணு சாஹராஜ விலாசம் 296

வீ

வீர சோமேசுவரன் 54,190, 199
வீர சோமேசுவரம் 413
வீர சோழன் 109
வீரட்டானம் 89
வீர நரசிங்கராயர் 217
வீர நரசிம்மன் 195
வீர நாராயணம் 71
வீர நாராயண சதுர்வேதி மங்கலம் 200
வீர நாராயணி 75
வீரப்ப நாயக்கர் 409
வீர பிரதாப தேவராயர் 414
வீர ராமநாதன் 418
வீர ராசேந்திரன் 4
வீரனுக்க விஜயம் 392
வீராந்த பல்லவரையர் 174

வெ

வெங்கட்ராம சாஸ்திரி 388
வெங்கடப்ப நாயக்கர் 291
வெங்கண்ணா 27, 292
வெங்கண்ணய்யா 384
வெங்கிடாசல ஆசாரி 262
வெங்கோசி 291—294, 295, 299, 370, 387
வெட்சித்திணை 18
வெண்ணி 24
வெலநாடு 284
வெள்ளைக் கோபுரம் 209

வே

வேங்கடபதி 254
வேங்கடமகி 209
வேங்கி நாடு 148, 173, 284
வேதாரண்யம் 285
வேலஞ்சேரி 284

வை

வைத்தியநாத காளிங்கராயன் 217
வைத்தீசுவரன் கோயில் 247, 248, 251, 322, 417

ஸ்ரீ

ஸ்ரீ இராமன் 272
ஸ்ரீ காரியம் 101
ஸ்ரீ சிவ இராமானந்த தீர்த்தர் 279
ஸ்ரீசைலம் 282, 285
ஸ்ரீதர்ம பத்ததி 276
ஸ்ரீதர வெங்கடேசன் 297
ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் 46, 47, 49, 50
ஸ்ரீமுஷ்ணம் 211, 213
ஸ்ரீரங்கன் 254, 272
ஸ்ரீரங்க நாச்சியார் 410

ஹ

ஹம்பி 221
ஹரி விஜய 379
ஹஸ்தோதகம் 384

ஹா

ஹால்ஷ் 31

ஹே

ஹேமாச் சாதனராஜா 53, 54, 55
ஹேமாப் ஜ நாயிகா ஸ்வயம்வரமு 273

ஜா

ஜான் ப்ளாக்மேன் ஆர். ஏ. 344
ஜானகி கல்யாணம் 271
ஜானகி பரிணயம் 295
ஜாம்ப் 369

ஜீயர் 207—209
ஜீவானந்தா 297

ஜெ

ஜெயசிங்க குலகாலபுரம் 190, 192
ஜெயசிங்க குலகால வளநாடு 190
ஜெயசிம்ம குலகாலன் 189
ஜெயந்த சேனா 254